தாய்வீடு

230

ISSN 2369-3657

THAIVEEDU | MAY | 2026

தாய்வீடு | மே | 2026



தேர்தல்களில் செல்வாக்குச் செலுத்தும்
எண்ணிமத் தொழினுட்பங்கள்
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஈரான் மீதான வலிந்த போர் - சர்வதேச பலதரப்பு
உறவு பலவீனமடைந்ததன் ஆகப்பிந்திய உதாரணம்
- ரூபன் சிவராஜா

இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின்
முடிவாக்கமும் அரசியற் போராட்டமும்
- சந்திரசேகரம் பரமலிங்கம்

ISSN 2369-3657
9 772369 365007

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS

10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666
srinada21@gmail.com
RE/MAX ACE
#3 - 1286 KENNEDY ROAD, TORONTO, ON M1P2L5
OFFICE: 416-270-1111 - FAX:416-270-7000

Siva Shanmuganathan
Broker
416-545-7482

Joy Selvanayagam
Broker
416-358-6928

Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated

Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE HIGHER STANDARDS
HomeLife Galaxy
Real Estate Ltd. Brokerage*
80 Corporate Drive, Suite 210 Toronto On M1H 3G5 Bus: 416-284-5555 (24 hours)

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

MORTGAGE ALLIANCE
Lic# 10530
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3

MORTGAGE ARCHITECTS
Brokerage No. 12728
Need Assistance for your
First and Second Mortgages?
Re-Financing?
Secured Line of Credit?
Commercial Mortgages?
Are you ...
Self Employed?
Temporary Resident?
New Immigrant?
Not to Worry!
Please Call
Theven Kankesu
(MCSC, MCP, AMP, CMBA)
Mortgage Agent, FSCO Lic# M08008759
416.939.8789
Address:
50 New Delhi Drive Unit 113, Markham, Ontario L3S 0B5
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com

Raj Nadarajah
Sales Representative
Direct : 416-333-6115
Email : nanohomes@gmail.com
www.nanohomes.ca
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
*Independently Owned and Operated.
Tel: 905-475-4750 Fax: 905-475-4770

Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
Find me on: facebook vela4homes
www.vela4homes.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
Bus: (905) 201-9977 *Independently Owned and Operated
Grand Master Club Award Winner-2021 HIGHER STANDARDS
Chairman's Club Award Winner-2017 HIGHER STANDARDS
Supreme Club Award Winner 2018,2019,2020 HIGHER STANDARDS
Chairman's Club Award Winner-2016 HIGHER STANDARDS
Chairman's Club Award Winner-2015 HIGHER STANDARDS
HOMELIFE HIGHER STANDARDS

தாய்வீடு

Publisher & Editor
PJ. Dilipkumar
பதிப்பாளர், ஆசிரியர்
பி.ஜெ. டிலிப்குமார்

நிறுவன வரைகலைஞர்
கருணா

ஆலோசகர் குழு
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பிரசாத் சொக்கலிங்கம்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா, சி. ரமேஷ்,
ச. சத்யதேவன்.

ஓவியங்கள்
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து),
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

அட்டைப்பட வடிவமைப்பு
பிரசாத் சொக்கலிங்கம்

வடிவமைப்பு
ஆரையன், ஊரோடிகள் குழுமம்,
tg. திருநெல்வேலி (இலங்கை),
தானா விஷ்ணு.

படங்கள்
istock.com,

தட்டச்சு
சாம் டானியல்.

ஒப்புநோக்கல்
கந்தசாமி கங்காதரன்,
ந. குகபரன், கௌரி,
தானா விஷ்ணு.

அஞ்சல் முகவரி
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Canada

Tel : +1 416 857 6406
Fax : +1 416 849 0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

ஆக்கங்கள் அனைத்துக்கும்
ஆக்கியோரே பொறுப்பு.
பெயர் தோற்றாத ஆக்கங்களுக்கு
ஆசிரியரே பொறுப்பு.

தோழமையுடன் புலர்ந்திருக்கும் ஒரு மே மாதம்!

“மான் சுட்டால் அன்றி / மரை சுட்டால், மயில் சுட்டால் / ஏன் என்று கேட்க இந்நாட்டில் சட்டமுண்டு / மாடடித்தல் கூட, மறைவான ஓரிடத்தில் / சாகடிக்க வேண்டுமெனச் சட்டத்தில் இடமுண்டு / கொக்குச் சுடுதல் குற்றம் / பயிரழித்துத் திக்கெட்டும் நடந்து திரிகின்ற ஆனையினை / சுட்டால் அது குற்றம் / 'சுதந்திர பூமியிலே' / சட்டம் இதற்கெல்லாம் தண்டிக்கும் / தண்டிக்க வேண்டியதே / நாய்பிடிக்கக்கூட நகரசபைக்காரர்கள் / நீ பிடிக்கலாமென்று நியமனங்கள் செய்துள்ளார் / மானுக்கு / மாட்டுக்கு / மரையோடு மயிலுக்கு / ஆனைக்குக்கூட அனுதாபப்படும் நாட்டில் / மனித உயிர் மட்டும் மலிவு / மிக மலிவு.”

இந்த வரிகள் 2009-ஆம் ஆண்டு இலங்கை அரசால் காணாமலாக்கப்பட்ட கவிஞர் புதுவை இரத்தின துரையினுடையவை. அண்மையில் அமைதிக்கான நடைபயணம் மேற்கொள்ள இலங்கைக்குச் சென்ற பௌத்தத் துறவிகளோடு கூடச்சென்ற நாய்மீது காட்டப்பட்ட கரிசனையைக் கவனிக்கும்போது இந்தக் கவிதையும் நினைவிலாடுவது தவிர்க்க முடியாதது.

புதுவை இரத்தினதுரையுடன் சேர்ந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமலாக்கப்பட்ட அந்த வலி சுமந்த மே மாதத்தின்பின் வந்த பதினாறு மே மாதங்களைப் போலவே இந்தப் பதினேழாவது மே மாதமும் பொறுப்புக்கூறல்களோ, நீதி வழங்கல்களோ இன்றிப் பிறந்திருக்கிறது.

இந்தக் கவிதை இடம்பெற்ற தொகுப்பின் தலைப்பு, 'நினைவழியா நாட்கள்' என்பது முரண்நகையானது. ஏனெனில், நினைவில் அழியாது மனதில் வடுக்களாகத் தங்கியிருக்கும் அந்த நாட்களின் அனுபவங்களை எழுதுவதற்கும் தடைகள் தோன்றியிருக்கின்றன. தீபச்செல்வனின் எழுத்துகள் மீதான தடை இத்தகையதே. அவர் தமிழில் எழுதிக்கொண்டிருந்தவரையில் கண்டும்காணாததுபோல் இருந்த அரச எந்திரம், இப்போது அவரின் எழுத்துகள் சிங்கள மக்களிடையே கவனம் பெறத்தொடங்கியதும் அதற்கெதிராகத் தனது ஒடுக்குமுறைக் கரத்தை ஓங்கியுள்ளது. முன்னரும் நடராஜா ரவிராஜும் குமார் பொன்னம்பலமும் சிங்கள மக்களுடன் தமிழரின் நியாயத்தை சிங்களத்தில் பேச முற்பட்டபோது அவர்களின் குரல்கள் துப்பாக்கி முனையில் மௌனிக்கப்பட்டன. இப்போது சட்டம் தடையாணையுடன் பாய்கிறது.

இந்தத் தடை கவனிக்கப்படாது கடந்துபோகப்படாமல் இருப்பதற்கான முக்கிய காரணம், சிங்கள மக்கள் சிலரிடமிருந்து உணர்வுத்தோழமையுடன் வெளிப்பட்ட தடைக்கான எதிர்ப்பே. தடைக்கு எதிராகக் குரல் கொடுத்த சிங்கள சமூகத்தவர்கள் எண்ணிக்கையில் குறைவானவர்களாக இப்போது இருப்பினும் அவர்கள் சிங்களச் சமூகத்தில் வகிக்கும் பாகத்தால் முக்கியமானவர்கள். எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், தொழிற்சங்கவாதிகள் எனப் பலர் இதில் அடங்குகிறார்கள். இந்த அளவுக்குப் பரந்துபட்ட உணர்வுத்தோழமை வெளிப்பாடு, 'நான் ஸ்ரீலங்கன் இல்லை' என்று ஆணித்தரமாக உரைத்த ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு ஆதரவாக எழுந்திருப்பது முக்கியமானதும் நம்பிக்கை தருவதும் ஆகும். ஈழத் தமிழரது அரசியற் பலம் குன்றியும், ஈழத் தமிழ் அரசியல் தலைமைகளின் மீது அவநம்பிக்கை அதிகரித்தும் வருகின்ற ஒரு காலகட்டத்தில், எமது நினைவுகளை நாமே எழுதுவதற்கும் எமது வரலாறுகளை நாமே கடத்துவதற்கும் எமக்கு ஆதரவாக நீட்டப்படும் நேசக்கரங்கள் அனைத்தும் ஆர்வத்துடன் பற்றப்படவேண்டியவையே. அரிதானவை போலவும், ஆரம்பத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமானது போலவும் தோன்றும் இந்த ஆதரவுகளை அரவணைத்து, வலுப்படுத்தி, அதிகரிக்கச்செய்யவேண்டியது அவசியம்.

இவை அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக் காலதாமதமாகலாம். ஆனால் எமது உரிமைகளுக்கான வேட்கையை அணைந்துவிடாது காக்கவும் அதற்கான எமது செயற்பாடுகளை அடுத்த தளத்துக்கு உந்தவும் இவை அவசியம்.

அதேநேரம், ஒடுக்கப்படும் ஏனைய சமூகங்களை நோக்கி நாங்கள் நீட்டும் ஆதரவுக் கரமும் முக்கியமானது. அது எமது உரிமைக்கான போராட்டத்தின் தார்மீக நியாயத்தைப் பறைசாற்றும். வலுப்படுத்தும். அழியாத வடுக்களைச் சுமந்தவொரு மக்கட்கூட்டமாக, ஒடுக்கப்படும் வெவ்வேறு மக்களின் வலிகளை எம்மால் புரிந்துகொள்ளமுடியும். அவர்களின் உரிமைகளுக்கான போராட்டங்களையும் எமது போராட்டத்தையும் ஒரே புள்ளியில் இணைத்து மானுட விடுதலைக்கான குரலாக உயர்த்தமுடியும்.

1967-இல் ஆறுநாட்போரில் பாலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது முதல் இன்றுவரை பாலஸ்தீன மக்கள் நம்பிக்கை இழந்துவிடவில்லை. இன்று அரை நூற்றாண்டையும் தாண்டி உலகின் மனச்சாட்சி இஸ்ரேலுக்கு எதிராகத் திரும்ப அந்த மக்களின் மனவுறுதி மட்டுமல்ல, உலகெங்கும் அவர்களுக்கு ஆதரவாக ஓங்கிய உணர்வுத் தோழமையும் காரணமாகும் என்றால் மிகையில்லை.

நாமும் நம்பிக்கையுடன் முன்னேறுவோம்.

தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...

தேர்தல்களில் செல்வாக்குச் செலுத்தும் எண்ணிமத் தொழினுட்பங்கள் 5
- சுப்ரமணியம் ஜெயசீலன்

ஈரான் மீதான வலிந்த போர்: ... 9
- ரூபன் சிவராஜா

பெற்றோல், டொலர், அதிகாரம் 15
– ரதன்

வளைகுடா நாடுகளின் அமெரிக்க இராணுவத்தளங்கள்! ... 20
- ரவீந்திரன் துரைசிங்கம்

சியோனிச விரிவாக்க அரசியல்: வரலாற்றுத் தொடக்கமும் ... 24
- சிவா முருகுப்பிள்ளை

திருப்பரங்குன்றத் தீபத்தூணில் அரசியல் தீ 30
- நெல்லை ஜெயசிங்

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் அவலநிலை தீருமா? 32
– தமிழகன்

இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் முடிவாக்கமும் அரசியற் சட்டநீதிக்கான போராட்டமும் 35
- சந்திரசேகரம் பரமலிங்கம்

1966: ரதனசார தேரர் முதலாவது மொழிப்போராட்டத் தியாகியா? 42
- என். சரவணன்

சமஷ்டிமுறை தொடர்பிலான ஒரு நூற்றாண்டு விவாதமும் மாகாணசபைகள் ... 50
- வீரகத்தி தனபாலசிங்கம்

மொழியின் அரசியல் – 2 மொழியும் காலனித்துவ அரசும் – II 56
- ஞாலசீர்த்தி மீநிலங்கோ

சுதேசிகளின் மருந்து மூலிகைகள் குறித்து அறிவதில் ஆர்வம் காட்டிய ஐரோப்பிய அறிஞர்கள் 67
- பால. சிவகடாட்சம்

ஆதலினால் விரதமிருப்பீர்! 70
- என். சிறிரஞ்சன்

கல்விக்கூடாக வரவேண்டிய மனப்பாங்கு விருத்தி 73
- அகமட் பிஸ்தாமி

உணவுப் பழக்கவழக்கங்களும் மாணவர்களின் கற்றல் அடைவும் 76
- த. சிவபாலு

பதின்மவயதுப் பாலியல் நடத்தைகளும் மனித விழுமியங்களும் 80
- எஸ்.கே. விக்னேஸ்வரன்

தவிர்க்க முடியாததற்கான திட்டமிடல் 91
- செந்தூரன் புனிதவேல்

ஆர்டெமிஸ் இரண்டின் பயணம் 93
- குரு அரவிந்தன்

குடும்பமே மனிதவாழ்க்கையின் அத்திவாரம்: சர்வதேச குடும்ப நாள் 96
- சி. நற்குணலிங்கம்

இலங்கையில் முத்துக்குளிப்பு 99
- புட்பா கிறிட்டி

ஓர் ஈழ நாட்குறிப்பு – 3 104
- ஓவியர் ஜீவா

எப்ப பார்த்தாலும் தமிழ், தமிழன்... 107
- போல் ஜோசேப்

சமூக ஒழுங்கமைப்பைப் பேணுவதில் ஆற்றுகைகளின் பங்கு 112
- துரைநாதன் சபீதன்

மாற வேண்டிய பெண்களின் உலகம் 122
- சியாமளா யோகேஸ்வரன்

தற்கொலை முடிவினை அழகியலுடன் மகிமைப்படுத்தும் 'அந்தோனி' திரைப்படம் 125
- ராஜன் செல்லையா

'நீளிரா'வும் அதன் புற அரசியலும் 127
– ரதன்

காலமும் அரசியலும் கலந்த கட்டுமானம் 130
– சொர்ணவேல்

தமிழ் அரங்கியலில் மரபும் நவீனமும்: மீளமைத்தல் 138
- ம. கருணாநிதி

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக காமன் கூத்து – 16 141
– அருணாசலம் லெட்சுமணன்

இராமானுஜன் எனும் கணித மேதை 147
- குமார் புனிதவேல்

இலக்கிய ஆளுமை பத்தினியம்மா திலகநாயகம் போல் 150
- வே. விவேகானந்தன்

தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கமும் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் ... 153
- இக்பால் அலி

ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு – 4 160
- ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பாவேந்தர் பாரதிதாசன் – மொழியும் பண்பாடும் 170
- யோகவதி தளையசிங்கம்

தன் சமூகத்தை மனதார நேசித்த உன்னத மனிதர் மனுவல் ஜேசுதாசன்! 174
- கிம் அன்ரனி ஸ்டாசியுக்
தமிழில்: குயின்ரஸ் துரைசிங்கம்

நின்ற சொல்லர் 178
- அ. முத்துலிங்கம்

குடும்ப நண்பர் 180
- கதிர் துரைசிங்கம்

ஜேசுதாசனும் சூரி அண்ணனும்...! 182
- அ. யேசுராசா

அமரர் மனுவல் ஆசீர்வாதம் இயேசுதாசன் 186
- குயின்ரஸ் துரைசிங்கம்

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் 188
- குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்

ஓர் அலையின் ஆக்கம் ... 190
- பீற்றர் மனுவல்பிள்ளை

'ஒற்றன்' நாவல் 194
- சு. வேணுகோபால்

மலையகத் தமிழர் குறித்த மறுவாசிப்பாக ... இலங்கை இந்தியர் வரலாறு 197
- மல்லியப்புசந்தி திலகர்

வ.அ. இராசரத்தினம் எழுதிய ... 200
– செங்கதிரோன்

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும் – 11 மொழியியலில் கிரேக்க அறிஞர்கள் பங்களிப்பு – 3 203
- நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

கண்(நூறு): கண்டவையும் காணாதவையும் 206
- பாக்கியநாதன் அகிலன்

ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள் 208
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

சித்தரும் வணங்கிய சித்தர் பாரதி 213
- கிருங்கை சேதுபதி

வானத்தின் கீழே பூரணம் ஒன்றுமில்லை: ஈழத்துப் புலவர் சரிதையும் கவிதைத் திரட்டும் ... 217
- செல்லத்துரை சுதர்சன்

கொதுகு 224
- நாஞ்சில் நாடன்

கம்பனின் கருவூலம் திறந்து... 229
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

கடவுள் தெரிந்தெடுத்த அம்மா 234
– பஞ்சகல்யாணி

முல்லைச் சாரல் 236
- ரஞ்ஜனி சுப்ரமணியம்

கடமை கண்ணியம் கட்டுப்பாடு 240
– உஷாதீபன்

முலையறுகாதை! – பெண்துயரப் பெருங்கதை 244
- மா. சித்திவினாயகம்

இன்று அமைதியான ஒரு நாளாக இருக்கும் 248
- அமி ஹெம்பெல்
தமிழில்: என்.கே. மகாலிங்கம்

சுப்ரமணியம் ஜெயசீலன்



தேர்தல்களில் செல்வாக்குச் செலுத்தும் எண்ணிமத் தொழினுட்பங்கள்

மனித சமூகத்தின் வியத்தகு ஆற்றல்கள் நாளுக்கு நாள் இந்த பிரபஞ்சத்தை ஆட்டிப் படைக்கும் ஏதுக்களாக உருவாகி வருகின்றது என்றால் அது மிகைப்படப் போவதில்லை. மனிதரின் ஒவ்வொரு ஆற்றலும் திறமையும் தெரிந்தோ தெரியாமலோ மனித சமூகத்தின் வாழ்வியலைச் செம்மைப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தாலும், அவை தங்களுக்குள் சில பாதகமான விளைவுகளையும் நிழலெனச் சுமந்தே வருகின்றன. அந்த வகையில் இன்றைய அதிநவீன உலக விஞ்ஞான தொழினுட்ப கண்டுபிடிப்புகளின் முத்தாய்ப்பாக பேசப்படும் செயற்கை நுண்ணறிவு மானுட சமூகத்தின் நீண்டகால நெறிமுறை விழுமியங்களுக்குச் சவால்களை ஏற்படுத்தும் வியாகூலமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி வருவதனை உணர முடிகின்றது. குறிப்பாக, மன்னராட்சி காலத்து அதிகாரப் படிநிலைகளைத் தகர்த்து, மக்கள் அதிகாரத்தை நிலைநாட்ட உருவான 'ஜனநாயகத் தேர்தல்' முறைமையையே இத்தொழினுட்பம் தற்போது கேள்விக்குறியாக்கி வருகின்றது. உலகளாவிய ரீதியில் சில நாடுகளின் தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதிலும், வாக்காளர்களின் மனநிலையைச் சூட்சுமமாக மாற்றியமைப்பதிலும் ஒரு 'மறைகரமாக' இந்தச் செயற்கை நுண்ணறிவு செயற்படத் தொடங்கியிருப்பது கவலைக்குரிய உண்மையாகும்.

சில அரசியல் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் மிக நுட்பமான முறையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்திப் போலிப் பிரச்சாரங்களை முன்னெடுப்பது, ஜனநாயகச் சூழலில் பெரும் சிக்கல்களைத் தோற்றுவித்துள்ளது. குறிப்பாக, 'சின்தடிக் ரியாலிட்டி' (Synthetic Reality) மற்றும் 'டீப் ஃபேக்' (Deepfake) போன்ற தொழினுட்பங்கள் வாயிலாக, ஒரு தலைவர் சொல்லாத கருத்தையோ அல்லது செய்யாத செயலையோ அவர் செய்ததாகச் சித்தரிக்கும் 'மாயத் தோற்றங்கள்' இன்று இணையவெளியில் மிகத் தீவிரமாகப் பரப்பப்படுகின்றன. உண்மையையும் பொய்யையும் பிரித்தறிய முடியாத அளவிற்குத் தொழினுட்பம் வளர்ந்துள்ள இக்காலகட்டத்தில், எண்ணிமத் தொழினுட்பத்தின் ஊடாகத் தேர்தல்களில் செயற்கை நுண்ணறிவு செலுத்தும் தாக்கம் என்பது வெறும் தொழினுட்ப விவாதம் மட்டுமல்ல; அது ஒரு சமூகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் தார்மீகப் போராட்டமுமாகும். இந்த பத்தி தேர்தல்களில் செயற்கை நுண்ணறிவின் ஊடான எண்ணிம தொழினுட்பத்தின் (Digital Technology) தாக்கம் குறித்து ஊடாடும் ஓர் பத்தியாக அமையப் பெறுகின்றது.

இத்தகைய செயற்பாடுகள் பெரும்பாலும் ஒரு தரப்பின் நியாயத்தை மட்டும் முன்னிறுத்துவதாகவோ அல்லது திட்டமிட்ட அடிப்படையில் போலியான தகவல்களைப் பரப்பும் நடவடிக்கையாகவோ அமையக் கூடும் என்பதுவே நிதர்சனம். குறிப்பாக, குறிப்பிட்ட தனிநபர்கள் அல்லது அரசியல் கட்சிகளின் நன்மதிப்பைச் சிதைக்கவும், அவர்கள் மீது அவதூறுகளைப் பரப்பவும் இத்தகைய 'டீப் ஃபேக்' தொழினுட்பங்கள் தற்காலத்தில் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.

மக்களின் மனப்பாங்கில் தந்திரமாகத் தாக்கம் செலுத்தி, அதன் மூலம் தேர்தல் முடிவுகளைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றியமைக்கக்கூடிய தீவிரமான 'எண்ணிமப் பிரசார உத்திகள்' (Digital Campaigning Strategies) இன்று பல நாடுகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன. சில அரசியல் கட்சிகளும் அவற்றின் ஆதரவாளர்களும் செயற்கை நுண்ணறிவின் துணையோடு மிக நுட்பமான போலிப் பிரசாரங்களை உருவாக்கி வருகின்றனர்.

குறிப்பாக, ஒரு தலைவர் சொல்லாத கருத்துகளை அவர் கூறியதாகக் காட்டும் போலியான காணொளிகள் (Fake Videos), செயற்கை முறையில் மாற்றியமைக்கப்பட்ட குரல் பதிவுகள் (Manipulated Audios) மற்றும் உண்மை போன்ற தோற்றத்தைத் தரும் போலியான செய்தி வடிவமைப்புகள் ஆகியவை சமூக ஊடகங்கள் வாயிலாகத் காட்டுத்தீயாகப் பரப்பப்படுகின்றன. இத்தகைய தொழினுட்ப ஊடுருவல்கள், வாக்காளர்களின் சுயமான முடிவெடுக்கும் திறனை மழுங்கடித்து, ஜனநாயகத்தின் அடிப்படை அறத்தையே அச்சுறுத்தலுக்கு உள்ளாக்குகின்றன.

தெற்காசிய அரசியல் வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்புமுனையாக, கடந்த 2026 பெப்பிரவரி 12 அன்று பங்களாதேஷில் நடைபெற்ற பொதுத் தேர்தல் அமைந்தது. இத்தேர்தல் வெறும் ஆட்சி மாற்றத்திற்கான ஒரு நிகழ்வு என்பதையும் கடந்து, நவீனத் தொழினுட்பங்கள் ஒரு நாட்டின் ஜனநாயகத்தையே எவ்வாறெல்லாம் திசைதிருப்ப முடியும் என்பதற்கான ஓர் எச்சரிக்கைச் சான்றாக உருவெடுத்தது. குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு மற்றும் 'சின்தடிக் ரியாலிட்டி' (Synthetic Reality) ஆகிய தொழினுட்பங்கள் இத் தேர்தல் களத்தை நிர்ணயிக்கும் பிரதான கருவிகளாகக் கையாளப்பட்டமை, உலக அரங்கில் உற்றுநோக்கப்பட வேண்டிய ஒரு கருப்பொருளாக மாறியுள்ளது.



உலக அளவில் வாக்காளர்களிடம் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில், செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பம் மிகத் தீவிரமாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு வரலாற்றுச் சந்தர்ப்பமாக இதனைக் குறிப்பிடலாம். இத்தேர்தல் காலப் பகுதியில், முன்னெப் போதும் இல்லாத வகையில் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட போலித் தகவல்கள் (AI-generated misinformation) மற்றும் அவதூறுப் பிரச்சாரங்கள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தின. குறிப்பாக, பெண் வேட்பாளர்களை இலக்கு வைத்து உருவாக்கப்பட்ட ஆபாசமான 'டீப் ஃபேக்' படங்கள் மற்றும் மத ரீதியான பிளவுகளைத் தூண்டும் வகையிலான போலி உரையாடல்கள் சமூக வலைதளங்களில் காட்டுத்தீயாகப் பரப்பப்பட்டன. உண்மையையும் பொய்யையும் பிரித்தறிய முடியாத இத்தகைய 'எண்ணிமக் கையாளுதல்கள்' (Digital Manipulation), வாக்காளர்களின் மனநிலையைச் சூட்சுமமாக மாற்றியமைப்பதில் ஒரு 'மறைகரமாக' செயற்பட்டமை இன்று பல ஆய்வுகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 2024 ஜூலை மாதம், அப்போதைய பங்களாதேஷ் அரசாங்கத்திற்கு எதிராக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களைத் தொடர்ந்து, அந்நாடு ஜனநாயகத்தை நோக்கி நகர்வதற்கான பிரதானத் தீர்வாகப் பொதுத்தேர்தல்கள் அமைந்தன. இருப்பினும், இத்தேர்தல் களம் வழக்கமான அரசியல் விவாதங்களைத் தாண்டி, ஒரு 'தகவல் போராக' (Information War) உருமாற்றம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, 2025 டிசம்பர் முதல் 2026 பெப்பிரவரி வரையிலான இடைப்பட்ட காலப்பகுதியில், தேர்தல் முடிவுகளில் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய அல்லது பெரும் செல்வாக்கு செலுத்தக் கூடிய செயற்கை நுண்ணறிவு உள்ளடக்கங்கள் கண்டறியப்பட்டன. ஆய்வுத் தரவுகளின்படி, இத்தகைய நுட்பமான 72 உள்ளடக்கங்கள் முறையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. இதில் மிகவும் அபாயகரமான அம்சம் என்னவென்றால், உண்மை எது, புனைவு எது என்று எவராலும் எளிதில் வேறுபடுத்திப் பார்க்க முடியாத அளவிற்கு இவை தத்ரூபமாக உருவாக்கப்பட்டிருந்தமையே ஆகும். இத்தகைய 'மாயத் தோற்றங்கள்' வாக்காளர்களின் முடிவுகளைக் கையாள முற்பட்டமை ஜனநாயகச் செயற்பாட்டின் மீதான ஒரு பெரும் அச்சுறுத்தலாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த தகவல்களை ஆய்வு செய்யும்போது செயற்கை நுண்ணறிவினால் உருவாக்கப்பட்டிருந்த உள்ளடக்கங்களில் சுமார் 50% அரசியல் தலைவர்கள் தொடர்பாக முற்று முழுதாக புனையப்பட்ட போலித் தகவல்கள் என்பது தெரியவந்தது. இந்த தொழினுட்ப ஆக்கிரமிப்பினால் பங்களாதேஷின் தேசிய கட்சி கூடுதலாக பாதிப்புகளை எதிர்நோக்க நேரிட்டிருந்தது. அந்தக் கட்சியை இலக்கு வைத்து சுமார் 47 உள்ளடக்கங்கள் வெளியிடப்பட்டிருந்தன. இக்கட்சி தவிர ஜமாத்தே இஸ்லாம் கட்சி, தேசிய பிரஜைகள் கட்சி ஆகியனவும் இந்த தொழினுட்ப ரீதியான போலி பிரசார தாக்குதல்களுக்கு இலக்காகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த டிஜிட்டல் சாதன பயன்பாடுகளின்போது அதிக அளவில் டீப் பேக் மற்றும் தொகுக்கப்பட்ட

அல்லது திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்கள் முக்கிய இடத்தை பெற்றிருந்தன. தற்போதைய பிரதமர் தாரிக் ரஹ்மான் சாம் சாதாரண மக்களுக்கு நெருக்கமானவர் என்பதை வெளிப்படுத்தக் கூடிய வகையிலான டிஜிட்டல் பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. குறிப்பாக அவரது பிம்பத்தை மேம்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. தீவிர சிகிச்சை பெற்று வரும் முன்னாள் பிரதமர் பேகம் காளிதாசியா குணமடைந்து நடந்து செல்லும் காணொளிகள் வெளியிடப் பட்டிருந்தன. இது மக்களை திசை திருப்பும் நோக்கில் உருவாக்கப்பட்டிருந்தது. மேலும் இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள முன்னாள் பிரதமர் ஷேக் அசினாவினால் கூறப்பட்டதாக வெளிப்படுத்தி உருவாக் கப்பட்ட காணொளி சமூக ஊடகங்களில் அதிக அளவில் பகிரப் பட்டு இருந்தது.

சுமால் டிவி, சேனல் ஐ போன்ற பங்களாதேஷின் பிரதான ஊடக நிறுவன ங்களின் இலட்சினைகளை போலியாக உருவாக்கி சமூக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. அரசியல் தலைவர்கள் வெளியிட்ட கருத்துகளை திரிபுபடுத்தி அல்லது அவர்கள் வெளிப்படுத்தாத தகவல்களை உருவாக்கி பல்வேறு பிரசாரங்கள் முன்னெடுக்கப் பட்டிருந்தன.

இந்த போலி பிரசார நடவடிக்கைகளின் போது மனித பேரவலங்களைக்கூட அரசியல் இலாபங்களுக்காக துஷ்பிரயோகம் செய்வ தற்கு இந்த செயற்கை நுண்ணறிவு தொழினுட்பம் பயன்படுத்தப்பட்டமை துரதிஷ்ட வசமான ஓர் நிலைமையாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

போராட்ட களத்தில் இணைப்பாளராக கடமையாற்றிய உஸ்மான் ஹாதி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் அவர் குணமடைந்துவிட்டதாக காண்பிக்கும் நோக்கத்தில் செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தை பயன்படுத்தி போலி புகைப்படங்கள் உருவாக்கப் பட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.

அந்த தாக்குதலின் பின்னணியில் ஜமாத் இஸ்லாம் கட்சி ஈடுபட்டதாக காண்பிக்கும் நோக்கிலான போலி பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

போராட்டத்தின் ஆலோசகர்களில் ஒருவரான பினாகி பட்டாச்சார்யா (Pinaki Bhattacharya) போன்றோர், வெளிநாட்டுப் பாதுகாப்புப் படைத் தரப்புகளுடன் ரகசியப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவது போன்ற போலித் தேடல் முடிவுகளும் காணொளிகளும் உருவாக்கப்பட்டன. திட்டமிட்ட அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட இச்சதித் திட்டங்கள், மக்கள் மத்தியில் போராட்டத்தின் நம்பகத்தன்மையைக் குலைப்பதையும், தேசப் பற்று தொடர்பான ஐயங்களை விதைப்பதையுமே நோக்கமாகக் கொண்டிருந்தன. குறிப்பாக, இத் தகைய 'டீப் ஃபேக்' காணொளிகள் சமூக வலை தளங்களில் வைரலாக்கப்பட்டு, அரசியல் ரீதியாகப் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்த முயன்றமை குறிப்பிடத்தக்கது.

> **“வருங்காலங் களில் தேர்தல்கள் என்பது வெறும் வாக்குப்பதிவுச் செயல்முறையாக மட்டும் அமையாமல், கண்ணுக்குத் தெரியாத 'தகவல் மற்றும் தொழினுட்பப் போராக' உருமாறும் அபாயம் நிலவுகிறது. இத்தகைய சவால்களை எதிர்கொண்டு ஜனநாயகத்தின் மாண்பைக் காக்க அரசுகள், ஊடகங்கள் மற்றும் தொழினுட்ப நிறுவனங்கள் மட்டுமன்றி பொதுமக்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய அறப்பணி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்று அவசிய மாகியுள்ளது.”**

முன்னணி ஊடகங்களின் பெயரில் பரப்பப்பட்ட 28% செய்திகள் குறித்து, அந்தந்த நிறுவனங்களே முறையான விளக்கங்களை அளித்தன. தமது நிறுவனத்தின் அதிகாரபூர்வ இலட்சினையும் (Logo), தனித்துவமான செய்தி வடிவமைப்பும் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன என்று அவை பகிரங்கமாக அறிவித்தன. இத்தகைய போலி உள்ளடக்கங்கள் யாவும் மிகக் குறுகிய கால இடைவெளியில், ஆயிரக்கணக்கான போலி கணக்குகள் (Bot accounts) வழியாகத் திட்டமிட்டுக் கையாளப்பட்டதை 'டிஜிட்டல் கண்காணிப்பு' அமைப்புகள் சுட்டிக் காட்டின. இது தன்னிச்சையாக நிகழ்ந்த ஒன்றல்ல; மாறாக, ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிட்டத் தாக்குதல் என்பது இதன் மூலம் புலனாகிறது. உண்மைக்கும் புனைவுக்கும் இடையிலான இப்போராட்டத்தில், தொழினுட்பத்தின் உதவியுடன் பரப்பப்பட்ட பொய்களைத் தொழினுட்ப ரீதியான ஆய்வுகளே முறியடித்தன. எனினும், இத்தகைய தவறான தகவல்கள் சாதாரண வாக்காளர்களைச் சென்றடையும் வேகம், உண்மைச் சரிபார்ப்புகள் அவர்களைச் சென்றடையும் வேகத்தை விடப் பலமடங்கு அதிகமாக இருந்தமை, நவீன ஜனநாயகச் செயற்பாட்டிற்கு விடுக்கப்பட்ட பெரும் சவாலாகும். பங்களாதேஷில் இடம் பெற்ற இந்த டிஜிட்டல் பிரச்சார ஆக்கிரமிப்பு குறிப்பாக செயற்கை நுண்ணறிவினை பயன்படுத்திய இந்த ஆக்கிரமிப்பானது ஒட்டுமொத்த தெற்காசிய பிராந்திய வலயத்தின் ஜனநாயகம் தொடர்பில் பாரிய கேள்விகளை எழுப்புவதுடன் இது ஓர் சிகப்பு எச்சரிக்கையை வெளிப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

பங்களாதேஷ் மட்டும் அல்லாமல், உலகின் பல நாடுகளிலும் செயற்கை நுண்ணறிவு தேர்தல்களில் தாக்கம் செலுத்தியுள்ளது.

2024 அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக, வேட்பாளர்களின் குரல் மற்றும் வீடியோக்களை போலியாக உருவாக்கிய Deepfake உள்ளடக்கங்கள் சமூக ஊடகங்களில் பரவியதாக அறிக்கைகள் வெளியாகின. வாக்காளர்களை தவறாக வழிநடத்தும் நோக்கில் இத்தகைய பிரசாரங்கள் பயன்படுத்தப்பட்டன. இந்தியாவில் தேர்தல் பிரச்சார ங்களில் AI மூலம் உருவாக்கப்பட்ட தனிப்பயன் வீடியோ க்கள் பயன்படுத்தப்பட்டன. சில சந்தர்ப்பங்களில், வேட் பாளர்கள் பல மொழிகளில் பேசுவது போல Deepfake தொழி

னுட்பம் பயன்படுத்தப்பட்டது. பாகிஸ்தானில், சிறையில் இருந்த அரசியல் தலைவர்களின் குரலை AI மூலம் உருவாக்கி, அவர்கள் பொதுமக்களிடம் உரையா ற்றுவது போல காணொளிகள் வெளியிடப்பட்டன. ஐக்கிய இராச்சியத்தில் அரசியல்வாதிகள் கூறாத கருத்துகள் Deepfake மூலம் உருவாக்கப்பட்டு சமூக ஊடகங்களில் பரவிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தேர்தல் அண்மிக்கும் காலத்தில் செயற்கை நுண்ணறிவு தொழினுட்பத்தை பயன்படுத்திய உள்ளடக்கங்களை சமூக ஊடகங்களின் ஊடாக பகிர்வது நம்பத்தகுந்த ஊடக நிறுவனங்களின் அடையாளங்களை பயன்படுத்தி போலி பிரச்சாரங்கள், போலி செய்திகளை வெளியிட்டு மக்களைத் திசை திருப்புதல் போன்ற நடவடிக்கைகள் அதிகரித்த ஒரு நிலைமையை அவதானிக்க முடிகின்றது.

இலங்கை, பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளிலும் வருங்காலத் தேர்தல்களின்போது, இவ்வாறான செயற்கை நுண்ணறிவுத் தொழினுட்பப் போலிப் பிரச்சாரங்கள் ஒரு முக்கிய உத்தியாகப் பயன்படுத்தப்பட்டு, மக்களின் ஜனநாயக உரிமையை அபகரிக்கக்கூடிய ஆபத்துகள் காணப்படுவதனை மறுப்பதற்கில்லை.


இந்த விவகாரம் தொடர்பில் பிராந்திய வலய நாடுகள் தனித்தனியாகவும் கூட்டாக இணைந்தும் உரிய நடவடிக் கைகளை எடுப்பது மிக முக்கியமான ஓர் தேவைப்பாடாக காணப்படுகின்றது.

இவ்வாறான சம்பவங்களால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கும் நோக்கில், ஜனநாயகம் மற்றும் தேர்தல்க ளுக்கான சர்வதேச நிறுவனம் (International IDEA) விழிப்பு ணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. உலகின் பல்வேறு பிராந்தியங்களில் இவ்வமைப்பு செயல மர்வுகளை நடத்தி, செயற்கை நுண்ணறிவு தொடர்பான தெளிவுபடுத்தல்களையும், அதன் ஊடாக ஜனநாயகத்திற்கு ஏற்பட்டுள்ள சவால்கள் குறித்தும் விழிப்புணர்வை ஏற்ப டுத்தி வருகின்றது. செயற்கை நுண்ணறிவு தொடர்பான போதிய தெளிவின்மை, மனித உரிமை மீறல்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஒழுக்க விதி மீறல்கள் ஆகியவை இங்கு முக்கிய கவனத்திற்குள்ளாக்கப்படுகின்றன.

பங்களாதேஷ் தேர்தல் என்பது ஒட்டுமொத்த உலகளாவிய ஜனநாயகத்திற்கும் விடுக்கப்பட்ட ஓர் எச்சரிக்கை மணி மட்டுமே! வருங்காலங்களில் தேர்தல்கள் என்பது வெறும் வாக்குப்பதிவுச் செயல்முறையாக மட்டும் அமையாமல், கண்ணுக்குத் தெரியாத 'தகவல் மற்றும் தொழினுட்பப் போராக' உருமாறும் அபாயம் நிலவுகிறது.

இத்தகைய சவால்களை எதிர்கொண்டு ஜனநாயகத்தின் மாண்பைக் காக்க அரசுகள், ஊடகங்கள் மற்றும் தொழி னுட்ப நிறுவனங்கள் மட்டுமன்றி பொதுமக்களும் ஒன்றி ணைந்து செயற்பட வேண்டிய அறப்பணி முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு இன்று அவசியமாகியுள்ளது. தொழி னுட்பத்தின் ஆதிக்கத்தைவிட, மனிதர்களின் விழிப்புணர்வே ஜனநாயகத்தின் உண்மையான அரணாகத் திகழ முடியும்.

jeyaseelan.s@thaiveedu.com



ஈரான் மீதான வலிந்த போர்;

சர்வதேச பலதரப்பு உறவு பலவீனமடைந்ததன் ஆகப்பிந்திய உதாரணம்!

■ ரூபன் சிவராஜா

சர்வதேச பல்தரப்புக் கூட்டுறவு என்பது பலவீனமான நிலையில் உள்ளது என்பதே யதார்த்தம். பன்னாட்டு நிறுவனங்களிடம் கட்டமைக்கப்பட்ட கருவிகள் உள்ளன, ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய அரசியல் அணிதிரட்டலும் திராணியும் போதுமானதாக இல்லை. இவற்றின் அணுகுமுறைகளும் அதன் வெளிப் பாடுகளும் இந்த அமைப்புகளின் இரட்டைத்தன்மைகளைப் பட்டவர்த்தனமாக்குகின்றன. அவற்றின் செயல்வலுவின்மையோடு, சட்டபூர்வ அதிகாரத்தை உரிய முறையிற் பயன்படுத்தாமையினையும் வெளிப்படுத்துகிறது.

பாரசீக நாகரிகம் என்பது உலகின் மிகத் தொன்மையான மனித நாகரிகங்களில் ஒன்று. அத்தகைய வரலாற்றினைக் கொண்ட வழித் தோன்றல்களே இன்றைய ஈரானிய தேசமும் அதன் மக்களும். அதன் வரலாறு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்து விரிகிறது. 1935 வரை ஈரானின் பெயர் பாரசீகம் (Persia). குறிப்பாக அகைமெனிட் வம்சத்தின் (பொ.ஆ.மு. 500 - 300) காலத்தில் பாரசீகப் பேரரசு உலகின் வலிமையான ஆட்சிகளில் ஒன்றாக இருந்து, பல்வேறு மக்களினங்களையும் பண்பாடுகளையும் ஒரே குடையின் கீழ் இணைத்தது. பாரசீகர்கள் அரேபியர்கள் அல்ல, அவர்கள் பாரசீகம் (பார்சி) எனும் தனித்த மொழியையும், மத்திய கிழக்கின் அரபுப் பிராந்தியத்திற்கு மாறாக வரலாற்று ரீதியில் வேறு வேர்களைக் கொண்ட பண்பாட்டு மரபையும் உடைய தனித்த இனக்குழுவாகும். இஸ்லாமிய ஆக்கிரமிப்பிற்கு முன், கிழக்கு ஈரானில் சரதுஸ்திர மதம் (Zoroastrianism) ஆதிக்கம் செலுத்தியது. இன்று பெரும்பான்மை ஈரானியர்கள் ஷியா முஸ்லிம்களாக உள்ளனர். கலை, கட்டடக்கலை, கவிதை மற்றும் தத்துவம் ஆகியவற்றில் பாரசீக மரபு தனித்துவம் வாய்ந்தது. 1207 - 1273 காலப்பகுதியில் வாழ்ந்த உலகம் போற்றும் பெருங்கவிஞர் மௌலான ரூமி பாரசீக மொழியில் எழுதினார். பாரசீக நாகரிகம், அதன் பண்பாடு, நிர்வாகம் மற்றும் அறிவியல் ஆகிய தளங்களில் மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் வளர்ச்சியில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏறத்தாழ 2500 ஆண்டுகள் தொன்மையான இந்த நாகரிகம், ஈரானின் தற்போதைய இஸ்லாமிய ஆட்சியுடன் இணைத்து நவீன காலத்திலும் அவர்களின் பெருமையின் ஆதாரமாக வலியுறுத்தப்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த நாகரிகத்தைத்தான் ஒரே இரவில் ஒட்டுமொத்தமாக அழிப்பேன் என ட்ரம்ப் சூளுரைத்திருந்தார்.

‘முழு நாகரிகமே அழியும்’:

ஈரானைக் குறித்து டொனால்ட் ட்ரம்ப் கூறிய ‘இன்று இரவு ஒரு முழு நாகரிகமே அழியும்’ என்ற கருத்துத் தொடர்பாக ‘Jeff Bleich Centre for Democracy and Disruptive Technologies, Flinders University’ இன் பேராசிரியர் Jeff Bleich Centre for Democracy and DisruptivRodrigo Praino, ‘The Conversation’ e Technologies, Flinders University’ இணையத்தில் 09.04.26 ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அதில் அவர் வரலாற்று ரீதியாகவும் நெறிமுறை சார்ந்தும் ட்ரம்பின் இம்மானிட விரோதக் கருத்தினைப் பகுப்பாய்வு செய்துள்ளார். பண்டைய ரோமானிய செனட்டர் கேட்டோவின் (Cato the Elder) ‘Carthago delenda est’ என்ற புகழ்பெற்ற முழக்கத்துடன் ட்ரம்பின் கூற்றினை ஒப்பிடுகிறார். ‘Carthago delenda est’ என்பது ‘கார்த்தேஜ் அழிக்கப்பட வேண்டும்’ என்று பொருள்படும் ஓர் இலத்தீன் சொல்லாடலாகும். மூன்றாவது பியூனிக் போருக்கு (Third Punic War) முன்னதாக, ரோமானிய செனட்டர் ‘கேட்டோ’ தனது உரைகளை முடிக்கும்போது இந்த வாசகத்தைப் பயன்படுத்தியமை வரலாற்றில் பதிவாகியுள்ளது. ரோமாபுரி அதன் எதிரி நாடான கார்த்தேஜை நசுக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதற்காக அவர் இதைத் தொடர்ந்து கூறி வந்தார். இதன் விளைவாக, பொ.ஆ.மு. 146-இல் கார்த்தேஜ் நகரம் முழுமையாக அழிக்கப்பட்டது. இந்த நிகழ்வும் சொல்லாட்சியும் பிற்காலத்தில் இனப் படுகொலைக்கான தூண்டுதலின் ஆரம்பகால உதாரணமாகக் கருதப்படுகிறது.

இராணுவ இலக்குகள் அல்லது அரசியல் தலைமைகளுக்குப் பதிலாக, ஒட்டுமொத்த மக்கள் திரளுக்கும் விடுக்கப்பட்ட பொதுவான அச்சுறுத்தலாக ட்ரம்பின் கருத்து இருப்பதால், சொல்லாட்சி சார்ந்தும் (Rhetoric) உள்ளடக்கத்திலும் ஒரு அபாயகரமான எல்லையைத் தாண்டியுள்ளது என்று Rodrigo Praino வாதிடுகிறார். இந்த நிகழ்வு ஒரு தற்காலிகப் போர்நிறுத்தத்தில் முடிந்தாலும், இத்தகைய கூற்றுகள் சர்வதேச நெறிமுறைகளைச் சிதைப்பதற்கும், ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் சொல்லாட்சி மற்றும் உரைகளின் எல்லைகளை மாற்றுவதற்கும் வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார். இந்தச் சொல்லாட்சியின் சர்வதேசச் சட்ட ரீதியான தாக்கங்களையும் இக்கட்டுரை விவாதிக்கிறது. இவை பொதுமக்களுக்கு எதிரான தாக்குதல்களாகச் செயற்படுத்தப்பட்டால், அது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தைக் கடுமையாக மீறுவதாகும்; அத்துடன், அது போர்க்குற்றமாகக் கருதப்படத்தக்க அம்சங்களையும் பிரதிபலிப்புகளையும் கொண்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட இனத்தையோ அல்லது குழுவையோ அழிக்கும் நோக்கம் இருந்தால், அது 1948-ஆம் ஆண்டின் ஐ.நா. சபையின் இனப்படுகொலை தடுப்புச் சாசனத்தின் கீழ் கையாளக்கூடியது. அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கைகள் ஐ.நா. சாசனத்தின் விதிகள் மற்றும் அமெரிக்க அரசியலமைப்பின் ‘போர் அறிவிப்பு’ அதிகாரங்களுக்கு உட்பட்டதா? என்ற கேள்வியையும் கட்டுரை எழுப்புகிறது. இத்தகைய அரசியல் சொல்லாடல்கள் அமெரிக்காவின் உலகளாவிய நற்பெயர், சட்டபூர்வமான தன்மை மற்றும் அதன் மென்சக்தியை (soft power) வலுவிழக்கச் செய்து, வெளியுறவுக் கொள்கையில் நீண்ட காலப் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்றும் அக்கட்டுரையின் நிறைவுரையிற் சுட்டிக்காட்டப்படுகிறது.

இராணுவ இலக்குகள் அல்லது அரசியல் தலைமைகளுக்குப் பதிலாக, ஒட்டுமொத்த மக்கள் திரளுக்கும் விடுக்கப்பட்ட பொதுவான அச்சுறுத்தலாக ட்ரம்பின் கருத்து இருப்பதால், சொல்லாட்சி சார்ந்தும் உள்ளடக்கத்திலும் ஒரு அபாயகரமான எல்லையைத் தாண்டியுள்ளது என்று Rodrigo Praino வாதிடுகிறார். இத்தகைய கூற்றுகள் சர்வதேச நெறிமுறைகளைச் சிதைப்பதற்கும், ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் சொல்லாட்சி மற்றும் உரைகளின் எல்லைகளை மாற்றுவதற்கும் வழிவகுக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

போர் நிறுத்தமும் சாத்தியமான தீர்வுகளும்:

28.02.26 முதல் ஆறு வாரங்கள் வரை நீடித்த ஈரானுக்கெதிரான அமெரிக்க இஸ்ரேல் கூட்டுப் போர், ஏப்பிரல் 7 தற்காலிகப் போர் நிறுத்தத்தினை எட்டியுள்ளது. ஈரானில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தப் போகிறோம் என அமெரிக்கா சூளுரைத்துப் போரை மூர்க்கமாக நடத்தியது. இந்தப் போர் அமெரிக்காவும் இஸ்ரேலும் சூளுரைத்தபடி இலக்கினை அடையவில்லை. ஈரானில் ஆட்சி மாற்றம் நிகழவில்லை, மக்கள் எழுச்சியும் ஏற்படவில்லை. பாரசீக வளைகுடாவையும் ஓமான் வளைகுடாவையும் இணைக்கும் முக்கிய கடல்வழியான ஹோர்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தவும், பிராந்திய நாடுகளான இஸ்ரேல், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் குவைத் உட்பட்டவற்றைத் தாக்கி எதிர்வினையாற்றும் ஆற்றலையும் ஈரான் தக்கவைத்திருந்தது.

இந்தப் போரில் பாடசாலைச் சிறார்கள் உட்படப் பல்லாயிரக்கணக்கான பொதுமக்களையும் பத்துக்கும் மேற்பட்ட தலைவர்களையும் ஈரான் இழந்துள்ளது. முக்கிய உட்கட்டமைப்புகளும் சேதமடைந்தன. போர் நிறுத்த அறிவிப்புக்குப் பிறகு, ஹோர்முஸ் நீரிணை வழியாகக் கப்பல்கள் செல்லத் தொடங்கின. உலக எரிபொருட் சந்தை சுமுகமடைந்தது. போர் நிறுத்த அறிவிப்பிற்குப் பின்னரும் லெபனான் மீது இஸ்ரேல் குண்டுவீச்சு நடத்தியது. எனவே மீண்டும் ஆக்கிரமிப்புத் தரப்புகள் ஈரான் மீது தாக்குதல்களைத் தொடங்கக்கூடும். அவ்வாறு நேர்ந்தால் அது எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இந்த ஆறு வாரங்களுக்குள் உலகம் பட்டறிந்துள்ளது. குறிப்பாக உலகப் பொருளாதாரத்தின் மீது அதன் தாக்கமும், உயிர், உடமை, உட்கட்டுமானச் சிதைவுகளும் பாரியவை. போர்நிறுத்த உடன்பாடு நீட்டிக்கப்பட வாய்ப்புண்டு. இரு தரப்பும் இந்த இரண்டு வாரங்களையும் அல்லது மேலும் நீடிக்கப்படும் காலத்தையும் பயன்படுத்தி, ஒரு

நிரந்தர சமாதானத் தீர்வுக்குரிய உடன்படிக்கையைத் தயார் செய்வது சாத்தியமான சூழலாக அமையலாம்.

ஈரான் தனது அணு ஆயுதத் திட்டங்களைக் கைவிட வேண்டும்; பலஸ்தீனத்தின் ஹமாஸ் மற்றும் லெபனானின் ஹிஸ்புல்லா ஆகியவற்றுக்கு ஆயுத உதவி அளிப்பதை நிறுத்த வேண்டும் என்பது அமெரிக்கா-இஸ்ரேல் தரப்பின் இரண்டு முக்கிய கோரிக்கைகள். போர் நிறுத்த அறிவிப்பிற்குப் பின்னரும் ஹிஸ்புல்லாவின் முக்கிய தளமாக விளங்கும் லெபனானின் தலைநகர் பெய்ருட் மீது (2026 ஏப்பிரல் 8) இஸ்ரேல் பாரிய விமானத் தாக்குதல்ககளை நடத்தியது. இதில் இன்னுமோர் விடயம் ஈரானிடம் அணுவாயுதங்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தியே அமெரிக்காவும் இஸ்ரேலும் அதன் மீது தாக்குதல்களைத் தொடுத்தன என்பது வெள்ளிடை மலை. அதாவது ஈரானிடம் அணு ஆயுதம் இருந்திருந்தால் அமெரிக்காவோ இஸ்ரேலோ தாக்கத் துணிந்திருக்க மாட்டா. பதிலடியாக பிராந்திய (இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ஆதரவு மத்திய கிழக்கு நாடுகள்) நாடுகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களைத்தான் நடத்தியது என்பதும் அதனிடம் அணு ஆயுதங்கள் இல்லை என்பதையே காட்டுகின்றன. கட்டார், சவூதி அரேபியா உள்ளிட்ட முஸ்லிம் அண்டை நாடுகள் மீது ஈரான் நடத்திய ட்ரோன், ஏவுகணைத் தாக்குதல்கள் ஈரானுக்கான புதிய எதிரிகளை உருவாக்குவதற்கும் மேலும் தனிமைப் படுத்துவதற்குமே வழிகோலக்கூடியவை.

ஈரானிடம் அணு ஆயுதம் இருந்திருந்தால் அமெரிக்காவோ இஸ்ரேலோ தாக்கத் துணிந்திருக்க மாட்டா. பதிலடியாக பிராந்திய (இஸ்ரேல் மற்றும் அமெரிக்க ஆதரவு மத்திய கிழக்கு நாடுகள்) நாடுகள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல்களைத்தான் நடத்தியது என்பதும் அதனிடம் அணு ஆயுதங்கள் இல்லை என்பதையே காட்டுகின்றன. கட்டார், சவூதி அரேபியா உள்ளிட்ட முஸ்லிம் அண்டை நாடுகள் மீது ஈரான் நடத்திய ட்ரோன், ஏவுகணைத் தாக்குதல்கள் ஈரானுக்கான புதிய எதிரிகளை உருவாக்குவதற்கும் மேலும் தனிமைப்படுத்துவதற்குமே வழிகோலக்கூடியவை.

கூட்டு உடன்படிக்கையிலிருந்து அமெரிக்கா விலகலும் ஈரானின் யுரேனியச் செறிவூட்டல் திட்டமும்:

2018-இல் ஈரானுடனான கூட்டு விரிவாக்கச் செயற்றிட்ட (Joint Comprehensive Plan of Action - JCPOA) உடன்படிக்கையிலிருந்து ட்ரம்ப் நிர்வாகம் விலகியது. அந்த உடன்படிக்கையில் அணு ஆயுத உற்பத்திக்குச் செல்வதில்லை என்பதை ஈரான் ஏற்றிருந்தது. இது 2015-இல் ஈரான் மற்றும் ஐ.நா. பாதுகாப்பு அவையின் நிரந்தர உறுப்பு நாடுகள், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக உருவான அணுசக்திக் கூட்டு உடன்படிக்கையாகும். ஈரானின் அணுசக்தித் திட்டங்களை, குறிப்பாக யுரேனியம் செறிவூட்டலைக் கட்டுப்படுத்துவதற்குக் கைமாறாக அந்நாட்டின் மீதான பொருளாதாரத் தடைகளை படிப்படியாக நீக்குவதே இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சமாகும். ஈரான் அணு ஆயுதங்களை உருவாக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதும், அதே நேரத்தில் அமைதி முறைமைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்துவதற்கான அந்நாட்டின் உரிமையும் ஏற்கப்பட்டிருந்தது. இருப்பினும், 2018-இல் அமெரிக்கா இந்த உடன்படிக்கையிலிருந்து ஒருதலைப்பட்சமாக வெளியேறியது. ஈரான் மீது மீண்டும் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட இந்த வெளியேறல் காரணமாக அமைந்தது. இதற்குப் பதிலடியாக, ஈரானும் உடன்படிக்கையின் கீழ் தான் ஏற்றுக்கொண்ட கடப்பாடுகளைப் படிப்படியாக விலக்கிக்கொள்ளத் தொடங்கியது. இந்த அணுசக்தி உடன்படிக்கைக்கு மீண்டும் உயிர்கொடுப்பதற்கான பேச்சுவார்த்தைகள் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சி நிரலில் இருந்தபோதிலும், அதில் முன்னேற்றம் மந்தமாகவே இருந்தது. இடைப்பட்ட காலத்தில் இஸ்ரேல்-பாலஸ்தீனம், லெபனான் மற்றும் பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகள் மற்றும் குழுக்களுக்கு இடையிலான மோதல்கள் பதற்றத்தை மேலும் அதிகரித்திருந்தன. யுரேனியம் செறிவூட்டலை இராணுவத் தேவைகளுக்காகப் பயன்படுத்த ஈரானுக்குத் திட்டமோ அல்லது வாய்ப்போ உள்ளதா என்பது குறித்த அச்சம் இஸ்ரேல் - அமெரிக்கத் தரப்புகளிடம் தொடர்ந்து இருந்து வந்தன. அமெரிக்கா வெளியேறிய பிறகே ஈரான் மீண்டும் யுரேனியச் சேமிப்பையும் செறிவூட்டலையும் அதிகரித்தது என்றும் கூறப்படுகிறது.

அறிவிக்கப்பட்டிருக்கும் போர் நிறுத்தத்திற்குப் பின்னர் ஈரானுடன் ஒரு நிலைகொள் / பேண்தகு உடன்பாட்டினை (Sustainable) எட்டுவது சுலபமல்ல. இந்தப் போர் பிராந்தியப் போட்டிகளைத் தூண்டி கூர்தீட்டியுள்ளதோடு, பல முக்கிய நாடுகளில் உள்ளக அரசியல் நெருக்கடிகளையும் தீவிரப்படுத்தியுள்ளது. 2026 ஏப்பிரல் 7 அன்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திடீரென போர்நிறுத்த அறிவிப்பு வெளியிட்டார். அதற்கு முதல் நாள் ஒரு முழு இனமுமே அழிந்துபோகப் போகின்றது என ஈரான் குறித்து பெரும் அச்சுறுத்தலை விடுத்திருந்தார். இந்த முன்பின் முரணான அணுகுமுறையும் திடீர் போர் நிறுத்த அறிவிப்பும், அதாவது அதீதமான அச்சுறுத்தல்களிலிருந்து இரண்டு வாரப் போர் நிறுத்தத்திற்குச் செல்லும் மாற்றமானது அமெரிக்க இலக்குகள் என்ன என்பதிலும், தொடர்ந்து நடைபெற வேண்டிய சமாதான முயற்சிகளுக்கான அடித்தளம் என்ன என்பதிலும் நிச்சயமற்ற நிலையை உருவாக்கியிருக்கின்றன. அதே வேளை, உள்ளடக்கம் சார்ந்து போர்நிறுத்தம் அதனளவிற் பலவீனமாகத் தெரிகிறது. குறிப்பாக அது லெபனான் மீதான தாக்குதல்களுக்கும் போர்நிறுத்தம் சார்ந்ததா? என்பது குறித்த தெளிவேதும் இல்லை. லெபனானும் போர்நிறுத்த உடன்பாட்டிற்குள் அடங்குகின்றது என ஈரானும் பாகிஸ்தானும் கூறியபோதும், அமெரிக்காவும் இஸ்ரேலும் அதை மறுத்தன. அதுமட்டுமின்றி போர்நிறுத்தம் அமுலுக்கு வந்த உடனேயே இஸ்ரேல் லெபனானில் பரவலான குண்டுவீச்சுகளைத் தொடர்ந்தது.

பெரிய இஸ்ரேல் (Greater Israel) – விரிவாக்கக் கொள்கை:

இன்றைய சூழலில் போர்நிறுத்த நீடிப்பும் சமாதானத் தீர்வும் சாத்தியமானவையா? என்ற கேள்விகள் நிலவுகின்றன. தீர்வற்று நீளும் முரண்பாடுகளுக்கான எடுத்துக்காட்டுகள் வரலாற்றில் நிறையவே உள்ளன. மீண்டும் போர் தொடங்கினாலோ தீர்வு எட்டப்படாவிடிலோ இருதரப்பிற்கும் மட்டுமல்ல, பிராந்திய, சர்வதேச மட்டத்திலும் அது நீடித்த விளைவுகளுக்குக் கால்கோலும். இங்கு தரப்பிலும் பரஸ்பர நம்பிக்கையின்மை ஒரு பெரிய பிரச்சினையாகும். வாக்குறுதிகளை மீறுவதும் இருதரப்பிற்கும் புதிதல்ல. ஒருபுறம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டே மற்றொரு புறம் ஈரான் மீது தாக்குதல்களை நடத்தியது அமெரிக்கா. ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் இராணுவ நடவடிக்கை, அமெரிக்காவின் சொந்த நலன்களுக்குப் பயன்படுவதாகத் தெரியவில்லை. தெளிவற்ற இலக்குகளோடு அமெரிக்கா களமிறங்கியுள்ளது. இதில் பெரும் ஆதாயம் அடைகின்ற நாடு இஸ்ரேல். இந்தப் போர் மூலம் இஸ்ரேலின் நலன்களுக்கும் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கும் அமெரிக்கா சேவகம் செய்கின்றது. உண்மையில் இது அமெரிக்காவிற்குப் பெரும் பொருளாதாரச் சுமையையும், எண்ணெய் விலை ஏற்றத்தையும் ஏற்படுத்துகிறது. இன்னுமொரு வகையிற் சொல்வதானால் இந்தப் போர் இஸ்ரேலின் விரிவாக்கக் கொள்கையின் ஒரு அங்கமாகவும் கருதப்படுகின்றது. அமெரிக்க இராணுவ பலத்தினைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, காசா மீதான தனது ஆக்கிரமிப்புப் போரிலிருந்து கவனத்தைத் திசைதிருப்ப இஸ்ரேல் ஈரான் போரினைக் கருவியாக்கியுள்ளது.

இஸ்ரேலியத் தலைவர்கள், குறிப்பாக நேதன்யாகு இந்தப் போரைத் தங்களின் அரசியல் இருப்பிற்கும் நிலவிரிவாக்கத்திற்கும் ஒரு வாய்ப்பாகப் பார்க்கிறார்கள். 'பெரிய இஸ்ரேல்' எனும் மதவாத சீயோனிசக் கருத்துக்கள் வலுப்பெற்று, எல்லைகளை விரிவுபடுத்தும் முனைப்பினை இஸ்ரேல் கொண்டிருக்கின்றது. ஈரானுடனான மோதலைப் பயன்படுத்தி, காசா மற்றும் மேற்குக் கரையில் தனது கட்டுப்பாட்டை மேலும் மேலும் அதிகரித்து வருகிறது. லெபனானில் ஹிஸ்புல்லாவை ஒடுக்குவதான போர்வையில், லித்தானி ஆறு வரை ஒரு 'பாதுகாப்பு மண்டலத்தை' உருவாக்க இஸ்ரேல் முயல்கிறது.



லித்தானி ஆறு, லெபனான் நாட்டில் பாயும் ஆறுகளில் ஒன்று. லெபனானின் கிழக்கில் உள்ள பெக்கா பள்ளத்தாக்கில் உருவாகும் இந்த ஆறு, தெற்காகப் பாய்ந்து, டயர் நகரத்தைக் கடந்து மத்தியத்தரைக் கடலில் கலக்கிறது. லித்தானி ஆறு 140 கிலோ மீட்டர் நீளம் கொண்டது.

வளைகுடா நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடியும் சிக்கலான புறநிலைகளும்:

சவூதி அரேபியா மற்றும் கத்தார் போன்ற வளைகுடா நாடுகள் ஒரு இக்கட்டான நிலையில் உள்ளன. அதிகளவில் ஆயுதங்களைக் கொண்டிருக்கின்ற போதும், போர் தங்கள் நாட்டுப் பொருளாதாரத்தையும் உட்கட்டுமானத்தையும் சேதப்படுத்தும்போது அந்நாடுகள் கையறு நிலையிலேயே உள்ளன. அமெரிக்கா எப்போதும் இஸ்ரேலின் நலன்களுக்கே முன்னுரிமை அளிப்பதால், அமெரிக்கா மீதான நம்பகத்தன்மை இந்த நாடுகளிடையே குறைந்து வருகிறது. இப்போது ஈரானை விட இஸ்ரேலே இப்பிராந்தியத்தின் ஆகப்பெரிய அச்சுறுத்தலாகப் பார்க்கப்படுகிறது. அமெரிக்கா மோதலில் சிக்கியுள்ள நிலையில், சீனா மற்றும் ரஷ்யா இராஜதந்திரத்துடன் அவதானித்து வருகின்றன. உலகப் பொருளாதாரம் மற்றும் எரிசக்தி விநியோகம் குறித்த கவலைகள் சீனாவிற்கு இருப்பினும் பிராந்தியத்திலும் உலகளாவிய ரீதியிலும் அமெரிக்காவின் செல்வாக்குச் சரிவதைத் தனக்குச் சாதகமாக நோக்குகிறது. ரஷ்யாவும் அமெரிக்கச் சரிவைச் சாதகமாகக் கையாண்டு அனைத்துத் தரப்பினருக்கும் பேச்சுவார்த்தைக்கான கதவுகளைத் திறந்துவைத்துள்ளது.

இந்த முரண்பாடு பல சிக்கல்களாலானது. மத்திய கிழக்குப் பிராந்தியத்திற் பல நாடுகள், ஆயுதப் போராட்டத் தரப்புகள், பிராந்திய, உலக வல்லரசுகள் எனவான பல தரப்புகள் இதில் தொடர்புபட்டுள்ளன. இந்தப் புறச்சூழல்கள் போர்நிறுத்தம், அதன் அடுத்தகட்டமான சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் கடினமாக்கக்கூடியது. மத்தியகிழக்கின் அரசியல்-இராணுவ-பொருளாதாரக் கூட்டுகள் இறுதித் தசாப்தத்தில் மாறுதல்களுக்கு உட்பட்டுள்ளன. ஈரான் - சவுதி இடையிலான போட்டி தீவிரமடைந்துள்ளது. இந்தப் போர் இத்தகு போக்குகளைத் தீவிரப்படுத்துவதோடு,

> உலகப் பொருளாதாரம் மற்றும் எரிசக்தி விநியோகம் குறித்த கவலைகள் சீனாவிற்கு இருப்பினும் பிராந்தியத்திலும் உலகளாவிய ரீதியிலும் அமெரிக்காவின் செல்வாக்குச் சரிவதைத் தனக்குச் சாதகமாக நோக்குகிறது

போட்டித் தரப்புகள் தத்தமது எதிரிகள் மீது அழுத்தங் களைப் பிரயோகிப்பதற்கும் மூலோபாய நலன்களை முன்னி றுத்துவதற்கும் வழிசமைத்துள்ளது. மட்டுமன்றி வெளித்தரப் புகளான சீனா, ரஷ்யா, பாகிஸ்தான் ஆகியவை அவற்றுக் குரிய நலன்களோடு இராஜதந்திர ரீதியான முனைப்பு களோடு உள்வந்துள்ளன. அதேவேளை வளைகுடா நாடு கள், லெபனானின் ஹிஸ்புல்லா, யேமனின் ஹைதி இயக்கம் உட்பட்ட பிராந்தியத் தரப்புகளும் இப்போரின் போர்நிறுத் தத்தின், தீர்வு முயற்சிகளின் திசைவழியில் செல்வாக்குச் செலுத்தக்கூடியன.

இந்தப் போர் குறுகிய காலத்தில் பேரழிவுகளை ஏற்படுத்தி யுள்ளது. குறிப்பாக ஈரான் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. 1200-இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்து, 3.2 மில்லி யனுக்கும் அதிகமானோர் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள் ளனர். நாட்டின் உட்கட்டமைப்புக்கள் கணிசமாகச் சிதைக் கப்பட்டுள்ளது. இஸ்ரேலின் தாக்குதல்களால் லெபனா னிலும் பெரும் உயிர், உடமை அழிவுகளோடு, பெருமெண் ணிக்கையில் மக்கள் இடம்பெயர்க்கப்பட்டுள்ளனர். இந்தப் போர், உடனடி மனிதாபிமான விளைவுகளை மட்டுமல் லாமல், ஏலவே திடமற்றிருந்த பிராந்திய ஒழுங்கினை மேலும் சிக்கல்களுக்கு உள்ளாக்கியுள்ளது.

ஹைதி இயக்கமானது, 2014 முதல் யேமன் தலைநகர் சனாவைக் (Sanaa) கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்சும் ஆகியவற்றின் தொடர்ச்சியான இராணுவ அழுத்தம் காரணமாகப் படிப்ப டியாக ஈரானின் பக்கம் இந்த அமைப்பு சாய்ந்துள்ளது. 2024-இல் செங்கடலில் கப்பற் போக்குவரத்து மீது தாக்கு தல்களை நடத்தியது. பின்னர் 2025 நடுவில் அமெரிக்கா வுடன் போர்நிறுத்த உடன்பாட்டினை மேற்கொண்டிருந் தாலும் மோதல்கள் முற்றிலும் தீர்க்கப்படவில்லை. ஈரான் மீதான அண்மைய போரின்போது, மார்ச் 28 அன்று இஸ்ரேல் மீதான தாக்குதல்களில் ஹைதிகள் மீண்டும் தீவிரமாக ஈடு பட்டனர். இதன்மூலம் ஈரானின் நம்பிக்கையை அதிகரிப்ப தற்கான வகையில் தமது தாக்குதற்திறன் மற்றும் விசுவா சத்தை வெளிப்படுத்துவதன் மூலம் அரசியல் மற்றும் இராணுவ ரீதியான செயல்வெளியைப் பெற்றிருக்கக்கூடும். இதனால், எதிர்கால இராஜதந்திர முயற்சிகளில் இடையூறு செய்து பேச்சுவார்த்தைகளைக் குழப்பக்கூடும் என்ற கருத்தும் சிலமட்டங்களில் நிலவுகின்றது.

சிதைவடைந்துள்ள பல்தரப்புக் கூட்டுறவும் கட்ட மைப்புகளும்:

ஈரான் மீதான போர் நவீன உலகின் பல்தரப்புக் கூட்டுறவி னையும் (பன்முகச்சார்பியம் - Multilateralism) அதன் கட்ட மைப்புகளையும் கேள்விக்கு உள்ளாக்கியுள்ளது. பல்த ரப்புக் கூட்டுறவு என்பது மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளின் நிறுவனமயப்பட்ட கூட்டமைப்பு மற்றும் உடன்ப டிக்கைகளைக் குறிக்கிறது. அமைதியை நிலைநாட்டுவதும் உலகளாவிய வணிக உறவுகளை இலகுபடுத்துவதும், காலநிலை மாற்றம், பெருந்தொற்றுகள் போன்ற உலக ளாவிய சவால்களைக் கையாள்வதும் இத்தகு சார்ந்த கட்ட மைப்புகளின் இலக்காகும். ஐ.நா. இத்தகு பன்னாட்டு அமைப்புகளில் முதன்மையானது. ஐரோப்பிய ஒன்றியம், உலகவங்கி, உலக சுகாதார அமைப்பு, உலகத் தொழிலாளர் அமைப்பு போன்றனவும் பல்தரப்புக் கூட்டுறவு அமைப்புகளே.

உலகளாவிய வர்த்தகம், விமானப் போக்குவரத்து, சுகாதாரம், தொடர்பாடல் ஆகியவற்றில் தரநிலைகளை உருவாக்குவதற்குப் பல்தரப்பு உறவுகள் உதவுகின்றன. இவை உருவாக்கப்பட்ட நோக்கம் உலகமயமாக்கலுக்கு வலுச்சேர்ப்பதாகும். ஆனால் நடைமுறை யதார்த்தத்தில் சமத்துவமின்மை, சர்வதேச உடன்படிக்கைகளை மறுக்கின்ற ஏகாதிபத்திய சக்திகளின் அணுகுமுறை, சர்வாதிகார மற்றும் தேசியவாத அரசியல் ஆகியவை பெரும் சவால்களை உண்டுபண்ணியுள்ளன. உலகளாவிய தீர்வுக ளையும் புறச்சூழல்கள் மேலும் கடினமாக்கியுள்ளன. இவற் றுக்கு மத்தியிலும் உலகளாவிய பிரச்சினைகளைக் கையாள்வதற்குப் பன்னாட்டு நிறுவனங்களின் வகிபாகம் இன்னமும் உத்தி சார்ந்தும் மூலோபாயம் சார்ந்தும் முக்கி யத்துவம் வாய்ந்தது என்பதை மறுக்கமுடியாது.

பன்னாட்டு உடன்படிக்கைகள் பலவீனமடைந்ததற்கான ஆகப்பிந்திய உதாரணம் என ஈரான் மீதான கூட்டுத்தாக்கு தல்களை வரையறுக்கலாம். பெருவல்லரசுகள் ஒருதலைப் பட்சமாக செயற்படும்போது, பன்னாட்டு அமைப்புகளின் கட் டமைப்புகள் புறக்கணிக்கப்படுகின்றன. ஐ.நா., குறிப்பாக பாதுகாப்பு அவையின் வீட்டோ பிரயோக உரிமை அந்த அமைப்பினைச் செயல்வலு அற்றதாக்கியுள்ளது. ஈரான்



> நடைமுறை யதார்த்தத்தில் சமத்துவ மின்மை, சர்வதேச உடன்படிக்கைகளை மறுக்கின்ற ஏகாதிபத்திய சக்திகளின் அணுகுமுறை, சர்வாதிகார மற்றும் தேசியவாத அரசியல் ஆகியவை பெரும் சவால்களை உண்டுபண்ணியுள்ளன

மீதான தாக்குதல்கள் தொடங்கப்பட்ட பின்னர் ஐ.நா. பாதுகாப்புத் தீர்மானம் ஈரானின் தாக்குதலைக் கண்டிக்கிறது, ஆனால் அமெரிக்காவின் வலிந்த போரை உரிய முறையிற் கண்டிக்கவில்லை. 2026 பெப்பிரவரி இறுதியில் அமெரிக்காவும் இஸ்ரேலும் ஈரான்மீது தாக்குதல்களைத் தொடங்கியபோது, பாதுகாப்பு அவை ஆரம்பத்தில் எந்த அர்த்தமுள்ள எதிர்வினையையும் ஆற்றாது மொனித்திருந்தது. ஹேர்முஸ் நீரிணை மூடப்பட்டு, மோதல் தீவிரமடைந்து, உலகப் பொருளாதாரத்தினைப் பாதிக்கத் தொடங்குகிறது என்ற நிலையிற்தான் பாதுகாப்பு அவை உறக்கம் கலைந்தது. மார்ச் 11-இற்தான் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. அதுவும் வளைகுடா நாடுகள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களை கண்டிப்பதில் மட்டுமே கவனம் குவித்தது. ரஷ்யா, சீனா ஆகிய வீட்டோ அதிகார நாடுகள் வாக்களிப்பிலிருந்து விலகிய நிலையில், 13 வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம், ஈரானின் நடவடிக்கைகளை 'மோசமான தாக்குதல்கள்' என்று வர்ணித்து, அதன் பிராந்திய ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்துமாறு கோரியது. எனவே அந்தத் தீர்மானம் அப்பட்டமாக ஒருதலைப்பட்சமானது. வலிந்து போரைத் தொடங்கி மூர்க்கமான தாக்குதல்களை நடத்திய அமெரிக்க-இஸ்ரேல் கூட்டுத்தாக்குதல்கள் குறித்த கடுமையான எதிர்வினைகளைத் தீர்மானத்தில் உள்ளடக்குவதற்கு மாறாக ஈரானை ஒருதலைப்பட்சமாக வன்மையாகக் கண்டித்த தீர்மானமாக அது வெளிவந்தது.

பல்தரப்பு உறவுகளின் இரட்டை அணுகுமுறைகள்:

இந்த அணுகுமுறையும் அதன் வெளிப்பாடும் இந்த அமைப்புகளின் இரட்டைத்தன்மைகளைப் பட்டவர்த்தனமாக்குகின்றன. அவற்றின் செயல்வலுவின்மையோடு, சட்டபூர்வ அதிகாரத்தை உரிய முறையிற் பயன்படுத்தாமையினையும் வெளிப்படுத்துகிறது. ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிடத்தக்க பொருளாதார மற்றும் இராஜதந்திர உறவுகள் சார்ந்த செயல்வெளிகளையும் திறனையும் கொண்ட அமைப்பாக விவரிக்கப்பட்டாலும் அதுவும் நடைமுறை யதார்த்தத்தில் செயற்றிறன் அற்றதே. அது அதிகம் உள்ளகப் பிளவுகளைக் கொண்டுள்ளது. அத்தோடு பாதுகாப்பு நிலவரங்களில் அமெரிக்காவிற் தங்குநிலையில் உள்ளது. அந்த அமைப்பு ஒருமித்த கருத்துடனும் உறுதியுடனும் செயற்படும் நிலையில் இல்லை.

சர்வதேச பல்தரப்புக் கூட்டுறவு என்பது பலவீனமான நிலையில் உள்ளது என்பதே யதார்த்தம். பன்னாட்டு நிறுவனங்களிடம் கட்டமைக்கப்பட்ட கருவிகள் உள்ளன, ஆனால் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குரிய அரசியல் அணிதிரட்டலும் திராணியும் போதுமானதாக இல்லை. நிலைமைகள் மோதலாக விரிவடைந்த பின்னணியையும் அந்தத் தாக்குதல்களின் சட்டபூர்வ அங்கீகாரமற்ற தன்மை அல்லது ஈரானின் ஆன்மிகத் தலைவர் கொல்லப்பட்ட சம்பவம் போன்றவற்றையும் ஐ.நா. தீர்மானம் பரிசீலிக்கவில்லை. அமெரிக்க - இஸ்ரேல் கூட்டு இராணுவ இயந்திரம் மேற்கொண்ட மோசமான சர்வதேசச் சட்ட விதிமுறைகளின் மீறல்களுக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்பு அவை மௌனம் சாதித்திருக்கிறது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பின் காவலனாகப் பாதுகாப்பு அவையின் நம்பகத்தன்மையை இந்த அணுகுமுறை வலுவாகக் குன்றச் செய்கிறது.

சர்வதேச, பிராந்திய விவகாரங்களில் ஐரோப்பிய ஒன்றியத்தின் செயற்றிறன் குறைபாட்டிற்கான தடையான அம்சங்கள் அதன் நிறுவன மற்றும் வளங்கள் சார்ந்தவை அல்ல. அது அதிகம் உளவியல் சார்ந்தது எனப்படுகின்றது. அதற்குத் தலைமை வகிபாகத்தினை எடுத்துக்கொள்ளும் விருப்பு இல்லை. ஐரோப்பாவின் முதன்மை அடையாளமாகவுள்ள பன்முகத்தன்மை, சர்வதேச சட்டம் உட்பட்ட மதிப்பீடுகள் ட்ரம்ப்-இனால் அதீதமாக அமவதிக்கப்படும் போதும் மீறப்படும் போதும் வலிமையான எதிர்வினைகளையோ, அணுகுமுறைகளையோ முன்வைக்கும் தைரியம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் இல்லை. ஒருதலைப்பட்ச அமெரிக்க நடவடிக்கைகளுக்கு எதிர்வினை ஆற்றும் அணுகுமுறையாகத் தனது பொருளாதார மற்றும் இராஜதந்திர ஆற்றலைப் பயன்படுத்துவதற்கு மாறாக உடனடி சமரச சைகைகளுக்கே ஐரோப்பிய ஒன்றியம் திரும்பியுள்ளது. வெறும் நல்லெண்ணத்தால் தீர்வுகளையும் ஒருமைப்பாட்டினையும் பன்முகத்தன்மையையும் மீளுருவாக்கலாம் என்ற அணுகுமுறையினையே ஐரோப்பிய ஒன்றியம் பன்னாட்டுத் தன்மை அல்லது பல்தரப்புக் கூட்டுறவுச் செல்லாக்காசு ஆகிவிட்டதனையே ஈரான் மீதான தாக்குதல்கள் வெளிப்படுத்துகின்றன. உலகளாவிய முரண்பாடுகளைத் தீர்ப்பதிலும் பன்னாட்டு அமைப்புகள் அல்லது பல்தரப்பு உறவுகள் செயல்வலுவோடு பங்களிக்கின்ற வெளிகள் அற்ற சூழல்களே நிலவுகின்றன. இன்னும் சொல்லப்போனால் அவை அத்தகு அதிகாரங்களையோ அணுகுமுறைகளையோ கொண்டவையாக இல்லை என்பதே யதார்த்தமாகும். இரண்டாம் உலகப்போரிற்குப் பின் நாடுகளுக்கிடையிலான போர்தவிர்ப்பு, பாதுகாப்பு ஆகியவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டு 'சர்வதேச விதிகளுக்கு அமைமை' உருவாக்கப்பட்டன. அவற்றின் செயற்றிறனின் அதிகபட்சப் பலவீனத்தின் அளவுகோலாக அல்லது பலவீனத்தை அளவிடும் இறுதிச் சம்பவமாக ஈரானுக்கெதிரான அமெரிக்க இஸ்ரேல் போரினைக் காணலாம்.

ஐக்கிய நாடுகள் (UN) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் (EU) ஆகியவை 1945-இற்குப் பிந்தைய உலக ஒழுங்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு அமைப்புகள். அந்த ஒழுங்கு சட்டத்தின் ஆட்சி எனும் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு தாக்குதற் தவிர்ப்பு (Non-aggression), நாடுகளின் இறைமையையும் ஆள்புல ஒருமைப்பாடு மற்றும் அரசியற் சுயாதீனத்திற்கு (The territorial integrity and political independence of sovereign states) மதிப்பளித்தல் போன்ற கொள்கைகளின் மீது உருவாக்கப்பட்டதாகும். இந்தக் கொள்கைகளும் அவற்றை உட்படுத்தி நிற்கும் சர்வதேச அமைப்புகளும் அமெரிக்கா-இஸ்ரேல் கூட்டு இராணுவ நடவடிக்கையின் பலிகளாக மாறிநிற்கின்றன என்பது சமகால யதார்த்தம். சமகால யதார்த்தம் என்பதைத் தாண்டி, பின்-செப்ரெம்பர் யதார்த்தம் அதுவாகத்தான் இருக்கின்றது.



rooban.s@thaiveedu.com



ரதன்

பெற்றோல், டொலர் அதிகாரம்

உலகெங்கும் தொடர்ச்சியாகப் போர்கள் நடைபெற்றுவருகின்றன. ஒவ்வொரு பெரும் போரின் போதும் பெற்றோல் விலை ஏறுவது வழமை. பெற்றோல், டீசல் போன்றவற்றின் விலையேற்றம் உலக பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கின்றது. ஒவ்வொரு போரின் போதும் பலர் இலாபமடைகின்றனர். இங்கு பலர் என்பது அரசுகள், தனியார் நிறுவனங்களைக் குறிக்கும்.

ஈரான்-அமெரிக்கப் போரின் போது பெற்றோல் மற்றும் டீசல் விலையின் ஏற்றத்தை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். அதுவும் டீசல் விலை, பெற்றோல் விலையை விட அதிகமாகவுள்ளது. இந்த விலை மாற்றம் ஒரு நாளைக்குப் பல தடவைகள் ஏற்ற மாகவும் சிறிது இறக்கமாகவும் பின்னர் மீண்டும் ஏற்றமாகவும் அமைந்துவருகின்றது. அமெரிக்கா, ஈரானுடனான போரை அறிவித்தவுடன் விலையேற்றம் ஏன் சர்வதேச சந்தையில் ஏற்படுகின்றது? அப்பொழுது சர்வதேச விநியோகம் சீராகவே இருந்துள்ளது. முதலாளித்துவத்தின் முக்கிய பண்பு ஒவ்வொரு சந்தர்ப்பத்தினையும் பயன்படுத்தி விலையை ஏற்றி அதிக இலாபத்தைப் பெறுவது, மற்றையது உங்களைச் சுரண்டி அதன் இலாபத்தைத் தனதாக்குவதாகும். சர்வதேச நாடுகளின் எண்ணெய்க் களஞ்சியத்தில் ஏற்கனவே சேமிக்கப்பட்டுள்ள எண்ணெய் உள்ளூர்ச் சந்தைக்கு வருகின்றது. இதனைப் பழைய விலைக்கே இந்த நாடுகளோ, எண்ணெய் விநியோக நிறுவனங்களோ வாங்கியிருக்கும். ஆனாலும் புதிய சந்தை நிலைப்படியே சில்லறை எண்ணெயின் விலை தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு கொள்கலன் 68.01 அமெரிக்க டொலர்களுக்கு வாங்கியிருப்பார்கள். தற்சமயம் பல ஏற்ற இறக்கங்களின் பின்னர் சராசரியாக 83 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனையாகின்றது. ஆனால் போர் தொடங்கிய அடுத்த நாளே 68.01 மாறி புதிய விலைக்கு வந்திருக்கும். அதன் படியே சில்லறை எண்ணெய் விலை தீர்மானிக்கப்படுகின்றது. இதனால் உற்பத்தி நிறுவனங்கள், விநியோக நிறுவனங்கள் என அனைத்தும் அதிக இலாபத்தைப் பெறுகின்றன. சாதாரண நுகர்வோர் அதிக விலையைக் கொடுத்து வாங்குகின்றனர். அது மட்டுமல்லாமல் டீசல் நீண்ட தூரப் பார ஊர்திகள், ஓட்டோ ரிக்சா மற்றும் பேருந்துகள் போன்றவற்றிக்கு பயன்படுத்தப்படுகின்றது. எனவே அதன் தேவை அதிகரிக்கின்றது.

> ***“எண்ணெய் வளம் உள்ள நாடுகளே அதிகளவு நாடுகளுடன் பகையாக வுள்ளன. போரும் தொடுக்கின்றன. கடந்த 50 ஆண்டுகளில் மத்திய கிழக்கை மையப்படுத்தி நடைபெற்ற போர்கள் ஏராளம். எண்ணெய் வருமானம் கணிசமாகவுள்ளதால், அவர்களுக்குப் போருக்கான செலவுக்குப் பஞ்சமில்லை. எனவே தடையின்றி போரிடுகின்றார்கள்.”***

Oil Shocks

Event	Oil price before	Peak price	Increase
1973 Arab Oil Embargo	~$3	~$12	300%
1979 Iranian Revolution	~$15	~$39	160%
1990 Gulf War	~$21	~$46	120%
2008 commodity spike	~$50	~$147	190%
2022 Russia-shock	~$70	~$122	75%
2026 ?	~$60	~$	

ECONOMICS HELP

Exxon, Chevron, and Occidental போன்ற அமெரிக்க நிறுவனங்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஈரான்-அமெரிக்க, இஸ்ரேல் யுத்தத்தால் பல பில்லியன்களை வருமானமாகப் பெற்றுள்ளன. இவற்றை விட வெனிசூலா மற்றும் ரஷ்யாவும் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளன. 10 பில்லியன் அதிகளவு வருமானத்தை ரஷ்யா பெற்றுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது.

ஒரு கொள்கலனின் விலை 100 டொலராக அதிகரித்தால் பின்வரும் நிறுவனங்களின் வருமானம் அதிகரிக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. போரின் ஆரம்பத்தில் 68.01 ஆகவிருந்தது. ஏப்பிரல் 7, 2026-இல் அதிகபட்சமாக 112.95 அமெரிக்க டொலர்களாகவிருந்தது.

- Saudi Aramco - 25.5 billon dollars
- Exxon Mobil - 11 billion dollars
- Chevron - 9.2 billion dollars
- Russian Oil Giants (Gazprom, Rosneft, and Lukoil) - 24 billion dollars

மேற்கூறப்பட்டுள்ள தரவுகள் எண்ணெய் விலையேற்றத்தில் தனியார் எண்ணெய் உற்பத்தி, விநியோக நிறுவனங்களுக்கு பங்கு உள்ளது என்பதனை உறுதிப்படுத்துகின்றது. அதாவது ஈரான் மீதான அமெரிக்க மற்றும் இஸ்ரேலின் போரை ஊக்குவிக்கும் காரணிகளாக அரசுகளை நிர்ப்பந்தித்த புறக்காரணிகளாக இந்த தனியார் நிறுவனங்கள் இருந்துள்ளன. வெனிசூலாவின் அதிபரைக் கைப்பற்றிய பின்னர் அங்குள்ள எண்ணெய்க் கிணறுகளை எக்சன் மொமில், செவரோன் போன்ற அமெரிக்க நிறுவனங்களே பங்கு போடவுள்ளன.

எண்ணெய் விலையேற்றம், பொருள் விநியோகச் சங்கிலியை இரு விதமாக பாதிக்கின்றது. முதலாவது மூலப்பொருட்களின் விலையேற்றம். இரண்டாவது ஹோர்மஸ் நீரிணை மூடலுடன் இணைந்தது. மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரிக்கும். எனவே மூலப்பொருட்களின் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. விநியோகச் செலவு அதிகரிப்பும் இதற்கு மற்றொரு காரணம்.

1978-ஆம் ஆண்டிற்கும் 2025-இற்குமிடைப்பட்ட காலத்தில் அமெரிக்காவின் சர்வதேச எண்ணெய் விநியோகம் சுமார் 4 வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஹோர்முஸ் நீரிணை மூடும் விளையாட்டில் சவூதி அரேபியாவின் பாதிப்புக் குறைவு. சவூதி அரேபியா தனது நாட்டினூடாக செங்கடலில் அமைந்துள்ள YANBU துறைமுகத்துக்கு ஓர் எண்ணெய் குழாயை அமைத்துள்ளது. இதன் மூலம் ஒரு நாளைக்கு 7 மில்லியன் கொள்கலன் அளவு எண்ணெயைக் கடத்த முடியும்.

எண்ணெய் விலை அதிகரிப்பு பல நாடுகளில் மின்சாரத்தின் விலையை அதிகரித்துள்ளது. உதாரணமாக தென் கொரியாவில் மின்சாரத்தின் விலை 74 வீதத்தால் (kilowatt-hour of electricity) அதிகரித்துள்ளது. அதே போன்று இத்தாலியில் 80 வீதத்தால் அதிகரித்துள்ளது. ஜப்பான் 41 வீதம், ஐக்கிய இராச்சியம் 27 வீதமாக அதிகரித்துள்ள.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து பெறப்படும் பெற்றோல், டீசல் போன்றன உலகின் பல நாடுகளுக்கு மிக அவசியமாகவுள்ளன.

எண்ணெய் உற்பத்தி நாடுகள் ஆயுத இறக்குமதியிலும் முன்நிற்கின்றன. உலக ஆயுத இறக்குமதியில் 9.1 வீதத்தை சவூதி அரேபியாவே செய்கின்றது. ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் போன்ற நாடுகளும் முன்னிலை வகிக்கின்றன. சவூதி அரேபியாவைப் பொறுத்தவரை தனது எண்ணெய் வளத்தை பாதுகாப்பதற்கும், அதன் எதிரி நாடுகளான ஈரான் போன்ற நாடுகளிலிருந்து தன்னைப் பாதுகாப்பதற்கும் ஆயுதம் அவசியம்.

> ***"ஹோர்முஸ் நீரிணை மூடும் விளையாட்டில் சவூதி அரேபியாவின் பாதிப்புக் குறைவு. சவூதி அரேபியா தனது நாட்டினூடாக செங்கடலில் அமைந்துள்ள YANBU துறைமுகத்துக்கு ஓர் எண்ணெய் குழாயை அமைத்துள்ளது. இதன் மூலம் ஒரு நாளைக்கு 7 மில்லியன் கொள்கலன் அளவு எண்ணெயைக் கடத்த முடியும்."***

எண்ணெய் வளம் உள்ள நாடுகளே அதிகளவு நாடுகளுடன் பகையாகவுள்ளன. போரும் தொடுக்கின்றன. கடந்த 50 ஆண்டுகளில் மத்திய கிழக்கை மையப்படுத்தி நடைபெற்ற போர்கள் ஏராளம். எண்ணெய் வருமானம் கணிசமாகவுள்ளதால், அவர்களுக்குப் போருக்கான செலவுக்குப் பஞ்சமில்லை. எனவே தடையின்றி போரிடுகின்றார்கள். ஈரானிடமும் எண்ணெய் அதிகளவு உள்ளது. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகள், அந்த நாட்டின் நாணய மதிப்பை வீழ்ச்சியடையச் செய்துள்ளன. இதனால், ஏற்றுமதி மூலம் ஈட்டப்படும் வருமானம் அந்நாட்டின் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லை. ஓர் இராணுவம் எவ்வளவு செல்வத்தை உருவாக்க முடியும் என்பதற்கு எல்லை உண்டு; அதிகப்படியான இராணுவச் செலவினம் மட்டுமே ஓர் அரசுக்குத் தானாகவே இராணுவத் திறனை உருவாக்கித் தந்துவிடாது. பயிற்சி அளிக்கப்படவேண்டும். செயற்படுத்தப்பட

வேண்டும். இது எண்ணெய் வளம் கூடிய நாடுகளுக்கு ஒரு பலவீனமாகவுள்ளது. இது அமெரிக்காவிற்கு உதவுகின்றது. அமெரிக்கா தனது தளங்களை இந்த நாடுகளில் ஏற்படுத்தி இந்த நாடு களைப் பாதுகாப்பதாக உறுதியளிக் கின்றது,

எண்ணெய் விலையேற்றம் என்பது ஆயுத உற்பத்தியையும் பாதிக்கின்றது. ஆயுத விலை அதிகரிப்பு எண்ணெய் வள நாடுகளைப் பாதிக்காது. போரின் போது இரண்டாம் கட்ட நாடுகளாக உள்ள எண்ணெய் வளமற்ற நாடுகள் தங்களைப் பாதுகாக்க திண்டாடுகின் றன. குறிப்பாக மத்திய கிழக்கு யுத்தங் களில் எகிப்து, ஜோர்டான், லெபனான் போன்ற நாடுகளைக் குறிப்பிடலாம்.

Aug 7, 2008 - Aug 12, 2008 நடை பெற்ற ரஷ்யா-ஜோர்ஜியா போரின் பின் னர் ரஷ்யா தனது போர்த் தொழினுட்ப முறைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் ஏற்பட்டது. அது புட்டினின் முதலாவது ஆட்சிக்காலம். ரஷ்யா இதற்காக அதிக விலையைக் கொடுத்திருந்தது. 2014-இல் ரஷ்யா தனது பாதுகாப்புச் செலவீனத்தைப் பத்து வீதத்தால் குறைத்திருந்தது.

> ***“எண்ணெய் உற்பத்தி நாடுகள் ஆயுத இறக்குமதியிலும் முன்நிற்கின்றன. உலக ஆயுத இறக்குமதியில் 9.1 வீதத்தை சவூதி அரேபியாவே செய்கின்றது. ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் போன்ற நாடுகளும் முன்னிலை வகிக்கின்றன. சவூதி அரேபியாவைப் பொறுத்தவரை தனது எண்ணெய் வளத்தை பாதுகாப்பதற்கும், அதன் எதிரி நாடுகளான ஈரான் போன்ற நாடுகளிலிருந்து தன்னைப் பாதுகாப்ப தற்கும் ஆயுதம் அவசியம்.”***

எண்ணெய் வளம் கூடிய நாடுகளில் உள்நாட்டுப் பிரச்சினை, நாடுகளுக்கிடையிலான மோதல்கள் ஊக்குவிக்கப்படுவதன் காரணம் என்ன? அமெரிக்கா உட்பட்ட மேற்கு நாடுகள் அங்கு தோன்றியுள்ள சில பிரச்சினைகளைப் பூதகரமாக்கி அங்குள்ள குழுக்களுக்கு ஆயுதங்களை வழங்கி வன்முறை களை அதிகரித்துப் பாதுகாப்பின்மையை ஏற்படுத்தி ஆயு தங்களின் அவசியத்தை ஏற்படுத்துகின்றது. அமெரிக்கா இதன் மூலம் தனது ஆயுத விற்பனையை அதிகரிக்கின்றது. ஆயுத உற்பத்தியால் அமெரிக்கர்களுக்குத் தொழில் வாய்ப்பும் கிடைக்கின்றது. எனவே அமெரிக்கா தொடர்ச்சியாக போரினை ஏற்படுத்தும் அத்துடன் போர்கள் ஏற்பட வழிவகுக்கும்.

ஈரானின் போரினால் ஏற்பட்டுள்ள உலகப் பொருளாதாரத் தேக்கத்துக்கான நேரடிக் காரணி அமெரிக்கா:

சீனாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் விநியோகச் சந் தைக் கட்டுப்பாடு போன்றவற்றுடன் டொனால்ட் ட்ரம்ப் 2.0-இன் வருகை போன்றவை உலகப் போக்கை அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குளிருந்து விலத்தியுள்ளது. டொனால்ட் ட்ரம்ப் 2.0-இல் அறிவித்த உலக நாடுகளின் அமெரிக்க ஏற்றுமதி மீதான சுங்க வரி அறிவிப்பு, அமெரிக்காவை உலக நாடு களிடமிருந்து அந்நியப்படுத்தியது. கிறீன்லன்ட் ஆக்கிரமிப்பு முயற்சி ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்தும் அந்நியப்படுத் தியுள்ளது. ஏற்கனவே கனடா அமெரிக்காவைத் தனது எதிரி யாகக் கருதத்தொடங்கிவிட்டது. இன்றைக்கு அமெரிக்கா விற்கு உள்ள ஒரேயொரு நண்பன் இஸ்ரேல். ஆனால் இஸ்ரேல் அமெரிக்காவைப் பயன்படுத்தித் தனது எல்லையையும் சக்தியையும் அதிகரிக்கின்றது.

அந்நியப்பட்ட அமெரிக்காவின் டொலர் மட் டும் ஏன் அவசியம்? அமெரிக்காவின் ஆதரவு நாடுகள் என்று கூறப்பட்ட சவூதி அரேபியா தொடங்கிப் பல நாடுகள் தங்கள் சர்வதேச வர்த்தகத்தை டொலர் அல்லாத நாணயங் களினால் செய்கின்றன. இது இன்று அமெ ரிக்காவிற்கு உள்ள மிகப் பெரிய சவாலா கும். ஹோர்முஸ் நீரிணையை மீள தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதும், ஈரானை அழிப்பதும் அல்லது முழுமையான தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரு வதும் இன்று அமெரிக்காவிற்கு மிக அவசி யான விடயம். இதனை சாத்தியப்படுத்து வதற்கு அமெரிக்கா எவ்வழியிலும் முயற்சிக் கும். பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து விட்டது. ஈரானின் பெரும் தலைவர் உட்பட்ட மூன்று அடுக்கு இராணுவ, அரசியல் தலை வர்களை அழித்துவிட்டது(?). இன்னமும் ஈரான் துடிப்புடன் இயங்கிக் கொண்டிருக் கின்றது. அடுத்த சில வாரங்களில் அமெரிக் கப் பேரரசின் வீழ்ச்சியின் ஆரம்பம் தொடங்கு கின்றதா அல்லது அமெரிக்கா மீண்டும், 1979 ஈரானியப் புரட்சிக்குப் பிறகு 1980-ஆம் ஆண்டு (January 23, 1980) ஜிம்மி கார்ட்டர் தனது அமெரிக்க மக்களுக்கான உரையில், ‘பாரசீக வளைகுடா பிராந்தியத்தின் கட்டுப்பாட்டைப் பெறு வதற்கான எந்தவொரு வெளிப்புற சக்தியின் முயற்சியும் அமெரிக்காவின் முக்கிய நலன்களின் மீதான தாக்குதலாகக் கருதப்படும், அத்தகைய தாக்குதல் எவ்வகையிலும் முறி யடிக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். ஏற்கனவே நவம்பர் 4,1979-இல் ஈரானியப் புரட்சி வெற்றி பெற்ற பின்னர், அமெ ரிக்கத் தூதரகத்தை முற்றுகையிட்ட மாணவர்கள் 66 அமெரிக் கர்களைப் பயணக்கைதிகளாக்கியிருந்தனர். இவரது உரை யின் பின்னர் இவரது உத்தரவில் அல்லது ஆணையில் ஏப்பிரல் 24, 1980-இல் ஒப்பிரேசன் ஈகிள் குளோ என்ற பெயரில் பயணக்கைதிகளை காப்பாற்ற முயற்சிக்கப்பட்டது. அது அமெரிக்காவிற்கு மிகப் பெரிய தோல்வியைக் கொடுத்தது. அன்றிலிருந்து இன்றுவரை அமெரிக்கா ஈரானிடம் தொடர் தோல்விகளையே சந்தித்துள்ளது. இன்று ஜிம்மி கார்ட்டரின் வழியில் டொனால்ட் ட்ரம்ப் முயற்சிக்கின்றார்.

•

பெற்றோ டொலர்:

ஓகஸ்ட் 15, 1971 அன்று, அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன் கால் நூற்றாண்டுக்குப் பிறகு பிரெட்டன் வூட்ஸ் நாணய முறையை முடிவுக்குக் கொண்டுவந்தார். தங்கத்துக்குப் பதி லாக டொலர் மாற்றீடு செய்யப்பட்டது. இது தற்காலிகம் என்று கூறப்பட்ட போதும், அதனை அமெரிக்கா பல வழிகளில் நிரந்தரமாக்கியது. அதில் முக்கியமானது பெற்றோ டொலர். 1973 - 1974 காலப்பகுதியில் பெற்றோ டொலர் ஆரம்பமானது.

பெற்றோ டொலர் என்பது எண்ணெய் வர்த்தகத்தின் முக்கிய மான வர்த்தகப் பரிமாற்ற நாணயம். இது முதலில் அமெரிக் காவிற்கும் சவூதி அரேபியாவிற்குமிடையிலே 1970-இல் தொடங் கியது. சவூதி அரேபியாவின் பாதுகாப்பிற்கு உறுதியளித்த அமெரிக்கா அதற்கு மாற்றீடாக எண்ணெய் வர்த்தகத்தைத் தனது அமெரிக்க டொலரினூடாகவே செய்ய வேண்டும் என



வலியுறுத்தியிருந்தது. சவூதி அரேபியாவும் அதனைப் பின் பற்றியது. ஒபெக்கின் முக்கிய நாடாக சவூதி அரேபியா இருந் தமையால் மற்றைய நாடுகளும் அதனைப் பின்தொடர்ந்தன.

இது உலகளவில் பல பொருளாதாரக் கொள்கை மாற்றங் களை ஏற்படுத்தின. எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் தங்களது முதலீடுகளை அமெரிக்காவிலேயே செய்தன. அமெரிக்க அரச நிதிக் கூட்டுத்தாபனத்தில் கடன் பத்திரங்கள் போன்ற வற்றில் முதலீடு செய்தன.

சர்வதேச சந்தையில் எண்ணெய்யை வாங்குவதற்கு அமெ ரிக்க டொலர் அவசியமானது. அத்துடன் மற்றைய பொருட் களின் சர்வதேச வர்த்தகமும் டொலரில் நடைபெறத் தொடங் கியது. இதன் தொடர்ச்சி சர்வதேச நாடுகள் டொலரை தங் களது நிதிக்களஞ்சியத்தில் சேமிக்கத் தொடங்கின. டொல ரின் பெறுமதி இதனால் அதிகரித்தது. அமெரிக்கா சர்வதேச நாடுகளின் தவிர்க்க முடியாத பொருளாதார வல்லரசாக மாறியது. பிரிட்டனை மாற்றீடு செய்து புதிய வல்லரசாக வலம்வரத் தொடங்கியது.

பல போர்களின் காரணியாக அமெரிக்கா மாறியது:

அமெரிக்கா குவைத்தை ஈராக்கிடமிருந்து மீட்ட பின்னர் குவைத்தின் எண்ணெய் வளங்களைத் தனது போர்ச் செல வுக்கான மீட்டலாக முன்வைத்தது. மொத்தமாக 1.2 பில்லி யன் கொள்கலன் எண்ணெயை தனதாக்கிக் கொண்டது. அது மட்டுமல்லாமல் குவைத் அமெரிக்காவிடமிருந்து பல பில்லி யன் டொலர்கள் பெறுமதியான ஆயுதங்களைத் தொடர்ந்து கொள்வனவு செய்கின்றது.

குவைத்தை மீட்டுவிட்டு ஈராக்கில் கால்பதித்த அமெரிக்கா சதாம் குசையினை அழித்துவிட்டு, தற்காலிக ஈராக்கிய அர சுக்கான பாதுகாப்பு மற்றும் ஆலோசனை என்ற பெயரில் மிகக் குறைந்த விலையில் ஈராக்கிய எண்ணெய் வளங் களைச் சுரண்டியது. அது மட்டுமல்லாமல் மொத்தமாக 1.8 பில்லியன் கொள்கலன்களைத் தனதாக்கியது.

பேராசையின் தொடர்ச்சி லிபியாவில் கடாபியை வெளியேற் றியது. அங்கும் எண்ணெய் வளங்களில் தனது கட்டுப்பாட்டை அதிகப்படுத்தியது. 2.2 பில்லியன் கொள்கலன்களைத் தன தாக்கியது.

•

1908-இன் பின்னர் எண்ணெய் உலகின் மிக முக்கிய செல்வம் தரும் பொருளாக மாறிவிட்டது. உலகில் எண்ணெயை மையப்படுத்திய போர் நிகழ்வுகளும் அதனால் ஏற்பட்ட பொருளாதார மாற்றங்களும் முக்கியமானவை.

The Battle of Stalingrad July 17, 1942 – February 2, 1943:

இந்தத் தாக்குதலின் போது பல தாக்குதல்களும் இடம் பெற்றன. இவற்றில் குறிப்பிடத்தக்கது நீலத் தாக்குதல் (Case Blue) இது The Caucasus oil fields-ஐ ஜேர்மனி கைப்பற்ற முயற்சித்தது. இது பக்கு என்ற நகரில் அமைந்துள்ளது. Baku (Azerbaijan) இது தற்போதைய அசர்பைஜானின் ஒரு நகரமாகும். அப்போது உலகின் மிக முக்கியமான தரமான எண்ணெய் வளங்களைக் கொண்ட பிரதேசம். 1940-களில் உலகின் அதிக ஏற்றுமதி செய்யும் எண்ணெய் கிணறுகள் அடங்கிய பிரதேசம். ஜேர்மனிக்கும் ஹிட்லருக்கும் பெரும் தோல்வியைக் பெற்றுக் கொடுத்த நிகழ்வு.

1912 மற்றும் 2025-க்கு இடையில், எண்ணெய் அல்லது இயற்கை எரிவாயு வளங்களைக் கொண்டிருப்பதாக நம்பப் படும் பிரதேசங்களுக்காக நாடுகள் 200 முறை போரிட்டன.

முதலாவது எண்ணெய் அதிர்ச்சி:

Yom Kippur போரின் பின்னர் ஏற்பட்டது. அமெரிக்க அதிபர் நிக்சன் ஒக்ரோபர் 19, 1973-இல் 2.2 பில்லியன் டொலர்களை இஸ்ரேலுக்குப் போரின் நிதியாக வழங்கியதையடுத்து, ஒபெக் Organization of Arab Petroleum Exporting Countries (OAPEC) அமெரிக்கா மீது எண்ணெய் தடையை விதித்தது. இதனால் அமெரிக்காவினுடைய எண்ணெய் விற்பனை பாதிப் படைந்தது. அத்துடன் ஒபெக் எண்ணெய் உற்பத்தியைத் திட்டமிட்டுக் குறைத்துக் கொண்டது. இது எண்ணெய் விலை யில் மிகப் பெரிய ஏற்றம் ஏற்படக் காரணமானது. அப்

பொழுது ஒபெக் எண்ணெய் விலையை தங்கத்தின் அடிப் படையிலேயே தீர்மானித்தது. ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 35 டொலரிலிருந்து 455 டொலராக அதிகரித்தது. அமெரிக்கா அப்போது எண்ணெய் விலையேற்றத்துக்கான காரணமாகத் தங்கத்தின் விலையேற்றத்தையே குறிப்பிட்டு வந்தது. ஒரு பொழுதும் இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்குமான உறவினா லேயே ஒபெக் கட்டுப்பாடுகளை விதித்தது என்று கூற வில்லை.

1975-இல் கனடிய அரசாங்கம் எண்ணெய் விநியோகத்தை அதிகரிக்கும் நோக்குடனும் வெளிநாடுகளின் எண்ணெய் சந்தை தாக்கத்திலிருந்து விடுபடும் நோக்குடனும் பெற்றோ கனடா நிறுவனத்தை ஓர் அரச நிறுவனமாக ஆரம்பித்தது.

ஈரான் – ஈராக் ராங்கர் போர்:

இன்று சர்ச்சைகளுக்குள்ளாக்கப்பட்டுள்ள ஹோர்மஸ் நீரிணைப் பகுதியில் நடைபெற்றது. ஈரான்-ஈராக் யுத்தத்தின் ஆரம் பத்தில் ஈரான் ஈராக்கியக் கப்பல்களைத் தாக்கியதாக அமெ ரிக்க அறிக்கைகள் தெரிவிக்கின்றன. எனினும் இவை உறு திப்படுத்தப்படவில்லை. 1984-இல் ஈராக் ஹோர்முஸ் நீரிணை யில் ஈரானின் எண்ணெய் கப்பல்களை தாக்கியது.

ஈராக் – குவைத் போர்:

ஈராக் குவைத்தைக் கைப்பற்றியதற்கு குவைத்தின் அதிகளவு எண்ணெய் உற்பத்தி ஈராக்கின் சர்வதேச எண்ணெய் விற்பனை யைப் பாதித்தது என்ற காரணம் முதன்மைக் காரணமாக முன்வைக்கப்படுகின்றது. போரின் முன்னர் ஒரு கொள்கலன் 34 டொலராகவிருந்தது. போரின் போது அது 77 டொலராக உயர்ந்தது. குவைத்தை அமெரிக்கா ஈராக்கிடமிருந்து மீட்ட பின்னர் எண்ணெய் விலை வழமைக்குத் திரும்பியது. இத னைத் தொடர்ந்து நடைபெற்ற ஈராக் - அமெரிக்க யுத்தமும் அப்போது சர்வதேச சந்தையில் எண்ணெய் விலையேற்றத் துக்குக் காரணமாகியது.

இவற்றைவிட போர்க்கிலன் தீவுக்கான யுத்தம், பொலிவீயா - பரகுவைக்குமான போர், ஜப்பானின் டச் கிழக்கு இந்தியாவின் மீதான ஆக்கிரமிப்புப் போன்றவையும் எண்ணெயை மையப் படுத்திய யுத்தங்களாகக் கருதப்படுகின்றன. முதலாம் உல கப்போரின் போது பிரிட்டன், ஈராக்கில் உள்ள மொசுல் மாகாண எண்ணெய் வயல்களைக் கைப்பற்றியிருந்தது.

எண்ணெய் என்பது இன்று செல்வத்தை மட்டும் கொடுக் காமல் அதிகாரத்தையும் பெற்றுக்கொடுக்கின்றது. ஆனால் அது அமெரிக்காவிலிருந்து நகர்ந்து செல்லத் தொடங்கியுள் ளது. அதிகாரத்துக்கும் செல்வத்துக்குமாக அமெரிக்கா தொடர்ந்து போர்களைத் தொடுக்கின்றது.



rathan@thaiveedu.com



ரவீந்திரன் துரைசிங்கம்

வளைகுடா நாடுகளின் அமெரிக்க இராணுவத்தளங்கள்!

மூலோபாயம் | பாதுகாப்பு - பொருளாதார உறவுகள் | புவிசார் விளைவுகள்



ஈரான் எந்தத் தூண்டுதலும் இல்லாமல் வளைகுடா நாடுகளைத் தாக்குகிறது என்ற விளக்கம் உண்மையை மறைக்கும் அரசியல் பிரச்சாரமாகும். உண்மையில், Gullf பிராந்தியத்தில் பரவி இருக்கும் அமெரிக்க இராணுவத் தளங்களின் பருமன், அதன் தாக்குதற் திறன் மற்றும் செயற்பாட்டு வலிமை ஆகியவை இந்தப் பகுதியை முழுமையாகச் செயற்படும் இராணுவ அரங்காக மாற்றியுள்ளன. இந்தத் தளங்களே அமெரிக்காவின் ஆதிக்க அரசியலின் முதுகெலும்பாக உள்ளன; அவை இல்லையெனில் அமெரிக்காவின் உலகளாவிய செயற்பாடே முற்றிலும் பாதிப்புக்குள்ளாகும்.

இந்த நிலையிலும், வளைகுடா நாடுகள் தாம் இந்தப் போரில் சம்பந்தமற்றவர்கள் என்று கூறுவது நம்பிக்கைக்குரியதாக அல்ல; மாறாக அது திட்டமிட்ட அரசியல் மறைமுகம். தங்களது நிலப்பரப்பை அமெரிக்க இராணுவத்திற்கு ஒப்படைத்து, அங்கிருந்து நடைபெறும் நடவடிக்கைகளை அமைதியாக அனுமதிக்கும் நாடுகள் 'நாம் பங்கேற்கவில்லை' என்று கூறுவது வெளிப்படையான இரட்டை நிலைப்பாடு.

எனவே, வளைகுடா நாடுகள் நேரடியாகப் போரில் ஈடுபடவில்லை என்றாலும், அவர்களின் நிலப்பரப்பில் செயற்படும் அமெரிக்க இராணுவத் தளங்கள் மூலம் அவர்கள் மறைமுகமாக இந்த மோதலில் முக்கிய பங்காற்றுகின்றனர் என்பதே உண்மையான அரசியல் யதார்த்தம்.

இந்தத் தளங்கள் வெறும் பாதுகாப்பிற்காக மட்டுமல்ல; அவை போர் நடவடிக்கைகள், கண்காணிப்பு, தாக்குதல், மற்றும் கூட்டணி நாடுகளுடன் ஒருங்கிணைப்புப் போன்ற பல முக்கிய பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவை உலக அரசியல், எரிசக்தி பாதுகாப்பு, மற்றும் போர் நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டு மையங்களாகச் செயற்படுகின்றன. 2026 ஈரான் போரில், இந்தத் தளங்கள் தாக்குதல், பாதுகாப்பு, மற்றும் மூலோபாய கட்டுப்பாட்டில் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. குறிப்பாக 2026 ஈரான் போரின் போது, இத்தளங்களின் முக்கியத்துவம் மிக அதிகமாக உயர்ந்துள்ளது.

United States Fifth Fleet:

அமெரிக்காவின் United States Fifth Fleet என்பது மத்திய கிழக்கில் அமெரிக்கக் கடற்படையின் மிக முக்கியமான கட்டுப்பாட்டுப் படைப்பிரிவாகும். இது பெர்சியன் வளைகுடா, அரேபிய கடல், செங்கடல் மற்றும் இந்தியப் பெருங்கடல் பகுதிகளை கண்காணிக்கும் முக்கிய கடற்படை அமைப்பாக செயற்படுகிறது. இந்தப் படையின் தலைமையகம் Bahrain நாட்டில் அமைந்துள்ளது.

இந்த Fifth Fleet அமைப்பு, உலகின் மிக முக்கியமான எண்ணெய் போக்குவரத்துப் பாதைகள் உள்ள பகுதிகளைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக Strait of Hormuz வழியாக உலக எண்ணெயின் ஒரு பெரிய பகுதி கடந்து செல்கிறது. இந்தக் கடற்பாதை பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே Fifth Fleet-இன் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

Fifth Fleet-இன் கீழ் பல்வேறு வகையான கடற்படைக் கப்பல்கள் மற்றும் படைகள் உள்ளன. அதில் விமானம் தாங்கிக் கப்பல்கள் (aircraft carriers), அழிப்புக் கப்பல்கள் (destroyers), நீர்மூழ்கிக் கப்பல்கள் (submarines), ரோந்துக் கப்பல்கள் (patrol boats) என்பன அடங்கும். இவை எல்லாம் சேர்ந்து கடலில் பாதுகாப்பு, தாக்குதல், மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

இந்தப் படையின் முக்கிய பணிகளில் ஒன்று கடல் பாதுகாப்பு. இது கடல் கொள்ளை, கடத்தல், மற்றும் பயங்க

ரவாத நடவடிக்கைகளைத் தடுக்கிறது. அதோடு, கூட்டணி நாடுகளுடன் இணைந்து கடற்படை பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புகளையும் மேற்கொள்கிறது.

போர் சூழ்நிலைகளில் Fifth Fleet மிகவும் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பாக 2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்தப் படை ஈரான் கடற்படை இயக்கங்களைக் கண்காணிக்கவும், தேவையானபோது தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாராக இருக்கிறது. மேலும், அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளின் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது.

Fifth Fleet-இன் மற்றொரு முக்கிய பணி, கடல் வழியாக நடைபெறும் சர்வதேச வர்த்தகத்தைப் பாதுகாப்பதாகும். உலக பொருளாதாரத்தில் எண்ணெய் மற்றும் பொருட்கள் சீராக நகர்வதற்குக் கடற்பாதைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அதனால், Fifth Fleet ஒரு ராணுவ அமைப்பாக மட்டும் அல்லாமல், உலகப் பொருளாதாரத்துக்கும் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு முக்கிய சக்தியாகும்.

மொத்தத்தில், United States Fifth Fleet என்பது அமெரிக்காவின் மத்திய கிழக்கு ராணுவத் தந்திரத்தில் முக்கிய மையமாக உள்ளது. கடல் பாதுகாப்பு, போர் நடவடிக்கை, மற்றும் உலக வர்த்தக பாதுகாப்பு ஆகிய மூன்றிலும் இந்தப் படையின் பங்கு மிக முக்கியமானது.

Al Udeid Air Base:

Al Udeid Air Base என்பது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிக முக்கியமான விமானப்படை தளங்களில் ஒன்றாகும். இது Qatar நாட்டில் அமைந்துள்ளது. அமெரிக்கா வெளிநாட்டில் வைத்திருக்கும் மிகப்பெரிய இராணுவத் தளங்களில் இதுவும் ஒன்று என்று கருதப்படுகிறது.

இந்தத் தளம் அமெரிக்காவின் United States Central Command (CENTCOM) முன்னணிக் கட்டுப்பாட்டு மையமாக செயற்படுகிறது. அதாவது, மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் சுற்றுப்பகுதிகளில் நடைபெறும் போர் நடவடிக்கைகள் மற்றும் இராணுவத் திட்டமிடல்கள் இங்கிருந்து ஒருங்கிணைக்கப்படுகின்றன.

Al Udeid தளத்தில் ஆயிரக்கணக்கான அமெரிக்க மற்றும் கூட்டணி படையினர் பணியாற்றுகின்றனர் (சுமார் 8,000 - 10,000 வரை). இங்கு பல்வேறு வகையான போர் விமானங்கள், டேங்கர் விமானங்கள் (எரிபொருள் நிரப்பும் விமானங்கள்), மற்றும் ட்ரோன்கள் (drones) நிறுத்தப்பட்டுள்ளன. இது வான்வழி தாக்குதல் மற்றும் கண்காணிப்பிற்கான முக்கிய மையமாக விளங்குகிறது.

இந்தத் தளத்தின் முக்கிய பணிகளில் ஒன்று வான்வழி தாக்குதல் (air strikes) நடத்துவது. ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான் மற்றும் தற்போது ஈரான் தொடர்பான நடவடிக்கைகளிலும் இந்தத் தளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ட்ரோன் தாக்குதல்கள் மற்றும் உளவுத் துறைக் கண்காணிப்புகளும் இங்கிருந்து நடைபெறுகின்றன. மேலும், இந்தத் தளம் வான்வழி லாஜிஸ்டிக்ஸ் மையமாகவும் செயற்படுகிறது. போர்விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புதல், ஆயுதங்கள் மற்றும் படைகள் நகர்த்துதல் போன்ற முக்கிய ஆதரவுப் பணிகள் இங்கிருந்து செய்யப்படுகின்றன. இதனால், இது ஒரு 'air hub' போல செயற்படுகிறது.

போர் சூழலில் Al Udeid மிகவும் முக்கியமானது. ஏனெனில்: முழுப் பிராந்திய வான்படையைக் கட்டுப்படுத்தும் மையம், தாக்குதல் மற்றும் பாதுகாப்பு, நடவடிக்கைகளின் ஒருங்கிணைப்பு, விரைவான பதில் (rapid response) வழங்கும் திறன் போன்றவற்றால். ஈரான் போன்ற நாடுகளுடன் பதற்றம் அதிகரிக்கும் போது, இந்தத் தளம் முக்கிய இலக்காகவும் மாறக்கூடும். அதனால், இங்கு ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மிகவும் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

மொத்தத்தில், Al Udeid Air Base என்பது அமெரிக்காவின் மத்திய கிழக்கு ராணுவ நடவடிக்கைகளின் இதயம் (heart of operations) என்று சொல்லலாம். வான்வழித் தாக்குதல், கண்காணிப்பு, மற்றும் முழுப் போர் கட்டுப்பாடு ஆகியவற்றில் இந்தத் தளம் முக்கிய பங்கு வகிக்கிறது.

Camp Arifjan:

Camp Arifjan என்பது Kuwait நாட்டில் அமைந்துள்ள அமெரிக்க இராணுவத்தின் முக்கிய தரைத்தளங்களில் ஒன்றாகும். இது அமெரிக்கப் படையின் மத்திய கிழக்குத் தரைப்படை (Army) நடவடிக்கைகளுக்கான முக்கிய தலைமையகமாக செயற்படுகிறது. குறிப்பாக, இந்தத் தளம் அமெரிக்காவின் நிலப்படை இயக்கங்களை ஒருங்கிணைக்கும் கட்டுப்பாட்டு மையமாக உள்ளது.

Camp Arifjan தளம் பெரும்பாலும் 'logistics hub' ஆக அறியப்படுகிறது. அதாவது, ஆயுதங்கள்,



வாகனங்கள், உணவு, எரிபொருள், மற்றும் பிற தேவையான பொருட்கள் அனைத்தும் இங்கு சேமிக்கப்பட்டு, பின்னர் ஈராக், சிரியா போன்ற பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இது போரின் பின்னணி அமைப்பாக செயற்படுகிறது.

இந்தத் தளத்தில் ஆயிரக்கணக்கான அமெரிக்கப் படையினர் பணியாற்றுகின்றனர். இங்கு command centers, தொடர்பு அமைப்புகள், மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டு அமைப்புகள் உள்ளன. இதனால், தரைப்படை நடவடிக்கைகள் மிகவும் துல்லியமாகத் திட்டமிடப்படுகின்றன.

Camp Arifjan-இன் முக்கிய பணி, படைகளை விரைவாக நகர்த்துதல் (deployment). மத்திய கிழக்கில் எங்கு சண்டை ஏற்பட்டாலும், இந்தத் தளத்திலிருந்து படைகள் மற்றும் உபகரணங்கள் விரைவாக அனுப்பப்படுகின்றன. இதனால், இது ஒரு 'staging ground' ஆகவும் செயற்படுகிறது.

போர்ச் சூழ்நிலைகளில், இந்தத் தளம் நேரடித் தாக்குதல் தளம் அல்ல. ஆனால், தாக்குதல்களை ஆதரிக்கும் முக்கிய மையமாக உள்ளது. (உதாரணமாக: படைகள் முன்னணிக்குச் செல்லும் முன் தயாராகும் இடம், வாகனங்கள் மற்றும் ஆயுதங்கள் பராமரிக்கப்படும் இடம், காயமடைந்தவர்களுக்கு ஆரம்ப சிகிச்சை வசதிகள்)

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், Camp Arifjan மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனெனில், அமெரிக்கா தனது தரைப்படை சக்தியை விரைவாக அதிகரிக்க இந்தத் தளம் பயன்படுகிறது. இது முழுப் போருக்கான ஆதரவு அமைப்பை இயக்கும் மையமாகச் செயற்படுகிறது.

மேலும், இந்தத் தளம் கூட்டணி நாடுகளுடனான ஒத்துழைப்பிற்கு முக்கியமானது. பல நாடுகளின் படைகள் இணைந்து பயிற்சி பெறும் மற்றும் ஒருங்கிணைந்து செயற்படும் இடமாகவும் இது பயன்படுகிறது. மொத்தத்தில், Camp Arifjan என்பது நேரடி போர்த்தளம் அல்ல, ஆனால் போரின் வெற்றியைத் தீர்மானிக்கும் 'மூல ஆதார மையம்' (strategic support hub) ஆகும். படைகள், பொருட்கள், மற்றும் திட்டமிடல் ஒன்றாக இணையும் முக்கிய இடமாக இது விளங்குகிறது.

Ali Al Salem Air Base:

Ali Al Salem Air Base என்பது Kuwait நாட்டில் அமைந்துள்ள அமெரிக்க விமானப்படையின் முக்கிய தளங்களில் ஒன்றாகும். இது பெரும்பாலும் வான்வழி போக்குவரத்து (airlift) மற்றும் ஆதரவு நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய விமானத் தளமாகும்.

இந்த தளம் 'The Rock' என்று அமெரிக்கப் படையினரால் அழைக்கப்படுகிறது. காரணம், இது கடுமையான பாலைவன சூழலில் அமைந்துள்ளது. ஆனால் அந்தச் சவாலான சூழலுக்குள்ளேயே, மிக உயர்ந்த செயற்றிறனுடன் இந்தத் தளம் இயங்குகிறது.

Ali Al Salem Air Base-இன் முக்கிய பணி, போர் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் படைகளை வான்வழியாக நகர்த்துவது. C-130 போன்ற போக்குவரத்து விமானங்கள் மூலம்: படைகள் முன்னணிக்கு அனுப்பப்படுகின்றன, ஆயுதங்கள் மற்றும் உபகரணங்கள் கொண்டுசெல்லப்படுகின்றன, மனிதாபிமான உதவிகளும் அனுப்பப்படுகின்றன.

இந்தத் தளம் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் வான்வழி லாஜிஸ்டிக்ஸ் மையங்களில் ஒன்றாகும். Camp Arifjan போன்ற தரைத்தளங்களுடன் இணைந்து, முழுப் போர் ஆதரவு அமைப்பை இயக்குகிறது. அதாவது, தரையில் இருந்து பொருட்கள் தயாராகி, இந்த தளத்தின் மூலம் வான்வழியாக அனுப்பப்படுகின்றன.

போர்ச் சூழ்நிலைகளில், Ali Al Salem Air Base மிகவும் முக்கியமான 'support hub' ஆக மாறுகிறது. இது நேரடித் தாக்குதல் தளம் அல்லாதபோதிலும்: தாக்குதல் விமானங்களுக்கு ஆதரவு வழங்குகிறது, எரிபொருள் மற்றும் உபகரண விநியோகம் செய்கிறது, அவசரகால படை நகர்த்தலை எளிதாக்குகிறது.

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்தத் தளம் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, விரைவான பதில் (rapid deployment) மற்றும் படை நகர்த்தலில் இது மிகவும் அவசியமானது. எந்த இடத்திலும் திடீர் மோதல் ஏற்பட்டாலும், இந்தத் தளத்திலிருந்து உடனடி நடவடிக்கை எடுக்க முடியும். மேலும், இந்தத் தளம் கூட்டணி நாடுகளுடனான ஒத்துழைப்புக்கும் பயன்படுத்தப்படுகிறது. பல நாடுகளின் விமானங்கள் இங்கு செயற்பட்டு, ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

மொத்தத்தில், Ali Al Salem Air Base என்பது மத்திய கிழக்கில் அமெரிக்காவின் வான்வழி ஆதரவு மற்றும் போக்குவ



ரத்து நடவடிக்கைகளின் முக்கிய மையமாகும். இது போரை நேரடியாக நடத்தாது; ஆனால் போரை நடத்த தேவையான சக்தியை தொடர்ந்து வழங்கும் 'இயக்க மையம்' (operational backbone) ஆக செயற்படுகிறது.

Camp Buehring:

Camp Buehring என்பது Kuwait நாட்டில் அமைந்துள்ள அமெரிக்கத் தரைப்படையின் முக்கிய தளங்களில் ஒன்றாகும். இது குறிப்பாகப் படைகள் முன்னணிக்குச் செல்லும் முன் தயாராகும் 'staging area' (தயாரிப்பு மையம்) ஆக செயற்படுகிறது. இந்த தளம் Camp Arifjan உடன் நெருங்கிய தொடர்பில் செயற்படுகிறது. Camp Arifjan ஒரு கட்டுப்பாட்டு மற்றும் லாஜிஸ்டிக்ஸ் மையமாக இருந்தால், Camp Buehring ஒரு 'deployment தயாரிப்பு தளம்' என்று சொல்லலாம். அதாவது, இங்கு படைகள் பயிற்சி பெற்று, போர் சூழ்நிலைக்குத் தயாராகி, பின்னர் ஈராக் அல்லது பிற மோதல் பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன.

Camp Buehring பாலைவனப் பகுதியில் அமைந்துள்ளது. அதனால், இங்கு நடைபெறும் பயிற்சிகள் உண்மையான மத்திய கிழக்குப் போர் சூழ்நிலைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளன. வீரர்கள்: பாலைவனத்தில் இயக்கம் (desert operations), வாகனப் போர் பயிற்சி, பாதுகாப்பு மற்றும் தாக்குதல் drill-கள் போன்றவற்றில் பயிற்சி பெறுகின்றனர்.

இந்தத் தளத்தின் முக்கிய பணி, படைகளை 'ready நிலையில்' வைத்திருப்பதாகும். புதிய படைகள் மத்திய கிழக்கிற்கு வந்த வுடன்: முதலில் Camp Buehring-இல் தங்குகின்றனர், அங்கு சூழ்நிலை பயிற்சி பெறுகின்றனர், பின்னர் முன்னணிக்கு அனுப் பப்படுகின்றனர், இதனால், இது ஒரு முக்கிய 'transit hub' ஆகவும் செயற்படுகிறது.

போர் சூழ்நிலையில் Camp Buehring மிகவும் முக்கியமானது. காரணம்: படைகளை விரைவாக முன்னணிக்கு அனுப்ப முடியும், தொடர்ந்து புதிய படைகள் தயாராக இருக்கும், போரில் இழப்புகள் ஏற்பட்டால் உடனடி மாற்றுப் படைகள் அனுப்ப முடியும். 2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்தத் தளம் அமெரிக்காவின் தரைப்படை இயக்கத்தை ஆத ரிக்கும் முக்கிய மையமாக உள்ளது. பெரிய அளவிலான தரைப்படை நடவடிக்கை தேவைப்பட்டால், அது இத்தகைய தளங்களின் மூலம் தான் சாத்தியமாகும்.

மேலும், இந்தத் தளம் கூட்டணி நாடுகளுடனான பயிற்சி மற்றும் ஒத்துழைப்பிற்கும் பயன்படுத்தப்படுகிறது. பல நாடுகளின் படைகள் இங்கு இணைந்து பயிற்சி பெறுகின்றன.

மொத்தத்தில், Camp Buehring என்பது போரின் முன்பகுதி அல்ல; ஆனால் போருக்குச் செல்லும் படைகளின் முக்கிய தயாரிப்பு மையமாகும். இது 'போர் தொடங்கும் முன் சக்தியை உருவாக்கும் இடம்' என்று சொல்லலாம்.

Al Dhafra Air Base:

Al Dhafra Air Base என்பது United Arab Emirates நாட்டில் அமைந்துள்ள அமெரிக்காவின் மிக முக்கியமான விமானப்படை தளங்களில் ஒன்றாகும். இது குறிப்பாக உளவுத்துறை (intelligence), கண்காணிப்பு (surveillance), மற்றும் துல்லியமான தாக்குதல் (precision strike) நடவடிக்கைகளுக்கான மையமாகச் செயற்படுகிறது.

இந்தத் தளம் மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிகவும் முன்னேறிய (advanced) விமானத் தளங்களில் ஒன்றாகும். இங்கு F-35 போன்ற மேம்பட்ட stealth போர் விமானங்கள், ட்ரோன்கள் (MQ-9 Reaper போன்றவை), மற்றும் உளவு சேகரிக்கும் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால், எதிரி இயக்கங்களை மிகத் துல்லியமாகக் கண்டறியும் திறன் இந்தத் தளத்திற்கு உள்ளது.

Al Dhafra-இன் முக்கிய பணி, எதிரிப் படைகளின் நகர்வுகளைக் கண்காணித்தல், ஏவுகணை ஏவுதல்களைக் கண்டறிதல், முக்கிய இலக்குகளை அடையாளம் காணுதல், இந்த தக வல்கள் பின்னர் தாக்குதல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத் தப்படுகின்றன.

மேலும், இந்தத் தளம் துல்லியமான வான்வழித் தாக்குதல்க ளுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ட்ரோன்கள் மற்றும் stealth விமானங்கள் மூலம்: குறிப்பிட்ட இலக்குகள் மீது தாக்குதல், குறைந்த collateral damage உடன் செயற்பாடு, இவை மேற் கொள்ளப்படுகின்றன.

போர் சூழ்நிலையில் Al Dhafra மிகவும் முக்கியமானது. காரணம்: எதிரியை நேரடியாகத் தாக்குவதற்கு முன் தகவல் சேகரிப்பு, துல்லியமான தாக்குதல்களை நடத்தும் திறன், விரைவான பதில் வழங்கும் திறன் போன்றவை இதன் சிறப்பம்ச மாகும்.

2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில், இந்தத் தளம் முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக, ஈரான் ஏவுகணை மற்றும் இராணுவ அமைப்புகளைக் கண்காணித்து, தேவையானபோது தாக்குதல் நடத்தும் மையமாக இது செயற்படுகிறது. மேலும், இந்தத் தளம் கூட்டணி நாடுகளுடனான ஒருங்கிணைப்பிற்கும் முக்கியமானது. பல நாடுகளின் விமானங்கள் மற்றும் உளவு அமைப்புகள் இங்கு இணைந்து செயற்படுகின்றன.

இந்தத் தளத்தின் பாதுகாப்பு மிகவும் வலுவாக உள்ளது. ஏனெனில், இது எதிரி தாக்குதல்களுக்கு முக்கிய இலக்காக இருக்கக்கூடும். அதனால், ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் பாதுகாப்பு வளங்கள் அதிகமாக அமைக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில், Al Dhafra Air Base என்பது 'போர் கண்கள்' (eyes of the war) என்று சொல்லப்படும் அளவுக்கு முக்கியமானது. இது தகவல் சேகரிப்பு, கண்காணிப்பு, மற்றும் துல்லியமான தாக்குதல் ஆகிய மூன்றையும் ஒருங்கிணைக்கும் முக்கிய மையமாக செயற்படுகிறது.

இந்தப் பகுதியில், வளைகுடாப் பிராந்தியத்தில் பரவி இருக்கும் அமெரிக்க இராணுவத் தளங்களின் அமைப்பு, அவற்றின் மூலோபாய முக்கியத்துவம், மற்றும் 2026 ஈரான் தொடர்பான பதற்றங்களில் அவை வகிக்கும் பங்கு ஆகியவை ஆராயப் பட்டன. ஆனால், இந்தத் தளங்கள் தனியாகச் செயற்படுவ தில்லை; அவை அமைந்துள்ள நாடுகளின் அரசியல் நிலைப்பா டுகளுடனும் நெருக்கமாக இணைந்துள்ளன. அடுத்த பகுதியில், Saudi Arabia, UAE, Qatar, Kuwait போன்ற வளைகுடா நாடுகள் இந்த மோதலில் எவ்வாறு 'balance' அல்லது 'neutral' அணுகுமுறையை எடுத்துள்ளன, மேலும் அந்த நிலைப்பாடுகளின் பின்னணியில் உள்ள அரசியல், பொருளாதார மற்றும் பாதுகாப்புக் காரணிகள் என்ன என்ப தையும் அடுத்தமுறை விரிவாகப் பார்ப்போம்.



Raveendran.T@thaiveedu.com

சியோனிச விரிவாக்க அரசியல்:

வரலாற்றுத் தொடக்கமும் நவீன தொழினுட்ப மேலாதிக்கமும்

சிவா முருகுப்பிள்ளை



எல்லைகளற்ற தேசமும் சியோனிச விரிவாக்கமும்:

ஒரு நாட்டின் எல்லையைத் துல்லியமாக வரையறுக்க முடியாது என்றால், அது இஸ்ரேல் தேசத்தையே குறிக்கும். இதற்கு அந்த நாடு கொண்டுள்ள 'அகண்ட யூத தேசம்' எனும் கொள்கையே முக்கிய காரணமாகும். தமது மத நம்பிக்கைகளின் அடிப்படையில் பாலஸ்தீன மக்களின் பூர்வீக நிலத்தில் ஒரு 'புள்ளி'யாகத் தஞ்சம் புகுந்து, இன்று ஆக்கிரமிப்பின் வாயிலாகக் காலத்திற்கு காலம் இஸ்ரேல் தமது எல்லைகளை விஸ்தரித்துக் கொண்டே போகின்றது. தற்போதுள்ள சூழலில், இஸ்ரேலின் இருப்பிடத்தை 'மூன்று மதங்களின் புனித பூமியான ஜெருசலத்தை மையப்படுத்திய, எல்லையற்று விரிவடைந்து செல்லும் ஒரு பிரதேசம்' என்றே குறிப்பிடலாம்.

மத்திய கிழக்கு ஆசியாவில் அமைந்துள்ள இஸ்ரேல், வடக்கே லெபனான், வட கிழக்கில் சிரியா, கிழக்கில் ஜோர்டான் மற்றும் மேற்குக் கரை, தென்மேற்கில் எகிப்து மற்றும் காசா முனை ஆகிய வற்றை நில எல்லைகளாகக் கொண்டுள்ளது. இருப்பினும், எகிப்து மற்றும் ஜோர்டானைத் தவிர மற்ற நாடுகளுடனான எல்லைகள் அதிகாரபூர்வமானவை அல்ல; அவை வெறும் தற்காலிகப் போர் நிறுத்தக் கோடுகளாகவே (Armistice Lines) நீடிக்கின்றன. இந்த எல்லைக் கோடுகளைத் தனது விரிவாக்கச் சிந்தனைக்கு ஏற்ப இஸ்ரேல் அவ்வப்போது மாற்றியமைத்து வருகிறது. இன்று தனது 'அகண்ட இஸ்ரேல்' கனவை நனவாக்கத் தொடர்ச்சியான போர்கள், தாக்குதல்கள் மற்றும் ஆக்கிரமிப்புகள் மூலம் பாரிய மனிதப் பேரழிவுகளை ஏற்படுத்தி வரும் நாடாகவே தன்னை உலக அரங்கில் அது அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது.

வரலாற்றுப் பின்னணியும் பிரித்தாளும் சூழ்ச்சியும்:

இஸ்ரேலின் உருவாக்கம் என்பது இரண்டாம் உலகப் போரின் போது ஹிட்லரின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகளால் (Holocaust) பாதிக்கப்பட்ட யூதர்களின் அவலத்தைப் பின்னணியாகக் கொண்டது. அன்று உலகெங்கும் நாடற்றவர்களாக அலைந்த யூதர்களுக்கு ஒரு தேசத்தை உருவாக்க, அன்றைய காலனித்துவ நாடான பிரித்தானியா ஆபிரிக்கக் கண்டத்தில் ஒரு இடத்தை வழங்க முன்வந்தது. ஆனால், அதனை நிராகரித்த சியோனிச இயக்கம், பாலஸ்தீன மண்ணையே தனது இலக்காகக் கொண்டது.

1917-இல் பிரித்தானியா வெளியிட்ட 'பால்ஃபோர் பிரகடனம்' (Balfour Declaration), பாலஸ்தீன மண்ணில் யூதர்களுக்கான தேசிய இல்லத்தை அமைக்க உறுதியளித்ததன் மூலம், இன்றுவரை ஓயாத ஒரு பெரும் இன மோதலுக்கான விதையை ஊன்றியது. தமக்கெதிரான ஹோலோகாஸ்ட் பேரவலத்தை உலக மக்கள் மன்றங்களில் ஒரு 'அரசியல் மூலதனமாக' முன்வைத்து, சர்வதேச சமூகத்தின் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்று தனது ஆக்கிரமிப்புகளை இஸ்ரேல் நியாயப்படுத்தி வருகிறது.

நட்பு பகையாக மாறிய ஈரான் – இஸ்ரேல் உறவு:

இஸ்ரேல் உருவான தொடக்க காலத்தில், துருக்கிக்கு அடுத்தபடியாக அதனை அங்கீகரித்த முதல் முஸ்லிம் நாடு ஈரானாகும். அப்போதைய ஈரானிய மன்னர் (ஷா) ஆட்சிக் காலத்தில், இரு நாடுகளும் இராணுவம் மற்றும் பொருளாதார ரீதியாக மிகவும் நெருக்கமான நட்பு நாடுகளாகத் திகழ்ந்தன.

தன்னைப் பிராந்தியத்தில் நிலைநிறுத்திக்கொள்ள அன்று ஈரானின் நட்பைப் பயன்படுத்திக்கொண்ட இஸ்ரேல், இன்று அதே ஈரானை அழித்தொழிக்கும் நோக்கில் போரை முன்னெடுத்து வருகிறது. நீண்டகால நட்பு நாடாக இருந்த காரணத்தினால், ஈரானின் நிலப்பரப்பு மற்றும் பாதுகாப்பு ரகசியங்களை இஸ்ரேல் துல்லியமாக அறிந்திருக்கிறது. இந்த 'முந்தைய நட்புறவின் மூலம் பெற்ற ரகசியங்களே' இன்று ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல்கள் துல்லியமாக அமைய ஒரு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

பண்டைய வரலாறும் தற்கால யதார்த்தமும்:

இன்றைய இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தை உள்ளடக்கிய நிலப்பரப்பானது (Eretz Yisrael), யூத மக்களின் நீண்டகால வரலாற்று மற்றும் ஆன்மீகத் தொடர்புகளைக் கொண்ட ஒரு பகுதியாகக் கருதப்படுகிறது. வரலாற்றுத் தரவுகளின்படி, சுமார் 3,000 ஆண்டுகளுக்கு முன்னர், அதாவது பொ.ஆ.மு. 1000 காலப்பகுதியில், இப்பகுதியில் 'இஸ்ரேல்' மற்றும் 'யூதா' ஆகிய இராச்சியங்கள் அமைந்திருந்தன. காலப்போக்கில் இப்பகுதி அசீரியர்கள், பாபிலோனியர்கள், பாரசீகர்கள், கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள் எனப் பல பெரும் பேரரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. குறிப்பாக, பொஆ.பி. 70-இல் உரோமானியர்களால் யூதர்களின் இரண்டாவது ஆலயம் இடிக்கப்பட்ட பிறகு, யூதர்கள் உலகெங்கும் சிதறிச் சென்ற போதிலும், ஒரு சிறு பகுதியினர் தொடர்ச்சியாக அந்த நிலத்திலேயே வாழ்ந்து வந்தனர்.

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், சிதறி வாழ்ந்த யூதர்களுக்கு என ஒரு தனித் தேசம் வேண்டும் என்ற 'சீயோனிசம்' இயக்கம் வலுப்பெற்றதன் விளைவாக, யூதர்கள் மீண்டும் பாலஸ்தீனப் பகுதிக்குக் குடியேறத் தொடங்கினர். முதலாம் உலகப் போருக்குப் பின், இப்பகுதி பிரித்தானியக் கட்டுப்பாட்டுக்குள் (British Mandate) வந்தபோது, 1917-இல் வெளியான 'பால்ஃபோர் பிரகடனம்' யூதர்களுக்கான ஒரு தாயகத்தை அமைப்பதற்குத் தார்மீக ஆதரவை வழங்கியது. இறுதியில், இரண்டாம் உலகப் போரின் போது நடந்த ஹோலோகாஸ்ட் பேரழிவைத் தொடர்ந்து, சர்வதேச அரசியல் மாற்றங்களுக்கு மத்தியில் 1948-ஆம் ஆண்டு மே 14 அன்று இஸ்ரேல் ஒரு தனி நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

1960-களின் மத்திய பகுதியில், அரபு உலகில் தனக்கெதிராக உருவான எதிர்ப்பலைகளைத் தவிடுபொடியாக்கும் நோக்கில், எகிப்து உள்ளிட்ட அண்டை நாடுகள் மீண்டும் ஒருமுறை அத்தகைய முயற்சியில் ஈடுபடத் துணியாத அளவிற்கான பேரழிவை இஸ்ரேல் ஏற்படுத்தியது. அந்த யுத்தத்தின் வாயிலாக, எந்நாடும் தனக்கெதிராகக் கரம் உயர்த்த அஞ்சும் சூழலை இஸ்ரேல் அன்று உருவாக்கியது. தற்போதைய காசா மீதான தாக்குதலும் அத்தகையதொரு போக்கையே பிரதிபலிக்கின்றது. இருப்பினும், இத்தாக்குதல்கள் அரபு நாடுகளின் சாமானிய மக்களிடையே இஸ்ரேல் மீதான கடும் வெறுப்பை விதைத்துள்ளன. இத்தகைய மக்கள் கொந்தளிப்பிற்கு மத்தியிலும், அந்த நாடுகளின் ஆளும் வர்க்கத்தினர் இன்றுவரை இஸ்ரேலுடன் பகிரங்கமானப் பகைமையைப் பாராட்ட முடியாமல் தவித்து வருகின்றனர். ஜெருசலத்தின் ஒரே புள்ளியில் தோன்றிய யூத, கிறீஸ்தவ மற்றும் இஸ்லாமிய மதங்களில், கிறீஸ்தவம் காலப்போக்கில் தாராளவாதத்தை ஏற்றுத் தன்னை உலகளாவிய நிறுவனமாகத் தகவமைத்துக் கொண்டது. இஸ்லாம் உலகளாவியப் பரவலை நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தது. ஆனால், யூத மதம் தனது அடிப்படைவாதத்தில் இன்றும் மிக இறுக்கமான, ஒரு கட்டுக்கோப்பான வட்டத்திற்குள்ளேயே இயங்கி வருகின்றது. தனிப்பட்ட ரீதியில் யூத மக்கள் மனிதாபிமானம் மிக்கவர்களாக இருந்தபோதிலும், உலகெங்கும் சிதறி வாழும் அவர்களைச் சியோனிசச் சித்தாந்தத்தை நோக்கி ஈர்க்கும் 'தாயகம் நோக்கிய அழைப்பை' இஸ்ரேல் அரசு ஒரு தந்திரோபாயமாகவே முன்னெடுத்து வருகின்றது.

அறிவுசார் பங்களிப்பும் எல்லைகளற்ற மனிதாபிமானமும்:

கல்வி மற்றும் அறிவுசார் துறைகளில் தங்களைத் தகவ மைத்துக் கொண்ட யூத இனம், கார்ல் மார்க்ஸ் போன்ற சமூக விஞ்ஞானிகளையும், ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் போன்ற இயற்பியல் மேதைகளையும் உலகுக்கு ஈன்று தந்துள்ள தாகக் கருதப்படுகின்றது. இந்த மேதைகளின் தனிச்சிறப்பு என்னவென்றால், அவர்கள் தங்களின் அறிவாற்றலை ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ அல்லது சியோனிசக் கொள்கைக்கோ அடகு வைக்காமல், ஒட்டுமொத்த மனித குலத்தின் பொதுவான வளர்ச்சிக்கு அர்ப்பணித்தமையே ஆகும். அவர்கள் சியோனிசத்தின் குறுகிய மதவாதக் கொள்கைகளை ஒருபோதும் ஆதரித்ததில்லை; மாறாக, எல்லைகளற்ற மனிதாபிமானத்தையே முன்னிறுத்தினர். இவர்களின் உலகளாவிய ஏற்புடைமைக்கு, அவர்கள் மத அடிப்படைவாதத்திலிருந்து விலகி நின்றதே முதன்மைக் காரணமாகும்.

விவசாயப் புரட்சியும் நீர் மேலாண்மையும்:

இயற்கையான நீர் வளம் குன்றிய ஒரு தேசமான இஸ்ரேல், 'சொட்டு நீர்ப் பாசனம்' (Drip Irrigation) போன்ற நவீன நுட் பங்களைப் பயன்படுத்தி, மனிதரின் அடிப்படைத் தேவை யான உணவு உற்பத்தியில் உலகிற்கே ஒரு முன்மாதிரி யாகத் திகழ்கிறது. விவசாயத்தையே முதன்மையாகக் கொண்டுள்ள ஏனைய நாடுகள், இஸ்ரேலின் இந்தச் சாதனை மிகு செயற்பாடுகளைத் தமக்கான வழிகாட்டி யாகக் கொண்டு, அதன் தனிச்சிறப்பைப் பாராட்டுகின்றன. குறிப்பாக, தனது வறண்ட பாலைவன நிலப்பரப்பைக் கூட நவீனத் தொழினுட்பத்தின் துணையுடன் விளைநிலங் களாக மாற்றியதன் மூலம், இஸ்ரேல் விவசாயத் துறையில் வியக்கத்தக்க பொருளாதார வளர்ச்சியைப் பெற்றுள்ளது.

நீர் மேலாண்மையில் இஸ்ரேல் தன்னிறைவு அடைந்துள்ளது. தனது விவசாயத் தேவைகளில் சுமார் 75% சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைப் பயன்படுத்துவதன் மூலம், மிகக் குறைந்த நீரைக் கொண்டு அதிக விளைச்சலைப் பெறுதல் (Grow More with Less Water) என்ற கோட் பாட்டை நடைமுறையில் செயற்படுத் தியுள்ளது. சொட்டுநீர்ப் பாசனம் போன்ற நவீன முறைகள் மூலம், நீர்வளப் பற்றாக்குறையை அந்நாடு வெற்றிகரமாக முறியடித் துள்ளது.



தக்காளி, வெள்ளரி போன்ற காய்கறிகள் மட்டுமின்றி, ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற சிட்ரஸ் பழங்கள் மற்றும் மலர் சாகுபடியில் (குறிப்பாக லில்லி) இஸ்ரேல் முன்னணியில் உள்ளது. உயர்தர சிட்ரஸ் பழங்கள் மற்றும் ஒயின் ஏற்றுமதி மூலம் அந்நாடு தனது பொருளாதாரத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

விவசாயம் மற்றும் நீர் மேலாண்மை சார்ந்த நவீன உபகர ணங்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதன் மூலம், ஆண்டுக்கு சுமார் ரூ. 1000 கோடிக்கும் அதிகமான வருமா னத்தை ஈட்டி, உலகளாவிய 'அக்ரி-டெக்' (Agri-Tech) சந்தையில் ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக உருவெடுத் துள்ளது.

இஸ்ரேலின் விவசாய வளர்ச்சியில் கிப்புட்ஸ் (Kibbutz) மற்றும் மோஷாவ் (Moshav) ஆகிய கூட்டுறவு முறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அரசு நிலங்களில் குழுக் களாக இணைந்து விவசாயம் செய்து, இலாபத்தைப் பகிர்ந்து கொள்ளும் இந்தக் கம்யூன் முறையிலான பண்ணைகள், சமூக ஒற்றுமைக்கும் பொருளாதார வளர்ச் சிக்கும் சிறந்த உதாரணமாகும்.

1948-இல் இஸ்ரேல் உருவானபோது வெறும் 74,000 ஏக்கராக இருந்த சாகுபடி நிலப்பரப்பு, தொடர் முயற்சி களால் தற்போது 4.60 லட்சம் ஏக்கராக உயர்ந்துள்ளது. இதன் மூலம், பாலைவனத்தையும் சோலைவனமாக மாற்றிக் காட்டியுள்ளனர்.

இஸ்ரேலின் மீன்பிடி மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு:

இஸ்ரேலின் மீன்பிடித் தொழில் இயற்கை வளங்களைச் சார்ந்திருப்பதுடன், தொழினுட்ப ரீதியிலான நீர்வாழ் உயிரின வளர்ப்பிலும் (Aquaculture) பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. அந்நாட்டின் மீன்பிடிச் செயற்பாடுகள் மத்திய தரைக்கடல் மற்றும் செங்கடல், கலிலேயா கடல்,உள்நாட்டு நீர்வாழ் உயிரின வளர்ப்பு எனப் பிரதா னமாக மூன்று நீர்நிலைகளை மையமாகக் கொண்டுள்ளன. மத்திய தரைக்கடல் மற்றும் செங்கடல் பகுதிகளில் பாரமுண்டி (Barramundi), கில்ட்ஹெட் சீபிரீம் (Gilthead Seabream) மற்றும் சூரை (Tuna) போன்ற வணிக ரீதியாக



> "சுமார் 75% சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரைப் பயன்படுத்துவதன் மூலம், மிகக் குறைந்த நீரைக் கொண்டு அதிக விளைச்சலைப் பெறுதல் என்ற கோட்பாட்டை நடைமுறையில் செயற்படுத்தியுள்ளது."

முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இஸ்ரேலின் மிக முக்கியமான நன்னீர் மீன்பிடித் தளமாக கலிலேயோ கடல் (Sea of Galilee) காணப்படுகிறது. நிலப்பரப்பு மற்றும் நீர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, இஸ்ரேல் 'மூடிய மறுசுழற்சி நீர் அமைப்புகளை' (Recirculating Aquaculture Systems - RAS) பயன்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இதன் மூலம் உள்நாட்டு நீர் நிலைகளில் திலாப்பியா, சில்வர் கார்ப், மல்லட் முதலான மீன் வகைகள் செழிப்பாக வளர்க்கப்படுகின்றன:

நவீன மீன் வளர்ப்பு (Aquaculture):

இஸ்ரேல் நிலம் சார்ந்த மீன் வளர்ப்பில் (Land-based Aquaculture) உலக முன்னோடியாகத் திகழ்கின்றது. குறிப்பாக, நீர் பற்றாக்குறையைச் சமாளிக்க அந்நாடு பின்வரும் நவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்து கின்றது:

- பயோ-பிளாக் (Biofloc): இம்முறையில் பாக்டீரியாக்கள் மூலம் கழிவுகள் மீன்களுக்கான புரத உணவாக மாற்றப்படுவதால், தீவனச் செலவு குறைகின்றது.
- RAS (Recirculating Aquaculture Systems): நீரைத் தொடர்ந்து சுத்திகரித்து மீண்டும் பயன்படுத்துவதன் மூலம், மிகக் குறைந்த நீரில் அதிகப்படியான மீன் உற்பத்தியை (High-density production) சாத்தியமாக்குகிறது.
- பாலைவன மீன் பண்ணைகள்: நெகேவ் (Negev) போன்ற வறண்ட பாலைவனப் பகுதிகளில் கூட, நிலத்தடியில் உள்ள உப்புநீரைப் பயன்படுத்தி மீன் பண்ணைகள் வெற்றிகரமாகச் செயற்படுகின்றன.
- அலங்கார மீன் வணிகம்: இஸ்ரேல் உயர்தர அலங்கார மீன்களை (Ornamental Fish) வளர்த்து, ஐரோப்பியச் சந்தைகளுக்குப் பெருமளவில் ஏற்றுமதி செய்கின்றது.

பொருளாதார நிலை (ஏப்பிரல் 2026):

நீண்டகாலப் போர்ப் பதற்றங்களுக்கு மத்தியிலும் இஸ்ரேலின் பொருளாதாரம் வியக்கத்தக்க வகையில் தனது மீண்டெழும் திறனை (Resilience) நிரூபித்து வருகின்றது. 2026-ஆம் ஆண்டில் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி 3.3% முதல் 3.8% வரை இருக்கும் என நிதி அமைச்சகம் கணித்துள்ள நிலையில், லெபனான் மற்றும் ஈரானுடனான மோதல்கள் ஏப்பிரல் மாத இறுதியில் முடிவுக்கு வரும் பட்சத்தில் இந்த வளர்ச்சி அதன் உச்சமான 3.8%-ஐ எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கம் சுமார் 2% என்ற அளவில் கட்டுக்குள் இருப்பதனால், பொருளாதாரத்தை மேலும் ஊக்குவிக்க இஸ்ரேல் மத்திய வங்கி வட்டி விகிதங்களைக் குறைக்கத் திட்டமிட்டுள்ளது. குறிப்பாக, இஸ்ரேலின் பொருளாதாரத் தூணாக விளங்கும் உயர் தொழினுட்பத் துறை இன்றும் உலகளவில் வலுவான நிலையில் நீடிக்கின்றது; 2026-இன் தொடக்கத்தில் AI மற்றும் சைபர் பாதுகாப்பு சார்ந்த ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் பல மில்லியன் டாலர் முதலீடுகளை ஈர்த்துள்ளதுடன், 'Vast Data' போன்ற நிறுவனங்கள் 30 பில்லியன் டாலர் மதிப்பீட்டை எட்டிச் சாதனை படைத்துள்ளன. இருப்பினும், பாதுகாப்பு காரணங்களுக்காகப் பணியாளர்கள் ராணுவப் பணிக்கு அழைக்கப்படுவதால் சுமார் 42% நிறுவனங்கள் தங்களது திட்டங்களில் தேக்கத்தைச் சந்தித்துள்ளன. இத்தகைய சவால்களுக்கு மத்தியிலும், மற்ற அனைத்துத் துறைகளையும் விட உயர் தொழினுட்பத் துறையே இஸ்ரேலின் முதன்மை வருவாய் ஆதாரமாகத் தொடர்ந்து நீடிக்கின்றது.

இராணுவத் தொழினுட்பம் (Military Technology):

இஸ்ரேல் தனது தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தற்காப்புத் திறனை மேம்படுத்தவும் உலகின் மிக அதிநவீன தொழினுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. அவற்றில் முக்கியமானவை:

- **அயன் பீம் லேசர் பாதுகாப்பு அமைப்பு (Iron Beam):**

வான்வழித் தாக்குதல்களை முறியடிக்க இஸ்ரேல் 'அயன் பீம்' எனும் லேசர் தொழினுட்பத்தைப்



> “இஸ்ரேலின் நிலப்பரப்பு மற்றும் நீர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, 'மூடிய மறுசுழற்சி நீர் அமைப்புகளை' பயன்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்கிறது. இதன் மூலம் உள்நாட்டு நீர்நிலைகளில் திலாப்பியா, சில்வர் கார்ப், மல்லட் முதலான மீன் வகைகள் செழிப்பாக வளர்க்கப்படுகின்றன”

பயன்படுத்துகிறது. இது ஏவுகணைகள், மோட்டார் குண்டுகள் மற்றும் ட்ரோன்களை (Drones) வான்வெளியிலேயே லேசர் கதிர்கள் மூலம் தாக்கி அழிக்கும் திறன் கொண்டது. முந்தைய ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகளை விட இது மிகக் குறைந்த செலவில் எதிரிகளின் தாக்குதலை முறியடிக்க உதவுகிறது என்பது இதன் தனிச்சிறப்பாகும்.

■ **செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence – AI):**

இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகள் (IDF) களத்தில் விரைவான மற்றும் துல்லியமான முடிவுகளை எடுக்க செயற்கை நுண்ணறிவை பெருமளவில் ஒருங்கிணைத்துள்ளன. குறிப்பாக, 'யுனிட் 8200' (Unit 8200) போன்ற உளவுப்பிரிவுகள், சேகரிக்கப்படும் கோடிக்கணக்கான தரவுகளை AI மூலம் மிகவேகமாகப் பகுப்பாய்வு செய்கின்றன. இதன் மூலம் இலக்குகளைத் துல்லியமாகக் கண்டறிவதிலும், அச்சுறுத்தல்களை முன்கூட்டியே கணிப்பதிலும் இஸ்ரேல் முன்னணியில் உள்ளது.

■ **ட்ரோன் மற்றும் ரோபாட்டிக்ஸ் (Drones & Robotics):**

போர்க்களத்தில் மனித உயிரிழப்புகளைத் தவிர்க்கவும், தாக்குதலின் துல்லியத்தை அதிகரிக்கவும் தன்னாட்சி அமைப்புகளை (Autonomous Systems) இஸ்ரேல் முன்னிலைப்படுத்துகிறது.

தன்னாட்சி தரைவழி வாகனங்கள் (UGVs): போர்க்களத்தில் வீரர்களுக்குப் பதிலாக அபாயகரமான பகுதிகளில் ரோந்து செல்லவும், கண்ணிவெடிகளைக் கண்டறியவும் தன்னிச்சையாகச் செயற்படும் தரைவழி ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

தாக்குதல் மற்றும் உளவு ட்ரோன்கள்: எதிரிகளின் நிலைகளைத் துல்லியமாகக் கண்காணிப்பதற்கும், தேவைப்படும்போது துல்லியமான வான்வழித் தாக்குதல்களை நடத்துவதற்கும் அதிநவீன ட்ரோன்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை நீண்ட நேரம் வானில் நிலைத்து நின்று உளவு பார்க்கும் திறன் கொண்டவை.


■ **டிஜிட்டல் ஒருங்கிணைப்பு – சயாத் (Tzayad System):**

இஸ்ரேலியப் பாதுகாப்புப் படைகளின் ஒட்டுமொத்த செயற்பாட்டையும் ஒன்றிணைக்கும் 'டிஜிட்டல் நரம்பு மண்டலமாக'ச் செயற்படும் இந்த 'சயாத்' (Tzayad) அமைப்பை எல்பிட் சிஸ்டம்ஸ் (Elbit Systems) உருவாக்கியுள்ளது. இது தரைப்படை, வான்படை மற்றும் கடற்படை ஆகியவற்றை ஒரே டிஜிட்டல் வலையமைப்பின் கீழ் கொண்டுவந்து, ஒரு மேம்பட்ட ஒருங்கிணைந்த போர் மேலாண்மையை உறுதி செய்கிறது. இதன் மூலம் போர்க்களத்தில் உள்ள ஒவ்வொரு வீரரும் வாகனமும் மற்ற பிரிவுகளுடன் நிகழ்நேரத்தில் (Real-time) தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடிவதுடன், அனைத்துப் படைகளும் இணைந்து ஒரே நேரத்தில் மிகத் துல்லியமாகத் தாக்குதல் நடத்துவதற்கான சூழல் சார்ந்த விழிப்புணர்வையும் (Situational Awareness) இது வழங்குகிறது.

அரசியல் மற்றும் பொருளாதாரப் பின்னணியும் இஸ்ரேலின் பாதுகாப்பு உத்திகளும்:

இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு மற்றும் புறநிலைச் செயற்பாடுகள், அந்தப் பிராந்தியத்தில் இஸ்லாமிய மற்றும் கணிசமான கத்தோலிக்கப் பிரிவினரிடையே தங்களின் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கான எழுச்சியைத் தூண்டியுள்ளன. இது இஸ்ரேலுக்கு எதிரான தொடர் ஆயுதப் போராட்டங்களுக்கும், பல்வேறு அமைப்புகளின் உருவாக்கத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. இத்தகைய அச்சுறுத்தல்களை இஸ்ரேல் தனது உயர் தொழினுட்பப் பாதுகாப்பு அமைப்புகளின் மூலம் ஒடுக்கி வருகின்ற போதிலும், அதன் பாதுகாப்பு வளையங்களில் அவ்வப்போது பெரும் விரிசல்கள் (Gaps) ஏற்படுவதே நிதர்சனம்.

இவ்வேளைகளில், அமெரிக்கா தனது முழுமையான இராணுவ மற்றும் ராஜதந்திர பலத்தைப் பயன்படுத்தி அந்த விரிசல்களைச் சரிசெய்து இஸ்ரேலைத் தாங்கிப் பிடிக்கிறது. இதன் பின்னணியில் வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்தும் மேலாதிக்க நோக்கம் மறைந்திருக்கிறது. மேலும், உலகப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, உழைப்பின்றி வட்டி மூலம் இலாபம் ஈட்டும் நிதிசார் செயற்பாடுகளை உலகிற்கு அறிமுகம் செய்ததில் இஸ்ரேலியச் சித்தாந்தங்களுக்குப் பெரும் பங்குண்டு. இதுவே இன்று அமெரிக்க டாலரின் மதிப்பை உலக சந்தையில் நிலைநிறுத்துவதிலும், உலக நாடுகளைக் கடன்பிடியில் வைத்திருப்பதிலும் முக்கிய காரணியாக விளங்குகிறது.



"அமெரிக்கா தனது முழுமையான இராணுவ மற்றும் ராஜதந்திர பலத்தைப் பயன்படுத்தி அந்த விரிசல்களைச் சரிசெய்து இஸ்ரேலைத் தாங்கிப் பிடிக்கிறது. இதன் பின்னணியில் வளைகுடா நாடுகளின் எண்ணெய் வளங்களைக் கட்டுப்படுத்தும் மேலாதிக்க நோக்கம் மறைந்திருக்கிறது."

காகிதப் பொருளாதாரமும் உலகளாவிய ஆதிக்கமும்:

இன்று உலகப் பொருளாதாரம் என்பது உற்பத்தி மற்றும் பண்டமாற்றத்தைத் தாண்டி, பிணையப் பத்திரங்கள் (Bonds) மற்றும் பங்குகள் (Shares) சார்ந்த ஒரு காகிதப் பொருளாதாரமாக (Paper Economy) உருவெடுத்துள்ளது. நேரடி உழைப்பில் ஈடுபடாமல், நிதிச் சந்தை விளையாட்டுகள் மற்றும் வட்டி சார்ந்த நடைமுறைகள் மூலம் பெரும் செல்வத்தைச் சேர்க்கும் இந்த முறையை இஸ்ரேலியச் சித்தாந்தங்களே உலகிற்கு அறிமுகப்படுத்தின. இந்த மேலாதிக்கச் சூத்திரத்தை ஆரம்பகாலத்திலேயே அமெரிக்காவிற்கு இஸ்ரேல் கற்றுக்கொடுத்தது. உழைப்பின்றிச் செல்வம் ஈட்டும் இந்தத் தத்துவம் அமெரிக்காவிற்குப் பிடித்துப்போனது மட்டுமல்லாமல், காலப்போக்கில் அதன் பிடியில் இருந்து மீள முடியாத அளவுக்கு அமெரிக்கா அதனுடன் பிணைக்கப்பட்டுவிட்டது. இதன் விளைவாக, அமெரிக்க டொலரின் மதிப்பும் அதன் உலகளாவிய அதிகாரமும் இந்த நிதிசார் தந்திரங்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. இது உழைக்கும் வர்க்கத்தைச் சுரண்டி, ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டும் உலகைச் சுகபோகமாக ஆள வழிவகை செய்துள்ளது.

சியோனிசத்தின் எதிர்காலமும் சமூக மாற்றமும்:

இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்குமான இந்த உறவு என்பது வெறும் வர்த்தக ரீதியானது மட்டுமல்ல, அது திருமண பந்தத்தைப் போன்ற ஒரு பிரிக்க முடியாத இறுக்கமான பிணைப்பாக மாறியுள்ளது. இடவெளியால் ஆயிரம் மைல்கள் தள்ளி இருந்தாலும், இந்த இரு நாடுகளும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மிக நெருக்கமாகவே செயற்படுகின்றன. இருப்பினும், மனித குலத்தின் தொடர் கண்டுபிடிப்புகளும் அறிவியல் வளர்ச்சியும் இஸ்ரேலின் தொழில்நுட்ப மேலாதிக்கத்திற்குச் சவாலாக உருவெடுத்துள்ளன. குறிப்பாக சீனா, இந்தியா மற்றும் ஈரான் போன்ற நாடுகள் இஸ்ரேலின் அழிவுத் தொழினுட்பங்களை எதிர்கொள்ளும் (Counter) அளவிற்கு இராணுவத் தொழினுட்பத்தில் அசுர வளர்ச்சியை எட்டியுள்ளன.

சியோனிச யூத அடிப்படைவாதக் கொள்கையின் அடிப்படையில் இஸ்ரேல் தனது பயணத்தைத் தொடருமானால், எதிர்காலத்தில் உலக வரைப்படத்தில் ஒரு நாடாகத் தனது இருப்பைத் தக்கவைப்பதிலேயே சிக்கல்கள் உருவாகலாம். ஆனால், உலகெங்கும் பரவி வாழும் யூத மக்கள், அந்தந்த நாட்டுப் பல்லின மக்களுடன் ஐக்கியமாகித் தங்கள் வாழ்வைத் தொடர்வார்கள் என்பது நிதர்சனம். அதேவேளை, மதவாத அடிப்படையிலான சியோனிசக் கட்டமைப்பிற்குள் விசுவாசிகளாகவே யூத மக்கள் தொடர்ந்து இயங்க முடியாது.

இதற்கான தீர்வாக, இஸ்ரேலுக்குள்ளேயே அடிப்படைவாதத்திற்கு எதிரான இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் வலுப்பெறுவது ஒரு முக்கிய வழியாக அமையும். இந்த மாற்றமானது, ஒரு சறுக்கு மரத்தில் ஏறுவதைப் போன்றது (Greased pole challenge). மெதுவாக மேலோக்கி நகர்ந்தாலும், அவ்வப்போது ஏற்படும் யுத்தச் சூழல் தேசிய உணர்வைத் தூண்டி மக்களை மீண்டும் ஒன்றிணைப்பதன் மூலம், இந்த ஜனநாயக சக்திகள் சறுக்கி விழ நேரிடுகிறது. கடந்த பல தசாப்தங்களாக இஸ்ரேலில் இத்தகைய அரசியல் ஏற்ற இறக்கங்களையே நாம் கண்டு வருகிறோம்.

சமூக நல்லிணக்கமும் பிராந்திய அமைதியும்:

உலக மக்களுடன் இணைந்து வாழும் சகோதரத்துவக் கருத்தியலை ஏற்றுக்கொள்வதே இஸ்ரேலின் நீண்டகால இருப்பையும், யூத மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இது பாலஸ்தீனத்தில் தொடங்கி, அந்தப் பிராந்தியம் முழுவதிலும் உள்ள இஸ்லாமிய மற்றும் கத்தோலிக்க மக்களுடனான இணக்கமான சூழலாக விரிவடைய வேண்டும். இதேபோன்ற ஒரு போக்கை தற்போதைய இந்திய அரசும் 'அகண்ட பாரதம்' மற்றும் 'இந்துத்துவா' போன்ற அடிப்படைவாதக் கொள்கைகள் மூலம் முன்னெடுக்க முயல்வது, அதன் அண்டை நாடுகளுடனான உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இருப்பினும், இந்தியா என்பது பல்லாயிரக்கணக்கான மொழிகள், இனங்கள் மற்றும் மதங்களைக் கொண்ட ஒரு பன்முகத்தன்மை கொண்ட நாடு என்பதால், இஸ்ரேலின் சியோனிசம் போன்ற ஒரு தீவிரவாதக் கொள்கை இங்கு நிலைபெறுவது என்பது சாத்தியமற்ற ஒன்றாகவே அமையும். இத்தகைய முயற்சிகள் இந்தியாவிற்குள் ஒரு நிலையற்ற தன்மையையும் அச்சத்தையும் மட்டுமே உருவாக்கும். அண்மையில் ஈரானுக்கு எதிரான போர் பதற்றம் நிலவும் சூழலில், இந்தியப் பிரதமர் இஸ்ரேலுக்குப் பயணம் மேற்கொண்டதும், தீவிரவாத ஒழிப்பு என்ற பெயரில் இஸ்ரேலைப் பாராட்டியதும் இந்த இரு நாடுகளுக்கு இடையிலான மேலாதிக்கச் சிந்தனையின் ஒற்றுமையைக் காட்டுகிறது. இறுதியில், இஸ்ரேலாக இருந்தாலும் சரி, இந்தியாவாக இருந்தாலும் சரி, அந்தந்த நாட்டு மக்களே அரசைச் சரியான திசைவழியில் கொண்டு செல்லும் வல்லமை படைத்தவர்களாகத் திகழ வேண்டும்.

முடிவுரை:

இஸ்ரேலின் இருப்பு என்பது அதன் அதிநவீன இராணுவத் தொழினுட்பத்திலோ அல்லது சியோனிச விரிவாக்கக் கொள்கையிலோ தங்கியிருக்கவில்லை. மாறாக, உலகெங்கும் பரவி வாழும் யூத மக்கள் பிற இனங்களுடன் ஐக்கியப்பட்டு, மனிதாபிமானத்தைப் போற்றிய மார்க்ஸ் மற்றும் ஐன்ஸ்டைன் போன்ற மேதைகளின் வழியில் பயணிப்பதில்தான் உள்ளது. குறுகிய மத அடிப்படைவாதத்தைத் துறந்து, பாலஸ்தீனத்தில் தொடங்கி அண்டை நாடுகளுடன் சகோதரத்துவத்தைப் பேணுவதும், இஸ்ரேலுக்குள்ளேயே இடதுசாரி மற்றும் ஜனநாயக சக்திகள் பலம்பெறுவதும் மட்டுமே அந்தப் பிராந்தியத்தில் நிலையான அமைதியையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும்.



James@thaiveedu.com

நெல்லை ஜெயசிங்

திருப்பரங்குன்றத் தீபத்தூணில் அரசியல் தீ



பெரியார் மண் எனக் கூறப்படும் தமிழ்நாட்டில் அண்மைக் காலங்களில் மதங்களின் செயற்பாடு அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. தனிமனித நம்பிக்கை என்ற ஒன்று, சிலரால் சமூக வழிபாடாக மடைமாற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக வடஇந்தியாவில் பரவும் இந்துத்துவ கொள்கை, தமிழ்நாட்டிலும் பரவவேண்டும் என்ற மறைமுக செயற்றிட்டத்தை சில அமைப்புகள் செயற்படுத்த முற்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியே திருப்பரங்குன்றத்து நிகழ்வாகும்.

இந்து மத நம்பிக்கை கொண்ட ஒரு பகுதியினர், கடந்த டிசம்பர் 3-ஆம் திகதி உரிய இடத்தில், உரிய முறையில், தீபம் ஏற்றிக்கொண்டிருக்க, இந்து அமைப்புகள் என்ற முகமூடி அணிந்த அரசியல் கட்சி சார்ந்த சிலர், மதுரை திருப்பரங்குன்றத்தில் தரம்தாழ்ந்த அரசியல் தீயை ஏற்றத் தொடங்கிய கசப்பான வரலாறு இடம்பெற்றுள்ளது. மத ஒற்றுமை, மத நல்லிணக்கம், சிறப்பாக உள்ள தமிழ் நாட்டில், மத மோதலை, மத வேற்றுமையை உருவாக்குவதே அவர்களின் நோக்கம் என்பது இதன் மூலம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதனை நிறைவேற்ற அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் தென்தமிழகத்தின் திருப்பரங்குன்றத்து உச்சி மலையாகும்.

திருப்பரங்குன்றம், முருகனின் அறுபடை வீடுகளில் ஒன்று. இந்துமத மக்கள் அதனை புனிதத் தலமாகப் போற்றி வருகின்றனர். அத்தகைய புகழ் மிக்க திருப்பரங்குன்றத்து மலைமீது பழைமையான உச்சிப்பிள்ளையார் கோவில் உள்ளது. இதன் அருகில் ஆண்டாண்டு காலமாக, கோவில் நிர்வாகம், எந்தவித பிரச்சினையும் இன்றி கார்த்திகைத் தீபத்தை ஏற்றிவருகிறது. அது ஆகம விதிகளுக்கு உட்பட்டது என்றும் கூறப்படுகிறது. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றும் வழக்கம், 100 வருடங்களுக்கு மேலாக ஆகம விதிகளின் அடிப்படையில்தான் நடந்து வருகிறது. தற் போது தீபம் ஏற்றப்பட்டுவரும் தூணில், காலம் காலமாக தீபம் ஏற்றப்பட்டதற்கு போதிய சான்றுகள் இருப்பதை அனைவரும் அறிவர்.

இதுவரை காலம் தீபம் ஏற்றுவதில் எந்தப் பிரச்சினையும் எழவில்லை. இந்நிலையில் திருப்பரங்குன்றம் மலையில் இஸ்லாமியர்கள் காலம் காலமாக போற்றி நினைவு கூர்ந்து வரும் தர்கா எனப்படும் ஆன்மீகத்தலம் இருந்து வருகிறது. இதற்கு அருகாமையில் காணப்படும் கல் தூணில், தீபம் ஏற்றுவோம் என தற்போது இந்து முன்னணி கோஷம் போடத்தொடங்கியவுடன் பிரச்சினை எழத் தொடங்கலாயிற்று. மலை உச்சியில் அமைந்துள்ள, இவர்கள் உரிமை கோரும் எல்லைத்தூண், தர்காவில் இருந்து 66 மீட்டர் தொலைவில் உள்ளது. இந்து முன்னணியினர் கூறுவதைப்போல் அது தீபதூணா சர்வே கல்லா, (Land Survey Stone) என்ற விவாதம் ஒரு பக்கம் நடந்து வரும் நிலையில் தற்போது சர்ச்சை தூணில் தீபம் ஏற்றுவோம் என இந்து அமைப்புகள் கூறி வருவதால் சிக்கல்கள் எழுந்துள்ளன.

வழக்கத்துக்கு மாறாக இஸ்லாமியர்களின் தர்கா அமைந்துள்ள இடத்தில் தீபம் ஏற்ற முற்படும்போது, வேண்டாத பிரச்சினை உருவாகி, இரு மதங்கள் இடையே சண்டை சச்சரவு ஏற்படுவதற்கான வாய்ப்பு உருவாகிவிடும். ஆன்மீகம் என்ற போர்வையில் இதனை அரசியலாக்கி, அரசியல் இலாபம் பெறுவதே இதன் நோக்கமாக இருக்கிறது. குறிப்பாக தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடைபெறும் நேரத்தில் இப்பிரச்சினையை உருவாக்கி, அதனை இந்து மக்களிடையே வாக்கு வங்கி அரசியலுக்கு பயன்படுத்துவதே இந்து முன்னணியினரதும் அவர்கள் பின்னால் இருந்து இயக்கும் பாஜக-வினரதும் மறைமுக நோக்கமாகும். மதவாத அரசியலை எப்போதும் கையில் எடுக்கும் பாஜக, மதுரையில் முருக பக்தர்கள் மாநாட்டை நடத்திய நிலையில் திருப்பரங்குன்றத்து தீப விவகாரத்தை தற்போது கையில் எடுத்துள்ளது. இதைவைத்து தமிழக

அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தி, தங்களது வாக்கு வங்கியை அதிகரித்துக் கொள்ளலாம் என்பது அவர்களின் அடிப்படை நோக்கமாகும்.

இன்றைய உலகம், அறிவியலை நோக்கி வேகமாக ஓடிக் கொண்டிருக்க, இங்கே முற்போக்கான விழுமியங்களை பின்னுக்கு இழுக்கவும் மூடநம்பிக்கை எனும் புதைகுழியில் மக்களைத் தள்ளுவதற்கும் சிலர் முயன்று வருகின்றனர். இந்தியாவில் அதிகமான மக்கள் மத வழிபாட்டில் நம்பிக்கை உள்ளவர்கள். இவர்களின் பலவீனத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்த சிலர் முயன்று வருகின்றனர். இவர்கள் நாடெங்கும் மசூதிகளையும் கோவில்களையும் முன்வைத்து, சமூங்கள் இடையே மோதல் நிலையை உருவாக்கி அரசியல் இலாபம் தேடப்பார்க்கிறார்கள். கடந்த நூற்றாண்டில் இராமர் பிறந்த பூமி எனக்கூறி பாபர் மசூதியை இடித்தபோது ஏற்பட்ட இரத்தக்களரியின் கோர முகத்தை மக்கள் இன்னும் மறக்கவில்லை. திருப்பரங்குன்றத்து தர்கா மட்டுமல்ல, தமிழ்நாட்டில் 175 மசூதிகளிலும் பிரச்சினைகளைக் கிளப்பி, மத நல்லிணக்கத்திற்கு ஊறுவிளைவிக்க இவர்கள் முயன்று வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக முருகக் கடவுளையும் கார்த்திகை தீபத்தையும் இங்கே கையில் எடுத்துள்ளனர்.

அண்மைக்காலமாக நெல்லித்தோப்பு தர்காவிற்கு அருகாமையில் உள்ள தூணில், தீபம் ஏற்றவேண்டுமென பாஜக ஆதரவாளர்கள் அடம்பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் கூறும், தர்காவிற்கு அருகே உள்ள கல்தூணில் விளக்கேற்றலாம் என கடந்தகாலங்களில் எந்த ஒரு அரசோ, நீதிமன்றமோ அனுமதி அளிக்கவில்லை. மேலும் இப்பகுதி தொல்லியற்றுறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. ஆனால் அவர்களின் ஆலோசனையோ அனுமதியோ பெறப்படவில்லை. மாறாக தங்களுக்கு சாதகமான தீர்ப்பை பெறும் எண்ணத்துடன் உயர்நீதிமன்றம் ஒன்றை நாடியுள்ளனர். குறிப்பிட்ட நீதிமன்றமும் சில கருத்தியல் சார்ந்து, அவசரகதியில் அவர்களுக்கு சாதகமான தீர்ப்பு ஒன்றை வழங்கி இருக்கிறது. ஆனால் இத்தீர்ப்பு பல தளங்களில் விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. நீதிமன்றங்களும் நீதிபதிகளும் விருப்பு வெறுப்பு பாராது செயற்பட வேண்டும் என்ற கருத்து இந்த விடயத்தில் வெளிப்படவில்லை. இதுவரை கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஆகமவிதியும் கேள்விக்குள்ளாகி இருக்கிறது.

தங்களுக்கு சாதகமான தீர்ப்பை ஆர்எஸ்எஸ் பின்புலத்துடன் பெற்ற பின், ஆகமவிதிகளுக்கு முரணாக, இரண்டாவது முறையாக சர்ச்சைக்குரிய கல்தூணில் தீபம் ஏற்றும் நடவடிக்கைகள் சிலரால் மேற்கொள்ளப்பட்டன. சட்டஒழுங்கைப்பற்றி கவலைப்படாத தமிழக பாஜக தலைவர்கள், தொண்டர்கள், ஆர்எஸ்எஸ் அமைப்பினர், இந்து முன்னணியினர், வலதுசாரிகள், என ஏராளமானோர் மத விரோத மனநிலையுடன் திருப்பரங்குன்றத்தில் திரண்டனர். இந்நிலையில் மிகத் தைரியத்துடன் செயற்பட்டுவந்த தமிழக அரசு, பொது அமைதி கருதி, 144-வது தடை உத்தரவை பயன்படுத்தி அசம்பாவிதம் ஏற்படாதவாறு பார்த்துக்கொண்டது. ஆனால் நீதித் துறையின் ஒருதலைப்பட்சமான செயற்பாடு காரணமாக, அரசுத்துறை கண்டனத்திற்கு உள்ளாகியது. அத்துடன் அரசு அதிகாரிகள் உட்பட பல சமூக செயற்பாட்டாளர்கள் மீதான நீதிமன்ற விசாரணை, நிலுவையில் இருப்பதாக அறியப்படுகிறது.

திருப்பரங்குன்ற தீப விவகாரத்தின் பின்னால் மிகப்பெரும் அரசியல் இருப்பதாகக் கூறப்படுகிறது. சுவாமி தரிசனத்தைவிட, மத மோதலை உருவாக்கி அதன் வாயிலாக தேர்தல் அரசியலில் வெற்றி பெறுவதே அவர்களின் பிரதான நோக்கமாகும். அதற்கு முன்னோட்டமாக மக்கள் ஆதரவைத் திரட்டும் வகையில் பெரும் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பும் விடுத்தனர். ஆனால் மதநல்லிக்கணத்தை விரும்பிய மதுரை மக்கள் போராட்டத்திற்கு ஆதரவு காட்டவில்லை. மக்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகள் ஏராளமாக இருக்க, பாஜக-வினரின், கடவுளைக் காப்பாற்றும் கபட நாடகத்தை மக்கள் இரசிக்கவில்லை. மதுரையை மணிப்பூராக மாற்றும் முயற்சியை, மதுரை மக்கள் விரும்பவில்லை. போராட்டத்தின்போது முருக பக்தியை புறந்தள்ளி 'பாரத மாதாக்கி ஜே' என முழக்கமிட்டு தங்களின் அரசியல் எண்ணத்தை பாஜக-வினர் அப்பட்டமாக வெளிக்காட்டினர். மேலும் பிரதமர் மதுரை வந்த போது, பிரசித்திபெற்ற மதுரை மீனாட்சி அம்மண் கோயிலை கண்டுகொள்ளாது, திருப்பரங்குன்றத்து முருகனை தரிசித்து பாஜக-வின் மதவாத அரசியலுக்கு சாட்சியானார்.

திருப்பரங்குன்றத்து தீபம் ஏற்றும் நிகழ்வு அரசியல் தலையீட்டால் அசிங்கப்படுத்தப்பட்டு தற்போது நீதிமன்ற வாசலில் நிற்கவைக்கப்பட்டுள்ளது. ஆர்எஸ்எஸ் ஆதரவாளர்கள், மதவாதிகள், தங்களுக்குச் சாதகமான தீர்ப்பை பெற, சாதகமான நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அரசியல் பின்புலமும் அவர்களை நன்றாகத் தூக்கிப்பிடிக்கிறது. அவர்கள் நீதிமன்றத்தை அரசியல் மன்றமாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். தற்போது தக்க சமயத்தில் விழித்துக்கொண்ட உயர்நீதிமன்றம், விசாரணை மன்றத்தில் அரசியல் வேண்டாம் என எச்சரிக்கும் வகையில் அறிவுரை கூறியுள்ளது.

தீபம் ஏற்றுவதை அரசியலாக்கவேண்டாம் என்பதே, அமைதியை விரும்பும் கோடிக்கணக்கான மக்களின் விருப்பமாக இருக்கிறது. ஆனால் மத்தியில் ஆளும் பாஜக-வின் நோக்கம் வேறாக இருக்கிறது. வரும் ஏப்ரல் மாதம் நடைபெற இருக்கும் தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான பாஜக-வின் தேர்தல் அறிக்கையில், திருப்பரங்குன்றத்தில் சர்ச்சை தூணில் தீபம் ஏற்றுவோம் என வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. சிறுபான்மை மக்களுக்கு எதிராக மதஉணர்வைத் தூண்டி, பெரும்பான்மை இந்துக்களின் ஆதரவுடன் அரசியல் அதிகாரம் பெறுவதே அவர்களின் தலையாய நோக்கமாக இருக்கிறது. அமைதிப் பூங்காவாக இருக்கும் மதுரையில் குறிப்பாக திருப்பரங்குன்றத்தில தீபம் என்ற பெயரில், மதநல்லிணக்கத்துடன் வாழ்ந்து வரும் சமூகங்கள் இடையே கலவரத்தை ஏற்படுத்துவதே இவர்களின் நோக்கமாக இருக்கிறது. இந்நிலையில், அடுத்த வருடம் இதே நாளில் என்ன நடக்கும் என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.



jeyasingh@thaiveedu.com

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் அவலநிலை தீருமா?

இலங்கை நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்துவ தற்காக, 200 ஆண்டுகளுக்கு முன்பே பிரித்தானிய காலனித்துவ அரசால் தமிழ்நாட்டிலிருந்து கங்காணி முறை மூலம் இந்திய வம்சாவளித் தமிழர்கள் அழைத்து வரப்பட் டனர். அவர்கள் காடுகளைத் திருத்தி, தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்களை உருவாக்கி, கடும் உழைப்பின் மூலம் இலங்கை நாட்டை வளம் கொழிக்கச் செய்தனர். இரு ப்பினும், அவர்கள் அனுபவித்த இன்னல்களும் உழைப்புச் சுரண்டலும் அளவிட முடியாதவை. இலங்கை 1948-இல் சுதந்திரம் பெற்றவுடன், இந்த மக்களின் பங்க ளிப்பைக் கருத்தில் கொள்ளாமல், புதிய அரசால் கொண்டு வரப்பட்ட இலங்கை குடியுரிமைச் சட்டம் மூலம் அவர்களின் குடி யுரிமை மற்றும் வாக்குரிமை பறிக்கப்பட்டது. இது அம் மக்களை அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக நாடற் றவர்களாகவும், அரசியல் உரிமையற்றவர்களாகவும் மாற்றி யது. இவ்வாறு வாக்குரிமை பறிக்கப்பட்ட மக்கள் 1964-ஆம் ஆண்டு இலங்கை - இந்திய அரசுகளால் ஏற்படுத்தப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இலங்கையில் வாழும் உரிமை மறுக்கப்பட்டு, சட்டபூர்வமாக இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டு அழைத்து வரப்பட்டனர். இவ்வாறு வந்தவர் களையே 'தாயகம் திரும்பியோர் (Repartiats)' என்று அழை க்கிறோம். இவர்கள் அகதிகள் (Refugee) அல்ல. இவ்வாறு 5.25 இலட்சம் பேர் 1984-ஆம் ஆண்டுவரை இந்தியாவுக்கு வரவழைக்கப்பட்டு மறுவாழ்வுத் திட்டங்களைப் பெற்றனர். இந்த மறுவாழ்வுத் திட்டங்களால் 10 சதவீதமான தாயகம் திரும்பியோர் மட்டுமே பலனடைந்தனர். மீதமுள்ள 90 சதவீதம் பேரின் நிலை இன்னும் மோசமானதாகவே உள்ளது.

இவ்வாறு தாயகம் திரும்பிய மக்கள் மற்றும் அவர்களது வாரிசுகள் 20 இலட்சம் பேர் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பான்மையினர் (90%) தமிழ்நாட்டிலும் மற்றவர்கள் பிற தென் மாநிலங்களிலும் வாழ்கின்றனர். இவர்களில் சுமார் 5 இலட்சம் பேர் நீலகிரி மாவட்டத்தில் வாழ்கின்றனர். இம்மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்றத் தொகுதி களின் வெற்றியைத் தீர்மானிப்பவர்களாகத் தாயகம் திரும் பியோரே உள்ளனர். கோவையில் வால்பாறைப் பகுதி, திண்டுக்கல் மாவட்டத்தில் கொடைக்கானல், கன்னியா குமரி மாவட்டத்தில் இரப்பர் தோட்டங்கள் முதலிய இடங் களில் கணிசமாக வாழ்கின்றனர். திருச்சி, புதுக்கோட்டை, பெரம்பலூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர் போன்ற மாவட் டங்களிலும் தாயகம் திரும்பியோர் அதிக எண்ணிக்கையில் வாழ்கின்றனர். தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக வாழ்கின்றனர்.

மறுவாழ்வுத் திட்டங்களின் தோல்வி:

தாயகம் திரும்பிய மக்களுக்கு இந்திய ஒன்றிய அரசின் மறுவாழ்வுத் திட்டங்கள் மாநில அரசினூடாக வழங்கப் பட்டன. அவையாவன:

வியாபாரக் கடன், வீட்டுக்கடன், அரசு வேலை, பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்பு, விவசாயத் திட்டங்கள், தேயிலை, இரப்பர் பெருந்தோட்டங்கள், கல்வி, வேலைவாய்ப்பில் 2 சதவீத இட ஒதுக்கீடு, தொழிற் பயிற்சிகள், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி (REPCO) நலத்திட்டங்கள், போன்றவை மறுவாழ்வுத் திட்டங்களாக அறிவிக்கப்பட்டன.



மறுவாழ்வுத் திட்டங்களின் மூலம் பயனடைந்த குடும்பங்கள் - தமிழ்நாடு:

வியாபாரக்கடன்	-	77,445
வேளாண் கடன்	-	3,275
தேயிலைத் தோட்டக்கழகம்	-	3,445
இரப்பர் தோட்டக்கழகம்	-	285
சிங்கோனாத் தோட்டம்	-	125
நூற்பாலைகள்ஃசர்க்கரை ஆலைகள்	-	3,942
ரெப்கோ வங்கி நலத்திட்டம்	-	4,918
சுய வேலைவாய்ப்பு	-	526
வீட்டுக்கடன்	-	57,461
மொத்தம்	-	151,422

பிற மாநிலங்களில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள்:

கர்நாடகம்	-	988
கேரளம்	-	1,599
ஆந்திராஃதெலுங்கானா	-	1,962
புதுச்சேரி	-	25
குஜராத்	-	1
மொத்தம்	-	4, 575

இவ்வாறு வழங்கப்பட்ட மறுவாழ்வுத் திட்ட உதவிகள் முழுமையாகத் தாயகம் திரும்பியோரைச் சென்றடையவில்லை. இடைத்தரகர்களாலும், அரசு அலுவலர்களாலும் அபகரிக்கப்பட்டுவிட்டன. தற்போது கூலித் தொழிலாளர்களாகவே தமிழ்நாட்டிலும் தென் மாநிலங்களிலும் வாழ்கின்றனர். மொத்தத் தாயகம் திரும்பியோரில் அரசு வேலைவாய்ப்பு களைப் பெற்ற 10 சதவீதத்தினர் மட்டுமே வளமான மறு வாழ்வைப் பெற்றுள்ளனர். பிற மாநிலங்களில் உள்ள தாயகம் திரும்பியோரின் குழந்தைகள் தமிழ் வழியில் கல்வி பெறமுடியாத நிலையில் உள்ளனர். இந்தக் குழந்தைகள் எதிர்காலத்தில் தாய்மொழியையே அறியாதவர்களாக மாறும் அவலம் உள்ளது.

இலங்கை அகதியா?

இந்திய நாட்டில் முன்னோர்கள் பிறந்தபோதும், இலங்கை சென்று திரும்பி வந்தவர்களின் வாரிசுகளை இன்னும் தமிழ் நாடும், இந்தியாவும் 'சிலோன்காரர்'களாகவே கருதுகிறது. அரசு அலுவலர்கள் மற்றும் காவல்துறையினர் இலங்கையர் களாக கருதுவதால் பல பாதிப்புக்களைத் தாயகம் திரும் பியோர் சந்தித்து வருகின்றனர்.

மறுவாழ்வுத் திட்டங்களின் சவால்களும் தாயகம் திரும்பியோரின் அடிப்படை உரிமைக் கோரிக்கைகளும்:

தாயகம் திரும்பிய மக்களின் வாழ்வாதாரச் சிதைவுகளைக் களைந்து, அவர்களின் சமூகப் பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியது தார்மீகக் கடமையாகும்.

- குறிப்பாக, 57,461 குடும்பங்களுக்கு ஒன்றிய-மாநில அரசு களின் மூலம் வீடு கட்டுவதற்கு கடன் வழங்கப்பட்டது. இந் தியாவில், தமிழ்நாட்டில் எவ்வித அறிமுகமும் அனுப வமும் இல்லாத இம்மக்களை ஏமாற்றி இடைத் தரகர் களும் தனித்துணை வட்டாட்சியர் (மறுவாழ்வு) முதலிய அரசு அதிகாரிகளும் மேற்படி கடன் தொகையை எடுத்து சில இடங்களில் வீடுகளை அமைத்தனர். இவையே 'சிலோன் காலனி' என அழைக்கப்படுகிறது. இந்த வீடுகளில் எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரப்ப டவில்லை. மேலும், எங்கே வீடு கட்டித் தரப்பட்டது என்பதை இம்மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. இதனால் பெரும்பாலான தாயகம் திரும்பியோரால் இவ்வீ டுகளைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு செல்வாக்குமிக்க பலர் இந்த வீடுகள் அமைந்துள்ள மனைகளைத் தங்கள் பெயருக்குப் பட்டா மாற்றம் செய்தும் போலிப் பத்தி ரங்கள் தயாரித்தும் சட்ட விரோதமாக விற்பனை செய்து விட்டனர். தாயகம் திரும்பியோருக்கு வழங்கப்பட்ட இந்த வீடுகளில் 90 சதவீதம் இவ்வாறு அபகரிக்கப்பட்டு ஆக்கி ரமிக்கப்பட்டுவிட்டது. இக்கடன் முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே, தாயகம் திரும்பியோருக்கு எங்கெல்லாம் வீட்டு மனைகள் கொடுக்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டதோ அவற்றையெல்லாம் அரசு அதிகாரிகள் மூலம் கண்டறிந்து மீண்டும் உரியவர்களிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசிய மாகிறது.
- வேளாண் திட்டங்கள் மூலம் 3275 தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு தலா 3 ஏக்கர் விவசாய நிலம் வழங்கப் பட்டது. சில தொண்டு நிறுவனங்கள் மூலமும், அரசு நிலம் வழங்கியது. இவ்வாறு வழங்கப்பட்ட நிலங்களில் பொரும் பாலானவை பிறரால் ஆக்கிரமிக்கப்பட்டு, அபகரிக்கப்பட் டுவிட்டன. தாயகம் திரும்பிய மக்களின் பிரதான வாழ்வா தாரமாகத் திகழ வேண்டிய இந்த நிலங்களை மீட்டெ டுத்து, உரிய குடும்பங்களிடம் மீண்டும் ஒப்படைப்பதன் மூலமே அவர்களின் பொருளாதாரத் தற்சார்பை நிலைநி றுத்த முடியும்.
- தாயகம் திரும்பியோருக்கு இலங்கை, கண்டியிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் மூலம் கடவுச்சீட்டும் (Passport) மறுவாழ்வு உதவிகளுக்கானக் குடும்ப அட்டையும் (Family Card) வழங்கப்பட்டது. வீடு கட்டுவ தற்காக இடைத் தரகர்கள் தாயகம் திரும்பியோர் வந்த புதிதிலேயே ஏமாற்றி, ஆசை வார்த்தை கூறி, கடவுச்சீட்டு மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றை வாங்கிச் சென்று அரசு அலுவலகத்தில் கொடுத்துப் பணத்தைப் பெற்றனர். அப்போது தனித்துணை ஆட்சியர் (மறுவாழ்வு) என்ற அரசு அலுவலரே இதற்குப் பொறுப்பானவராக இருந்தார். இந்த ஆவணங்களை உரியவர்களிடம் இவர்கள் திரும்ப ஒப்படைக்கவில்லை. இவை கோட்டாட்சியர் அலுவலகங் களில் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, தாயகம் திரும்பியோரின் இந்த ஆவணங்களை உடனடியாக உரிய வர்களிடம் ஒப்படைக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். ஆவணங்கள் திரும்ப உரியவர்க ளிடம் கொடுக்காதபட்சத்தில் அவர்கள் தங்களை அடை யாளப்படுத்த தமிழ்நாடு அரசு 'தாயகம் திரும்பியோர்' என்ற அடையாளச் சான்றிதழை வழங்க வேண்டும் என்பது மிக முக்கியமான கோரிக்கையாகும்.
- அரசு கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் சர்க்கரை ஆலைகளில் மறுவாழ்வுத் திட்டத்தின் பணியில் சேர்ந்த

வர்கள் ஓய்வு பெறும் போதோ. பணியின்போது மரணம டைந்தாலோ, வேலை செய்ய முடியாத அளவுக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டாலோ அவரது குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வழங்க வேண்டும்.

- தாயகம் திரும்பியோருக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் 1991-ஆம் ஆண்டுவரை ஒன்றிய-மாநில அரசுகள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் 2 சதவீத இட ஒதுக்கீடுகளை வழங்கின. இடைநிறுத்தப்பட்ட 2 சதவீத இட ஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டும்.

- நீலகிரி மாவட்டத்திலும் கோயம்புத்தூர் மாவட்டத்திலும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தமிழ்நாடு அரசால், வனத்துறையின் கீழ் அமைக்கப்பட்டுத் தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இதேபோல கன்னியாகுமாரி மாவட்டத்தில் தமிழ்நாடு இரப்பர் தோட்டக் கழகம் ஆரம்பிக்கப்பட்டுத் தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது, ஆனால், வனத்துறையினரின் நடவடிக்கையால் அரசு தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்களின் பரப்பளவு பெருமளவில் குறைக்கப்பட்டுவிட்டது. இதன்மூலம் தனியார் தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்கள் மறைமு கமாக ஊக்குவிக்கப்படுகிறது. இதன் விளைவாக ஆயிரக் கணக்கானத் தொழிலாளர்கள் வேலை இழந்து விட்டனர். எனவே, மீண்டும் தொடங்கப்பட்ட காலத்தில் தேயிலை, இரப்பர் பயிரிடப்பட்ட இடங்களில் மீண்டும் தேயிலை, இரப்பர் பயிரிட்டு வேலை இழந்த தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்கு வேலை வழங்க வேண்டும்.

- மேற்படி, அரசு தோட்டங்களை வனத்துறையிலிருந்து மீட்டு தனியாக அரசுப் பெருந் தோட்டத்துறையை ஏற்ப டுத்தி, அரசு தேயிலை மற்றும் இரப்பர் தோட்டங்கள் 'அரசு பெருந் தோட்டத்துறை' மூலம் மேலாண்மை செய் யப்பட வேண்டும்.

- அரசு தேயிலை, இரப்பர் தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் அவர்கள் ஓய்வுபெற்ற பிறகும், குடியிருக்க அனுமதிக்க வேண்டும். அரசு இலவச வீட்டுமனை வழங்கி வீடு கட்டித் தரவேண்டும்.

- தமிழ்நாட்டுக்கு வெளியே கேரளம், கர்நாடகம், ஆந்திரா, தெலங்கானா ஆகிய தென் மாநிலங்களில் ஆயிரக்க ணக்கான தாயகம் திரும்பியோர் குடியமர்த்தப்பட்டுள் ளனர். இவர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் வழியில் கல்வி பயில தமிழ்நாடு அரசு இம்மாநிலங்களில் பள்ளி களைத் தொடங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அல்லது இவர்கள் தமிழ்நாட்டில் வந்து கல்வி கற்கத் தேவையான இலவச விடுதி வசதிகளை செய்து தர வேண்டும்.

- தாயகம் திரும்பியோர் நலவாரியம் அமைக்க வேண்டும்.

- நீலகிரி மாவட்டத்தில் தாயகம் திரும்பியோர் வசிக்கின்ற மண்சரிவு ஏற்படக்கூடிய இடங்களில் இருந்து அவர்களை மீட்டு, மண் சரிவு ஏற்படாத பாதுகாப்பான இடங்களில் குடியேறத் தேவையான வீட்டுமனைகளை இலவசமாக வழங்க வேண்டும்.


- ஒன்றிய அரசு நிறுவனமான தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வளர்ச்சி வங்கியின் (REPCO Bank) நிதியுதவி அளிக்கப்பட்டு அரசு கூட்டுறவு ஆலைகளில் தாயகம் திரும்பியோருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த ஆலைகள் பெரும்பாலும் மூடப்பட்டுவிட்டது. குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டு 400 தாயகம் திரும்பியத் தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கின்றனர். பல ஆலைகளில், தாயகம் திரும்பிய தொழிலாளி ஓய்வு பெறும்போது அவரது குடும்பம் வறுமையில் வாடுகிறது. எனவே, கூட்டுறவு நூற்பாலை களில் பணிபுரிந்து வேலை இழந்த தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்கு இழப்பீடாக தலா ரூபாய் 10 இலட்சம் வழங்க வேண்டும்.

- தமிழ்நாடு அரசு அலுவலகங்களிலும் காவல்துறையிலும் தாயகம் திரும்பியோரை இலங்கை அகதிகளாகவே கருது கின்றனர். அகதிகள் இந்தியக் குடியுரிமை இல்லாத வர்கள். தாயகம் திரும்பியோர் இந்தியக் குடியுரிமை பெற் றவர்கள். தாயகம் திரும்பியோருக்கு இந்தியக் குடிமக்க ளுக்கான அனைத்து உரிமைகளும் உண்டு. ஒன்றிய அமைச்சராகவும் தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும், மாவட்ட ஆட்சியராகவும் தாயகம் திரும்பியோர் உயர் பொறுப்புகளை வகித்துள் ளனர். எனவே, தாயகம் திரும்பியோர் இந்தியர்களே. எனவே, எந்தவொரு சூழ்நிலையிலும் தாயகம் திரும் பியோரை இலங்கை அகதிகள் என்று கருதுவதையோ, குறிப்பிடுவதையோ தவிர்க்க வேண்டும் என்ற ஒரு அறிவிப்பை அல்லது அரசாணையை வெளியிட வேண்டும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், தாயகம் திரும்பிய மக்களின் இக்கோரிக்கைகள் வெறும் சலுகைகளுக்கான வேண்டுதல்கள் அல்ல; அவை பல தசாப்தங்களாக மறுக் கப்பட்டு வரும் நீதிக்கான அறக்குரலாகும். ஆக்கிரமிக்கப் பட்ட நிலங்களை மீட்டெடுத்தல், முடங்கிக் கிடக்கும் அடிப்படை ஆவணங்களை உரியவர்களிடம் ஒப்படைத்தல் மற்றும் சட்டபூர்வமான அடையாள அங்கீகாரத்தை உறுதி செய்தல் ஆகிய காத்திரமான நடவடிக்கைகள் மூலமே, இவர்களின் வரலாற்றுக் காயங்களை ஆற்ற முடியும். ஒரு நவீன ஜனநாயகச் சமூகத்தில், இந்நாட்டின் முறையான குடி மக்களாகத் தாயகம் திரும்பியோர், தங்களின் அடிப்படை உரிமைகளுக்காகத் தார்மீகப் போராட்டத்தைத் தொடர்வது ஆரோக்கியமானதல்ல. எனவே, ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் ஒருங்கிணைந்து, காலக்கெடுவுடன் கூடிய ஒரு 'சிறப்பு மறுவாழ்வுத் திட்டத்தை' நடைமுறைப்படுத்த வேண்டும். இதுவே, இவர்களின் வாழ்வாதாரத்திலும் சமூக அந்தஸ்திலும் நிலையான மாற்றத்தை ஏற்படுத்தி, தங்களின் சொந்தத் தேசத்தில் கண்ணியத்துடன் வாழ்வதை உறுதி செய்யும்.

Thamizhahagan@thaiveedu.com





இலங்கையில் பிரித்தானிய ஆட்சியின் முடிவாக்கமும் அரசியற் சட்டநீதிக்கான போராட்டமும்

சந்திரசேகரம் பரமலிங்கம்

tg.theeban@gmail.com

அறிமுகம்:

இரண்டாம் உலகப் போரின் முடிவோடு, 1945-ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் பிரகனப்படுத்தப்பட்டு, புதிய அனைத்துலக அரசியல் சட்ட ஒழுங்கிற்கான அத்தி வாரமிடப்பட்டது. இம்முயற்சியின் முதற்படியாக - இச்சாசனம் - குடியேற்றவாத ஆட்சிமுறை சட்டவிரோதமானது எனவும், குடியேற்றவாத ஆட்சி முறைக்குள் தவிக்கும் நாடுகளில் வாழும் மக்களனைவருக்கும், சுய நிர்ணய உரிமையினடிப் படையில் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமெனவும் பகிரங்கப் படுத்தியது. இந்நிலையில் இலங்கைத் தீவின் இறுதிக் குடி யேற்றவாத ஆட்சியாளரான பிரித்தானியர் மீது இலங்கைக் கும் விடுதலை வழங்க வேண்டிய சட்டக் கடப்பாடு உருவாக் கப்பட்டது. விடுதலையின் பின்னர் - இத்தீவின் மக்கள் மொழி, இன, மத, பிரதேச அடிப்படையில் சம உரிமை கொண்டவர் களாக, ஓர் இனத்தை இன்னொரு இனம் அடக்கி ஆள முற் படாத அரசியற் சட்ட ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்க வில்லை.

பிரித்தானியரது ஆட்சி முடிவுக்கு வந்தது. இந்திய உப கண்டமே கைநழுவும் போது, 'இச்சிறு தீவு எமக்கு எதற்கு' என்ற மனோபாவத்துடன் தமது அதிகாரத்தை முடிவாக் கினார்களா? என்று எண்ணத் தோன்றுகிறது. கட்டுநாயக்க விமான நிலையத்தையும், திருக்கோணமலைக் கடற்படைத் தளத்தையும் தமது பயன்பாட்டிற்காக சட்ட உடன்படிக்கை கள் மூலம் பாதுகாக்க முயற்சிகளை மேற்கொண்ட பிரித் தானிய அரசு, தாம் இழைத்த சட்டத் தவறுகளுக்கு எந்த வகையிலும் நிவாரணங்களை வழங்க முனைப்புக் கொள்ள வில்லை. பிரித்தானியர் நாட்டை விட்டுப் போகும் போதே சிறுபான்மை இனத்தவர்களுக்கு பரிகாரம் செய்யக் கடமைப் பட்டிருந்தனர். ஆனாலும் அவர்கள் அதனைச் செய்யவில்லை. தாம் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறினர். அவ் விதம் அவர்கள் அன்று பொறுப்போடு செயற்பட்டிருந்தால் தமிழர் தாயகத்தின் தலைவிதி வேறு விதமாக அமைந்திருக் கும். அரசு அட்டூழியங்களோ, போர்க் குற்றங்களோ இடம் பெற்றிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது. புதைகுழிகள் பரந்து காணப்பட வேண்டிய நிலையும் இருந்திருக்காது.

1948–ஆம் ஆண்டின் அரசியற் சட்டத்தின் குறைபாடுகள்:

பிரித்தானியாவின் பொதுமக்கள் சபையில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கான மசோதா 1946-ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட பின்னரான விவாதத்தில் கலந்து கொண்ட எதிர்க்கட்சிப் நாடாளுமன்ற உறுப்பினர் சேர் டேவிட் கமன்ஸ் அன்றைய தொழிற்கட்சி அரசாங்கத்தைப் பின்வருமாறு விமர் சித்தார்.

'இலங்கை ஓர் அரசியல் அலகு கொண்ட நாடல்ல. அங்கு, இருமொழி பேசும் பிராந்தியங்கள் உள்ளன. தமிழர்கள் சிங்கள மொழி பேசும் சமூகத்தினரிடமிருந்து, இன, மத, சமூகப் பின்னணி போன்ற அடையாளங்களினால் வேறுபடுகிறார்கள். அத்தோடு அவர்கள் மிக அபரிதமான திறமைசாலிகளும்

வல்லமை மிகுந்தவர்களுமாவர். ஒரு நாட்டில் இன அடிப் படையிலான சிறுபான்மையினர் இருப்பார்களானால் அவர் கள் நிரந்தர அரசியற் சிறுபான்மையினராகக்கூடிய அபாயம் காணப்படும். இவர்கள் இவ்வாறு நிரந்தர சிறுபான்மையினராக் கப்படுவார்களானால் இலங்கை சனநாயக அடிப்படையில் பரிணாம வளர்ச்சியடைவது தோல்வியடையும். இந்நிலை சிங்கள மக்கள் மீது தமிழர்களுக்கு நியாயமான, அவசிய மேற்படின் நியாயமானதற்கும் மேலான உரிமைகளுடன் நடத்தப்பட வேண்டிய பொறுப்பினைச் சுமத்துகிறது. இப்பொறுப்பு அரசியல் அதிகாரத்தில் மட்டுமல்ல நிர்வாகம் சார்ந்த அதிகாரங்களினால் ஆனதாக வும் இருக்கவேண்டும். இதன்மூலம், தமிழர்கள் தம்மை நிரந்தரச் சிறுபான் மையினரெனக் கருதாத நிலை உருவாக் கப்படும்' எனக் குறிப்பிட்டார். இலங்கை யின் அரசியல் எதிர்வுகூறலுக்கு இவ்வுரை தக்க சான்றாகின்றது.

"ஆங்கிலேயரது ஆட்சி முடிவாக்கத்தின்போது - தமிழர்களது மரபு வழித் தாயகம் - உரிய சட்டப் பாதுகாப்பினைப் பெறாது - சிங்களவர்களது ஆதிக்கத்திற்குரியதானதும், எதிர்காலத்தில் உள்ளூர் குடியேற்றவாத ஆட்சியின் இலக்கணத்திற்கு, இலக்கியமாக இலங்கை மாறுவதற்கு வழிவகுத்துள்ளது."

மேற்கண்டவாறான எச்சரிக்கை இலங்கையைக் கையளிக் கும் சட்ட ஆக்கச் செயற்பாட்டின்போது விடுக்கப்பட்டாலும் 'சுதந்திர இலங்கையின் அரசியற் சட்டத்தை' வரைந்தோர் இதனை செவிடன் காதில் ஊதிய சங்குபோல எடுத்துக் கொண்டார்கள். 1948-ஆம் ஆண்டின் அரசியல் சட்டத்தை வரைந்த அல்லது வழிநடத்திய சோல்பரிப்பிரபு - இலங்கை யின் குடியேற்ற நாட்டாட்சிக் காலமான (1498 - 1948) 450 வருடங்களில் இடம்பெற்ற அரசியல் சமூக மாற்றங்களை அறிந்திருந்தாலன்றி - பிரித்தானிய காலத்து (1794 - 1948) சட்டமாற்றங்களும், ஆட்புல இணைப்புகளும் தமிழர்களுக்கு அரசியல், சமூக ரீதியாக தீங்கிழைத்ததா என்ற சிந்தனை களை உடையவராக இருந்தாரா என்ற நியாயமான சந்தேகங் கள் எழுகின்றன. கடந்த 78 வருட கால இலங்கையின் உள்ளூர் அரசியல் பொருளாதார சட்ட நிகழ்வுகளை அவதானிக்கும் பொழுது 1948-இல் பிரித்தானியா வழங்கிய விடுதலை சிங்களவர்களுக்கானது மட்டுமே என்பது உறுதியாகின்றது.

மரபுவழிச் சர்வதேசச் சட்டம்:

ஐரோப்பாவில் 30 ஆண்டு யுத்தத்தை முடிவாக்கிய வெஸ்ட் பாலிய உடன்படிக்கைக் காலத்திலிருந்து அரசுகளது தேசிய இறைமையும், ஆட்புல ஒருமைப்பாடும் ஏனைய அரசுகளால் ஏற்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற சட்ட ஏற்பாடு ஐரோப்பாவில் வலுவுடமையிலிருந்தாலும் ஆசிய, ஆபிரிக் கக் கண்டங்களில் குடியேற்ற நாட்டு ஆட்சியாளர்கள் இதனை நிராகரித்தனர். இதனால் ஏனைய பல சுதேச அரசுகளைப் போல இலங்கைத்தீவின் பூர்வீக அரசுகளான கோட்டை யாழ்ப்பாண அரசுகள் போத்துக்கேயராலும், வன்னி நாடு (1804), கண்டி (1819) அரசுகள் ஆங்கிலேயராலும் கைப்பற் றப்பட்டு குடியேற்றவாதத் தவறுகள் இழைக்கப்பட்டது. இங்கு வேறுபட்ட சமூக, மத, விழுமியங்களைக் கொண்ட மக்களை மத்தியமயப்படுத்திய சுதேச அரசுகளது ஆட்சி ஒற்றையாட் சித் தன்மை கொண்ட ஆங்கிலேயரது நிர்வாகத்தின் கீழ் 1831-இல் நிறுவப்பட்டது.

ஆங்கிலேயரது ஆட்சி முடிவாக்கத்தின்போது - தமிழர்களது மரபு வழித் தாயகம் - உரிய சட்டப் பாதுகாப்பினைப் பெறாது - சிங்களவர்களது ஆதிக்கத்திற்குரியதானதும், எதிர்காலத் தில் உள்ளூர் குடியேற்றவாத ஆட்சியின் இலக்கணத்திற்கு, இலக்கியமாக இலங்கை மாறுவதற்கு வழிவகுத்துள்ளது. மரபுவழிச் சர்வதேசச் சட்டம் அறிஞர்களின் அபிப்பிராயப்படி, அவர்களது ஆதிக்கத்திற்குட்பட்ட நாடுகளில் அரசுகளை யும், அவற்றின் எல்லைகளையும் உருவாக்கும்போது, அவ் வெல்லைக்குள் வாழும் தேசிய இனங்களை சமத்துவமான தாகவும், ஒன்றிற்கு மற்றொன்று கீழ்ப்படாததாகவும், சம அந்தஸ்துடன் நிர்வாக ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டுமெனத் தெரிவிக்கிறார்கள். இலங்கைத் தீவில், பிரித் தானியரது ஆட்சியில் முற்றுமுழுவதுமாக இடம்பெற்றது மேற் கண்டவாறான சட்டத் தவறேயாகும். இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையினது ஏற்பாடுகளும் வழிமுறைகளும் அரசு களை மையப்படுத்தியதாகவே காணப்படுகையில் குடியேற் றத் தவறுகளுக்கு இச்சபையின் செயற்பாடுகள் மூலம் நிவாரணத் தீர்விற்கான வழிமுறைகள் கானல் நீராகவே காணப்படுகின்றன. இதனால்தான் உள்ளூர் அடக்குமுறை களையும், ஆதிக்கங்களையும் தாங்க முடியாத தேசிய இனங்கள் இறுதி ஆயுதமாக யுத்தத்தின் மூலம் விசாரணை (Trial of Battle) என்ற மரபுவழிச் சட்டக் கருப்பொருளினுள் புகலிடம் தேடுகிறார்கள்.

மரபு வழிச் சட்டத்தில் தேசிய இனங்களுக்கும் சிறுபான்மை யினருக்கும் சட்டரீதியான நிவாரண வழிமுறைகள் இல்லா திருப்பதனால், ஹியூஜ் குறோட்டியஸ் (Huge Grotius) என்ற மரபுவழி சர்வதேச சட்ட அறிஞர் - யுத்தத்தின் மூலம் விசா ரணையினை உருவாக்கும் மாற்றுவழிச் சட்ட உரிமையாக உருவாக்கப்பட வேண்டுமென அபிப்பிராயப்படுகிறார். ஆயி னும், இன்றைய ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் சமா தான, சட்டமுறைமைகளினூடாக, முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற சட்ட தத்துவத்தை வலியுறுத்து கின்றமை அவதானிக்கப்பட வேண்டும். இதனால் வங்காள தேச மக்கள் விடுதலை காண இலங்கையின் தமிழ் தேசிய இனம் மாற்று வழிகளைத் தேட வேண்டிய நிலையிலுள்ளது.

சர்வதேச நீதிமன்றத்தில் குடியேற்ற நாட்டாட்சியினது முடி வாக்கம் தொடர்பான சட்டப் பிரச்சினைகள் சில எடுத்துக் கொள்ளப்பட்டாலும், இலங்கைத் தீவில் தமிழர்களது பூர்வீக அரசுகளை சிங்கள அரசுகளது ஆட்புலங்களோடு இணைத்து - சிங்களவர்கள் முறையற்ற முறையில் பலனடைய - தமிழர் கள் அடக்குமுறைக்கும் அட்டூழியங்களிற்கும் கடந்த 78 ஆண்டுகளாக ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இவையனைத் துக்கும் அடிப்படைக் காரணிகளாக ஆங்கிலேயரால் 1948-ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தவறான குடியேற்றவாத ஆட்சி யின் முடிவாக்கமும் ஒற்றையாட்சி முறைமையும் கொள்ளப் படவேண்டும். கொசோவாப் பிராந்தியத்தின் அரசியற் சட்ட ரீதியான தன்னாட்சி அந்தஸ்து, யூகோசிலாவிய சமஷ்டிக

குடியரசினால் ரத்துச் செய்யப்பட்டதனையடுத்து 1998-ஆம் ஆண்டு உருவான உள்ளூர் கிளர்ச்சி - சர்வதேசப் பரிமாணத் தையடைந்து, வட அத்திலாந்திக் உடன்படிக்கை அமைப் பின் (NATO) இராணுவத் தலையீடும், அதனையடுத்து பாது காப்புச் சபையினது 1244 (1999) தீர்மானமும், கொசோவா மக்களுக்கு நிவாரணத்தை வழங்கியமை இங்கு கவனிக் கப்பட வேண்டும். முற்றுமுழுவதாக கொசோவாவின் உள்ளூர் இன மோதலின் தன்மைகளைக் கொண்டிருந்த தமிழர்களது அரசியற் சட்ட நீதிக்கான போராட்டம், வீட்டோ நாடுகளது இனவாதம், புவிசார் அரசியற் காரணங்களால் ஐக்கிய நாடு கள் பொதுச் சபையினதோ அன்றிப் பாதுகாப்புச் சபை யினதோ கவனத்திற்குற்படவில்லை.

ஐக்கிய நாடுகள் சபை முறைமையின் கீழ் தேசிய இனத்தின் இறைமைக் கோரிக்கையோ அன்றிக் குடியேற்றவாதத் தவறுகளிற்கோ, சர்வதேச நீதித்துறையினை அணுகுவதற் கான சட்ட உரிமையற்ற மக்களாக (Non-state Peoples) தமிழ் மக்கள் இருப்பதனால் நிராகரிக்கப்படுகிறது.

“ஐக்கிய நாடுகள் சபை முறைமையின் கீழ் தேசிய இனத்தின் இறைமைக் கோரிக்கையோ அன்றிக் குடியேற்றவாதத் தவறுகளிற்கோ, சர்வதேச நீதித்துறையினை அணுகுவதற்கான சட்ட உரிமையற்ற மக்களாக தமிழ் மக்கள் இருப்பதனால் நிராகரிக்கப்படுகிறது.”

தேசிய அரசியற் சட்டத்தின் சர்வதேசச் சட்டப் பரிமாணங்கள்:

அரசுகளது சங்கம், ஐக்கிய நாடுகள் சபை என்ற இரு சர்வ தேச அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அவற்றினால் முன் னெடுக்கப்பட்ட பல மனித உரிமை உடன்படிக்கைகள், சிறுபான்மையுரிமைப் பாதுகாப்புச் சாசனங்களை இன அழிப்புக்கான தடையும், தண்டனையும் (1951) போன்ற சட்ட ஏற்பாடுகள் அரசுகளது தேசிய அரசியற் சட்டங்களில் நேர் கணிய வலுவுடமையை ஏற்படுத்துகின்றன. சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் (1948) ‘மனிதன் இறுதி ஆயுதமாகக் கொடுங்கோன்மைக்கும் அடக்குமுறைக்கும் எதிராகக் கிளர்ச்சி செய்ய நிர்ப்பந்திக்கப்படாமலிருக்க வேண்டுமானால் சட்ட ஆட்சி மூலம் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது அத்தியாவசியமானது’ என்று குறிப்பிடுகின்றது.

இன்று - உலக அரசுகள் பலவும், மனித உரிமைகள், சட்ட ஆட்சி சனநாயக ஆட்சிமுறைமைகளைப் பாதுகாப்பதற்கும் வளர்த்தெடுப்பதற்குமாக பல சர்வதேச, பிராந்திய, அமைப்பு களில் அங்கத்துவம் பெற்றுள்ளன.


இவற்றிற்கு உதாரணமாக, பிரித்தானிய பொதுநலவாய நாடு கள், கூட்டுச் சேரா அணி, தெற்காசியப் பிராந்திய ஒத்து ழைப்பு அமைப்பு ஐரோப்பிய ஒன்றியம், ஆபிரிக்க ஒன்றியம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் தீர்மானங்களும் பிரகடனங்களும், அங்கத்து அரசுகள் மீது சட்டக் கடப் பாடுகளை உருவாக்கியுள்ளன. இதனால் அங்கத்துவ அரசு கள் அவற்றின் உள்நாட்டு ஆட்சிமுறையின் ஏற்கப்பட்ட சட்டப் பொறுப்புகளை அங்கீகரித்து அமலாக்கும் கடப் பாட்டை உடையவை ஆகின்றன.

சட்ட ஆட்சி அரசியற் சட்ட நீதி, சர்வதேச மனித உரிமைகள், சனநாயக ஆட்சியின் சட்டப்பரிமாணங்கள் போன்ற சட்டக் கோட்பாடுகள் தோன்றி - சட்டம் வளர்ச்சியடைந்து, சட்டத் தத்துவங்களாகப் பரிணமித்துள்ள இன்றை சர்வதேச ஒழுங்கு முறையில் அரசுகளது அரசியற் சட்ட நீதி என்ற கோட்பாடு முதன்மையும், முக்கியத்துவமும் பெறுகின்றது. சர்வதேச சங் கத்தினதும், அதன் முடிவோடு உருவான ஐக்கிய நாடுகள் சபையினதும் நகர்வுகளால் உருவாக்கப்பட்ட சர்வதேச மனித உரிமைகள், சர்வதேச சிறுபான்மையோர் உரிமைகள், அரசி யல், சமூக, கலாசார, பொருளாதார உரிமைகள் சனநாயக ஆட்சியின் சட்டப் பரிமாணங்கள் ஆகியன உள்ளடக்கலான வளர்ச்சி - தேசிய அரசியற் சட்டங்களை சர்வதேச சட்டத்தின் சட்ட தத்துவங்களிற்குட்பட்டதாக மாற்றிய நிலைமைகளை அவதானிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுக்கப் படும் மேற்கூறப்பட்ட சட்ட விவகாரங்கள் உறுப்புரிமை நாடுகளது பங்கு பற்றுதலினூ டாகவே - உருவாக்கப்பட்டு, அவற்றின் ஒப்பு தலின் பின்னரே நடைமுறைக்கு வருகின்றன. இந்நிலையில் - தேசிய அரசியற் சட்டங்களில் உள்ளடக்கப்படும் பெருமளவிலான விடயங் களும் விவகாரங்களும், சர்வதேச சட்டத் திற்கு அமைந்தனவாகவும், ஏற்புடையதாகவும் அமைய வேண்டும் என்பது துலாம்பரம்.

முன்னாள் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் சட்டப் பேராசிரி யரும், இன்றைய சர்வதேச நீதிமன்ற நீதிபதியுமான ஜேம்ஸ் ரிச்சர்ட் குரோஃபோர்ட் (James Richard Crawford) அவர்கள், ஒரு நாட் டின் தேசிய சட்டங் கள் எத்தகைய சன நாயகப் பண்புகளு டன் ஆக்கப்பட் டாலும், அவை சர்வதேச சட்டங் களது வழிகாட்டல் களுக்கு அமைவாக இல்லாதிருக்கு மானால், அவை சட்ட வலுவுடமையானவை யாக அங்கீகரிக்கப்பட முடி யாதவை என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலை காரணமாக - ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப் பட்டதன் பின்னரான காலப் பகுதியில் - மனித உரிமைகள் சிறுபான்மையோர் உரிமைகள், தொடர்பில் உருவாக்கப் பட்ட உடன்படிக்கைகளும்,



James Richard Crawford



பிரகடனங்களும், இவ்வுரிமைகள் மீறப்படுகையில் நிவாரணம் வழங்குவதற்கான இறுதித் தீர்ப்பாயமாக சர்வதேச நீதிக் குழுக்களை உருவாக்கியுள்ளமையை அவதானிக்க முடியும்.

குறைவிருத்தி நாடுகளில் முதலீடு செய்யும் சர்வதேசக் கம்பெனிகள், அவற்றின் பிரதம நீதியரசர், சரத் என். சில்வா அவர்கள் 'ஐக்கிய நாடுகள் 1997-ஆம் ஆண்டின் மனித உரிமைகள் விசாரணை ஆணைக்குழு தொடர்பான ஆவணம் இலங்கையின் சட்டமுறைமையில் அங்கமாகும் என்று பிரகடனப்படுத்தியிருந்தாலும், இலங்கையின் அரசியற் சட்டத்தின் பிரிவு 33 (க)-வின்படி மேற்படி பிரகடனம் அரசியற் சட்டத்திற்கு முரணானது என்று காரணம் காட்டி, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் (Human Rights Committee) தீர்ப்பு இலங்கை நீதித்துறையைக் கட்டுப்படுத்த முடியாது' என்று தீர்ப்பு வழங்கியமை, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச விசாரணைக் குழுத் தீர்ப்புகளை இலங்கையில் அமுலாக்கப்பட முடியாத அவல நிலைமைகளை அவளிப்படுத்துகின்றது.

இந்த சர்வதேசச் சட்ட அமுலாக்கம் அடைந்துள்ள பின்னடைவை அவதானித்த சர்வதேச மனித உரிமை சட்ட நிபுணர் எச்.ஜே. ஸ்டெய்னர் (H.J. Steiner) அவர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கையில் 'இலங்கை உயர் நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு - அடிப்படை மரபுவழி சர்வதேசச் சட்டத் தத்துவத்தை நிராகரிக்கிறது. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட - சர்வதேச ஒப்பந்தம் அவ்வரசினால் நல்லெண்ணத்துடன் அமுலாக்கப்பட வேண்டும் என்பதாகும். அத்துடன் வியன்னா பேராயத்தின் சரத்திற்கும் முரணானதாக இத்தீர்ப்பு அமைவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இலங்கை உயர்நீதிமன்றம், மேற்கண்டவாறான தீர்ப்பை வழங்கியிருந்தாலும், இலங்கை அரசு 1997-ஆம் ஆண்டின் மனித உரிமைகள் ஆவணத்தினை அங்கீகரித்த நாடுகளில் ஒன்றாக இருப்பதனால், சர்வதேசக் கடப்பாட்டை நிறைவேற்றும் பொறுப்புடையது. இலங்கையின் அரசியற் சட்டத்தின் பிரிவு 27 (15) இலங்கை அரசு சர்வதேசச் சட்டத்திற்கு உரிய மதிப்பளித்து அங்கீகரிக்க வேண்டுமென சட்டக் கடப்பாடு விதிக்கப்பட்டிருந்தாலும், இலங்கை உயர் நீதிமன்றத்தின் மேற்காணப்பட்ட தீர்ப்பும் அதன் காரணங்களும் ஏமாற்றமளிப்பதாகவிருக்கின்றது.' எனக் குறிப்பிடுகிறார்.

இதனால், ஐக்கிய நாடுகள் முறைமை, பலதரப்பட்ட கண்டனங்களிற்கு உட்படுகின்ற நிலைமை காணப்படுகிறது.

ஆகவே, மேற்கண்டவாறான சர்வதேசச் சூழலில் இலங்கையின் தமிழ் பேசும் மக்களினது அரசியற் சட்ட நீதிக் கோரிக்கையின் பின்னணிகள் எவை, இலங்கைப் நாடாளுமன்றத்தினூடாக இதனை அடைந்து கொள்ள முடியுமா என்ற வினாக்கள் எழுகின்றன.

தமிழ் பேசும் மக்களது அரசியற் சட்ட நீதிக்கான கோரிக்கையின் பின்னணிகள்:

குடியேற்றவாத ஆட்சியாளர்கள் தங்களது நலனுக்காக உருவாக்கிய ஆட்சிமுறைமைகள் - தமிழர்களையும், தமிழ் பேசும் மக்களையும் ஆட்சி அதிகாரமற்ற மக்களாகவும், நிரந்தரச் சிறுபான்மையினராகவும் மாற்றியதுடன், அவர்கள் ஒரு தேசிய இனமாக ஆட்புலத் தன்னாட்சி கொண்ட மக்களாக வாழ முடியாமல் ஆக்கின. இவ்விடயத்தைக் குடியேற்றவாதச் சட்டத் தவறு என்று வரையறுக்க முடியும்.

முன்னைய பந்திகளில் - யாழ்ப்பாண அரசும், வன்னியரசும், இலங்கைத் தீவின் ஏனைய சுதேச அரசுகளைப் போலவே கைப்பற்றப்பட்டு, மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சிமுறைமையின் கீழ் கொண்டுவரப்பட்டு இன்று காணப்படும் ஒற்றையாட்சி முறைமைக்கு வழிவகுத்தது. இவ்விடயம் தொடர்பில் அபிப்பிராயம் தெரிவித்த பேராதனைப் பல்கலைக்கழகத்து பேராசிரியர் K.M.De. Silva பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்தார்.

'கோல்புறூக் கமறன் ஆணைக்குழு இலங்கையின் சமூக-கலாசார-மத விழுமியங்களைக் கவனத்திலெடுத்து - அவற்றின் இயற்கை வேறுபாடுகளை அங்கீகரித்து மத்தியமயப்படுத்தப்படாத அரசமுறைமையினை உருவாக்கியிருந்தால் இந்நாட்டின் வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கும்'

பிரித்தானியரது ஆட்சி முடிவாக்கத்தின் பின்னரான 1968–இல் இருந்து உருவாக்கப்பட்ட அரசியற் சட்டங்களும் நாடாளுமன்றம் உருவாக்கிய ஏனைய சட்டங்களும்:

அரசியற் சட்டங்கள் மூலமான ஏற்பாடுகள் யாவும், தமிழர் தாயகத்திற்கான தன்னாட்சியையும், இறைமை அதிகாரங்கள் பகிரப்படுவதனையும் நிராகரித்துள்ளன. 1948-ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியற் சட்டம் - சட்டத்துறையின் சட்ட ஆக்க அதிகாரத்தின் மீது, சரத்து 29(2) ஊடாக, வரையறைகளை விதித்து - மத, மொழிச் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு வழங்கியிருந்தாலும், இச்சட்டம் நடைமுறையிலிருந்த 1972 வரையான 24 வருட வரலாற்றை அவதானிக்கையில் - இவ்வரசியற் சட்டம் - அதன் இலக்கில் தோல்வி கண்டதென்பது வெளிப்படை.

“கோல்புறூக் கமறன் ஆணைக்குழு இலங்கையின் சமூக-கலாசார-மத விழுமியங்களைக் கவனத்திலெடுத்து - அவற்றின் இயற்கை வேறுபாடுகளை அங்கீகரித்து மத்தியமயப் படுத்தப்படாத அரசமுறைமையினை உருவாக்கியிருந்தால் இந்நாட்டின் வரலாறு வேறு விதமாக அமைந்திருக்கும்.”

1970-ஆம் ஆண்டுத் தேர்வில் முடிவுகளை அவதானிக்கை யில் இலங்கையில் இரு மொழிவழிப் பிராந்தியங்கள் விளங் கியமை புலப்பாட்டுக்குரியது - இந்நிலையில் தென்மேற்குப் பிராந்தியமான சிங்கள மொழி பேசும் பிராந்தியம், இலங்கை யின் அரசியற் சட்டம் பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமெனக் கோரியது,

- பூரண இறைமை கொண்ட ஒற்றையாட்சி அரசியற் சட்டம்
- சிங்கள மொழி அரச மொழி என அரசியற் சட்ட அந்தஸ்து, பௌத்த மதத்திற்கு முதனுரிமை அந்தஸ்து
- இலங்கை ஒரு பூரண இறைமை கொண்ட, குடியரசாக வேண்டும்

மேற்கண்டவாறான விடயங்களை உள்ளடக்கிய, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூ னிஸ்ட் கட்சி ஆகியவற்றைக் கொண்ட ஐக்கிய முன்னணிக்கு, இலங்கை அரசியலில் முன்னர் எப்போதும் இல்லாத 2/3 பங்கு பெரும்பான்மை ஆசனங்கள் கிடைக்கப் பெற்றன.

அதே வேளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெருமள வான ஆசனங்களைப் பெற்றுக் கொண்ட சமஷ்டிக் கட்சி வடக்குக் கிழக்கு மாகாணங்களிற்கு சமஷ்டி முறைமை யிலான தன்னாட்சி அதிகாரத்தைக் கோரி நின்றது.

ஆயினும், 1972-ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்ட அரசி யற் சட்ட வரைவு நிலையின்போது, இக்கட்சி இரு தசாப்தங் களாக உருவாக்கி - மக்கள் அங்கீகாரத்தைப் பெற்ற சமஷ் டிக் கோரிக்கையை முன்மொழிந்தது. இம்முன்மொழிவில் இலங்கை ஐந்து சமஷ்டி அலகுகளாகப் பிரிக்கப்பட்டு, இவற் றில் மூன்று - சிங்கள மொழிப் பிராந்தியங்களிலும் வட கிழக்குப் பிராந்தியத்தில் ஒன்று தமிழர்களிற்கும், தென் கிழக்குப் பிராந்தியத்தில் ஒன்று முஸ்லிம் மக்களிற்கும் உரு வாக்கப்பட வேண்டுமெனவும் மொழி, கலாசார, பொருளா தார விடயங்கள், மலையக தமிழ் மக்களிற்கு பிராஜ உரிமை, அவர்கள் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் குடியேறுவதற் கான உரிமையும் வழங்கப்பட வேண்டுமெனவும், பிரேரணை கள் முன்மொழியப்பட்டன.

இவை யாவும், அரசியற் சட்ட நிர்ணய சபையினால் நிராகரிக் கப்பட்ட வேளையில் இக்கட்சியின் தலைவர் தந்தை செல்வ நாயகம் அவர்கள் தன்னுரையில் பின்வருமாறு தெரிவித்தார். ‘எமது கட்சியின் சார்பில் மொழியுரிமை தொடர்பான சட்டச் சரத்துக்களை முன்மொழிந்தோம். இந்த முக்கியமான கால கட்டத்தில் எமது மொழியுரிமை அரசியற் சட்டத்தில் வரை யறுக்கப்பட வேண்டுமென்பதன் நியாயத்தன்மையை எவரும் மறுக்க முடியாது. நாம் அரசியற் கூட்டத்தின் தன்மை, அடிப் படை உரிமைகள், பிரஜா உரிமை என்ற பல விடயங்கள் தொடர்பான பல திருத்தங்களைச் சமர்ப்பித்தோம். இவை யாவும் பெரும்பான்மை இனப் பிரதிநிதிகளான உங்களால் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும், எமது உரிமைகள் எவற்றிற் கும் உத்தரவாதம் எதுவுமற்ற நிலையிலும், இச்சபையினது நடவடிக்கைகளில் தொடர்ந்து பங்கு கொள்ளுதல் பயனற் றது. இந்த முடிவு எடுப்பதனால் உங்கள் எவரையும் நோகடிக் கவும் விரும்பவில்லை. எமது மக்களது கௌரவத்தைப் பாதுகாக்கவே விரும்புகின்றோம்.’

இதன் பின்னர் சமஷ்டிக் கட்சிப் பிரதிநிதிகள் இச்சபையின் நடவடிக்கையில் பங்கேற்காமல் வெளிநடப்புச் செய்தமை யால், 1972- ஆம் ஆண்டின் அரசியற் சட்டம், தமிழ்ப் பிரதி





நிதிகளது பங்கு பற்றுதலின்றி - வரையப்பட்டு - பிரகடனம் செய்யப்பட்டது. இவ்வரசியற் சட்டத்திற்குக் கொண்டு வரப் பட்ட இரண்டாவது திருத்தம், பெப்பிரவரி 4-ஆம் திகதி, 1978-ஆம் ஆண்டு நிர்வாக அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்தி செப்ரெம்பர் மாதம் 1978-ஆம் ஆண்டு அன்றைய ஆளும் தரப்பான ஐக்கிய தேசியக் கட்சியினதும், அதன் தலைவர் ஜெ.ஆர். ஜெயவர்த்தனா வினதும் அரசியற் சட்டத்தைப் பிரகடனமாகியது. தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளது பங்குபெற்றுதலின்றியே இவ்வரசியற் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. முதலாவது குடியரசு அரசியற் சட்டத்தைப் போலவே, இரண்டாவது குடியரசு அரசியற் சட்டமும், ஒற்றையாட்சி அரச கட்டமைப்பையும், மத்தியமய மாக்கப்பட்ட சட்ட, நீதித்துறைகளையும் உருவாக்கியது.

'இலங்கைப் நாடாளுமன்றம் தீர்த்து வைத்த பிரச்சினைகளா அல்லது உருவாக்கி வைத்த பிரச்சனைகளா அதிகம்'

மேற்கு நாட்டுப் பல்கலைக்கழகங்களில் சட்ட விவகாரங் களில் ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்களிடம் மேற் கண்டவாறு பேராசிரியர்கள் வினவுவது சகஜமான ஒன்றாகி விட்டது.

இலங்கையின் முப்பதாண்டு யுத்த காலகட்டத்தில் சர்வதேச மனித உரிமைகள் பிரசுரித்த உள்ளூர் இனமோதலுக்கான, பின்னணிகள் பற்றிய அறிக்கைகள், மேற்குலக நாடுகளில் இலங்கை நாடாளுமன்றம் ஆக்கிய சட்டங்கள் பற்றிய அறி வையும், பின்னணிக் காரணங்களையும் நன்கு தெளிவுபடுத் தியிருந்தாலும் இவற்றை சுருக்கமாக வகைப்படுத்துவதனை பின்வருவனற்றை குறிப்பிடலாம்.

- இலங்கையின் பிரஜா உரிமைச் சட்டம் - 1948
- இலங்கையின் தேர்தல் சட்டம்
- சிங்கள மொழி அரசகருமச் சட்டம் 33/1956
- இலங்கையின் இராணுவ, கடற்படைத் தளங்கள் வட கிழக்கில் உருவாகுவது தொடர்பான சட்டம்
- காணி அபிவிருத்தி தொடர்பான சட்டங்கள்
- மகாவலி வலயச் சட்டம்
- தொல்பொருள் திணைக்களச் சட்டம்
- வன இலாகாச் சட்டம்

மேற்காணப்பட்ட சட்டங்கள் உள்ளடங்கலான சட்டங்கள் இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களை, உள்ளூர் குடியேற்றவாத ஆட்சியின் கீழ் வைத்திருப்பதற்கான வழிமுறை களை அமைத்துக் கொடுத்தன. அத்தோடு வடகிழக்கு, மலையகப் பகுதிகளிற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி போன்ற வையும், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கேற்ற அளவில் இருப்பதில்லை. இவற்றின் ஒன்றுபட்ட விளைவு காரணமாக வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உள்ளூர் குடி யேற்றவாத ஆட்சித் தன்மைகளை வெளிப்படுத்துகின்றன.

தமிழ்த் தேசிய இனத்தின் உரித்தினையும் உரிமைகளையும் தீர்மானிப்பது யார் ?

தமிழ்த் தேசிய இனம் அடைவதற்கு உரித்துடைய அரசியற் சட்ட நீதியில் இலங்கைத் தீவின் இன்றைய அரசியற் சட்ட கட்டமைப்பினுள் அடைவது சாத்தியமா ?

இன்றைய காலகட்டத்தில் குறிப்பாக இலங்கையின் 2024-ஆம் ஆண்டில் சனாதிபதித் தேர்தலும், நாடாளுமன்றத் தேர் தலும், வெளிக்காட்டியிருக்கும் தேர்தல் முடிவுகளின் அடிப் படையில் மேற்கண்டவாறான இரு வினாக்களும் முதன்மை பெறுகின்றன.

தமிழ்த் தேசிய இனத்தின் அரசியற் சட்டரீதியான உரித்துக் களையும், உரிமைகளையும் அவதானிக்கையில், ஏனைய நாடுகளில் வாழும் தேசிய இனங்களைப் போலவே, இலங் கையின் தமிழ்த்தேசிய இனமும், தமிழ் பேசும் மக்களும், ஐக்கிய நாடுகள் சபையினது சாசனத்தின் அடிப்படையிலும், இச்சபையினால் உருவாக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர் பான உடன்படிக்கைகள் பிரகடனங்கள் அடிப்படையிலும், சிறுபான்மை இனங்களிற்கான ஆட்சி அதிகாரங்கள் பற்றிய

சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையிலும் - உரித்தினையும், உரிமைகளையும் அனுபவிப்பதற்கான சட்ட வலுவுடமையைப் பெறுகிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையினை உருவாக்கிய 1946-ஆம் ஆண்டின் சாசனம், சிறுபான்மையினர் பற்றி எங்கும் குறிப்பிடாது, பொதுவில் மனித உரிமைகள் என்று மட்டுமே குறிப்பிடுகிறது. ஐ.நா. சபையின் முன்னோடியான சர்வதேச சங்கத்தின் சாசனத்தில் - மொழி, இன, மதச் சிறு பான்மையினருக்கான பாதுகாப்புகளை உருவாக்க வேண்டு மென்ற கடப்பாடு விதிக்கப்பட்டிருந்தது. ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் இதனது செயற்பாடுகள் பெருமளவிற்கு தேசிய இனங்களதும், இன, மதச் சிறுபான்மை யினரது உரிமைகளுக்கு உத்தரவாதம், அவற்றை அமுலாக் கும் அரசுகளது சட்டக் கடப்பாடு, உரிமை மீறல்கள் - இடம் பெறும் வேளைகளில் - தேசிய நீதிமன்ற நியாயாதிகத் தினைக் கடந்து, பிராந்திய, சர்வதேச நீதிக்குழுக்கள், விசா ரணை மன்றங்கள் மூலமாக நிவாரண வழிமுறைகள் உரு வாக்கப்பட்டன. இவ்வாறான சட்ட வளர்ச்சி - ஒரு தனிநபர் அவரது அரசிற்கெதிராக - சர்வதேச சட்டத்தின் கீழ் - நிவா ரணம் கோரும், உரிமையினை வழங்கியது.

ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டதன் பின்னர் இச் சபையின் முன்னெடுப்பினால் மனித உரிமை ஆவணங்கள் உருவாக்கப்பட்டு, அங்கத்துவ நாடுகளால் அங்கீகரிக்கப் பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் இலங்கையில் வடக் குக் கிழக்கு மாகாணங்களில் வரலாற்று ரீதியாக வாழ்ந்து அவர்களது அரசியல் கலாசார நிறுவனங்களை உருவாக்கி - தமது இறைமையை குடியேற்ற ஆட்சியாளர்களிற்கு - இழந்த தமிழ் தேசிய இனம் அவற்றை மீட்டெடுப்பதற்கு உரித் துடையது. இலங்கை - இந்திய உடன்படிக்கை (1982) - இவற்றை அங்கீகரிக்கும் அரசுகளது நலன்களை மைய மாகக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபை - ஆட்புல ஒருமைப் பாடு, உள்ளூர் விவகாரம் என்ற சட்டக் கருத்துகளைப் பயன்படுத்தி தேசிய இனங்களது இறைமையினை மீட்க முன்னெடுக்கும் அரசியற் செயற்பாடுகளை நிராகரிக்கின்றன. ஆயினும் குபெக் இறைமைக் கோரிக்கை தொடர்பான வழக் கில் கனடிய உச்சநீதிமன்றத்திடம் வியாக்கியானம் கோரப் பட்ட மூன்று வினாக்களின், இரண்டாவது வினாவான சுய நிர்ணய உரிமை பற்றியதாகவும், ஒரு தேசிய இனம், ஒரு தலைப்பட்சமாகப் பிரிந்து செல்லும் உரிமை பற்றியதாகவும் இருந்தது. இவ்வினாவிற்கான நீதிமன்றத்தின் வியாக்கியா னத்தின் அடிப்படையில் ஒரு மொழி-இன-மத அடிப்படை யிலான தேசிய இனம் அந்நாட்டு அரசியற் சட்டத்தினூடாக - சுயநிர்ணய உரிமையின் உரித்துக்களை அனுபவிக்க இய லாத சூழ்நிலைகளிலிருந்து, இவ்வுரிமையினை அடைவதில் தடைகளும், நிராகரிப்பும் நிலவுமானால், அவ்வினம் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் பிரிந்து செல்லவும், ஏனைய இனக்குழுவினர் உரிய அரசியற் சட்ட ஏற்பாடுகளை உரு வாக்கி - சுயநிர்ணய உரிமை கோரி நிற்கும் இனம் சுதந்திர மாகப் பிரிந்து செல்லும் வழிமுறைகளிற்கு ஒத்துழைக்கும் கடப்பாட்டிற்குட்பட்டது என்று தெரிவித்திருந்தது. மேலும் குபெக் மக்கள் அரசியற் சட்டத்தின் அடிப்படையில் நீதி மறுக்கப்பட்ட மக்கள் அல்ல எனவும், அதற்கான காரணங் களைப் பட்டியலிட்டிருந்தது. இவ்விளக்கங்களை இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் கோரிக்கைகளிற்கு பிரயோகித்து - நோக்குவோமானால் சட்ட நிலைமை மிகத் தெளிவாகப் புலப்படும்.

கொசோவா மாநிலம் ஒருதலைப்பட்சமாகத் தனி நாடாகப் பிரிந்து செல்லமுடியுமா? என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுசன சர்வதேச நீதிமன்றத்திடம் கோரிய ஆலோசனை அபிப்பிராயத்திற்கு, இந்நீதிமன்றம் கனடிய உயர்நீதிமன்றத் தின் மேற்படி வழக்கில் வழங்கிய விளக்கங்களைக் கவனத் தில் எடுத்து - நேர்க்கணியமாக - கொசோவா மாநிலம் பிரிந்து செல்லும் உரிமையுடையது எனத் தீர்ப்பு வழங் கியமை இங்கு அவதானிக்கப்பட வேண்டும்.

முடிவுரை:

இலங்கையின் தமிழ்த் தேசிய இனமும், தமிழ்பேசும் மக் களும், கோரி நிற்கின்ற கூட்டுமனித உரிமைகள், அடிப்படை மனித உரிமைகள், சமஷ்டி ஆட்சி, தன்னாட்சி - உள்ளடங் கலான அரசியற் சட்ட நீதிக் கோரிக்கை - சர்வதேசச் சட்டத்தின் பரிமாணங்களைக் கொண்டது. ஐக்கிய நாடுகள் சபையின் முன்னெடுப்பினால் உருவாக்கப்பட்ட சட்ட ஆவணங்களில் மேற்குறிப்பிட்ட உரிமைகள் யாவும் தேசிய இனத்திற்கு உரித்துடையன என அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் பிரித்தானியர் தமது ஆட்சியை முடிவாக்கிய போது - அறிமுகப்படுத்திய ஆட்சிமுறைமையின் அடிப்படை யிலான கடந்த 78 வருட கால ஆட்சி உள்ளூர் குடியேற்றவாத நிலைமைகளை பிரதிபலிக்கின்றன. இம்மக்கள் நீண்ட நெடுங்காலமாக திட்டமிடப்பட்டதும், பெருமளவான அவலங் களிற்கும் அட்டூழியங்களிற்கும் ஆட்பட்டுள்ளார்கள். ஐக்கிய நாடுகள் சபையின் அரசு நலன்களை மையப்படுத்திய செயல்முறை இம்மக்கள் ஐக்கிய நாடுகள் சபை மூலம், நிவாரணத் தீர்வு பெறுவதற்கு எந்தவிதமான சந்தர்ப்பங் களும் இல்லை. இன அழிப்பு, போர்க்குற்றங்களினால் அவல நிலையிலிருக்கும் இத்தேசிய இனத்தை - அரசுகள் பாது காக்கும் கடப்பாட்டை (R2Q) செயல்படுத்த புவிசார் அரசியற் காரணிகள் தடையாக உள்ளன. இந்நிலையில் சுயபாது காப்பு என்ற சட்ட தத்துவத்தை மையமாகக் கொண்டு - சுய நிர்ணய உரிமைக் கோட்பாட்டின் அடிப்படையில் ஓர் அர சியல் இயக்கமாகப் பரிணமிப்பதைத் தவிர வேறு வழிவகை கள் இல்லை. இலங்கை அரசு மூலமான அரசியற் சட்ட நீதி - இலங்கையின் சமூக அரசியல் விவகாரங்களில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளினால் மூர்க்கத்தனமாக எதிர்க்கப்படும். இன்றுள்ள அரசியற் சட்டத்தின் வழிமுறைகளைக் கடந்து, உயர்நீதிமன்றத்தின் வியாக்கியானங்களை பெற்று, நாடாளு-மன்றத்தின் 2/3 பங்கு பெரும்பான்மையைப் பெற்று வாக் கெடுப்பின் மூலம் நிறைவேற்றப்படுவதற்கான அரசியல் நாகரிக வளர்ச்சிக்கு தமிழர்கள் இன்னும் பலகாலம் காத் திருக்க வேண்டும்.



sandrasegaram@thaiveedu.com

என். சரவணன்

1966

ஏதனசார தேரர்

முதலாவது மொழிப்போராட்டத் தியாகியா



இலங்கையின் சமகால அரசியல் வரலாற்றில் 1966 ஜனவரி 8-ஆம் திகதி என்பது, வெறுமனே ஒரு வேலைநிறுத்தப் போராட்டமாகவோ அல்லது வீதி மறியலாகவோ மட்டும் கடந்து செல்லப்பட முடியாத ஒரு பாரிய திருப்புமுனை எனலாம். அது சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையில் இனத்துவ மேலாதிக்க வாதத்தின் வளர்ச்சியும், அதிகார அரசியலும் எவ்விதம் பின்னிப் பிணைந்து கிடந்தன என்பதனை வெளிச்சமிட்டுக் காட்டிய ஒரு வரலாற்றுத் தடம். இச்சம்பவத்தின் ஆணிவேரைப் புரிந்துகொள்வதற்கு, 1956-ஆம் ஆண்டு முதல் நாட்டில் நிலவி வந்த அரசியல் கொதிநிலையையும் அத்துடன் மொழி ரீதியான ஒடுக்குமுறைகளையும் நாம் முதலில் உற்றுநோக்க வேண்டும்.

இலங்கையின் வரலாற்றில் 1956-ஆம் ஆண்டை ஒரு 'நச்சுத் திருப்புமுனை' என்றே வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த கசப்பான நிகழ்வுகள் அரங்கேறி இவ்வாண்டுடன் எழுபது ஆண்டுகள் நிறைவடைகின்றன. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் தலைமையிலான அரசாங்கம் 'சிங்களம் மட்டும்' (Sinhala Only Act) சட்டத்தைக் கொண்டுவந்தமையானது, இலங்கையின் பல்லினத் தன்மையைச் சிதைத்த முதல் பெரும் அடியாகும். அதுவரை காலமும் ஓரளவு பேணப்பட்டு வந்த மொழி ரீதியான சமத்துவம் இல்லாது செய்யப்பட்டதுடன், தமிழ் பேசும் மக்கள் தமது சொந்த நாட்டிலேயே இரண்டாம் தரப் பிரஜைகளாக ஆக்கப்பட்டனர்.

பண்டாரநாயக்க முன்னெடுத்த சிங்கள பௌத்த மதத்துவ - இனத்துவ அரசியல் நகர்வுகள் ஒரு பாரிய வரலாற்றின் இருண்ட அத்தியாயங்களுக்குள் இலங்கையைத் தள்ளியது. தான் எதனைத் தூண்டிவிட்டுப் பிரதமராக முடிசூடிக் கொண்டாரோ, அதே பேரினவாத சக்திகளின் கடும் போக்குத் தன்மையே ஈற்றில் அவரது உயிரைப் பறித்தது. அவர் பிரதமராக இருக்கும்போதே, சோமராம தேரர் எனும் ஒரு பிக்குவினால் சுட்டுக் கொல்லப்பட்டமையானது, இனவாத அரசியல் அதன் படைப்பாளியையே விழுங்கும் என்பதற்கு வரலாற்றில் ஒரு கசப்பான சான்றாகும்.

1958-ஆம் ஆண்டில் தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் இலக்கம் 28 இயற்றப்பட்ட போதிலும், அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு அச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒழுங்குவிதிகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தத் தவறியதால், அந்தச் சட்டம் நடைமுறைக்கு வராமலேயே இருந்தது. பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஒரு நீர்த்த வடிவில் நடைமுறைப்படுத்துவது குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் ஒரு புரிதல் எட்டப்பட்டது. இரு கட்சிகளுக்கும் இடையிலான உடன்படிக்கையின்படி (24 மார்ச் 1965 தேதியிட்ட டட்லி-செல்வநாயகம் ஒப்பந்தம்), 1966 பெப்பிரவரி 3 அன்று தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. சிங்கள மொழியை மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாகக் கொண்டு 1956-இல் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 'அரச கரும மொழிச் சட்டத்திற்கு' முன்னர் அரசாங்கச் சேவையில் சேர்க்கப்பட்ட தமிழர்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கமாகும். இம்முயற்சியை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் (SLFP) அதன் கூட்டணி இடதுசாரிக் கட்சிகளும் எதிர்த்தன. அவர்களின் உரைகளில் வெளிப்பட்ட இனவாதக் கருத்துகள் இனவெறியைத் தூண்டியதுடன், தமிழ் எதிர்ப்பு உணர்வுகளையும் ஊக்குவித்தன.

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக எழுந்த நிர்வாகச் சிக்கல்களாலும் அதனைத் தொடர்ந்த ஒடுக்குமுறைகளாலும், 1958-ஆம் ஆண்டு இலங்கை கண்டிராத மிகக் கொடிய இனக்கலவரம் வெடித்தது. தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அரச அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட

போதிலும், தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து கோரி ஈழத்தமிழினம் எழுச்சிகரமான போராட்டங்களை முன்னெடுத்தது. தந்தை செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி சத்தியாக்கிரகப் போராட்டங்கள் ஒரு மாபெரும் வெகுஜன எழுச்சியை உருவாக்கியது.

இச்சூழலில்தான், 1956-ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் வந்ததிலிருந்து சரியாகப் பத்தாண்டுகள் கழித்து (1966), வடக்கு கிழக்கில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாக ஆக்குவதற்கான சட்டபூர்வ முயற்சி எடுக்கப்பட்டது. இந்த முயற்சியே தெற்கில் மீண்டும் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் போர்க்கோலம் பூணக் காரணமாகியது. பத்தாண்டுகள் கழித்து நடைமுறைப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிக்குத்தான் சிங்களத் தரப்பில் இருந்து இத்தனை எதிர்ப்புகள்.

ஜனவரி: இரு வேறு தியாகிகள் தினங்கள் – கோவிந்தன் முதல் ரதனசார தேரர் வரை:

இலங்கையின் அரசியல் அத்துடன் தொழிற் சங்க வரலாற்றில் தியாகிகள் எனும் சொல்லாடல் இரு வேறு தளங்களில் பார்க்கப்படுகிறது: இலங்கையின் முதலாவது தொழிலாளர் போராட்டத் தியாகியாகக் கருதப்படுபவர் மூலோயத் தோட்டப் போராட்டத்தின் போது பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோவிந்தன் ஆவார். அவரது நினைவாக ஆண்டுதோறும் ஜனவரி 10-ஆம் திகதி 'மலையகத் தியாகிகள் தினம்' அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. உரிமைப் போராட்டத்தின் குறியீடாக நாம் கொள்கிறோம்.

மறுபுறம், சிங்கள பௌத்த தரப்பானது 1966 ஜனவரி 8-ஆம் திகதியைத் தமது 'மொழிப்போராட்ட தியாகி தினமாக' இன்றும் அனுஷ்டித்து வருகின்றது. சுதந்திர இலங்கையின் போராட்ட மொன்றில் கொல்லப்பட்ட முதல் பௌத்த பிக்குவாக ரதனசார தேரர் வரலாற்றில் பதிவானது இச்சம்பவத்தின் ஊடாகத்தான்.

ஒரே நாட்டின் இரு வேறு சமூகங்கள், ஜனவரி மாதத்தின் இரு வேறு நாட்களைத் தத்தமது அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப தியாகிகள் தினங்களாகக் கொண்டாடுகின்றன.

1965 பொதுத்தேர்தலும் டட்லி–செல்வா ஒப்பந்தமும்:

1960-இலிருந்து 1965 வரையான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் 1965 பொதுத்தேர்தல் நடைபெற்றது. எந்தவொரு கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காத நிலையில், சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் அரசாங்கத்தை அமைப்பதற்காகத் தமிழரசுக் கட்சியின் ஆதரவை நாடினர். தமிழர் தரப்பு பேரம் பேசும் ஆற்றலைப் பெற்றது.

அதே வேளை இந்தத் தேர்தலின் போது சிங்களத் தரப்பைத் திருப்திப்படுத்தும் வாக்குறுதிகளும் தேர்தல் களத்தில் உபயோகிக்கப்பட்டன. பண்டாரநாயக்க 1957-இல் அமைத்த புத்த சாசன ஆணைக்குழு 1959 ஜூனில் நிறைவு செய்யப்பட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டன. அதில் ஒன்று போயா தினத்தை விடுமுறை நாளாக அறிவிப்பது பற்றியது. புத்த சாசன சபையொன்றை அமைப்பது போன்றனவும் அதில் அடக்கம். பண்டாரநாயக்க செப்ரெம்பரில் கொல்லப்பட்டுவிட்ட போதும் அதற்கடுத்து ஆட்சியமைத்த சிறிமாவோ பண்டாரநாயக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் சிலவற்றை நிறைவேற்றினார். ஆனால் முழுமையாக நிறைவேற்றும்படி எழுந்த பௌத்த தரப்பு கோரிக்கைகளுக்கு இந்தக் கட்சிகள் செவிசாய்க்க வேண்டி வந்தது.

மறுபுறம் தமிழர் தரப்பைத் திருப்தி செய்வதற்காக 1965 மார்ச் 24-ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட 'டட்லி-செல்வா ஒப்பந்தம்' ஒரு திருப்புமுனையாக அமைந்தது. தமிழ் மொழி நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் வடக்குக் கிழக்கில் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற குறைந்தபட்ச இணக்கப்பாட்டின் அடிப்படையில் 'ஏழு கட்சிக் கூட்டணி' (ஹத் ஹவுல) ஆட்சி மலர்ந்தது. ஆனால், இந்த ஒப்பந்தத்தின் சாராம்சம் நாடாளுமன்றத்தில் பிரமாணங்களாக (Regulations) முன்வைக்கப்பட்ட போதுதான், அது தெற்கில் ஒரு பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

1965 மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலின் முடிவுகள் இலங்கையின் அரசியல் வரைபடத்தில் ஒரு புதிய அதிகாரச் சம நிலையை உருவாக்கியிருந்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் (SLFP) தலைமையிலான முன்னைய ஆட்சியின் மீது மக்களுக்கு இருந்த பொருளாதார அதிருப்தி, ஐக்கிய தேசியக் கட்சிக்கு (UNP) அதிக இடங்களைப் பெற்றுக்கொடுத்த போதிலும், தனித்து ஆட்சியமைக்கத் தேவையான 76 என்கிற பெரும்பான்மையை டட்லி சேனாநாயக்கவால் எட்ட முடியவில்லை. இந்தச் சூழலில்தான் 'ஹத் ஹவுல்' (Hath Hawul) எனப்படும் ஏழு கட்சிக் கூட்டணி அரசாங்கம் உருவானது.

"கோவிந்தன் நினைவாக ஆண்டு தோறும் ஜனவரி 10-ஆம் திகதி 'மலையகத் தியாகிகள் தினம்' அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. சிங்கள பௌத்த தரப்பானது 1966 ஜனவரி 8-ஆம் திகதியைத் தமது 'மொழிப் போராட்ட தியாகி தினமாக' இன்றும் அனுஷ்டித்து வருகின்றது. சுதந்திர இலங்கையின் போராட்ட மொன்றில் கொல்லப்பட்ட முதல் பௌத்த பிக்குவாக ரதனசார தேரர் வரலாற்றில் பதிவானது இச்சம்பவத்தின் ஊடாகத்தான். ஒரே நாட்டின் இரு வேறு சமூகங்கள், ஜனவரி மாதத்தின் இரு வேறு நாட்களைத் தத்தமது அரசியல் நிலைப் பாடுகளுக்கு ஏற்ப தியாகிகள் தினங்களாகக் கொண்டாடு கின்றன."

‘ஹத் ஹவுல்’ உதயம்:

1965 மார்ச் 24-ஆம் திகதி கொழும்பில் உள்ள ஈ.எல். சேனாநாயக்கவின் இல்லத்தில் (சில குறிப்புகளின்படி இது டட்லி சேனாநாயக்கவின் இல்லத்தில் நிகழ்ந்தது) ஒரு தீர்க்கமான சந்திப்பு இடம்பெற்றது. அங்குதான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்கப் போகும் ஏழு தரப்புகள் எவை என்பது பற்றிய இறுதி முடிவுகள் எட்டப்பட்டன. அவை:

- ஐக்கிய தேசியக் கட்சி (UNP) - டட்லி சேனாநாயக்க தலைமையிலானது.
- இலங்கைத் தமிழரசுக் கட்சி (Federal Party) - எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமை.
- அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் (ACTC) - ஜீ.ஜீ. பொன்னம்பலம் தலைமை.
- மகாஜன எக்சத் பெரமுன (MEP) - பிலிப் குணவர்தன தலைமை.
- ஜாதிக விமுக்தி பெரமுன (JVP - 1957 இல் உருவான ஜே.வி.பி) - கே.எம்.பி. ராஜரத்ன தலைமை.
- இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC) - எஸ். தொண்டமான் தலைமை.
- ஜனநாயக ஐக்கிய முன்னணி (DLP) - டபிள்யூ. தஹாநாயக்க தலைமை.

அதேவளை இந்தக் கூட்டணியானது கொள்கை ரீதியாக மிகவும் முரண்பட்ட சிக்கல் நிறைந்த கூட்டணியாக இருந்தது. ஒருபுறம் தமிழ் மக்களின் தன்னாட்சிக் கொள்கையைப் பேசும் தமிழரசுக் கட்சி, மறுபுறம் ‘சிங்களம் மாத்திரம்’ என்பதைத் தீவிரமாக முன்னிறுத்தும் பிலிப் குணவர்தன அத்துடன் கே.எம்.பி. ராஜரத்ன போன்றவர்களின் சிங்களத் தேசியவாதக் கட்சிகள். இவ்வாறான முரண்பட்ட துருவங்களை டட்லி சேனநாயக்க ஒரு புள்ளியில் இணைத்தமைக்குக் காரணம், சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்ற பொதுவான நோக்கம் மட்டுமேயாகும்.

டட்லி – செல்வநாயகம் ஒப்பந்தத்தின் (1965) உட்கூறுகள்:

அரசாங்கத்தை ஆதரிப்பதற்குத் தமிழரசுக் கட்சி முன்வைத்த நிபந்தனைகளே ‘டட்லி-செல்வா ஒப்பந்தம்’ என அழைக்கப்படுகிறது. 1965 மார்ச் 27-ஆம் திகதி டட்லி சேனாநாயக்கவும் எஸ்.ஜே.வி. செல்வநாயகமும் இதில் உத்தியோகபூர்வமாகக் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம் நான்கு முக்கிய அம்சங்களைக் கொண்டிருந்தது:

- தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள்: 1958-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் நிர்வாக மொழியாகத் தமிழை அங்கீகரிப்பதற்கான பிரமாணங்களை (Regulations) உருவாக்குதல். இதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் தமது மொழியிலேயே அரசாங்கத்துடன் தொடர்புகொள்ள வழிவகை செய்தல்.
- மாவட்ட சபைகள் (District Councils): இலங்கையின் நிர்வாக அதிகாரம் கொழும்பில் மட்டும் முடங்கிக் கிடக்காமல், மாவட்ட ரீதியாகப் பரவலாக்கப்பட வேண்டும். இதற்காக மாவட்ட சபைகளை நிறுவுதல். இது தமிழரசுக் கட்சியின் நீண்டகாலக் கோரிக்கையான சுயாட்சிக்கான ஓர் ஆரம்பப் புள்ளியாகக் கருதப்பட்டது.
- காணி வழங்கல் அத்துடன் குடியேற்றம்: வடக்கு - கிழக்கு மாகாணங்களில் அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்படும்போது, முதலிடம் அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த நிலமற்ற மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். அதன் பின்னர் அந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும், எஞ்சியிருந்தால் மட்டுமே ஏனைய மாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களைத் தடுப்பதற்கான ஓர் அரணாகத் தமிழ் மக்களால் பார்க்கப்பட்டது.
- நீதிமன்ற மொழி: வடக்கு அத்துடன் கிழக்கு மாகாணங்களில் உள்ள நீதிமன்றங்களில் தமிழிலேயே வழக்காடுவதற்கும், ஆவணங்களைப் பராமரிப்பதற்கும் உரிமை வழங்கப்படுதல்.

1965 ஏப்பிரல் மாதத்தில் அரசாங்கம் பதவியேற்றபோது, டட்லி சேனாநாயக்கவின் அமைச்சரவையில் தமிழரசுக் கட்சி நேரடியாகப் பங்கெடுக்கவில்லை. இருப்பினும், திரு. எம். திருச்செல்வத்தை தாராளமயமாக்கல் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கத் தமிழரசுக் கட்சி பரிந்துரைத்தது. அவர் செனட் சபையின் ஊடாக அமைச்சரவைக்குள் நுழைந்தார்.

அரசாங்கம் அமைந்தவுடனேயே எதிர்க்கட்சிகள் தமது தாக்குதலைத் தொடங்கின. ‘டட்லி - செல்வா ஒப்பந்தம் ஓர் இரகசிய ஆவணம்’ என்றும், ‘நாட்டைப் பிரிக்க டட்லி சம்மதித்து விட்டார்’ என்றும் சிங்களப் பகுதிகளில் வதந்திகள் பரப்பப்பட்டன. குறிப்பாக, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னணித் தலைவர்களான மைத்திரிபால சேனநாயக்கவும் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கவும் தென்னிலங்கையில் இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்தனர்.

மறுபுறம், 1965 ஓகஸ்ட் மாதம் ஜே.ஆர். ஜயவர்தன (அப்போது இராஜாங்க அமைச்சர்)



நாடாளுமன்றத்தில் பேசுகையில், 'சிங்களம் மாத்திரம் சட்டத்திற்கு எவ்வித பாதிப்பும் இன்றி, தமிழ் மொழிக்கான நியாயமான உரிமைகள் வழங்கப்படும்' என உறுதியளித்தார். ஆனால், இந்த உறுதிமொழி சிங்களத் தீவிரவாதத் தரப்புகளை அதிருப்திபடுத்தியது.

1966 ஜனவரியை நோக்கிய நகர்வு:

டட்லி அரசாங்கம் தமது தேர்தல் வாக்குறுதிகளை 1966 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு கொண்டுவருவதாக அறிவித்திருந்தது. செல்வநாயகத்துடனான ஒப்பந்தத்தின் அடிப்படையில், 1966 ஜனவரி மாதம் 8-ஆம் திகதி தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்: பிரமாணங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க டட்லி சேனநாயக்க தீர்மானித்தார். இதற்கான வர்த்தமானி அறிவித்தல் 1966 ஜனவரி 1-ஆம் திகதி வெளியிடப்பட்டது. இந்தப் பிரமாணங்கள் நடைமுறைக்கு வந்தால், வடக்குக் கிழக்கில் தமிழ் ஓர் உத்தியோகபூர்வத் தன்மையைப் பெற்றுவிடும் என்பதை உணர்ந்த எதிர்க்கட்சிகள், அதனைத் தடுத்து நிறுத்தத் தமது முழுப் பலத்தையும் திரட்டின.

1966 ஜனவரி 1-ஆம் திகதி முதல் கொழும்பில் போராட்டங்களுக்கான தயார்படுத்தல்கள் ஆரம்பமாகின. 'மாபல்லே ஜினரத்தன தேரர்' போன்ற செல்வாக்குமிக்க பிக்குகள் இப்போராட்டத்திற்குத் தலைமை தாங்க முன்வந்தனர். சிங்கள பௌத்த உணர்ச்சிகளைத் தூண்டுவதற்காக 'மகா சங்காரய' (மாபெரும் அழிவு) என்ற சொல்லாடல் பயன்படுத்தப்பட்டது. அதாவது, தமிழ் மொழிக்கு உரிமை கிடைத்தால் சிங்கள இனம் அழிந்துவிடும் என்ற அச்சம் மிகத் திட்டமிட்டு விதைக்கப்பட்டது.

இவ்வாறான ஒரு பதற்றமான சூழலில்தான், 1966 ஜனவரி 8-ஆம் திகதி காலை, கொழும்பு நகரம் ஒரு பெரும் சூறாவளியைச் சந்திக்கத் தயாராக இருந்தது.

1965-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமைக்கப்பட்ட டட்லி சேனாநாயக்கவின் 'தேசிய அரசாங்கம்', இலங்கையின் இன முரண்பாடுகளைக் களைவதற்கான ஒரு மனிதாபிமான அடிப்படையிலான வாய்ப்பினைத் திறந்திருந்தது. ஆனால், அந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வாய்ப்பினைத் தகர்ப்பதையே தமது பிரதான அரசியல் தந்திரோபாயமாக எதிர்க்கட்சிகள் கையில் எடுத்தன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP), லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) அத்துடன் கம்யூனிஸ்ட் கட்சி (CP) ஆகியன ஒன்றிணைந்து, ஒரு முற்போக்கான நகர்வை இனவாதத்தைக் கொண்டு முறியடித்தன என்பதனை மிக நுணுக்கமாகக் கவனிக்க வேண்டி இருக்கிறது.

"இடதுசாரித் தலைவர்களின் தடமாற்றம் வெறும் அரசியல் கூட்டோடு மட்டும் நின்றுவிட வில்லை; அது மிக மோசமான இனவாதக் கோஷங்களை உருவாக்கு வதிலும் முன்னின்றது. குறிப்பாக, என்.எம். பெரேரா போன்ற பொருளாதார மேதைகள், தமிழரசுக் கட்சியுடனான டட்லி சேனாநாயக்கவின் உடன் படிக்கையை 'தேசியத் துரோகம்' என வர்ணித்தனர். அவர்களின் வாதம் மிகவும் அரசியல் வஞ்சகமானதாக இருந்தது."

இடதுசாரிகளின் வீழ்ச்சியின் ஆரம்பம்: வர்க்க அரசியலிலிருந்து இனவாத அரசியலுக்கு:

இலங்கை இடதுசாரி இயக்கங்களின் வரலாற்றில் 1960-களின் நடுப்பகுதி என்பது ஒரு கறைபடிந்த காலப்பகுதியாகும். 1956-ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் 'சிங்களம் மட்டும்' சட்டம் விவாதிக்கப்பட்டபோது, 'இரு மொழி - ஒரு நாடு; ஒரு மொழி - இரு நாடு' என வரலாற்றுப் புகழ்மிக்க எச்சரிக்கையை விடுத்த கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா, 1965-இல் முற்றிலும் மாறுபட்ட ஒரு நிலைப்பாட்டை எடுத்தார். 1964-ஆம் ஆண்டு சிறிமாவோ பண்டாரநாயக்கவுடன் லங்கா சமசமாஜக் கட்சி ஏற்படுத்திக்கொண்ட 'கூட்டணி', இடதுசாரிகளைத் தூய மார்க்சியப் பாதையிலிருந்து விலக்கி, தென்னிலங்கைச் சிங்கள-பௌத்த வாக்கு வங்கி அரசியலுக்குள் தள்ளியது.

இடதுசாரித் தலைவர்களின் இந்தத் தடமாற்றம் வெறும் அரசியல் கூட்டோடு மட்டும் நின்றுவிட வில்லை; அது மிக மோசமான இனவாதக் கோஷங்களை உருவாக்குவதிலும் முன்னின்றது. குறிப்பாக, என்.எம். பெரேரா போன்ற பொருளாதார மேதைகள், தமிழரசுக் கட்சியுடனான டட்லி சேனாநாயக்கவின் உடன்படிக்கையை 'தேசியத் துரோகம்' என வர்ணித்தனர். அவர்களின் வாதம் மிகவும் அரசியல் வஞ்சகமானதாக இருந்தது. 'ஐக்கிய தேசியக் கட்சி என்பது ஏகாதிபத்திய - முதலாளித்துவக் கட்சி; அதனை வீழ்த்த வேண்டுமானால் சுதேசிய சக்திகளான சிங்கள பௌத்தர்களுடன் கைகோர்க்க வேண்டும்' என்ற தர்க்கத்தை அவர்கள் முன்வைத்தனர். இதன் மூலம், வர்க்கப் போராட்டத்திற்குப் பதிலாக இனவாதப் போராட்டத்தைத் தொழிற்சங்கங்களுக்குள் அவர்கள் புகுத்தினர்.

'இரகசிய ஒப்பந்த'ப் புரளி:

டட்லி - செல்வா ஒப்பந்தம் கையெழுத்தான நாள் முதலே, அது ஒரு 'இரகசிய ஒப்பந்தம்' என்ற பிம்பத்தை எதிர்க்கட்சிகள் கட்டமைத்தன. 1965 ஓகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க, இந்த ஒப்பந்தத்தை மிகக் கடுமையாகச் சாடினார். அவர் தனது உரையில், 'டட்லி சேனாநாயக்க நாட்டைத் துண்டாடுவதற்கான தாரைவார்ப்பைச் செய்துவிட்டார்' எனவும், 'சிங்கள மக்களின் பாரம்பரிய உரிமைகள் யாழ்ப்பாணத்துத் தலைவர்களிடம் அடகு வைக்கப்பட்டு விட்டன' எனவும் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கும் விதமாக, அன்றைய இராஜாங்க அமைச்சர் ஜே.ஆர். ஜயவர்தன முன்வைத்த தர்க்கம் மிகவும் முக்கியமானது.

அவர் கூறினார்: ‘நாங்கள் நாட்டைப் பிரிக்கவில்லை. மாறாக, 1956-இல் நீங்கள் உருவாக்கிய அந்தப் பிளவைச் சீர்செய்ய முயல்கிறோம் என்றார். 1958-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பிரமாணங்களையே நாம் கொண்டுவருகிறோம். இதில் நாட்டைப் பிரிக்க என்ன இருக்கிறது?’ என்றார்.

இருப்பினும், எதிர்க்கட்சிகள் இந்தப் பிரமாணங்களை ‘மரண சாசனம்’ என வர்ணித்தன. குறிப்பாக, 1966 ஜனவரி 1-ஆம் திகதி வெளியான அரச வர்த்தமானி அறிவித்தலைத் தொடர்ந்து, ‘டட்லி - செல்வா ஒப்பந்தம்: சிங்களவர்களுக்கு எதிரான சூழ்ச்சி’ என்ற பெயரில் இலட்சக்கணக்கில் துண்டுப் பிரசுரங்கள் தென்னிலங்கையில் விநியோகிக்கப்பட்டன.

‘மகா சங்காரய’ அத்துடன் பௌத்த பீடங்களின் எழுச்சி:

இப்போராட்டத்தின் பின்னால் இருந்த மிக முக்கியமான தர்க்கம் ‘மகா சங்காரய’ (The Great Annihilation) என்பதாகும். இச்சொல்லாடல், சிங்கள பௌத்த நாகரிகமே ஒழிக்கப்படப் போகிறது என்ற அச்சத்தை விதைக்கப் பயன்படுத்தப்பட்டது. 1966 ஜனவரி 8-ஐ ஒட்டி வெளியிடப்பட்ட ‘மகா சங்காரய’ எனும் தலைப்பிலான சிறுபிரசுரம், பௌத்த பிக்குகள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்தச் சிறு நூலை எழுதியவர் கலாநிதி தரமிட்டிபல ரதனசார தேரர் என்கிற பௌத்த பிக்கு. மாபல்லே ஜின ரத்தன தேரர், ரத்தனசார தேரர் போன்ற பிக்குகள், பௌத்த விகாரைகளை அரசியல் போராட்டக் களங்களாக மாற்றினர். விகாரமகாதேவி பூங்காவிலிருந்து நாடாளுமன்றம் நோக்கிப் பேரணியாகச் சென்று பிரதமரைச் சந்திக்க வேண்டும் என்ற முடிவை இவர்கள் எடுத்தனர். ஆனால், இந்தப் பேரணியின் நோக்கம் பிரதமருடன் பேசுவதல்ல, மாறாகத் தமிழ் மொழிப் பிரமாணங்கள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதைத் தடுத்து நிறுத்துவதே. பிக்குகள் முன்னால் நிற்க, பின்னால் அரசியல்வாதிகள் அணிவகுக்கும் ஒரு ‘புனிதப் போர்’ போன்ற சூழல் கொழும்பில் உருவாக்கப்பட்டது.

ஒரு விமர்சன ரீதியான ஆய்வாளராக நாம் நோக்கும்போது, 1966 போராட்டமானது ஒரு ஜனநாயகப் போராட்டமாக அன்றி, ஒரு ‘நிறுவனமயப்பட்ட இனவாதமாகவே’ காண முடியும். இதன் பின்னாலிருந்த தர்க்கங்களை இவ்வாறு வகைப்படுத்தலாம்:

ஒரு நாட்டில் ஒரு மொழி மட்டுமே ஆதிக்கம் செலுத்த வேண்டும், ஏனைய மொழிகள் (தமிழ்) அதற்கு அடிபணிந்தே இருக்க வேண்டும் என்ற மேலாதிக்கச் சிந்தனை. ‘தமிழ் மொழிக்கு நிர்வாக அந்தஸ்துக் கிடைத்தால், சிங்களம் வீழ்ந்துவிடும்’ என்ற பூச்சாண்டியை இவர்கள் முன்வைத்தனர்.

சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் மிகச் சிறிய உரிமை கூட, பெரும்பான்மையினரின் அழிவுக்குச் சமம் என்ற கற்பிதம் உருவாக்கப்பட்டது.

அதேவேளை கலாநிதி என்.எம். பெரேரா போன்றவர்கள், தொழிலாளர் வர்க்கத்தின் ஒற்றுமையை விடவும் சிங்கள இனத்தின் ஒருமைப்பாடே முக்கியம் என்கிற கருத்துடன் அணி திரண்டமை, இலங்கையின் இடதுசாரி வரலாற்றின் மிகப்பெரும் வீழ்ச்சி எனலாம்.

ஜனவரி 8 வன்முறைக்கான ஒத்திகை:

ஜனவரி மாதம் 1-ஆம் திகதி தமிழ் மொழிப் பிரமாணங்கள் தொடர்பான வர்த்தமானி வெளியானதும், எதிர்க்கட்சிகள் ஜனவரி 8-ஆம் திகதியை ‘கறுப்பு தினமாக’ அறிவித்தன. அன்று நாடாளுமன்றத்தை முற்றுகையிடப் போவதாகவும், நாட்டை முடக்கும் வகையில் வேலைநிறுத்தங்களை முன்னெடுக்கப் போவதாகவும் தொழிற்சங்கங்கள் எச்சரித்தன.

கொழும்பின் சுவர்களில் ‘தமிழர்களுக்கு நாடு கொடுக்காதே’, ‘டட்லி - செல்வா ஒப்பந்தத்தை இரத்துச் செய்’ போன்ற வாசகங்கள் நிறைந்த போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. இதற்கென ‘சிங்கள பாதுகாப்பு முன்னணி’ போன்ற அமைப்புகள் முன்னின்று உழைத்தன. ஆர்.ஜி. சேனநாயக்க போன்ற தீவிரவாதப் போக்குடைய தலைவர்கள், பிரதமர் டட்லி சேனாநாயக்கவைத் தனது சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தும் மிகக் கடுமையாகச் சாடினார்.


Registered as a Newspaper in Ceylon

ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

(7-1-66)

விசுவாவசு மார்கழி 23 நமமான பிறை 14 வெள்ளிக்கிழமை

சன்லைட்

கொழும்பில் ஆயுத பொலிஸ் காவல்

லீவுகள் ரத்து; படைகளுக்கு உஷார்

தமிழ்சட்டவிதிகள் நாளை சமர்ப்பிக்கப்படும்

ஒத்திவைப்பு யோசனையை மந்திரிசபை நிராகரித்தது

இரு பௌத்த பிக்குகள் உண்ணாவிரதமிருக்கின்றனர்

தங்க மாலை தமிழினத்துக்கு!

ஜனவரி 8-ஆம் திகதி காலை, கொழும்பு மாநகரம் வழக்கத்திற்கு மாறான ஒரு நிசப்தத்தில் இருந்தது. ஆனால், விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் ஆயிரக்கணக்கான சிங்கள மக்களும் பிக்குகளும் திரளத் தொடங்கியபோது, அந்த நிசப்தம் சிதறத் தொடங்கியது. பொலிஸார் தடையுத்தரவுகளைப் பிறப்பித்திருந்த போதிலும், அதனை மீறி ஊர்வலம் செல்லப்போவதாகப் போராட்டக்காரர்கள் அறிவித்தனர். இது வெறும் பேச்சுரிமைக்கான போராட்டம் அல்ல; இது ஒரு பாரிய அரசியல் சதிவலையின் தொடக்கமாக இருந்தது.

ஜனவரி 8, கொள்ளுப்பிட்டி இரத்தக் களரி:

1966 ஜனவரி 8-ஆம் திகதி விடியற்காலையிலேயே கொழும்பு மாநகரம் ஒரு யுத்த களத்திற்கான தயார் படுத்தல்களுடன் காணப்பட்டது. அரசாங்கம் கொண்டு வரவிருந்த தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் பிரமாணங் களுக்கு எதிராக, எதிர்க்கட்சிக் கூட்டணி அழைப்பு விடுத்திருந்த 'கறுப்புத் தினமும்' பொது வேலைநிறுத்தமும் நாட்டின் நிர்வாகத்தை முடக்கும் இலக்கைக் கொண்டி ருந்தன. ஒருபுறம் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் உயரிய சபையில் விவாதம் நடைபெறத் தயாராக இருக்க, மறுபுறம் வீதிகளில் பேரினவாத சக்திகள் தமது பலத்தைக் காட்டத் திரண்டன.

கொழும்பு முழுவதும் வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதாகவும், வேலைநிறுத்தம் செய்பவர்களில் சிலர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாதவர்களுக்கு இடையூறு விளை விப்பதாகவும் பொலிஸாருக்குத் தகவல்கள் கிடைத்தன. பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி நகரம் முழுவதும் கறுப்புக் கொடிகள் தொங்கவிடப்பட்டன.

சட்டத்திற்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்வதற்காக காலை 9.00 மணியளவில் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவிற்கு அருகில் ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். இந்தப் பேரணிக்கு பௌத்த பிக்குகள் தலைமை தாங்கினர். குறிப்பாக, மாபல்லே ஜினரத்தன தேரரும் ரதனசார தேரர் ஆகியோர் முன்னணியில் நின்றனர். 'சிங்களம் மட்டும் சட்டத்தைக் காப்போம், 'நாட்டைத் துண்டாடாதே' போன்ற கோஷங்கள் முழங்கின.

பௌத்த பிக்குகள் கார்களில் நகரத்திற்குள் நுழையத் தொடங்கினர். பூங்காவில் இருந்த பொலிஸ் படைகள் மிகக் குறைவாகவே இருந்தன. பின்னர் பொலிஸார் அதிகரிக்கப் பட்ட போதிலும், சிரேஷ்ட அதிகாரிகள் ஏனைய பகுதிக ளுக்கே முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கருதியதால், கூட்டத்தைக் கண்காணிக்கும் பணியை கீழ்நிலை அதிகாரி களிடம் ஒப்படைத்தனர். பின்னர் அக்கூட்டம் காலி முகத்திடலை நோக்கி ஊர்வலமாகச் சென்றது. ஆரம்பத்தில் அது அமைதியாக இருந்ததால், அதை எவ்வாறு கையாள்வது என்பதில் ஓர் அதிகாரிக்குத் தெளிவில்லை. எனினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் கொள்ளுப்பிட்டியிலுள்ள காலி வீதிச் சந்தியை நோக்கி நகர்ந்தபோது, குப்பைத் தொட்டிகளைக் கவிழ்த்தனர், மரங்களை வெட்டினர் மற்றும் பேருந்துகள் மீது கற்களை வீசினர். பொலிஸ் நிலையத்திற்கு எதிரே அவர்கள் பொலிஸாரைச் சந்தித்த போது, இரு தரப்பினருக்கும் இடையே மோதல் வெடித்தது.

இதற்கிடையில், காலி வீதி வழியாக காலி முகத்திடலுக்குச் சென்ற பிக்குகள் குழுவொன்றை 'அலரி மாளிகை' அருகே கலைந்து செல்லுமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டனர், அவர்களும் அதற்கு இணங்கினர். காலி முகத்திடலில் ஏற்கனவே ஒரு கூட்டம் கூடியிருந்தது, பின்னர் அது பாதுகாப்புப் படைகளால் கலைக்கப்பட்டது. அது மீண்டும் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் ஒன்று திரண்டு அதன் மீது கற்களையும் வெடிபொருட்களையும் வீசத் தொடங்கியது. இதுவும், அருகிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்திற்குள் நுழைய முயன்றதும், பொலிஸார் கூட்டத்தின் மீது தடியடி நடத்தவும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசவும் தூண்டியது.

இறுதியில் கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திலிருந்து கூட்டம் கலைக்கப்பட்டது. பின்னர் அது காலி வீதிப் பகுதிகளில் புகுந்து புகையிரதங்கள், வீடுகள் மற்றும் கடைகளைத் தாக்கி அட்டூழியத்தில் ஈடுபட்டது. பிற்பகல் 2:45 மணியளவில் நிலைமை மிகவும் மோசமடைந்ததால், பஸ் ஓட்டுநர்கள் தமது வாகனங்களைக் கைவிட்டு, ஆயுத மேந்திய பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் வாகனம் ஓட்ட முடியாதெனக் கூறி மறுத்துவிட்டனர். அப்போது பொலிஸார்

"1966 ஜனவரி 8-ஆம் திகதி விடியற்காலையிலேயே கொழும்பு மாநகரம் ஒரு யுத்த களத்திற்கான தயார்படுத்தல் களுடன் காணப்பட்டது. அரசாங்கம் கொண்டு வரவிருந்த தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் பிரமாணங்களுக்கு எதிராக, எதிர்க்கட்சிக் கூட்டணி அழைப்பு விடுத்திருந்த 'கறுப்புத் தினமும்' பொது வேலைநிறுத்தமும் நாட்டின் நிர்வாகத்தை முடக்கும் இலக்கைக் கொண்டிருந்தன."



பல சந்தர்ப்பங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தினர். கொள்ளுப்பிட்டியில் மூன்று இராஜதந்திரிகள் சிறு காயங்களுக்குள்ளானதோடு, பிரிட்டிஷ், அமெரிக்க தூதரகங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் சேதமடைந்தன. பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயத்தின் முதன்மைச் செயலாளர் ஜோன் வாட்ஸ் (John Watts), தான் காலி வீதியில் வாகனத்தில் சென்றபோது தனது கார் ஒரு கும்பலால் கடுமையாகக் கல்லெறியப்பட்டு தாக்கப்பட்டதாகக் கூறினார். ஒரு கும்பல் அவரது காரைச் சூழ்ந்து கொண்டது, அவர் யார் என்று தெரிந்ததும் அத் தொந்தரவுக்கு மன்னிப்புக் கேட்டனர். அக்கூட்டம் ஓரளவுக்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது என்றும் அதன் தலைவர்கள் அதைக் கட்டுப்பாட்டில் வைக்க முயன்றனர் என்றும் அவர் நம்பினார்; ஆனால் எதற்கும் சேதம் விளைவிக்கவும் பிரச்சினையை உருவாக்கவும் முனையும் ஒரு சில குண்டர்களும் அங்கு இருந்தனர். செரண்டிப் வீதியில் அவர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களைக் கேட்டார், அது பெரும்பாலும் பொலிஸார் நடத்திய சூடாக இருக்கலாம். அவர் காயமடைந்த மூன்று பேரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்.

ஊர்வலம் கொள்ளுப்பிட்டி சந்தியை நெருங்கியபோது, பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. பொலிஸ் அத்தியட்சகர் ரீ.பி. வன்சார்கோயன் (T.B. Wansarkoyen) தலைமையிலான குழுவினர் கூட்டத்தைக் கலைந்து செல்லுமாறு எச்சரித்தனர். ஆனால், போராட்டக்காரர்கள் கற்களையும் போத்தல்களையும் கொண்டு பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர்.

வன்முறை கொள்ளுப்பிட்டியில் செறிந்திருந்த போதிலும், கொழும்பின் ஏனைய பகுதிகளிலும் வன்முறை காணப்பட்டது. களனியில் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் பேருந்துகளை நிறுத்தித் தமிழ் எழுத்துகள் மீது தார் பூசினர். பொலிஸார் வந்து மாணவர்களுடன் மோதினர், இதில் இரு தரப்பிலும் காயங்கள் ஏற்பட்டன.

'சட்டமும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று வாதிட்ட சேனாநாயக்க உடனடியாக அவசர நிலையை அறிவித்ததோடு, 'தேவைப்பட்டால் நாங்கள் சுடுவோம்' என்றும் அறிவித்தார். 'மக்கள் தாக்கப்படும் போதும், புகையிரதங்கள் மீது குண்டுகள் வீசப்படும் போதும், பேருந்து ஓட்டுநர்கள் பேருந்துகளிலிருந்து வெளியே இழுக்கப்படும் போதும் நான் சும்மா பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா?' என்று அவர் கேள்வி எழுப்பினார். அதிகாரிகள் கலவரத்தைக் கட்டுப்படுத்தினர், பின்னர் வன்முறைச் சம்பவங்கள் குறைந்தன, இருப்பினும் அவை முற்றாக அற்றுப்போகவில்லை.

உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின்படி சொத்துக்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களின் எண்ணிக்கை 66 ஆகும், கலவரத்தால் ஏற்பட்ட மொத்த சேதம் 10 இலட்சம் ரூபாய் எனப் பொலிஸார் மதிப்பிட்டனர். இருபதாயிரம் அரச ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் இணைந்ததாக அரசாங்கம் ஒப்புக்கொண்டது, இருப்பினும் எதிர்க்கட்சிகள் அந்த எண்ணிக்கை குறைந்தது இருமடங்கு என மதிப்பிட்டன.

அரசாங்கம் ஏற்கனவே கொழும்பு நகருக்குள் ஊர்வலங்கள் செல்வதற்குத் தடை விதித்திருந்தது. எனினும், அந்தத் தடையினை மீறி, கோட்டைப் பகுதியில் அமைந்துள்ள நாடாளுமன்றக் கட்டடத்தை (தற்போது ஜனாதிபதி செயலகம் அமைந்துள்ள இடம்) நோக்கி ஊர்வலம் நகரத் தொடங்கியது. இந்தப் பேரணியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றின் முக்கிய தலைவர்கள் பங்கெடுத்தனர். பொலிஸார் கொள்ளுப்பிட்டி சந்தியில் பாரிய வீதித் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர்.

இந்த இடத்தில் ஒரு மர்மமான கார் விபத்து ஒன்று நிகழ்ந்தது. எதிர்க்கட்சித் தலைவர் ஆர்.ஜி. சேனநாயக்கவின் கூற்றுப்படி, ஒரு கார் கூட்டத்திற்குள் புகுந்து பிக்குகள் மீது மோதியது; இது கூட்டத்தைச் சினமுறச் செய்வதற்காக அரசாங்கம் செய்த சதி என அவர் பின்னாளில் நாடாளுமன்றத்தில் வாதிட்டார். நிலைமை கட்டுக் கடங்காமல் சென்றதையடுத்து, பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். எனினும் கூட்டம் கலைவதாக இல்லை. இறுதியாக, பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில், கொள்ளுப்பிட்டி அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகாமையில் நின்று கொண்டிருந்த தம்புறாவே தம்பராவே ரதனசார தேரர் உயிரிழந்தார். அவர் 19 வயது பிக்கு ஆவார். அவர் உடனடியாகக் கொழும்பு பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அப்போது மதியம் 1.45 அங்கு அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார். 91 பேர் காயமடைந்த நிலையில் நான்கு பேர் படுகாயமடைந்திருந்தனர். அவர் வித்தியாலங்கார பல்கலைக்கழகம் தொடர்பான ஒரு மேலாடையை அணிந்திருந்ததால், அவர் அங்குள்ள ஒரு மாணவர் என்ற வதந்திகள் பரவின, ஆனால் அவர் பல்கலைக்கழக மாணவர் அல்ல என்பதை பல்கலைக்கழகம் பின்னர் உறுதிப்படுத்தியது. இளம் பிக்குவின் மரணம் குறித்து மூன்று நாள் விசாரணை நடத்தப்பட்டது. ரதனசார தேரர் துப்பாக்கித் தோட்டா மூலம் கொல்லப்பட்டதாக மேலதிக நீதிமன்ற மருத்துவ அதிகாரி (AJMO) தெரிவித்தார்.

ஜனவரி 8 பிற்பகல் கொள்ளுப்பிட்டியில் ஒரு பெட்ரோல் நிலையத்திற்கு அருகில் மூன்று பேர் கொண்ட ஆயுதமேந்திய பொலிஸ் பிரிவின் ஒரு பகுதியாகத் தான் இருந்ததாக உப-பொலிஸ் பரிசோதகர் டி.ஜே. சமரசிங்க சாட்சியமளித்தார். அங்கு ஒரு கும்பல் வந்ததைத் தொடர்ந்து பெட்ரோல் நிலையம் தீப்பிடித்தது. கும்பலைக் கலைந்து செல்லுமாறு பொலிஸ் பிரிவு கட்டளையிட்ட போது, அக்கூட்டம் பொலிஸார் மீது பொருட்களை வீசித் தாக்குதல் நடத்தி மேலும் ஆக்ரோஷமாக மாறியது. பொலிஸார் இரண்டு முறை துப்பாக்கிச் சூடு நடத்தியதையடுத்து கும்பல் தப்பியோடியது. பின்னர் அவர் கும்பல் வன்முறையின் புதிய இலக்கான புகையிரத நிலையத்திற்குச் சென்றார். அங்கும் மேலும் இரண்டு ரவுண்சுகள் சுடப்பட்டன, ஆனால் இந்த முறை கும்பல் உடனடியாகக் கலையவில்லை. கும்பல் இறுதியில் நகர்ந்தபோது, அது சீ வியூ அவென்யூவில் (Sea View Avenue) வாகனங்களைத் தாக்கத் தொடங்கியது. மீண்டும் அதே துப்பாக்கிச் சூடு-

கலைப்பு நடவடிக்கை தொடர்ந்தது, அப்போதும் அக் கூட்டம் வன்முறை செய்வதிலேயே குறியாக இருந்தது. அதேபோல், காலி வீதியில் சுமார் முந்நூறு பிக்குகள் உட்பட பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொண்ட கும்பலைத் தான் சந்தித்ததாக ஏ.எஸ்.பி (ASP) காமினி ஜெயசிங்க குறிப்பிட்டார். அவர்களை வெளியேறுமாறு அவர் கேட்டுக் கொண்டபோதும் அவர்கள் மறுத்தபோது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசுமாறு உத்தரவிட்டிருக்கிறார். அக்கும்பல் கலையாத நிலையில் துப்பாக்கிச் சூட்டைத் தொட நேரிட்டதாகக் குறிப்பிட்டார்.

கும்பல் வன்முறை மூலம் மரணங்களை ஏற்படுத்துமாறு மக்களைத் தூண்டுவதே ஆர்ப்பாட்டத் தலைவர்களில் சிலரின் குறிக்கோள், என்று ஒரு உத்தியோகபூர்வ செய்திக் குறிப்பு குறிப்பிடுகிறது.

அவசரகாலச் சட்டமும் ஊடகத் தணிக்கையும்:

துப்பாக்கிச் சூடு பற்றியும் பிக்குவின் மரணம் பற்றிய செய்தியும் பரவியதும் கொழும்பில் பெரும் பதற்றம் நிலவியது. பிரதமர் டட்லி சேனநாயக்க உடனடியாகக் கடும் நடவடிக்கைகளை எடுத்தார்.

பிற்பகல் 2.00 மணியளவில் நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

மாலை 4.00 மணி முதல் கொழும்பு மாநகரில் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு வந்தது.

பத்திரிகைத் தணிக்கையும் அமுல்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, ஜனவரி 9-ஆம் திகதி வெளிவந்த பத்திரிகை களில் பல செய்திகள் கறுப்பு மையால் அழிக்கப்பட் டிருந்தன.

வீதியில் இரத்தக் களரி நடந்து கொண்டிருந்தபோது, நாடாளுமன்றத்திற்குள் தமிழ் மொழிப் பிரமாணங்கள் மீதான விவாதம் பதற்றத்துடன் ஆரம்பமானது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபை நடுவே புகுந்து கூச்சலிட்டனர். இதன் போது, ஹபராதுவ தொகுதிப் நாடாளுமன்ற உறுப்பினர் பிரின்ஸ் குணசேகர பொலிஸாரால் சுடப்பட்ட ரதனசார தேரரின் இரத்தம் தோய்ந்த காவியுடையின் ஒரு பகுதியைச் சபையில் உயர்த்திப் பிடித்து ஆக்ரோஷமாக உரையாற் றினார்.

'ஒரு பௌத்த பிக்குவின் இரத்தத்தால் இந்த அரசாங்கம் கறைபடிந்துவிட்டது' என அவர் முழங்கினார். எனினும், பிரதமர் டட்லி சேனாநாயக்க மிக நிதானமாகப் பதிலளித் தார். சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை எனவும், தடையை மீறி வன்முறை யில் ஈடுபட்டவர்களைக் கட்டுப்படுத்தவே பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர் எனவும் அவர் வாதிட்டார்.

(தொடரும்...)



sarawanan.n@thaiveedu.com



வீரகத்தி தனபாலசிங்கம்



tg.theeban@gmail.com

சமஷ்டிமுறை தொடர்பிலான ஒரு நூற்றாண்டு விவாதமும் மாகாணசபைகள் அதிகாரப் பரவலாக்கல் அலகாக மாறிய கதையும்

பகுதி 2

1931 - 1947 காலப்பகுதியில் நடைமுறையில் இருந்த டொனமூர் அரசியலமைப்பு ஐக்கியப்பட்ட தேசிய அடையாளம் ஒன்றை உருவாக்கும் குறிக் கோளுடன் கொண்டுவரப்பட்டதாக கூறப்பட்டபோதிலும், அது உண்மையில் இலங்கையில் இனவாத அரசியலை தீவிரப்படுத்தியதன் மூலமாக எதிர்மறையான ஒரு திருப்புமுனையாக மாறியது.

இனரீதியான பிரதிநிதித்துவத்தை ஒழித்து சர்வஜன வாக்குரிமையுடன் பிராந்தியப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியதன் மூலமாக அந்த அரசியலமைப்பு சிங்களப் பெரும்பான்மை இனத்தவர்களுக்கு அரசியல் அதிகாரத்தை நகர்த் தியது. இதன் விளைவாக சிறுபான்மைச் சமூகங்கள் பாரபட்சமாக நடத்தப்படும் போக்கு தொடங்கியது.

சிங்கள மகாசபை:

பெரிய அரசியல் அபிலாசைகளைக் கொண்டிருந்த பண்டாரநாயக்கவும் முற்போக்கு தேசிய கட்சியை கைவிட்டு சிங்கள மகாசபையை ஆரம்பித்தார். சமஷ்டி முறைக் காக குரல் கொடுப்பதை நிறுத்திய அவர் அதற்குப் பதிலாக பன்முகப்படுத்தலை ஆதரிக்கத் தொடங்கினார். உள்ளூராட்சி முறையை மேம்படுத்தி பன்முகப்படுத் தலின் மூலமாக பெருமளவில் சுயாட்சியை வழங்குவதை பண்டாரநாயக்க ஆத ரித்தார்.

பெரிய உள்ளூராட்சி அதிகார அலகாக மாகாணங்களை நோக்கத்தொடங்கிய பண்டாரநாயக்க மாகாண சபைகளை அமைக்க விரும்பினார். இரண்டாவது அர சாங்க சபையில் உள்ளூராட்சி அமைச்சராக அவர் பதவி வகித்தபோது அந்த அமைச்சின் நிறைவேற்றுக்குழு உறுப்பினராக இருந்த ஆர்.எஸ்.எஸ். குணவர்தன மாகாணசபைகளை அமைப்பதற்காக கொண்டுவந்த பிரேரணையை அரசாங்க சபை அங்கீகரித்தது.

ஆனால், விளங்கிக்கொள்ள முடியாத காரணங்களுக்காக பண்டாரநாயக்க மாகாண சபைகளை அமைக்கும் திட்டத்தை முன்னெடுக்கவில்லை என்று ஜெயராஜ் எழுதி யிருக்கிறார்.

மாகாணசபை:

பிறகு தனது சிங்கள மகாசபையுடன் ஐக்கிய தேசிய கட்சியில் இணைந்து சுதந்திர இலங்கையில் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் முதலாவது அமைச்சரவையில் உள்ளூராட்சி அமைச்சராக பதவியேற்ற பண்டாரநாயக்க மக்களுக்கு நெருக்க மாக அரசாங்கத்தைக் கொண்டு செல்வதற்கான ஒரு வழிமுறையாக மாகாண

> **“இலங்கையில் முதன் முதலாக சமஷ்டி ஆட்சிமுறைக்காக குரல்கொடுத்த ஒரு அறிவார்ந்த ஒரு தலைவர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் எஸ்.ஜேவி. செல்வநாயகத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது சமஷ்டி பற்றி பேசுவதை தவிர்ப்பதில் கடுமையான கவனம் செலுத்துகின்ற அளவுக்கு அவரின் கொள்கைகளில் தலைகீழான மாற்றம் ஏற்பட்டது கவலைக்குரியது.”**

சபை திட்டத்துக்கு மீண்டும் உயிர்கொடுக்க முயற்சித்த போதிலும், அமைச்சர்களாக முழுமையாக தாங்கள் அனுப விக்க அதிகாரங்களை இழக்க அவரது சகாக்கள் விரும்ப வில்லை. அதனால் பண்டாரநாயக்காவினால் மீண்டும் மாகாணசபைத் திட்டத்தை முன்னெடுக்க முடியாமல் போய் விட்டது.

பண்டாரநாயக்க மாகாணசபைகளை அமைப்பது குறித்து சிந்தித்த காலப்பகுதியில் அவற்றுக்கு இன்று இருப்பதைப் போன்று இனத்துவ அரசியல் பரிமாணம் ஒன்று இருக்க வில்லை என்பதால் பெருமளவுக்கு பிரச்சினைகள் இல்லா மல் அவற்றை அன்று அமைத்திருக்க முடியும் என்பது ஜெயராஜின் அவதானிப்பாக இருக்கிறது.

முனைப்படைந்த இனவாத அரசியல்:

1951-ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறிய பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை அமைத்து ஐந்து வருடங்களில் பிரதமராக பதவிக்கு வந்த பிறகு அவரது அரசாங் கம் முன்னெடுத்த கொள்கைகள் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது எதிர்கால இருப்புக் குறித்து அச்சம் கொள்கிற அளவுக்கு இனவாத அரசியலை முனைப்படையச் செய்தன. தனிச்சிங்களச் சட்டம் அதில் முக்கியமானது.

இலங்கையில் முதன் முதலாக சமஷ்டி ஆட்சி முறைக்காக குரல்கொடுத்த ஒரு அறிவார்ந்த ஒரு தலைவர் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற் காக இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் எஸ். ஜேவி. செல்வநாயகத்துடன் நடத்திய பேச்சு வார்த் தைகளின்போது சமஷ்டி பற்றி பேசுவதை தவிர்ப் பதில் கடுமையான கவனம் செலுத்துகின்ற அள வுக்கு அவரின் கொள்கைகளில் தலைகீழான மாற்றம் ஏற்பட்டது கவலைக்குரியது.

இன்று நடைமுறையில் இருக்கின்ற மாகாண சபைகள் முறை 39 வருடங்களுக்கு முன்னர் இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து ஜே.ஆர். ஜெயவர்தன அர சாங்கத்தினால் கொண்டு வரப்பட்டிருந்தாலும், அது அடிப் படையில் பல தசாப்தங்களுக்கு முன்னர் பண்டாரநாயக் கவின் சிந்தனையில் உதித்ததே என்பது கவனிக்கத் தக்கது.

பிராந்திய சபைகளை அமைப்பதற்காக செல்வநாயகத்துடன் பண்டாரநாயக்க செய்துகொண்ட 1957 ஒப்பந்தத்துக்கு எதி ராக தென்னிலங்கையில் எதிர்ப்பைக் கிளப்புவதில் முன்ன ரங்கத்தில் நின்ற ஜெயவர்தனவை மூன்று தசாப்தங்களுக்கு பிறகு மாகாணசபைகளை அமைக்க நிர்ப் பந்தித்த நிகழ்வுப் போக்குகளை இனிமேல் பார்ப்போம்.


சமாதான உடன்படிக்கை:

பிராந்தியங்களுக்கு அதிகாரப் பரவலாக் கல் ஏற்பாடு எதையும் ஒருபோதும் கொண் டிராத இலங்கையில் இந்தியாவின் தலை யீடு இல்லாமல் இருந்திருந்தால் மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்காது என்பதில் சந்தேகமில்லை.

தேசிய இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய சகல விவகாரங்களிலும் கடுமையான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தவரான ஜனாதிபதி ஜெயவர்தனவை அந்த பிரச்சி னைக்கு முடிவைக் கொண்டுவர வேண் டும் என்றால் அதிகாரப் பரவலாக்கல் ஏற் பாடு ஒன்று அவசியம் என்று நம்பவைப் பதில் அல்லது வழிக்குக் கொண்டு வரு வதில் இந்தியா அந்த நேரத்தில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியது.

“1951-ஆம் ஆண்டில் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறிய பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை அமைத்து ஐந்து வருடங்களில் பிரதமராக பதவிக்கு வந்த பிறகு அவரது அரசாங்கம் முன்னெடுத்த கொள்கைகள் இலங்கையில் சிறுபான்மைச் சமூகங்கள் தங்களது எதிர்கால இருப்புக் குறித்து அச்சம் கொள்கிற அளவுக்கு இனவாத அரசியலை முனைப்படையச் செய்தன.”





1983 கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கையில் முரண்பட்டு நின்ற இரு தரப்பினருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வ தற்கு நல்லெண்ண உதவிகளை வழங்க முன்வந்த அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி தனது விசேட தூதுவராக நியமித்த கோபாலசுவாமி பார்த்தசாரதிக்கு ஜெயவர்தனவை இணங்க வைப்பதில் முக்கிய பங்கு இருந்தது.

கோபாலசுவாமி பார்த்தசாரதி :

தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் தலைசிறந்த அரசியலமைப்புச் சட்ட நிபுணருமான காலஞ்சென்ற கலாநிதி நீலன் திருச்செல்வம் பத்திரிகைகளுக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் ஜனாதிபதி ஜெயவர்தன ஒரு அரசியலமைப்பு நிபுணராக இருந்த போதி லும் கூட, அதிகாரப் பரவலாக்கல் கோட்பாட்டின் பயனுடைத் தன்மை மீது அவருக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பெரும் கஷ்டப்பட வேண்டியிருந்தது என்று தன்னிடம் பார்த் தசாரதி கூறியதாக குறிப்பிட்டிருந்தார்.

அதேவேளை, முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் ஆய் வாளருமான கலாநிதி தயான் ஜெயதிலக எழுதிய கட்டுரை யொன்றில் கறுப்பு ஜூலைக்கு பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது எதிர் நோக்க வேண்டியிருந்த கஷ்டங்கள் குறித்து பார்த்தசாரதி புதுடில்லி சந்திப்பொன்றில் தன்னிடம் கூறியதாக தெரிவித் திருந்தார்.

1984 பேச்சுவார்த்தைகளின்போது ஒரு கட்டத்தில் ஜனாதி பதி ஜெயவர்தனவின் வேண்டுகோளின் பேரில் கண்டியில் உள்ள பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களைச் சந்தித்த தாகவும் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வொன் றைக் காண்பது சாத்தியமில்லாத அளவுக்கு கடுமையானது என்பதை தெரிந்து கொண்டதாகவும் பார்த்தசாரதி தன்னிடம் கூறியதாகவும் கலாநிதி ஜெயதிலக எழுதியிருந்தார்.

சிக்கல் மிகுந்த மத்தியஸ்த முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஆற்றல்வாய்ந்த விசேட தூதுவர் ஒருவரை நியமிக்க வேண்டி யிருந்தது. அந்த தூதுவர் எமது பிராந்தியத்தின் பூகோள அரசியலை முறையாகப் புரிந்துகொண்ட இராஜதந்திரியா கவும் இலங்கையின் அரசியலமைப்பின் சிக்கலான தன்மை களைப் புரிந்துகொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக் கக்கூடிய சட்ட நிபுணராகவும் இலங்கையின் ஒற்றையாட்சி வரையறைக்குள் சுயாட்சிப் பிரதேச அலகொன்றை செதுக்கக் கூடிய அரசியல் தந்திரோபாயம் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும்.

அத்துடன் அவர் இந்தியாவின் உள்நாட்டு அரசியலை விளங்கிக் கொண்டு தமிழ்நாடு மாநிலத்தின் அரசியல் சக்தி களின் நம்பிக்கையை வென்றெடுக்கக்கூடியவராகவும் இருக்க வேண்டும். இந்த அளவுகோல்களுக்கு பொருந்துபவராக இராஜதந்திரப் பதவிகள் பலவற்றை வகித்தவரும் முன்னாள் வெளியுறவுச் செயலாளருமான கோபாலசுவாமி பார்த்த சாரதியை இந்திரா காந்தி கண்டார்.

இந்திரா காந்தியின் நம்பிக்கைக்கு பெரிதும் பாத்திரமான வராக பார்த்தசாரதி விளங்கியது ஒரு மேலதிக அனுகூலமா கவும் இருந்தது. வெளிநாட்டுக் கொள்கையிலும் உள்நாட் டுக் கொள்கைகளிலும் சர்ச்சைக்குரிய விவகாரங்களில் அடிக் கடி அவருடன் திருமதி காந்தி ஆலோசனை கலப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்குலகில் கல்விகற்ற கொழும்பு மேல்நடுத்தர வர்க்கத் தைச் சேர்ந்த பிரமுகர்கள் பலரின் தனிப்பட்ட நண்பராக பார்த்தசாரதி இருந்தார் என்பது பலருக்குத் தெரியாது. கேம் பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அவருடன் கூட்டாளிகளாக இருந்தவர்களில் கம்யூனிஸ்ட் தலைவர் பீற்றர் கெனமன், முன்னாள் பிரதமரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங் கவின் தந்தையார் எஸ்மண்ட் விக்கிரமசிங்க, மத்திய வங்கி யின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசாமியின் தந்தை யார் ராஜு குமாரசாமி ஆகியோர் முக்கியமானவர்கள்.

தனது பணிக்கு முன்பாக இருந்த சிக்கல்களும் இடறுகுழி களும் பாரதூரமானவை என்பதை பார்த்தசாரதி நன்கு விளங்கிக் கொண்டார். சிங்கள சமூகத்துக்கு தமிழ்ச் சமூகத் துக்கும் இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாக இருந்தன. அந்தளவுக்கு 1893 கறுப்பு ஜூலை அனர்த்தம் ஆழமான மனக்காயங்களையும்

உணர்வதிர்ச்சி வேதனைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்தது. முதலில் அன்றைய காலகட்டத்தின் நிகழ்வுப் போக்குகளுக்கு தன்னைப் பரிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை பார்த்தசாரதிக்கு இருந்தது. எந்த ஆலோசனையையும் வழங்குவதற்கு முன்னதாக அன்றைய அரசியல்வாதிகளுடன் அவர் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது.

அன்றைய அரசாங்கத் தலைவர்களினதும் எதிர்க்கட்சிகளின் தலைவர்களினதும் அச்சங்கள், ஏக்கங்கள், பிரமைகள் மற்றும் எண்ணப் போக்குகளை மிகுந்த நிதானத்துடன் கிரகிக்க வேண்டியதே பார்த்தசாரதியின் முதற் பணியாக இருந்தது. இலங்கையின் பழைய இடதுசாரித் தலைவர்களுடன் அவரால் எளிதாகப் பழகிக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரை, அவர்களின் வேதனை, எதிர்பார்ப்புகள் மற்றும் நம்பிக்கையின் பார்த்தசாரதி விரைவாகவே மாறிவிட்டார். தமிழ்த் தலைவர்களுக்கு அவர் ஆலோசனைகளை வழங்கினார். அத்துடன் தங்களுக்கு இருக்கக்கூடிய தெரிவுகளின் மட்டுப்பாடுகளை புரிந்துகொள்ளுமாறு அவர் தமிழ்த் தலைவர்களை அடிக்கடி வலியுறுத்தினார். பேச்சுவார்த்தைச் செயன்முறைகள் தொடர்பில் அடிப்படைவாத நிலைப்பாடுகளில் பிடிவாதமாக இருந்தவர்களுக்கு 'போராடிக் கொண்டே பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுங்கள்' என்பதே அவரின் ஆலோசனையாக இருந்தது.

பாரத்தசாரதியின் பணி மிகுந்த சிரமங்கள் நிறைந்தத ஒன்றாகவே இருந்தது. பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு அவர் அடிக்கடி ஆலோசனை வழங்கினார். தமிழர் ஐக்கிய விடுதலை கூட்டணியின் தலைவர்களுடன் அவர் தவிர்க்க முடியாத வகையில் விசேடமான உறவுமுறையொன்றை வளர்த்துக் கொண்டார் என்று கலாநிதி திருச்செல்வம் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

பிராந்திய சபைகளுக்கு (Regional Councils) அதிகாரங்களைப் பரவலாக்குவதற்கான ஒரு தொகுதி யோசனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தியதே பார்த்தசாரதியின் தனித்துவமான பங்களிப்பாகும். அந்த யோசனைகளே 'இணைப்பு -- சி' (Annexure -- C) என்று பிரபல்யமாக அழைக்கப்பட்டவையாகும். 1983 ஓகஸ்ட் தொடக்கம் டிசம்பர் வரை கொழும்பிலும் புதுடில்லியிலும் ஜனாதிபதி ஜெயவர்தனவுடன் நடத்திய சந்திப்புக்களில் இந்த இணைப்பு - சியைப் பூரணப்படுத்தும் செயற்பாடுகளை பார்த்தசாரதி நிறைவு செய்தார் என்று கூறப்பட்டது.

தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் ஜெயவர்தன அரசாங்கத்துக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிப்பதில் ஒரு முழுநிறைவான சமரசப் பேச்சுவார்த்தையாளருக்குரிய சகல திறமைகளையும் மதிநுட்பத்தையும் வெளிக் கொணர்ந்த பார்த்தசாரதியினால் முன்வைக்கப்பட்ட திட்டத்தின் அம்சங்களை ஜெயவர்தன உடனடியாகவே இணங்கிக் கொண்டார்.

"1984 ஜனவரியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில் இணைப்பு – சி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சிங்கள அமைப்புகள், பௌத்த குழுக்கள் மற்றும் சில எதிர்க்கட்சிகளிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பைத் தொடர்ந்து ஜெயவர்தன அதிலிருந்து தன்னைத் தூரவிலக்கிக்கொண்டார். இணைப்பு – சி யின் உள்ளடக்கங்களுக்கு தான் எந்த வகையிலும் பொறுப்பு இல்லை என்று அவர் கைகழுவி விட்டார்."

ஆனால், அதிகாரப் பரவலாக்கத்துக்கான அடிப்படை அலகு (Unit of Devolution) தொடர்பில் இணக்கப்பாடு ஒன்றுக்கு வருவதென்பது தொடர்ந்தும் கஷ்டமானதாகவே இருந்தது. ஒரு மாகாணத்திற்குள் இருக்கும் மாவட்டங்களை இணைத்த பெரியதொரு அதிகாரப்பரவலாக்கல் அலகு தமிழர்களுக்கு வழங்கப்படக்கூடாத ஒரு சலுகையாக நோக்கப்பட்டது.

பிறகு 1983 டிசம்பரில் ஜெயவர்தன புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தனியொரு மொழிரீதியான பிராந்தியத்தை (Single Linguistic Region) அமைப்பதற்கான யோசனையை முன்வைப்பதற்கு இந்திரா காந்தியின் ஆதரவை பார்த்தசாரதி பெற்றிருந்தார். அத்தகைய யோசனைக்கு இணங்குவதன் மூலம் தென்னிலங்கையில் தனது ஆதரவுத்தளத்தை இழப்பதற்கு ஜெயவர்தன விரும்பவில்லை. ஆனால், அவர் விட்டுக்கொடுப்பு ஒன்றைச் செய்வதற்கு இணங்கினார்.

இணைப்பு - சி யில் பிராந்திய சபைகள் என்று இருந்ததை மாகாண மட்டத்துக்கு மட்டுப்படுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். புதுடில்லி அஷோக் ஹோட்டலில் நடைபெற்ற அந்த பேச்சுவார்த்தையின் போது இந்தியத் தரப்பின் நெருக்குதலினால் ஒரு கட்டத்தில் பொறுமையிழந்த ஜெயவர்தன பார்த்தசாரதியை நோக்கி 'நான் எங்கே கையெழுத்திட வேண்டும்' என்று கேட்டதாகவும் அதற்கு பதிலளித்த பார்த்தசாரதி 'இது ஒரு உடன்படிக்கை அல்ல. கையெழுத்து ஒன்றும் தேவையில்லை' என்று கூறியதாக அந்த நேரத்தில் இந்திய ஊடகங்களில் செய்தி வெளியாகியது.

1984 ஜனவரியில் கூட்டப்பட்ட சர்வகட்சி மகாநாட்டில் இணைப்பு - சி சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், சிங்கள அமைப்புகள், பௌத்த குழுக்கள் மற்றும் சில எதிர்க்கட்சிகளிடமிருந்து கிளம்பிய எதிர்ப்பைத் தொடர்ந்து ஜெயவர்தன அதிலிருந்து தன்னைத் தூரவிலக்கிக் கொண்டார். இணைப்பு - சியின் உள்ளடக்கங்களுக்கு தான் எந்த வகையிலும் பொறுப்பு இல்லை என்று அவர் கைகழுவிவிட்டார். அதனால் சர்வகட்சி மகாநாடு தோல்வியில் முடிவடைந்தது.

பார்த்தசாரதியை ஓரங்கட்டிய ராஜீவ்:

இந்திரா காந்தியின் மறைவுக்கு பிறகு அவரது மகன் ராஜீவ் காந்தி பிரதமராகப் பதவியேற்றதை தொடர்ந்து 1985 முற்பகுதியில் புதுடில்லியில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆனால், தாயாரின் நம்பிக்கைக்குரியவராக விளங்கிய பார்த்தசாரதியை பேச்சுவார்த்தை செயன்முறைகளில் ஈடுபடுத்துவதை மகன் தவிர்த்தார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் வழிகாட்டலுக்காகவும் ஆலோசனைக்காகவும் பெருமளவுக்கு பார்த்தசாரதியில் தங்கியிருந்த காரணத்தால் அவரின் வகிபாகத்தில் இலங்கை அரசாங்கத்தரப்புக்கு சந்தேகம் ஏற்படத் தொடங்கியது. அவரை



ஓரங்கட்டுவதற்கு ராஜீவ் காந்தி தீர்மானித்தற்கான ஒரு காரணி என்று கூறப்பட்டது.

வெளியுறவு செயலாளர் ரொமேஷ் பண்டாரி, அமைச்சர்கள் பி. சிதம்பரம் மற்றும் நட்டார்சிங் ஆகியோரையே இலங்கை இனப்பிரச்சினையைக் கையாளுவதற்கு ராஜீவ் காந்தி பயன் படுத்தினார்.

1987 ஜூலை 29 சமாதான உடன்படிக்கையில் கொழும்புக்கு வருகை தந்த ராஜீவ் காந்தியுடன் செல்வாக்குமிக்க அமைச் சர்கள், இராஜதந்திரிகள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய பெரிய தூதுக்குழுவொன்று வந்திருந்தது. இரு நாடுகளுக் கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் ஆரம்பக்கட்டங் களில் தீர்க்கமான பாத்திரத்தை வகித்து சமாதான. உடன் படிக்கைக்கு அடித்தளத்தை அமைத்துக் கொடுத்த பார்த்த சாரதி அந்த தூதுக்குழுவில் இல்லாதது ஒரு பிரகாசமான வெற்றிடமாக இருந்ததாக அந்த நேரத்தில் அரசியல் மற்றும் இராஜதந்திர வட்டாரங்களில் வர்ணிக்கப்பட்டது.

எது எவ்வாறிருந்தாலும், இலங்கையில் அதி காரப் பரவலாக்கத்துக்கான கோட்பாட்டு அடிப்படையையும் பல்லின சமுதாயமொன் றுக்கான அரசியலமைப்பு அத்திபாரத்தை யும் (Constitutional foundation for a multi - ethnic polity) அமைத்த பெருமையில் பெரும் பகுதி பார்த்தசாரதிக்கே உரியது என்று என் பதில் சந்தேகமில்லை என்று நீலன் திருச் செல்வம் எழுதினார்.

அரசியல் தீர்வு குறித்து தொடரும் விவாதம்:

சமாதான உடன்படிக்கையை அடுத்து மாகாண சபைகள் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டு சுமார் 40 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்னமும் கூட எமது தேசிய இனப்பிரச்சினை முடிவுக்கு வரவில்லை. கறுப்பு ஜூலைக்குப் பிறகு 43 வருடங்களும் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு 17 வருடங்களும் கடந்துவிட்ட நிலையி லும் இன்னமும் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து நாம் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.

மாகாண சபைகளோ அல்லது அவற்றை அறிமுகப்படுத்துவ தற்காக இலங்கையின் அரசியலமைப்புக்கு கொண்டுவரப் பட்ட 13-வது திருத்தமோ இனப்பிரச்சினைக்கு நிலைபேறான அரசியல் தீர்வைத் தரப்போவதில்லை என்று தமிழ் அரசியல் கட்சிகள் கூறிக் கொண்டிருக்கின்றன. அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அர சாங்கங்களை புதுடில்லியினால் வழிக்குக் கொண்டுவர முடி யவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். மாகாண சபைக ளுக்கு அரசியலமைப்பு ரீதியாக வழங்கப்பட்டிருக்கும் அதி காரங்கள் பலவற்றை வெவ்வேறு காலகட்டங்களில் புதிய சட் டங்கள் மூலமாக கொழும்பு அரசாங்கங்கள் பறித்துக் கொண்டே வந்திருக்கின்றன.

> **“கறுப்பு ஜூலைக்குப் பிறகு 43 வருடங்களும் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு 17 வருடங்களும் கடந்துவிட்ட நிலையிலும் இன்னமும் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து நாம் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருக்கிறோம்.”**

மாகாணசபைகள் தற்போது இயங்கவில்லை. அதிகாரப்பரவலாக்கல் கோட்பாட்டையே அவ மதிக்கும் வகையில் ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநர்களின் நிருவாகத்தின் கீழ் மாகாணங்கள் இருக்கின்றன. கடந்த எட்டு வருடங்களாக மாகாண சபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க தலை மையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் ஒரு வருட காலத்திற்குள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதாக உறுதியளித்த போதிலும், சாத்தியமானளவுக்கு அந்த தேர்தல்களை மேலும் பின்போடுவ தற்கான வியூகங்களே முன்னெடுக்கப்படு கின்றன போன்று தெரிகிறது.

மாகாண சபைகளுக்கு எந்த முறையின் கீழ் தேர்தல்களை நடத்துவது என்பதை ஆராய் வதற்கு தற்போது வெளியுறவு அமைச்சர்

விஜித ஹேரத் தலைமையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்களில் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான ஆணை அதற்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதன் முதல் கூட்டத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் ஹேரத் முதல் அறிக்கையைத்தான் மூன்று மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டும் என்று வியாக்கியானம் செய்ததாக தெரிய வந்தது. தேர்தல்களை தாமதிப்பதற்கான நோக்கம் அவரின் இந்த கருத்தில் தெளிவாகத் தொனிக்கிறது.

இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு:

புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் வரை மாகாண சபைகள் முறைமை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று கூறும் அரசாங்கத் தலைவர்கள் புதிய அரசியலமைப்பில் அந்த முறைமையையாவது தொடர்ந்து இருக்க அனுமதிப்பார்கள் என்பதற்கு உத்தரவாதமில்லை. மாகாண சபைகளுக்கு மாத்திரமல்ல, எந்தவொரு அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டுக்கும் எதிர்ப்பைக் காட்டிய வரலாற்றைக் கொண்டது தேசிய மக்கள் சக்தியின் தலைமைக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) என்பதால் இலங்கையில் அதிகாரப் பரவலாக்கலின் எதிர்காலம் கேள்விக்கு உள்ளாகியிருக்கிறது.

மாகாசபை தேர்தல்களை நடத்தி அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு (13-வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு நேரடியாகக் கேட்பதன் மூலம் இலங்கை ஜனாதாபதி அநுர குமார திசநாயக்கவுக்கு அசௌகரியத்தைக் கொடுக்க தற்போது பிரதமர் நரேந்திர மோடி விரும்பவில்லை) இடைக்கிடை இலங்கை அரசாங்கத்தை கேட்பதை தவிர, இது விடயத்தில் இந்தியா வேறு எதையும் செய்யும் என்று தற்போதைய புவிசார் அரசியல் நிலவரங்களுக்கு மத்தியில் எதிர்பார்க்க முடியாது.

தமிழ் அரசியல் கட்சிகள் இனப்பிரச்சினைக்கு சமஷ்டிமுறையின் அடிப்படையிலான தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்துகின்றன. வேறு காரணத்துக்காக என்றாலும் சிங்களவர்கள் தரப்பில் சமஷ்டி ஆட்சிமுறையோசனை முன்வைக்கப்பட்டு ஒரு நூற்றாண்டும் தமிழர் தரப்பினால் அந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு முக்கால் நூற்றாண்டும் கடந்துவிட்ட நிலையில், அரைகுறையான அதிகாரங்களுடன் கூடிய மாகாண சபைகளைக் கூட ஒழுங்காக செயற்பட வைக்க சிங்கள அரசியல் சமுதாயம் விரும்பவில்லை.

தமிழர் அரசியல் சமுதாயம் சமஷ்டி முறைத் தீர்வொன்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாலும், புதிய அரசியலமைப்பை அரசாங்கம் கொண்டுவரும் பட்சத்தில் முதலில் மாகாண சபைகளைக் காப்பாற்றுவதற்காகப் போராட வேண்டியிருக்கும். இதுதான் உண்மையான நிலை.



Thanabalasingham.V@thaiveedu.com

சிந்தனைக் களம்
(இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்

Zoom ID: 861 6957 8632 Passcode: 687 942

சிறப்பு நிகழ்வு : 13

உரைப் பொருள்:

'செயற்கை நுண்ணறிவு நோக்கில் பண்ணிசை மரபு'

உரையாளர்:

Dr. பாலமுருகன் வரதராஜன்

(Professor - Artificial Intelligence, Tamil Technology Research center, Bannari Amman Institute of Technology, Sathyamangalam, Tamil nadu)



30 மே 2026 சனிக்கிழமை 9:00pm-11:00pm (கனடா-ரொறன்ரோ)
30 மே 2026 சனிக்கிழமை 6:00pm-8:00pm(கலிபோர்னியா)


31 மே 2026 ஞாயிற்றுக்கிழமை 6:30am - 8:30am (இலங்கை, இந்தியா)
31 மே 2026 ஞாயிற்றுக்கிழமை 11:00am-1:00pm(சிட்னி)

website: www.chinthanaikkalam.org

E-mail: chinthanaikkalam@gmail.com

மொழியின் அரசியல் 3

மொழியும் காலனித்துவ அரசும் II



தே. ஞானசீர்த்தி மீநிலங்கோ

மொழியியல் ரீதியாக அதிகாரத்தை ஒழுங்குபடுத்துதல்:

நவீன அதிகாரம் காகித வேலைகள் மூலம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. படிவங்கள், கோப்புகள், பதிவேடுகள், நீதிமன்ற பதிவுகள் மற்றும் அதிகாரபூர்வ கடிதப் போக்குவரத்து ஆகியவை நவீன அரசின் பகுத்தறிவு-சட்ட அதிகாரம் (Rational-legal authority) என்று மேக்ஸ் வெபர் பிரபலமாக விவரித்ததை உருவாக்குகின்றன. இருப்பினும், காலனித்துவ சூழல்களில், இந்த பகுத்தறிவு ஒருபோதும் நடுநிலையாக இருக்கவில்லை. ஏகாதிபத்திய ஆதிக்கம் வழக்கமானதாகவும், சட்டபூர்வமானதாகவும், போட்டியிட கடினமாகவும் மாற்றப்பட்ட முக்கிய தளங்களாக அதிகாரத்துவமும் சட்டமும் இருந்தன. இந்த அதிகார வரிசைப்படுத்தல் அடையப்பட்ட ஊடகமாக மொழி இருந்தது. காலனித்துவ இலங்கையில், அதிகாரத்துவமும் சட்டமும் ஆங்கிலத்தை மட்டும் பயன்படுத்தவில்லை. அவை ஆங்கிலம் மூலம் உருவாக்கப்பட்டன. யார் ஆட்சி செய்ய முடியும், யார் உரிமைகளைக் கோர முடியும், யார் கேட்க முடியும் என்ற மொழியியல் ஆதிக்கம் கட்டமைக்கப்பட்டது. மிக முக்கியமாக, ஆட்சியாளர்கள் மற்றும் குடிமக்கள் இருவருக்கும் அதிகாரத்தை ஓர் அதிகாரபூர்வ மொழி மூலம் பாயும் ஒன்றாகப் புரிந்துகொள்ள பயிற்சி அளித்தது. இந்த மொழியியல் அதிகார வரிசைப்படுத்தல், காலனித்துவத்திற்குப் பிந்தைய, இலங்கை அரசால் பெறப்பட்ட மிகவும் நீடித்த காலனித்துவ மரபுகளில் ஒன்றாக மாறியது.

மார்க்ஸ் வெபரின் அதிகாரத்துவம் பற்றிய முக்கியமான கருத்து சட்டப்படி நடத்தல், விதிக்குக் கட்டுப்பட்ட நடைமுறை மற்றும் எழுதப்பட்ட ஆவணங்களை வலியுறுத்தியது. ஆனால் வெபரின் மாதிரி அரசுக்கும் குடிமகனுக்கும் இடையிலான மொழியியல் அணுகலைக் கருதியது. காலனித்துவ சமூகங்களில், இந்த அனுமானம் பொருந்தவில்லை. அதிகாரத்துவம் பெரும்பான்மையினருக்கு அந்நியமான ஒரு மொழி மூலம் செயற்பட்டது. பகுத்தறிவு-சட்ட அதிகாரத்தை மொழியியல் ஆதிக்க அமைப்பாக மாற்றியது. இலங்கையில், ஆங்கிலம் கோப்புகள், குறிப்புகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிக்கைகளின் மொழியாக இருந்தது. முடிவுகள் பதிவு செய்யப்பட்டு, நியாயப்படுத்தப்பட்டு, ஆங்கிலத்தில் காப்பகப்படுத்தப்பட்டன. இது அரசியல் விஞ்ஞானி திமோதி மிட்செல் 'அரசு விளைவு' (state effect) என்று அழைப்பதை உருவாக்கியது. சமூகத்திற்கு மேலே நிற்கும் ஓர் ஒத்திசைவான, புறநிலை அதிகாரத்தின்

தோற்றம். இருப்பினும் இந்த அதிகாரம் அதன் மொழியில் சரளமாக இருப்பவர்களுக்கு மட்டுமே புரியக்கூடியதாக இருந்தது.

சுதேசிய மொழி பேசும் மக்களுக்கு, அதிகாரத்துவம் தெளிவற்றதாகவும் அணுக முடியாததாகவும் இருந்தது. படிவங்களைப் படிக்க முடியவில்லை. விதிமுறைகளை விளங்கிக் கொள்ள முடியவில்லை. மேல்முறையீடுகளுக்கு இடைத்தரகர்கள் தேவைப்பட்டனர். எனவே அதிகாரத்துவ அதிகாரம் விதிகளை மட்டுமல்ல, மொழியியல் விலக்கையும் சார்ந்தது. இந்த நிகழ்வு தற்செயலானது அல்ல. நிர்வாகத்தில் சுதேசிய மொழி பயன்பாட்டை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை பிரித்தானிய நிர்வாகிகள் தொடர்ந்து எதிர்த்தனர், பன்மொழி அதிகாரத்துவம் செயற்றிறன் மற்றும் ஒழுக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்று வாதிட்டனர். சீரான மொழி ஒழுங்குமுறைக்கும், பன்மை என்பது ஒழுங்கின்மைக்கும் சமமாக இருந்தது.

காலனித்துவ இலங்கையில், சிவில் சர்வீஸ் இந்த மொழியியல் படிநிலையை உள்ளடக்கியது. ஆட்சேர்ப்புத் தேர்வுகள் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டன. மாவட்ட அலுவலகங்கள் முதல் காலனித்துவ செயலகம் வரை ஒவ்வொரு மட்டத்திலும் அதிகாரபூர்வ கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. பயிற்சிக் கையேடுகள் மற்றும் விதிமுறைகள் சிங்களத்திலோ தமிழிலோ கிடைக்கவில்லை. இதன் விளைவாக, அதிகாரத்துவ அதிகாரம் ஆங்கிலம் பேசும் அதிகாரிகளைச் சுற்றி குவிந்திருந்தது. சிங்கள அல்லது தமிழ் எழுத்தர்கள் பணியமர்த்தப்பட்ட போதிலும், அவர்களின் உத்தியோகபூர்வ முன்னேற்றம் என்பது முழுமையாக ஆங்கிலப் புலமையையே சார்ந்திருந்தது. இவ்வாறு, மொழியானது அரசிற்கான அணுகலைத் தீர்மானித்தது மட்டுமல்லாமல், அத்துறையினுள்ளான படிநிலை உயர்வையும் கட்டமைத்தது.

சாதாரண குடிமக்களுக்கு, அதிகாரத்துவத்துடனான சந்திப்புகள் இந்தப் படிநிலையை தினமும் வலுப்படுத்தின. நிலப் பதிவு, வரிவிதிப்பு, அனுமதிகள் மற்றும் உரிமங்கள் அனைத்தும் ஆங்கில மொழி ஆவணங்களுடன் ஈடுபாட்டைத் தேவைப்படுத்தின. எழுத்தர்கள் மற்றும் மொழி பெயர்ப்பாளர்களைச் சார்ந்திருப்பது வாடிக்கையாகி விட்டது. இந்தச் சார்புநிலை சுயாட்சியை அரித்து, வெறுப்பை வளர்த்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நில உரிமைகளுக்காக மனு செய்த ஒரு சிங்கள விவசாயி, 'காகிதத்திற்கு ஆங்கிலம் தெரியும், ஆனால் நிலம் நம்மை அறிந்திருக்கிறது' என்று புகார் கூறியதாகக் கூறப்படுகிறது. இந்தக் கருத்து, வாழும் யதார்த்தத்திற்கும் அதிகாரத்துவ சுருக்கத்திற்கும் இடையிலான வேறுபாட்டைப் படம்பிடிக்கிறது.

அதிகாரத்துவம் நிர்வாக ரீதியாக அதிகாரத்தை கட்டளையிட்டால், சட்டம் அதை நெறிமுறையாக கட்டளையிட்டது. இலங்கையில் காலனித்துவ சட்ட அமைப்புகள் உலகளாவியதாகவும் பாரபட்சமற்றதாகவும் தோன்றும் வகையில் வடிவமைக்கப்பட்டன, இருப்பினும் அவை பெரும்பாலான பாடங்களை அர்த்தமுள்ள பங்கேற்பிலிருந்து விலக்கும் வகையில் ஆங்கில சட்ட மொழி மூலம் செயல்பட்டன. நீதிமன்ற நடவடிக்கைகள், தீர்ப்புகள், சட்டங்கள் மற்றும் சட்ட கடிதப் போக்குவரத்து முதன்மையாக ஆங்கிலத்தில் நடத்தப்பட்டன. எப்போதாவது உரைபெயர்ப்பாளர்கள் வழங்கப்பட்டாலும், மொழிபெயர்ப்பு சீரற்றதாகவும் பெரும்பாலும் போதுமானதாகவும் இல்லை. சட்ட நுணுக்கம், வாதம் மற்றும் முன்னுதாரணத்தை உள்ளூர் மொழி பேசுபவர்களுக்கு அணுக முடியாததாகவே இருந்தது.

இந்த மொழியியல் தடை ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது. இது குடிமக்களை அதில் பங்கேற்பவர்களாக அல்லாமல் சட்டத்தின் பொருள்களாக மாற்றியது. நீதி மக்களால் நிர்வகிக்கப்படும் ஒன்றாக மாறியது, அவர்களால் கோரப்பட்ட ஒன்றாக அல்ல. சமூக வாழ்க்கையை ஒழுங்குபடுத்துவதற்கான இயற்கையான வழியாக சட்டம் எடுத்துக்கொள்ளப்படும்போது அது மேலாதிக்கமாக மாறும் என்று சட்ட மானுடவியலாளர் சாலி எங்கிள் மெர்ரி வாதிட்டார். காலனித்துவ இலங்கையில், சட்டம் புரிந்து கொள்ளப்பட்டதால் அல்ல, மாறாக அது மொழியியல் அதிகாரம் மூலம் செயற்படுத்தப்பட்டதால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கை அனுபவம் பிரிட்டிஷ் இந்தியாவைப் போலவே உள்ளது. ஆங்கில மொழி நீதிமன்றங்கள் பகுத்தறிவு நீதிக்கான கருவிகளாக அறிமுகப்படுத்தப்பட்டன, ஆனால் அவை உள்ளூர் மக்களை அந்நியப்படுத்தி, பூர்வீக சட்ட மரபுகளை ஓரங்கட்டின. இந்திய சட்ட நிபுணர் பி.ஆர். அம்பேத்கர் இந்த அமைப்பைக் கடுமையாக விமர்சித்தார், ஆங்கில சட்ட மொழி மக்களிடமிருந்து துண்டிக்கப்பட்ட சட்ட வல்லுநர்களின் ஒரு வகுப்பை உருவாக்கியது என்று குறிப்பிட்டார். சட்டம் உயர்குடி, தொழினுட்ப மற்றும் விலக்குவாதமாக மாறியது. இதன் விளைவாக இரட்டை சட்ட உணர்வு ஏற்பட்டது; ஒன்று உயரடுக்கு, ஆங்கிலம் பேசும் முறையானதாகவும் மற்றொன்று உள்ளூர் வழக்கம் சார்ந்த முறைசாராததும் ஆகும். இந்தப் பிளவு இன்றும் இந்தியாவில் நீடிப்பதுடன் நீதியை அணுகுவது குறித்த விவாதங்களைத் தொடர்ந்து உருவாக்குவதாகவும் உள்ளது. இலங்கையும் சிறிய அளவில் என்றாலும், அதே கட்டமைப்பைப் பெற்றது. ஆங்கிலச் சட்டம் சமூக நியாயத்தன்மையை விட மொழியிலிருந்து பெறப்பட்ட ஒரு சட்ட உயரடுக்கை உருவாக்கியது.


அல்ஜீரியாவில், பிரெஞ்சு காலனித்துவ சட்டம் கிட்டத்தட்ட முழுவதுமாக பிரெஞ்சு மொழியில் இயங்கி, அரபு மொழி பேசும் மக்களை ஓரங்கட்டியது. நீதிமன்றங்கள் மொழியியல் அவமானத்தினதும் வற்புறுத்தலின் இடங்களாகவும் மாறின. ஃபனான் காலனித்துவ நீதிமன்றங்களை நீதியை அல்ல, ஆதிக்கத்தை எதிர்கொள்ளும் இடங்கள் என்று விவரித்தார். அவர் 'நீதிபதியின் மொழி அதிகாரத்தின் மொழி, உண்மையின் மொழி அல்ல' என்றார். ஃபனானின் இந்த அவதானிப்பு இலங்கைக்கும் சமமாகப் பொருந்தும். சட்டம் ஆங்கிலத்தைப் பேசியது ஆங்கிலம் நீதியானது என்பதால் அல்ல, மாறாக ஆங்கிலம் அதிகாரபூர்வமானது என்பதால்.

அல்ஜீரியாவில் சுதந்திரத்திற்குப் பிந்தைய அரபுமய மாக்கல் இந்தப் படிநிலையை மாற்றியமைக்க முயன்றது, ஆனால் பெரும்பாலும் புதிய வடிவங்களில் விலக்கலை மீண்டும் உருவாக்கியது. இது நிறுவனமயமாக்கப்பட்ட வுடன் மொழியியல் அதிகாரத்தை அகற்றுவது எவ்வளவு கடினம் என்பதை மீண்டும் நிரூபிக்கிறது.

நீதிமன்றங்களுக்கும் அலுவலகங்களுக்கும் அப்பால், காலனித்துவ அதிகாரத்துவம் மக்கள் தொகையை மக்கள் தொகை கணக்கெடுப்புகள், பதிவேடுகள் மற்றும் வகை மைகள் மூலம் வகைப்படுத்தியது. இவை அனைத்தும் ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வகைப்பா டுகள் சமூகத்தை விவரிக்கவில்லை. அவை அதை தீவிர மாக வடிவமைத்தன. இனம், சாதி, மதம் மற்றும் தொழில் ஆகியவை அதிகாரத்துவ மொழி மூலம் குறியிடப்பட்டன, திரவ அடையாளங்களை கடுமையான வகைகளாக உறைய வைத்தன. மொழி இந்த செயல்முறையை மத்தியஸ்தம் செய்தது. ஆங்கில சொற்கள் சுதேசிய சுய விளக்கங்களை மாற்றின, பெரும்பாலும் சமூக யதார்த்தங்களை சிதை த்தன.

காலனித்துவ அறிவு அமைப்புகள் சமூக வேறுபாட்டை நிர்வாக உண்மையாக மாற்றியதாக அரசியல் விஞ்ஞானி பெர்னார்ட் கோன் வாதிட்டார். இந்த மாற்றத்திற்கு மொழி மையமாக இருந்தது. ஆங்கிலத்தில் பெயரிடுதல், பதிவு செய்தல் மற்றும் வகைப்படுத்துவதன் மூலம், காலனித்துவ அரசு அதன் அறிவியலை சமூகத்தின் மீது திணித்தது. இலங்கையில், மக்கள் தொகை கணக்கெடுப்பு வகை களும் நிர்வாக லேபிள்களும் பின்னர் அரசியல் உரிமை கோரல்கள், ஒதுக்கீடுகள் மற்றும் குறைகளுக்கு அடிப்ப டையாக மாறும். இதனால் அதிகாரத்துவ மொழி அரசு அதி காரத்தின் மீது இனரீதியான போட்டிக்கு அடித்தளமிட்டது.

காலனித்துவ நிர்வாகிகள் ஆங்கில அதிகாரத்துவத்தையும் சட்டத்தையும் நடுநிலையானவை என்றும் பாரபட்சமற்றவை என்றும் அடிக்கடி பாதுகாத்தனர். ஆங்கிலம், எந்தவொரு உள்ளூர் குழுவிற்கும் சலுகைகளை வழங்குவதைத் தவிர்த் தது என்று அவர்கள் கூறினர். நடுநிலைமை என்பது ஒரு வகையான அதிகாரம் என்ற உண்மையை இந்த வாதம் மறைத்தது. நடுநிலைமை பற்றிய கூற்றுக்கள் பெரும் பாலும் கட்டமைப்பு சமத்துவமின்மையை எவ்வாறு மறைக் கின்றன என்பதை உலகெங்கும் நாம் கண்டுள்ளோம். காலனித்துவ சூழல்களில், நடுநிலைமை என்பது சுதேசிய மொழி விலக்கு மீதான அலட்சியத்தைக் குறிக்கிறது. இது நிர்வாகிகள் சமத்துவமின்மைக்கான பொறுப்பை மறுக்க அனுமதித்தது, அதே நேரத்தில் அதை முறையாக நிலைநி றுத்தியது. இலங்கையில், இந்தக் கட்டுக்கதை பின்னர் தலைகீழாக மாற்றப்பட்டது. ஆங்கில நடுநிலைமை தவறா னதும் அநீதியானதும் என்று சிங்கள தேசியவாதிகள் வாதிட்டனர். இருப்பினும் அவர்கள் பின்பற்றிய தீர்வான 'சிங்களம் மட்டும்' ஒருமொழி அதிகாரத்தின் அதே தர்க் கத்தைத் தக்க வைத்துக் கொண்டது. எனவே, பிரச்சினை



1850 களில் கண்டி நீதிமன்றம்

வெறுமனே ஆங்கிலம் அல்ல. சட்டம் மற்றும் அதிகாரத் துவம் செயற்பட ஒற்றை ஆதிக்க மொழி தேவை என்ற நம்பிக்கை இருந்தது.

காலனித்துவ அதிகாரத்துவத்தினதும் சட்டத்தினதும் மிக முக்கியமான மரபு ஆங்கிலம் அல்ல, மாறாக அது உரு வாக்கிய நிறுவனக் கற்பனை. ஆட்சி என்பது ஒரு மொழி யியல் படிநிலையாகப் புரிந்து கொள்ளப்பட்டது. அதிகாரத் திற்கு அரச மொழியில் சரளமாக இருக்க வேண்டும். பன்மொழிப் பேச்சு என்பது உள்ளடக்கம் அல்ல, திறமை யின்மையாகக் கருதப்பட்டது. இந்தக் கற்பனை காலனித்து வத்திற்குப் பிந்தைய சீர்திருத்தத்தை ஆழமாக வடிவ மைத்தது. சிங்களம் ஆங்கிலத்தை மாற்றியமைத்தபோது, மொழியியல் ஆதிக்கத்தின் கட்டமைப்பு அப்படியே இருந்தது. நீதிமன்றங்கள், நிர்வாகம் மற்றும் சட்டப் பகுத் தறிவு ஆகியவை ஒரே ஒரு அதிகாரபூர்வ மொழி மூலம் தொடர்ந்து செயல்பட்டன. காலனித்துவத்திற்குப் பிந்தைய தலைவர்கள் நிறுவனங்களை மட்டுமல்ல, அனுமானங்க ளையும் பெற்றனர். அதிகாரம் மொழி வழியாகப் பாய்கிறது என்பதை அவர்கள் காலனித்துவ ஆட்சியிலிருந்து கற்றுக் கொண்டனர். மேலும் அவர்கள் அந்தப் பாடத்தை வெவ் வேறு உள்ளடக்கத்துடன் ஆனால் ஒத்த விளைவுகளுடன் மீண்டும் பயன்படுத்தினர்.

இந்த அனுபவங்களை ஒன்றாக எடுத்துக்கொண்டால், அவை ஒரு மைய தத்துவார்த்தக் கருத்தை வெளிப்படுத்து கின்றன. மொழி என்பது நிர்வாகத்தின் ஓர் ஊடகம் மட்டு மல்ல. அது அதன் உள்கட்டமைப்பு. அதிகாரத்துவமும் சட்டமும் வகைப்படுத்த, ஒழுங்குபடுத்த மற்றும் சட்டபூர்வ மாக்க மொழியை நம்பியுள்ளன. அந்த மொழி அணுக முடி யாதபோது, அதிகாரம் சமச்சீரற்றதாகிறது. காலனித்துவ இலங்கையில், ஆங்கில அதிகாரத்துவ மற்றும் சட்ட மொழி, சுதேசிய உலகங்களை ஓரங்கட்டிய உண்மையின் ஆட்சியை உருவாக்கியது.

இலங்கையில் காலனித்துவ அரசு அதிகாரத்தை மொழி யியல் ரீதியாக ஒழுங்குபடுத்தியது. அதிகாரத்துவமும் சட்டமும் நிர்வாகக் கருவிகளாக மட்டுமல்ல, விலக்கு மற்றும் படிநிலையின் வழிமுறைகளாகவும் செயற்பட்டன. யார் ஆட்சி செய்ய முடியும், யார் உரிமைகளைக் கோர முடியும், யார் அதிகாரத்துடன் பேச முடியும் என்பதை ஆங்கிலப் புலமை தீர்மானித்தது.

இந்த மொழியியல் அதிகார வரிசைமுறை சுதந்திரத்துடன் மறைந்துவிடவில்லை. அது மரபுரிமையாக, மாற்றியமைக் கப்பட்டு, மீண்டும் பயன்படுத்தப்பட்டது. இலங்கையில் காலனித்துவத்திற்குப் பிந்தைய மொழிச் சீர்திருத்தம் ஏன் அது சரிசெய்ய முயன்ற பல சமத்துவமின்மைகளை மீண்டும் உருவாக்கியது என்பதைப் புரிந்துகொள்வதற்கு இந்தத் தொடர்ச்சியைப் புரிந்துகொள்வது அவசியம்.

காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பு:

கணக்கெடுப்புப் போன்ற தொலைநோக்கு விளைவுகளை ஏற்படுத்திய காலனித்துவக் கருவிகள் மிகக் குறைவு. பெரும்பாலும் கணக்கெடுப்பில் ஒரு நடுநிலைப் பயிற்சி யாகக் காட்டப்படும் காலனித்துவ மக்கள் தொகை கணக் கெடுப்பு உண்மையில் ஒரு சக்திவாய்ந்த நிர்வாகத் தொழி னுட்பமாகும். இது மக்கள்தொகையை மட்டும் கணக்கிட வில்லை. அது அடையாளங்களை வகைப்படுத்தி, தரவரி சைப்படுத்தி, மறுசீரமைத்தது. பிரிட்டிஷ் பேரரசின் பிற இடங்களைப் போலவே, இலங்கையிலும், மக்கள் தொகை கணக்கெடுப்பு இனம், மொழி, மதம் மற்றும் பிரதேசம் ஆகியவை திரவ சமூக அடையாளங்களிலிருந்து நிலை யான நிர்வாக வகைகளாக மாற்றப்பட்ட ஒரு முக்கியமான தளமாக மாறியது. இந்த மாற்றத்தில் மொழி ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தது.

இலங்கையில் காலனித்துவ மக்கள் தொகை கணக்கெ டுப்பு நடைமுறைகள் இனமும் மொழியும் அரசியல் அடை யாளங்களாக எவ்வாறு புரிந்து கொள்ளப்பட்டன என்பதை தீர்க்கமாக வடிவமைத்தன. மொழியை இனத்துடன் இணை த்து, அதிகாரத்துவ வகைப்பாட்டிற்குள் இரண்டையும் உட் பொதிப்பதன் மூலம், காலனித்துவ அரசு ஒரு புதிய இலக் கண வேறுபாட்டை உருவாக்கியது. இது பின்னர் அரசியல் போட்டி, தேசியவாத கூற்றுகள் மற்றும் பிந்தைய காலனித்துவ மோதலை கட்டமைக்கும். காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பு மொழியை மக்கள்தொகை மற்றும் அரசியல் வளமாக எவ்வாறு படிக்கக்கூடியதாக மாற்றியது என்பதை அங்கீகரிக்காமல் சிங்களம் மட்டும் சட் டத்தைப் புரிந்து கொள்ள முடியாது.

நவீன மக்கள் தொகை கணக்கெடுப்பு, காலனித்துவ நிர்வா கத்துடன் சேர்ந்து, குடிமக்களை 'அறியக்கூடியதாக' மாற்று வதற்கான ஒரு வழிமுறையாக வெளிப்பட்டது. பெனடிக்ட் ஆண்டர்சன் கவனித்தபடி, மக்கள் தொகைக் கணக்கெ டுப்பு என்பது வரைபடம் மற்றும் அருங்காட்சியகத்துடன் சேர்ந்து, காலனித்துவ அரசுகள் தங்கள் களங்களைக் கற்பனை செய்து ஒழுங்கமைத்த மூன்று முக்கிய நிறுவனங் களில் ஒன்றாகும். கணக்கெடுப்பு ஒருபோதும் குற்றமற்றது அல்ல அது வரிசைப்படுத்தும் செயலாகும்.

காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பு அதிகாரிகள் எதை எண்ண வேண்டும், எப்படி வகைப்படுத்த வேண்டும் என்பதை முடிவு செய்ய வேண்டியிருந்தது. இந்த முடிவுகள் சிக்கலான சமூக யதார்த்தங்களை நிர்வகிக்கக்கூடிய எளிமைப் படுத்தப்பட்ட வகைகளாக மாற்றியது. மொழி அத்தகைய ஒரு வகையாக மாறியது. மக்கள் எந்த மொழியைப் பேசினார்கள் அல்லது, இன்னும் துல்லியமாக, அவர்கள் எந்த மொழியைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்ப டுகிறார்கள் என்று கேட்பதன் மூலம் காலனித்துவ அரசு மொழியியல் நடைமுறையை இன அடையாளமாக மாற்றி யது.

இலங்கையில், இந்தச் செயல்முறை பத்தொன்பதாம் நூற் றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகு தியிலும் தீவிரமடைந்தது, ஏனெனில் மக்கள் தொகை கணக்கெடுப்புகள் மக்களை இன, மொழியியல் மற்றும் மத அடிப்படையில் வகைப்படுத்த அதிகளவில் முயன்றன. ஒரு காலத்தில் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து, சூழ்நிலை அடையா

ளங்கள் பரஸ்பரம் பிரத்தியேக வகைகளாக மாறின. மானுட வியலாளர் பெர்னார்ட் கோன், காலனித்துவ வகைப்பாடு 'புற நிலைப்படுத்தப்பட்ட சமூகங்களை' (objectified communities) உருவாக்கியது என்று வாதிட்டார். அரசு அவர் களை அப்படி நடத்துவதால், அவர்கள் தங்களை எல்லைக்குட்பட்ட நிறு வனங்களாகக் காணும் குழுக்கள். இந்தப் புறநிலைப்படுத் தலின் முக்கிய அச்சாக மொழி இருந்தது.


காலனித்துவ இலங்கையில், ஆரம்பகால மக்கள் தொகை கணக்கெடுப்புகள் பல வகைப்பாடு திட்டங்களை - இனம், சாதி, மதம் மற்றும் மொழி - பெரும்பாலும் சீரற்ற முறையில் பரிசோதித்தன. இருப்பினும், காலப்போக்கில், மொழி இனத்தின் முதன்மை அடையாளமாக வெளிப்பட்டது. 'சிங்கள மொழி பேசும்' மற்றும் 'தமிழ் மொழி பேசும்' ஆகியவை மொழியியல் விளக்கங்களாக மட்டுமல்லாமல், இனத்தைச் சேர்ந்த தற்கான குறிகாட்டிகளாகவும் அதிகளவில் கருதப்பட்டன. இந்த மாற்றம் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது. வரலாற்று ரீதியாகப் பிராந்தியம், சாதி, மதம் மற்றும் அரசியல் விசுவாசத்தால் வடிவமைக்கப்பட்ட சிங்கள் தமிழ் அடையாளங்கள், ஒரே மாதிரியான மொழியியல் தொகுதி களாக அதிகளவில் வடிவமைக்கப்பட்டன. உள் பன்முகத் தன்மை தட்டையாக்கப்பட்டது. எல்லைகள் கடினப்படுத்தப் பட்டன.

காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பு வகைகள் 'முன்னர் மிகவும் நெகிழ்வான மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ற இன அடையாளங்களுக்கு ஒரு புதிய கடினத்தன்மையைக் கொடுத்தன' என்று வரலாற்றாசிரியர் கே.எம். டி சில்வா குறிப் பிட்டுள்ளார். மொழி நிர்வாக ரீதியாக மிகவும் வசதியானது, அதேவேளை அரசியல் ரீதியாக சக்திவாய்ந்தது. ஆகவே மொழி வேறுபாட்டின் அடையாளமாக மாறியது. இவ்வாறு மக்கள் தொகை கணக்கெடுப்பு இரட்டை நகர்வைச் செய்தது. இது சிங்களத்தை தமிழி லிருந்து தனித்துவமான மக்கள்தொகையாகப் பிரித்தது, மேலும் ஒவ்வொரு குழு விலும் உள்ள உயரடுக்கினரை இந்தப் புதிதாக ஒருங்கி ணைக்கப்பட்ட வகைகளின் சார்பாகப் பேச ஊக்குவித்தது. கணக்கெடுப்பு பிரதிநிதித்துவத்தை உருவாக்கியது.

மொழி இனத்துடன் இணைக்கப்பட்டவுடன், அதை எண்ண லாம். ஒருமுறை எண்ணப்பட்டவுடன், அதை அரசியல்மய மாக்கலாம். மக்கள் தொகை கணக்கெடுப்பு புள்ளிவிவ ரங்கள் மொழியியல் வேறுபாட்டை மக்கள்தொகை உண்மை யாக மாற்றியது. பெரும்பான்மை மற்றும் சிறுபான்மையினர் இப்போது அளவிடப்படலாம், ஒப்பிடப்படலாம் மற்றும் அணி திரட்டப்படலாம். இலங்கையில், சிங்கள மொழி பேசுபவர் களின் எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் காலனித்துவ காலத்தின் பிற்பகுதியில் ஒரு மைய அரசியல் குறிப்பு புள்ளியாக மாறினர். சிங்கள உயரடுக்கினர், அரசு பெரும் பான்மையினரின் மொழி மற்றும் கலாசாரத்தை பிரதிபலிக்க வேண்டும் என்று வாதிட மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவை அதிகளவில் பயன்படுத்தினர். தமிழ் உயரடுக்கினர், பாதுகாப்புக்காகவும் பிரதிநிதித்துவத்திற்காகவும் சமத்து வத்திற்காகவும் வாதிட அதே தரவைப் பயன்படுத்தினர்.

காலனித்துவக் கணக்கெடுப்பு 'கலாசார வேறுபாட்டை அரசியல் எண்கணிதமாக மாற்றியது' என்று மானிடவிய லாளர் எஸ்.ஜே. தம்பையா குறிப்பிட்டார். மொழி வெறும் தொடர்பு வழிமுறையாக நின்றுவிட்டது. அது அதிகாரத் திற்கான உரிமைகோரலாக மாறியது. இந்த மாறும் தன்மை மற்ற இடங்களில் ஏற்பட்ட முன்னேற்றங்களைப் பிரதிபலிக் கிறது. பிரிட்டிஷ் இந்தியாவில், மொழி மற்றும் மதத்தின் மக்கள் தொகை கணக்கெடுப்பு வகைப்பாடு இந்து மற்றும் முஸ்லிம் அடையாளங்களை கடுமையான அரசியல் வகை களாக மாற்றியது, வகுப்புவாத அரசியல் மற்றும் பிரிவி னைக்கான அடித்தளத்தை அமைத்தது. நைஜீரியாவில், மொழி மற்றும் இனம் குறித்த மக்கள் தொகைக் கணக்கெ டுப்பு சர்ச்சைகள் காலனித்துவத்துவத்திற்குப் பிந்தைய மோதலின் முக்கிய புள்ளிகளாக மாறியது. இதன் பாடம் தெளிவாக உள்ளது. வித்தியாசத்தை ஒருமுறை கணக் கிட்டால், அது அரிதாகவே மறக்கப்படுகிறது.

காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பின் மிகவும் தீங்கு விளைவிக்கும் விளைவுகளில் ஒன்று, வரலாற்று ரீதியாக திரவமாக இருந்த அடையாளங்களை உறைய வைக்கும் போக்கு ஆகும். இலங்கையில், பல சமூகங்கள் இருமொழி அல்லது பன்மொழி பேசுபவனவான இருந்தன. மொழி பயன் பாடு சூழலுக்கு ஏற்ப மாறுபட்டது. வீடு, சந்தை, கோயில், நீதிமன்றம் போன்றவற்றில் அம்மக்கள் தேவைக்கேற்ப மொழிகளைப் பயன்படுத்தினர். மக்கள் தொகை கணக் கெடுப்பு பிரிவுகள் தனிநபர்களை ஒற்றை மொழியியல் அடையாளத்தைத் தேர்ந்தெடுக்கக் கட்டாயப்படுத்தின. இது பெரும்பாலும் வாழ்க்கையின் சிக்கலான தன்மையைத் தட்டையாக மாற்றியது.



சிங்கள முதலியார் குடும்பம்

இந்தச் செயல்முறை இயல்பாகவே வன்முறையானது. உடல் ரீதியாக அல்ல, ஆனால் ஒரு அறிவியல் ரீதியாக வன்முறைத்தன்மையுடையது. இது தெளிவின்மையை அழித்து, எதுவும் இல்லாத இடத்தில் தெளிவை விதித்தது. சமூகவியலாளர் ரோஜர்ஸ் புரூபேக்கர் வாதிட்டது போல, அரசுகள் பெரும்பாலும் மக்களைப் பின்னர் அரசியல் முக்கியத்துவத்தைப் பெறும் அடையாளங்களாக 'குழுவாக்குகின்றன'. காலனித்துவ வகைப்பாடு சிங்கள, தமிழ் அடையாளங்களைக் கடினப்படுத்தியது, இது பின்னர் சமரசத்தை மிகவும் கடினமாக்கியது என்று எஸ்.ஜே. தம்பையா வலியுறுத்தினார். உண்மையில் மொழி வேறுபாடு விதியாக மாறியது.

உலகளாவிய ஒப்பீடுகள் இந்த வாதத்தை வலுப்படுத்துகின்றன. ருவாண்டாவில், பெல்ஜிய மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைமுறைகள் ஹுட்டு, துட்சி அடையாளங்களைச் சரிசெய்தன, சமூக-பொருளாதார வேறுபாடுகளைக் கடுமையான இன வகைகளாக மாற்றின. இது பின்னர் பேரழிவான விளைவுகளை உருவாக்கியது. மலேசியாவில், மொழி மற்றும் இனத்தின் காலனித்துவ வகைப்பாடு இன்றும் அரசியலை வடிவமைக்கும் இனப் பிரிவுகளை நிறுவனமயமாக்கியது. இலங்கையின் அனுபவம் இந்த முறைக்குள் சரியாகப் பொருந்துகிறது.

காலனித்துவ மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வகைப்படுத்துவதை விட அதிகமான விளைவுகளை ஏற்படுத்தியது. அது அறிவியல் அதிகாரத்தைக் கோரியது. சமூகம் தன்னை அறிந்ததை விட அரசு சமூகத்தை நன்கு அறிந்திருந்தது என்று அது வலியுறுத்தியது. வாழும் அடையாளங்களை அட்டவணைகள் மற்றும் சதவீதங்களாக மொழிபெயர்ப்பதன் மூலம், மக்கள்தொகைக் கணக்கெடுப்பு அறிவை சக்தியாக மாற்றியது. மக்கள்தொகைக் கணக்கெடுப்பு தரவு வெறுமனே யதார்த்தத்தை பிரதிபலிக்கவில்லை, அது ஒரு புதிய யதார்த்தத்தை உருவாக்கியது. அதில் மொழி, இனம் மற்றும் எண்ணிக்கை பிரிக்க முடியாததாக மாறியது.

இலங்கையில், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அறிக்கைகள் நிர்வாகிகள், மிஷனரிகள் மற்றும் வளர்ந்து வரும் உள்ளூர் உயரடுக்கினரால் படிக்கப்பட்டன. அவை அதிகாரபூர்வ நூல்களாகப் பரப்பப்பட்டன. காலப்போக்கில், அவற்றின் வகைகள் உள்வாங்கப்பட்டன. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு வழங்கிய சொற்களில் மக்கள் தங்களைப் பற்றிப் பேசத் தொடங்கினர்.
இந்த செயல்முறை பிற்கால மொழி அரசியல் ஏன் தவிர்க்க முடியாதது என்பதை விளக்க உதவுகிறது. இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், சிங்களமும் தமிழும் ஏற்கனவே தனித்தனி, எண்ணக்கூடிய சமூகங்களாக கற்பனை செய்யப்பட்டிருந்தன. அதிகாரத்துவம் இயல்பாக்கியதை அரசியல் வெறுமனே செயற்படுத்தியது.

காலனித்துவ மக்கள் தொகை கணக்கெடுப்பின் மிகவும் முக்கிய விளைவு அடையாளத்தை உரிமையாக மாற்றுவதாக இருக்கலாம். சமூகங்கள் கணக்கிடப்பட்டவுடன், அவர்கள் பிரதிநிதித்துவம், வேலைகள், வளங்கள், அங்கீகாரம் போன்ற விகிதாசாரத்தைக் கோரலாம். மொழி அரசியல் சட்டபூர்வமான தன்மையின் அளவீடாக மாறியது. காலனித்துவத்தின் பிற்பகுதியில் இலங்கையில், ஜனநாயக நீதிக்கு அரசை மொழியியல் பெரும்பான்மையுடன் இணைப்பது அவசியம் என்று சிங்களத் தலைவர்கள் வாதிட்டனர். சிறுபான்மை அந்தஸ்துக்குப் பாதுகாப்புகள் தேவை என்று தமிழ்த் தலைவர்கள் வாதிட்டனர். இரண்டு நிலைப்பாடுகளும் ஒரே மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் தர்க்கத்தை அடிப்படையாகக் கொண்டவை.

இந்த இயக்கவியல் உலக உதாரணங்களோடு ஒத்துப் போகிறது. பெல்ஜியத்தில், மொழியியல் மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவு கூட்டாட்சிக்கான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டது. கனடாவில், மொழி எண்ணிக்கை இருமொழிக் கொள்கையை வடிவமைத்தது. வேறுபாடு கணக்கெடுப்பில் இல்லை, மாறாக அரசுகள் அதற்கு எவ்வாறு பதிலளிக்கின்றன என்பதில் உள்ளது. பன்மைப் பாதுகாப்புகளை நிறுவனமயமாக்காமல், பெரும்பான்மை மொழியை அரச மொழியாக உயர்த்துவதன் மூலம் இலங்கை பதிலளித்தது. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அந்த நடவடிக்கையை ஜனநாயகமாகவும், தவிர்க்க முடியாததாகவும் தோன்றச் செய்தது.

காலனித்துவத்திற்குப் பிந்தைய மோதலை வடிவமைப்பதில் காலனித்துவ வகைப்பாட்டின் மையத்தை இலங்கை அறிஞர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றனர். காலனித்துவ சமூகப் பொறியியல், சில வகையான அடையாளங்களை மற்றவற்றுக்கு மேலாக சலுகை அளிப்பதன் மூலம் இனத் துருவமுனைப்புக்கான கட்டமைப்பு நிலைமைகளை உருவாக்கியது என்று குமாரி ஜெயவர்தன வாதிட்டார். மொழி அத்தகைய ஒரு சலுகை பெற்ற வடிவமாகும். இதேபோல், சுதந்திரத்திற்குப் பிந்தைய அரசியலமைப்பு விவாதங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு சார்ந்த சமூகக் கற்பனையைப் பெற்றன. இனத்தையும் மொழியையும் ஒன்றுடன் ஒன்று இணைக்காமல் நிலையான தொகுதிகளாகக் கருதின என்று அசங்க வெலிகலா குறிப்பிட்டார்.

இந்த கருத்துகள் இந்தக் கட்டுரையின் ஒரு முக்கிய வாதத்தை வலுப்படுத்துகின்றன. சிங்களம் மட்டும் மொழியியல் பெரும்பான்மைவாதத்தைக் கண்டுபிடிக்கவில்லை. இது காலனித்துவ ஆட்சியில் ஏற்கனவே பதிக்கப்பட்ட ஒரு வகைப்பாடு தர்க்கத்தை செயற்படுத்தியது.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மரபுகள் மற்றும் காலனித்துவத்திற்குப் பிந்தைய விளைவுகள்:

சுதந்திரம் வந்த நேரத்தில், காலனித்துவ மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் உருவாக்கப்பட்ட வகைகளின் மூலம் இலங்கை ஏற்கனவே கற்பனை செய்யப்பட்டது. மொழியும் இனமும் எண்ணிக்கையில் வரையறுக்கப்பட்டனவாகவும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் நிறுவன ரீதியாக வேரூன்றி இருந்தன. துவத்திற்குப் பிந்தைய அரசு இந்தக் கற்பனையைப் பெற்றது. நீதிக்கான கோரிக்கைகளை எதிர்கொள்ளும்போது, அது எண்களாக


மாறியது. மொழி மக்கள்தொகையாகவும், மக்கள்தொகை உரிமையாகவும், உரிமை அதிகாரமாகவும் மாற்றப்பட்ட ஒரு நீண்ட செயல்முறையின் தர்க்கரீதியான முடிவாக சிங்களம் மட்டும் தோன்றியது. இந்த வரலாற்றுவரைவியலைப் புரிந்து கொள்வது அவசியம். அது இல்லாமல், சிங்களம் மட்டும் திடீர் பேரினவாதமாகத் தோன்றுகிறது. அதனுடன், காலனித்துவ அதிகாரத்துவத்தில் ஆழமான வேர்களைக் கொண்ட ஒரு வகைப்பாடு ஆட்சியின் உச்சக்கட்டமாக சிங்களம் மட்டும் தோன்றுகிறது.

காலனித்துவக் காலகட்ட மக்கள் தொகைக் கணக்கெடுப்பு முறையானது, இலங்கையை வெறுமனே விவரிக்கவில்லை; மாறாக, அது ஒரு புதிய சமூகக் கட்டமைப்பை உருவாக்கியது. மொழியை இனத்துடன் இணைத்து, அவ்விரண்டையும் நிர்வாக அறிவிற்குள் உட்பொதிப்பதன் மூலம், காலனித்துவ அரசு அதுவரை நெகிழ்வுத்தன்மையுடன் இருந்த சமூகங்களை, இறுக்கமான அரசியல் வகைப்பாடுகளாக மாற்றியது. இந்த மாற்றமானது இலங்கையர்கள் தங்களையும், ஒருவரையொருவர் நோக்கும் பார்வையையும் அடிப்படையிலேயே மாற்றியமைத்தது. இதன் விளைவாக, மொழியானது போட்டி, அதிருப்தி மற்றும் உரிமைகோரல்களுக்கான ஒரு களமாக மாறியது. இது அரசியல் தரப்பினருக்குக் கொள்கை ரீதியான நியாயங்களை விட, 'எண்ணிக்கை பலம்' குறித்து வாதிடக் கற்றுக்கொடுத்தது. 1956-ஆம் ஆண்டின் 'சிங்களம் மட்டும் சட்டம்' என்பது இந்த வரலாற்றிலிருந்து ஏற்பட்ட ஒரு திடீர் விலகல் அல்ல; அது காலனித்துவக் கட்டமைப்பின் தொடர்ச்சியான பின்காலனித்துவ வெளிப்பாடே ஆகும்.

பின்காலனித்துவ சீர்திருத்தமும் பின்னடைவின் விதைகளும்:

இலங்கையில் பின்காலனித்துவச் சீர்திருத்தங்கள், தீவின் சுதந்திரத்திற்குப் பிந்தைய பாதையை வரையறுக்கும் ஒரு முரண்பாட்டால் அடையாளப்படுத்தப்பட்டன. அதிகாரத்தின் சமூக மற்றும் நிறுவனக் கட்டமைப்புகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல், அரசியல் பங்கேற்பை மட்டும் விரிவுபடுத்த அவை முயன்றன. அரசியலமைப்புச் சீர்திருத்தம், தேர்தல் உள்ளடக்கம் மற்றும் நிர்வாகப் பகுத்தறிவு ஆகியவை படிப்படியாக அறிமுகப்படுத்தப்பட்டன. பெரும்பாலும் சுயராஜ்யத்திற்குக் காலனிய நாட்டைத் தயார்படுத்தும் நோக்கத்துடன் இவை நடந்தன. ஆயினும், இச்சீர்திருத்தங்கள் காலனித்துவ காலத்து மொழியியல், கல்வி மற்றும் அதிகாரத்துவப் படிநிலைகளை அப்படியே விட்டுவைத்ததுடன், சில அம்சங்களில் அவற்றை மேலும் ஆழப்படுத்தின. சிங்களம் மட்டும்' சட்டத்தின் ஊடாகத் தீவிரமடைந்த அந்த வெகுஜனவாதப் (Populist) எதிர்வினையை, வெறும் இனவாதத்தின் திடீர் எழுச்சியாக மட்டும் சுருக்கிப் பார்த்துவிட முடியாது. மாறாக, அது காலனித்துவக் காலச் சீர்திருத்தங்கள் பூர்த்தி செய்யத் தவறிய இடைவெளிகளால் உருவான, ஒரு நீண்டகால அரசியல் கணக்கீட்டின் விளைவாகும். உலகளாவிய வாக்குரிமையானது சுதேசிய மொழி பேசும் மக்களுக்கு அரசியல் அதிகாரத்தை வழங்கிய போதிலும், அவர்கள் நிர்வகிக்க வேண்டிய அரசுத் துறைகளோ தொடர்ந்து ஆங்கிலத்திலேயே இயங்கின. ஆங்கிலமயமாக்கப்பட்ட உயரடுக்கினரின் மேலாதிக்கத்தில் இருந்த அவ்வரசு, பன்மைத்துவ விழுமியங்களுக்கு (Pluralism) இடமளிப்பதை விட, எண்ணிக்கை அடிப்படையிலான பெரும்பான்மைவாத (Numerical Majoritarianism) வகைப்பாடுகளுக்கே முன்னுரிமை அளித்தது. இதன் விளைவாக, ஆழமான ஒரு சட்டபூர்வமான நெருக்கடி (Legitimacy Crisis) உருவானது. இந்த நெருக்கடியையே, வெகுஜனவாதத் தேசியவாதம் மிகத் தீவிரமான திறனுடன் தனது அரசியல் நலன்களுக்காக அறுவடை செய்துகொண்டது.

இலங்கையில் பிரித்தானியக் காலனித்துவச் சீர்திருத்தங்கள், ஒரு தனித்துவமான ஏகாதிபத்திய அதிகார முறையைப் பின்பற்றின: அதாவது, அதிகாரக் கட்டமைப்பில் எவ்வித மறுபகிர்வையும் செய்யாமல், அரசியல் தளத்தில் மட்டும் மக்களை உள்வாங்குதல். 1931-ஆம் ஆண்டின் டொனமூர் அரசியலமைப்பானது, ஏனைய பிரித்தானியக் காலனிகளுக்குப் பல தசாப்தங்களுக்கு முன்னரே இலங்கைக்குச் 'சர்வசன வாக்குரிமையை' அறிமுகப்படுத்தியது. இந்நடவடிக்கை ஒரு ஜனநாயகப் புரட்சியாகப் பலவாறு போற்றப்பட்ட போதிலும், இந்த அரசியல் தாராளவாதம் நாட்டின் கல்வி, மொழிக் கொள்கை அல்லது நிர்வாக நடைமுறைகளில் பிரதிபலிக்கவில்லை. அரசு, சட்டம் மற்றும்



இலங்கையில பெண்கள் வாக்குரிமை பெறல்

உயர்நிலை விவாதங்களின் மொழியாக ஆங்கிலமே தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தியது. சிவில் சேவையானது ஆங்கிலம் பயின்ற மேட்டுக்குடியினரின் பிடியில் இருக்க, சட்ட அமைப்போ காலனித்துவக் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே இயங்கியது. இதன் விளைவாக, வாக்குரிமையானது அடித்தட்டு மக்கள் வரை விரிவடைந்த போதிலும், உண்மையான அதிகாரமானது மொழியியல் மற்றும் நிறுவன ரீதியாகச் சாதாரண மக்களிடமிருந்து அந்நியப்படுத்தப்பட்டே வைக்கப்பட்டிருந்தது.

டொனமூர் சீர்திருத்தங்கள் 'அரசை ஜனநாயகப்படுத்தாமல் அரசியலை ஜனநாயகப்படுத்தியது' என்று ஏ.ஜே. வில்சன் குறிப்பிட்டார். வாக்காளர்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம், ஆனால் அந்தப் பிரதிநிதிகள் வாக்காளர்களின் மொழியியல் மற்றும் கலாசார உலகிற்கு அந்நியமான நிறுவனங்கள் மூலம் ஆட்சி செய்தனர். இந்தப் பொருத்தமின்மை வெகுஜனவாத விமர்சனத்திற்கு வளமான களத்தை உருவாக்கியது. ஜனநாயகம் சமத்துவமின்மையைத் தீர்ப்பதற்குப் பதிலாக அதை அம்பலப்படுத்தியது.

சர்வசன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது அரசியல் நிலப்பரப்பை மாற்றியது. முதல் முறையாக, கிராமப்புற சிங்கள மொழி பேசும் விவசாயிகள் தீர்க்கமான தேர்தல் பெரும்பான்மையாக இருந்தனர். இருப்பினும் சட்டமன்றங்கள், குழுக்கள் மற்றும் நிர்வாக வலையமைப்புகளில் ஆதிக்கம் செலுத்தும் அரசியல் வர்க்கம் விகிதாசாரமற்ற முறையில் ஆங்கிலம் பேசும் மற்றும் நகர்ப்புறமாகவே இருந்தது. இது அன்டோனியோ கிராம்சி 'மேலாண்மை நெருக்கடி' (crisis of hegemony) என்று அழைப்பதை உருவாக்கியது. ஆளும் உயரடுக்கு நிறுவனக் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டாலும், தார்மீக அல்லது கலாசாரத் தலைமையைக் கட்டுப்படுத்தும் நிலை தொடரவில்லை. மொழி இந்தத் துண்டிப்பின் மிகவும் புலப்படும் அடையாளமாக மாறியது. 1940-களில் ஒரு சிங்கள வாக்காளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'நமது வாழ்க்கையைப் பற்றிப் பேசும்போது கூட வெளிநாட்டினரைப் போலப் பேசினார்கள்' என்று நொந்ததாகப் பதியப்பட்டுள்ளது. இந்த உணர்வு வெறும் சொல்லாட்சி அல்ல. நாடாளுமன்ற விவாதம் பெரும்பாலும் ஆங்கிலத்தில் நடந்தது. கொள்கை ஆவணங்கள் ஆங்கிலத்தில் புழக்கத்தில் விடப்பட்டன. அரசு அதன் வாக்காளர்களின் மொழியைப் பேசவில்லை.

இத்தோடு ஒப்பிடக்கூடிய நிகழ்வுகள் வேறு இடங்களில் வெளிப்பட்டது. இந்தியாவில், சுதந்திரத்திற்குப் பிறகு உலகளாவிய வாக்குரிமை ஆங்கிலம் பேசும் உயரடுக்கினருக்கும் சுதேசிய மொழி பேசும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியை அம்பலப்படுத்தியது, இது மக்கள் அணிதிரட்டலுக்கும் மாநிலங்களின் மொழியியல் மறுசீரமைப்புக்கான கோரிக்கைகளுக்கும் பங்களித்தது. கானாவில், ஆங்கிலம் படித்த உயரடுக்கினர் இதேபோன்ற சட்டபூர்வமான சவால்களை எதிர்கொண்டனர், இது கலாசார நம்பகத்தன்மையை அடிப்படையாகக் கொண்ட ஜனரஞ்சக முறையீடுகளுக்கு வழிவகுத்தது. இந்த சட்டபூர்வமான நெருக்கடியின் முதன்மை அச்சாக மொழி மாறிய வேகத்திலும் தீவிரத்திலும் இலங்கை இவற்றில் இருந்து வேறுபட்டு நின்றது.

இலங்கையில் நிகழ்ந்த காலனித்துவ அரசியலமைப்பு விவாதங்கள், மொழி தொடர்பான தீர்மானங்களை மீண்டும் மீண்டும் ஒத்திவைக்கும் போக்கையே கடைப்பிடித்தன. சிங்களம் அல்லது தமிழை வெளிப்படையாக அங்கீகரிப்பது, அப்போதிருந்த 'இனத்துவச் சமநிலையை' சீர்குலைத்துவிடும் என்று அஞ்சி, பிரித்தானிய அதிகாரிகள் இந்த விடயத்தில் ஒருவிதத் தெளிவற்ற நிலையையே விரும்பினர். ஆங்கிலம் ஒரு நடுநிலையான நிர்வாக ஊடகமாகத் தக்கவைக்கப்பட்டது; அது நீதியானது என்பதால் அல்ல, மாறாக அது சாத்தியமான மோதல்களைத் தற்காலிகமாகத் தள்ளிப்போட்டது என்பதாலேயே. இருப்பினும், இந்தத் தள்ளிப்போடுதல் பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது. இது சுதேசிய மொழி பேசும் பெரும்பான்மையினருக்குத் தேவையான 'குறியீட்டு அங்கீகாரத்தை' மறுத்த அதேவேளையில், சிறுபான்மையினருக்குப் போதுமான பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்கவும் தவறியது. இறுதியில், மொழிக் கொள்கையானது ஒரு 'ஒத்திவைக்கப்பட்ட போராக' உருவெடுத்ததுடன், காலப்போக்கில் அடக்கப்பட்ட உணர்ச்சிகளையும் அரசியல் குற்றச்சாட்டுகளையும் தன்னுள் குவித்துக்கொண்ட ஒரு வெடிமருந்தாக மாறியது.

1940-களில், மொழி 'அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் மிகவும் உணர்ச்சி ரீதியாக எதிரொலிக்கும் தீர்க்கப்படாத பிரச்சினையாக' மாறியது என்று வரலாற்றாசிரியர் கே.எம். டி சில்வா குறிப்பிடுகிறார். அதை தீர்த்துவைப்பதில் பிரித்தானியாவின் தயக்கம் காலனித்துவத்துக்குப் பிந்தையை தலைவர்களுக்குக் கொதிநிலையிலான பிரச்சினை ஒன்றை விட்டுச்சென்றது. இந்த நிகழ்வுகளுக்கு உலகளாவிய இணைகள் போதனையானவை. பெல்ஜியத்தில், பிளெமிஷ் மற்றும் பிரெஞ்சு மொழி பேசுபவர்களுக்கு இடையில் மொழியியல் சமத்துவத்தை மீண்டும் மீண்டும் ஒத்திவைப்பது பல தசாப்தங்களாக உறுதியற்ற தன்மையை உருவாக்கியது. நைஜீரியாவில், மொழி மற்றும் கூட்டாட்சி மீதான காலனித்துவ தெளிவின்மை சுதந்திரத்திற்குப் பிந்தைய மோதலுக்கு விதைகளை விதைத்தது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒத்திவைப்புக் குறையை நடுநிலையாக்குவதற்குப் பதிலாக பெரிதாக்கியது.

பின்காலனித்துவச் சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தபோது, மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் வாயிலாக அறிமுகப்படுத்தப்பட்ட வகைப்பாட்டுத் தர்க்கத்தையே அரசியல் போட்டிகள் பெருகிய முறையில் பின்பற்றின. சமூகங்கள் எண் தொகுதிகளாகக் கற்பனை செய்யப்பட்டன. நீதி விகிதாசாரமாக வடிவமைக்கப்பட்டது. மொழி பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை அந்தஸ்தின் மிகவும் புலப்படும் அடையாளமாக மாறியது. ஜனநாயக நீதி என்பது பெரும்பான்மையினரின் மொழியுடன் அரசை இணைப்பதே எனச் சிங்களத் தலைவர்கள் வாதிட்ட அதே வேளையில், தமிழ்த் தலைவர்கள் தமக்கான பாதுகாப்பு, சமத்துவம் அல்லது கூட்டாட்சி உரிமைகளை முன்வைத்துப் போராடினர். இரு தரப்பு நிலைப்பாடுகளும் அற

விழுமியங்களை விட, எண்ணிக்கைப் பலத்திலிருந்தே தமக்கான சட்டபூர்வமான தன்மையைப் (Legitimacy) பெற்றுக்கொண்டன. மானுடவியலாளர் எஸ்.ஜெ. தம்பையா இதனை 'அரசியலின் எண்கணிதம்' (Arithmetization of politics) என்று பொருத்தமாக விவரித்தார். இதன் மூலம் ஜனநாயகம் என்பது வெறும் மக்கள்தொகை எண்கணிதமாகக் குறுக்கப்பட்டதுடன், மொழி என்பது உரிமைகளைத் தீர்மானிக்கும் நாணயமாக மாறியது. பாகிஸ்தானில் காலனித்துவ சீர்திருத்தங்கள் மொழியியல் பன்முகத்தன்மையை சமரசம் செய்யத் தவறிவிட்டன, இது உருது திணிப்புக்கும் இறுதியில் கிழக்குப் பாகிஸ்தானின் பிரிவினைக்கும் வழிவகுத்தது. சீர்திருத்தம் எண்களின் மொழியை மட்டும் பேசும்போது, அது பன்மைத்தன்மையை சட்டபூர்வமாக நிலைநிறுத்தப் போராடுகிறது என்ற பாடம் அப்பட்டமானது.

இலங்கையில் வெகுஜனவாதத் தேசியவாதம் என்பது வெறும் அரசியல் உத்தியாக மட்டும் அமையாமல், காலனித்துவச் சீர்திருத்தங்கள் மீதான ஒரு தார்மீக விமர்சனமாகவும் உருவெடுத்தது. அது மேற்கத்தியமயமான உயரடுக்கினரைத் 'துரோகிகள்' என்றும், 'அந்நியத் தன்மை கொண்டவர்கள்' மற்றும் 'ஆணவம் மிக்கவர்கள்' என்றும் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியது. மொழி என்பது இத்தகு குற்றச்சாட்டுகளை ஒன்றிணைக்கும், உணர்ச்சி ரீதியான ஒரு வலிமை மிக்க ஆயுதமாக மாறியது. 'சிங்களம் மட்டும்' என்கிற முழக்கம், சிக்கலான நிர்வாக மாற்றங்கள் குறித்த தொழில்நுட்ப விவாதங்களை முற்றாகப் புறக்கணித்து, ஒரு எளிமையான தார்மீகத் தெளிவை முன்வைத்தது: 'அரசு அதன் மக்களின் மொழியில் பேச வேண்டும்' என்பதே அது. இந்த நுட்பமான நகர்வின் மூலம், ஆழமான கட்டமைப்புசார் மாற்றங்களுக்கான கோரிக்கைகளை, வெற்றிகரமான ஒரு 'குறியீட்டு வெற்றியாக' மாற்றித் திசைதிருப்பியது.

அரசியல் கோட்பாட்டாளர் எர்னஸ்டோ லாக்லாவ், ஜனரஞ்சகம் பல்வேறு குறைகளை ஒரே கோரிக்கையாக இணைக்கும் 'சமநிலைச் சங்கிலிகளை' (chains of equivalence) உருவாக்குகிறது என்று வாதிட்டார். இலங்கையில், மொழி இந்தச் செயற்பாட்டைச் செய்தது. கிராமப்புற வறுமை, கல்வி விலக்கு, அதிகாரத்துவ அந்நியப்படுத்தல் மற்றும் கலாசார அவமானம் அனைத்தும் சிங்களத்திற்கான அழைப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இதற்கு இணையான ஒப்பீட்டு எடுத்துக்காட்டுகள் ஏராளமாக உள்ளன. அல்ஜீரியாவில், பிரெஞ்சு மொழியியல் ஆதிக்கத்திற்கு ஜனரஞ்சக எதிர்வினையாக அரபுமயமாக்கல் மாறியது. தான்சானியாவில், சுவாஹிலிமயமாக்கல் மிகவும் உள்ளடக்கிய பாத்திரத்தை வகித்தது ஆனால் அது இனப் படிநிலையை வேண்டுமென்றே தவிர்ப்பதன் மூலம் மட்டுமே சாத்தியமானது. இலங்கை அதன் பாதுகாப்புகள் இல்லாமல் ஜனரஞ்சக மொழி சீர்திருத்த வடிவத்தை ஏற்றுக்கொண்டது.

இலங்கை அறிஞர்கள் நீண்ட காலமாக சிங்கள வெகுஜன வாதம் கலாசார வெறுப்பை விட கட்டமைப்பு ரீதியான குறைகளில் வேரூன்றியுள்ளது என்பதை வலியுறுத்தி வருகின்றனர். குமாரி ஜெயவர்தன, காலனித்துவத்திற்குப் பிந்தைய தேசியவாதம் 'காலனித்துவத்தின் கீழ் சீரற்ற நவீனமயமாக்கலுக்கான பதில்' என்று புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்று வாதிடுகிறார். அசங்க வெலிகல, தாமதமான காலனித்துவ சீர்திருத்தங்கள் பன்மை அரசியலமைப்புக் கற்பனை இல்லாத ஒரு ஜனநாயக அரசியலை உருவாக்கியது. நிறுவனமயமாக்கப்பட்ட அதிகாரப் பகிர்வு இல்லாததால் ஏற்பட்ட வெற்றிடத்தை பெரும்பான்மைவாதம் நிரப்பியது என்று சொல்கிறார்.

1948-இல் சுதந்திரம் கிடைத்த நேரத்தில், இலங்கை ஜனநாயக வடிவத்தில் ஆனால் கட்டமைப்பில் காலனித்துவமாக இருந்த ஓர் அரசைப் பெற்றது. மொழிக் கொள்கை தீர்க்கப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. கல்வி மற்றும் அதிகாரத்துவ படிநிலைகள் அப்படியே இருந்தன. மக்கள் தொகை கணக்கெடுப்பு சார்ந்த அடையாளங்கள் கடினமாகிவிட்டன. காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசு ஒரு தேர்வை எதிர்கொண்டது. பன்மை இணக்கம் மூலம் ஆட்சியை மறுபரிசீலனை செய்வதா அல்லது தீர்க்கமான பெரும்பான்மை சீர்திருத்தம் மூலம் ஒத்திவைக்கப்பட்ட மோதல்களைத் தீர்ப்பதா என்பதே அது. இலங்கை பிந்தையதைத் தேர்ந்தெடுத்தது.

இலங்கையில் தாமதமான காலனித்துவ சீர்திருத்தம் அரசியல் மாற்றம் பற்றிய ஒரு பரந்த பாடத்தை வெளிப்படுத்துகிறது. கட்டமைப்பு நீதி இல்லாத ஜனநாயகமயமாக்கல் ஜனரஞ்சகத்தை வளர்க்கிறது. நிறுவனங்கள் அந்நியமாக இருக்கும்போது, ஜனநாயகம் பேச்சுவார்த்தை மூலம் சேர்க்கப்படுவதை விட தார்மீக கிளர்ச்சிக்கான ஒரு வாகனமாக மாறுகிறது. சிங்களம் மட்டும் சட்டம் அவ்விதமான ஒரு கிளர்ச்சி. அது நீதியின் மொழியைப் பேசியது, ஆனால் விலக்கலின் தர்க்கத்தைப் பெற்றது. அரசு ஒரே குரலில் மட்டுமே பேச வேண்டும் என்ற நம்பிக்கையை அகற்றாமல், ஒரு உயரடுக்கு மொழியை மற்றொரு மொழியுடன் மாற்றுவதன் மூலம் உயரடுக்கு சட்டபூர்வமான நெருக்கடியைத் தீர்த்தது.

தொடரும் குறிப்புகள்:

1948-இல் இலங்கை சுதந்திரம் அடைந்த நேரத்தில், அதன் காலனித்துவத்திற்குப் பிந்தைய எதிர்காலத்தை வடிவமைக்கும் மிகவும் விளைவுமிக்க முடிவுகள் ஏற்கெனவே எடுக்கப்பட்டிருந்தன. அவை தேசியவாத வெற்றியின் தரு



பாரளுமன்றத்தில் முதல் பிரதமர் உரை

ணங்களில் அல்ல. மாறாக அமைதியான, காலனித்துவ ஆட்சியின் ஒட்டுமொத்த நடைமுறைகளில். மொழி, கல்வி, அதிகாரத்துவம், சட்டம் மற்றும் வகைப்பாடு ஆகியவை இணைந்து முறையாக ஜனநாயகமான ஆனால், கணிச மாகப் படிநிலை கொண்ட ஓர் அரசை உருவாக்கின. குடி மக்களுக்கு வாக்குரிமை இருந்தபோதும் செயல்பாட்டில் விலக்கு இருந்தது. சுதந்திரம் இந்தக் கட்டமைப்புகளைக் கலைக்கவில்லை. அது அவற்றை மாற்றியது.

இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய மொழிசார் முரண்கள் காலனித்துவத்திலிருந்து வெறுமனே பெறப்பட்ட தல்ல, அதன் பிறகு சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது மல்ல. காலனித்துவ மரபுகளுக்கும் காலனித்துவத்திற்குப் பிந்தைய அபிலாஷைகளுக்கும் இடையிலான மோதலில் இருந்து அது வெளிப்பட்டது. தலைவர்கள் ஒரு உண்மை யான சங்கடத்தை எதிர்கொண்டனர். அதன் வழிமுறைகளை மீண்டும் உருவாக்காமல் காலனித்துவ அநீதியை எவ்வாறு அகற்றுவது, ஜனநாயகத்தைப் பெரும்பான்மை ஆதிக்க மாகக் குறைக்காமல் அரசை எவ்வாறு ஜனநாயகப்படுத் துவது, அதிகாரத்தை இனமயமாக்காமல் சுதேசமொழிமய மாக்குவது. இந்தச் சிக்கல்கள் யதார்த்தமானவை. அதே வேளை சுதந்திரத்திற்குப் பிந்தைய முக்கிய கேள்விகள். ஆனால், இந்த முரண்கள் தீர்க்கப்படவில்லை. அவை தீமையாலோ அல்லது தவிர்க்க முடியாத தன்மையாலோ அல்ல. இந்தக் கேள்விகளின் மையத்தில், 'சிங்களம் மட்டுமே சட்டம்' இருக்கிறது.

சுதந்திரம் ஒரு முடிவான முறிவைக் குறிக்கிறது என்ற மாயைக்கு எதிராகப் பின்காலனியக் கோட்பாடு நீண்ட காலமாக எச்சரித்து வருகிறது. அரசியல் கோட்பாட்டாளர் பார்த்தா சாட்டர்ஜி கவனித்தபடி, பின்காலனிய அரசுகள் பெரும்பாலும் 'வழித்தோன்றல் நிறுவனங்கள்' (derivative institutions) மூலம் ஆட்சி செய்கின்றன. அவை காலனித் துவ அதிகாரத்தை நிராகரிக்கும் அதே வேளையில் காலனித்துவ வடிவங்களைப் பெறுகின்றன.

இலங்கை இந்த முறையைக் குறிப்பிடத்தக்க தெளிவுடன் எடுத்துக்காட்டுகிறது. 1948-க்குப் பிந்தைய அரசு ஒரு மரபு ரிமையைப் பெற்றது:

- ஒற்றை அதிகார மொழியில் செயல்படப் பயிற்சி பெற்ற ஒரு மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவம்
- மொழியியல் சுருக்கம் மற்றும் உயரடுக்கு மத்தியஸ் தத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சட்ட அமைப்பு.
- மொழியைத் தகுதியுடன் சமன்படுத்தும் ஒரு கல்வி முறை.
- போட்டியிடும் மொழியியல் தொகுதிகளாக சமூகத்தின் மக்கள் தொகை கணக்கெடுப்பு சார்ந்த கற்பனைகள்.

இவை எதுவும் எளிதில் அகற்றப்படவில்லை. வரலாற்றாசி ரியர் கே.எம். டி சில்வா குறிப்பிட்டது போல, சுதந்திரம் அதி காரத்தை 'பன்மை இணக்கத்தை விடக் காலனித்துவ முன் னுரிமைகளால் வடிவமைக்கப்பட்ட ஓர் அரசு எந்திரத்திற்கு' மாற்றியது. இங்கு மாற்ற வேண்டுமா ? என்பது குழப்பமல்ல, ஆனால் இருக்கும் நிறுவனங்கள் சரிவின்றி எவ்வளவு மாற்றத்தை உள்வாங்க முடியும் என்பதுதான் குழப்பம். ஆரம்பகாலக் காலனித்துவத்துவத்திற்கு பிந்தைய அரசாங் கங்கள் தீவிர நிர்வாக சீர்திருத்தத்தை மேற்கொள்ள ஏன் தயங்கின என்பதை இது விளக்க உதவுகிறது. ஆங்கிலம் நீதிமன்றங்கள் மற்றும் அதிகாரத்துவத்தின் மொழியாக இருந்தது, அது விரும்பத்தக்கதாக இருந்ததால் அல்ல, மாறாக அது மரபுவழி கட்டமைப்புகளுக்குள் செயற்படுவதால்.

காலனித்துவத்திற்குப் பிந்தைய மொழிச் சீர்திருத்தம் இரட்டைப் பிணைப்பை எதிர்கொண்டது. ஆங்கிலத்தைத் தக்கவைத்துக்கொள்வதானது, காலனித்துவப் படிநிலை மற்றும் உயரடுக்கு ஆதிக்கத்தை நிலைநிறுத்த அடிப்படை யானது. ஆங்கிலத்தை மாற்றுவது நிறுவனங்களை ஸ்திர மின்மைக்கும் சிறுபான்மையினரை அந்நியப்படுத்துவதற் குமான ஆபத்தை விளைவித்தது. எந்த வழியைத் தேர்ந் தாலும் சேதம் உறுதியானது. இலங்கையின் தலைவர்கள் இந்தப் பிணைப்பைப் புரிந்துகொண்டனர், ஆனால் அதைச் சமச்சீரற்ற முறையில் தீர்த்தனர். சிங்களம் தீர்க்கமாக உயர்த்தப்பட்டது. தமிழ் ஒத்திவைக்கப்பட்டது. ஆங்கிலம் பன்மை கட்டமைப்பால் மாற்றப்படாமல் தரமிறக்கப்பட்டது. ஒருமொழி ஆட்சியில் காலனித்துவ நம்பிக்கை அப்படியே இருந்தது. ஏ.ஜே. வில்சன் இதை 'காலனித்துவ அதிகா ரத்தின் சுதேசியமயமாக்கல்' (vernacularization of colonial power) என்று விவரித்தார். மொழி மாறியது, ஆனால் அதிகார அமைப்பு மாறவில்லை. அரசு தொடர்ந்து ஒரே குரலில் பேசியது. முன்பு அது ஆங்கிலமாக இருந்தது, இப் போது சிங்களம்.

இந்தியாவில், சுதந்திரத்திற்குப் பிந்தைய தலைவர்கள் இதேபோன்ற அழுத்தங்களை எதிர்கொண்டனர், ஆனால் சமரசத்தைத் தேர்ந்தெடுத்தனர். இந்தி ஊக்குவிக்கப் பட்டது, ஆனால் ஆங்கிலம் ஒரு துணை அதிகாரப்பூர்வ மொழியாகத் தக்கவைக்கப்பட்டது. மாநிலங்கள் மொழி களின் அடிப்படையில் மறுசீரமைக்கப்பட்டன. ஜவஹர்லால் நேரு மொழியியல் முழுமையான வாதத்திற்கு எதிராக வெளிப்படையாக எச்சரித்தார், 'திணிக்கப்பட்ட ஒற்றுமை என்பது அழிக்கப்பட்ட ஒற்றுமை' என்று வாதிட்டார். இதற்கு நேர்மாறாக, பாகிஸ்தானில், வங்காள பெரும்பான்மை இருந்தபோதிலும், உருதுவை ஒரே தேசிய மொழியாக வலி யுறுத்துவது, ஆதிக்கம் மூலம் இரட்டைப் பிணைப்பைத் தீர்த்தது. இதன் விளைவாக பிரிவினை மற்றும் அரசின் முறிவு ஏற்பட்டது. இலங்கையின் போக்கு இந்த தர்க்கத்தை எதிரொலித்தாலும் விளைவுகள் வேறுபட்டதாக இருந்தன.

மிகவும் தீர்க்க முடியாத காலனித்துவ மரபுகளில் ஒன்று மக்கள் தொகை கணக்கெடுப்பால் உருவாக்கப்பட்ட வகைப்பாடு கற்பனை ஆகும். சுதந்திரத்தின் மூலம், இலங்கை சமூகம் ஏற்கனவே எண்ணற்ற மொழியியல்-இனக் குழுக்களின் தொகுப்பாக மறுகற்பனை செய்யப் பட்டது. பின்காலனித்துவ அரசியல் இந்த எண்கணி தத்தைப் பெற்றது. மொழி உரிமைகள் எண்ணிக்கையில் வடிவமைக்கப்பட்டன. பெரும்பான்மை உரிமை மற்றும் சிறுபான்மை பாதுகாப்பு. நீதி சமத்துவத்தை விட விகிதாசா ரமாகக் குறைக்கப்பட்டது. இந்தத் தர்க்கம் குடிமை அல்லது பன்மொழி மாற்றுகளை முன்கூட்டியே முடக்கியது.

காலனித்துவ வகைப்பாடு வேறுபாட்டை 'போட்டி உரிமை' யாக மாற்றியது, பின்லனித்துவ சமரசம் துரோகமாகத்

தோன்றியது என்று மானுடவியலாளர் எஸ்.ஜெ. தம்பையா வாதிட்டார். சிங்களம் இந்த எண்கணிதத்திலிருந்து மட்டுமே சட்டபூர்வமான தன்மையைப் பெற்றது, பெரும்பான்மை மொழி அரச மொழியாக இருக்க வேண்டும். பெல்ஜியத்தில், மொழியியல் மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவு பல தசாப்த கால மோதல்களுக்குப் பிறகு கூட்டாட்சி மயமாக்கலைத் தூண்டியது. மலேசியாவில், காலனித்துவ இன வகைப்பாடு பிந்தைய காலனித்துவ உறுதியான நடவடிக்கையைக் கட்டமைத்தது. வேறுபாட்டை நிர்வகிக்க நிறுவனங்கள் உருவான இடங்களில், மோதல்கள் தணிக்கப்பட்டன அவை அவ்வாறு செய்யாத இடங்களில், அது கடினமாகிவிட்டது. இலங்கை இணக்கத்தை விட ஆதிக்கம் மூலம் சிக்கல்களைத் தீர்க்கத் தேர்ந்தெடுத்தது.

காலனித்துவத்துவத்திற்குப் பிந்தைய சங்கடங்களை வடிவமைத்த மற்றொரு காலனித்துவ மரபு உயர்குடி தொடர்ச்சி. சுதந்திரத்திற்குப் பிந்தைய பல தலைவர்களும் ஆங்கிலக் கல்வியினதும் காலனித்துவ நிர்வாகத்தினதும் தயாரிப்புகளாக இருந்தனர். அவர்களின் அதிகாரம் சுதேசியமொழிச் சீர்திருத்தம் ஸ்திரமின்மையை ஏற்படுத்தும் என்று அச்சுறுத்தும் நிறுவனங்களில் தங்கியிருந்தது. இது ஒரு முரண்பாடான அரசியலை உருவாக்கியது. உயர்குடி மக்கள் பகிரங்கமாக மொழியியல் தேசியவாதத்தை ஏற்றுக்கொண்டு அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில் ஆங்கிலத்தை நம்பியிருந்தனர். குமாரி ஜெயவர்தன கவனித்தபடி, பின்குடியேற்ற தேசியவாதம் பெரும்பாலும் 'காலனித்துவ எதிர்ப்புச் சொல்லாட்சியைக் காலனித்துவ சமூக நடைமுறையுடன்' (anti-colonial rhetoric with colonial social practice) இணைத்தது. இந்த முரண்பாடு மக்கள் வெறுப்பை ஆழப்படுத்தியது. உயர்குடியினர் தேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறிக் கொண்டு, ஒரு வெளிநாட்டு மொழியில் ஆட்சி செய்தனர் என்ற கருத்திலிருந்து சிங்கள தேசியவாதம் சக்தியை ஈர்த்தது. இதனால் மொழி சீர்திருத்தம் ஒரு கொள்கைத் தேர்வாக உயரடுக்குப் பாசாங்குத் தனத்துடன் ஒரு தார்மீக கணக்கீடாக மாறியது.

அல்ஜீரியாவில் பிரெஞ்சு மொழியில் படித்த உயரடுக்குகள் அரபுமயமாக்கலை வழிநடத்தியதுடன் பிரெஞ்சு மொழியில் தொடர்ந்து செயற்பட்டன. சொல்லாட்சிக்கும் நடைமுறைக்கும் இடையிலான இடைவெளி நம்பிக்கையை அரித்துப் புதிய படி நிலைகளை உருவாக்கியது. இலங்கையின் குழப்பம் இதற்கு ஒத்ததாக இருந்தது. நிர்வாகத் திறனை அழிக்காமல் உயரடுக்கு ஆதிக்கத்தை எவ்வாறு அகற்றுவது என்ற கேள்வி இருந்தது. 'சிங்களம் மட்டுமே' ஒரு குறியீட்டுத் தெளிவை வழங்கியது, ஆனால் நிறுவனத் தீர்மானத்தை அல்ல.

காலனித்துவத்திற்குப் பிந்தைய காலனித்துவத்தின் மிகவும் மோசமான குழப்பம், பன்மைத்துவத்தை ஆரம்பத்தில் நிறுவனமயமாக்கத் தவறியமை. சுதந்திரம் அரசை பன்மொழி, பல இனமாக மறுபரிசீலனை செய்வதற்கான ஒரு விரைவான வாய்ப்பை வழங்கியது. அந்த வாய்ப்புத் தவறவிடப்பட்டது. அசங்க வெலிகல, ஆரம்பகால அரசியலமைப்பு வடிவமைப்புப் பன்மைத்துவத்தை உட்பொதிக்க வேண்டிய ஒரு கொள்கையாக அல்லாமல் நிர்வகிக்க வேண்டிய ஒரு பிரச்சினையாகக் கருதியது என்று வாதிடுகிறார். மொழிக் கொள்கை ஒத்திவைக்கப்பட்டது. அது அரசியல் கருவியாக்கப்பட்டது. அது ஒருபோதும் பன்மைத்துவ சமூகத்தை அங்கீகரிப்பதன் அடித்தளமாக இல்லை.

இங்கு இரண்டு உதாரணங்களை நோக்கலாம். முதலாவது நைஜீரியாவில், மொழியியல் மற்றும் பிராந்திய பன்மைத்துவத்தை உட்பொதிக்கத் தவறியது அரசியலமைப்பு ரீதியாக மீண்டும் மீண்டும் மோதல் சுழற்சிகளை உருவாக்கியது. இரண்டாவது சுவிட்சர்லாந்தில், இதற்கு மாறாக, பன்மொழிவாதம் அடித்தளமாக இருந்தது, சலுகையாக இல்லை. வேறுபாடு பன்முகத்தன்மையில் இல்லை, கற்பனையில் இருந்தது. இலங்கையின் காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசு ஒருமைத்தன்மை மூலம் ஒற்றுமையைக் கற்பனை செய்தது. அந்தக் கற்பனை கடினமாகிவிட்டதால், சீர்திருத்தம் சிக்கலான முறையில் கடினமாகிவிட்டது.

இலங்கையின் அனுபவம், மொழி, அடையாளம் மற்றும் நீதியுடன் போராடும் பின்கொலனிய சமூகங்களுக்கு ஓர் எச்சரிக்கையான பாடத்தை வழங்குகிறது:

- காலனித்துவ மரபுகள் காலனித்துவத்திற்குப் பிந்தைய தேர்வுகளைக் கட்டுப்படுத்துகின்றன ஆனால், தீர்மானிக்கவில்லை.
- மொழி சீர்திருத்தம் நிறுவன வடிவமைப்பைப் பொறுத்து ஜனநாயகப்படுத்தலாம் அல்லது பிரிக்கலாம்.
- பன்மை சங்கடங்களுக்கான பெரும்பான்மை தீர்வுகள் பெரும்பாலும் நீண்டகால ஒற்றுமையின் விலையில் சட்டபூர்வமான நெருக்கடிகளைத் தீர்க்கின்றன.

இந்தப் படிப்பினைகள் எத்தியோப்பியா, மியான்மர் மற்றும் அதற்கு அப்பால் எதிரொலிக்கின்றன அங்கு மொழி, இனம் மற்றும் அரசின் சட்டபூர்வமான தன்மைக்கு மையமாக உள்ளன.

காலனித்துவ மரபுகள் இலங்கையை ஒரு நெருக்கடியான சூழலில் நிறுத்தியிருந்தாலும், ஒரு குறிப்பிட்ட பாதையை அவை கட்டாயமாக்கவில்லை. காலனித்துவத்திற்குப் பிந்தைய தலைவர்கள் உண்மையான சங்கடங்களை எதிர்கொண்டனர் - ஆனால் உண்மையான மாற்றுகளையும் எதிர்கொள்ளத் தவறினர். அவர்கள் 'சிங்களம் மட்டும்' என்பதை மட்டுமே ஒரே தீர்வாகக் கண்டனர். இது காலனித்துவ அநீதியை அடையாளமாகத் தீர்த்தது, அதே நேரத்தில் கட்டமைப்பு ரீதியாக விலக்கை காலனித்துவத்திற்குப் பிந்தைய இலங்கையில் நிலைநிறுத்தியது. அது ஆதிக்கத்தின் இலக்கணத்தைப் பெற்ற அதே நேரத்தில் நீதியின் மொழியைப் பேசியது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் இந்த இக்கட்டான சூழ்நிலைகள் எவ்வாறு படிகமாயின. இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஒத்திவைக்கப்பட்ட கேள்வியிலிருந்து விரிசலை வரையறுப்பதற்கு மொழி எவ்வாறு நகர்ந்தது என்பதை அடுத்த கட்டுரையில் பார்க்கலாம்.



meenilankco@thaiveedu.com

பால. சிவகடாட்சம்


சுதேசிகளின்
மருந்து மூலிகைகள் குறித்து அறிவதில் ஆர்வம் காட்டிய
ஐரோப்பிய அறிஞர்கள்

17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில், மேற்கத்திய மருத்துவம் குணப்படுத்தத் தடுமாறிய பல நோய்களுக்கு உள்ளூர் சிகிச்சைகள் சிறப்பான பலனை வழங்குவதைக் கண்டு, ஐரோப்பிய மருத்துவர்களும் தாவரவியல் ஆய்வாளர்களும் ஆச்சரியமடைந்தனர். குறிப்பிட்ட சில மருத்துவத் துறைகளில் பாரம்பரிய தமிழ் மருத்துவர்கள் பெற்றிருந்த ஆழ்ந்த நிபுணத்துவத்தை ஐரோப்பியர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். குறிப்பாக, இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த உள்ளூர் மருத்துவர்கள் பாம்புக்கடிக்கு சிகிச்சையளிப்பதில் தங்கள் திறமையைத் தெளிவாக நிரூபித்திருந்தனர். இதனை பதினேழாம் நூற்றாண்டில் இலங்கையில் செயற்பட்ட போர்த்துகீசியப் போர்வீரரும் வரலாற்றாசிரியருமான ஜோவா ரிபேரோ (1641 - 1658) தனது பதிவுகளில் வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார். அதேபோல், ஆர்.எல். ஃபோலியும் இந்த உள்ளூர் மருத்துவர்களின் திறமையைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேற்கத்திய மருத்துவத்தின் மேன்மையில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்த ஐரோப்பிய மருத்துவர்கள், இந்தியப் பாரம்பரிய மருத்துவர்களுடன் பெரிதும் நெருங்கிப் பழகவில்லை. இருந்தபோதிலும், சில குறிப்பிட்ட நோய்களுக்குச் சிகிச்சையளிப்பதில் உள்ளூர் மருத்துவர்கள் காட்டிய திறமையை அவர்கள் அனுபவத்தின் மூலம் அறிந்திருந்தனர். இதன் விளைவாக, இலங்கை மற்றும் இந்திய மருத்துவர்கள் பயன்படுத்திய மருந்து மூலிகைகளில் தனிச்சிறப்பு மிக்க குணநலன்கள் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கை ஐரோப்பியர்களிடையே உருவாகத் தொடங்கியது.

வெப்பமண்டல நோய்களுக்கு செலவு குறைந்த சிகிச்சைகளைக் கண்டறியவும், விலையுயர்ந்த மருந்து இறக்குமதியைக் குறைக்கவும் ஐரோப்பிய மருத்துவர்களும் காலனித்துவ ஆட்சியாளர்களும் தெற்காசிய மருத்துவ முறைகளை ஆராய முனைந்தனர். இந்தச் சூழலில்தான், உள்ளூர் மருத்துவர்கள் பயன்படுத்திய மருந்து மூலிகைகள் குறித்த ஆர்வம் அதிகரித்து, காலனித்துவ காலத்தில் தாவரவியல் மற்றும் மருத்துவ அறிவுத் துறைகளில் குறிப்பிடத்தக்க பரிமாற்றம் நிகழ்ந்தது.

1563-ஆம் ஆண்டில் இந்திய மருத்துவத் தாவரங்களைப் பற்றிய ஒரு நூலை எழுதியவர் கோவாவைச் சேர்ந்த போர்த்துகீசிய மருத்துவரான கார்சியா டா ஓர்டா (Garcia de Orta 1501 - 1568) ஆவார். அவரது 'இந்தியாவின் மருந்துகள் பற்றிய உரையாடல்' (Colloquies on the Simples & Drugs of India) என்னும் நூல் ஐரோப்பா முழுவதும் பரவ வேண்டும் என்ற நோக்கில் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்தியாவில் தாம் சந்தித்த சித்தர்களை 'யோகிகள்' என்று குறிப்பிட்ட அவர், அவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று


MATERIA INDICA;

OR,

SOME ACCOUNT

OF

THOSE ARTICLES WHICH ARE EMPLOYED BY

THE HINDOOS,

AND OTHER EASTERN NATIONS,

IN THEIR

MEDICINE, ARTS, AND AGRICULTURE;

COMPRISING ALSO

FORMULÆ,

WITH PRACTICAL OBSERVATIONS,

NAMES OF DISEASES IN VARIOUS EASTERN LANGUAGES,
AND A COPIOUS LIST OF ORIENTAL BOOKS IMMEDIATELY
CONNECTED WITH GENERAL SCIENCE,
&c. &c.

By WHITELAW AINSLIE, M.D. M.R.A.S.

LATE OF THE MEDICAL STAFF OF SOUTHERN INDIA.

VOL. I.

LONDON:

PRINTED FOR

LONGMAN, REES, ORME, BROWN, AND GREEN,

PATERNOSTER-ROW.

1826.

3784.10
Vol. I
BOSTON PUBLIC LIBRARY.
tg.theeban@gmail.com

வருவதன் மூலம் பலவகை மருந்துகளையும் சிகிச்சை முறை களையும் அறிந்து வைத்துள்ளனர் என்றும் பதிவு செய் துள்ளார்.


தமிழ் மருத்துவர்களால் 'சீனவேர்' அல்லது 'சீனப்பாகு' (Smilax china) என அழைக்கப்பட்ட ஒரு மூலிகை, போர்த்துக் கேயரால் இந்தியத் துணைக்கண்டத்தில் பரப்பப்பட்ட பால் வினை நோயான சிபிலிஸ் (syphilis) எனப்படும் பறங்கி நோய்க்கு மருந்தாகப் பயன்படுகிறது என்ற தகவலை பரவ லாக அறியத்தந்ததும் இவரே. போர்த்துக்கேயர்களால் மேற்படி நோய்க்கு மிகவும் பயனுள்ளதாகக் கருதப்பட்ட இந்த மருந் தைத் தமிழ் மருத்துவர்கள் 'பறங்கிப்பட்டை' என்று அழைத் தனர். இந்தத் தகவலின் அடிப்படையில் பறங்கிப்பட்டை மருந்தாக இடம்பெறும் எந்த ஒரு தமிழ் மருத்துவ நூலும் 16-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதாக இருக்க முடியாது என்பதை உறுதிப்படுத்த முடியும்.

கார்சியா டா ஓர்டாவின் நூலைச் சற்று விரிவுபடுத்தி கிரிஸ் டோபெல் அகொஸ்டா (Christobel d' Acosta) என்பவர் 1578-இல் 'கிழக்கு இந்தியாவின் மருந்துகள் மற்றும் மருத்துவம் பற்றிய ஆய்வு' என்னும் பொருள் கொண்ட நூல் ஒன்றை Tratado de la drogas y medicina de las India Orientales என்னும் பெயரில் எழுதி வெளியிட்டார்.

கேரளத்தின் மருத்துவத் தாவரங்களைப் பற்றிய விரிவான விளக்கங்களைப் படங்களுடன் தொகுத்துத் தரும் Hortus Malabaricus என்னும் நூலை எழுதியவர், கொச்சிப் பிரதே சத்தின் டச்சு ஆளுநராக இருந்த ஹென்ட்ரிக் வான் ரீட் (Hendrik Van Rheede 1636 - 1691) ஆவார். லத்தீன் மொழி யில் தயாரிக்கப்பட்ட இந்நூல் 742 தாவரங்களின் விஞ்ஞா னப் பெயர், மலையாளப் பெயர், அவற்றின் உள்ளூர்ப் பயன் பாடு குறித்த விபரங்களைத் தந்துள்ளது. மூலநூல் ஆக்கப்



ஹென்ட்ரிக் வான் ரீட் (Hendrik Van Rheede)



XCVI.

GANJA தூதசா (Tam.) *Gingi-lacki-lacki* (Mal.) *Ganjah chettoo* (Tel.) *Kanub* قنب (Arab.) *Ganja* (Beng.) *Gindshe* (Jav.) *Sjarank* (Egypt.) *Kanop* (Armen.) *Mafuen, Chutsao* (Chinese). *Ganjica* also *Bijeeah* (Sans.) *Hemp.*

CANNABIS SATIVA (Willd.).

பெற்று ஏறத்தாழ 325 வருடங்கள் கழிந்த பின்னர் ஓய்வு நிலைப் பேராசிரியர் கே.எஸ். மணிலால் அவர்களால் ஆங்கி லத்தில் மொழிபெயர்க்கப்பட்ட இந்நூலைக் கேரளப் பல் கலைக்கழகம் 2003-இல் திருவனந்தபுரத்தில் வெளியிட் டுள்ளது. Hortus Malabaricus பன்னிரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது.

தென்னை மரத்தைப் பற்றிக் கூறும்போது, தேனைப் போன்ற சுவையுள்ள இளநீரைக் கொடுப்பதால் 'தேன்+காய்' என்பதி லிருந்து 'தேங்காய்' என்ற பெயர் வந்தது என்று பேராசிரியர் மணிலால் விளக்குகிறார். கறுவா மரத்தில் இருந்து கருப் பூரம் பெறப்படுவதால் அதற்கு 'கருவா' என்ற பெயர் வந்ததா கவும் குறிப்பிட்டுள்ளார். இப்படிப் பல்வேறு தாவரங்களுக் கும் மலையாளப் பெயர் உருவான காரணத்தை ஆராய்ந் துள்ளார் பேராசிரியர் மணிலால்.

எட்டி விதையை ஒவ்வொரு நாளும் ஒன்று அல்லது இரண் டாக, இரண்டு வருடங்கள் தொடர்ந்து எடுத்துவரும் ஒருவ ருக்கு நாகபாம்பு கடித்தாலும் அதன் விஷத்தினால் பாதிப்பு ஏதும் ஏற்படமாட்டாது என்று தாம் கேட்டறிந்துகொண்ட தக வல் ஒன்றை டச்சு ஆளுநர் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக இற்றைக்கு இருநூறு ஆண்டு களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருபாலைச் செட்டியார் என்று அறியப்பட்ட தமிழ் மருத்துவர் பற்றிக் கூறப்படும் செவிவழிச் செய்தி ஒன்றைக் குறிப்பிடலாம். இந்த வைத் தியர் எட்டி விதையைச் சிறிது சிறிதாக அருந்தத் தொடங்கி மெல்ல மெல்லக் கூட்டி ஒரு முழு விதையை சாப்பிட்டும் பாதிப்பு இன்றி இருந்தார் என்றும். இவர் சாப்பிட்டு மிஞ்சிய உணவை உண்ட காகங்கள் இறந்துவிடும் என்றும் கூறப் படும் செவிவழிச்செய்தியை இங்கு குறிப்பிடலாம்.

உண்மையில், எட்டி விதையில் 'ஸ்ட்ரைக்னைன்' (strychnine) என்னும் மிகக் கடுமையான நச்சுப் பொருள் உள்ளது. பொதுவாக 60 - 100 மில்லிகிராம் ஸ்ட்ரைக்னைன் உயிருக்கு ஆபத்தானதாகக் கருதப்படுகிறது. அது 1 - 2 மணி நேரத் திற்குள் மரணத்தை ஏற்படுத்தக்கூடும். இருப்பினும், நஞ்சின் தாக்கம் ஒவ்வொருவருக்கும் வேறுபடலாம்.

தமிழக மக்களின் பாரம்பரிய மருத்துவமும் அவர்கள் பயன் படுத்திய மருந்து மூலிகைகளும் இரசாயனப் பொருட்களும் குறித்து முதன்முதலாக விஞ்ஞான ரீதியான ஆய்வுளை மேற் கொண்டவர் 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னிந்





தியாவில் மருத்துவப் பணிபுரிந்த ஆங்கிலேய மருத்துவரான வைட்லோ ஐன்ஸ்லி (Whitelaw Ainslie) ஆவார். இவர் Materia Medica of Hindustan and Artisan's Agriculturists' Nomenclature என்னும் ஆய்வு நூலை 1813-ஆம் ஆண்டு சென்னையில் அச்சிட்டு வெளியிட்டார். இவரது Materia Indica என்னும் பெருநூல் பொது ஆண்டு 1826-இல் இலண்டனில் வெளியிடப்பெற்றது.

மருந்துப் பொருள்களை விஞ்ஞானபூர்வமாக இனங்கண்டு அவற்றின் லத்தீன் விஞ்ஞானப் பெயர்களுடன் தமிழ், சமஸ்கிருதம், பாரசீகம், அரபு, இந்தி, சிங்களம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் வழங்கப்பட்ட பெயர்களையும் அந்த மருந்துப் பொருள்கள் உள்ளூர் நோய்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பதையும் விளக்கியுள்ளார். மேலும், உள்ளூர் மருத்துவர்கள் பயன்படுத்தும் தமிழ் மருத்துவ நூல்களின் விரிவான பட்டியல் ஒன்றையும் ஐன்ஸ்லி தந்துள்ளார். கூடவே தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் மருத்துவர்கள் பயன்படுத்திய சமஸ்கிருத மொழியில் இருந்த நூல்களின் விபரங்களையும் தந்துள்ளார். தேவநாகரி, கிரந்தம் ஆகிய இரண்டு வரிவடிவங்களிலும் சமஸ்கிருத நூல்கள் எழுதிவைத்துப் படிக்கப்பெற்றன என்ற விபரத்தையும் ஐன்ஸ்லி தந்துள்ளார்.

இந்தக் காலகட்டத்தில், இந்திய மற்றும் இலங்கை அறிஞர்கள் சிலர் மட்டுமே தமிழ் மருத்துவத்தை மீட்டெடுக்க முயன்றனர். அவர்களில் குறிப்பிடத்தக்கவர் தஞ்சையின் மராட்டிய ஆட்சியாளரான இரண்டாம் சரபோஜி (1798 - 1832). மருத்துவத் துறையின் மீதான சரபோஜியின் ஈர்ப்பு அவரது சமகால ஆங்கில மருத்துவரும் நண்பருமான வைட்லா ஐன்ஸ்லியின் கவனத்தை ஈர்த்தது. மனித உடற்கூறியல் பற்றிய ஆழ்ந்த ஆர்வத்தைக் காட்டிய மன்னர் சரபோஜி கட்டுப்பாடு மிக்க ஓர் இந்துவாக இருந்தபடியால் மதநம்பிக்கைக்கு விரோதமாகப் போகாது, முற்றிலும் யானைத் தந்தத்தினால் செய்யப்பட்ட மனித எலும்புக்கூடொன்றை இங்கிலாந்தில் இருந்து தருவிப்பதற்கு உத்தரவிட்டார் என்று ஐன்ஸ்லி பதிவுசெய்துள்ளார்.

தஞ்சையில் சரஸ்வதி மகால் நூலகத்தை வளர்த்ததில் மன்னர் சரபோஜி முக்கிய பங்கு வகித்தார். இது நாட்டின் அனைத்து மூலைகளிலிருந்தும் விரிவான அறிவுத் தொகுப்பைச் சேகரித்த ஒரு களஞ்சியமாகும். மேலும், மிகுந்த அர்ப்பணிப்புடன், அவர் நிறுவிய 'தன்வந்திரி மகால்' என அழைக்கப்பட்ட மருத்துவமனையில் ஆயுள்வேத மருந்துகளைச் சோதித்து, தெரிவு செய்யப்பட்ட சிகிச்சை முறைகள் குறித்து தமிழில் நூல்கள் எழுத முனைந்தார். இதன் மூலம் 'சரபேந்திர வைத்திய முறை' என அறியப்பட்ட தமிழ் மருத்துவ நூல்கள் உருவாகின. தமிழ் மருத்துவத்தின் மறுமலர்ச்சிக்கும் அறிவுப் பரப்புக்கும் அவர் செய்த பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழர் மருத்துவம் மற்றும் தாவரவியல் தொடர்பான துறைகளில் ஆர்வம் கொண்டவர்கள் அறிந்து கொள்வதற்கும் விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளுவதற்கும் பெரிதும் உதவக்கூடிய ஏராளமான விடயங்களை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஐரோப்பிய அறிஞர்களின் நூல்களையும் ஜோன் அட்டிகல (John Attygala) அவர்களின் Sinhalese Materia Medica என்னும் நூலையும் ஆழமாகப் படிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும்.



Sivakadadcham@thaiveedu.com

ஆதலினால் விரதமிருப்பீர்!

நடராசா சிறிரஞ்சன்



விரதமிருப்பது நம்மிடையே தொன்று தொட்டு வழக்கத்தில் உள்ளதொன்றாகும். சைவர்கள் மாத்திரமின்றி கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர்களும் விரதம் இருக்கும் வழக்கம் கொண்டவர்கள். சைவர்கள் வெள்ளிக்கிழமை, அமாவாசை, பறுவம், பிரதோசம், கந்த சஷ்டி, கௌரி விரதம் எனப் பல்தரப்பட்ட விரதங்கள் இருப்பர். இஸ்லாமியர்கள் நோன்புக் காலத்திலும் கிறிஸ்தவர்கள் தவக்காலத்திலும் விரதமிருப்பர். பௌத்தர்கள் விரதம் இருப்பதாகத் தெரியவில்லை.

இவ்வாறான சமயம் சார்ந்த விரதங்கள் இறையருளைப் பெறும் நோக்கத்திலானவை. தற்காலத்தில் ஆரோக்கியத்தைப் பேணும் நோக்கில் மக்கள் விரதமிருக்கும் போக்கு உலகெங்கும் பரவி வருகிறது. பல்வேறு வழிகளில் உணவைக் குறைத்து அல்லது விடுத்து ஆரோக்கியம் பேணும் விரத முறைகள் பலவற்றை உலகளாவிய ரீதியல் மக்கள் பின்பற்றி வருகின்றனர். இவற்றில் இடைக்கால விரதம் (intermittent fasting) மிகப் பிரபல்யமாகிவிட்டது.

ஒருவருடைய வயதென்பது அவர் பிறந்தநாளில் இருந்து இற்றைநாள் வரையிலான காலப்பகுதியைக் கருதுகிறது. இதனை விட ஒருவருக்கு வேறு ஏதாவது வயது இருக்க முடியுமா? சிலரது தோற்றத்தைப் பார்க்கும்போது அவர்கள் தமது உண்மையான வயதிலும் பார்க்க கூடுதலான வயதானவர்கள் போல் தோற்றமளிக்கிறார்கள். வேறு சிலர் தமது உண்மையான வயதிலும் பார்க்க குறைவான வயதானவர்கள் போல் தோற்றமளிக்கிறார்கள். இந்நிலையில் உண்மையான வயதென்பது எது? முதலில் குறிப்பிடப்பட்ட கணக்கிடப்பட்ட வயதா அல்லது தோற்றத்தைக் கொண்டு மதிக்கும் வயதா?

ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைக் காலம் என்று நோக்கும்போது ஒருவரது வயதானது மேற்சொல்லப்பட்ட இரண்டுமே இல்லை. அவரது உடலின் வயதே உண்மையான வயதென்கிறார்கள் அறிஞர்கள்.

மேற்சொல்லப்பட்ட வெவ்வேறு வயதுகளில் மிக முக்கியமானது எது என்று பார்த்தால், ஒருவரது கல்வி, தொழில், திருமணம், இழைப்பாறல் போன்ற சட்டரீதியான தேவைகட்கு முதலாவது வகை வயது முக்கியமாகிறது. மற்றவர்களால் கவரப்படுதல் போன்ற சமூகத் தேவைகளிற்கு இரண்டாவது வகை வயது முக்கியமாகிறது. ஆரோக்கியம் மற்றும் வாழ்க்கைக் காலம் தொடர்பில் மூன்றாவது வகை வயது முக்கியமாகிறது.

முதலாவது வகை வயது தொடர்பில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை. வாழ்க்கையில் ஒருவருக்கு காலத்திற்கு காலம் எது நடக்கிறதோ இல்லையோ, வயது தன்பாட்டில் போய்க்கொண்டே இருக்கும். இரண்டாவது வகை வயது தொடர்பில் செல்வாக்குச் செலுத்திக் குறைந்த வயதுடையவராகத் தோற்றமளிப்பதற்கு மக்கள் ஆதீத பிரயத்தனத்தை, மிகப்பெரும் பொருட்செலவில் செய்கின்றனர்.

மூன்றாவது வகை வயதுதொன்று இருப்பதைப் பெருமளவிற்கு அறியாதவர்களாக நாம் இருக்கிறோம்.

பலம் குறைந்த காலை ஊன்றியபடி, கண்ணை மூடிக்கொண்டு ஒற்றைக்காலில் ஒருவரால் எவ்வளவு நேரம் நிற்க முடிகிறது, மேலிருந்து செங்குத்தாக் கீழ் நோக்கி விழும் அடிமட்டம் ஒன்றை எந்தளவில் ஒருவரால் பிடித்து நிறுத்த முடிகிறது போன்ற சில பரிசோதனைகள் மூலம் மேலே குறிப்பிட்ட மூன்றாவது வகை வயதைக் கணித்துக் கொள்ளலாம் என்கின்றனர் அய்வறிவாளர்கள். கண்ணை மூடிக்கொண்டு ஒற்றைக் காலில் 30 செக்கன்களுக்கு மேல் நிற்க முடிதல், ஐந்து அங்குல மட்டத்திற்குள் அடி மட்டத்தை பிடித்து நிறுத்த முடிதல் போன்றவை ஒருவரது உடலின் வயது ஒப்பீட்ட ளவில் குறைவானது என்பதைப் பிரதிபலிப்பதாக அறிஞர்கள் கூறுகின்றனர். உடல் நிலை தடுமாறாமல் நிற்க கூடிய ஆற்றல் (the sense of balance), மற்றும் விரைவு எதி ரியக்கம் (reaction time) என்பவை வயது அதிகரிக்கும் போது குறைவடைந்து செல்லும். இவை இரண்டையும் முறையே பரிசோதிக்கும் வழிகளே இவைகளாகும்.

ஒருவரது உடலின் வயதில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றில் முக்கியமானது அவரது மரபுக் கீற்று (gene). அது தொடர்பில் நாம் ஒன்றும் செய்வதற் கில்லை. உடலின் வயதில் செல்வாக்குச் செலுத்தும் இன்னொரு முக்கிய காரணி ஒருவர் உட்கொள்ளும் உணவின் அளவு எனப்படுகிறது. அதாவது, நாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்தால், குறிப்பாக விரதமிருந்தால், இன்னும் குறித்து ரைத்துச் சொல்வதாயின் உபவாசம் இருந்தால் எமது உடலின் வயதைக் குறைவாகப் பேணி நோயின்றி நீண்டகாலம் உயிர் வாழலாம் என்கின்றனர் ஆய்வறிவாளர்கள்.

அமெரிக்க வோசிங்ரன் பல்கலைக்கழகப் பேராசிரியர் லூய்கி பொன்ரானா. இவர் 'உண்ணும் உணவின் அளவைக் கட்டுப்படுத்துதலும் மனித ஆயுட்கால அதிகரிப்பும்' என்ற ஆராட்சியில் பத்து வருடங்களிற்கு மேல் ஈடுபட்டுள்ளார். இதன்படி கலோரி அளவில் குறைந்தளவு உணவை உண்பவர்களது ஆயுட்காலம் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பை காட்டி நிற்கிறது என்கிறார்.

டொக்டர் கிறிஸ்ரா வறடி சிக்காக்கோவில் வசிப்பவர். இவர் தனது ஆய்வில் ஒரு தொகை நபர்களை ஈடுபடுத்தி ஒன்று விட்டு ஒருநாள் விரதமிருக்கச் செய்தார். இவர்கள் விரதநாட்களில் 600 கலோரிக்கு உட்பட்ட உணவை மதிய வேளையில் மட்டும் உட்கொண்டனர். மற்றைய நாட்களில் அவர்கள் விரும்பியதை விரும்பிய அளவு உணவை உட்கொண்டனர். இந்த ஆய்வுக்கு உட்பட்டவர்களின் கொலஸ்ரோல் அளவுகளில் மிக முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது அவதானிக்கப்பட்டது.

அமெரிக்கப் பேராசிரியர் மார்க் மற்சன் வயதடைந்து செல்லும் மூளை பற்றிய ஆராய்ச் சியில் ஈடுபட்டிருப்பவர். இவரது ஆய்வின் பிரகாராம் விரதமிருப்பதால் அல்செய்மர் வியாதி, ஞாபக மறதி போன்ற மூளை தொடர்பான வியாதிகளால் பீடிக்கப்படும் வயதைப் பல ஆண்டுகளிற்குத் பின்தள்ளிப் போடலாம் என்கின்றார். இவரது ஆய்வு எலிகள் மீது மேற்கொள்ளப்பட்டது. அல்செய்மர் வியாதியால் பீடிக்கப்படக்கூடிய எலி களிற்கு சில நாட்கள் உணவினைக் கொடுத்து வேறு சில நாட்கள் உணவினைத் தவிர்த்து ஆய்வை மேற்கொண்டார். இதனால் இந்த எலிகளிற்கு அல்செய்மர் ஏற்படும் காலம் கணிசமானளவு பின்தள்ளப்பட்டது. இந்த ஆய்வின் மூலம் பேராசிரியர் மற்சன் வலியுறுத்தும் விடயம் யாதெனில் ஒருவர் உண்ணும் உணவின் அளவைக் குறைப்ப திலும் பார்க்க சில நாட்கள் விரதமிருந்து மற்றைய நாட்களில் சாதாரணமாக உண்பதன் மூலம் கிடைக்கும் பலன்கள் அபரிமிதமானவை என்பதாகும்.

பேராசிரியர் வோல்டர் லொங்கோ வயோதிபமடைதல் என்பது தொடர்பில் ஆய்வு செய்யும் உலகின் முன்னணி ஆராய்ச்சியாளராவார். எலிகளை வைத்து இவர் மேற்கொண்ட ஆராய்ச்சியில் அதிகம் சாப்பிட்டு கொழுத்து வளர்ந்திருந்த எலிக ளிலும் பார்க்க குறைந்தளவு உணவை உட்கொண்டு சிறிய உருவம் கொண்ட எலிகள் 40 வீதம் கூடுதலான காலம் வசிக்கும் என்பதைக் கண்டுள்ளார்.

ஈக்குவேடர் நாட்டு கிராமமொன்றில் வாழும் மக்களில் சிலர் லறோன் நோய்க்குறி (Laron syndrome) என்றதொன்றால் பாதிக்கபட்டுள்ளனர். இதனால் இவர்களது உடல்

"உடலின் வயதில் செல்வாக்குச் செலுத்தும் முக்கிய காரணி ஒருவர் உட்கொள்ளும் உணவின் அளவு எனப்படுகிறது. அதாவது, நாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்தால், குறிப்பாக விரதமிருந்தால், இன்னும் குறித்துரைத்துச் சொல்வதாயின் உபவாசம் இருந்தால் எமது உடலின் வயதைக் குறைவாகப் பேணி நோயின்றி நீண்ட காலம் உயிர் வாழலாம்"

வளர்ச்சி மிகக் குறைவாகக் காணப்படுகிறது. இவர்களது சராசரி உயரம் மூன்றரை அடியாக மட்டுமே உள்ளது. இவர்கள் மிகவும் மோசமான உணவுப் பழக்கத்தையும் வாழ்க்கை முறையையும் கொண்டிருக்கிறபோதும் இவர்களிற்கு நீரழிவு, புற்றுநோய் ஆகிய வியாதிகள் வருவதே இல்லை என்பதை பேராசிரியர் லோங்கோ கண்டறிந்து அது தொடர்பில் ஆராட்சி செய்துள்ளார். உடல் வளர்ச்சியைத் தூண்டும் IGF1 எனப்படும் ஹோர்மோன் மிகவும் குறைவாகவே இவர்களது உடலில் சுரக்கப்படுவதை தனது ஆய்வில் கண்டறிந்துள்ளார். உடலில் காணப்படும் செல்களைப் பிரித்து புதிய செல்களை உருவாக்கி IGF1 உடலை வளரச் செய்கிறது. IGF1 குறைவாக இருக்கும் போது அது புதிய செல்கள் அதிகமாக உருவாக்குவதில்லை, பதிலாக செல்களைப் பழுதுபார்த்து அவற்றில் உள்ள குறைகளை நீக்கி அவற்றை சரிசெய்கிறது. இதன் விளைவாக ஆரோக்கியமான உடல், நோயற்ற வாழ்க்கை, நீண்ட ஆயுள் என்பனவாக அமைகின்றன என்கிறார்.

இந்த IGF1 குறைவாகச் சுரப்பதனால்தான் மேலே குறிப்பிட்ட ஈக்குவேடர் நாட்டு கிராம மக்கள் ஒருபக்கத்தில் உரிய வளர்ச்சியை அடையாமல் உயரம் குறைந்தவர்களாகவும் மறுபக்கத்தில் நீரழிவு, புற்றுநோய் போன்றவற்றின் தாக்கத்திற்கு உள்ளாகாமல் நீண்ட காலம் வாழக்கூடியவர்களாகவும் காணப்படுகின்றனர் என்கிறார்.

இந்த IGF1 எமது உடலில் சுரக்கப்படுகிறது. இது சுரக்கும் அளவைத் தூண்டுவது நாம் உட்கொள்ளும் புரதச் சத்தாகும். புரதத்தை எடுக்கும் அளவு குறையும் போது IGF1 குறையும். ஆனால் புரதத்தை ஒரேயடிகாகக் குறைத்தலும் கூடாது. இந்த வகையில் IGF1-இனைக் குறைப்பதற்கு இலகுவானதும் பாதுகாப்பானதுமான இன்னமொரு வழி விரதமிருத்தலாகும் என்கிறார் பேராசிரியர் வோல்டர் லொங்கோ.

இவரின் ஆராய்ச்சி தொடர்பில் அவரையும் இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஆய்வறிவாளர்களையும் பேட்டி கண்டு 'Eat, Fast and Live Longer' என்ற விவரணப் படத்தைத் தயாரித்து பிபிசி தொலைக்காட்சியில் மைக்கல் மொஸ்லி ஒளிபரப்பினார்.

பைமக்கல் மொஸ்லி நான்கு இரவுகளைக் கொண்ட மூன்று நாட்கள், நாளொன்றிற்கு வெறுமனே 50 கலோரிகள் கொண்ட சூப்பை மட்டுமே உட்கொண்டு விரதமிருந்தார். தனது விரதத்தைத் தொடங்க முன்னரும் அதனை முடிக்க முன்னரும் அவர் தனது IGF1, இரத்தத்தில் உள்ள சீனியின் அளவு போன்றவற்றைப் பரிசோதித்துக் கொண்டார். விரதமுடிவின் போது வந்த பரிசோதனை முடிவுகள் அவர் முதலில் எடுத்து வந்த முடிவுகளோடு ஒப்பிடும் போது மிகவும் முன்னேற்றகரமானவையாக இருந்தன. குறிப்பாக அவரின் IGF1-இன் அளவு பாதியாகக் குறைந்திருந்தது.

மூன்று நாள் விரதத்தின் மூலம் திரு. மொஸ்லி அடைந்த நன்மைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்கு சில மாதங்களிற்கு ஒருமுறை இவ்வாறு மீண்டும் மீண்டும் விரதமிருத்தல் வேண்டும் என்பதை பேராசிரியர் லொங்கோ சுட்டிக்காட்டினார். எனினும் நாளொன்றிற்கு 50 கலோரி சூப்பை மட்டும் உட்கொள்ளும் மூன்று நாள் விரதத்தை அடிக்கடி கடைப்பிடிப்பது மிகவும் கடினமான விடயம் என்று மொஸ்லி கருதினார்.

இதனால் அதற்கு ஒரு மாற்றீட்டைத் தேடி அதில் வெற்றியும் கண்டுள்ளார். இதன்படி வாரத்திற்கு இரண்டு நாட்கள், ஆண்கள் 600 கலோரிகளுக்கு உட்பட்ட உணவையும் பெண்கள் 500 கலோரிகளுக்கு உட்பட்ட உணவையும் உண்பதன் மூலம் மேலே விபரிக்கப்பட்ட நன்மைகளை அடைந்து கொள்ளலாம் என்பதை தனது சொந்த அனுபவ ஆய்வின் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளார். இதனைப் பின்பற்றும் ஒருவர் தான் விரும்பிய எந்த இரு நாட்களையும் விரத நாட்களாகத் தெரிவு செய்யலாம் என்பதுடன் அவை இரண்டும் தொடர்ந்து வரும் நாட்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை. அத்துடன் வாரத்தின் மிகுதி ஐந்து நாட்களும் விரும்பியளவு உணவை உட்கொள்ளலாம் என்றும் பரிந்துரைக்கிறார். இது 5 : 2 விரதமிருத்தல் என்று பெருமளவுக்கு அறியப்படுகிறது.

மேலை நாடுகளில் நம்மவர்களைப் போல் விரதமிருக்கும் வழக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. இங்கே மேற்குறிப்பிட்ட மேலைத்தேய ஆய்வுகளில் 'விரதம்' என்பதால் குறிக்கப்படுவது யாதெனில், ஆய்வு நோக்கிலும் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் நோக்கிலும் கடைப்பிடிக்கப்பட்ட உணவைக் குறைத்தல் மற்றும் தவிர்த்தல் நடவடிக்கைகளாகும்.

ஆனால் எம்மவர்களது வாழ்க்கை முறையில் விரதமானது பின்னிப் பிணைந்ததொன்றாக அமைகிறது. எமது விரதங்கள் உடல் சார்ந்தவையாகவன்றி மனம் சார்ந்தவையாகவும் ஆன்மீகம் சார்ந்தவையாகவுமே இருக்கின்றன. விரதமிருப்பதன் மூலம் உடல் நலம் சிறப்படைந்து நோயின்றி நீண்ட காலம் உயிர் வாழ முடியும் என்ற உண்மை, எமது விரதங்களின் அர்த்தத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ளவும் அதனால் விரதங்களின் முக்கியத்துவம் மேலும் உயரவும் உதவுவதாகவும் அமையும்.

இந்த முடிவுகளை மேலும் உறுதிபடுத்திக் கொள்வதற்கு, ஒழுங்காக விரதமிருக்கும் எம்மவர்களை அடையாளம் கண்டு அவர்களின் IGF1 இன் அளவு, சீனியின் அளவு, இருதய நோய், புற்றுநோய் போன்றவற்றால் அவர்கள் பீடிக்கப்பட்டார்களா என்பது முதலியவற்றை ஆய்வு செய்து அவற்றின் முடிவுகளை வெளியிடுதல் வேண்டும். அது ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்ப வழிவகுப்பதுடன் எமது வாழ்க்கை முறை எவ்வளவு தூரம் முன்னேற்றகரமானது என்பதையும் வெளிப்படுத்தவும் உதவும்.

இந்த 5 : 2 விரத முறையைக் கடைப்பிடிப்பதால் அடையக் கூடியதொரு உப-பயன், அதைப் பின்பற்றுபவர்களின் உடல் எடை குறைதலாகும். இந்தக் கட்டுரையாளர் அதற்கொரு வாழும் சாட்சியாவார்.



Nadarasa.sriranjan@thaiveedu.com




கல்விக்கூடாக வரவேண்டிய மனப்பாங்கு விருத்தி

- அகமட் பிஸ்தாமி

கலைத்திட்டமும் பாடத்திட்டமும் வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் பரீட்சையைக் காட்டி பயமுறுத்தி புள்ளிகளைப் பெறக்கூடிய பிள்ளைகளைத்தான் உருவாக்கி இருக்கின்றது. இதனால் நற்பிரஜைகள் உருவாகவில்லை. எல்லா அலுவலகங்களிலும் போலவே கீழ் நிலையில் இருந்து மேல்நிலை வரை காகிதத்தகைமைகளைச் சுமந்தவர்கள் தான் நடமாடிக்கொண்டிருக்கின்றார்கள். தமது வேதனத்தை உயர்த்திக் கொள்வதற்காகப் பட்டம் பதவிகளை உயர்த்திக் கொள்வதற்காக இன்னும் இன்னும் பாடநெறிகளைப் பரீட்சைகளை எதிர் கொண்டு பட்டத்தைத் தான் பெருக்கிக் கொண்டிருக்கின்றனர். அதன் வழியாகப் பதவி உயர்வுகளை வேதன உயர்வுகளைப் பெற்று வருகின்றனர். ஒழுக்க விழுமியங்களோ பண்பாடுகளோ நடத்தைகளோ போதிய அளவு இல்லாத கற்றலடைவை அடைந்தவர்களைத்தான் உலகம் பெரும்பாலும் சுமந்து கொண்டிருக்கிறது.

கல்வி அடிப்படையான மூன்று விடயங்களை உருவாக்க எத்தனிக்கிறது. அறிவு, திறன், மனப்பாங்கு போன்றவையே அவை. இன்று பெரும்பாலும் அறிவை மட்டுமே மையப்படுத்திக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுவதால் பரீட்சைகளில் புள்ளிகளை அடைவதை இலக்காகக் கொண்டதான கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளும் மேற்பார்வைகளும் தான் இடம்பெற்று வருகின்றன. ஆனால் கல்விக்கூடாக மாணவர்களது திறன்களை அளவிடுவதற்கோ மேம்படுத்துவதற்கோ எந்தவிதமான



செயற்பாடுகளும் திட்டங்களும் வகுக்கப்படுவதில்லை. அது போல மனப்பாங்கு என்ற ஒரு விடயம் கல்விக்கூடாக அடையப்பட வேண்டும் என எழுத்தில் எழுதப்பட்டாலும் உரைவழியாக அழுத்தமாகப் பேசப்பட்டாலும் அது குறித்தான எந்த விதமான consciousness பிரக்ஞையுமற்றவர்களாக ஆசிரியர்கள், மாணவர்கள், அதிபர்கள், பெற்றோர், அதிகாரிகள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் துறை சார்ந்தவர்கள் காணப்படுகின்றனர். மாணவர்களது நடத்தையில் மிகப் பலவீனமான நிலை உருவாவதற்கு இந்த மனப்பாங்கு குறித்த புரிதல் இல்லாமையே காரணமாக இருக்கின்றது.

கற்றல் என்பது ஒரு வகையில் உளவியல் சார்ந்த செயல்முறை தான். எனவே இந்த உளவியல் சார்ந்த செயல்முறைக்கூடாக மனப்பாங்கு விருத்தி நிகழாத வரையில் கல்வியின் மூலம் எத்தகைய மாற்றத்தையும் உருவாக்க முடியாது.

பாடசாலைக்கு முன்னறிவிப்புச் செய்தும் முன்னறிவிப்பு செய்யாமலும் திடீரென மேற்பார்வை விஜயங்களை மேற்கொள்ளும் கல்வி அதிகாரிகள்கூட பாடங்கள் சார்ந்த புள்ளிகளை மையப்படுத்திய மேற்பார்வைகளையே கூர்ந்து அவதானிக்கவும் ஆசிரியர்களது தயார்நிலை குறிப்புகள் பதிவுகள் போன்றவற்றை கழுகுப்பார்வையுடன் நோக்கிப் புரட்டிப் பார்த்து குறை கண்டு குற்றம் சுமத்தி அழுத்தங்களை உருவாக்கிப் பலவீனப்படுத்த எத்தனிக்கின்றனரே ஒழிய மாணவர்களது மனப்பாங்கு மற்றும் நடத்தை குறித்தான அவதானங்களை முன்னெடுக்க முனைவதில்லை. அவர்களிடம் அதற்கான எத்தகைய வியூகங்களும் திட்டங்களும் புள்ளியிடல் நுட்பங்களும் கூட இல்லவே இல்லை. இதுவும் கல்வித் துறையில் மனப்பாங்கு விருத்தி ஏற்படாமைக்கு பிரதான காரணமாக அமைகிறது எனலாம். இதனால்தான் ஆசிரியர்களும் மிகச்சிறந்த முறையில் குறிப்புகளைத் தயார்படுத்தி ஆவணங்களை ஒழுங்கமைப்பதில் மட்டுமே கவனம் செலுத்தி

“ஆசிரியர்களது நடை உடை நடத்தை சார்ந்த ஆரோக்கியமான மனப்பாங்குகள் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற பட்சத்தில் அவர்களை இலகுவாக, சுலபமாக மாற்றி விடலாம். இதன் வழியாக அவர்களது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் அவர்களது சிந்திக்கும் பாணி பாங்கு போக்கு போன்றவற்றையும் மாற்றிவிடலாம். ஆசிரியர்களின் அணுகுமுறைகளும் கூட மாணவர்களின் ஒட்டு மொத்த வாழ்வையும் எதிர்காலம் குறித்த பார்வைகளையும் தலை கீழாக மாற்றி விடலாம்.”

வருகின்றனர்.

மனப்பாங்கு என்பதே உளவியல் ரீதியான ஒரு சொல்லாடல். இதனுடைய வெளிப்பாடுகள் நடத்தையில் தென்படக்கூடியதாக அமைகிறது.

சமூக மட்டத்தில் நோக்கினால் மனப்பாங்கு என்பதை மிகவும் கொச்சையாகப் புரிந்திருக்கின்றனர். ஆனால் மனப்பாங்கின் வலிமை கனதி ஆழ்ந்த அர்த்தம் தனி மனித வாழ்விலும் சமூக வாழ்விலும் தீர்மானகரமான அழுத்தமான செல்வாக்குகளை ஏற்படுத்தக்கூடிய பலமான ஒரு சொல் என்பதை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மனப்பாங்கு வழியாக மனித ஆளுமையில் கணிசமான தாக்கத்தையும் மேம்பாட்டையும் உருவாக்க முடியும் ஆளுமையற்றிருக்கின்ற ஒருவரது ஆளுமையைக் கிண்டிக் கிளறி வெளிக் கொணரக்கூடிய பேராற்றலும் வலிமையும் இந்த மனப்பாங்குக்கு வாய்த்திருக்கிறது.

Actions are louder than words என்பார்கள். வார்த்தைகளை விட வாழ்க்கையில் யதார்த்தமாக வெளிப்படுத்தக்கூடிய செயல்கள் கனங்காத்திரமானவை என்பதனை ஆசிரியர்களும் கல்வித்துறையினரும் பெற்றோரும் உணர்ந்து கொண்டால் பிள்ளைகளிடத்தில் சடுதியான உடன்பாடான மாற்றங்களை வீட்டுச் சூழலிலும் பாடசாலையிலும் மற்றும் சமூகத்திலும் நிகழ்த்திக் காட்ட முடியும். இது மிகப்பெரும் திருப்புமு

னையாக மாறக்கூடியது.

மனப்பாங்குகள் வழியாக மிகப்பெரும் உயர்நிலை மாற் றங்களை உருவாக்க முடியும் என்பது போலவே அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரிடத்திலும் ஆரோக்கியமான மாற் றங்களை ஏற்படுத்த முடியும். மனப்பாங்கு வழியாக மனித உணர்வுகளை, சிந்தனைகளை, எண்ணங்களை, பார்வை களை, தீர்மானம் எடுக்கின்ற ஆற்றல்களை எல்லாம் மாற்ற முடியும். அந்த அளவுக்கு அதற்குத் தாக்கமும் வலிமையும் செல்வாக்கும் உள்ளது என்பதனை நாங்கள் புரிந்து கொள்ளத் தவறியுள்ளோம். அல்லது காலம் தாழ்த்தி உள் ளோம். அல்லது கண்டு கொள்ளாமல் கடந்து வந்துள்ளோம்.

மனப்பாங்கு என்பது உளவியல் சார்ந்த வகையில் மற்றவர்க ளிடம் நேரடியாகத் தாக்கம் செலுத்துக்கூடிய ஒன்று.

ஆசிரியர்களது நடை உடை நடத்தை சார்ந்த ஆரோக்கி யமான மனப்பாங்குகள் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற பட் சத்தில் அவர்களை இலகுவாக, சுலபமாக மாற்றி விடலாம். இதன் வழியாக அவர்களது கற்றல் கற்பித்தல் நடவடிக் கைகள் அவர்களது சிந்திக்கும் பாணி பாங்கு போக்கு போன் றவற்றையும் மாற்றிவிடலாம். ஆசிரியர்களின் அணுகுமுறை களும் கூட மாணவர்களின் ஒட்டுமொத்த வாழ்வையும் எதிர் காலம் குறித்த பார்வைகளையும் தலை கீழாக மாற்றி விட லாம்.

மனப்பாங்கு என்பது மகத்தான ஒரு சக்தி. அது ஓர் ஆற்றல். எந்த விதமான நம்பிக்கையும் அற்ற இடத்தில் அது நம்பிக் கையின் துளிகளைத் தூவி விடுகிறது. கூர்ந்து போன நீர்நிலை களில் மழைத்துளிகள் பட்டு அவை நிரம்பி வழிவது போல மனித உள்ளங்களையும் தட்டி உசுப்பேற்றி விடக்கூடிய ஆற்றல் வாய்ந்த ஒன்றுதான் மனப்பாங்கு. ஒளிமயமான எதிர் காலத்தின் புதுக்கீற்றுக்களை மாணவர்கள் மத்தியில் உரு வாக்கிவிடும் ஆற்றல் மனப்பாங்கு பெற்றுள்ளது. அசாத்தி யமான அனைத்தையும் சாத்தியமானதாக மாற்றி சாதனைகள் படைக்கத் தூண்டிவிடக்கூடிய மந்திர சக்தியாக அது அமைகிறது.

மனப்பாங்கு மாற்றம் எமது பார்வைக்கோணங்களை மாற்றிவி டக்கூடியது. எதிர்மறை உணர்வுகளை எண்ணங்களை அனுப வங்களை எல்லாம் மனப்பாங்கு உடன்பாடான ஆரோக்கி யமான சிந்தனைகளாக மாற்றிவிடும்.

மனப்பாங்கு தனி மனிதர்களுக்கும் குடும்பங்களுக்கும் ஊக்கி யாக உத்வேகம் தரக்கூடியதாக அமைந்து விடுகின்றது. எம்மை நாமே மாற்றிக் கொள்ளாத வரை எம்மில் எந்த புற ஊக்கிகளும் தாக்கம் செலுத்தாது. மனப்பாங்கு என்பது எம்மி லிருந்து வரக்கூடிய ஒன்று. நாமாக பெற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. எந்த அளவுக்கு அதனை நாம் எமக்கு சார்பானதாக அமைத்துக் கொள்கின்றோமோ அந்த அளவுக்கு அது எம்மிலே மாற்றத்தை, மேம்பாட்டை, முன்னேற்றத்தை உரு வாக்கிவிடும்.

மனப்பாங்கு மாற்றம் என்பது உடன்பாடானது போலவே எதிர்நிலை மனப்பாங்குகளும் காணப்படுகின்றன. அவை ஆபத்தானவை. பேரழிவைத் தரத்தக்கவை. அவற்றிலிருந்து நாம் எமது சிந்தனையை தற்காத்துக் கொள்ள வேண்டும். எதிர் நிலைப்பாடுகள் மேலோங்கிய மனப்பாங்கானது ஆபத் தையும் அழிவையுமே கொண்டு வரும். இவற்றில் இருந்து நாங்கள் தூர விலகி இருப்பது பொருத்தமானது. அவசிய மானது. காலத்தின் தேவையும் தான்.

குறிப்பாக ஒரு மாணவனை நல்வழிப்படுத்துகின்ற பொழுது அவனை நோக்கி 'உன்னால் முடியும்', 'உன்னிடத்தில் திறமை யுள்ளது', 'உனக்கு இதனைச் செய்வது சாத்தியமானது', 'சுல பமானது', 'நீ இப்பொழுது முன்னேறிக் கொண்டிருக்கின்றாய்' 'உனக்கு எப்பொழுதும் பக்கபலமாக நான் இருக்கின்றேன்' என்ற உடன்பாடான வார்த்தைகள் அவனுடைய மனப் பாங்கை மாற்றியமைத்து விடும். அதேபோல அவனது பெற் றோர்களை நோக்கியும் 'உங்கள் பிள்ளை முன்னரை விடவும் இப்பொழுது மேம்பட்டிருக்கின்றான், 'உயர்ந்திருக்கின்றான்', 'மாறி இருக்கின்றான்' 'இன்னும் கொஞ்சம் உங்களுடைய அவ தானத்தை கவனத்தை வழிகாட்டலை நெறிப்படுத்தலை வீட்டுச் சூழலிலும் மேற்கொண்டால் அவன் நிச்சயம் சாதனை யாளனாக மாறுவான்' என்று குறிப்பிடும்பொழுது மாற்றமும் முன்னேற்றமும் அங்கு இரட்டிப்பாகி விடுகின்றது.

இதற்கு மறுதலையாக எமது எதிர் நிலைப்பாட்டை அடிப்படை யாகக் கொண்டு எமது கடந்த கால கசப்பான அனுப வங்களை வைத்துக்கொண்டு நாம் ஒரு மாணவனை 'அவன் உருப்படமாட்டான்', 'அவன் திருந்த மாட்டான்', 'அவனால் இதனை செய்ய முடியாது', 'அவனிடத்தில் அதற்கான ஆற்றல் இல்லை', 'அவனிடத்திலே உள்வாங்குகின்ற திறமை இல்லை', 'கவனம் செலுத்துவதில்லை', 'இவன் கஷ்டப்பட விரும்புவதே இல்லை', 'பொருட்படுத்துவதில்லை' என் றெல்லாம் எமது கடந்த கால கசப்பான பதிவுகளை வைத்து வார்த்தைகளை கொட்டிவிடுகின்ற பொழுது இது அவனில் ஆசிரியர் குறித்து, கல்வி குறித்து, சமூகம் குறித்து, எதிர் நிலைப்பாட்டை உருவாக்கி விடுவதோடு ஆக்ரோஷமான எதிர் விளைவுகளையும் முரண்பட்ட உணர்வையும் அவனிலே முன்னரை விடவும் பலமாக உருவாக்கி விடக்கூடியது.

எனவே மனப்பாங்கு ஆயுதம் போன்றது. எதிரிகளை அழித்து நீதியை நிலைநாட்டவும் பயன்படுத்த முடியும். இல்லாத எதிரியை உருவாக்கி எம்மை நாமே அச்சுறுத்தலுக்கும் அவ திக்கும் ஆளாக்கிக் கொள்ளவும் முடியும். நல்ல மனப்பாங்கு எம்மையும் வாழ வைக்கும். எம்மோடு தொடர்புபடக்கூடியவர் களையும் வாழ வைக்கும். எதிர்நிலை மனப்பாங்கு முதலில் எம்மை அழித்துவிடும். எமக்கான எதிரிகளை உருவாக்கி விடும்.

கல்வி என்பது நற்பிரஜைகளை உருவாக்குவதற்கான களம். கற்றல் கற்பித்தல் பணிகளை மேற்கொள்ளக்கூடிய ஆசிரி யர்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்மாதிரிகளாக இருந்து மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உடன்பாடான நல்ல மனப்பாங்குகளை வெளிக்காட்டக்கூடிய நபர்களாக மாற வேண்டும்.

bisthamy.ahamed@thaiveedu.com





உணவுப் பழக்கவழக்கங்களும்

மாணவர்களின் கற்றல் அடைவும்

இன்றைய சூழலில் குழந்தைகள் மத்தியில் உடல் பருமன் அதிகரிப்பதற்குப் பல்வேறு காரணிகள் முன் வைக்கப்படுகின்றன. பொதுவாக, அளவுக்கு அதிகமான உணவு உட்கொள்ளலே உடல் எடை அதிகரிப்பிற்கான முதன்மைக் காரணமாகக் கருதப்படுகிறது. இருப்பினும், சில குழந்தைகளுக்குப் பெற்றோரின் மரபணுக்கள் மற் றும் குடும்பத்தின் உணவுப் பழக்கவழக்கங்களும் முக் கிய காரணங்களாக அமைகின்றன. இவற்றைத் தவிர, பெற்றோர்கள் பிள்ளைகளின் வயது மற்றும் உயரத்தைக் கருத்தில் கொள்ளாமல், அளவுக்கு அதிகமாக உணவை ஊட்டிவிடுவதும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். இத்த கைய பழக்கம் பிள்ளைகளின் உடற்பருமனை மிக வேக மாக அதிகரிப்பதோடு, அவர்களின் உடலமைப்பை மட் டுமன்றி உடல் மற்றும் உளச் செயற்பாடுகளிலும் ஒழுங் கீனத்தை ஏற்படுத்தக் காரணமாகிறது. பெற்றோர்கள் பலர் விரும்பாத போதிலும், பிள்ளைகள் நாவிற்குச் சுவைதரும், ஆனால் உடல்நலத்திற்குத் தீங்கு விளை விக்கும் உணவுகளையே அதிகம் விரும்புகின்றனர். சில பெற்றோர்கள் அவற்றைத் தடுத்தாலும், பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பதோடு, சில நேரங்களில் பெற் றோர்க்குத் தெரியாமல் மறைவாகவும் அத்தகைய உணவுகளை உட்கொள்கின்றனர்.

பிள்ளைகளிடம் ஆரோக்கியமான உணவுப் பழக்கவழக் கங்களை உருவாக்க வேண்டுமானால், அவர்களது மன நிலையை உணர்ந்து அன்பான முறையில் தொடர்ச் சியான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். இன்றைய சூழலில், உடற்பருமன் என்பது உலக நாடு கள் பலவும் எதிர்கொள்ளும் ஒரு பாரிய சவாலாக உரு வெடுத்துள்ளது. இதனை உலக சுகாதார நிறுவனம் (WHO) தனது புள்ளிவிவரங்களின் மூலம் உறுதிப்படுத் தியுள்ளது. குறிப்பாக, நாடுகள், நகரங்கள் மற்றும் கிரா மங்கள் என்ற அடிப்படையில் ஒப்பீட்டு ரீதியான தரவு களை முன்வைத்து, உடற்பருமன் எவ்வாறு உலகளாவிய சுகாதாரப் பிரச்சினையாக மாறியுள்ளது என்பதை அவ் வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

ஆபிரிக்காவின் சில நாடுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்படி, 'குழந் தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாடு' ஒரு முக்கிய மான பொதுச் சுகாதாரப் பிரச்சினையாகத் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதில், தொடர்ச்சியான ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் 'நுண்ணூட்டச்சத்துக் குறை பாடுகள்' ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளையே பாதிக்கின்றன.

இது, குழந்தைகளின் மூளை வளர்ச்சி மற்றும் மனநலச் செயற்பாடுகளில் நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத் துகிறது. இந்த ஒருங்கிணைந்த ஆய்வு, குழந்தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் தொடர்புடைய உயிரியல் இயங்குமுறைகள் மற்றும் அதன் விளைவுகள் குறித்த தற்போதைய தரவுகளைத் தொகுத்து வழங்கு கிறது. இதில் குறிப்பாக, சாம்பியா மற்றும் அதனை ஒத்த ஆபிரிக்க நாடுகளின் சூழல்கள் குறித்துத் தனித் துவமான கவனம் செலுத்தப்படுகிறது.

த. சிவபாலு

tg.theeban@gmail.com

உலகில் வறிய மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடு களில் ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளில் ஊட்டச்சத்துக் குறைபாடு, மிக மோசமான பின்விளைவுகளைக் கொண் டுள்ளது. ஊட்டச்சத்து இன்மை காரணமாக வயதுக்கேற்ற வளர்ச்சி குன்றுதல், மெலிதல், நிறை குறைவாகக் காணப் படுதல், போதுமான உயிர்ச்சத்துக்கள் அல்லது தாதுக் கள் இன்மை, அதிகளவு எடை, உடற்பருமன் தொடர்பான தொற்றா நோய்கள் குழந்தையைப் பாதிக்கின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) அண்மைக்கால ஆய்வறிக்கைகள் சுட்டிக்காட்டும் தரவுகள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளன. அதன் அடிப்படையில், ஐந்து வய திற்குட்பட்ட உலகளாவிய குழந்தைகளுள் 149 மில்லியன் பேர் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் வளர்ச்சி குன்றியவர் களாகவும் 45 மில்லியன் பேர் மெலிந்த நிலையிலும் காணப்படுகின்றனர். அதேவேளை, 37 மில்லியன் குழந்தை கள் அளவுக்கு அதிகமான எடையுடனோ அல்லது உடற் பருமனுடனோ உள்ளனர். ஊட்டச்சத்தற்ற மற்றும் தரம் குறைந்த உணவுப் பழக்கவழக்கங்களே இத்தகைய முரண்பட்ட உடல்நலப் பாதிப்புகளுக்கு முதன்மைக் காரண மாக அமைகின்றன. இது, குழந்தைகளின் உடல் வளர்ச் சியைப் பாதிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களின் மூளை வளர்ச்சி மற்றும் மனநலச் செயற்பாடுகளில் நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்தும். இந்த ஒருங்கிணைந்த ஆய்வு, குழந்தைப் பருவ ஊட்டச்சத்துக் குறைபாட்டுடன் தொடர் புடைய உயிரியல் இயங்குமுறைகள் மற்றும் அதன் விளைவுகள் குறித்த தற்போதைய தரவுகளைத் தொகுத்து வழங்குகிறது. இதில் குறிப்பாக, சாம்பியா மற்றும் அதனை ஒத்த ஆபிரிக்க நாடுகளின் சூழல்கள் குறித்துத் தனித்து வமான கவனஞ் செலுத்தப்படுகிறது.

வளர்முக நாடுகளில் சிசு மரணத்திற்கு ஊட்டச்சத்து குறை பாடே முதன்மைக் காரணமாக அமைகிறது. கடந்த தசாப்த கால ஆய்வுகளின் அடிப்படையில், ஊட்டச்சத்து குறை பாடு குழந்தைகளின் நரம்பியல் மற்றும் உளவியல் வளர்ச் சியில் நீண்டகாலப் பாதிப்புகளை ஏற்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தச் சீர்குலைவுகள், அறிவாற்றல், நிர்வாகச் செயற்பாடு, இயக்கத் திறன்கள் மற்றும் சமூக-உணர்ச்சி வளர்ச்சி ஆகியவற்றில் பாதிப்புகளை ஏற்படுத்து கின்றன. இவை இளமைப் பருவம் மற்றும் முதிர்வயது வரை நீடிக்கின்றன. மற்றும் உயரத்திற்கு அப்பாற்பட்டு அதிகப்படியான உணவைத் திணிப்பது, அவர்களின் செரி மான மண்டலத்தை விரிவடையச் செய்து இயல்புக்கு மாறான உடற்பருமனுக்கு வழிவகுக்கிறது. சுவைக்காக ஊட்டச்சத்தற்ற உணவுகளைக் குழந்தைகள் விரும்பு வதும், பெற்றோருக்குத் தெரியாமல் அவற்றை உண்பதும் ஆரோக்கியச் சீர்கேட்டை உண்டாக்கும். உடல் நலம் குறித் துப் பேசும்போது குழந்தைகள் காட்டும் எதிர்ப்பு மன நிலையை மாற்ற, அதிகாரபூர்வமாக அன்றி, அன்பான முறையில் அவர்களுடன் ஆரோக்கியமான உணவுப் பழக்க வழக்கங்கள் குறித்து அடிக்கடி கலந்துரையாட வேண்டும்.

இத்தகைய உணவுப் பழக்கவழக்கங்கள் பரவுவதற்கு, உலகம் முழுவதும் பெருகி வரும் 'துரித உணவு' (Fast Food) தயாரிப்பு நிறுவனங்கள் முக்கிய காரணமாக உள் ளன. இவை நாவிற்கு ருசியான, கவர்ச்சிகரமான உணவு களைத் தயாரித்து விற்பனை செய்கின்றன. பீட்சா, பேர்கர், ஹொட் டோக் மற்றும் ஸ்பெகெட்டி போன்ற துரித உணவு வகைகளை உலகளாவிய முன்னணிக் கட்டுமானங்களைக் கொண்ட பன்னாட்டு நிறுவனங்கள் இன்று சர்வதேச சந்தை யில் பெரும் அளவில் விற்பனை செய்து வருகின்றன. இத்தகைய நிறுவனங்கள் உலகின் மூலைமுடுக்கெல்லாம் தங்களது கிளைகளை நிறுவி, வர்த்தக ரீதியாகப் பெரும் இலாபமீட்டி வருகின்றன. வெறும் வணிகச் செயற்பாடு களாக மட்டும் அமையாமல், இவர்களின் அதீத சந்தைப்ப டுத்தல் உத்திகள் மக்களின் பாரம்பரிய உணவுப் பழக்க வழக்கங்களில் ஊடுருவி, உலகளாவிய உணவுக் கலா சாரத்தில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன.

துரித உணவுப் பொருட்கள் அவற்றின் வேகமான சேவை, தரப்படுத்தப்பட்ட சுவை, பிராந்தியத் தேவைகளுக்கேற்ப மாற்றியமைக்கப்படும் தன்மை மற்றும் வலுவான விற்பனை யுக்திகளால் மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள் ளன. இருப்பினும், இத்தகைய உணவுப் பழக்கவழக்கங் களால் ஏற்படும் உடல் எடை அதிகரிப்பு, வெறும் உடல் நலம் சார்ந்த சிக்கல் மட்டுமல்ல; அது மனநலத்தோடும்



ஆழமான தொடர்புடையது. குறிப்பாக, குழந்தைகளின் வளர்ச்சி ஆண்டுகளில் அதிக உடல் எடை என்பது அவர்களின் தன்னம்பிக்கை, சமூக உறவுகள் மற்றும் சுயமதிப்பு ஆகியவற்றில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது. பெற்றோர்கள் பெரும்பாலும் உடல் ரீதியான மாற்றங்களையே கவனத்தில் கொள்கின்றனர். ஆனால், உடற்பருமனால் ஏற்படும் மன அழுத்தம் மற்றும் உணர்ச்சி ரீதியான பாதிப்புகள் வகுப்பறைகளிலும் சமூகச் சூழலிலும் ஒரு குழந்தையின் ஆளுமையைச் சிதைக்கக்கூடிய அலைகளை உருவாக்குகின்றன.

பருமனான உடல் எடை கொண்ட குழந்தைகள் மற்றவர்களுடன் ஒப்பிடும்போது பதற்றம் (Anxiety) மற்றும் மனச்சோர்வு (Depression) ஆகியவற்றால் பாதிக்கப்படும் வாய்ப்பு 30% அதிகமாக உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இக்குழந்தைகள் எதிர்கொள்ளும் தனிமை மற்றும் சமூகப் புறக்கணிப்பு போன்ற அழுத்தங்கள், அவர்களைத் தொடர்ச்சியான உணர்ச்சிச் சிக்கல்களுக்குள் தள்ளி, அவர்களின் உணவுப் பழக்கத்தையும் உடற்பயிற்சி ஆர்வத்தையும் மேலும் சிதைக்கின்றன. எனவே, பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் உடற்பருமனை வெறும் உடல் நலப் பிரச்சினையாகப் பார்க்காமல், மனநலத்தையும் உள்ளடக்கிய ஒரு பன்முக அணுகுமுறையைக் கையாள வேண்டும். இத்தகைய ஆதரவு, குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளைக் கையாளவும், சுயநம்பிக்கையை வளர்த்து ஆரோக்கியமான வாழ்க்கை முறையை நோக்கி நகரவும் வழிவகுக்கும்.

குழந்தைகளில் உடற்பருமனின் மனநல பாதிப்பு:

உடற்பருமனடைந்த பிள்ளைகளின் உளரீதியான பாதிப்பு அவர்களைச் சமூகத்தில் இருந்து தனித்துவமாக்குகின்றது. மற்றவர்களில் இருந்து தனித்து வாழ விரும்புகின்றார்கள். உடற்பருமனுடையவர் அடிக்கடி தனது ஒத்த வயதினரின் கேலிப் பேச்சுகளுக்கும் நையாண்டிகளுக்கும் ஆளாகின்றார்கள். இவை அவர்களின் உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. சில குழந்தைகள் தங்கள் சகாக்கள் விளையாடுவது போன்று விளையாட முடியாத நிலையில் மனவிரக்திக்கு ஆளாகின்றார்கள்.

சுயமதிப்பும் உடல் உருவமும்:

குழந்தைகள் தங்கள் சுய அடையாளத்தை வளர்த்தெடுக்கும் முக்கிய காலகட்டத்தில், உடற்பருமன் அவர்களின் சுயமதிப்பிற்குப் பெரும் சவாலாக அமைகிறது. இத்தகைய குழந்தைகள் சமூகச் சூழல்களில் குறைந்த தன்னம்பிக்கையுடனும், சக மாணவர்களிடமிருந்து தாம் வேறுபட்டவர்கள் என்ற தாழ்வு மனப்பான்மையுடனும் காணப்படுவதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. தமது உடல் தோற்றம் குறித்த இந்த அதீத விழிப்புணர்வும் எதிர்மறை எண்ணங்களும், அவர்களின் வளர் இளம் பருவம் தாண்டியும் நீடிக்கக்கூடிய ஆளுமைச் சிக்கல்களை உருவாக்கக்கூடும்.

குழந்தை உடற்பருமனும் உணர்ச்சித் தாக்கமும் தீர்வுகளும்:

குழந்தை பருவத்தில் ஏற்படும் உடற்பருமன், ஒருவரது சுய அடையாளத்தை உருவாக்குவதில் பெரும் சவால்களை ஏற்படுத்துகிறது. இத்தகைய குழந்தைகள் தங்கள் உடல் தோற்றம் குறித்த அதீத விழிப்புணர்வால், நண்பர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்கின்றனர். ஊடகச் செய்திகள் மற்றும் பிறரின் கருத்துகளால் ஏற்படும் இந்த எதிர்மறைச் சுயபார்வை, அவர்கள் விளையாட்டு மற்றும் சமூகச் செயற்பாடுகளில் பங்கேற்பதைத் தடுத்து, ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கிறது. இது காலப்போக்கில் ஒரு நச்சுச் சுழற்சியை (Vicious cycle) உருவாக்குகிறது. குறைந்த சுயமதிப்பு அவர்களை 'உணர்ச்சி ரீதியான உணவு உண்ணும் பழக்கத்திற்கும்' (Emotional eating), உடல் உழைப்பற்ற நிலைக்கும் தள்ளி உடல் எடையை மேலும் அதிகரிக்கிறது. எனவே, பெற்றோர்களும் பராமரிப்பாளர்களும் குழந்தையின் உடல் எடையை விட அவர்களின் தனித்துவமான திறமைகள் மற்றும் சாதனைகளில் அதிக கவனஞ் செலுத்த வேண்டும். எடையை மையப்படுத்தாமல் ஆரோக்கியத்தை வலியுறுத்தும் ஒரு சூழலை உருவாக்குவதன் மூலம், குழந்தைகளின் தன்னம்பிக்கையை மீட்டெடுத்து அவர்களின் உணர்ச்சி நலனை மேம்படுத்த முடியும்.

சமூக உறவுகளும் உள்ளடக்கச் சூழலும்:

அதிக உடல் எடை கொண்ட குழந்தைகள் பள்ளிகளிலும் சமூகச் சூழல்களிலும் கேலி மற்றும் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாகும் அபாயம் அதிகம். இது அவர்களுக்குத் தன்னுணர்வு சார்ந்த தயக்கத்தை ஏற்படுத்தி, குழுச் செயற்பாடுகளில் பங்கேற்பதைத் தடுக்கிறது. இத்தகைய சமூக விலகல், அவர்கள் நட்பு பாராட்டும் திறன்களை வளர்த்துக் கொள்வதைப் பாதிப்பதுடன், தனிமை மற்றும் மனச்சோர்வுக்கும் வழிவகுக்கிறது.

சில குழந்தைகள் ஒன்லைன் நட்பின் மூலம் ஆறுதல் தேடினாலும், நேருக்கு நேர் பழகும் தன்னம்பிக்கையை அவர்களுக்கு வளர்ப்பது அவசியம். எனவே, உடல் அளவைப் பொருட்படுத்தாமல் குழந்தைகள் ஒன்றிணைந்து விளையாடும் சூழலை ஆசிரியர்களும் பெற்றோர்களும் உருவாக்க வேண்டும். குறிப்பாக, உணவருந்தும் இடங்களிலோ அல்லது ஓய்வு நேரங்களிலோ குழந்தைகளுடன் பெற்றோர்கள் மேற்கொள்ளும் அன்பான, வெளிப்படையான உரையாடல்கள் அவர்களின் மனவலிமையையும் சுயமதிப்பையும் அதிகரிக்கச் செய்யும் சிறந்த வழிகளாகும்.

சமூகக் கவலை மற்றும் தனிமை:

அதிக உடல் எடை கொண்ட குழந்தைகள் சமூக ரீதியாக பல சவால்களை எதிர்கொள்கிறார்கள். இது அவர்களுக்கு சமூகக் கவலை மற்றும் தனிமை உணர்வை உருவாக்கக் காரணமாக இருக்கலாம். பல குழந்தைகள் சகபாடிகளால் கிண்டல் செய்யப்படுகின்றார்கள். இதனால் அவர்கள் சமூக நிகழ்வுகள் மற்றும் உறவுகளைத் தவிர்க்க நேரிடுகிறது.

> ***உடல் ஆரோக்கியமும் மனநலமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. முறையான உணவுப் பழக்கம், சுறுசுறுப்பான உடற்பயிற்சி மற்றும் மின்னணு சாதனங்களைக் குறைத்து குடும்பத்தோடு செலவிடும் நேரம் ஆகியவையே ஒரு ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்கும்.***

குழந்தைகள் மேலும் தனிமைப்படுத்தப்படுவதால் சமூகத் திறன்களை வளர்த்துக்கொள்வதும் நண்பர்களைப் பேணு வதும் கடினமாகிவிடுகிறது. அதிக உடல் எடை கொண்ட குழந்தைகள் தாங்கள் முன்பு விரும்பிய நீந்துதல் அல்லது விளையாட்டுகள் போன்ற செயல்களையும் தங்கள் உட லைப் பற்றிய விழிப்புணர்வின் காரணமாகத் தவிர்க்கத் தொடங்குகிறார்கள். தனிமைப்பட்டிருக்கும் இந்நிலை பள் ளிச் செயற்பாடுகள், குழு அமைப்புகளில் சேருதல் அல்லது சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்வதிலும் பாதிப்பை ஏற் படுத்துகிறது. உதாரணமாக வீட்டிலேயே இருப்பது, தனிப் பட்ட செயல்களில் அதிக நேரம் செலவிடுவது, குழு சூழல் களைத் தவிர்ப்பது போன்றவை. இவை குறுகிய காலத் திற்கு பாதுகாப்பாக இருந்தாலும், நீண்ட காலத்தில் சமூக வளர்ச்சிக்கும் உணர்ச்சி நலனுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும். சமூக ஆதரவு மனநலத்திற்கு மிகவும் முக்கியமானது என்பதை உணருவது அவசியம். குழந்தைகள் தங்களை மற்றவர்களிடமிருந்து வேறுபட்டதாக உணரும்போது, கவலை மற்றும் மனச்சோர்வு போன்ற பிரச்சினைகள் உரு வாகும் வாய்ப்பு அதிகரிக்கிறது. வீட்டிலும் பாடசாலை யிலும் சமூகத்திலும் அனைவரையும் உள்ளடக்கும் சூழலை உருவாக்குவது இந்த தனிமைச் சுழற்சியை முறியடிக்க உதவும்.

ஆரோக்கியமான வாழ்விற்கு உணவும் உடற்பயிற்சியும்:

ஆரம்ப நிலையிலேயே ஆலோசனை மற்றும் சமூகத் திறன் பயிற்சிகள் வழங்கப்படுவது, குழந்தைகள் தங்கள் உடல் தோற்றத்தைப் பொருட்படுத்தாமல் சமூக சூழல்களை நம் பிக்கையுடன் எதிர்கொள்ள உதவும். உடல் எடை கூடும் போது நீரிழிவு, இதய நோய்கள், தொய்வு, தூக்கக்குழப் பம், மூட்டுவலி நோய்கள் உடலைத் தாக்குகின்றன. இவை சரியான உணவுப் பழக்கத்தைக் கைவிட்டு கண்டதையும் உண்பதால் வரும் நோய்களாகும். இவற்றைத் தடுக்க உடற்பயிற்சிகளை அதிகரிக்கவேண்டும்.

3 தொடக்கம் 5 வயதான குழந்தைகள் நாள் முழுவதும் பயிற்சிகள் மற்றும் விளையாட்டுகளில் ஈடுபடுதல் சிறப்பு, அதேசமயம் 6 தொடக்கம் 17 வயது வரையான பிள்ளை களுக்கு குறைந்தது வாரத்தில் மூன்று நாட்களுக்குக் குறையாமல் 60 நிமிடங்கள் கொண்ட கடினமான உடற் பயிற்சிகள் அல்லது உடல் தொழிற்பாடுகள் அவசியம். அதாவது, ஓடுதல், உதைபந்தாட்டம், தசை நரம்புகளை இறுக்கக்கூடிய பயிற்சிகள், ஏறுதல், பாய்தல், எலும்பு களை இறுக்கமடையச் செய்யும் பயிற்சிகள் போன்றன வற்றை இவர்கள் செய்தல் வேண்டும். 18 தொடக்கம் 64 வயதிற்கு இடைப்பட்டவர்கள் குறைந்தது வாரத்தில் 150 நிமிடங்கள் வேகமாக நடத்தல் வேண்டும். தசைநார்களை இறுகச்செய்யும் பயிற்சிகளிலும் இவர்கள் ஈடுபடலாம்.

உணவுப் பழக்கத்திலும் இவர்கள் அதிகளவு கவனஞ் செலுத்தவேண்டும். உடன்பழம் மற்றும் இலைக் கறிவ கைகள், கொழுப்பற்ற கோழி மற்றும் மீன், முழுத்தானிய உணவு (பழுப்பு நிற அரிசி), முழுக் கோதுமை பாஸ்தா, பாண் போன்றவற்றையும் உண்ணலாம். பருப்பு, கடலை, பயறு, அவரை போன்ற உணவு வகைகளையும் இவற் றோடு சேர்த்துக் கொள்ளலாம், அத்தோடு வெதுப்பிய, மற்றும் வறுத்தெடுத்த, கொழுப்பை வடித்தெடுத்த உணவு வகைகளையும் உண்ணலாம். பெற்றோர் தம் பிள்ளைக ளுக்கு இவற்றைக் கொடுத்தால் அவர்களின் உளநலத் தையும் உடல்நலத்தையும் பேணலாம்.

உடற்பருமனைத் தடுப்பதற்கு பிள்ளைகளோ பெரியவர் களோ தொலைக்காட்சி பார்த்தல், கணினியில் தொடர்ந்து செயற்படல் போன்றவற்றைக் குறைத்தல் வேண்டும். எல்லா வயதுப் பிரிவினரையும் வாசிப்பு, கதைசொல்லுதல், பாடுதல் மற்றும் குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுத்துவது ஆரோக்கியமானது.

அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பது குழந்தைகளின் தூக்கமின்மைக்கு வழிவகுப்பதோடு, பாடசாலைப் பாடங் களில் கவனக்குறைவு மற்றும் மதிப்பெண்கள் குறைதல் போன்ற எதிர்மறை விளைவுகளையும் ஏற்படுத்தும். குழந் தைகளின் தனி அறைகளில் இருக்கும் தொலைக்காட்சி மற்றும் கணினிகளை உடனடியாக அகற்றுவதும் படுக்கை யறையில் கைபேசிப் பயன்பாட்டைத் தவிர்ப்பதும் அவ சியம். இத்தகைய மின்னணு சாதனங்களின் ஆதிக்கத் தைக் குறைத்து, குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச் சியை உறுதிப்படுத்துவது பெற்றோரின் பாரிய பொறுப் பாகும்.

உடல் ஆரோக்கியமும் மனநலமும் ஒன்றோடொன்று பின் னிப் பிணைந்தவை. முறையான உணவுப் பழக்கம், சுறு சுறுப்பான உடற்பயிற்சி மற்றும் மின்னணு சாதனங்களைக் குறைத்து குடும்பத்தோடு செலவிடும் நேரம் ஆகியவையே ஒரு ஆரோக்கியமான தலைமுறையை உருவாக்கும். குழந்தைகளின் உடல் எடையைத் தாண்டி, அவர்களின் மனவலிமையையும் சுயமதிப்பையும் வளர்ப்பதில் பெற் றோரின் அன்பான வழிகாட்டலே மிகச்சிறந்த முதலீடாகும்.

sivapalu@thaiveedu.com



13

பதின்ம வயதினருக்கும் உங்களுக்கும் இடையே

பதின்மவயதுப் பாலியல் நடத்தைகளும் மனித விழுமியங்களும்

- எஸ்.கே.விக்னேஸ்வரன்

பாலியல் பற்றிய ஒரு விவாதம்:
ஆறு பெற்றோர் – ஆறு கருத்துகள்:

தங்களது பதின்மவயதுப் பிள்ளைகள் தொடர்பாக மிகவும் கவலைகொண்டிருந்த தாய்மார்களின் குழு ஒன்று, தம்மிடையே பொதுவாக நிலவுகின்ற இந்தக் கவலையைப் பற்றித் தம்முள் ஒன்றுகூடி விவாதித்தது. அதன் தலைப்பு: 'பாலியல் நடத்தைகள்'. இந்த விவாதம், ஒரே சமூகத்தைச் சேர்ந்த ஆறு நபர்கள் தமக்குள்ள பிரச்சினையைப் பற்றி எவ்வளவு வித்தியாசமாக உணர்கிறார்கள் என்பதை அவர்களது இந்த உரையாடல் விளக்குகிறது:

திருமதி A: நான் ஒரு கண்டிப்பான, பழையகால மரபுகளைப் பேணும் குடும்பத்திலிருந்து வந்தவள். எங்கள் வீட்டில் பாலியல் சம்பந்தமான விடையங்கள் ஒருபோதும் விவாதிக்கப்படுவதில்லை. காதல் என்பது தனிப்பட்டதும் அந்தரங்கமானதுமான ஒன்று. நான் காதல் பற்றிக் கனவு கண்டேன், ஆனால் நான் என் பெற்றோரிடம் அதைப் பற்றி ஒருபோதும் சொன்னதில்லை. என் மகள் பாலியல் நடவடிக்கைகள் பற்றி என்னிடம் கேள்விகள் கேட்கும்போது அது மிகவும் அதிர்ச்சியூட்டுவதாக இருக்கிறது.

திருமதி B: எனக்கும் அதே பிரச்சினைதான். எனது மகன் அது பற்றி ஏதாவது கேட்கும்போதெல்லாம், என் முகம் சிவந்து போகிறது. நான் உறைந்து போகிறேன். நான் திணறுகிறேன். என்னைக் கட்டுப்படுத்தும் எனது எல்லா முயற்சிகளையும் மீறி, நான் வெட்கப்படுகிறேன்.

இரண்டு முயல்கள் திருமணம் செய்து கொண்டுவிட்டதாக நான் ஒரு முறை சொன்னபோது என் மகன் என்னைப் பார்த்து சிரித்தான். அவனுக்கு முன்னால் அவை உடலுறவு கொள்கின்றன, இனப்பெருக்கத்துக்காக இணைகின்றன என்ற வார்த்தைகளைப் பயன்படுத்த எனக்கு, என் மனதளவில் முடியாமல் இருக்கிறது.

திருமதி C: 'செக்ஸ்' எனக்கு எப்போதும் ஒரு புதிராகவே இருந்து வருகிறது. எது சரி, எது தவறு என்று எனக்குத் தெரியாது. என் அம்மா 'எல்லா ஆண்களும் ஒரே மாதிரியான வர்கள். அவர்களுக்கு ஒரே ஒரு விஷயம்தான் வேண்டும்' என்று சொல்வார். நான் அதிலிருந்து உடனடியாகக் கற்றுக் கொண்டதெல்லாம் 'உடலுறவு' என்பது அசிங்கமானது என்பதையே. ஆனால் என் மகனும், மகளும் அப்படி உணருவதை நான் விரும்பவில்லை.

திருமதி D: ஆம், நாம் அப்படியான ஓர் உலகில்தான் வாழ்கிறோம். எங்கள் குழந்தைகளும் அப்படிப்பட்ட ஓர் உலகில்தான் வாழ்கிறார்கள். பழைய நாட்களில், சுயகட்டுப்பாடு ஒரு நல்லொழுக்கமாக இருந்தது. இப்போது அது ஒரு தேவையற்ற ஒன்றாக மாறிவிட்டது. 'பாலியல் ஒழுக்கம் என்பது ஒரு தேவையற்ற வீணான ஒன்று' என்று சொல்லும் எனது பத்தொன்பது வயது மகள், 'கற்பு, ஊட்டச்சத்துக் குறைபாட்டை விடவும் மதிப்பு வாய்ந்த ஒன்றல்ல' என்று கூறுகிறாள். பரஸ்பர அன்பு இருந்தால், திருமணம் இல்லா



மல் பாலுறவை வைத்துக் கொள்வது சரியானது தான் என்று கல்லூரியில் இரண்டாம் ஆண்டு மாணவியான எனது மகள் நம்புகிறாள். கல்லூரியில் படிக்கும் அவ ளுடைய மூத்த சகோதரன், அவளைவிட 'முன்னேற்றம் அடைந்தவனாகக்' காணப்படுகிறான். எந்த இருவரும் தம்முள் பரஸ்பர உடன்பாடு இருப்பதாக உணரும் வரை, காதல் இல்லாமலே, அவர்கள் உடலுறவு கொள்வது தவறல்ல என்று அவன் நம்பு கிறான். 'பரஸ்பரக் காதலுடன் உடலுறவு கொள்வது நல்ல துதான்' என்று குறிப்பிடுகின்ற அவனே சொல்கிறான், 'ஆனாலும் காதல் இல்லாமலே உடலுறவு கொள்வது எல்லா வற்றையும் விடச் சிறந்தது' என்று.

திருமதி E: நான் ஒரு தாராள மனப்பான்மை கொண்ட தாய். கன்னித்திரையைப் பாதுகாப்பதில்தான் நல்லொழுக்கம் தங் கியுள்ளது என்று நான் நம்பவில்லை. ஆனால் என் அழகான மகளைப் பற்றி நான் கவலைப்படுகிறேன். அவள் யாராலும் சுரண்டலுக்கு அல்லது ஏமாற்றப்படுதலுக்கு உள்ளாவதை நான் விரும்பவில்லை. எனது இந்த மலர் ஒரு முட்டாளின் கைகளில் போய்ச் சேர்ந்துவிடுவதை நான் விரும்பவில்லை.

திருமதி A: என் மகளை ஆண் பிள்ளைகளிடமிருந்து விலக்கி வைக்க நான் முயற்சித்தேன். இளம் பெண்களுக்கு என்ன நடக்கலாம் என்பது பற்றிய உண்மையான கதை களை நான் அவளிடம் சொன்னேன். அவள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பினேன். ஆனால், இப் போது நான் அவளை அளவுக்கதிகமாக மாற்றிவிட்டேனோ என்று கவலைப்படுகிறேன்... மிக அதிகமாக... ஆனால், என் பதினேழு வயதுச் சிறுமி மிகவும் சுறுசுறுப்பானவள். அவள் இன்னும் நுட்பமானவளாகவும், வெளியே செல்லுவதில் ஆர் வம் கொண்டவளாகவும் இருந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திருமதி E: உங்கள் மகள் சில 'மோசமான' கருத்துகளை யும், அவற்றின் செல்வாக்கையும், சில பாலியல் கல்வியை யும் கற்றுக் கொண்டிருக்கலாம். ஒழுக்கம் என்பது அறிவைப் பற்றியதே அன்றி, அறியாமையைப் பற்றிய ஒன்று அல்ல. பதின்மர்கள் பாலியல் விஷயங்களைப் பற்றி, காதல் செய் தல், கருத்தரித்தல் மற்றும் கருத்தடை பற்றியெல்லாம் அறிந் திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

திருமதி B: பழைய அணுகுமுறைகளை மாற்றுவது எளி தல்ல. அனைத்து அறிவுசார் கல்வி அறிவு எனக்கு இருந்த போதிலும், நானும் ஒரு முரட்டுத்தனமானவளாகவே இருக் கிறேன். நான் அப்படிப்பட்டவளாக இருக்கக் கூடாது என்று தான் விரும்புகிறேன், ஆனாலும் என்னால் அப்படித்தான் இருக்க முடிகிறது. பாலியல் சமத்துவம், அர்த்தமுள்ள உறவு கள் பற்றிய இந்த உரையாடல் எனக்கு 'திருமணத்திற்கு முந்தைய பாலியல் உறவு' என்ற ஒரே ஒரு விஷயத்தை மட்டுமே தெரிவிக்கிறது: அதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது. ஏனெனில் அது ஒரு 'பாவகரமான செயல்' என்றே நான் இன்னும் நம்புகிறேன்.

திருமதி D: வெளிப்படையாகச் சொல்வதானால், பாவத் தைத் தடுப்பதில் எனக்கு அக்கறை இல்லை. ஆனால் என் மகளின் நலனில் எனக்கு அக்கறை உள்ளது. அவள் முதிர்ச் சியடைந்திருந்தால், அவளுடைய நடத்தையைப் பற்றி நான் கவலைப்பட மாட்டேன். ஆனால் அவள் அப்படி இல்லை. அவளுடைய பாலியல் தேவைகளுக்கும், உணர்வு முதிர்ச் சிக்கும் இடையில் ஒரு பயங்கரமான இடைவெளி உள்ளது. காலத்தால் மட்டுமே இந்த இடைவெளியைக் குறைக்க முடி யும். அதுவரை நான் என்ன செய்வது?

திருமதி E: 'பாலியல்' பற்றிய பழைய தப்பெண்ணங்களைக் கற்பிப்பதை நிறுத்த வேண்டிய நேரம் இது. பதின்மர்கள் எளிதில் காதல் வசப்படுகிறார்கள், காதலிக்கிறார்கள். இது தொடர்பாக நாங்கள் அவர்களுக்குக் கருத்தடைச் சாதனங் களைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவது எப்படி என்பது குறித்த அறிவுறுத்தல்களைத் தருவதைத் தவிர, எங்களுக்கு இது தொடர்பாகச் செய்வதற்கு ஒன்றுமே இல்லை; உண்மை யில் நாம் எதுவுமே செய்ய முடியாது.

திருமதி C: பெரும்பாலான இளைஞர்கள் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த விரும்புவதில்லை. அவர்கள் ஓர் ஆபத்தான முறையில் வாழ்வதையே விரும்புகிறார்கள். குறிப்பாக, இதன் மூலம் அவர்கள் பெறும் 'திகில் அனுபவங் களுக்காக' அந்த ஆபத்தான செயல்களில் இறங்குகிறார் கள்; தங்கள் இளம் உயிர்களை வைத்து 'ரஷ்சியச் சூதாட்ட விளையட்டில்' இறங்குகிறார்கள்.

திருமதி D: 'திருமணத்திற்கு முந்தைய கர்ப்பம் என்பது இனி மேலும் ஓர் 'அமெரிக்கச் சோகம்' அல்ல' என்று என்னிடம் சொல்கிறாள், என் மகள். கருக்கலைப்புத் தேவைப்படும் தமது ஒரு சகாவுக்காக, பெண்கள் நிதி திரட்டுகிறார்கள். கூடுதலாக, அவளுக்காக மாத்திரைகளையும் வாங்கு கிறார்கள்.

திருமதி B: பாதுகாப்பான கருத்தடை முறைகள், ஒழுக்கக் கேட்டையே அதிகரிக்கும் என்று நான் பயப்படுகிறேன்.

திருமதி E: ஆனால், அது இருமடங்களவிலான உடலுற வுக்கு வழிவகுத்தாலும் கூட, தேவையற்ற குழந்தைகளின் பிறப்பு பாதியாகக் குறைக்கப்படுவதால், அது பயனுள்ள தாக இருக்கும்.

திருமதி B: திருமணத்திற்கு முந்தைய அனைத்துப் பாலியல் உறவுகளும் பாவமானவை என்று எனது தேவாலயம் கூறுகிறது.

திருமதி A: இளைஞர்களிடம் வேறு எத்தகைய குறைபாடு கள் இருந்தாலும், அவர்களிடம் பாலியல் உறவுக்கான சக்தி இருக்கவே செய்கிறது. ஒரு பதின்மவயது இளைஞன் அதை வைத்துக்கொண்டு என்ன செய்ய வேண்டும்?. அவனால், நாங்கள் வீடுமாறிக் குடிபெயர்ந்து செல்லும் போது மின்சார நிறுவனத்தை அழைத்து (மின்தொடர்பை) நிறுத்தச் சொல் வது போல, அவன் உங்கள் தேவாலயத்தைத் தொலைபேசி யில் அழைத்து அந்தச் 'சக்தியை' நிறுத்தச் சொல்ல முடியாது.

திருமதி F: என்னால், 'நான் கற்பை மதிக்கிறேன்' என்று பாசாங்கு செய்ய முடியாது. என் மகளுக்கு ஒரு 'கன்னிப் பையன்' கணவனாக வருவதை நான் விரும்பமாட்டேன்.

திருமதி B: உங்கள் மகள் தனது வருங்காலக் கணவருடன், அதே மாதிரியான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக, பல ஆண்களுடன் தனது படுக்கையைப் பகிர்ந்துகொள்ளும்படி அவளை ஊக்குவிப்பீர்களா?

திருமதி F: இல்லை, நிச்சயமாக இல்லை. நான் அவளை உடலுறவுக்கு வற்புறுத்த மாட்டேன். அவள் திருமணம் ஆகும் வரை காத்திருக்கலாம். ஆனால் அவள் முன்னதாகவே தொடங்கினால், அதன் விளைவுகளை அவள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். காதல் செய்வதற்கும் குழந்தை பெறுவதற்கும் இடையில் உள்ள வித்தியாசத்தை அவள் தெரிந்துகொள்ள வேண்டும். அவள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

திருமதி E: உங்களது இந்த இரட்டை நிலைப்பாடு என்னைச் சோர்வடைய வைக்கிறது. பெண்கள் உண்மையாகவே சுதந்திரமாக இருக்க வேண்டுமென்றால், பாலியல் கல்வியும் கருத்தடையும் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்... என்னைப் பொறுத்த வரை, பிரச்சினை 'கற்புக்கு எதிர் கன்னித்தன்மை இழப்பு' என்பதல்ல, மாறாக 'பொறுப்பான காதலுக்கு எதிர் ஒழுக்க மற்ற தன்மை' என்பதாகும்.

திருமதி A: பாலியல் சுதந்திரம் நல்லதுதான், ஆனால் என் மகளுக்கு அல்ல. அது மேலோட்டமான மோகங்களுக்கும், காமக் களியாட்டங்களுக்கும், மனவேதனைக்கும் வழிவகுக்கும் என்றுதான் என்னால் பார்க்க முடிகிறது. அது ஆண்களுக்கு நல்லதாக இருக்கலாம், ஆனால் பெண்களுக்கு அல்ல. 'தேனீ பூவிலிருந்து பூவிற்குப் பறக்கலாம், ஆனால் பூ ஒருபோதும் தேனீயிடமிருந்து தேனீக்குச் செல்லக்கூடாது.' ஒரு இந்தியப் பழமொழி உண்டு: 'என் மரத்தின் நிழல் வழிப் போக்கர்களுக்கானது, அதன் கனி நான் காத்திருப்பவருக்கானது.'

திருமதி F: நான் இளமையாக இருந்தபோது, என் குளிய லறைக் கண்ணாடியில் 'ஹெமிங்வேயின்' இந்த அறநெறி அறிக்கையை ஒட்டினேன்: 'எதற்குப் பிறகு நீங்கள் நன்றாக உணர்கிறீர்களோ, அதுவே அறம்; எதற்குப் பிறகு நீங்கள் வருத்தப்படுகிறீர்களோ அது தான் அறமற்றது.'

நான் குற்றவுணர்வோ வருத்தமோ இன்றி உடலுறவு கொண்டேன். கலாசாரத்தால் தூண்டப்பட்ட சிக்கல்களிலிருந்து விடுபடுவதில் நான் உறுதியாக இருந்தேன். என் பெற்றோரின் உணர்வுகளுக்கு நான் மதிப்பளிக்காமல் இருக்கவில்லை, ஆனால் அவர்களின் தார்மீகத் தீர்ப்புகளிடமிருந்து நான் சுதந்திரமாக இருக்க விரும்பினேன். ஆனால் இப்போது நான் ஒரு பதின்வயது மகளின் தாய். நான் குழப்பத்தில் இருக்கிறேன். அறிவுபூர்வமாக, அவள் திருமணத்திற்கு முன் உடலுறவு கொள்ளலாம் என்ற கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால் அதைப் பற்றி நான் தெரிந்துகொள்ள விரும்பவில்லை. நான்... அவள் என்னிடம் ஆலோசனை கேட்க வேண்டும் அல்லது என்னுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன், நிச்சயமாக, அவள் கர்ப்பம் தரிப்பதை நான் விரும்பவில்லை.

திருமதி C: இந்த வாரம் நான் உயிரோடு இருந்தால், நான் சாகா வரம் பெற்றவள். நான் ஒருபோதும் இறக்க மாட்டேன். மூன்று நாட்களுக்கு முன்பு என் மகள் படுக்கையில் ஒரு குழந்தையைப் போல அழுதுகொண்டு சுருண்டு படுத்திருப்பதை நான் கண்டேன். தனக்கு ஒரு பாலியல்சார் நோய், குறிப்பாக 'கொணோரியா' தொற்றிக்கொண்டதாக அவள் நினைத்தாள், என் இனிய அழகான லிண்டா, அவளது அப்பாவின் கண்மணி. 'எனக்கு வந்த ஆத்திரத்தில்' அவளைக் கொன்று, அந்தப் பையனைப் பதம் பார்க்க வேண்டும் என்பதுதான் என் முதல் எண்ணமாக இருந்தது. ஆனால் ஓர் உள்மனக் குரல் என்னை எச்சரித்தது: 'தாக்காதே. உதவியாக இரு. விஷயங்கள் தவறாகப் போகும்போது, சரியான ஒன்றைச் செய்'.



நான் அவளிடம் சொன்னேன்: 'உனக்குத் தொற்று ஏற்பட்டி ருக்கிறதா என்று எங்களுக்கு உறுதியாகத் தெரியாது. ஒரு மருத்துவரால் நமக்குச் சொல்ல முடியும். ஆரம்பத்திலேயே சிகிச்சை அளித்தால், கொனோரியாவைக் குணப்படுத்த முடியும்!'
இன்று லிண்டாவுக்குத் தொற்று ஏற்படவில்லை என்பதை நாங்கள் கண்டறிந்தோம். ஒரு கெட்ட கனவிலிருந்து நாங் கள் விடுபட்டோம். ஆனால் கவலை, பயம் மற்றும் அவமானம் என்ற வடிவில், அதற்காக ஒரு பயங்கரமான விலையை நாங்கள் கொடுத்திருந்தோம்.

திருமதி D: பாலியல்சார் நோய்கள், கர்ப்பம் என்பவை குறித்த பயம் இளைஞர்களை உடலுறவில் ஈடுபடுவதிலி ருந்து தடுப்பதில்லை என்பது வெளிப்படை. எனவே, அவர் கள் தங்கள் பாலுணர்வை எவ்வாறு கையாள்வது என்பதில் நாம் அவர்களுக்குக் வழிகாட்ட வேண்டும். அவர்களுக்கு அறிவையும் பாதுகாப்பையும் நாம் வழங்க வேண்டும். வாழ்க் கையின் ஓட்டத்தை நம்மால் தடுக்க முடியாது, ஆனால் கொந்தளிக்கும் நீரில் நீந்துவது எப்படி என்று நம்மால் கற்பிக்க முடியும்.

மதிப்புகளின் முரண்பாடு:

இந்த விவாதம் மதிப்புகளின் ஆழமான முரண்பாட்டைப் பிர திபலிக்கிறது. சில பெற்றோர்கள் புதிய யதார்த்தத்தை ஏற் றுக்கொள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று உணர்கி றார்கள். அவர்கள், பாலியல் தொடர்பான நோய்கள், விரும் பத்தகாத கர்ப்பங்கள் மற்றும் கெட்டுப்போகும் நற்பெயர்கள் குறித்துக் கவலைப்படுகிறார்கள். வெளிப்படையான பாலியல் கல்வி மூலம் இந்த ஆபத்துகளைத் தவிர்க்க முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள். அவர்களில் சிலர் தங்கள் வளர்ந்த பதின்மப் பருவத்தினருக்குத் தகவல்களையும் கருத்தடை முறைகளையும் வழங்குகிறார்கள்.

மற்றைய பெற்றோர்கள் இந்த நடவடிக்கைகளை ஆத்திரத் துடன் நிராகரிக்கிறார்கள். அத்தகைய சுதந்திரம் கட்டுப்பா டற்ற தன்மையை ஊக்குவிக்கும் என்று அவர்கள் அஞ்சுகி றார்கள். இளம் வயதில் ஏற்படும் காம உணர்வு மனித நாகரி கத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதால், பதின்மப் பருவத்தினரின் பாலியல் உறவை சமூகம் அங்கீகரிக்க முடி யாது என்று அவர்கள் நம்புகிறார்கள். ஒரு தந்தை கூறியது போல்: 'இளைஞர்களின் முக்கிய பணி படிப்பதும் அறிவைப் பெருக்குவதும் தான். இந்தப் பணியை நிறைவேற்ற, அவர் கள் தமது உள்ளுணர்வை அடக்கி வைப்பதே சிறந்தது.' சில பெற்றோர்கள் பாலியல் பற்றிய விவாதத்தைக் கூட அருவருப் பானதாகவும், மோசமான ரசனையுடையதாகவும் கருதுகின் றனர். மற்றொரு தந்தை கூறினார்: 'பாலியல் என்பது AT&T என்ற பெரு நிறுவனத்தைப் போல பொதுவெளியில் பரவ லாக அறியப்பட்டிருக்கலாம்; ஆனால் அதில் எனக்கு எந்தப் பங்குகளும் தேவையில்லை.' சுயகட்டுப்பாடே நோக்க மாக இருந்தாலும், பாலியல் பேச்சு பாலியல் செயல்களைத் தூண்டும் என்று சில பெற்றோர்கள் அஞ்சுகிறார்கள். மாறி வரும் பழக்கவழக்கங்கள் நிறைந்த இந்தக் காலத்திலும்கூட, பொருத்தமான பெற்றோர்களது முன்மாதிரிகள், பதின்வயதி னரின் விரும்பத்தக்க நடத்தையை உறுதி செய்யும் என்று இந்தப் பெற்றோர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

ஒரு பெற்றோர் கூறியது போல்: 'பெரியவர்களாகிய நாம் ஒரு கண்ணியமான முன்மாதிரியை அமைத்து, கண்ணியமான நடத்தையை வலியுறுத்தும்போதுதான், குழந்தைகள் நாம் விரும்பும் வகையான நபர்களாக மாறுவார்கள். அவர்கள் அப்படி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆகவே, எம்முன்னுள்ள கேள்வி என்னவென்றால், வெளிப்படையா கவே பாலியல் சார்ந்த ஒரு சமூகத்தில், பதின்மவயதினர் விரும்பத்தக்க தகுதிகளை எவ்வாறு பேண முடியும்? என்பது தான்.'

ஒரு பொது முரண்பாடு:

பாலியல் விஷயங்களில், வார்த்தைகளை விட மனப்பான் மைகளே உரக்கப் பேசுகின்றன. பாலியல் குறித்த நமது சமூ கத்தின் உண்மையான மனப்பான்மை என்ன? உயர் ஒழுக் கம் பற்றிய நமது கருத்து என்ன? நம்மிடம் செல்வத்தின் முன்மாதிரிகளும், வீரத்தின் இலட்சியங்களும் உள்ளன. கலை யில் எது சிறந்தது, அறிவியலில் யார் சிறந்து விளங்குகி றார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆனால் ஒரு சமூகமாக, ஒழுக்க மேன்மைக்கான முன்மாதிரிகள் நம்மிடம் இல்லை.

சிந்தனைமிக்க பதின்மவயதினர், பரவலாகக் காணப்படும் ஒரு பொது முரண்பாட்டால் குழப்பமடைந்துள்ளனர். ஒரு புறம், நமது சமூகம் பாலியல் மீது அதீத மோகம் கொண்டதா கவும், பணத்தால் உந்தப்பட்டதாகவும் உள்ளது. கேளிக் கைக்காகவும் இலாபத்திற்காகவும், பாலியல் 'சார்ந்த காட்சி கள்' திரைகளில் பூசப்படுகின்றன, விளம்பரப் பலகைகளில் அது பெரிதாக்கப்படுகிறது மட்டுமன்றி, வணிக ரீதியான கவர்ச்சிக்காகவும் அது பயன்படுத்தப்படுகிறது. மறுபுறம், 'திருமணத்திற்கு முந்தைய பாலியலைத்' தவிர்ப்பதில் நம் பிக்கை இருப்பதாக சமூகம் கூறுகிறது. இந்த நிலைமை, முரண்பாடுகளையும் பதற்றத்தையும் உருவாக்குகிறது. பதி னெட்டு வயது இளைஞர் ஒருவர் கூறியது போல், 'ஒரு சமூ கம் பொதுவான தூண்டுதல்களை ஏற்படுத்தும் செயல்களை அனுமதிக்கும்போது, அவற்றால் ஏற்படுத்தப்படும் தனிப்பட்ட ரீதியான விளைவுகளை அல்லது தூண்டப்படுதல்களைத் தடுக்க முடியாது.'

ரைம் இதழில் (Time: நவம்பர் 27, 1967) வெளியான ஒரு கடிதம் இந்த இக்கட்டான நிலையைப் பற்றிப் பேசுகிறது: 'நான் ஒரு நகைச்சுவைப் படத்தைப் பார்த்தால் சிரிக்கலாம்; ஒரு சோகக்கதையைப் பார்த்தால் அழலாம்; எனக்குக் கோபத்தை வரவழைக்கும் ஒன்றைப் பார்த்தால் கத்தலாம்... ஆனால் நான்... பாலியல் ரீதியாக என்னைத் தூண்டும் ஒரு நாடகத்தைப் பார்க்கிறேன், பிறகு நான் என்ன செய்வது?'

தள்ளாடும் தடைகள்:

வாழ்க்கையிலும் இலக்கியத்திலும், 'பாலியல் தடைகள்' தள் ளாடுகின்றன. நம் காலத்தின் மனநிலை, வெளிப்படைத்தன் மையும் சுதந்திரமும் கொண்டதாகும். 'பாலியல்' என்பது இனிமேலும் ஒரு தடைசெய்யப்பட்ட விஷயம் அல்ல. அது பள்ளியில் கற்பிக்கப்படுகிறது, வீட்டில் விவாதிக்கப்படுகிறது. தேவாலயத்தில் கூட, யதார்த்தத்தின் வெளிச்சத்தில் அது



தொடர்பான ஒழுக்கநெறி மறுமதிப்பீடு செய்யப்படுகிறது. உண்மையில், பாலியல் எப்போதுமே பிரபலமாக இருந்து தான் வந்துள்ளது.

சில சமூகங்களில், சோதனைக்கு ஆளானால், இளைஞர்கள் அதற்கு அடிபணிவார்கள் என்பது இயல்பாகவே ஏற்றுக் கொள்ளப்படுகிறது. எனவே, அவர்கள் சந்தேகிக்கப்படுகி றார்கள், இளம் பெண் பிள்ளைகள் கண்காணிக்கப்படுகிறார் கள். இப்போதெல்லாம், நம் சமூகத்தில், இளம் பிராயத்து ஆண்களிடம் 'கார்கள்' உள்ளன, இளம் பெண் பிள்ளை களுக்கும் சுதந்திரம் இருக்கிறது. அவர்கள் தொடர்பாக அதிக பட்ச தவிப்பும், குறைந்தபட்ச மேற்பார்வையும் நிலவு கிறது. நாமோ, யதார்த்தமற்ற முறையில், இளைஞர்கள் பழைய விதிகளைப் பின்பற்றவேண்டும் என்று இன்னமும் எதிர்பார்க்கிறோம்.

கடந்த காலத்தில், ஒரு 'நல்ல' பெண் கற்பைக் கடைப்பிடிப் பதில் உறுதியாக இருந்தாள். வற்புறுத்தும் ஒரு காதலனை எதிர்கொள்ளும்போது, அவள் முத்தமிடுவதையோ அல்லது உடலைத் தடவுவதையோ அனுமதித்தாள். இது மனச்சாட்சி யுடனும் சமூகத்துடனும் அவள் செய்த சமரசமாகும். இப் போது, பல பதின்மவயதினர் இந்தத் தீர்வைக் கேள்விக்கு உள்ளாக்குகிறார்கள். இளைஞர்கள், அத்தகைய செயல்கள் அவர்களை அதீத கிளர்ச்சிக்கு உள்ளாக்குவதால் வெறுக்கி றார்கள்; பெண்கள், அது அவர்களைச் சீண்டப்படுபவர் களாக மாற்றுவதால், வெறுக்கிறார்கள். ஒரு கல்லூரி மாணவி சொன்னது போல்: 'முடிவில்லாமல் கொஞ்சுவதற்குப் பதி லாக, உடலுறவு கொள்வதையே நான் விரும்புவேன். இது அதைவிட அதிகளவு கண்ணியமானது, அதிக வசதியானது, மேலும் இதற்குக் குறைந்த நேரமே ஆகும்.'

கன்னித் தன்மையுடன் இருக்க விரும்பும் கல்லூரிப் பெண் கள், தங்கள் நிலைப்பாட்டைக் கடைப்பிடிப்பதைக் கடின மாக உணர்கிறார்கள். பல இளைஞர்கள் அவர்களுடன் பழக மறுக்கிறார்கள். அது தவிர, சில பெண்கள் அவர்களைப் பழைமைவாதிகளாக நடத்துகிறார்கள்.

'திருமணத்திற்காகத் தங்களைக் காத்துக்கொள்வதில்' தீவிர மாக இருப்பவர்கள் சமூக ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட லாம். இத்தகைய அழுத்தங்களின் கீழ், ஒரு கன்னிப் பெண் தனது இயல்பான தன்மையையே சந்தேகிக்கத் தொடங்க லாம். சோதனைகளுக்கும் கேலிகளுக்கும் மத்தியில், உறுதி யானவர்களால் மட்டுமே தங்கள் தரத்தை நிலைநிறுத்த முடிகிறது. பல பெண்கள் தமக்குள்ள தேவையின் காரண மாக அல்ல, மாறாக அழுத்தத்தின் காரணமாக விட்டுக் கொடுக்கிறார்கள். கடந்த காலத்தில், ஒரு பெண் கற்பைக் காப்பதற்குக் கர்ப்பம் குறித்த பயத்தை ஒரு காரணமாகப் பயன்படுத்த முடிந்தது. இப்போது அந்தக் காரணம் அல்லது சாக்குப்போக்கு இல்லாமற் போய்விட்டது. கருத்தடை சாத னங்கள் பல்பொருள் அங்காடிகளில்கூட விற்கப்படுகின்றன. மாத்திரைகளும் கருத்தடைச் சாதனங்களும் எளிதில் கிடைக் கின்றன.

நெருங்கிய உறவுகளுக்குத் தயாராக இல்லாத இளவயது ஆண்களும் பெண்களும், சக வயதினரின் கேலியாலும் பெரி யவர்களின் எதிர்பார்ப்புகளாலும் இயல்புக்கு மாறானவர் களாக உணர வைக்கப்படுகிறார்கள். உணர்ச்சிவசப்படக் கூடிய, இலட்சியவாத குணம் கொண்ட பதினெட்டு வயதுப் பையனின் தந்தை தன் மகனிடம் கூறினார்: 'இந்தக் கோடை யில் நீ ஒரு நல்ல பெண்ணைச் சந்தித்து, அர்த்தமுள்ள காதல் உறவில் ஈடுபடுவாய் என்று நம்புகிறேன்.' ஆனால் அந்தக் கூற்று சற்றேனும் உதவிகரமான ஒன்றாக இருக்க முடியாது. ஏனென்றால், பாலியல் நெருக்கத்திற்குத் தயாராக இல்லாவிட்டாலும், தன் தந்தையை ஏமாற்றமடையச் செய் யக்கூடாது என்பதற்காக, அந்தச் சிறுவன் அதில் ஈடுபட நிர் பந்திக்கப்படலாம்.

ஏன் பாலியல் கல்வி அவசியம்?

பதின்மவயதினர் பாலியல் பற்றித் தங்களால் இயன்ற அனைத்தையும் கற்றுக்கொள்ள ஆர்வமாக உள்ளனர். அவர்கள் கலக்கமடைந்து, குழப்பமடைந்து, யதார்த்தமான தும் தனிப்பட்டதுமான பதில்களை விரும்புகிறார்கள். பாலி யல் பற்றி தீவிரமாக விவாதிக்க ஒரு வாய்ப்பு வழங்கப்படும் போது, பதின்ம வயதினர் சுதந்திரமாகவும் விவேகமாகவும்

பேசுகிறார்கள். அவர்கள் தரங்களையும் அர்த்தத்தையும் தேடுகிறார்கள். அவர்கள் தங்கள் பாலியல் தன்மையை ஏற் றுக்கொண்டு, அதைத் தங்களது முழு ஆளுமையினது ஓர் ம்சமாக ஒருங்கிணைக்க விரும்புகிறார்கள்.

பதின்ம வயதினருக்குப் பாலியல் கல்வி வழங்கப்பட வேண்டுமா?

இந்தக் கேள்வி மிகவும் தாமதமாக எழுகிறது. பாலியல் ஏற் கனவே திரையில், பாடசாலைச் சூழல்களில், தெருக்களில் என்று எல்லாவிடங்களிலும் 'கற்பிக்கப்படுகிறது'. வார்த்தை கள், மற்றும் படங்கள் மூலமாக, நமது பிள்ளைகள் பெரும் பாலும் அருவருப்பானதும் ஆபாசமானதுமான பாலியல் சம் பந்தமான கதைகளுக்கும் கருத்துகளுக்கும் உள்ளாகிறார்கள். நமது தெருக்கள், தவறான தகவல்களின் இடைவிடாத ஆதா ரங்களாக உள்ளன. ஆபாசப் பொருட்களை விற்பவர் கள், பாலியல் 'உண்மைகளையும்' உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ள ஒருபோதும் தயங்குவதில்லை. முதிர்ச்சியடைந்த சக வயதினர், உண்மையானதும் கற்பனையானதுமான பல அனுபவங்களை மனமுவந்து கூறுகிறார்கள். பெற்றோர் களும் ஆசிரியர்களும்தான், பெரும்பாலும் அந்தரங்கத் தக வல்களைப் பகிர்ந்து கொள்ள அஞ்சுகிறார்கள்.

பதினாறு வயதான செல்மா கூறுகிறாள்: 'நான் என் அம்மா விடம் பாலியல் பற்றி எதுவும் கேட்க முடியாது. நான் கேட் டால், ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டேன்? என்று அவள் யோசிக்க ஆரம்பித்துவிடுவாள். உனக்கு ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? ஒருவேளை...' என்று அவள் வற்புறுத் துவாள்.

பதினான்கு வயதான ஜூலியட் கூறுகிறாள்: 'அறியாமை என் பது களங்கமின்மையை உறுதி செய்யும் என்று என் அம்மா நம்புகிறாள். நான் அவளிடம் எதைக் கேட்டாலும் அவள் கோபப்படுகிறாள். நான் அவளிடம் பாலியல் பற்றி ஏதாவது கேட்டால் கோபப்படுகிறாள். அவள் சொல்கிறாள், 'உன் கண வர் உனக்குத் தெரிய வேண்டிய அனைத்தையும் கற்றுக் கொடுப்பார்'

பதினெட்டு வயதான லூயிஸ் கூறுகிறார்: 'என் பெற்றோரிட மிருந்து எனக்கு ஓர் இரட்டைச் செய்தி கிடைக்கிறது. அதைச் செய்யாதே, நீ சிக்கலில் மாட்டிக்கொள்வாய்!'; 'இளமையில் உன் இஷ்டப்படி நடந்துகொள்ளாதே?'


'இந்த விடயத்தில் பெற்றோர் ஒரு முடிவுக்கு வந்தால் நன் றாக இருக்கும். பாலியல் நமக்கு நல்லது என்றால், அதை அவர்களே சொல் லட்டும். அது நமக்குக் கெடுதல் என்றால், அவர்கள் அதற்காக அந்தரப்படவோ, சோதிக்கவோ, ஆத்திரப்படவோ குழப்பவோ வேண்டாமே.'

பதினைந்து வயதான ஜோஷுவா கூறுகிறார்: 'என் தந்தை எப்போதும் வெளிப்படையா கவும் உண்மையாகவும் நான் இருப்பதைப் பற்றிப் பெருமையாகப் பேசுவார். ஆனால் பாலியல் சம்பந்தமான விடயம் தொடங்கும் இடத்தில் அவ ரது நேர்மை நின்றுவிடுகிறது. இந்த ஒரு விஷயத்தில் மட்டும் என் நேர்மை வரவேற்கப்படுவதில்லை.'

பத்தொன்பது வயதான, கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படிக்கும் நடாலி கூறுகிறார்: 'நானும் என் பெற்றோரும் ஓர் எழுதப்படாத விதியின்படி வாழ்கிறோம். அங்கு ஆழமான கேள்விகளும் இல்லை, உண்மையான பதில்களும் இல்லை.'

'உண்மையில் என்ன நடக்கிறது என்பதை அவர்கள் தெரிந் துகொள்ள விரும்பவில்லை. அதை என்னால் அவர்களிடம் சொல்ல முடியாது. உண்மையைச் சொல்லப்போனால், நான் மரபு சார்ந்த ஒழுக்கங்களைக் கொண்ட ஒரு நல்ல பெண். ஆரம்பத்தில், என்னிடம் நட்பாக அன்பு செலுத்தும் ஒரு வரைக் கண்டுபிடிப்பது எனக்குச் சிரமமாக இருக்கிறது. எனக்கு டேட்டிங் செய்வது பிடிக்கும். முதல் சில சந்திப்புகள் இனிமையாக இருக்கும். பிறகு அழுத்தம் வந்துவிடும். மது வும் கஞ்சாவும் உள்ள பார்ட்டிகளுக்கு நீங்கள் அழைக்கப் படுவீர்கள். நீங்கள் படுக்கைக்குச் செல்வீர்கள் என்பது உறு தியாக எதிர்பார்க்கப்படுகிறது. அவர்கள் சொல்வது போல், நீங்கள் சென்றால், இந்த உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும். செல்லாவிட்டால், நீங்கள் தனியாக அழுவீர்கள். எனவே, நான் நேர்மையும் கண்ணீரும் நிறைந்தவளாகவே இருக்கிறேன்'.

இருபது வயதான ஜொனாதன் இந்த அவநம்பிக்கையான சூழ்நிலையை ஏற்றுக்கொள்கிறான். அவன் சொல்கிறான்: 'கல்லூரி மாணவர்களுக்கு, 'பாலுறவு' என்பது முதிர்ச்சி ஆண்மை என்பவற்றின் சின்னம். ஆனால், மாணவிகளுக் கோ, அது மக்கள் மத்தியில் செல்வாக்கு இழப்பதிலிருந்தும் தனிமையிலிருந்துமான ஒரு பாதுகாப்பு.'





முந்தைய விவாதம், பாலியல் பிரச்சாரத்திற்கு ஒரு மாற்று மருந்தாக பாலியல் கல்வி இப்போது தேவை என்பதைக் காட்டுகிறது. தெருவும் திரையும் அதன் பாலியல் தரங்களை நிர்ணயிப்பதை சமூகம் இனிமேலும் செயலற்ற முறையில் அனுமதிக்க முடியாது.

தகவலும் விழுமியங்களும்:

பாலியல் கல்விக்கு இரண்டு பகுதிகள் உள்ளன: ஒன்று தகவல் மற்றது விழுமியங்கள். விழுமியங்களை வீட்டிலேயே கற்றுக்கொள்வது சிறந்தது. தகவல்கள் வல்லுநர்களால் வழங்கப்படுவது சிறந்தது. சில பெற்றோர்களுக்கு, அறிவொளிக்கான தேடல் என்ற போர்வையில் வரும் துன்புறுத்தல்களுக்கு எதிராகப் பாதுகாப்புத் தேவைப்படுகிறது. பாலியல் தொடர்பான எல்லாக் கேள்விகளும் அறிவுத் தாகத்திலிருந்து எழுவதில்லை. சில கேள்விகள் எரிச்சலூட்டுவதையும் சங்கடப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டவை. பெற்றோர்கள் இவ்வாறான தூண்டுதலை நோக்கமாகக் கேள்வி களுக்குப் பதிலளிக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு தங்களது அடக்கம், சங்கடம், பொருத்தமான தகவல்கள் இல்லாத நிலை ஆகியவற்றைக் கொண்டிருப்பதற்கான உரிமகளைக் கொண்டிருப்பவர்கள். ஆனால், உண்மையாகத் தேடப்படும் தகவல்களைப் பற்றி என்ன செய்வது?. மீண்டும், அறிவினதும் சௌகரியத்தினதும் வரம்புகளுக்குள், அவற்றுக்கான பதில்கள் வழங்கப்பட வேண்டும். மற்றைய கேள்வி களை வல்லுநர்களிடம் விட்டுவிடுவது சிறந்தது. பள்ளிகள், தேவாலயங்கள் மற்றும் சமூகங்களால் வழங்கப்படுகின்ற பாலியல் தொடர்பான விவாதங்களில் பங்கேற்பதற்குப் பெற்றோர்கள் தங்கள் பதின்மவயதுப் பிள்ளைகளை ஊக்குவிக்க வேண்டும்.

நடுநிலைமையுடனும் நேர்மையுடனும் வழங்கப்படும் தகவல்கள், தலைமுறைகளுக்கு இடையேயான பகைமையைக் குறைத்து நம்பிக்கையை அதிகரிக்கக்கூடும்.

பெரியவர்கள், இளைஞர்கள் மீதான தங்கள் நம்பிக்கையை மீண்டும் பெறக்கூடும். வயது வித்தியாசம் இருந்தபோதிலும், பெரியவர்கள் தங்களுடன் ஒரு பொதுவான மனிதநேயத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதை இளைஞர்கள் கண்டறியக்கூடும். கல்லூரியிலிருந்து வந்திருந்தபோது, பதினெட்டரை வயதுடைய ஜேசன், தன் தந்தையுடன் வாழ்க்கை, காதல் போன்ற விடையங்களைப் பற்றிப் பேசினான். அவன், 'ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான உண்மையான வித்தியாசத்தை நான் கண்டுபிடித்துவிட்டேன். பெண்கள் காதலைப் பெறுவதற்கான ஒரு வழியாக உடலுறவைப் பயன்படுத்துகிறார்கள். ஆண்கள் உடலுறவைப் பெறுவதற்கான ஒரு வழியாகக் காதலைப் பயன்படுத்துகிறார்கள்,' என்றான் அவன். சாதுவான அலட்சியத்துடன், அவன் மேலும், அவர்களைக் காதலித்துவிட்டு, விட்டுவிடு என்பது தான் என் தத்துவம்,' என்று சொன்னான்.

அவனது தந்தை கேட்டார்: 'நீயும் வேறு சில பையன்களும் ஒரு பெண்ணைக் காதலித்துவிட்டு, அவளை விட்டுச் சென்ற பிறகு அவளுக்கு என்ன ஆகும்?'

'அது என் வேலை இல்லை,' என்றான் ஜேசன். 'நான் அதைப் பற்றி நினைக்காமல் இருக்க முயற்சிக்கிறேன்.'

'சரி, யோசித்துப் பார்,' என்று தந்தை பதிலளித்தார். 'கிழக்கத்திய நாடுகளில் சொல்வார்கள், ஒரு மனிதரை மரணத்திலிருந்து காப்பாற்றினால், அவனது உயிருக்கு நீயே பொறுப்பு. ஒரு பெண்ணைக் காதலில் சிக்க வைக்க ஒரு திட்டத்தை வகுத்தால், அவளது உணர்வுகள் உன் வேலையாகிவிடும்.'

இதன் மூலம், ஜேசனின் தந்தை ஒரு அடிப்படைக் கொள்கையை உறுதிப்படுத்தினார். அதாவது: 'நேர்மையும் பொறுப்பும் அனைத்து மனித உறவுகளுக்கும் பொருந்தும். எளியதோ சிக்கலானதோ, அது சமூகம் சார்ந்ததோ, பாலியல் சார்ந்ததோ, எதுவாயினும் அவற்றின் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் தனிப்பட்ட நேர்மை தேவைப்படுகிறது.'

'காதல் மட்டுமே உடலுறவை நியாயப்படுத்துகிறது,' என்றாள் பதினெட்டு வயதுப் பெண் ஒருத்தி. 'ஆகையால், நான் எப்



போதும் காதலில் இருக்கிறேன்.' இத்தகைய அபத்தமான அணுகுமுறைக்கு ஒரு சமூக வரலாறு உண்டு. ஒரு நல்ல பெண் தன்னுள் தீவிரமான ஆசைகளை உணரும்போது, அவள் குற்ற உணர்ச்சியும் கூச்சமும் கொண்டவளாக இருக்கலாம். அவளுக்குக் காதலை நியாயமாக வெளிப்படுத்த உள்ள ஒரே வழி காதலில் விழுவதுதான்; அவள் விழவும் செய்கிறாள். அவளுடைய குற்றவுணர்ச்சி, அவளிடம் காதல் பற்றிய ஒரு மாயையைத் தோற்றுவிக்கிறது. அது உண்மையான காதலோ அல்லது கற்பனையான காதலோ, எப்படியிருப்பினும் அது அவளுடைய குற்றவுணர்ச்சியைப் போக்குகிறது. ஒரு பதின்ம வயதுப் பெண் காதலுக்கும், 'வசனங்களுக்கும்' எளிதில் மயங்குவதற்கு இதுவும் ஒரு காரணம் தான். காதல் வார்த்தைகள், காதலிக்கும் செயலை அவளுக்கு நியாயப்படுத்துகின்றன. தனக்கு எது உண்மையோ, அது ஆண்களுக்கும் உண்மை என்று அவள் கருதுகிறாள். ஆனால், 'அது அப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில்லை.' ஒவ்வொரு பெண்ணும் இதைத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு பையன் வித்தியாசமாக வளர்க்கப்படுகிறான். அவனால் காதலிக்காமலேயே காதல் செய்ய முடியும். ஒரு குறிப்பிட்ட பெண் இல்லாதபோதும், ஒரு பையன் பெரும்பாலும் பாலியல் ரீதியாகத் தூண்டப்படுகிறான். அப்போது அவன் நிவாரணத்தைத் தேடக்கூடும். 'அவள்' கிட்டத்தட்ட யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். இந்த இரட்டை நிலைப்பாடு, அவனை ஈடுபாடு இல்லாமலே காதல் செய்வதற்கு அனுமதிக்கிறது.

'நல்லா இரு, ஆனால் அவளை வீட்டுக்கு அழைத்து வராதே,' என்பது தந்தையர்களது பிரபலமான அறிவுரை.

தன்னை ஒரு கருவியாகப் யாரும் பயன்படுத்த அனுமதிக்காமல் இருப்பது ஒரு பெண்ணின் பொறுப்பு. ஒரு பெண்ணை ஒரு பொருளாகப் பயன்படுத்தாமல் இருப்பது ஒரு பையனின் கடமை. காதலிலும் பாலியலிலும் எல்லாம் நியாயமானவை அல்ல என்பதை ஆண், பெண் இருபாலரும் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு பெண் ஒரு பையனை, கிண்டல் செய்வதும் சீண்டுவதும் நியாயமற்றது. ஒரு பையன், முடிவெடுக்கும் முழுப் பொறுப்பையும் அந்தப் பெண்ணின் மீது சுமத்துவதும் நியாயமற்றது. பழைய கால வழக்கத்தில், ஒரு பையன், அந்தப் பெண்ணின் தயார் நிலையையோ அல்லது தனது பொறுப்பையோ கேள்வி கேட்காமல், அவள் அனுமதிக்கும் எல்லை வரை செல்ல முயன்றான். (தற்காலத்து) இளைஞர்களுக்கு இதுபோன்ற பிரச்சினைகளை நேர்மையாக எதிர்கொள்ளக் கற்றுக்கொடுக்க வேண்டும். பரஸ்பர பொறுப்புக் குறித்த வெளிப்படையான விவாதங்கள், நமது பதின்மவயதினர் தமது காதல், வாழ்க்கை என்பவை குறித்து விவேகமான முடிவுகளை எடுப்பதற்கான அவர்களது ஆற்றலை வளர்க்க உதவும்.

சுய இன்பம்:

'பிளேக்' நோயோ, பெரியம்மை நோயோ, யுத்தமோ அல்லது அது போன்ற எண்ணற்ற தீமைகளோ, ஒருவரது சுய இன்பப் பழக்கத்தை விட, மனிதகுலத்திற்கு அதிகமான பேரழிவை ஏற்படுத்தியதில்லை.' என்ற கருத்தைத் தெரிவித்த அதே மூலத்திலிருந்து வந்த, 1885-ஆம் ஆண்டில் வெளியான ஒரு மருத்துவ இதழ், 'சுய இன்பம் புற்றுநோய், இதய நோய், ஹிஸ்டீரியா, வலிப்பு, ஆண்மைக் குறைவு, பாலுணர்வின்மை மற்றும் மனநோய் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது' என்று எழுதியது. இன்று, சுய இன்பம் பேரழிவு நோய்களை ஏற்படுத்துவது ஒருபுறம் இருக்க, முகப்பருக்களைக் கூட ஏற்படுத்துவதில்லை என்பது நன்றாகவே எமக்குத் தெரியும்.

இருப்பினும், இது இன்னும் பல பதின்வயதினரது கவலைக்கு அடிப்படையான காரணமாக உள்ளது. அதிலிருந்து தப்பிக்க, அவர்கள் முன்கூட்டியே உடலுறவில் ஈடுபடலாம். உடலுறவு அதிக அந்தஸ்தைக் கொண்டுவருகிறது மற்றும் குறைவான குற்ற உணர்வைத் தூண்டுகிறது என்று நம்புகிறார்கள். மற்ற எந்தக் குழுவினரையும் விட பதின்மவயதினருக்குப் பாலியல் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. அவர்களின் ஆசை எளிதில் தூண்டப்படுகிறது, அவர்களின் பேரார்வம் உச்சத்தில் இருக்கிறது. அவர்களது கிளர்ச்சியடைவதற்கான அடிப்படை ஆதாரங்கள் (அவர்கள் வாழும் சூழலில்) ஏராளமாக உள்ளன. ஆனால் உடலுறவு என்பது தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே, சுய இன்பம் என்பது ஒரு பொதுவான வடிகாலாக உள்ளது.

சுய இன்பம் உடலுக்கு நிவாரணம் அளிக்கிறது, ஆனால் அது ஆன்மாவைத் திருப்திப்படுத்துவதில்லை. அது நெருக்

கம், அன்பு, மற்றும் அங்கீகாரத்திற்கான ஏக்கத்தை நிறை வேற்றுவதில்லை. 'சுய இன்பத்தில் உள்ள தவறு என்னவென் றால், அதன் மூலம் சுவாரஸ்யமான மனிதர்களைச் சந்திக்க முடிவதில்லை' என்ற கூற்றில் ஓரளவு உண்மை இருக்கலாம். சுய இன்பம் என்பது மிகவும் சுயநலமானது: அற்புதமான தனிமையில், ஒருவர் தன்னைத் தவிர வேறு யாரையும் திருப் திப்படுத்த வேண்டியதில்லை. தீவிரமான நெருக்கத்திற்குப் பதிலாக, அங்கே ஒரு போலியான தன்னாட்சி இருக்கிறது. உடனடியாக, ஒரு பதின்ம வயதினர் முழு உலகத்தையும் தனது கற்பனையின் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

ஆனால், இந்த மாயை ஒரு பேரழிவல்ல. அது ஒரு வெற்றியும் அல்ல. பதற்றத்திலிருந்து தற்காலிகமாக விடுபட சுய இன்பம் உதவியாக இருக்கிறது. ஆனால் அது முயற்சிக்கும் தேட லுக்கும் ஒரு எளிதான மாற்றாகவும், ஏமாற்றத்திற்கும் தோல் விக்கும் மிக எளிதான ஆறுதலாகவும் மாறிவிடும். ஒரு சிறு வன் ஒருவகையான கேலியுடன் சொன்னது போல, 'பாலு றவா... ஓ... அது சுய இன்பத்திற்குப் பதிலான ஒரு மோசமான மாற்று வழி.' இருப்பினும், ஒரு பதின்பருவத்தினரின் முக்கிய திருப்திகள் தனிப்பட்ட உறவுகள் மற்றும் சமூகப் பொறுப்புக ளிலிருந்து வரும்போது, சுய திருப்தி ஒரு பிரச்சினையல்ல, அதுவும் வெறுமனே ஒரு மேலதிகத் தீர்வு மட்டும்தான்.

ஓரினச்சேர்க்கை:

நம் மகன்கள் 'ஆண்களாகவும்', மகள்கள் 'பெண்களாகவும்' இருப்பதைப் பார்ப்பதில் நாம் பெருமை கொள்கிறோம். ஆனால், நாம் உண்மைகளை எதிர்கொண்டே ஆக வேண் டும். அமெரிக்காவில் பத்து மில்லியனுக்கும் அதிகமான ஓரி னச்சேர்க்கையாளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் ஒரு காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் தான்.

பெற்றோர்கள் தமது மகனோ அல்லது மகளோ ஓரினச்சேர்க் கையாளர் என்பதைக் கண்டறியும்போது, அதன் காரணமாக தமது மகன் அல்லது மகள் ஒரு நெறிமுறை பிறழ்ந்தவர்கள் என்றே எண்ணுகிறர்கள். அவர்களுக்குப் பண்டைய ஏதென் ஸில் ஓரினச்சேர்க்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதோ, அல்லது நவீன பெருநகரங்களில் அது சகித்துக்கொள்ளப்ப டுகிறது என்பதோ ஆறுதல் அளிப்பதில்லை. ஓரினச் சேர்க் கையாளர்களாக இருந்த புகழ்பெற்ற தத்துவஞானிகள் மற் றும் கலைஞர்களின் பட்டியல்களில் தொகுப்பைக் காண் பதும் கூட அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதில்லை. ஒரு தந்தை கூறியது போல, 'இது லியோனார்டோ டாவின்சிக்குச் சரியாக இருக்கலாம், ஆனால் என் லியோனார்டுக்கு அல்ல'.

உண்மையில், பெற்றோருக்குத் தேவைப்படுவது, நாகரிகம், அதன் மீதான அதிருப்திகள் என்பவை பற்றிய ஒரு வரலாற்று ஆய்வு அல்ல. மாறாக இத்தகைய செயல்களுக்கான தடுப்பு அல்லது மாற்றத்திற்கான உதவி என்பவையே.

ஒரு பெற்றோருக்கு, அவரது துயர நேரத்தில் நிபுணர்கள் என்ன சொல்ல முடியும்? ஓரினச்சேர்க்கையாளரான ஒரு மகனின் அமெரிக்கத் தாய்க்கு எழுதிய கடிதத்தில், சிக்மண்ட் ஃபிராய்ட் இவ்வாறு கூறினார்:

'...என்னால் உதவ முடியுமா என்று கேட்பதன் மூலம், ஓரினச் சேர்க்கையை ஒழித்துவிட்டு, அதற்குப் பதிலாக இயல்பான எதிர்ப்பாலினச்சேர்க்கையை ஏற்படுத்த முடியுமா? என்று தான் நீங்கள் என்னிடம் கேட்கிறீர்கள் என்று நான் நினைக் கிறேன். பொதுவாக, அதைச் சாதிப்போம் என்று எங்களால் உறுதியளிக்க முடியாது என்பதே எனது பதில். குறிப்பிட்ட இத்தகைய சில சந்தர்ப்பங்களில், ஒவ்வொரு ஓரினச்சேர்க் கையாளரிடமும் இருக்கும் எதிர்ப்பாலினச் சேர்க்கை தொடர் பான ஆர்வங்களிலுள்ள தவறுகளுக்கான வித்துக்களை அகற்றுவதில் நாங்கள் வெற்றி பெறுகிறோம்; ஆனால் பெரும் பாலான சந்தர்ப்பங்களில் அது இனி மேலும் சாத்தியமில்லை என்று தெரிகிறது. இது தனிநபரின் தரம் மற்றும் வயதைப் பொறுத்த விஷயம். சிகிச்சையின் முடிவைக் கணிக்க முடியாது...'

இந்தக் கடிதம் 1935-இல் எழுதப்பட்டது. அன்று முதல், இன் றுவரையான ஆராய்ச்சியும் அனுபவமும் புதிய அறிவைக் கொண்டு வந்துள்ளன. ஓரினச்சேர்க்கை என்பது இனி முழு மையாகவோ அல்லது இல்லாமலோ இருக்கும் ஒரு நிகழ் வாகக் கருதப்படுவதில்லை. அது அளவைப் பொறுத்த விட யம். இந்தியானா பல்கலைக்கழகத்தின் பாலியல் ஆராய்ச்சி நிறுவனம், பாலியல் நடத்தையை வகைப்படுத்த ஏழு-புள்ளி அளவுகோலைப் பயன்படுத்துகிறது. இது முற்றிலும் எதிர் பாலின ஈர்ப்பு முதல் முற்றிலும் ஒருபாலின ஈர்ப்பு வரையி லான நடத்தையைக் குறித்த ஓர் அளவுகோல். இந்த அளவு கோலின் நடுவில், இரு பாலினத்தவர் மீதும் காம உணர்வைத் தூண்டுபவர்கள் உள்ளனர். இந்த ஆராய்ச்சி, அனைத்து ஆண்களில் சுமார் 37 சதவிகிதத்தினரும் (கூடவே ஏறக் குறைய அதே அளவு பெண்களும்) தங்கள் இளமைப் பரு வத்திற்கும் முதுமைப் பருவத்திற்கும் இடையில் ஏதேனும் ஓர் ஒருபாலின ஈர்ப்பு அனுபவத்தைப் பெற்றிருந்ததாகக் காட்டி யது. இருப்பினும், அவர்களில் 4 சதவிகிதத்தினர் மட்டுமே தமது வாழ்நாள் முழுவதும் முற்றிலும் ஒருபாலின ஈர்ப்பாளர் களாக உள்ளனர். சிகிச்சைக்கான முன்கணிப்பு, தனிநபரின் உந்துதலைப் பெரிதும் சார்ந்துள்ளது. டி.ஐ. ஆல்பர்ட் எல் லிஸ் கூறுவது போல்: 'தங்கள் நிலை குறித்து தீவிர அக்கறை கொண்டு, அதை மேம்படுத்த உழைக்கத் தயாராக இருக்கும் பெரும்பாலான ஒருபாலின ஈர்ப்பாளர்கள்... மிகவும் திருப்திக ரமான எதிர்பாலின ஈர்ப்பு நிலையை அடையக்கூடும்.'

பெண்தன்மை கொண்ட சிறுவர்கள்:

தொடக்கப் பள்ளியில் கூட, பெண்களைப் போல வளர்க்கப் பட்ட சில சிறுவர்களை நாம் சந்திக்கிறோம். அவர்கள், பொது வாக தந்தையர்களற்ற வீடுகளிலிருந்தோ அல்லது பல பெண்கள் உள்ள வீடுகளிலிருந்தோ குடும்பத்திலிருந்தோ வரும் ஒரே ஒரு ஆண் குழந்தையாக இருந்து வருகிறார்கள் என்பதைக் காணலாம். அவர்களின் அடையாளமாதிரிகள் பெரும்பாலும் ஆண்தன்மை அற்றவையாக இருந்ததால், இந்தச் சிறுவர்கள் சில பெண்மைப் பாத்திரங்களை ஏற்கா மல் இருக்க முடிவதில்லை. நமது கலாசாரத்தில் சிறுவர்க ளிடம் எதிர்பார்க்கப்படும் இயல்பான ஆக்ரோஷம் அவர்க ளிடம் இல்லாமல் இருக்கலாம். அவர்கள் பணிவானவர்களா கவும், சாந்தமானவர்களாகவும், செயல்வேகம் குறைந்தவர்க ளாகவும், திறமையற்றவர்களாகவும் இருக்கலாம். மற்றச்

சிறுவர்களுடன் பழகுவதற்குப் பயந்து, முரட்டுத்தனமான விளையாட்டுகளிலிருந்து ஒதுங்கியவர்களாக அவர்கள் இருக்கலாம். அவர்கள் சிறுமிகளின் துணையுடன் மிகவும் சௌகரியமாக உணர்கிறார்கள். இத்தகைய குழந்தைகள் பொதுவாக மற்றச் சிறுவர்களிடமிருந்து கடுமையான எதிர்வினையை எதிர்கொள்கிறார்கள். அவர்கள் பட்டப்பெயர் சூட்டப்படுகிறார்கள், தாக்கப்படுகிறார்கள்; துன்புறுத்தவும்படுகிறார்கள். அவர்கள் சமூக ரீதியாகக் களங்கப்படுத்தப்பட்டு, உணர்வு ரீதியான பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இதனால், அவர்கள் தங்கள் உயிரியல் விதியை வாழ்ந்து காட்ட, மிகவும் பயந்து, திறமையற்ற பெரியவர்களாக வளரும் அபாயம் ஏற்படுகிறது.

பெண்மைக் குணம் கொண்ட சிறுவர்களுக்குக் குடும்பத்திற்கு உள்ளேயோ அல்லது வெளியேயோ ஒரு தந்தை போன்ற உருவம் தேவைப்படுகிறது. அவர்களுக்குத் தொழில்முறை உதவியும் தேவைப்படலாம். ஒரு ஆண் சிகிச்சையாளருடனான குழுமுறைச் சிகிச்சை, மற்றைய சிறுவர்களின் துணையுடன் ஆண்மை சார்ந்த செயற்பாடுகள் என்பவை ஓர் உகந்த சிகிச்சைச் சூழலை வழங்குகின்றன. சிகிச்சையாளர், அடையாளத்திற்கான ஒரு விரும்பத்தக்க மாதிரியாகச் செயற்படுகிறார். செயற்பாடுகளும் சக நண்பர்களது நெருக்கமும் ஆளுமையின் ஆண்மைக் கூறுகளை வெளிக்கொணர்கின்றன. இவை, ஒட்டுமொத்த சூழலுக்கும் பதற்றத்தை ஏற்படுத்தாமல் அவர்களது தன்னம்பிக்கையை ஊக்குவிக்கிறது.

பதின்ம வயதினரின் போலி ஓரினச்சேர்க்கை:

சில பதின்மவயதுப் பருவத்தினர் அவ்வப்போது ஓரினச் சேர்க்கை உறவுகளில் ஈடுபடுகின்றனர். இந்தத் தற்காலிக நடத்தை ஒரு நெறிபிறழ்ந்த வாழ்க்கையை முன்னறிவிப்பதில்லை. அதற்கான விளக்கம் பின்வருமாறு: பருவமடைவதற்கு முந்தைய காலத்தில், சிறுவர்கள் ஒன்றாகக் கூடுகிறார்கள், சிறுமிகள் நெருங்கிய நட்பில் இணைகிறார்கள். அந்த நண்பர்கள் பிரிக்க முடியாதவர்கள். வயது வந்தோரின் பாலியல் மர்மங்களைப் பற்றி நிறையக் கண்டறியப்பட்டுள்ளது. இந்த ஓரினச்சேர்க்கை நட்பு, இயல்பான ஆண்-பெண் உறவுகளின் வளர்ச்சிக்கு அவசியமான ஒரு படியாகும்.

இந்தப் படியைத் தவிர்க்க முடியாது: பருவமடைவதற்கு முந்தைய காலத்தில், ஏதேனும் ஒரு காரணத்திற்காக (உடல் நலக்குறைவு, அறிமுகமில்லாத நகரத்திற்குக் குடிபெயர்தல், அல்லது நெருங்கிய நட்புகளுக்குப் பெற்றோரின் தடை) இது நிகழத் தவறினால், அது பிற்காலத்தில் இளமைப் பருவத்தில் நிகழும். அந்த நேரத்தில், உடல் முதிர்ச்சியின் காரணமாக, அந்த உறவில் பாலியல் நெருக்கமும் இருக்கலாம். அத்தகைய நெருக்கம் உண்மையான நெறிபிறழ்வு அல்ல. ஓரினச் சேர்க்கை நடத்தை போல் தோன்றுவது, இயல்பான எதிர்ப் பாலின உறவுக்கு முந்தைய, தாமதமான ஒரு வளர்ச்சிக் கட்டமாக மட்டுமே இருக்கலாம்.

பெற்றோரும் மாத்திரையும்:

ஒரு தாய் தனது பதினெட்டு வயது மகளைப் பற்றி ஓர் உளவியலாளரிடம் ஆலோசனை கேட்டார். வெளிமாவட்டத்திலுள்ள கல்லூரி ஒன்றுக்குச் செல்லவிருந்த அவள் தன் தாயிடம் தனக்குத் தேவையான கருத்தடை மாத்திரைகளை வாங்கித் தரும்படி கேட்டாள். அம்மா குழப்பத்தில் இருந்தார். அவள் சொன்னாள்: 'எனக்கு என் மகளைத் தெரியும். அவள் காதலில் விழுந்து, உடலுறவு கொள்வாள். மாத்திரைகளாவது இருந்தால் குறைந்தபட்சம் அவள் பாதுகாப்பாக இருப்பாள். ஆனால், ஒரு தவறான விடயத்தில் நானும் ஒரு பங்காளியாக, அந்தச் செயலுக்கு உடந்தையாக இருப்பது போன்ற குற்ற உணர்வு ஏற்படுவதைஎன்னால் தவிர்க்க முடியவில்லை.'

உளவியலாளர், இவ்வாறு பதிலளித்தார்: 'நீங்கள் சொல்வது எனக்குக் கேட்கிறது. அதாவது 'நீங்கள் உங்கள் மகளுக்காக அனுதாபப்படுகிறீர்கள். ஆனால் அவள் மீதான உங்கள் அனுதாபம், அவள் செய்யப் போகின்றவைக்கான உடந்தையாக இருப்பதாக அமைவதை நீங்கள் விரும்பவில்லை. அவளுடைய கோரிக்கைக்கு நீங்கள் சம்மதித்தால், நீங்கள்



உண்மையில் விரும்பாத ஒரு விடயத்திற்கு, அவளுக்கு அனுமதி அளிக்கிறீர்களோ என்று அஞ்சுகிறீர்கள் என்றுதானே சொல்கிறீர்கள்?. அதாவது, 'உங்கள் மகளின் கேள்விக்கு நீங்களே பதிலளித்துவிட்டீர்கள். ஆம், 'முடியாது' என்பதுதான் உங்களது அந்தப் பதில்!.

தங்கள் பெற்றோரிடம் கருத்தடை சாதனங்களைக் கேட்கும் பதின்ம வயதினர், தங்கள் கோரிக்கையின் மூலமே வயது வந்தோருக்கான வாழ்க்கைக்குத் தயாராக இல்லை என்பதைக் காட்டுகிறார்கள். ஒரு வயது வந்தவர் தனது பொறுப்பைத் தன் பெற்றோர் மீது சுமத்துவதில்லை. அவர் தனது சுமைகளைத் தானே சுமக்கிறார். அவர் முடிவுகளை எடுக்கிறார், அதன் விளைவுகளை ஏற்றுக்கொள்கிறார். அவர் கவலையைத் தாங்கிக்கொள்கிறார், குற்றவுணர்வைச் சமாளிக்கிறார், மேலும் தனது நடத்தையை வழிநடத்துகிறார். இதுபோன்ற வளர்ச்சி வலிகள் இல்லாமல், வளர்ச்சி இல்லை. தங்கள் பதின்மவயதினருக்குக் கருத்தடை சாதனங்களைப் பரிசாக வழங்கும் பெற்றோர்கள், அவர்களுக்கு ஒரு முக்கிய அனுபவத்தை மறுக்கிறார்கள். அவர்களுக்கு அத்தகைய அகப் போராட்டம் இல்லாமல் அக வளர்ச்சி இல்லை. வயது வந்தவராக மாற, ஒரு பதின்மவயதினர் வயது வந்தோருக்கான உணர்ச்சிகளை மட்டுமல்ல, அதன் இயல்பான செயற்பாடுகளையும் கடந்து செல்லத்தான் வேண்டும்.

முதிர்ந்த காதல்:

காதல் என்பது வெறும் உணர்வெழுச்சியும் பெருவிருப்பும் மட்டுமல்ல. காதல் என்பது இருவரது மனப்பான்மைகளினதும் ஒரு கூட்டிணைவு என்பதுடன் தொடர்ச்சியான இருவரது செயற்பாடுகளது தொகுப்புமாகும். இது காதலன், காதலி இருவருக்கும் இடையிலான உறவில் வளர்ச்சியை உருவாக்கி வாழ்க்கையை மேம்படுத்துகிறது. கற்பிதமான கனவுக் காதல் பெரும்பாலும் குருடானது: அது காதலியின் பலத்தை அங்கீகரிக்கிறது, ஆனால் அவளது பலவீனத்தைக் காண்பதில்லை. இதற்கு மாறாக, முதிர்ந்த காதல் பலவீனத்தை நிராகரிக்காமலே; பலத்தை ஏற்றுக்கொள்கிறது. முதிர்ந்த காதலில், ஆணோ பெண்ணோ மற்றவரைச் சுரண்டவோ அல்லது உடைமையாக்கிக் கொள்ளவோ முயற்சிப்பதில்லை. அதில் சம்பந்தப்படும் ஒவ்வொருவரும் தமக்கே உரியவர்களாக இருப்பர். அத்தகைய அன்பு, ஒருவர் தன்னை முழுமையாக வெளிப்படுத்தவும், தனக்கேயுரிய சிறந்த சுயமாக மாறவும் சுதந்திரம் அளிக்கிறது. அத்தகைய அன்பு என்பது, கோபமும் வேதனையும் கொண்ட நேரங்களில்கூட உறவில் நிலைத்திருந்து, சிரமங்களைச் சரிசெய்ய முயற்சிப்பதற்கான ஓர் உறுதிப்பாட்டுக்கான காரணி ஆகிறது. அன்பும் காமமும் ஒரே உணர்ச்சி அல்ல, ஆனால் இந்தத் தெளிவு உள்ளவர்கள்தான் அவற்றை இணைக்கக் கற்றுக்கொள்கிறார்கள்.



vickneaswaran.sk@thaiveedu.com



தவிர்க்க முடியாததற்கான திட்டமிடல்

- செந்தூரன் புனிதவேல்



எண்பதுகளில் புலம் பெயர்ந்து வந்து குடியேறிய தமிழர்கள் முதுமையில் தவிர்க்க முடியாத மரணத்திற்கு முகம் கொடுக்க முனையும் வேளையில் தாம் விட்டுச் செல்லும் செல்வத்தை எவ்வாறு பாதுகாப்பாகவும் திட்டமிட்டும் அடுத்த தலைமுறைக்குப் ஒப்படைப்பது என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியமா கிறது. சரியான திட்டமிடல் இல்லாவிடில், அவர்களின் குடும்பங்கள் சட்டப் பிரச் சினைகள், எதிர்பாராத செலவுகள் மற்றும் ஏமாற்றங்கள் ஆகியவற்றைச் சந்திக்க நேரிடலாம். முன்கூட்டியே மேற்கொள்ளப்படும் திட்டமிடல், நீங்கள் கடின உழைப்பால் சேர்த்துச் சம்பாதித்த செல்வம் சிக்கல்களின்றி அடுத்த தலைமுறைக்குச் செல்லுவதோடு, உங்கள் இறுதி விருப்பங்களும் முறையாக நிறைவேறுவதையும் உறுதி செய்யும். இதனை எட்டுப் படிகளாக எவ்வாறு செய்யலாம் என்பதை இங்கு விளக்குகிறேன்.

• உங்கள் சொத்தை மதிப்பீடு செய்யுங்கள்:

நீங்கள் இறக்கும் போது உங்களிடம் இருக்கும் அனைத்து சொத்துகளும் இதில் அடங்கும். அதாவது காணிகள், கட்டடங்கள், சேமிப்புகள், முதலீடுகள், தனிப் பட்ட பயன்பாட்டு பொருட்கள், வியாபாரங்களில் உள்ள பங்குகள் ஆகிய அனைத்தும் இதில் சேரும். அதேபோல், கடன்கள் மற்றும் கொடுப்பனவுகளும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். பலர் தமது சொத்து மதிப்பை குறைவாக மதிப்பிடுவதோடு, காப்புறுதி போன்ற முக்கிய அம்சங்களையும் தவ றவிடுகின்றனர். எனவே, அனைத்து விவரங்களும் அடங்கிய முழுமையான பட்டி யலைத் தயாரித்தல் அவசியம். அந்தப் பட்டியலில் நீங்கள் வசிக்கும் வீடு, விடுமுறை வீடுகள் மற்றும் வாடகைக்கு விடப்பட்ட கட்டடங்கள் ஆகியவையும் சேர்க்கப்பட வேண்டும். மேலும், வங்கிக் கணக்குகள், முதலீட்டு கணக்குகள், ஓய்வூதியத் திட்டங்கள் ஆகியவற்றையும் பதிவு செய்ய வேண்டும். காப்புறுதி களில் உயிர் காப்புறுதி, ஆரோக்கியக் காப்புறுதி மற்றும் நெடுங்கால பராமரிப்பு காப்புறுதி (Long-Term Care) ஆகியவை அடங்கும். அதோடு, தனிப்பட்ட சொத்துகள் - நகைகள், வாகனங்கள் போன்றவையும் சேர்க்கப்பட வேண்டும்.

• சட்டப்படி செல்லுப்படியாகும் உயில் சொத்துகளை கையளிப்ப தற்கு பெரிதும் உதவும்:

சட்டப்படி செல்லுபடியாகும் ஓர் உயில், உங்கள் சொத்துகளை நீங்கள் விரும் பும் நபர்களுக்கு ஒழுங்காகக் கையளிப்பதற்கு பெரிதும் உதவும். அதில் யார் எதைப் பெற வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப்பிட வேண்டும். மேலும், பயனாளர்களில் சிறுவர்கள் இருப்பின், அவர்களுக்கான பாதுகாவலரை (Guard-ian) நியமித்தல் அவசியம்.

thanavishnu@gmail.com

ஒரு உயிலில் கீழ்க்கண்ட விடயங்கள் இடம்பெற வேண்டும்:

- நம்பிக்கைக்குரியவரும் செயலாற்றும் திறன் கொண்டவருமான ஒருவரை நடைமுறை நிறைவேற்றுநராக (Executor) தேர்ந்தெடுக்க வேண்டும்.
- யாருக்கு எது கொடுப்பது என்பதை தெளிவாகத் தருவதால் தேவையற்ற வாதங்களையும் பிரதிவாதங்களையும் தவிர்க்கலாம்.
- காலப்போக்கில் குடும்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் - திருமணம், விவாகரத்து, பிறப்பு, மரணம் போன்றவற்றை கருத்தில்கொண்டு, உயிலை அவ்வப்போது புதுப்பித்தல் அவசியம்.

• யார் எதைப் பெற வேண்டும் என்பதைத் தெளிவாக நிர்ணயிக்கவும்:

சில சொத்துகளை அதாவது ஆயுள் காப்புறுதி ஓய்வூதியப் பணம், வங்கிக் கணக்கு போன்றவற்றினை நீங்கள் நேரடியாகவே குறிப்பிட்ட பயனாளிகளுக்கு கொடுத்துவிடுவீர்கள். இவற்றில் கவனிக்க வேண்டிய இரு முக்கிய அம்சங்கள் உள்ளன.

- ஒரு முதன்மைப் பயனாளியை (Primary Beneficiary) நியமிப்பதுடன், அவர் இல்லாத நிலை ஏற்பட்டால் யார் பெற வேண்டும் என்பதையும் (Contingent Beneficiary) தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.
- இந்தப் பயனாளர் தகவல்களை வருடா வருடம் அல்லது தேவையானபோது மீளாய்வு செய்து புதுப்பித்து வருதல் அவசியம்.

• நீண்ட கால பராமரிப்பு மற்றும் இறுதிச் செலவு:

நீங்கள் நீண்டகால மருத்துவப் பராமரிப்பில் இருக்க வேண்டிய சூழல் ஏற்பட்டால், அதற்கான செலவுகளை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். அதேபோல், இறுதிச்சடங்கு மற்றும் தொடர்புடைய செலவுகளுக்கும் முன்கூட்டியே திட்டமிடல் அவசியம்.

- நீண்கால பராமரிப்புக்கான காப்புறுதி பெற்றுக் கொள்வது.
- ஒரு குறிப்பிட்ட தொகையை தனியாக ஒரு வங்கிக் கணக்கில் வைத்திருப்பது.
- அதற்கென தனியான ஆயுள் காப்புறுதியை ஏற்படுத்தி, மரணத்திற்குப் பின் அச்செலவுகளை சமாளிக்கும் வகையில் திட்டமிடுதல்.

இவ்வாறு முன் எச்சரிக்கையுடன் திட்டமிட்டு இருப்பது, உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்கு பொருளாதார சுமையை குறைக்கும் வகையில் பெரிதும் உதவும்.

• Trust என்னும் நம்பிக்கை அமைப்பை ஏற்படுத்தல்:

'Trust' எனப்படும் நம்பிக்கை அமைப்பு, உங்கள் சொத்துகளை எப்போது, யாருக்கு, எவ்வாறு வழங்க வேண்டும் என்பதைக் கட்டுப்படுத்த உதவுகிறது. இது நீங்கள் விட்டுச் செல்லும் சொத்துகளை முறையாகப் பரிமாறுவதுடன், வரிச்சலுகைகள் பெறவும் கடனாளர்களின் கோரிக்கைகளிலிருந்து பாதுகாக்கவும் நீண்டகால சட்ட நடைமுறைகளைத் தவிர்க்கவும் உதவக்கூடும்.

உதாரணமாக:

- Revocable Living Trust (திரும்பப் பெறக்கூடிய வாழ்நாள் நம்பிக்கை அமைப்பு): உங்கள் வாழ்நாளில் தேவைக் கேற்ப மாற்றங்களையும் ரத்துசெய்தலையும் செய்ய முடியும். மரணத்திற்கு பின், சொத்துகள் எளிதாகவும் சிக்கலின்றியும் வாரிசுகளுக்கு சென்றடையும்.
- Irrevocable Trust (திரும்பப் பெற முடியாத நம்பிக்கை அமைப்பு): ஒருமுறை அமைத்த பிறகு எளிதில் மாற்ற முடியாது. ஆனால் இது சொத்துகளை தனிப்பட்ட உரிமையிலிருந்து பிரித்து, கடனாளர்களிடமிருந்தும் சில வரிச் சுமைகளிலிருந்தும் பாதுகாப்பு அளிக்க உதவும்.
- Special Needs Trust (சிறப்பு தேவையுடையோருக்கான நம்பிக்கை அமைப்பு): தன்னிச்சையாக வாழ முடியாதவர்களுக்கு நிதி ஆதரவை வழங்குவதுடன், அவர்கள் அரசாங்க உதவிகளைத் தொடர்ந்து பெறுவதற்கும் உதவும்.

இத்தகைய நம்பிக்கை அமைப்புகளை அனுபவமுள்ள வழக்கறிஞர்களின் உதவியுடன் உருவாக்குவது சிறந்தது. அப்போது, பயனாளர்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி முழுமையான பயனைப் பெறுவார்கள்.

• உங்கள் விருப்புகளில் தெளிவாயிருங்கள்:

எந்த ஒரு சட்ட நடவடிக்கையும் பூரணமான பயனை பெறுவதற்கு உங்கள் விருப்பு வெறுப்புகள் தெளிவாக இருக்க வேண்டும். அதை பெறுதற்கு முழுக்குடும்பத்துடன் அமர்ந்து உங்கள் விருப்பு வெறுப்புகளை தெளிவுபடுத்துங்கள். உங்கள் உயிலுடன் உங்கள் எண்ணங்களை இணையுங்கள். கடிதம் மூலமாக, மரணத்துக்கு முன்னமே உங்களுக்கு செயற்பட முடியாத நிலை வந்தால் உங்களுக்காகச் செயற்பட ஒருவரை நியமியுங்கள்.

• உங்கள் உயிலை காலத்துக்கு காலம் மீளாய்வு செய்யுங்கள்:

ஒரு விடயம் மட்டுமே நிரந்தரமானது - அதாவது மாற்றமே நிரந்தரம். எனவே, காலத்துக்குக் காலம் உங்கள் திட்டங்களை மீளாய்வு செய்வது மிக அவசியம். அதற்கான சில காரணங்கள்:

- நீங்கள் மேலதிகமாய் சேமித்திருக்கலாம்.
- நீங்கள் இடமாற்றம் செய்திருக்கலாம்.
- உங்கள் குடும்பத்துக்குள் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம்.


இறுதியாக கவனிக்க வேண்டியது: மரணம் தவிர்க்க முடியாத ஒன்றாகும். அது வரும்வேளையில் ஆதங்கமின்றி இருக்க, முன்கூட்டியே திட்டமிடுதல் அவசியம். தரமான நிதி ஆலோசகரின் மற்றும் திறமையான வழக்கறிஞரின் உதவியை நாடி, வாழ்க்கையின் தவிர்க்க முடியாத நிலைக்கு தயாராக இருங்கள்.



senthuran.p@thaiveedu.com

குரு அரவிந்தன்

ஆர்டெமிஸ் இரண்டின் பயணம்



ஆர்டெமிஸ் இரண்டின் பயணம் என்றால் என்ன என்று நீங்கள் நினைக்கலாம். சுமார் 50 வருடங்களுக்கு மேலாகத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட நாசாவின் சந்திரப் பயணத்திட்டத்தின் அடுத்த கட்டம்தான் ஆர்டெமிஸ் திட்டமாகும். இதற்கு அடுத்த கட்டமான செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்வதற்கான வழியில் தங்குமிடமாகச் சந்திரனைப் பயன்படுத்தலாமா என்பதைப் பற்றிய ஆய்வுகளும் இதில் அடங்கும்.

1969 ஆம் ஆண்டு அப்பல்லோ 11 பூமியிலிருந்து புறப்பட்டு மனித வரலாற்றை என்றென்றும் மாற்றியது. மனிதகுலம் அதன் சொந்த கிரகத்தை விட்டு வெளியேறி வேறொரு உலகில் நடக்க முடியும் என்பதை இந்த பணி நிரூபித்தது. மைக்கேல் காலின்ஸ் மேலே சுற்றி வந்தபோது, நீல் ஆம்ஸ்ட்ராங் மற்றும் பஸ் ஆல்ட்ரின் சந்திரனில் காலடித் தடங்கள் பதித்தார்கள். விண்வெளி சார்ந்த ஆய்வு, தைரியம் மற்றும் தொழில்நுட்ப சாதனையின் அடையாளமாக இது மாறியது. 1969 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி அப்பலோ – 11 விண்கலத்தில் சந்திரனுக்குச் சென்ற மூவரில் நீல் ஆம்ஸ்ரோங் என்ற அமெரிக்கர் சந்திரனில் முதன் முதலாகக் கால் பதித்து ஒரு சாதனையை ஏற்படுத்தி இருந்தார். முக்கியமான சில நிகழ்ச்சிகளில் எதையுமே முதன் முதலாக யார் செய்கிறார்களோ, அவர்கள் சாதனையாளர்களாக மாறிவிடுகின்றார்கள். இதனால் உலகம் அறிந்தவர்களாகிறார்கள்.

இந்தத் திட்டம் 1972 ஆம் ஆண்டில் அப்பல்லோ சகாப்தம் முடிவடைந்ததிலிருந்து மீண்டும் முதல் முறையாக அமெரிக்கர்களை சந்திரனின் மேற்பரப்புக்குக் கொண்டு செல்வதற்கான நாசா நிறுவனத்தின் திட்டமாகும். அப்பலோ சகாப்தம் என்பது முதன் முதலாக ஏற்படுத்தப்பட்ட சந்திரனில் தரை இறங்கும் திட்டமாகும். இது பல உயிர்த் தியாகங்களுடன் 12 விண்வெளி வீரர்களைச் சந்திரனில் தரை இறக்கி வெற்றிகரமாக செயற்பட்டது. அதன் தொடர்ச்சியாக 50 வருடங்களின் பின் ஆர்டெமிஸ் திட்டம் நாசா நிறுவனத்தால் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி விண்வெளி வீரர்கள் இல்லாத ஆர்டெமிஸ்- 1 என்ற விண்கலம் 2022 நவம்பர் மாதம் 16 ஆம் திகதி விண்வெளிக்கு அனுப்பப்பட்டு வெற்றிகரமாகத் திரும்பியிருந்தது.



இதன் அடுத்த கட்டமாக ஆர்டெமிஸ் இரண்டு 2026 ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி விண்வெளி வீரர்களுடன் சந்திரன் நோக்கி ஏவப்பட்டது. ஆர்டெமிஸ்- 2 இல் பயணித்த விண் வெளி வீரர்கள் சந்திரனைச் சுற்றி வந்தார்களே அல்லாமல் சந்திரனில் தரையிறங்கவில்லை. மாறாக மேற்பரப்புக்கு மேலாக எதிர்கால பயணங்களுக்கான அமைப்புகள் மற்றும் வன்பொருளைச் சோதிக்க 10 நாள் பயணத்தில் சந்திரனை வட்டமிட்டார்கள். லாக்ஹீட் மார்ட்டின் உருவாக்கிய இந்த ஓரியன் காப்ஸ்யூல் விண்கலம், சந்திரனின் தொலைதூரப் பக்கத்திற்கு அப்பால் சுமார் 4,700 மைல்கள் பயணித்தது. பூமிக்குத் திரும்புவதற்கு முன்பு இதன் பயணிகளை விண் வெளியில் இதுவரை செல்லாத மிகத் தொலைதூரத்திற்கு அழைத்துச் சென்றது.


இந்த ஆர்டெமிஸ் இரண்டில் பயணித்தவர்களில் பால்டி மோரைச் சேர்ந்த நாசா விண்வெளி வீரர் ரீட் வைஸ்மேன், கடைசியாக 2014 இல் ரஷ்ய சோயுஸ் ராக்கெட்டில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்குச் சென்று திரும்பியிருந்தார். கலி போர்னியாவின் போமோனாவைச் சேர்ந்த விமானியான நாசா விண்வெளி வீரர் விக்டர் குளோவர், 2020 ஆம் ஆண்டு விண் வெளி நிலையத்திற்கு ஸ்பேஸ் எக்ஸ் பயணத்தில் சென்று திரும்பியிருந்தார். மிச்சிகனில் உள்ள கிராண்ட் ராபிட்ஸைச் சேர்ந்த நாசா விண்வெளி வீரர் கிறிஸ்டினா கோச், மிச்சி கனில் உள்ள மிஷன் நிபுணர், பல விண்வெளி நிறுவன சாதனைகளைப் படைத்துள்ளார் மற்றும் 2019 இல் சோயுஸ் ஐஎஸ்எஸ் பயணத்தில் விண்வெளி சென்று திரும்பியிருந்தார். கனடிய விண்வெளி நிறுவன விண்வெளி வீரர் ஜெர்மி ஹேன்சன், முதல் முறையாக விண்வெளிக்குச் செல்லும் மற்றொரு நிபுணராவார். கோச் மற்றும் குளோவர் முறையே நாசாவின் சந்திர பயணத்திற்கு நியமிக்கப்பட்ட முதல் பெண் மற்றும் முதல் ஆப்பிரிக்க அமெரிக்கர்களை பிரதிநிதித்து வப்படுத்தினார்கள். கூடுதலாக, ஹேன்சன் சந்திரனுக்கு அருகில் பறந்த முதல் கனடியராகவும், விண்வெளியில் அதி கதூரம் சென்ற கனடியராகவும் மாறியுள்ளார்.

2026 பெப்பிரவரி மாதம் 8 ஆம் திகதி செல்ல இருந்த விண்கலம் தாமதமாகியதற்கு முக்கிய காரணம், எஸ் எல் எஸ் என்று சொல்லப்படுகின்ற ரொக்கெட் புறப்படத் தயாராக இருக்கிறதா என்பதை தரை அணிகள் மதிப்பிடுவ தற்காக நாசாவின் விரிவான ஏவுதள நாள் ஒத்திகை நடை பெற்றது அப்போது ராக்கெட்டின் 212-அடி மைய கட்டத்தில் ஹைட்ரஜன் கசிவு இருப்பதைக் கண்டறிந்ததன் மூலம் இந்தப் பயணம் தள்ளிப் போடப்பட்டது. பின்னர் வடிகட்டப் பட்ட 700,000 கலன் கிரையோஜெனிக் ப்ரொப்பல்லண்ட் மூலம் வாகனத்திற்கு எரிபொருள் நிரப்பும்போது கசிவுப் பிரச்சினை எழுந்தது. ஜனவரி நடுப்பகுதியில் இருந்து ஏவுத ளத்தில் செங்குத்தாக இருக்கும் ராக்கெட்டை, விண்க லங்கள் ஏவுவதற்குத் தயாராக இருக்கும் ஏஜென்சியின் பிர மாண்டமான வாகன திருத்துமிடக் கட்டிடத்திற்கு மீண்டும் கொண்டு செல்ல வேண்டுமா என்பது குறித்து நாசா அதிகா ரிகள் முடிவெடுப்பதில் தாமதமாகியது. திருத்தவேலை பெரிதாக இருந்ததால் மீண்டும் திருத்துமிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, மார்ச் மாதம் 2026 வரை தாமதமானது.

இந்தத் தடைகளை எல்லாம் தாண்டி, ஆர்டெமிஸ் இரண்டு 2026 ஏப்ரல் மாதம் 1 ஆம் திகதி புளோரிடாவின் கேப் கனா வெரலில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து நான்கு விண்வெளி வீரர்களுடன் சந்திரன் நோக்கி ஏவப் பட்டது. ராக்கெட் மூலம் ஏவப்பட்ட ஓரியன் விண்கலம், உள்ளூர் நேரப்படி புதன்கிழமை இரவு விண்ணில் ஏவப் பட்டது. அவர்கள் 10 நாட்களாக விண்வெளியில் பயணித்து நிலவின் மறுபக்கத்தைச் சுற்றி திரும்பி வந்துள்ளனர், இது ஒரு விண்வெளி வரலாற்றுச் சிறப்புமிக்க பயணமாக இருந்தது.

ஆர்டெமிஸ் என்பது, ஆழ்விண்வெளி ராக்கெட்டான ஸ்பேஸ் லான்ச் சிஸ்டம் மற்றும் நிலவைச் சுற்றி வரும் ஓரியன் ஆகிய இரண்டின் முதல் ஆட்கள் பயணிக்கும் சோதனைப் பயண மாகும். எதிர்காலத்தில் நிலவுக்குத் திட்டமிடப்பட்டுள்ள பய ணங்களுக்கு முன்னதாக, 'ஆழ்விண்வெளியின் உண்மையான சூழலில், ஆட்கள் பயணிக்கும்போது விண்கலத்தின் அனைத்து அமைப்புகளும் வடிவமைக்கப்பட்டபடி செயல்ப டுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதே' இதன் நோக்கம் என நாசா குறிப்பிட்டிருக்கின்றது.

ஆர்டெமிஸ் 11 என்று அழைக்கப்படும் இந்த பயணத்தின் குழுவினர், பல சாதனைகளைப் படைத்துள்ளனர்: அவர் களில், மூவர் நிலவை நோக்கிப் பறந்த முதல் பெண், முதல் ஆப்பிரிக்க அமெரிக்க ஆண் மற்றும் முதல் கனடியர் என்ற பெருமைகளைப் பெற்றார்கள். இதுவரை எந்த மனிதரும் சென்றிராத தொலைவான, சந்திரனின் தொலை தூரத்திற்கு அப்பால் சுமார் 4,700 மைல்கள் வரையிலான விண்வெளிப் பயணத்தையும் அவர்கள் மேற்கொண்டார்கள். இந்தப் பய ணத்தின் போது, அப்பல்லோ விண்வெளி வீரர்கள்கூட கண்டிராத, நிலவின் மேற்பரப்பிலிருந்து 6,000 மைல்கள்



"ஆர்டெமிஸ் இரண்டு நான்கு விண்வெளி வீரர்களுடன் 10 நாட்களாக விண்வெளியில் பயணித்து நிலவின் மறுபக்கத்தைச் சுற்றி திரும்பி வந்துள்ளனர், இது ஒரு விண்வெளி வரலாற்றுச் சிறப்புமிக்க பயணமாக இருந்தது."



வரையிலான உயரத்திலிருந்து அதன் மறுபக்கக் காட்சி களை அவர்கள் நேரடியாகப் பார்த்தது மட்டுமல்ல, படங் களும் எடுத்திருந்தனர். திட்டமிட்டபடி எல்லாமே சிறப்பாக நடந்ததால், அவர்கள் பூமிக்குத் திரும்பினார்கள். பயணத் தின்போது, அவர்களது மலசலகூடம் சரியாக இயங்க வில்லை என்ற ஒரு குறை இருந்தது. அதுவும் பின்பு சரிசெய் யப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி ஓரியன் விண்கலம், மணிக்கு சுமார் 25,000 மைல் வேகத்தில், ஏறத்தாழ 5,000 டிகிரி ஃபாரன்ஹீட் வரையிலான கொளுத்தும் வெப்பத்தைத் தாங்கிக்கொண்டு பூமியின் வளிமண்டலத்திற்குள் மீண்டும் நுழைந்தது. வளி மண்டலத்திற்குள் நுழைவதற்குச் சற்று முன்பு, ‘இன்டெக் ரிட்டி’ விண்கலம், ஐரோப்பிய விண்வெளி முகமையால் உரு வாக்கப்பட்ட, இதுவரை ஒன்றாகப் பயணித்த ‘உயிர் காக்கும் அமைப்பான’ ஐரோப்பிய சேவைத் தொகுதியிலிருந்து பிரிந்தது. பொதுவாக வளிமண்டலத்திற்குள் நுழையும் போது, விண்கலம் தகுந்தமுறையில் வடிவமைக்கப்படா விட்டால், வெப்பம் தாங்கமுடியாமல் வெடித்துச் சிதறிவி டவும் வாய்ப்புண்டு. இப்படியான ஒரு சம்பவத்தில் 2003 ஆம் ஆண்டு கொலம்பியா விண்கலம் வெடித்துச் சிதறியது உங் களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

விண்கலம் மீண்டும் வளிமண்டலத்திற்குள் நுழைந்தபோது எதிர்பார்த்தபடியே ஆறு நிமிட இருட்டடிப்பு ஏற்பட்டது. அதன்பின் ‘இன்டெக்ரிட்டி’ என்ற ஓரியன் விண்கலம் பாரா சூட்டுகளின் உதவியுடன் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி, வெள் ளிக்கிழமை அன்று, இரவு 8:07 மணிக்கு அமெரிக்காவின் சான்டியாகோ நகரத்திற்கு அருகே பசிபிக் பெருங்கடலில் பாதுகாப்பாகத் தரையிறங்கியது. இந்த நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் ஒளிபரப்பு செய்திருந்தார்கள்.

விண்வெளி சென்று திரும்பிய விண்கலக் குழுவினரான தளபதி ரீட் வைஸ்மேன், விமானி விக்டர் குளோவர், திட்ட நிபுணர் கிறிஸ்டினா கோச் மற்றும் திட்ட நிபுணர் ஜெர்மி ஹேன்சன் ஆகியோரை அமெரிக்கக் கடற்படைக் குழுவினர் வரவேற்று, பாதுகாப்பாக விண்கலத்தில் இருந்து வெளியேற்றி, ஹெலிகாப்டர் மூலம் யுஎஸ்எஸ் ஜான் பி. முர்தா என்ற கடற்படைக் கப்பலுக்கு அழைத்துச் சென் றார்கள். அதன்பிறகு, அங்கிருந்து டெக்சாஸின் ஹூஸ்டனில் உள்ள நாசாவின் திட்டக் கட்டுப்பாட்டு மையத்திற்கு அவர்களை விமானத்தில் அழைத்துச் சென்றார்கள். இதில் பயணித்த விண்வெளி வீரர்கள் ஆரோக்கியமாக இருப் பதாக அறிவிக்கப்பட்டது.

இனிவரும் காலத்தில், சந்திரனின் தென் துருவத்தில் சந்திர குடியேற்றத்துடன் சந்திரனில் தொடர்ச்சியான மனித இரு ப்பை நிறுவுவதற்காக இப்படியான பயணங்களை நடத்த நாசாவின் ஆர்டெமிஸ்குழு திட்டமிட்டுள்ளது. சந்திரனின் தென் துருவத்தில் காணப்படும் பனிக்கட்டியைப் பிரித்தெ டுத்து, குடிக்கவும், சுவாசிக்கவும், ராக்கெட் எரிபொருளுக்கான ஹைட்ரஜன் மற்றும் ஆக்ஸிஜனின் மூலமாகவும் பயன்படுத் தலாம் என குழுவினர் நம்புகின்றார்கள். சந்திரனின் இந்த தங்குமிடத் திட்டத்தைத் தொடர்ந்து செவ்வாய் கிரகத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

1972 ஆம் ஆண்டுக்குப்பின் அப்பல்லோ 17 இன் பயணத் திற்குப் பிறகு, புவியின் தாழ் சுற்றுப்பாதைக்கு அப்பால் பயணித்த முதல் மனிதர்கள் பயணித்த விண்கலம் ஆர்டெமிஸ் - 2 ஆகும். இந்த விண்கலப் பயணம் எதிர்பார்த் தபடி வெற்றிகரமாக நடைபெற்றதைத் தொடர்ந்து, 2027 ஆம் ஆண்டு ஆர்டெமிஸ் - 3 இன் பயணம் இடம்பெற இருக் கின்றது. ஆர்டெமிஸ் - 3 என்பது, ‘ப்ளூ ஆரிஜின்’ மற்றும் ‘ஸ்பேஸ்எக்ஸ்’ நிறுவனங்களின் நிலவுத் தரையிறங்கிக ளுடன் ஓரியன் விண்கலம் வெற்றிகரமாக இணைய முடியுமா என்பதைச் சோதிக்கும் ஒரு சோதனைப் பயணமாக அமையும். இந்த நிகழ்ச்சி வெற்றிகரமாக நடைபெற்றால், ஆர்டெமிஸ் - 4 இன் பயணம் நடைபெறும்.

2029- ஆம் ஆண்டளவில் ஆர்டெமிஸ் - 4 இன் பயணம் மேற் கொள்ளப்படும். ஆர்டெமிஸ் - 4 இன் பயணத்தின் போது, இரண்டு விண்வெளி வீரர்களை நிலவின் மேற்பரப்பில் தரை யிறக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் பங்குபற்றுவார்கள். நிலவுக்கு முதலில் சென்ற பெண்ணாக அவர் சாதனை படைப்பார். அந்த அதிர்ஷ்டம் யாருக்குக் காத்திருக்கிறதோ தெரியவில்லை. பொறுத்தி ருந்து பார்ப்போம்!



kuruaravindan@thaiveedu.com

சி. நற்குணலிங்கம்

குடும்பமே மனிதவாழ்க்கையின் அத்திவாரம்: சர்வதேச குடும்ப நாள்



tg.theeban@gmail.com

குடும்பம், சமூகக் கட்டமைப்பின் அடிப்படை அலகு. இது தனிநபரின், அவர் சார்ந்த உறவுகளின் ஒருங்கிணைப்பை உணர்த்துகிறது. இந்த உறவுகள் திருமணம், தத்தெடுப்புப் போன்றவற்றால் சாத்தியப்படுத்தப்படுகிறது. கணவன், மனைவி, குழந்தைகள், பெற்றோர் உட்பட அனைத்து உறவுகளும் இணைந்து குடும்பமாகக் கருக் கொள்கிறது. ஒருவருக்கொருவர் ஆதரவாகவும் பராமரிப்புத் தன்மையோடும் சேர்ந்து வாழும் இயல்பொற்றுமையே குடும்பத்தின் முக்கியமான வகிபங்காகும். இங்கு சிறு சிறு சண்டைகள், அதன் பின்னான சமாதானங்கள், கூடியிருக்கும் சந்தோசங்கள் என்பவை அற்புதமான தருணங்களைத் தருவித்துக் கொண்டேயிருக்கும். இக்குடும்ப அமைப்பை அனைத்து உறவுகளும் சங்கமிக்கும் சமுத்திரம் என்று சொல்லலாம்.

குடும்பம் கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என இருவகைப்படும். கூட்டுக் குடும்பம் என்பது ஒரு குடும்பத்தின் வழிவந்த பல்வேறு குடும்பங்கள் ஒன்றாக இணைந்து ஒரே வீட்டில் வாழ்கின்ற அமைப்புமுறைக்கு உரித்துடையது. இங்கு தாத்தா, பாட்டி, தாய், தந்தை, மாமன், மாமி அவர்களது பிள்ளைகள் என உறவுநிலை விரிந்திருக்கும். இக்குடும்ப அமைப்பில் மூத்தவர் ஒருவர் தீர்மானங்களை மேற்கொள்பவராக இருப்பார். அவரது தீர்மானங்களுக்குப் பணிந்து குடும்ப அங்கத்தவர் செயற்படுவார்கள். இவ்வமைப்பு முறையில் விட்டுக் கொடுப்பு, பொறுமை, சகிப்புத்தன்மை, பாதுகாப்புப் போன்றவை மேலோங்கியதாகக் காணப்படும். இங்கு வாழும் அங்கத்தவர்களிடையே முரண்பாடுகள் தோன்றும் போது வீட்டின் மூத்தவர் தலையிட்டு சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்திக் கொடுப்பார். இங்கு மூத்தோருக்கு மதிப்பும் அவர்களுக்கான பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும். அதேவேளை இங்கு வளர்ந்து வரும் குழந்தைகளின் ஆரோக்கியமும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படுவதோடு மூத்தவர்களிடமிருந்து அனுபவத்தையும் அறிவையும் பெற்று சமூகத்தில் ஆளுமையான பிள்ளைகளாக வளர்ந்து வருவது கூடுதல் சிறப்புக் குரியது.

தனிக் குடும்பம் என்பது தாய், தந்தை மற்றும் பிள்ளைகளோடு மட்டும் கூடிய மிகச் சுருங்கிய அலகாகும். இன்று நெருக்கடி மிக்க வாழ்வில் பொருளாதாரத் தேட்டத்தை நோக்கி நகரும் சுழற்சியில் தொழில் நிமிர்த்தம் வெளியிடங்கள், வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து வாழும் நிலை, நவீன வாழ்க்கை முறையை நோக்கித் திரும்பும் மனிதர்களை வெவ்வேறு திசை நோக்கி நகர வைத்துள்ளது. இந்நிலையானது, ஒன்றாகக் கூடியிருந்து; வாழ்வின் ஒவ்வொரு பொழுதுகளையும் இரசித்து வாழ்ந்தோரைத் தனித்தனியாகப் பிரித்து ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள முடியாத வகைக்குக் கொண்டு செலுத்தியுள்ளது. இத்தகைய தனித்த வாழ்க்கை முறையில் கூட்டுக் குடும்பத்தில் இருக்கக்கூடிய அனைத்து வகையான நல்ல அம்சங்களும் இழக்கப்படுகின்றது. பிள்ளைகளைப் பாதுகாப்பாக வளர்க்க முடியாத ஆபத்து இருப்பதுடன், தனிமையில் வாழ்ந்து மன அவஸ்தைக்கு உள்ளாகிப் பல பிள்ளைகள் பிறழ்வு நிலைக்குச் சென்றுவிடும் ஆபத்தும் உள்ளது.

இன்றைய பிள்ளைகள் தமது பெற்றோர்களைத் தவிர வேறு உறவுகளை அறிந்திருக்காமல் தமது உலகத்தைச் சுருக்கி வாழுகின்றார்கள். அவர்கள் மனம் விட்டுப் பேசுவதற்குப் பொருத்தமான ஆளனியினர் இல்லாமல் தனித்திருந்து அலை

> ***"நவீன வாழ்க்கை முறையை நோக்கித் திரும்பும் மனிதர்களை வெவ்வேறு திசை நோக்கி நகர வைத்துள்ள நிலையானது, ஒன்றாகக் கூடியிருந்து; வாழ்வின் ஒவ்வொரு பொழுதுகளையும் இரசித்து வாழ்ந்தோரைத் தனித்தனியாகப் பிரித்து ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ள முடியாத வகைக்குக் கொண்டு செலுத்தியுள்ளது."***

பேசியில் தமது பொழுதைக் கழிப்பதோடு பரந்த அறிவினை வளர்த்துக் கொள்ளாமல் தங்களுக்குள் சுருங்கிக் கொள் கிறார்கள். இது எதிர்காலத்தில் அவர்களைத் தவறான பாதை யைத் தெரிந்தெடுக்க வைக்கும் ஆபத்தை உண்டுபண்ணு வதோடு, மூத்தோரை மதிக்காமை, அவர்கள் வார்த்தை களுக்கு செவிசாய்க்காமை போன்ற மறைநிலைப் பண்புகளை யும் அவர்களுக்குள் விதைக்கக் காரணமாகின்றது. இதனால் எதிர்காலச் சமூகம் பாதாளச் சுழிக்குள் விழுந்து அழிவை நோக்கிச் செல்லும் என்பது நடைமுறை அனுபவங்களிலி ருந்து அறிந்து கொள்ளக் கூடியதே.

இளைய சமூதாயத்தினர் பெரியோர், உறவுகள் இன்றி தனித்து வாழ நேருகின்ற சூழலில் தமது குறைகளையோ, நிறைகளையோ மனம்விட்டு யாரிடமும் பேச முடியாத நிலை யினையும் குறைந்த பட்சம் தான் செய்வது சரியா? தவறா? என்று முடிவெடுக்கத் தெரியாத நிலையினையும் எதிர்கொள் கின்றனர். இதனால் அவர்களது எதிர்காலம் பாதிக்கப்படு கிறது. தவறான வழிகளை நாட நேரிடுகிறது. தனிக்குடித்தனம் என்றால் நம்மை யாரும் தட்டிக்கேட்கமாட்டார்கள், சுதந்திர மாக இருக்கலாம் என்ற பரவலான கருத்தும் நிலவுகிறது. இது முழுக்க, முழுக்கத் தவறு. வாழ்க்கை என்பது வாழ்வது மட் டும் அல்ல, வாழவைப்பதும்தான் என்பதைச் சிறந்த குடும்பம் தான் சொல்லித்தரும்.

பணம் இல்லாதவரை ஆதரவற்றவர் என யாரும் சொல்வ தில்லை. ஆனால் உறவுகள் இல்லாத ஒருவர் எத்தனை கோடி வைத்திருந்தாலும் அவர் ஆதரவற்றவரே. உடன்பிறந் தவர்களால், குடும்பத்தவர்களால் அவ்வப்போது சங்கடங் கள் வரலாம். அதே நேரத்தில் அவர்கள் ஒட்டுமொத்தமாகப் பிறரிடம் நம்மை விட்டுக்கொடுக்கமாட்டார்கள். எவ்வாறாயி னும் குடும்பம் கட்டமைப்பாக இயங்குவதற்கான விழிப்பு ணர்வு ஏற்பட சர்வதேச குடும்பநாள் ஒன்று தேவைதான்.

குடும்ப உறுப்பினர்கள் நவீன வாழ்க்கை முறையின்மீது நாட் டம் கொண்டு பல்வேறு திசைகளில் தங்கள் கிளைகளைப் பரப்பினாலும் அதன் ஆணிவேர் குடும்பம்தான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மனித வாழ்க்கையே இயந்திர மயமாகிப்போன இக்காலத்தில் குடும்பங்கள் சிதைந்து போய் விட்டன. அனைவரையும் நேரில் சந்தித்து மனம்விட்டுப் பேச வைக்கும் நாளை அனுசரிக்கவே சர்வதேச குடும்ப நாள் உரு வாக்கப்பட வேண்டும். விழிப்புணர்வுத் தினங்கள் எத்தனையோ வரலாம். ஆனால் குடும்ப நாள் கொண்டாடும் சூழல் ஆரோக் கியமானதா? என சமூகவியலாளர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அந்தவகையில் வருடம் முழுவதும் பிரிந்து கிடக்கும் உறவு கள் இன்று ஒரு நாளிலாவது நமது வேரினை நினைவுகூர்ந்து அதனை அடுத்த தலைமுறைக்கு எடுத்துக்கூற வேண்டும். தற்போது ஒரு விடுமுறைதினம் அப்பா வட்ஸ்சப்பில், அம்மா போனில். பிள்ளைகள் போஸ்புக்கில் மூழ்கிக்கிடப்பதே வாழ்வு என்றாகிவிட்டது. சந்தோஷமாகக் கூடிப் பேசுவதில்லை. குடும் பத்துடன் சுற்றுலா சென்றாலும் அதை அனுபவிக்காமல் செல்பி எடுத்து ஸ்டேட்டஸ் போடுவதிலேயே குறியாக இருக் கிறோம். இந்த நிலை மாறவேண்டும். குடும்பத்துடன்கூடி களித்திருப்பதே சொர்க்கமான தருணங்கள் என்பதை உணர வேண்டும். இவற்றை வருங்கால சமுதாயத்திற்கு எடுத்துச் செல்வோம், ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கு வோம். இந்நிலை தோற்றம்பெற சர்வதேச குடும்ப நாள் தோற் றம் பெறவேண்டும்.

“இளைய சமூதாயத்தினர் பெரியோர், உறவுகள் இன்றி தனித்து வாழ நேருகின்ற சூழலில் தமது குறைகளையோ, நிறைகளையோ மனம்விட்டு யாரிடமும் பேச முடியாத நிலையினையும் குறைந்த பட்சம் தான் செய்வது சரியா? தவறா? என்று முடிவெடுக்கத் தெரியாத நிலையினையும் எதிர்கொள்கின்றனர்.”



> ***“எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி, உணர்ச்சிப் போராட்டங்களுக்கு மத்தியிலும் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்குத் தளர்வற்ற ஆதரவை வழங்குவது குடும்பக் கட்டமைப்பினால் மாத்திரமே சாத்தியமாகும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவரினதும் மனவலிமையே அக்குடும்பத்தை அடுத்தகட்டத்தை நோக்கி நகர்த்தும் அச்சாணியாகவும், அதன் பலமாகவும் அமைகின்றது.”***

சர்வதேச குடும்ப நாளின் தோற்றம் 1989-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஆரம்பமானது; சமூகத்தின் அடிப்படை அலகான குடும்பக் கட்டமைப்பின் உறுதிப்பாட்டையும் அதன் முக்கியத்துவத்தையும் அங்கீகரித்த ஐக்கிய நாடுகள் சபை, தனது 44/82-ஆவது தீர்மானத்தின் ஊடாக அதற்கான முதற் கட்ட அங்கீகாரத்தை வழங்கியது. இதனைத் தொடர்ந்து 1991-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 46/92-ஆவது தீர் மானம் இவ்முயற்சிகளுக்கு மேலதிக வலுச்சேர்த்ததுடன், இத்தொடர் முன்னெடுப்புகள் 1993 செப்ரெம்பர் மாதம் 20-ஆம் திகதி இறுதி வடிவம் பெற்று, ஒவ்வோர் ஆண்டும் மே மாதம் 15-ஆம் திகதியைச் ‘சர்வதேச குடும்ப நாளாக’ ஐ.நா. பொதுச்சபை உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தியது. இத்தீர்மானத்திற்கு அமைய, 1994-ஆம் ஆண்டில் முதன் முதலாக இந்நாள் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்பட்ட துடன், அன்று முதல் உறவுகளின் உன்னதத்தைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் மே 15-ஆம் திகதி சர்வதேச குடும்ப நாளாக எழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

உலகளாவிய ரீதியில் இன்று வாழ்வாதாரத்தைத் தேடி சுமார் 28.1 கோடி மக்கள் சர்வதேச ரீதியில் புலம்பெயர்ந்தவர்க ளாகக் கணிக்கப்பட்டுள்ளனர். இவர்களது குடும்பங்களினு டைய வாழ்க்கை, இவர்களைச் சார்ந்து உள்ளன. என்னதான் இவர்கள் தங்களது குடும்பத்திற்குரிய வருமானத்தையோ அல்லது பாசத்தையோ அளித்தாலும் அருகில் இல்லாதது அவர்களது குடும்பங்களுக்கு ஒருவித ஏமாற்றமாகவே இருக் கும். இந்நிலையில், எந்த வயதினிலும் யாரும் தனது குடும் பத்தைக் கைவிடாமல் ஆதரவு அளிக்கவேண்டும் என்பதை இத்தினம் வலியுறுத்துகிறது.

ஒவ்வொருவரும் தமது குடும்பத்திற்கு முக்கியத்துவம் வழங் குவதற்கும், நம் வாழ்வில் குடும்பத்தின் பங்கு குறித்து கவ னம் செலுத்துவதற்கும், குடும்பங்கள் இன்று எதிர்கொள்ளும் சவால்களை அடையாளம் காணவும் இந்நாள் சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. அத்துடன், இவ்வுலகம் ஒரே குடும் பம் என்ற உயரிய சிந்தனையை மக்களிடையே விதைப்பதும் இந்நாளின் பிரதான நோக்கமாகும்.

தொழினுட்ப சாதனங்களை தள்ளிவைத்துவிட்டு குடும்ப உறுப்பினர்களுடன் போதுமான நேரத்தைச் செலவிடவேண் டும். அவர்களுடன் அன்றாட நிகழ்வுகளைக் கலந்துரையாடு வதுடன் ஆரோக்கியமான செயற்பாடுகளை செய்யவேண்டும். அவை உறவுகளுக்கு இடையிலான பிணைப்பை வலுப்படுத் துவதோடு மகிழ்ச்சியான தருணங்களை உறுதிப்படுத்தும். ஆனால் இத்தகைய செயல்நிலைகள் குறைந்து வருவதால், இன்று குடும்ப நாள் அவசியமானதாகக் காணப்படுகின்றது. இந்நாளானது குடும்பங்கள் எதிர்கொள்ளும் சமூக, பொருளா தார மற்றும் மக்கள்தொகை சவால்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், அவர்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை ஆதரிக்கும் கொள்கைகளை மேம்படுத்துவதையும் மீளக் கட் டியமைக்க பெரிதும் வழிகோலும்.

ஒவ்வொரு ஆண்டும், குடும்பங்களின் தேவைகளையும் உள் ளடக்கிய, நிலையான சமூகங்களை வடிவமைப்பது தொடர் பான கருப்பொருள்களில் கவனம் செலுத்துகிறது. 2025-இல் தனிநபர் மற்றும் கூட்டுநல்வாழ்வை உறுதிசெய்வதில் வலு வான குடும்ப அமைப்புகளின் முக்கியத்துவத்தை நினைவூட் டும் விதமாகவும், குடும்பங்களிடையே சமத்துவத்தை வளர்க் கவும், வீட்டுப் பொறுப்பு, தொழில்வாய்ப்பு பற்றிக் குடும்பங் களின் பங்களிப்பையும் இந்நாள் உணர்த்தும் முகமாக கருப் பொருள் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 2025-ஆம் ஆண்டின் மையக்கருத்து ‘நிலையான வளர்ச்சிக்கு குடும்பம் சார்ந்த கொள்கைகள்: சமூக மேம்பாட்டுக்கான இரண்டாவது உலக உச்சிமகாநாடு 2025-ஐ நோக்கி’ என்பதாக அமைந்திருந்தது.

இந்நாளுக்குரிய உத்தியோகபூர்வ இலச்சினை அல்லது சின் னமானது, ஒரு பச்சை நிற வட்டத்தினுள் மேல்நோக்கி நீண்டு வீட்டின் கூரையை உருவாக்கும் இதய வடிவிலான உருவம் பொறிக்கப்பட்ட நிலையில் அமைந்துள்ளது. குடும்பத்தின் உன்னதமான அன்பு, அரவணைப்பு மற்றும் பாதுகாப்பு ஆகி யவற்றைப் பிரதிபலிக்கும் ஒரு குறியீடாகவே இச்சின்னம் வடி வமைக்கப்பட்டுள்ளது.

தனிமனித வளர்ச்சியின் அத்தியாவசியக் களமாகவும், பாது காப்பான புகலிடமாகவும் விளங்குவது குடும்பமே ஆகும். எவ்வித எதிர்பார்ப்புகளுமின்றி, உணர்ச்சிப் போராட்டங்க ளுக்கு மத்தியிலும் வாழ்நாள் முழுவதும் ஒருவருக்குத் தளர் வற்ற ஆதரவை வழங்குவது குடும்பக் கட்டமைப்பினால் மாத்திரமே சாத்தியமாகும். குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தவரினதும் மனவலிமையே அக்குடும்பத்தை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தும் அச்சாணியாகவும், அதன் பல மாகவும் அமைகின்றது. ஏனெனில், வளமானதொரு குடும் பமே ஆரோக்கியமான சமூகத்தின் அஸ்திவாரமாகும். எனவே, உறவுகளின் மேன்மையைப் போற்றி, குடும்பங்கள் ஆரோக் கியமாக இயங்குவதை உறுதிசெய்யும் நோக்குடன் இந்தச் 'சர்வதேச குடும்ப நாளை' மனதாரக் கொண்டாடுவோம்.



natkunalingam@thaiveedu.com

இலங்கையில் முத்துக்குளிப்பு

tg.theeban@gmail.com

முத்து என்பது இலங்கையர்கட்கு மிக நெருக்கமான பெயராக உள்ளது. காரணம், இலங்கைத் தீவினை, இந்தியப் பெருங்கடலின் முத்து என்று தான் அழைப்பார்கள். The pearl of the Indian Ocean.

இலங்கையின் முத்துக்குளிப்புப் பகுதி:

இலங்கைத் தீவின் வடமேற்கில் உள்ள நீர்கொழும்பு முதல் மன்னார் வரையிலான கரையோரப் பகுதிகள் முத்துக்குளிப்புக்கு பெயர்போன பகுதிகளாகக் காணப்பட்டன. இலங்கையின் வடமேற்கில் அமைந்துள்ள மன்னார் முதல் அதனை ஒட்டிய கரையோரப் பகுதிகள் நீண்டகாலமாக யாழ்ப்பாண இராச்சியத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன. இப்பகுதியைச் சார்ந்த மன்னார்க் குடாவில் நடைபெற்ற முத்துக்குளிப்புத் தொழிலில், இலங்கையின் வடபகுதியைச் சேர்ந்த கரையோரப் பகுதி மக்களுடன் பெருமளவிலான தமிழ்நாட்டுக் கரையோரப் பகுதி மக்களும் ஈடுபட்டிருந்தனர். தமிழகத்தின் பாண்டிநாட்டுக் கரையோரப் பகுதிகள் பண்டைக்காலம் தொட்டே முத்துக்குளிப்புக்குப் பெயர் போனவை. தென் தமிழ்நாடு, இலங்கையின் வடபகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய முத்துக்குளிப்புப் பிரதேசத்தில் இத்தொழில் சார்ந்த பல தமிழ்ச் சொற்கள் உருவாகிப் பயன்பட்டிருக்கும். இலங்கையில் யாழ்ப்பாண அரசுக்குள் அடங்கியிருந்த மன்னார்க் குடாப் பகுதியில் முத்துக்குளிப்பு இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாண அரசர்களும், தொடர்ந்து வந்த குடியேற்றவாத ஆட்சியாளர்களான போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் முதலியோரும் இதன் மூலம் நல்ல வருவாய் பெற்றுள்ளனர்.

> ***முத்து, இருவாயில் மெல்லுடலி எனும் உயிரினங்கள் உடலினுள் உருவாகின்றன. இவ்வுயிரினங்களின் உடலுள் செல்லும் நுண் துகள்களினால், ஏற்படும் உறுத்தலைக் குறைக்க, இவற்றிலிருந்து சுரக்கும் ஒருவகைப் பொருள், அத்துகள்கள் மீது பூசப்படுகின்றது. இச்செயற்பாடு முத்து எனும் பெறுமதிப் பொருளாக உருவாகின்றது.***





முத்துக்குளிப்புச் சொற்கள்:

முத்துச் சிப்பிகள் விளையும் தளங்கள், முத்துக்குளிக்கும் நுட்பங்கள், முத்துக்குளிப்போர் மற்றும் படகோட்டிகளின் பணி முறைகள், அவர்களின் வாழ்வியல் பழக்கவழக்கங்கள் மற்றும் முத்துகளின் தர நிர்ணயம் என முத்துக்குளிப்புத் துறையின் அனைத்துக் கூறுகளிலும் தமிழ்ச் சொற்கள் செழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முத்து விளையும் இடங்கள்:

பார் - கடலுக்கு அடியில் முத்துச் சிப்பிகள் விளையும் இடம் 'பார்' எனப்பட்டது. இலங்கையில் 19 பார்கள் வரை இருந்துள்ளன. கொண்டச்சிப் பார், சிலாபம் பார், காரைதீவுப் பார், பெரிய காரைப் பார், செவ்வல் பார், மோதரகம் பார், அரிப்புப் பார் என்பன அவற்றுட் சிலவாகும்.

முத்துச்சிப்பி தேடலின் துணைப் பொருட்கள்:

வள்ளம் - வள்ளம் என்பது மரக்கலம். முத்துக்குளிப்பு நடத்துவதற்கு வாய்ப்பான நிலைமைகள் உள்ளனவா என அறிவதற்கு அக்கால அரசாங்கம் 10,000 தொடக்கம் 20,000 வரையான முத்துச் சிப்பி மாதிரிகளை எடுத்து விளைச்சல் அளவை மதிப்பிடுவது வழக்கம். இதற்குப் பயன்பட்ட மரக்கல வகை வள்ளம் எனப்பட்டது. முத்துகள் மறைந்துவிடாத படி, துருத்திக்கொண்டு இருக்கக்கூடிய வளைகள் எதுவும் இல்லாமல் இந்த வள்ளத்தின் உட்புறம் மட்டமாக இருக்கும்.

முத்துகளின் பருமன் வகைப்பாடு:

பெட்டி - முத்துகளை மதிப்பிடுவதில் அவற்றின் பருமனும் முக்கியமானது. முத்துகளை அளவின் அடிப்படையில் பிரிப்பதற்குப் 10 வேறுபட்ட அளவுகளைக் கொண்ட சல்லடைகள் பயன்பட்டன. இது பெட்டி எனப்பட்டது. இவை 3 அங்குல விட்டமும் ஒரு அங்குல ஆழமும் கொண்ட பித்தளையினால் செய்யப்பட்டிருந்தன. அடிப் பக்கத்தில் சம அளவுள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையிலான துளைகள் இடப்பட்டிருக்கும். மிகப் பெரிய துளைகளைக் கொண்ட சல்லடை 20 துளைகளைக் கொண்டிருந்தது. அடுத்து, 30, 50, 80, 100, 200, 400, 600, 800, 1000 ஆகிய எண்ணிக்கையான துளைகளைக் கொண்ட சல்லடைகள் இருந்தன. 1000 துளைகளைக் கொண்ட சல்லடையில் தொடங்கி 20 துளைகளைக் கொண்ட சல்லடை வரை ஒன்றன்பின் ஒன்றாகப் பயன்படுத்தி அரித்து முத்துக்களைப் 10 வகையாகப் பிரிக்க முடியும். இச்சல்லடைகள் மூன்று வகைளாகப் பிரிக்கப்பட்டுப் பெயரிடப்பட்டிருந்தன.

- செவ்வுப் பெட்டி - 20, 30, 50, 80 துளைகளைக் கொண்ட சல்லடைகள்.
- வடிவுப் பெட்டி - 100, 200, 400 துளைகளைக் கொண்ட சல்லடைகள்.
- தூள் பெட்டி - 600, 800, 1000 துளைகளைக் கொண்ட சல்லடைகள்.

செவ்வியத் தன்மை:

முத்துகளின் தரத்துக்கான இன்னொரு அளவீடு அவற்றின் செவ்வியத் தன்மை. இது இரண்டு தன்மைகளில் தங்கியுள்ளது. ஒன்று வடிவம். முத்துகளைப் பொறுத்தவரை இது அவற்றின் கோளத் தன்மை ஆகும். அடுத்தது, வெள்ளி போன்ற மினுக்கம் எனும் இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு முத்துகள் வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

- ஆணி - வடிவம், மினுக்கம் ஆகிய இரு தன்மைகளிலும் நிறைவாக இருப்பது.
- அனதாரி - வடிவம், மினுக்கம் ஆகிய தன்மைகளில் ஏதாவது ஒன்றில் ஓரளவு குறையைக் கொண்டிருப்பது.
- மாசங்கு - வடிவம், மினுக்கம் ஆகிய இரண்டு தன்மைகளிலும் ஓரளவு குறைகளைக் கொண்டிருப்பது.
- கலிப்பு (அல்லது கையேறல்) - வடிவம், மினுக்கம் ஆகிய இரண்டு தன்மைகளிலும் கூடிய குறைகளைக் கொண்டிருப்பது.
- குறுவல் (அல்லது குறள்) - இரட்டை முத்து. சில வேளைகளில் இரண்டு ஆணிகள் ஒட்டியிருப்பது.
- பீசல் - ஒழுங்கற்ற வடிவத்துடன் இரண்டுக்கு மேற்பட்ட முத்துகள் இணைந்திருப்பது.

- மடங்கு - மடிந்த அல்லது வளைந்த முத்துகள்.
- வடிவு - பல்வேறு அளவுகளையும், வகைகளையும் கொண்ட அழகிய தொகுதி.
- தூள் - பொடி போன்ற மிகச் சிறிய முத்துகள்.
- மாசுதூள் (அல்லது மாசிற்றூள்) - பத்தாவது சல்லடையூடாகச் செல்லக்கூடிய தூள் முத்துகள், கறைகளுடன் கூடியவை.
- ஒட்டுமுத்து - சிப்பியின் ஓட்டுடன் ஒட்டி இருக்கக்கூடிய முத்துகள். இவை அரித்துப் பிரிக்கப்படுவது இல்லை. அவற்றின் அளவுகளைக் கருத்தில் எடுக்காமல் இன்னொரு வகையாகக் கொள்ளப்படுகின்றன.

எடை அலகுகள்:

முத்துகளின் பெறுமதியை அறிய, எடையை அளப்பது முக்கியமானது. இலங்கையில் முத்துகள் பின்வரும் அலகுகளில் அளக்கப்பட்டன.

- கழஞ்சு - இது 7.75 ஆங்கில 'கிரெய்ன்' (ஏறத்தாழ 502.19 மில்லிகிராம்) ஒரு பித்தளை எடைக்குச் சமமானது.
- மஞ்சாடி - மஞ்சாடி ஒரு மரத்தின் விதை. முழுமையாக முதிர்ந்த விதைகள் ஏறத்தாழ ஒரே எடை கொண்டவை. 20 மஞ்சாடிகள் ஒரு கழஞ்சு எடைக்குச் சமம்.
- குண்டுமணி - இதுவும் ஒரு விதையே. அளவில் சிறிய இது அரை மஞ்சாடிக்குச் சமம்.
- செவ்வு எடை - தரம் கூடிய முத்துகளின் பண மதிப்பை அறிவதற்கு முத்துகளின் மஞ்சாடி எடையின் இருபடியின் முக்காற் பங்கைச் சந்தை விலையால் பெருக்கி 'மஞ்சாடி எடையின் இருபடியின் முக்காற் பங்கு' செவ்வு எடை எனக் கண்டனர்.

தமிழகம் பண்டைய பாண்டிநாடு முத்துகளுக்குப் பெயர் பெற்றது. அத்துடன் பண்டைய காலங்களில், பாண்டிநாட்டிலிருந்து ஐரோப்பாவுக்கு முத்து ஏற்றுமதி செய்யப்பட்டதை அறியக்கூடியதாக உள்ளது. முத்து பொதுவாக ஒரு இரத்தினக் கல்லாகவே கருதி மதிக்கப்படுகின்றது.



முத்து, இருவாயில் மெல்லுடலி எனும் உயிரினங்கள் உடலினுள் உருவாகின்றன. இவ்வுயிரினங்களின் உடலுள் செல்லும் நுண் துகள்களினால், ஏற்படும் உறுத்தலைக் குறைக்க, இவற்றிலிருந்து சுரக்கும் ஒருவகைப் பொருள், அத்துகள்கள் மீது பூசப்படுகின்றது. இச்செயற்பாடு முத்து எனும் பெறுமதிப் பொருளாக உருவாகின்றது. முத்து ஆர்கனைட்டு, கொண்சியோலின், நீர் என்பன மூலம் உருவாகும், மெல்லிய அடுக்குகள் பொதியப்படுவதனால், அது ஒளி உட்பிரவேசிக்கவும், பிரதிபலிக்கவும் ஏற்ற தன்மையுடையதாகக் காணப்படுகின்றது. கறுப்பு நிறமான முத்துகளும் மிக அருமையாகக் காணப்படுகின்றன.

சிப்பிகளிலே நூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. 2.5 செமீ முதல் ஒரு மீட்டர் வரை வளரக்கூடிய சிப்பிகளின் ஓடு இரு பகுதிகளாலானது. முட்டை வடிவ முத்துகள் தென் பட்டாலும், உருண்டை வடிவ முத்துக்கே அதிக மதிப்பு உள்ளது.

இயற்கை முத்துகளும் வளர்ப்பு முத்துகளும்:


அவிகுலிடி சிப்பிகளிலும் யூனியனி என்னும் மட்டிகளிலும் உற்பத்தியாகும் முத்துகள் இயற்கை முத்துகளாக உருவாகின்றன.

சிப்பியின் உட்புறம் முத்துப்போல் அழகான மெல்லிய பொருள் ஒன்றினால், மூடியிருக்கும். இதை நேக்கர் என்பர். அந்த நேக்கரினால் உருவாக்கிய மணியை உயிருள்ள முத்துச் சிப்பியின் திசுவிற்கும் சிப்பிக்குமிடையே கவனமாக திணிப்பார்கள். அவ்வாறு திணிக்கப்பட்ட சிப்பிகளைக் கூண்டு ஒன்றில் வைத்து, நீரில் பாதுகாப்பாக அமிழ்த்திவிடுவார்கள். நாளடைவில், மணிகள் பொதிக்கப்பட்டு, முத்துகள் உருவாகும்.

முத்துகளின் தரமும் அதன் இயல்புகளும்:

இயற்கை முத்துகளும் செயற்கையாக வளர்க்கப்படும் முத்துகளும் உயிரினங்களால், உருவாக்கப்படுபவை. இதனால், தொழிற்சாலைகளில் உருவாகும் பொருட்களைப் போல் ஒரே சீரான இயல்புகளைக் கொண்டிராது. ஒவ்வொரு முத்தும் விரும்பும், விரும்பாத இயல்புகளின் கலவையாகக் காணப்படுகின்றன.





முத்துகளின் தரம் மற்றும் சந்தை மதிப்பு அவை கொண் டுள்ள ஏழு முக்கிய இயல்புகளைப் பொறுத்தே அமை கின்றன. முதலில் அதன் வகை (இயற்கை அல்லது வளர்ப்பு முத்து), அதன் தரம் மற்றும் உறுதித்தன்மைக்குக் காரண மான நேக்கரின் தடிப்பு ஆகியவை கவனிக்கப்படுகின்றன. முத்தின் அழகைத் தீர்மானிப்பதில் அதன் ஒளிரும் தன்மை மற்றும் மேற்பரப்பின் தன்மை அதாவது கீறல்கள் அற்ற பள பளப்பு ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. மேலும், முத்துகள் அதன் சீரான வடிவம் (முழு உருண்டை, அரை உருண்டை அல்லது சீரற்ற வடிவம்), இயற்கையான நிறம் மற்றும் அதன் விட்டம் எனப்படும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன. இந்த இயல்பு கள் அனைத்தும் ஒருங்கே சிறப்பாக அமையும் போதே ஒரு முத்து 'நித்திலம்' அல்லது 'தரளம்' என அழைக்கப்படும் உயர்தரமான முத்தாகக் கருதப்படுகிறது.

முத்துகளின் வகைகள்:

நன்னீரில் உருவானவை, கடல் நீரில் உருவானவை அவற்றை உருவாக்கிய முத்துச்சிப்பி வகை, உருவான பிரதேசம் என்ப வற்றைப் பொறுத்து, முத்துகளின் இயல்புகள் வேறுபடுகின் றன. அக்கோயா முத்து, தென் கடல் முத்து, தகித்தியன் முத்து, நன்னீர் முத்து என முத்துகளைப் பிரிப்பர். சில அரி தாகக் கிடைப்பதனால், அவற்றின் விலை, மதிப்பு அதிகம்.

பெர்சிய வளைகுடா, பாக் ஜல சந்தி போன்ற பல இடங் களில், விரவிக் காணப்படுகின்றது. பண்டைக்காலத்திலே முத்துகள் விளையும் புகழ் பெற்றிருந்த இடங்களாக அரேபி யக் குடா, இந்தியா, சீனா, ஜப்பான், அவுஸ்திரேலியா பல் வேறு பசிபிக் தீவுகள், வெனிசுலா, மத்திய அமெரிக்கா முதலிய கரைகளை அண்டிய கடற் பகுதிகளைக் கூறலாம்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இயற்கையாக உருவா கும் முத்துகளே பயன்பட்டன. ஆட்கள் நீருக்குள் இறங்கி முத்துச் சிப்பிகளைச் சேகரித்தார்கள். இது முத்துக்குளிப்பு எனப்பட்டது. தமிழ்நாட்டில், தூத்துக்குடி போன்ற கரையோர நகரங்கள் முத்துக் குளிப்புக்குப் பெயர் பெற்றிருந்தன.

முத்து வெண்மணி, ஆரம், தரளம், நித்திலம் எனப் பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. இது அழகு, தூய்மை, சிறப்பு மற்றும் அறிவைக் குறிக்கும் ஒரு பொருளாகிறது. தமிழ்ப் பண்பாட்டில் முத்து என்பது வெறும் ஆபரணம் மட்டு மல்ல; அது தூய்மை, செல்வம் மற்றும் அறிவின் அடையாள மாகக் கருதப்படுகிறது. இதனாலேயே இதற்கு வெண்மணி (வெண்மையான மணி), தரளம் (தூய முத்து), நித்திலம் (சுத் தமான முத்து) போன்ற பல சிறப்பான பெயர்கள் சூட்டப்பட் டுள்ளன. மேலும், முத்துகளால் கோர்க்கப்பட்ட மாலை ஆரம் என்று அழைக்கப்படுகிறது. பக்தி இலக்கியங்களிலும், சங்க காலப் பாடல்களிலும் முத்துகள் உயர்வாகப் பேசப்படுவது அதன் தொன்மையையும் பெருமையையும் பறைசாற்றுகிறது.

குழந்தைகட்கு, 'முத்து' என்னும் பெயரிடுதல்:

பண்டைய காலங்களில், மனிதர்கள் அறிவு வளர்ச்சி பெற்று நாகரிகமடைந்தபோது, அவர்கள் தம் குழந்தைகளுக்குப் பெயரிட்டு அழைத்தனர். குழந்தைப்பேறு இல்லாத தருணங் களில், அவர்கள் தெய்வத்திடம் தஞ்சமடைந்து வேண்டுதல் களைச் செய்தனர்.

அதன்படி, தமக்கு உதவிய கிராம மனிதர்களை, அவர்கள் இறந்த பின்னர், தெய்வங்களாக்கிக் கண்ட மனிதர்கள், அந் தக் கிராம தெய்வங்களின் அருளை வேண்டிப் பெற்ற குழந்தையர்க்கு ஒரு தெய்வப்பெயருடன் கூட்டி இறுதியில் முத்து எனப் பெயர் இடுதலை மரபெனக் கொண்டார்கள்.

பிறக்கும் குழந்தைகளுக்குப் பரவலாகச் சூட்டப்படும் பெய ராகவும், முருகன், விநாயகர், சிவன் போன்ற தெய்வங் களைக் குறிக்கும் பெயராகவும் உள்ளது. முத்து என்ற சொல் தனியாகவோ, அல்லது மற்ற சொற்களுடன் இணைந்தோ வருகிறது. உதாரணமாக முத்துக்குமார், முத்துவேல், முத்து சாமி, காத்தமுத்து எனும் பெயர்களில் பயன்படுத்தப் படு கிறது. முருகப் பெருமானைக் குறிக்கும் 'முத்துக்குமரன்' முத்துவேலன் போன்றவை தெய்வ அருளை வேண்டிச் சூட்டப்படும் பெயராக சுட்டப்படுகின்றது.

நாச்சிமுத்து, காளிமுத்து, மாரிமுத்து, பேச்சிமுத்து, ஆயி முத்து (கோவை அய்யாமுத்து அவர்களின் பெயர்), காத்த முத்து, சுடலைமுத்து, செல்லமுத்து (செல்லாண்டி அம்மன்), நல்லமுத்து (நல்லபுள்ளி அம்மன்), சவரிமுத்து, மரியமுத்து... இப்படித் தொடர்கின்றது.

> ***தெய்வங்களின் பெயர்களோடும், புனித சவேரியார் மற்றும் அன்னை மரியாள் போன்ற புனிதர்களின் பெயர்களோடும் 'முத்து' எனும் சொல்லை இணைத்துச் சூட்டுவது, அந்தத் தெய்வங்களைக் கடலடியில் கண்டெடுத்த அரிய முத்தாகக் கருதிப் போற்றும் தமிழரின் உயர்வான மனப்பாங்கையே காட்டுகிறது.***

முத்து எனும் பெயர்கொண்ட பெரியவர்களின் பெயர்ப்பட்டியல்:

'முத்து' என்ற சொல் தமிழ்ப் பெயர்களில் வெறும் அழகிற் காக மட்டுமல்லாமல், குலதெய்வ வழிபாட்டுடனும், வரலாற்று ஆளுமைகளுடனும் ஆழமாகப் பின்னிப் பிணைந்துள்ளது. நாஞ்சில் நாட்டின் சொரிமுத்து ஐயனார் பெயரிலிருந்து தழுவி வைக்கப்பட்ட பெயர்கள் தொடங்கி, கம்யூனிஸ்ட் தலைவர் ப. ஜீவானந்தம் அவர்களின் இயற்பெயரான சொரி முத்து வரை இதன் தாக்கம் நீள்கிறது. சுதந்திரப் போராட்ட வீரரும் எழுத்தாளருமான கோவை அய்யாமுத்து அவர் களின் உண்மையான பெயர், 'ஆயி' என்னும் குலதெய்வத் தைக் குறிக்கும் ஆயிமுத்து என்பதாகும். வர்மக்கலை ஆராய்ச்சியாளர் ஜேம்ஸ் ஒதிமுத்து, கவிஞர் வைரமுத்து (வைரவன் / வடுகமுத்துவின் தழுவல்) எனப் பல ஆளுமை கள் இப்பெயரைத் தாங்கியுள்ளனர். மேலும், காளிமுத்து, பேச்சிமுத்து, நாச்சிமுத்து, மாரிமுத்து, காத்தமுத்து மற்றும் பலவேசமுத்து போன்ற பெயர்கள், சிறுதெய்வ வழிபாட்டை யும் தமிழர் குல அடையாளத்தையும் பறைசாற்றும் தொன் மையான பெயர்களாக இன்றும் நிலைத்து நிற்கின்றன.

முத்து என விகுதிபெற்ற வேறு பெயர்கள்:

தமிழர் பண்பாட்டில் பெயர்கள் என்பவை வெறும் அடையா ளங்கள் மட்டுமல்ல, அவை அந்தந்தப் பகுதி சார்ந்த குல தெய்வங்களின் ஆசீர்வாதமாகவே கருதப்படுகின்றன. குறிப் பாக, 'முத்து' என்ற விகுதியுடன் முடியும் பெயர்கள் பெரும் பாலும் கிராமியத் தெய்வங்களின் பெயர்களோடு இணைந்தே அமைகின்றன. திருநெல்வேலிப் பகுதிகளில் வழிபடப்படும் சுடலைமாடனின் அருளைப் பெறச் 'சுடலைமுத்து' என்றும், செல்லாண்டி அம்மன், மாரியம்மன், காளியம்மன், பேச்சி யம்மன், நாச்சியம்மன் போன்ற பெண் தெய்வங்களின் பெயர் களைத் தழுவி முறையே செல்லமுத்து, மாரிமுத்து, காளி முத்து, பேய்ச்சிமுத்து, நாச்சிமுத்து என்றும் பெயர்கள் சூட் டப்படுகின்றன. இதேபோல, கொங்கு மண்டலத்தின் மோரூர் நல்லபுள்ளி அம்மனை நினைவு கூரும் வகையில் நல்ல முத்து என்ற பெயர் வழங்கப்படுகிறது. இவ்வாறாக, தெய்வங் களின் பெயரோடு 'முத்து' எனும் சிறப்பினைச் சேர்த்துச் சூட்டுவது, அத்தெய்வத்தின் மீதான பக்தியையும் தமிழரின் பண்பாட்டுத் தொன்மையையும் இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

கிறீஸ்துவத்தில் சைவப் பேரிடு மரபு:

தமிழர் பெயரிடல் மரபில் 'முத்து' எனும் சொல் சமய எல்லை களைக் கடந்து அனைத்துத் தரப்பினராலும் போற்றப்படும் ஒரு பொதுவான பண்பாட்டு அடையாளமாகத் திகழ்கிறது. இந்து சமயச் சிறுதெய்வ வழிபாட்டில் சுடலைமாடன், மாரியம்மன், காளியம்மன் போன்ற தெய்வங்களின் பெயர்கள் சுடலைமுத்து, மாரிமுத்து, காளிமுத்து என உருப்பெற்றது போலவே, கிறீஸ்தவச் சமயப் பண்பாட்டிலும் இப்பெயர்கள் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. குறிப்பாக, புனித சவேரியார் (St. Francis Xavier) மீதான பக்தியால் சவரி முத்து என்றும், அன்னை மரியாளின் தூய்மையைச் சிறப் பிக்கும் வகையில் மரியமுத்து என்றும் பெயர்கள் சூட்டப்படு கின்றன. இவ்வாறாக, தத்தமது சமயப் பெரியவர்களையும் தெய்வங்களையும் 'முத்து' என உயர்த்திப் போற்றும் இப் பெயரிடல் முறை, தமிழரின் வாழ்வியலில் மதம் மற்றும் மொழிக்கு இடையேயுள்ள ஆழமான பிணைப்பையும், புனித மானவற்றின் மீதான தமிழர்களின் மதிப்பையும் அழகாகப் பறைசாற்றுகிறது.

முடிவுரை:

இலங்கையின் முத்துக்குளிப்பு என்பது வெறும் தொழில் மட் டுமல்ல; அது நம் தேசத்தின் பெருமைமிகு அடையாள மாகும். 'கிழக்கின் முத்து' என்று இலங்கை அழைக்கப்படுவ தற்கு மன்னார் வளைகுடாவின் இந்த முத்துகளே முக்கிய காரணம். 20-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இயற்கை மாற்றங்கள் மற்றும் அதீத அறுவடை காரணமாக இந்தத் தொழில் வீழ்ச்சியடைந்தாலும், இன்றுவரை இலங்கையின் வரலாற்றுப் பதிவுகளில் முத்துக்குளிப்பு ஒரு பொற்கால மாகவே கருதப்படுகிறது. பழந்தமிழர் வாழ்வியலில் 'முத்து குளித்தல்' வீரமிக்கத் தொழிலாக மலர்ந்தது என்பதும் மறுப் பதற்கல்ல. கொற்கை போன்ற துறைமுகங்களில் கடலடியில் மூழ்கி முத்துகளைச் சேகரித்த தமிழர்களின் உழைப்பு, உல கெங்கும் தமிழகத்தின் புகழைக் கொண்டு சென்றது. இத் தகைய வரலாற்றுப் பின்னணியும், ஆர்கனைட்டு மற்றும் கொண்சியோலின் கலவையால் உண்டாகும் முத்தின் தூய்மை யுமே, அதன் பெயரைப் பண்பாட்டு அடையாளமாக மாற்றி யது. தெய்வங்களின் பெயர்களோடும், புனித சவேரியார் மற்றும் அன்னை மரியாள் போன்ற புனிதர்களின் பெயர்க ளோடும் 'முத்து' எனும் சொல்லை இணைத்துச் சூட்டுவது, அந்தத் தெய்வங்களைக் கடலடியில் கண்டெடுத்த அரிய முத்தாகக் கருதிப் போற்றும் தமிழரின் உயர்வான மனப்பாங் கையே காட்டுகிறது. இவ்வாறு, கடலின் ஆழத்தில் தொடங் கும் முத்தின் பயணம், தமிழர்களின் பெயர்களிலும் பக்தி யிலும் கலந்து என்றும் அழியாத ஒரு மரபாக நிலைத்து நிற்கிறது.

Pushpa.Christy@thaiveedu.com



ஓர் ஈழ நாட்குறிப்பு - 3



- ஓவியர் ஜீவா

1991 ஜூலை 10 அன்று 5000-த்திற்கும் அதிகமான புலிப்படையினர் 600 பேர் கொண்ட ஆனையிறவு படைத் தளத்தை முற்றுகையிட்டனர். இருள் கவியத்தொடங்கிய நேரத்தில் தாக்குதல்கள் ஆரம்பித்தன. ஆயுதங்களும், வெடி குண்டுகளை நிரம்பிய ஒரு புல்டோசர் போன்ற ஒரு டாங்கி, படைத்தளத்தின் தெற்கு வாயிலை நோக்கி முன்னேறியது. அந்த புல்டோசர் தாக்குதலைத் தொடங்கினால் ஆனையிறவு முகாமும் அழிக்கப்படும், முக்கியமான யாழ்ப்பாண தீபகற் பத்தின் நுழைவாயில் அடித்து உடைக்கப்பட்டு திறக்கப் படும் அபாயம் சிங்கள ராணுவத்திற்கு இருந்தது. அனை வரும் செய்வதறியாது திகைத்து நிற்கும்பொழுது லான்ஸ் கார்ப்பொரல் குலரத்னே இரண்டு கைகளிலும் இரண்டு கிர னேட் குண்டுகளை ஏந்திக்கொண்டு புல்டோசர் மீது தாவி ஏறினான். சுற்றியிருந்த புலிகளின் துப்பாக்கி முழக்கங்களுக் கிடையே புல்டோஸருக்குள் இரண்டு குண்டுகளையும் வீசினான். பெரும் ஓசையுடன் வெடித்தது புல்டோசர். உள்ளே இருந்த வர்களுடன் குலரத்னேயும் மடிந்து போனான். அந்த புல்டோ சர் மட்டும் வெற்றிகரமாக உள்ளே நுழைந்திருந்தால் பெரும் சேதம் விளைவது மட்டுமல்ல, சரித்திரத்தின் போக்கே அன்று மாறியிருக்கும். குலரத்னாவை தங்கள் பெருமைச் சின்னமாக கருதிய சிங்கள ராணுவத்தினர் அவனுக்கு ஒரு சிலை வடித்து எழுப்பியிருக்கிறார்கள். புல்டோசர் சிதைந்த இடத்திலே இன் றும் அதை ஒரு நினைவுச் சின்னமாக வைத்திருக்கிறார்கள்.

இந்த பயணத்தில் ஒரு முக்கியமான நிகழ்வு திடீர் நிகழ்ச் சியாக சேர்ந்து கொண்டது. விவேகானந்தனின் தங்கை அவர் பணி புரிந்த பள்ளியில் இருந்து ஓய்வு பெறும் நிகழ்வு அது. எங்களையும் அழைத்திருந்தார்கள். மதிய வேளை விருந்து டன் விழா. கிளி/ பரந்தன் அரசு தமிழ் கலவன் பாடசாலை மிகச் சிறிய பள்ளி. கோ எஜுகேஷனுக்கு அழகான தமிழ்ப் பெயர் 'கலவன்'! குறைந்த அளவே, அதாவது 36 மாணவ மாணவிகள். முதலாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரை. ஆசிரியர்களும் அதே போலத்தான், குறைந்த எண்ணிக்கை யில். அசைவ விருந்தை ஆசிரியர்களே பரிமாறினார்கள். போருக்கு பிறகு குறைந்த அளவே மாணவர்கள் இருந்தாலும் இந்த தமிழ் பாடசாலை தொடர்ந்து நடைபெறுவது அவர்க ளுக்கெல்லாம் ஒரு பெருமை. பள்ளியை சுற்றிப் பார்த்தேன். நோட்டீஸ் போர்டில் நவராத்திரி தின பூசை ஒழுங்குகள் என்று 11 நாட்களை பிரித்து பூசை விவரங்கள், எந்த ஆசிரி யர் குறிப்பிட்ட தினத்தில் பொறுப்பு என்ற விவரங்கள் இருந் தன. ஆச்சரியமாக இருந்தது. அங்கிருந்த ஒரு கல்வெட்டு என் கண்ணைக் கவர்ந்தது, பெருமையும் தந்தது. இந்திய அரசு மற்றும் இலங்கை அரசுகளின் முத்திரையோடு 'இந்த பாடசாலைக் கட்டடம் இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய மக்களின் நிதியுதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது' என்ற வாசகம் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் செத்துக்கப்பட்டிருந்தது! விருந்துக்கு பிறகு ஆசிரியர் அறை யில் ஒரு பிரிவுபசார விழா. அனைத்து மாணவ மாணவிகளும் குழுமியிருக்க ஆசிரியை யுவராணியின் மேன்மைகளை சக ஆசிரியர்கள் பகிர்ந்து கொண்டனர். நாணத்தோடு யுவராணி புகழுரைகளை ஏற்றுக்கொண்டார். கனடாவிலிருந்து யுவராணி







tg.theeban@gmail.com



டீச்சரின் அண்ணன் பேராசிரியர் விவேகானந்தன், மற்றும் இந்தியாவிலிருந்தும் எங்களைப் போன்ற நண்பர்கள் வந்து சிறப்பித்ததில் அனைவருக்கும் மகிழ்ச்சி. யுவராணிக்கும் அவர் கணவர் சத்தியசீலனுக்கும் சக ஆசிரியர்கள் சிறப்பு செய்தனர். விழாவின் சிறப்பம்சம் யுவராணியின் பேத்தி 6 வயது தஸ்விரா நிகழ்த்திய அருமையான நடன நிகழ்ச்சி!

அடுத்த நிகழ்ச்சியாக நெல்லியடி சென்று ரொறென்ரோவிலிருந்து வந்திருக்கும் நண்பர் பொன் பாலராஜனை சந்திக்கலாம் என்று விவேகானந்தன் சொன்னதால் பயணம் தொடர்ந்தது. பாலராஜன் அவர்கள் சென்ற வருடம் இந்தியா வந்தபோது கோவையில் என்னை சந்தித்த இனிய நண்பர். கனடாவில் ஐ டி துறையில் ஆலோசகராக இருப்பவர். நான் இலங்கை புறப்படும்போதே என்னை தொலைபேசியில் அழைத்து நாம் இலங்கையில் சந்திப்போம், ஒரு முக்கிய மான நிகழ்வில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் சொல்லியிருந்தார். தாய்வீடு கூடுகைக்கும் அவர் ஒரு அழைப் பாளர். அவருடைய சகோதரி தங்கியிருக்கும் வீட்டில் அனை வரும் சந்தித்தோம். எங்களுடைய பழைய நண்பர் கங்கா தரன் கந்தசாமியும் நெல்லியடிதான். இங்கிருந்து போர் சம யத்தில் பல இன்னல்களுக்கிடையே கனடா சென்று இப்போது அங்கேயே வாழ்பவர். இன்னும் திரும்பி இலங்கைக்கு வர வில்லை. எந்த விஷயத்தையும் முழுமையாக தெரிந்து கொள்ள விழைபவர். எதையும் தெளிவாக பேசுபவர் கங்கா. அவரு டைய வீட்டையும் பார்க்க நான் ஆவல் கொண்டதால் அங்கே அழைத்துச் சென்றனர். அங்கே இப்போது அவருடைய தமக் கையார் வாழ்கிறார். எங்களை பார்த்தவுடன் அவருக்கு பெரு மகிழ்ச்சி. அங்கிருந்தே கங்காவுக்கு வீடியோ கால் செய்ய முயற்சித்தபோது தொடர்பு கிட்டவில்லை. பெரும்பாலும் முதி யவர்கள் தனியாக வாழ்கிறார்கள். ஆட்களேயில்லாமல் தூசி படிந்து சிதிலமாகிக்கொண்டிருக்கும் சில வீடு களை பால ராஜன் காண்பித்தார். அடுத்த வீதியில் தான் படித்த பள்ளிக் கும் அழைத்து சென்றார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் அந்த சிறிய ஊரில் முக்கிய சாலையில் இருக்கிறது. அங்கு சென்றவுடன் தான் அந்த பள்ளியின் முக்கியத்துவம் எனக்கு தெரிந்தது. போர் சமயத்தில் இலங்கை ராணுவப்படை, வடமராட்சி நடவடிக் கைக்கு பிறகு அந்த பள்ளியை தன் ராணுவ முகாமாக மாற் றியமைத்து ஆயுதங்களை வைக்கும் கிடங்காகவும் பயன்ப டுத்திக்கொண்டிருந்தது. சுற்றிலும் கம்பி வேலியுடன் பலத்த பாதுகாப்புடன் இந்த முகாம் இயங்கிக்கொண்டிருந்தது. விடு தலைப்புலிகள் இந்த முகாமை தகர்க்க திட்டமிட்டபோது அதை செயற்படுத்த தற்கொலைப்படை வீரனாக முன் வந்தவர் கேப்டன் மில்லர். இவரது இயற்பெயர் வல்லிப்புரம் வசந்தன். தமிழர்களுக்கெதிரான கருப்பு யூலை கலவரங்களின்போது தன்னை புலிப்படையில் இணைத்துக்கொண்டவர். படை வழக்கப்படி இவருக்கு தந்த புனைப்பெயர்தான் மில்லர்! வெடிகுண்டுகள் நிறைந்த ஒரு டிரக்கை ஓட்டிச்சென்று முகா மில் நேரடியாக மோதி குண்டுகளை வெடிக்கச் செய்து, அதை முற்றிலுமாக தகர்த்து அழிக்கத் திட்டம்! செயற்படுத்து வதற்கு முன் தன் குடும்பத்தையும் நண்பர்களையும் சென்று சந்திக்கிறார். அவர்களுக்கெல்லாம் ஒரு ஐஸ் கிரீம் விருந்தும் வைத்துவிட்டு நான்கைந்து நாட்கள் கழித்து திட்டத்தை நிறைவேற்ற தயாராகிறார்.

யூலை 5, 1987 அன்று வண்டியை நேராக முகாமை நோக்கி செலுத்தும்போதே காவலுக்கு இருந்த ராணுவ வீரர்கள் சுடுகி றார்கள். அப்போதே மில்லர் இறந்துவிட்டாரா என்று தெரிய வில்லை, உள்ளே சென்ற வண்டி வெடித்து பெரும் அழிவை ஏற்படுத்தியது. பின்னால் தொடர்ந்த புலிகள் தாக்குதலை தொடர்ந்து முகாமைக் கைப்பற்றினார்கள். டிரக் வெடித்த இடம் ஒரு பஸ் நிறுத்தக்கூடிய அளவுக்கு ஒரு பெரும் குழியை ஏற்படுத்தியதாம். இந்த நிகழ்வுக்கு பின் மறைந்த மில்லருக்கு கேப்டன் பதவி வழங்கப்பட்டது. புலிகள் அதே இடத்தில் ஒரு நினைவாலயம் எழுப்பி மில்லருக்கு தங்க நிறத்தில் ஒரு சிலையும் வைத்தனர். பின்னர் இலங்கை ராணுவம் மீண்டும் வடமராட்சி பகுதியை கைப்பற்றியபோது நினைவாலயம் சிதைக்கப்பட்டது. சிலையை மக்கள் எடுத்துச் சென்று மறைத்து வைத்தனர். 2002-இல் நார்வீஜிய போர் நிறுத்த ஒப் பந்தத்தின்போது மீண்டும் நினைவுச் சின்னமும் சிலையும் நிறுவப்பட்டன. மீண்டும் இரு முறை இலங்கை ராணுவத்தால் அந்த நினைவுச் சின்னம், சிலை ஆகியவை தகர்க்கப்பட்டன. இப்போது அந்த இடத்தில் ஒரு கற்குவியல் நினைவுச்சின்ன மாக நீல வண்ணங்களில் தோய்ந்து நிற்கிறது!

அந்த இடத்தில் நின்று இந்த நிகழ்வுகள் பற்றி அறியும்போது மெய் சிலிர்த்தது. இன்று தகர்ந்து போன கட்டடம் மீண்டும்





எழுந்து நின்று பாடசாலையாக நடைபெற்றுக்கொண்டிருக் கிறது!

அங்கிருந்து தொண்டைமானாறு செல்வசந்நிதியான் கோவி லுக்கு அழைத்து சென்றனர். நல்ல விசாலமான சுற்றுப்புறத் தினுள் இருந்தது அந்த முருகன் கோவில். அங்கு ஒரு திரு மண நிகழ்வும் நடைபெற்றுக்கொண்டிருந்ததை வேடிக்கை பார்த்தேன். ஆக இலங்கை வந்து ஒரு திருமணத்திலும் கலந்து கொண்ட ஆனந்த உணர்வு எழுந்தது. வல்லிபுரம் விஷ்ணு கோவில் பெரிய கோபுரம், சுற்றுச்சுவர் என்று கம்பீர மாக இருந்தது. ஆளரவமற்ற சூழலிலும் நான்கைந்து பிச்சைக் காரர்கள் கோவில் வாசலில் அமர்ந்திருந்தனர். பிரான்ஸ் நாட் டிலிருந்து வந்திருந்த ஒரு சுற்றுலாப்பயணியும் நாலைந்து பக்தர்களும் மட்டுமே இருந்தனர். வெளிநாட்டுப் பயணியும் எங்களைப்போல சட்டையை கழற்றிவிட்டு வெற்றுடம்புடன் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டிருந்தார். உள்ளே தொடர் வளைவுகள் கொண்ட உட் கூரைகள் அழகாக இருந்தன. பூஜை செய்த அன்பர் விபூதி பிரசாதத்தை தந்தார். ஒரு பெருமாள் கோவிலில் விபூதியை பிரசாதமாக வாங்கிய ஆச் சரியத்தில் இருந்தேன். 'அரியும் சிவனும் ஒண்ணு, அதை அறி யாதவன் வாயில் மண்ணு' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது!

இலங்கையில் தமிழ்நாட்டில் உள்ள பல ஊர்களின் பெயர் களை கொண்ட ஊர்கள் இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி இருப்பதை கேள்விப்பட்டிருக்கிறேன். காய்க றிகளுக்கு புகழ் பெற்ற இடம் என்று சொன்னார்கள். நாகர் கோவில் என்ற பெயரிலும் ஒரு ஊர் இருப்பதை கண்டு ஆச்ச ரியப்பட்டேன். தமிழ்நாட்டில் என் பெற்றோர்களின் ஊர் அல் லவா. பார்க்க ஆவல் கொண்டேன். ஆனால் அங்கு ஊர் என்று பெரிதாக ஒன்றும் என் கண்களில் தென்படவில்லை. தமிழகத்தில் இருப்பது போலவே இங்கும் நாகத்திற்கு முக்கியம் தந்த கோவில் ஒன்று உள்ளது. நாகத்தம்பிரான் ஆலயம் சிறிய அழகான கட்டமைப்பு. இப்போது புனருத்தா ரணப் பணிகள் நடைபெறுகின்றன. மூலவரை சுற்றி நடந்து வரும் பிரகாரம் முழுவதும் மணலால் நிரப்பப்பட்டிருந்தது. மெத்து மெத்து என்று கோவிலுக்குள் கதகதப்பான மணலின் மீது நடப்பது ஒரு சுகம்தானே! திருவிழாக்களின்போது பயன் படும் உற்சவர்களுக்கான பல்வேறு வாகனங்களுக்கிடையே ஒரு படகு வாகனமும் இருந்தது ஆச்சரியமாக இருந்தது. கடற்பகுதி என்பதால் மக்களுக்கு இப்படி ஒரு வாகனம் நம் பிக்கையாக தோன்றியிருக்கலாம்.

முல்லைத்தீவு என்ற பெயர் கேள்விப்பட்டிருந்தாலும் அங்கு சென்றது ஒரு புது அனுபவமாக இருந்தது. கடற்கரை நெடுக படகுகளும் மீன்கடைகளும் வரிசையாக இருந்தன. இங் குள்ள மீன்கடைகள் சுற்றுவட்டார மக்களுக்கு ஒரு நிரந்தர சேவையாளர்களாக திகழ்கின்றன. பலவித மீன்கள் விற் பனைக்கு வைக்கப்பட்டிருந்தன. அடுத்த நாள் வரப்போகும் முக்கிய விருந்தினருக்கான மீன்களை வாங்கினோம். பக் கத்தில் ஏராளமான கருவாட்டு வகைகளைக் கடை விரித்தி ருந்தார்கள். கிராம வாடையுடன் இருந்த ஊர் என்பதால் ஒரு டீ அடிக்க முடிவு செய்தால் இங்கும் பட்டனை அழுத்தினால் பேப்பர் கப்பில் கொட்டும் நெஸ்டீ தான். கிராமத்து நொறுக்கு வகைகளுடன் ஒரு சின்ன வண்டி வந்தது. பருப்பு வடை, மெது வடை, இறால் வடை, மற்றும் மீன்களை பயன்படுத்தி செய்த சிறு பலகாரங்கள், சிப்ஸ் என்று விதவிதமான ஐட்டங்கள். இருநூறு ரூபாய் தந்தால், அனைத்திலுமே சிறிது சிறிதாக எடுத்து ஒரு பொட்டலமாக்கி கைகளில் தந்துவிடுகின்றனர்.

முல்லைத்தீவிலிருந்து கிளம்பும்போது, அடுத்தது எங்கே என்று கேட்டேன். பதிலை கேட்டு ஒரு கணம் திகைப்பும், சோகமு மாய் ஒரு மனநிலை.

கிளம்பினோம்!

(தொடரும்...)



jeeva@thaiveedu.com

எப்ப பார்த்தாலும்

தமிழ், தமிழன்...

போல் ஜோசேப்



இது ஏதோ ஒரு ஆராய்ச்சிக் கட்டுரை அல்ல என் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் கட்டுரை. சிலரை புண்படுத்தும் கட்டுரை அல்ல, உணர்வுகள் புண்பட்டதால் எழுத எண்ணிய கட்டுரை. எப்ப பார்த்தாலும் ஏன் தமிழ் தமிழன் என்று கத்துறாங்க, தமிழ் என்ன சோறா போடப் போகிறது என்று சொல்லும் பலரையும் பலரும் சந்தித்து இருப்பீர்கள்.

இது இனப்படுகொலை இல்லை, அதைப்பற்றி எங்களுக்கு ள்ளதான் கதைப்போம் பொதுவெளியில் சொல்ல மாட்டோம், அது வெறும் சண்டைதான், போர்க்குற்றம்தான் புலம்பெயர்ந்தோரே கொஞ்சம் அடக்கி வாசியுங்கோ என்று அடம் பிடிக்கும் கூட்டம் ஒருபுறம். நவம்பர் மாதம் நம் உணர்வுகள் பொங்கிவழிய மாவீரச் செல்வங்களை நினைத்துருக்கி வழிபடுவதும், மே மாதம் முள்ளி வாய்க்கால் நினைவேந்தலும், ஜூலை மாதம் கறுப்பு ஜூலை மாதமாக வலைத்தளங்களிலும் மண்டபங்களிலும் நான் உட்பட கூடி நினைந்துருகி கடந்து போகும் பருவ கால உணர்வு மனிதர்கள் ஒருபுறம்.

அகதி அந்தஸ்து கிடைக்க ஆதாரங்களை திரட்டி தங்கள் கேஸ் விரைவில் முடிய இலங்கை ராணுவத்திற்கும் அரசுக்கும் எதிராக மட்டுமல்ல, புலிகளுக்கு எதிராகவும் தங்கள் கேசில் சாட்சியங்கள் சொல்லியதால், சர்வதேசமெங்கும் அகதிகள் நீதிமன்றில் சாட்சிகள் குவிய, புலிகளும் பயங்கரவாதிகள் என்று மேற்குலகம் எண்ணி, முள்ளிவாய்க்காலின் இறுதி இனப்படுகொலையினை தடுக்காமல் விட்டதில் நாங்களும் பங்காளிகள் என்பதை மறந்து மறைத்து நிற்கும் புலம்பெயர் மனிதர்கள் ஒருபுறம்.

புலம்பெயர்ந்தோமா! டபுள் அடிச்சு உழைத்தோமா! வீடு வாங்கினோமா! வெக்கேஷன் போனோமா! முகநூலில் போட்டு பந்தா பண்ணினோமா! என்ற மனிதங்கள் மறுபுறம். பார் ஓபன்

**அரசியல் ரீதியாக பிரிந்து கிடக்கிறோம்.
பூகோள ரீதியாக புலம்பெயர்ந்து வேர்களை தளத்தில் விட்டுவிட்டு
புலம்பெயர்ந்த நிலத்தில் ஒட்டுவைத்த செடிகளாக வாழ்கிறோம்
ஒற்றைத் தலைமையின்றி.**

என்றதும் ஈரலுக்கு பூச்சி மருந்து அடிக்க எழுந்து ஓடுகிற கூட்டம், பின்பு மேக்கப்போடு இருக்கிற தங்கள் மனைவி மாரை கண்டுபிடிக்க தடுமாறி விழா முடிந்ததும் சிலர் விழாமல் இருக்க கைத் தாங்கலாக அழைத்து செல்ல வென்றே சாரதி லைசன்ஸ்சும் எடுத்துக் கொடுத்து வைத்தி ருக்கும் இன்னொரு கூட்டம்.

ஒரு நிகழ்வில் மூன்று தசாப்தங்களாக, தான் தமிழாசி ரியராக பணியாற்றுவதாகவும் பல தமிழ் இலக்கியப் பணிகளில் கனடாவில் முன்னோடி என்றும் குறிப்பிட்ட ஒரு பெண்மணி தன் பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது என்று கூறினார் இப்படியும் சிலர்.

நண்பர் திரு பொன்னையா விவேகானந்தன் அவர்கள் ஒரு நிகழ்வில் குறிப்பிடும்போது ஒரு சிறுவனிடம் 'நீங்கள் ஏன் தமிழ் படிக்க விருப்பமில்லை என்று சொல்லுறீங்க' என்று கேட்டாராம். அதற்கு அந்த சிறுவன் 'Tamil is a fighting language' என்று சொன்னானாம். அவர் ஏன் அப்படி சொல்கிறீர்கள் என்று கேட்டதற்கு, அவன் சொன்ன பதில் ஆச்சரியமூட்டியது என்றார். அப்படி என்னதான் சொன் னான், ஆம் 'தன்னுடைய வீட்டில் எல்லோரும் ஆங்கி லத்தில் தான் கதைப்போம். தன் அப்பாவும் அம்மாவும் சண்டை பிடிக்கும் போது மட்டும் பிள்ளைகளுக்கு புரியாமல் இருக்க தமிழில்தான் சண்டை பிடிப்பார்கள் என்றான்', அதனால் சண்டை பிடிப்பதற்காகவே ஒரு மொழி இருக்கிறது போலும் என்று புரிந்து கொண்ட சிறுவன் அவ்வாறு பதிலளித்தான் என்று கூறி ஆதங்கப்பட்டார்.

ஒருமுறை என்னை சந்திக்க வேறொரு நாட்டிலிருந்து ஒரு நண்பர் வந்திருந்தார். அவரை அழைத்துக் கொண்டு மார்க்கம் நகரில் உள்ள அவரின் நண்பர் வீட்டுக்கு சென்றி ருந்தேன். அவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கனடா வந்த தாகவும் பத்து மற்றும் எட்டு வயதில் உள்ள தங்கள் பிள்ளைகளை அறிமுகம் செய்து வைத்தனர். நான் வழக்கம் போல தமிழ் பேசுவார்களா, தமிழ் படிக்கிறா ர்களா என்று கேட்டேன். அப்படி கேட்ட போது இருவரு க்கும் தமிழ் தெரியாது என்றார் தாயார். அப்போது அவர்களின் வீட்டில் இருந்த நாய் ஒன்று என் அருகே வந்தது. உடனே அந்த பெண்மணி நாயைப் பார்த்து தமிழில் அதன் பெயரைச் சொல்லி அழைத்து, 'பின்பக்கம் வெளியில போய் விளையாடுங்கோ' என்று சொன்னார். அது உடனே ஓடிப் போனது. என் வாய் சும்மா இருக்காமல் 'அட நாய்க்கு தமிழ் தெரியுதே' என்றதும் அந்த பெண்மணிக்கு கோபம் வந்தது. கணவரையும் என்னோடு வந்த நண்பரையும் முறைத்து ஒரு பார்வை அப்புறம் என்ன தேநீரும் குடிக்காமல் திரும்பி வந்து விட்டோம்.

ஆம் இதெல்லாம் ஏன் சொல்கிறேன் என்று நீங்கள் நினைக்கலாம். மரபுத் திங்கள் மாதத்தின் தாக்கம் என்னு ள்ளே தாக்க அதைப்பற்றிய விடயங்களை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள எண்ணியபோது எழுந்த எண்ணக் கருதான் இந்தக் கட்டுரை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' ஆம் தமிழில் எனக்கு பிடிக்காத வார்த்தை இதுதான். யாவருக்கும் ஊர் இருக்கிறது, நாடு இருக்கிறது நமக்கு இருக்கா! உலகம் முழுக்க வாழலாம், உலகத்தில் நமக்கு என்று ஒரு நிலம் உண்டா! ஏன் ஏறிநின்று கத்தக்கூட ஒரு கல்லாவது உண்டா என்றால் இல்லை. நமது அடையாளம் என்ன? மொழியா, மதமா, இனமா, நிலமா, அதிகாரமா, கலை பண்பாடா.

இனமாக, அரசியல் ரீதியாக பிரிந்து கிடக்கிறோம். பூகோள ரீதியாக புலம்பெயர்ந்து வேர்களை தளத்தில் விட்டுவிட்டு புலம்பெயர்ந்த நிலத்தில் ஒட்டுவைத்த செடிகளாக வாழ்கி றோம் ஒற்றைத் தலைமையின்றி. மதமாக நமக்குள்ளே சில மதங்கள், மதம் பிடிக்காமல் இருந்தால் சரி, அதுவும் ஒரு அடையாளம் அல்ல. நிலமாக ஆண்ட பரம்பரை மீண்டும் ஒருமுறை ஆழ நினைப்பதில் என்ன தவறு என்று வீரவசனம் பேசியே இருந்த கோட்டைகளையும் கோட்டை விட்டுவிட்டு கீழடி போல கோட்டைகள் இருந்த இடங்களை அகழ்ந்து தோண்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

ஆட்சியதிகாரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கடாரம் கொண்டான் கண்டான். ஆறாயிரம் நாட்களுக்கு முன்பு முள்ளிவாய்க்கால் வரை கரிகாலன் பேர் கொண்டவனும் கண்டான். இன்று மொழியும் கலையும் மட்டுமே மரபின் விழுமியங்களாக அடையாளத்தின் மிச்சமான எச்சங் களாக நம்மிடம் உள்ளது.

உலகில் ஏழு செம்மொழிகள். தமிழ், கிரேக்கம், இலத்தின், சீனம், எபிரேயம், பாரசீகம், சமஸ்கிருதம் ஆகியவற்றில் இன்று வாழும் மொழியாக தமிழும் சீனமும் மட்டுமே உள்ளன. கிரேக்கம் அதன் தேசத்திலேயே வழக்கொழிந்து வருகிறது. மருத்துவம் மற்றும் விஞ்ஞான சொற்களில் இன்றும் பயன்பாட்டில் உள்ளதால் பல சொற்கள் மட்டுமே தப்பிப்பிழைத்து நிற்கின்றன. இலத்தீனும் சமஸ்கிருதமும் எபிரேயமும் வழிபாட்டு மொழியாக கடவுளோடு மட்டும் பேசும் ஒருவழி மொழியாகிவிட்டது. பாரசீகம் ஈரானின் ஆட்சி மொழியாக இருந்தாலும் இன்று அரேபிய மொழியின் துணை யோடுதான் அது எழுதப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற கவிஞர் உமர் கயாமின் கவிதைகள் பாரசீகத்தில் அடையாளம்.

சீனர்கள், யூதர்கள், கொரியர், ஜப்பானியர், ஐரோப்பியர்கள் மொழியாக, இனமாக, நிலமாக, அதிகார மாக ஆட்சியுடன் இருக்கிறார்கள். இஸ்லாமிய நாடுகள் மதமாக, மொழியாக, இனமாக தனித்தன்மையோடு வாழ்கிறார்கள். ஏன் எத்தனையோ பெயர் பிரபலம் இல்லாத பழங்குடிகள் தீவுக்கூட்டங்கள் மொழி, இனம்,

நாடு, அதிகாரம் என்று அடையாளத்தோடு வாழ முடிகிறது. பசிபிக் கடலில் ஒரு தீவில் வெறும் பதினோரு ஆயிரம் பேர் வசிக்கும் Tuvalu என்ற தீவில் துவாலுவன் என்ற இனக் குழுமம் தன்னாட்சி அதிகாரத்தோடு வாழ்கிறது. இத்தாலிக்கு அருகில் உள்ள வெறும் இரண்டு சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு தீவு முப்பத் தெட்டாயிரம் பேருடன் ஒரு தனி அரசாக செயற்படுகிறது. நம்ம புங்குடு தீவை விட பாதி அளவுதான் உள்ள இந்த தீவும் ஒரு தனி நாடாகும். 766 பேர் கொண்ட 120 ஏக்கர் மட்டுமே பரப்பளவு உள்ள வத்திக்கான் நகரமே மதம், அதிகாரம் கொண்ட தனிதேசம். நாமோ யாதும் ஊரே என்று புகழ் பேசிக்கொண்டே உலக உருண்டையில் 10 கோடிப்பேர் செம்மொழியோடு மூத்த இனம் என்ற அடையாளத்தோடு வாழ்கிறோம் இல்லையில்லை இருக்கி றோம்.

அடையாளத்தை மறந்து தொலைத்து விட்டு ஆங்கில த்தையும் ஐரோப்பிய மொழிகளையும் பேசினாலும் இன்னும் ஆயிரம் ஆண்டுகளானாலும் நாம் ஐரோப்பியரின் சந்ததி யினர் ஆக முடியாது. நாம் வாழும் புலம்பெயர் நாடுகளில் நமக்கு குடியுரிமைகள் இருந்தாலும் நாம் இங்கு சிறுபா ன்மை இனம்தான். ஐரோப்பியர் வீட்டில் இருந்தாலும் நாய்கள் குரைக்கவோ, கல்லைக் கண்டால் காலைத் தூக்கவும் மறப்பதில்லை. சிங்கம் என்றால் கம்பீரம் கர்ச்சிப்பு அது ஒருபோதும் மியாவ் என்று கத்துவதில்லை. அப்படிக் கத்தினால் அதன் பிறப்பில் எங்கோ தவறு இருக்கிறது என்றுதானே அர்த்தம். புற அடையாளங்கள் மாறலாம் ஆனால் அக அடையாளங்கள் என்பது மொழியும் மரபும்தான். சிந்திப்பதும், பேசுவதும், மரபணுவில் இருப்பதும் அதுவேதான்.

பல இனங்கள் தங்கள் அடையாளங்களை தொலைத்து நிற்கின்றன கரிபியன், மேற் கிந்திய தீவுகளில் பல இனக் குழுமங்கள் மற்றும் கயானீஸ், இவர்களில் சில ஆண்டு களுக்கு முன்பு வரை இருந்த பத்துக்கு மேற்பட்ட பூர்வீக மொழிகள் முற்றாக அழிந்து இப்போது ஆங்கிலம் மட்டுமே அதிகார பூர்வ மொழியாக உள்ளது. இதேபோல இங்கிலாந்தின் ஆதிக்கத்தால் அழிவின் விளிம்பில் இருந்த ஐரிஷ் மொழியானது அயர்லாந்து சுதந்திர தேசமானதால் நிலமும் தேசமும் ஆட்சியதிகாரமும் கையில் வந்ததால் மீண்டும் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. அதிர்ச்சியான தகவல் என்ன வென்றால் யுனெஸ்கோ ஆய்வின்படி கடந்த ஒரு நூற்றாண்டில் மட்டுமே சுமார் 2000 மொழிகள் வழக் கொழிந்துள்ளன. மேலும் இந்த நூற்றாண்டு முடிவதற்குள் இன்னும் 1500 மொழிகள் வரை முற்றாக மறைந்து விடலாம் என உறுதியாக சொல்ல முடியும் என்கிறது யுனெஸ்கோ.

பொதுவாக நாம் மூச்சு விடும்போது, நாம் மூச்சு விடுகிறோம் என்பதே நமக்கு தெரியாது. மூச்சை அடக்கும்போதுதான் நாம் இதுவரை விட்டது மூச்சு என்பது தெரியவரும். இப்போது புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று எண்ணுகிறேன். தமிழ் இனவழிப்பு என்பது இலங்கையில் திட்டமிட்டு, கட்டமைக்கப்பட்டு நீண்ட காலமாக நடத்தப்படுகிறது. இனவழிப்பு என்றதும் நமக்கு நினைவுக்கு வருவது கடந்த கால தமிழின படுகொலைகளும் முள்ளிவாய்க்காலும் மட்டுமே தான். 1962-இல் 10 லட்சம் பேர் நாடற்றவர்களாக அறிவிக்கப்பட்டு அதன் பின்பு 1964 இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம், மூன்று நூற்றாண்டுகளாக வாழ்ந்த தமிழர்கள் நாடு கடத்தப்பட்டனர். இதை பலரும் மறந்து விட்டோம். 1964-இல் ஐந்தரை லட்சம் பேரும் 1981-இல் மூன்று லட்சம் பேரும் நாடு கடத்தப்பட்டனர். உலகின் முதல் முறையாக இத்தனை லட்சம் பேர் வலுக்கட்டாயமாக நாடு கடத்த ப்பட்டது வரலாற்றில் எப்போதுமே இல்லை. அன்றைய தமிழக மற்றும் இலங்கை தமிழ் தலைமைகளும், உலகத் தலைமைகளும் வேடிக்கை மட்டுமே பார்க்க முடிந்தது.

அதன் பின்பு புலம்பெயர்ந்தோர் என்ற புனைபெயரில் நாமே உயிர் பிழைக்க நாடு கடந்து வந்தோம். இத்தனை லட்சம் பேரும் அங்கு இருந்திருந்தால் இன்று நமது பலம் எண்ணிக்கையில் கோடி களைக் கடந்திருக்கும். பார்த்தீர்களா இதுதான் திட்டமிட்டு கட்டமைக்கப் பட்ட இனவழிப்பு. இப்போது நடப்பது ஒருவித Emotional and Behavioral War. எப்போதும் பதட்டத்தோடு, பயத்தோடு, குற்ற உணர்வோடு, மன அழுத்தத்தோடு, போதைப்



காணி அபகரிப்பு, சிங்களக்குடியேற்றம், விகாரைகளை அமைத்தல், தமிழ், இஸ்லாமிய, மலையக, மற்றும் பிரதேச பிரிவினைகள் முரண்பாடுகளை வளர்த்தல் இப்படி இன்னும் பல. இவையும் தமிழர்களை மறைமுகமாக புலம் பெயர, நாடு கடத்த எடுக்கும் இனவழிப்பின் ஒரு யுக்தி.

பழக்கத்தோடு வைத்திருப்பதும், காணி அபகரிப்பு, சிங்களக்குடியேற்றம், கல்வி மற்றும் வேலை வாய்ப் பின்மை, தொடர்ச்சியான போராட்டங்கள், அரசியல் தீர்வு காணப்படாமை, புராதன அடையாளங்களை அழித்தல், விகாரைகளை அமைத்தல், தமிழ், இஸ்லாமிய, மலையக, மற்றும் பிரதேச பிரிவினைகள் முரண்பாடுகளை வளர் த்தல் இப்படி இன்னும் பல. இவையும் தமிழர்களை மறைமுகமாக புலம் பெயர, நாடு கடத்த எடுக்கும் இனவழிப்பின் ஒரு யுக்தி.

இலங்கையில் வாழும் சமூக நல மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் அவர்களோடு சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கனடிய தொலைக்காட்சியில் அவருடன் நான் ஒரு நேர்காணல் செய்தேன். அதில் அவர் குறிப்பிட்ட விடயம் மிகவும் அவதானிக்க வேண்டியது. ஈழத்தில் அண்மைக்கா லமாக திருமண வயதைக் கடந்தும் தனித்து வாழும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது, அதேவேளை, திருமணமான தம்பதியினர் பல்வேறு காரணி களால் ஒரு குழந்தையுடன் தமது குடும்பக் கட்டமைப்பை மட்டுப்படுத்திக் கொள்ளும் போக்கும் பரவலாகக் காணப் படுகின்றது. இவை ஒரு ஆபத்தான அறிகுறிகள், மேல் சொன்ன Emotional war மற்றும் சமூக மாற்றங்களால், இன்னும் சில ஆண்டுகளில் பிறப்பு விகிதம் மேலும் வீழ்ச்சி யடையும். இப்படியே போனால் ஈழத்தில் நமது இருப்பு முற்றிலும் கேள்விக்குறியாகி விடும் என்று குறிப்பிட்டார்.

அது மட்டுமல்ல கட்டுரை தலைப்பில் குறிப்பிட்டது போல எங்களுடைய வரலாற்றையும் தொன்மையினையும் உரக்கச் சொல்வதில் ஏன் இந்த தயக்கம். அண்மைக் காலமாக தமிழகத்தில் நடைபெற்று வருகிற தொல் பொருளியல் அகழ்வாராய்ச்சிகள் பற்றி பலரும் அறிந் திருப்பீர்கள். ஆராய்ச்சியாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் தலைமையிலான குழுவினரின் கண்டுபிடிப்புகளும், ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் முன்வைக்கும் தரவு களும் ஆராய்ச்சியாளர் உலகையே தமிழினத்தை நோக்கி திரும்பிப் பார்க்கச் செய்துள்ளது. இவர்களின் ஆய்வுக ளையும், சமீபத்திய அகழாய்வு முடிவுகளையும் அடிப்படை யாகக் கொண்டு, சுமார் 4,200 ஆண்டுகளுக்கு முன்பே தமி ழர்கள் இரும்புத் தொழினுட்பத்தைப் பயன்படுத்தியுள் ளனர் என்பது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இதற்காக சிவகலை, மயிலாடும் பாறை போன்ற இடங்களில் உள்ள புதைப்பிடங்களையும் அதைச் சுற்றியுள்ள நடுகற்கள், கல்லறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்த போது மிக நேர்த்தியாக கற்கள் வெட்டப்பட்டு நடு கற்களாகவும் கல்லறைகளாகவும் பயன்படுத்தப் பட்டிருந்தது என்பதும், இவற்றை இரும்பின் உதவி கொண்டுதான் வெட்டி இருக்க வேண்டும் என்பதையும் ஆய்வாளர்கள் அறிந்து கொண்டார்கள். ஆகவே துருக்கியில் உள்ள அனடோலியா அங்கிருந்துதான் இரும்பின் காலம் தொடங்கியது என்ற கூற்று பொய்ப்பிக்கப்பட்டு தமிழர்களே முதலில் இரும்பை பயன்படுத்தி இருக் கிறார்கள் என்பது நிரூபணமானது.

அது மட்டுமல்ல தமிழகத்தின் பல இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்ட பானை ஓடுகளில் இருந்த கிறுக் கல்கள் மற்றும் எழுத்துகள் ஆகியவை கொடுமணல் உட்பட தமிழகத்தின் ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு, கீழடி போன்ற இடங்களிலும் கிடைத்துள்ளது. அவை அன்றைய தமிழ் பிராமி எழுத்துகளாகவும் காணப்படுகிறது. இத்தகைய எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் அதிக அளவில் தமிழகத்திலேயே கண்டறியப்பட்டுள்ளன. இதை வைத்து தமிழ் எழுத்துகள் மற்ற மொழிகளில் இருந்து கடன் வாங்கியவை அல்ல என்பதற்கான ஆதாரங் களும், அன்றாடத் தேவைக்கான மண்பாண்டங்களில் பெயர்களும் எழுத்துகளும் காணப்படுவதால் சாதாரண மக்களும் எழுத்தறிவு உள்ளவர்களாக இருந்திருக் கிறார்கள் என்பதும் தெரிய வந்துள்ளது.

இவற்றில் குறிக்கப்பட்டுள்ள கிறுக்கல்களும் குறியீ டுகளும் எழுத்து வடிவங்களும் 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம்; எனவே எழுத்து வடிவங்கள் தோன்றுவதற்கு முன்பே மொழிதான் முதலில் இருந் துள்ளது என்பது உறுதியாகிறது. பிறகு அது ஒலி வடிவங்களாகவும் பல்வேறு ஆண்டுகால பயிற்சிகளுக்கு பின்பு எழுத்துகள் தோற்றம் பெற்றிருக்க வேண்டும். அதன் பிறகு பல நூற்றாண்டுகளுக்கு பிறகு இலக்கியங்கள் குறிப்பாக சங்க இலக்கியங்கள் தோன்றியிருக்கலாம். இந்த இலக்கியங்களை சீர்படுத்தத்தான் இலக்கணம் என்ற முறை உருவாகி இருக்க வேண்டும். தமிழில் தொல்காப்பியம் தான் தொன்மையான இலக்கண நூலாக இருந்துள்ளது. அப்போ தொல்காப்பியமே 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றால் தமிழனின் இந்த எழுத்தும் கல்வியறிவும் அதற்கு முன் எத்தனை நூற்றாண்டுகள் இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்கும்போது வியப்பாக இருக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள். இதில் கீழடி மற்றும் பொருணை நதி நாகரிகம் பற்றி அண்மையில் வெளிவருகிற தகவல்கள் பலவற்றை நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்பதால் அதைப் பற்றிய விவரங்களை அதிகம் இங்கே குறிப்பிடவில்லை.

கூடியம் குகை மற்றும் அத்திரப்பாக்கம் ஆகிய இடங்களில் கிடைத்த கற்கோடரிகளை ஆய்வு செய்தபோது 15 லட்சம் ஆண்டுகள் பழைமையானது என்று கண்டறிந்துள்ளனர். ஆம் யார் அவற்றை பயன்படுத்தியது. இன்றைய மனித இனம் பரிணாம வளர்ச்சி அடைவதற்கு முன்னால் இருந்த Homo erectus என்ற பரிணாமத்தில் முதலில் நிமிர்ந்த இனம் வாழ்ந்ததற்கான ஆதாரங்களாக அவை உள்ளன.

அடுத்தது ஹோமோசபியன்ஸ் Homo Sapiens என்ற மனித இனம் ஆபிரிக்காவிலிருந்து ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பாக பல இடங்களுக்கும் இடம்பெயரத் தொடங்கினார்கள் என்பதும் வரலாற்று ஆதாரங்களின் தரவுகளாகும். அவ்வாறே பல்வேறு காரணங்களுக்காக புலம்பெயர் தொடங்கியவர்கள் சுமார் 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இந்தியாவின் தென்பகுதிகளில் குடியேறியுள்ளனர்.

2005-இல் மரபணு அறிவியல் உதவி கொண்டு உலகின் பல இடங்களிலும் ஆய்வுகளை மேற்கொண்டார் அமெரிக்க ஹார்வர்ட் மரபியல் விஞ்ஞானி ஸ்பென்சர் வெல்ஸ் Spencer Wells. எழுபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களின் மரபணுவை தேடி உலகம் முழுவதும் தன் ஆய்வை தொடங்கினார். கடலோரப் பகுதி வழியாக வழியாகத்தான் முதல் முறையாக மக்கள் இடம்பெயர்ந்தது என்பதை அவர் அறிந்து பல்வேறு நாடுகளிலும் தனது ஆய்வுகளை மேற்கொள்ள தொடங்கினார். அந்த வகையில் 2005-ஆம் ஆண்டு அமெரிக்க ஹாவர்ட் பல்கலைக்கழகம் மற்றும் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் துணையோடு ஸ்பென்சர் வெல்ஸ், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் ஆய்வு குழுவின் தலைவர் பேராசிரியர் பிச்சப்பன் அவர்களும் இணைந்து இந்தியாவில் இந்த ஆய்வுகளை மேற்கொண்டனர். உலகம் முழுவதும் ஒரு லட்சம் மனிதர்களில் இருந்து டிஎன்ஏ மாதிரிகளை எடுத்து இந்த குழு ஆய்வு செய்து வந்துள்ளனர்.

அப்போது மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்கள் சிலரிலும் மரபணு மாதிரிகளை எடுத்து ஆய்வு செய்தனர். இந்த மாதிரிகளை ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் உள்ள மரபியல் நிபுணர்கள் சில ஆண்டுகள் ஆய்வு செய்ததில் ஆப்பிரிக்க முதல் மனிதர்களின் வழிமரபில் எழுபதாயிரம் ஆண்டுகளாக இன்னும் தொடரும் M 130 மரபணு வகை, மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே உள்ள ஜோதி மாணிக்கம் என்ற கிராமத்தில் வசிக்கும் விருமாண்டித்தேவர் என்பவரின் ரத்த மாதிரியில் இருப்பதை கண்டுபிடித்தனர். உடனே அந்த தகவல் பேராசிரியர் பிச்சப்பனுக்கு தெரிவிக்கப்பட்டது.

அந்த நபர் சில ஆண்டுகளுக்கு முன்பு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் முதுகலை பட்டம் படித்துக் கொண்டிருந்தவர்.

அவரை அழைத்து வந்து அந்தச் செய்தியைச் சொல்லி மீண்டும் மரபணு மாதிரிகள் எடுத்து அமரிக்காவுக்கு அனுப்பப்பட்டது. பரிசோதனை செய்த விஞ்ஞானிகள் அவரிடம் உள்ளது M 130 மரபணு தான் என்பதை உறுதி செய்து, அவரிடம் எழுபதாயிரம் ஆண்டுகள் பழமையான மரபணுவை வைத்திருக்கும் ஆதி முதல் மனிதனின் வாரிசுகளில், வாழும் மூத்தகுடி தமிழன் நீதான் என்றபோது அதிசயமும் ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஆட்கொண்டதாக ஒரு நேர்காணலில் அவர் குறிப்பிட்டு இருந்தார். அதேபோல ஒரு சில அவுஸ்திரேலியா பழங்குடிகளிலும் இது உறுதி செய்யப்பட்டது. பின்பு அவரை Harvard பல்கலைக் கழகத்திற்கு அழைத்து மேலும் மரபணு சோதனைகள் செய்து, இன்றும் வாழும் ஆதி மனிதனின் வாரிசு அறிவித்தனர். அந்த ஆதித்தமிழன் விருமாண்டி இன்று கணினி பொறியியல் வல்லுநராக வலம் வந்து கொண்டிருக்கிறார். தமிழர் என்கிற அடையாளமும், உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றான தமிழின் தொன்மையும் வெறும் உணர்ச்சி சார்ந்த விடயங்கள் மட்டுமல்ல; அவை ஒரு இனத்தின் வரலாற்றுச் சாட்சியங்கள். இத்தகைய வரலாற்றுத் தொன்மையையும் தனித்துவமான பண்பாட்டு விழுமியங்களையும் கொண்ட ஒரு சமூகம், தனது அரசியல் அபிலாஷைகளையும் சுயநிர்ணய உரிமையையும் நிலைநாட்ட முனைவது உலகளாவிய ஜனநாயகத்தின் பாற்பட்டதே ஆகும். ஒடுக்குமுறைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு சுதந்திரமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப, 'இனி ஒரு விதி செய்வோம்' என உறுதியேற்பது ஒவ்வொரு விழிப்புணர்வுள்ள சமூகத்தினதும் தார்மீக உரிமையாகும்.



paul.joseph@thaiveedu.com

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com



துரைநாதன் சபீதன்

சமூக ஒழுங்கமைப்பைப் பேணுவதில் ஆற்றுகைகளின் பங்கு



மனித இனம் ஒரு சமூகமாகத் திரண்ட நாள் முதல், அந்தச் சமூகம் சிதறுண்டு போகாமல் இருக்கவும், வன்முறைகளற்ற ஒரு இணக்கமான சூழலைப் பேணவும், ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குப் பண்பாட்டைக் கடத்தவும் ஒரு முறையான கட்டமைப்பு தேவைப்படுகிறது. இதனையே சமூகவியலாளர்கள் 'சமூக ஒழுங்கு' என அழைக்கின்றனர். நவீன அரசியல் மற்றும் அரசுக் கோட்பாடுகளின்படி, இந்த ஒழுங்கானது அரசியலமைப்புச் சட்டங்கள், காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் போன்ற நிறுவனங்களால் பேணப்படுகிறது. ஆனால், இத்தகைய நிறுவனங்கள் முழுமையாகச் சென்றடையாத கிராமப்புறச் சூழல்களிலும், பழங்குடிச் சமூகங்களிலும் சமூக ஒழுங்கு எவ்விதச் சிதைவும் இன்றிப் பேணப்பட்டு வருவதை நாம் காண்கிறோம். அப்படியானால், அங்கு மனித நடத்தையை நெறிப்படுத்தும் எழுதப்படாத சட்டங்கள் எவை? மனிதர்கள் எதற்குக் கட்டுப்படுகிறார்கள்? இந்தக் கேள்விகளுக்கான விடை, அச்சமூகத்தின் அடித்தளத்தில் ஊற்றெடுக்கும் 'ஆற்றுகைகள்' மற்றும் 'சடங்குகள்' ஆகியவற்றில் பொதிந்துள்ளது. எமில் டேர்க்கைம் குறிப்பிடுவது போல, 'கூட்டு மனசாட்சி'யை உருவாக்கும் இச்சடங்குகள், சமூகத்தின் அதிகாரத்தையும், பொருளாதாரத்தையும், நீதியையும் கட்டமைக்கும் கண்ணுக்குத் தெரியாத கரங்களாகச் செயற்படுகின்றன.

சமூகத்தில் இடம்பெறும் ஆற்றுகைகள் ஒவ்வொன்றும் தனிமனித, சமூகச் சிந்தனைகளின் அடித்தளத்தில் பிறக்கின்றன. சமூகச் சிந்தனை என்பது ஒரு சமூகம் எதை நம்புகிறது, மதிக்கிறது, அல்லது ஒரு பிரச்சினையாகக் கருதுகிறது என்பதாகும். 'சமூக வாழ்க்கை யினையும், மனிதனுடைய செயற்பாடுகளையும் பற்றியது. Bogardus சுட்டிக்காட்டியது போல சமூகத்தில் ஏற்படும் பிரச்சினைகள் பற்றிய சில மனிதர்களுடைய எண்ணங்கள் தொடர்பானவையே இந்த சமூகச் சிந்தனைகள் ஆகும்.' இந்த வகையில், சிந்தனை என்பது கண்ணுக்குப் புலப்படாத 'காரணம்' (Cause) எனில், ஆற்றுகை என்பது அந்தக் கருத்தியல் சிந்தனைகளுக்குப் புலப்படும், உறுதியான, நடைமுறை வடிவத்தைக் கொடுக்கும் 'விளைவு' (Effect) ஆகும்.

'தெய்வ சக்திகள் இயற்கையைக் கட்டுப்படுத்துகின்றன' என்ற சமூகச் சிந்தனை (நம்பிக்கை), 'பொங்கல் விழா' அல்லது 'மழைக்கான சடங்கு' என்ற ஆற்றுகையாக விளைகிறது. அதேபோல், 'அனைவரும் சமம்' என்ற சமூகச் சிந்தனை 'உரிமைப் போராட்டங்கள், நாடகங்கள் என்ற சமூக ஆற்றுகைகளாக வெளிப்படுகிறது.

மானுடவியல் மற்றும் சமூகவியல் பார்வையில், 'ஆற்றுகை' என்பது இதைவிட மிகவும் பரந்த, ஆழமான பொருளைக் கொண்டது. இந்த வேறுபாட்டைப் புரிந்துகொள்வது அவசியமாகிறது. 'பிறப்பு தொடக்கம் இறப்பு வரையான இடைப்பகுதியில் கோயில் சடங்கு, திருவிழாக்கள், கோயிற் கிரியைகள், திருமணச் சடங்கு, பொழுதுபோக்கு நிகழ்வுகள், விளையாட்டுகள், வேடிக்கைகள், கலை வெளிப்பாடுகள் எனப் பல்வேறு விதமான ஆற்றுகைகளை மனிதர் தம் வாழ்வில் நிகழ்த்துகின்றனர். இத்தகைய ஆற்றுகைகளுக்கூடாகவே மனிதர் தமக்குள் உறவுகளையும் தொடர்புகளையும் ஏற்படுத்திச் சமூகமாக வாழ்கின்றனர்'. எனவே ஆற்றுகை என்பது ஒரு விருப்பத் தெரிவு அல்ல, அதுவே மனிதர்கள் சமூகமாக வாழ்வதற்குப் பயன்படுத்தும் ஒரு அத்தியாவசியக் கருவி என்பதைத் தெளிவுபடுத்துகிறது.

இந்தக் கருத்தையே கலாசார மானுடவியலும் எதிரொலிக்கிறது. ஆற்றுகை என்பது 'கலாசாரத்தை வெளிப்படுத்தும் ஒரு நிகழ்வு மட்டுமல்ல அதுவே கலாசாரத்தை உருவாக்கும் ஒரு செயலும் ஆகும்'. அதாவது, நாம் ஏற்கனவே இருக்கும் கலாசாரத்தை வெறுமனே பிரதிபலிப்பது மட்டுமல்ல, ஒவ்வொரு முறை நாம் ஒரு செயலை 'ஆற்றும்போதும்', அந்தக் கலாசாரத்தை நாம் மீண்டும் புதிதாக உருவாக்குகிறோம்.

ஆற்றுகை எவ்வாறு கலாசாரத்தை உருவாக்குகிறது? ரிச்சர்ட் பௌமன் (Richard Bauman), ஆற்றுகையை ஒரு தனித்துவமான தகவல் தொடர்பு முறையாக (a special mode of communication) வரையறுக்கிறார். பௌமனின் கருத்துப்படி, ஒரு சாதாரண பேச்சிலிருந்து ஆற்றுகை வேறுபடும் புள்ளி, அது நிகழ்த்துபவரின் திறமை மீது பார்வையாளரின் கவனத்தைக் கோருவதாகும்.

ஒரு பேச்சாளர் 'இப்போது நான் ஒரு கதை சொல்லப் போகிறேன்' என்று அறிவிக்கும்போது, அவர் தனது சாதாரண உரையாடல் முறையிலிருந்து 'ஆற்றுகை' முறைக்கு மாறுகிறார். இங்கே, அவர் சொல்லும் கதையின் உள்ளடக்கம் மட்டும் முக்கியமல்ல அவர் 'எப்படிச் சொல்கிறார்' என்பதும் முக்கியமாகிறது. பார்வையாளர்களும் அவரது சொல்லும் திறமையை மதிப்பிடத் தயாராகிறார்கள். ஆகவே, ஆற்றுகை என்பது சடங்கு முதல் அன்றாட வாழ்வு வரை பரந்து விரிந்துள்ளது.

நாம் ஆற்றுகைகளின் ஊடாக கலாசாரம், அடையாளம், சமூக அமைப்பு மற்றும் சமூக ஊடாடல்கள் எவ்வாறு உருவாக்கப்படுகின்றன, பேணப்படுகின்றன மற்றும் மாற்றியமைக்கப்படுகின்றன என்பதை ஆராயலாம்.

ஆற்றுகை என்பது சமூகச் சிந்தனைகளுக்கு வடிவம் கொடுக்கும் செயல்வடிவமும், கலாசாரத்தை உற்பத்தி செய்யும் ஊடகமும் ஆகும்.' சமூகவியல் மற்றும் மானுடவியல் நோக்கில் 'ஆற்றுகை' என்பது மேடையில் நிகழ்த்தப்படும் கலை நிகழ்வு மட்டுமல்ல, அது மனித சமூகத்தின் இருப்பிற்கான அடிப்படைத் தேவையாகும். கண்ணுக்குப் புலப்படாத சமூகச் சிந்தனைகள், நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்கள் (காரணம்) கண்ணுக்குப் புலப்படும் உறுதியான வடிவத்தை (விளைவு) அடையும் புள்ளியே ஆற்றுகையாகும். மனிதர்கள் தங்களுக்குள் உறவுகளைப் பேணுவதற்கும், சமூகமாக ஒன்றிணைந்து வாழ்வதற்கும் பயன்படுத்தும் ஒரு இன்றியமையாத தகவல் தொடர்பு கருவியாக இது செயற்படுகிறது. முக்கியமாக, ஆற்றுகை என்பது கலாசாரத்தின் ஒரு கண்ணாடி மட்டுமல்ல அது கலாசாரத்தை உருவாக்கும் ஒரு தொழிற்சாலையும் ஆகும். ஒவ்வொரு முறை ஒரு செயல் நிகழ்த்தப்படும்போதும் (சடங்கு முதல் அன்றாடப் பேச்சு வரை), அங்கு கலாசாரம் புதுப்பிக்கப்படுகிறது அல்லது மறுஉற்பத்தி செய்யப்படுகிறது. சுருக்கமாகச் சொல்வதானால், ஒருவரின் செயல் எப்போது சாதாரண உரையாடல் தளத்திலிருந்து விலகி, நிகழ்த்துபவரின் திறனை முன்னிறுத்தி, பார்வையாளரின் கவனத்தைக் கோருகிறதோ, அப்போதே அந்தச் சமூகச் செயல் 'ஆற்றுகை'யாக உருமாறுகிறது.

இந்த பரந்த வரையறையின்படி, ஆற்றுகையை நாம் இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பார்க்கலாம்:

- ஆற்றுகைக்கலைவடிவங்கள் (Performing Arts)
- சடங்குசார் மற்றும் கலாசார ஆற்றுகைகள் (Ritual and Cultural Performances)

ஒரு சமூகத்தின் நம்பிக்கைகளில் இருந்து சடங்குகள் பிறக்கின்றன. தெய்வீக சக்தியினை அல்லது அதற்கு மாறான சக்திகளை வணங்குவது நம்பிக்கை வைப்பது என்று சடங்குகள் பிறப்பெடுக்கின்றன. 'மிகத் தொடக்க காலத்தில் இயற்கை மனிதருக்கு ஒரு புதிராகத் தோற்றமளித்தது. இருள், சூரியன், பாம்பு ஆகிய இயற்கைப் பொருள்கள் மனிதருக்குப் புதிராக இருந்தன, அதே நேரத்தில் அச்சத்தையும் ஊட்டின. ஆயினும் மனிதர் இயற்கையே தனக்கு உணவை அளிக்கிறது என்று அறிந்துகொண்டனர். அச்சமும் உணவுத் தேவையும் கொண்ட மனிதர் இயற்கையின் பேராற்றலை வணங்கத் தலைப்பட்டனர். கூட்டு உழைப்பினால் உணவைத்தேட மனிதர் முற்பட்டபோது ஆற்றல் மிகுந்த இயற்கையைத் தனக்கு இணங்க வைக்க முயன்றார்கள். பழங்குடி மக்களின் பாட்டும் ஆட்டமும் அவர்களுடைய உணவுத் தேவையோடு தொடர்புடையவை. வேட்டை மிருகங்கள் நிறையக் கிடைப்பதற்காகவும் பின் உணவுக்குரிய பயிர்கள் நிறைய விளைவதற்காகவும் அதற்கான மழை பெய்வதற்காகவும் இயற்கையை அவர்கள் வேண்டினர். அதற்காக, பயிர்கள் விளைவது போன்றும் மழை பெய்வது போன்றும் ஆடிக்காட்டினர். இவ்வாறு 'போலச் செய்து காட்டுவதன்' மூலம் இயற்கையை இணங்கவைக்க முடியும் என்று நம்பினர். இவ்வகையான ஆட்டமும் பாட்டமும் மந்திரச் சடங்குகளோடு தொடர்புடையன. மந்திரமே உலக நாகரிகத்தில் தொடக்க காலத்தில் கலைகளுக்கும்

விஞ்ஞானத்திற்கும் மூலமாக இருந்தது என்பதனைச் சமூகவியல் அறிஞர்கள் பிரேசர், ஜார்ஜ் தாம்சன் போன்றோர் விரிவாக விளக்கிக் காட்டி உள்ளனர்.' இவ்வாறான தெய்வ மற்றும் ஏனைய சக்திகளை முதன்மையாகக் கொண்டு அவற்றை வணங்கி, பலியிட்டு வணங்கும் சடங்குகளை வழிபாட்டுச் சடங்குகள் என்பர்.

மனித வாழ்க்கையில் ஒரு சமூக நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறும் முக்கியத் திருப்புமுனைகளைக் குறிக்க வாழ்வியற்சடங்குகள் முனைகின்றன. பிரெஞ்சு மானுடவியலாளர் ஆர்னால்ட் வான் ஜென்னெப் (Arnold van Gennep), இந்தச் சடங்குகளில் மூன்று முக்கிய உப-நிலைகள் (sub-classifications) இருப்பதாகக் கூறினார்.



- பிரிநிலை (Separation): தனிநபர் தனது முந்தைய சமூக நிலையிலிருந்தோ அல்லது குழுவிலிருந்தோ உடல் ரீதியாகவோ அல்லது அடையாள ரீதியாகவோ பிரிக்கப்படுதலாகும். உதாரணமாக திருமணத்தின் போது மணப்பெண் தனது வீட்டை விட்டு விலகுவது, இறப்புச் சடங்கில் இறந்தவரின் உடல் வீட்டிலிருந்து அகற்றப்படுவது.
- இடைநிலை / விளிம்புநிலை (Liminality / Transition): இது ஒரு 'இடைப்பட்ட' நிலை. தனிநபர் தனது பழைய நிலையில் இல்லை, ஆனால் புதிய நிலையையும் முழுமையாக அடையவில்லை. இது குழப்பம், கற்றல் மற்றும் மாற்றத்தின் காலமாகும். உதாரணமாக திருமணச் சடங்குகள் நடைபெறும் நேரம் (மணமகன் / மணமகள் என்ற நிலையிலிருந்து கணவன் / மனைவி என்ற நிலைக்கு மாறும் முன், துறவறம் ஏற்கும் முன் தனிமையில் இருப்பது.
- சேர்நிலை (Incorporation): தனிநபர் தனது புதிய சமூக நிலையில், புதிய உரிமைகள் மற்றும் பொறுப்புகளுடன் சமூகத்தால் மீண்டும் ஏற்றுக்கொள்ளப்படுதல். திருமணம் முடிந்தபின் தம்பதியினராக சமூகத்திற்கு அறிமுகப்படுத்தப்படுதல், பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறுதல் போன்ற மனிதர் மனிதருக்காகச் செய்யும் பிறப்பு சடங்கு, பருவம் எய்தமைக்கான சடங்குகள், திருமணங்கள், இறப்புச் சடங்குகள் என மேற்கொள்ளும் வாழ்வியற் சடங்குகள், தொழிலைத் தொடங்கும்போதோ, அதன் வளர்ச்சி மற்றும் செழிப்புக்காகவோ, அல்லது கருவிகளுக்கு மரியாதை கொடுப்பதற்காகவோ செய்யப்படும் சடங்குகளை, தொழில்முறைச் சடங்குகளைக் காணலாம்.

மானுடவியலாளர் விக்டர் டர்னர் (Victor Turner) From Ritual to Theatre என்ற நூலில் சடங்குகள், ஒரு சமூகத்தின் அடிப்படை மதிப்புகளை வெளிச்சம் போட்டுக் காட்டுவதுடன், சமூக மாற்றங்கள் நிகழும்போதும், நெருக்கடிகள் ஏற்படும்போதும் சமூகத்தைக் கரைந்துவிடாமல் பிணைக்க உதவுகின்றன என்கிறார்.

டர்னர், 'சமூக நாடகம்' என்ற கருத்தாக்கத்தின் மூலம், சமூக மோதல்கள் எவ்வாறு ஆற்றுகை வடிவம் எடுக்கின்றன என்பதை விளக்கினார். ஒரு சமூகத்தில் ஒரு பிளவு ஏற்படும்போது, அது ஒரு நெருக்கடியாக மாறுகிறது. அந்த நெருக்கடியைத் தீர்க்க, சமூகம் 'சடங்குகளை' நிகழ்த்துகிறது. வெற்றிகரமாக நடந்தால், சமூகம் மீண்டும் இணைகிறது அல்லது தோல்வியுற்றால் நிரந்தரமாகப் பிரிகிறது. இந்த முழு நிகழ்வுமே ஒரு நாடகத்தைப் போன்ற படிநிலைகளைக் கொண்டது என்கிறார்.

ரிச்சர்ட் ஷெக்னர் , சடங்குகள் மற்றும் நாடகங்கள் இரண்டிற்கும் பொதுவான ஒரு அம்சத்தை 'மீட்டெடுக்கப்பட்ட நடத்தை' (Restoration of Behavior) என்று அழைக்கிறார். அதாவது, ஆற்றுகை என்பது புதிதாக, அந்தத் தருணத்தில் உருவாக்கப்படுவது அல்ல. அது, முன்பே நிகழ்ந்த, பயிற்சி செய்யப்பட்ட, பலமுறை மீண்டும் நிகழ்த்தப்பட்ட 'நடத்தைகளின் துண்டுகளை' மீண்டும் ஒழுங்கமைத்து நிகழ்த்துவதாகும். ஒரு திருமணம், ஒரு திருவிழா, அல்லது ஒரு நாடகம் என எதுவாக இருந்தாலும், அவை அனைத்தும் இந்த 'மீட்டெடுக்கப்பட்ட நடத்தைகளின்' தொகுப்புகளே என்கிறார்.

எனவே, சடங்குசார் மற்றும் கலாசார ஆற்றுகைகள் என்பவை மனிதகுலம் இயற்கையின் மீதான அச்சத்தைப் போக்குவதற்கும் சமூக வாழ்வியலின் மாற்றங்களை நெறிப்படுத்துவதற்கும், சமூகக் கட்டமைப்பை உறுதிப்படுத்துவதற்கும் காலங்காலமாக முன்னெடுக்கும் ஒரு கூட்டுச் செயற்பாடாகும். தொ. பரமசிவன், ஆர்னால்ட் வான் ஜென்னெப், விக்டர் டர்னர் மற்றும் ரிச்சர்ட் ஷெக்னர் ஆகியோரின் கருத்துகளை ஒன்றிணைத்துப் பார்க்கும்போது, சடங்கு என்பது வெறும் நம்பிக்கையின்

வெளிப்பாடு மட்டுமல்ல அது ஒரு சமூகத் தொழினுட்பம் என்பது புலனாகிறது. ஆதிகால மனிதர் இயற்கையைக் கட்டுப்படுத்தவும் உணவுத் தேவையை நிறைவு செய்யவும் மேற்கொண்ட 'போலச் செய்தல்' என்ற அடிப்படையிலான வழிபாட்டு முறையே, பிற்கால கலைகளுக்கும் அறிவியலுக்கும் மூலமாக அமைந்தது. இச்சடங்குகள் தனிமனித வாழ்வில் ஏற்படும் பிறப்பு முதல் இறப்பு வரையிலான மாற்றங்களை 'பிரிநிலை, இடைநிலை, சேர்நிலை' ஆகிய மூன்று படிநிலைகள் ஊடாக அங்கீகரித்து தனிநபரை ஒரு சமூக நிலையிலிருந்து மற்றொரு நிலைக்குப் பக்குவமாக நகர்த்துகின்றன. அதேசமயம் சமூகத்தில் ஏற்படும் முரண்பாடுகள் மற்றும் நெருக்கடிகளைத் தீர்க்கும் 'சமூக நாடகங்களாகவும்' இவை செயற்பட்டு, சமூகம் சிதறுண்டு போகாமல் அதன் பிணைப்பை உறுதி செய்கின்றன. இவை எதுவும் தன்னிச்சையாக அந்தத் தருணத்தில் உருவாவதில்லை; மாறாக முன்னரே பயிற்றுவிக்கப்பட்டு மீண்டும் மீண்டும் நிகழ்த்தப்படும் 'மீட்டெடுக்கப்பட்ட நடத்தைகளின்' (Re-stored Behavior) தொகுப்பாகவே அமைகின்றன. சுருக்கமாகச் சொல்வதானால் சடங்குசார் ஆற்றுகை என்பது இயற்கையை எதிர்கொள்ளவும், சமூக மாற்றங்களை ஒழுங்குபடுத்தவும் மனிதர் உருவாக்கிய ஒரு கலாசாரப் பாதுகாப்புப் பொறிமுறையாகும்.

ஆற்றுகைக்கலைகள் (Performing Arts):

'ஆற்றுகைக்கும், ஆற்றுகைக் கலைகளுக்குமிடையே நிகழ்த்தும் முறை, நிகழ்வை உள்வாங்கும் முறை என்பனவற்றிற்கிடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன'. அதாவது, ஒரு நாடகத்தைப் பார்ப்பதற்கும், ஒரு சமூகச் சடங்கில் பங்கேற்பதற்கும் இடையில், அதை நிகழ்த்தும் விதத்திலும், பார்வையாளர் அல்லது பங்கேற்பாளர் அதை உணரும் விதத்திலும் அடிப்படையான வேறுபாடுகள் இருக்கின்றன. ஆற்றுகைகள் கலைக்குரிய அளவு கோல்களைக் கொண்டு ஆற்றுகைக் கலைகளாக மாற்றம் பெறுகின்றன. ஈழத்து அரங்க ஆய்வாளர் சி. மௌனகுரு தனது அரங்கியல் நூலில் 'ஒழுங்கு, அழகு, நேர்த்தி, படைப்பாக்கம், உணர்வுகளைத் தூண்டல், பரவசமாக்கல், மனதைச் சாந்தப்படுத்துதல், பொழுது போக்கு, மகிழ்ச்சி என்பனவெல்லாம் கலையினை ஆற்றுகையிலிருந்து பிரித்துக்காட்டும் அம்சங்களாகும்.' என்கிறார்.

ஆற்றுகையின் முதன்மை பயன்பாட்டு நோக்கம் இரண்டாம் பட்சமாகி, அதன் அழகியல் பரிமாணம் முதன்மை பெறும்போது ஆற்றுகைக்கலை வடிவமாக மாற்றம் பெறுகிறது. இந்த மாற்றத்தின் போது, 'பார்வையாளர்-நிகழ்த்துபவர்' உறவில் ஒரு தன்னுணர்வுள்ள மாற்றம் ஏற்படுகிறது; சில மரபு வடிவங்களில் இது ஒரு தெளிவான பார்வையாளர் பிளவாக மாறுகிறது, அதேசமயம் பல பங்கேற்பு வடிவங்களில் இந்த சமூக ஊடாட்டம் ஒரு புதிய, நெகிழ்வான உறவாகவே தொடர்கிறது. மேலும், அந்த ஆற்றுகை தனக்கென ஒரு குறிப்பிட்ட இலக்கணத்தைக் கட்டமைத்துக் கொண்டோ அல்லது நிறுவப்பட்ட மரபுகளைத் தகர்க்கும் ஒரு தன்னுணர்வுள்ள படைப்பாகவோ மாறுகிறது. இறுதியாக, அந்த ஆற்றுகை ஒரு குறிப்பிட்ட கலாசாரச் சூழலில் ஒரு 'கலை'யாக அங்கீகரிக்கப்படும்போது, அது ஒரு ஆற்றுகைக் கலைவடிவமாக நிலைபெறுகிறது. இந்த அங்கீகாரம் என்பது, ஒரு பெரும்பான்மை சமூகத்தால் கலாசார அடையாளமாக ஏற்கப்பட்டு நிறுவனப்படுவதாகவோ அல்லது ஒரு எதிர்-கலாசார இயக்கமாக நிறுவப்பட்ட மதிப்பீடுகளைக் கேள்விக்குட்படுத்துவதாகவோ இருக்கலாம்.



ஹோவர்ட் பெக்கரின் 'கலை உலகங்கள்' என்ற கருத்தாக்கம் ஒரு கலைப் படைப்பு (உதாரணமாக, ஒரு நடன நிகழ்வு) என்பது ஒரு தனிப்பட்ட கலைஞரின் மேதமையால் மட்டும் உருவாவதில்லை. அந்த நடனத்தை சாத்தியமாக்கும் நடனக் கலைஞர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள், இசையமைப்பாளர்கள், விமர்சகர்கள், பார்வையாளர்கள், மற்றும் நிதி வழங்குநர்கள் என ஒரு முழு சமூக வலையமைப்பின் கூட்டுச் செயற்பாட்டின் மூலமே அது ஒரு 'கலையாக' அங்கீகரிக்கப்படுகிறது என்கிறார்.

எனவே ஆற்றுகைக்கலை என்பது ஒரு சாதாரண சமூகச் சடங்கு அல்லது நிகழ்வானது (ஆற்றுகை) அழகியல் மற்றும் படைப்பாக்கக் கூறுகளால் மெருகேற்றப்பட்டு ஒரு கலை வடிவமாக மாற்றமடைவதைக் குறிக்கிறது. ஒரு நிகழ்வின் பயன்பாட்டு நோக்கம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ஒழுங்கு, அழகு, நேர்த்தி, உணர்வுகளைத் தூண்டுதல், மகிழ்ச்சி மற்றும் பொழுதுபோக்கு ஆகிய அழகியல் கூறுகள் முதன்மை பெறும்போது அது ஆற்றுகைக் கலையாக உருப்பெறுகிறது. இம்மாற்றத்தின்போது பார்வையாளருக்கும் நிகழ்த்துபவருக்கும் இடையிலான உறவுமுறை தன்னுணர்வுடன் கூடிய ஒரு புதிய வடிவத்தைப் பெறுவதுடன், அந்த நிகழ்வு தனக்கென ஒரு இலக்கணத்தைக் கட்டமைத்துக்கொள்கிறது. மேலும், இது ஒரு தனிமனித மேதமையால் மட்டும் உருவாவதல்ல. மாறாக, கலைஞர்கள், தொழினுட்ப வல்லுநர்கள், விமர்சகர்கள் மற்றும் பார்வையாளர்கள் அடங்கிய ஒரு சமூக வலையமைப்பின் கூட்டுச் செயற்பாட்டினால் உருவாக்கப்பட்டு, ஒரு குறிப்பிட்ட கலாசாரச் சூழலில் 'கலை' என அங்கீகரிக்கப்படும் நிகழ்வே 'ஆற்றுகைக்கலை' ஆகும்.

சமூக ஒழுங்கு:



நவீன அரசியல் அரசுக் கோட்பாட்டடிப்படையில் சமூக ஒழுங்கானது சட்டங்கள், காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள் மூலம் பேணப்படுகிறது. இத்தகைய நவீன நிறுவனங்கள் உருவாகாத காலகட்டத்தில் சமூக ஒழுங்கு எவ்வாறு பேணப்பட்டது? மனிதர்கள் எதற்குக் கட்டுப்பட்டார்கள்? அவர்களது நடத்தையை நெறிப்படுத்திய எழுதப்படாத விழுமியங்கள் எவை? இக்கேள்விகளை ஆராயும் சமூகவியலாளர்கள், சமூகத்தின் அடித்தளத்திலிருந்து ஊற்றெடுத்த சடங்குகளும், கலைவடிவங்களுமே சமூக ஒழுங்கை ஆழமாக வேரூன்றச் செய்தன என்ற முடிவிற்கு வருகின்றனர்.

சமூகவியல் அறிஞர் எமில் டேர்க்கைம் குறிப்பிடுவது போல, சமூகம் என்பது ஒரு 'கூட்டு மனசாட்சி' ஆகும். இந்தக் கூட்டு மனசாட்சியை உருவாக்குவதிலும், அதனைப் பேணுவதிலும் ஆற்றுகைகள் வகிக்கும் பங்கு அளப்பரியது. சடங்குகள் என்பவை வெறும் நம்பிக்கைகளின் வெளிப்பாடுகள் மட்டுமல்ல அவை சமூகக் கட்டமைப்பை உறுதிப்படுத்தும் குறியீட்டுச் செயற்பாடுகள் ஆகும். ஆற்றுகைகளின் பங்களிப்பை முழுமையாகப் புரிந்து கொள்வதற்கு முன், 'சமூக ஒழுங்கு' என்பதைச் சமூகவியல் தளத்தில் வரையறுப்பது அவசியமாகிறது. சமூகவியல் நோக்கில் 'சமூக ஒழுங்கு' என்பது பன்முகத்தன்மை கொண்ட ஒரு கருத்துருவாக்கமாகும்.

இதனை மூன்று பிரதான பரிமாணங்களில் நோக்கலாம்.

- கட்டுப்பாட்டுப் பொறிமுறை இது சமூகத்தில் வன்முறைகளைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலைநாட்டும் வழிமுறையாகும். மனிதரது தன்னிச்சையான விருப்பு வெறுப்புகள் சமூகத்தின் பொது நலனுக்கு எதிராகத் திரும்பும்போது, அவர்களைக் கட்டுப்படுத்த ஒரு பொறிமுறை தேவைப்படுகிறது.
- இணக்கப்பாடு சமூக உறுப்பினர்களுக்கிடையே நிலவும் பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் சமூக உறவுநிலையை இது சுட்டிக்காட்டுகிறது. 'சமூக ஒழுங்கு என்பது ஒருமைப்பாடு அல்லது இணக்கப்பாடு எனும் அர்த்தத்தினையும் மற்றொரு விதத்தில் குறிக்கிறது.'
- எதிர்வு கூறல்: சமூக ஒழுங்கு என்பது மனித நடத்தையை எதிர்வு கூறக்கூடியதாக மாற்றுகிறது. பிற மனிதர்கள் நம்மிடம் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதையும், நாம் அவர்களிடம் எதை எதிர்பார்க்கலாம் என்பதையும் புரிந்து செயற்படுவதன் மூலமே சமூக வாழ்வு சாத்தியமாகிறது.

கின்ஸ்பேர்க்கின் கருத்துப்படி சமூக ஒழுங்கு என்பது சமூகக் கட்டமைப்பிலுள்ள பல்வேறு கூறுகள் (குடும்பம், கல்வி, பொருளாதாரம் போன்றவை) ஒன்றுடன் ஒன்று இணங்கிச் செயற்படுவதாகும். தனி ஒரு கூறு மட்டும் மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது. இக்கூறுகள் அனைத்தும் ஒன்றிணைந்து 'ஒத்திசைவாக' இயங்கும்போதே சமூகம் சீராக இயங்குகிறது. எங்கு ஒத்திசைவு குறைகிறதோ, அங்கு ஒழுங்கின்மை ஏற்படுகிறது.

சமூகவியலின் தந்தையான கொம்ட் சமூக ஒழுங்கை 'சமூக நிலையியல்' என்ற கோணத்தில் பார்த்தார். அவரைப் பொறுத்தவரை, சமூக ஒழுங்கு என்பது சமூகத்தின் நிலைத்திருக்கும் தன்மை அல்லது தொடர்ச்சி ஆகும். மனித சமூகம் அறிவு ரீதியாக (இறையியல் நிலை முதல் நேர்நிலைவாத நிலை வரை) வளர்ந்தாலும், சமூகத்தின் அடிப்படை அமைப்புகள் சிதையாமல் காக்கப்படுவது இந்த ஒழுங்கினால்தான். இது மாற்றங்களை மட்டுப்படுத்தி, ஸ்திரத்தன்மையைப் பேணுகிறது.

டேர்கைமைப் பொறுத்தவரை சமூக ஒழுங்கு என்பது ஒழுக்க ரீதியானது. இது 'ஒருமைப்பாடு' மூலம் உருவாகிறது. மக்கள் பொதுவான நம்பிக்கைகள் மற்றும் விழுமியங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது 'கூட்டு மனசாட்சி' உருவாகிறது. இதுவே, மக்களைக் குற்றங்கள் செய்யாமல் தடுத்து, சமூக விதிகள் மற்றும் நிறுவனங்களுக்குக் கட்டுப்பட வைக்கிறது.

பார்சன்ஸின் முறைமைக் கோட்பாட்டின்படி சமூக ஒழுங்கு என்பது மூன்று உப முறைமைகளின் இணைப்பாகும். கலாசார முறைமை, இது விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகயால் ஆனது. ஆளுமை முறைமை என்பது தனிமனித இயல்புகளைக் குறிக்கும். மூக முறைமை என்பது மனித உறவுகள் ஆகும். எப்போதெல்லாம் கலாசார விழுமியங்கள் தனிமனித ஆளுமையோடு ஒத்துப்போகிறதோ அப்போதெல்லாம் சமூக ஒழுங்கு தானாகவே நிலைநாட்டப்படுகிறது. இது ஒரு எதிர்பார்ப்புகளின் கட்டமைப்பு ஆகும்.

மலினோவஸ்கியின் கருத்துப்படி, சமூக ஒழுங்கு என்பது மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட ஒரு கருவியாகும். சமூக நிறுவனங்கள் (சமயம், சட்டம், குடும்பம்) ஒவ்வொன்றும் மனிதரின் உயிரியல் மற்றும் உளவியல் தேவைகளை நிறைவேற்றுவதற்காகச் செயற்படுகின்றன. இந்தத் தேவைகள் சரியான முறையில் பூர்த்தி செய்யப்படும்போது மக்கள் தாமாகவே விதிகளுக்குக் கட்டுப்படுகிறார்கள். இதனால் ஒழுங்கு நிலவுகிறது.

எனவே, சமூக ஒழுங்கு என்பது, சமூக அமைப்பின் நிலைத்தன்மையை, தொடர்ச்சியை, மற்றும் சீரான செயற்பாட்டை உறுதி செய்வதற்காக, சமூக நிறுவனங்கள்,

விதிமுறைகள் மற்றும் பரஸ்பர எதிர்பார்ப்புகளின் அடிப்படையில், வன்முறைகளைக் கட்டுப்படுத்தி, உறுப்பினர்களிடையே ஒத்திசைவையும் ஒருமைப்பாட்டையும் பேணுகின்ற செயல்முறையாகும்.

உற்பத்தி மற்றும் பொருளாதார ஒழுங்கு:


மனித சமூகத்தின் இருப்பு என்பது அதன் உயிர்வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலேயே தங்கியுள்ளது. சமூகவியல் நோக்கில் 'பொருளாதார ஒழுங்கு' என்பது வெறுமனே பணப் பரிமாற்றம் அல்லது வணிகம் சார்ந்தது மட்டுமல்ல. அது ஒரு சமூகம் தனது அடிப்படைத் தேவைகளான உணவு, உடை மற்றும் இருப்பிடம் ஆகியவற்றை எவ்வாறு உற்பத்தி செய்கிறது, எவ்வாறு பகிர்ந்தளிக்கிறது, மற்றும் எவ்வாறு நுகர்கிறது என்பதைத் தீர்மானிக்கும் ஒரு சமூகக் கட்டமைப்பாகும்.

'உற்பத்தி' என்பது இயற்கையிடமிருந்து மூலவளங்களைப் பெற்று, மனித உழைப்பைச் செலுத்தி, அதனைப் பயன்பாட்டுப் பொருளாக மாற்றும் ஒரு செயல்முறையாகும். இந்தச் செயல்முறை தன்னிச்சையாக நடைபெறுவதில்லை. இது ஒரு குறிப்பிட்ட ஒழுங்கின் அடிப்படையில் நிகழ்கிறது. யார் எதை உற்பத்தி செய்வது? உற்பத்தியான பொருளை யார் கட்டுப்படுத்துவது? மிகை உற்பத்தியை எவ்வாறு கையாள்வது? போன்ற கேள்விகளுக்கு ஒரு சமூகம் வகுத்துள்ள விடைகளே 'பொருளாதார ஒழுங்கு' எனப்படுகிறது.

பழங்குடி மற்றும் வேளாண் சமூகங்களில், இந்தப் பொருளாதார ஒழுங்கானது நவீன காலத்தைப் போலச் சந்தை விதிகளால் தீர்மானிக்கப்படுவதில்லை. மாறாக, அது உறவுமுறைகள், சமய நம்பிக்கைகள் மற்றும் சடங்குகள் ஆகியவற்றால் பின்னப்பட்டுள்ளது. இதனைச் சமூகவியல் அறிஞர் கார்ல் பொலன்யி 'சமூகப் பிணைப்புக்குட்பட்ட பொருளாதாரம்' என்று அழைக்கிறார். அதாவது, பொருளாதாரம் என்பது சமூகத்திலிருந்து தனித்து இயங்கும் ஒரு துறை அல்ல. அது சமூக, கலாசார விழுமியங்களுக்குள் பொதிந்துள்ள ஒன்றாகும். உற்பத்தி மற்றும் பொருளாதார ஒழுங்கு என்பது பின்வரும் மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கியது:

- உழைப்புப் பிரிவினை: உற்பத்தியில் யார் எந்தப் பணியைச் செய்வது என்ற வரையறை. (உதாரணமாக: ஆண்கள் உழுதல், பெண்கள் நாற்று நடுதல்).
- வள முகாமைத்துவம்: நிலம், நீர், கால்நடைகள் போன்ற உற்பத்திச் சாதனங்களை நிர்வகிக்கும் முறை.
- பகிர்வு நீதி: உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைச் சமூக உறுப்பினர்களிடையே பங்கிடும் முறை.

இந்த மூன்று கூறுகளையும் சீராக இயக்குவதற்கு, சமூகத்திற்கு ஒரு உந்துசக்தி தேவைப்படுகிறது. அந்த உந்துசக்தியாகவே 'ஆற்றுகைகள்' செயற்படுகின்றன. ஒரு சமூகம் தனது உற்பத்தி நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கும் (விதைப்பு), முடிப்பதற்கும் (அறுவடை), மற்றும் பகிர்ந்தளிப்பதற்கும் சடங்குகளையே காலக்கடிகாரமாகப் பயன்படுத்துகிறது. மனிதர் இயற்கையைத் தனக்கு இணங்க வைக்கும் முயற்சியில், உற்பத்தியை ஒரு பௌதீகச் செயலாக மட்டுமல்லாமல், ஒரு புனிதமான சடங்காகவும் மாற்றமுற்படுகின்றனர். இதன் மூலம் உற்பத்தியில் ஏற்படும் இடர்கள் குறைக்கப்பட்டு, பொருளாதார ஒழுங்கு பேணப்படுகிறது.



ஒரு சமூகத்தின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் அதன் அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் பொருளாதார பலம் இன்றியமையாதவை ஆகும். ஆதிகால மனிதர் இயற்கையோடு போராடி வாழ்ந்த காலத்திலிருந்தே, உற்பத்தியைப் பெருக்குவதற்கும் அதனைத் தக்கவைப்பதற்கும் சடங்குகளையும் கலைகளையும் கருவிகளாகப் பயன்படுத்தினர். 'கூட்டு உழைப்பினால் உணவைத்தேட மனிதர் முற்பட்டபோது ஆற்றல் மிக்க இயற்கையைத் தனக்கு இணங்க வைக்க முயன்றனர். பழங்குடி மக்களின் பாட்டும் ஆட்டமும் அவர்களது உணவுத் தேவையுடன் தொடர்புடையவை. வேட்டை மிருகங்கள் நிறையக் கிடைப்பதற்காகவும் அதற்கான மழை பெய்வதற்காகவும் இயற்கையை அவர்கள் வேண்டினர். அதற்காகப் பயிர்கள் விளைவது போன்றும் மழை பெய்வது போன்றும் ஆடிக்காட்டினர்'. இவ்வாறு ஒவ்வொரு உற்பத்தி சார்ந்த பொருளாதார ஒழுங்கையும், மனிதர் தலைமுறை தலைமுறையாக ஆற்றுகைகள் ஊடாகக் கடத்தி, அச்சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பைப் பேணுகின்றனர்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களில், உற்பத்தியையும் உழைப்பையும் நெறிப்படுத்தவும், பொருளாதார ஒழுங்கைப் பேணவும் பயன்படும் ஆற்றுகைகள், அச்சமூகத்தில் சடங்குகளாகவும் கலைவடிவங்களாகவும் உள்ளார்ந்து செயற்படுகின்றன. சமூகவியல் நோக்கில் இச்சடங்குகள் வழிபாட்டு முறைகள் மட்டுமல்ல இவை உற்பத்தியின் ஒரு பகுதியாகவே திகழ்கின்றன.

ஒவ்வொரு சமூகத்தின் புழக்கத்திலும் உள்ள வழிபாட்டு முறைகள்,



அச்சமூகத்தின் உற்பத்தித் தன்மையைப் பிரதிபலிப்பனவாகவே உள்ளன. 'தெய்வங்களின் வடிவமும் குணமும் அவைசார்ந்த சமூகத்தின் தேவைகளையொட்டி அமைந்தவைதாம். கால்நடை வளர்ப்போரின் தெய்வம் மாடுகள், கன்றுகள் சூழ்ந்தபடி கையில் புல்லாங்குழலுடன்தான் இருக்கமுடியும். உழவர்களின் தெய்வம் மழைதருகின்ற இந்திரனாகவோ, கையில் கலப்பை ஏந்திய பலராமனாகவோத்தான் இருக்கமுடியும். சுருக்கமாகச் சொன்னால் ஒரு குறிப்பிட்ட இனக்குழு என்ன வகையான உற்பத்தி முறையினைச் சார்ந்து இருக்கிறதோ அதைப்பொறுத்து அத்தெய்வங்களின் வடிவமும் குணங்களும் அத்தெய்வ கதைகளும் அமையும்'. இத்தெய்வங்களே அச்சமூகத்தின் தொழில்சார் அறிவை அடுத்த தலைமுறைக்குக் கடத்திச் செல்லும் பண்பாட்டுக் கடத்திகளாகக் காணப்படுகின்றன. மட்டக்களப்பு கதிரவெளிப் பிரதேசத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்படும் 'வதனமார் சடங்கு', மேய்த்தலுக்கும் விளைவித்தலுக்கும் ஆதாரமாக இருக்கும் மாடுகளைப் பராமரிக்கும் நுட்பத்தைத் தலைமுறை தலைமுறையாகக் கடத்திச் செல்வதைக் காணலாம். இச்சடங்காற்றுகை தொழில்சார் அறிவைக் கடத்துவதுடன், அச்சமூகத்தின் தொழிற்கடமையினை ஒழுங்குபடுத்தும் ஒரு நிறுவனமாகவும் செயற்படுகிறது.

உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் 'தொழில் ஒழுக்கம்' முக்கிய பங்கு வகிக்கிறது. இலங்கையின் கொட்டியாரப் பகுதியில் நெல் அறுவடைக்குப் பின் களத்தில் நிகழ்த்தப்படும் 'சூட்டுக்களம்' என்ற சடங்கு, உழைப்புச் சக்தியை ஒருங்கிணைக்கும் ஒரு சிறந்த கருவியாகும். நெல் அறுத்தவுடன் கதிரடிக்கும் களத்தில் நிகழ்த்தப்படும் இது வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல, ஒரு கடுமையான தொழில்முறை ஒழுக்கத்தை வலியுறுத்தும் களமாகும். இச்சடங்கில் ஈடுபடும்போது கடுமையான கட்டுப்பாடுகள் பின்பற்றப்படுகின்றன.

'சூட்டுக் களத்திற்கு வேலை செய்ய... பெண்களுக்கு அனுமதியானது இல்லை. சூடு களத்தில் வேலை செய்யும் ஆண்கள் அவர்களது மனைவியினருடன் வேலைக்கு முன்பதாக ஊடலில் ஈடுபடக் கூடாது. தமது வீடுகளுக்கு செல்ல முடியாது.' இந்தக் கட்டுப்பாடுகளைச் சமூகவியல் நோக்கில் ஆராயும்போது பின்வரும் உண்மைகள் புலப்படுகின்றன:

- கவனக்குவிப்பு: இத்தகைய கட்டுப்பாடுகள் தொழிலாளர்களின் கவனத்தைச் சிதறவிடாமல், உற்பத்தியில் முழுமையாக ஈடுபடச் செய்யும் ஒரு உளவியல் உத்தியாகக் கருதப்படுகின்றன.
- தூய்மைவாதம்: களத்தைத் தூய்மையானதாகக் கருதுவதன் மூலம், உழைப்பு என்பது புனிதமான செயலாக மாற்றப்படுகிறது. மேலும், ஆண்களின் பாலியல் ரீதியான சக்தி வீணாகாமல், அது முழுமையாக உழைப்புச் சக்தியாக மாற்றப்படுவதாக நம்பப்படுகிறது.

மேலும், சூடு மிதித்தலின் போது பாடப்படும் பாடல்கள் (வேகமாக செல்லடா பொலி நடையா...) மாடுகளுக்கும், காவல் தெய்வங்களான வைரவர், நாகதம்பிரான் ஆகியோருக்கும் நன்றி கூறுவதாக அமைகின்றன. இது இயற்கையையும், உழைப்பையும் மதிக்கும் பண்பாட்டை வளர்ப்பதுடன், விவசாயத் தொழிலில் 'மனிதர் - விலங்கு - தெய்வம்' என்ற ஒரு உற்பத்திப் படிநிலையை நிலைநாட்டுகிறது.

உற்பத்தி என்பது வெறும் பொருளாதாரம் சார்ந்தது மட்டுமல்ல, அது இனப்பெருக்கம் சார்ந்த உயிரியல் தேவையும் ஆகும். 'மிகப்பழங்காலத்திலிருந்து மக்களினப்பெருக்கம், அதற்கு தேவையான உணவு உற்பத்திப்பெருக்கம், உணவு உற்பத்திக்கு தேவையான கால்நடைப்பெருக்கம், மழை இவையே மனிதகுல வரலாற்றில் சமுதாயத்தின் இலட்சியமும் தேவையுமாய் இருந்து இருக்கின்றன. எனவேதான், இன்றும் எல்லா மதத்தினருக்கும் மகப்பேறு என்பது இறைவனால் அருளப்பட்டது என்றும், அதைத் தடுத்து நிறுத்துவது பாவம் என்றும் அடிமனதில் எண்ணுகின்றனர். உயிர்களைப் பெருக்கும் ஆற்றல் பெண்களுக்கு உரிய பண்பாகும்'. எனவேதான் சமூகத்தில் உள்ள உற்பத்திசார் மற்றும் இனப்பெருக்கம் சார் சடங்குகள் பெரும்பாலானவை பெண்தெய்வ வழிபாட்டுடன் இணைந்தவையாக உள்ளன.

இயற்கை வளங்களைப் பாதுகாப்பதே நிலையான பொருளாதாரத்திற்கு வழிவகுக்கும். தென்னை மரத்தை ஒரு கன்னிப் பெண்ணாகப் பாவித்துச் செய்யப்படும் 'கன்னிப்பாளை காணுதல்' சடங்கு, இயற்கையை மனித உறவு நிலைக்குக் கொண்டு வருகிறது. 'தென்னை மரத்தை தமது வீட்டுப் பெண் பிள்ளையாக எண்ணி அதற்குப் பூப்புனித நீராட்டு விழா கொண்டாடுவதால்', இது மனிதருக்கும் இயற்கைக்குமான உறவை முறைப்படுத்துகிறது. இச்சடங்கு மூலம், தென்னை மரம் வெறும் ஒரு தாவரம் என்ற நிலையிலிருந்து, குடும்பத்தின்

ஒரு உறுப்பினராக மாறுகிறது. பொருளாதார நோக்கில் பார்க்கும்போது, இது தென்னை மரங்களைப் பாதுகாக்கவும், அதன் மூலம் பொருளாதார வளத்தைப் பெருக்கவும் மக்களுக்கு ஒரு உளவியல் தூண்டுதலை அளிக்கிறது. தென்னை மரம் ஒரு 'மகள்' என்ற ஸ்தானத்தைப் பெறுவதால், அதனை வெட்டுவதோ அல்லது அழிப்பதோ பாவம் என்ற உணர்வு உருவாக்கப்படுகிறது.

இதே போன்று தமிழகத்தில் 'கடலுக்கு சென்ற தம் குடும்பத்தினர் நலமுடன் ஊர் திரும்ப வேண்டும் எனப் பரதவப் பெண்கள் பலிதூவி வழிபாடு செய்தனர். பனை மரத்தில் தொன்று தொட்டு கடவுள் உறைவதாக நம்பிக்கை கொண்டனர். கடலில் தொழில் மேற்கொள்பவர்கள் கரை திரும்ப தடம் மாறாமல் இருக்க பனை மரம் இருப்பு அடையாளமாக இருந்ததால் மக்களிடம் இந்த நம்பிக்கை தோன்றியிருக்கலாம். இத்தகைய சடங்காற்றுகைகள் சமூகத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாப்பதன் மூலம் நீண்ட காலப் பொருளாதார ஒழுங்கைப் பேணுகின்றன.

நீதி பரிபாலனம் மற்றும் சமூகக் கட்டுப்பாடு:

நீதி பரிபாலனம் என்பது ஒரு சமூகத்தில் ஏற்படும் முரண்பாடுகளைக் களைந்து, தனிமனிதர்களுக்கும் சமூகத்திற்கும் இடையிலான உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாத்து, நீதியை நிலைநாட்டும் செயல்முறையாகும். நவீன அரசுக் கட்டமைப்பில் நீதிமன்றங்கள், சட்டங்கள் மற்றும் நீதிபதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. மானுடவியல் நோக்கில், நீதி பரிபாலனம் என்பது நவீன நீதிமன்றங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல. பழங்குடி மற்றும் கிராமியச் சமூகங்களில், வழக்காற்றுச் சட்டம் என்ற முறைமை காணப்படுகிறது. இங்கு எழுதப்பட்ட சட்டப் புத்தகங்களுக்குப் பதிலாக, மூதாதையர் வழிவந்த மரபுகள், சடங்குகள் மற்றும் நம்பிக்கைகளே சட்டங்களாகச் செயற்படுகின்றன. ஒரு சடங்கின்போது சாமியாடி (பூசாரி) வழங்கும் வாக்கு, ஊர்ச் சபையின் தீர்ப்பு, அல்லது தெய்வத்தின் முன் செய்யப்படும் சத்தியம் ஆகியவை 'நீதி பரிபாலனத்தின்' கருவிகளாகின்றன. இங்குச் சடங்கு ஒரு நீதிமன்றமாகவும், தெய்வம் ஒரு நீதிபதியாகவும் மாறி, சமூகத்தில் ஏற்படும் குற்றங்களுக்கும் பிழைகளுக்கும் தீர்வு வழங்குகிறது.

சமூகக் கட்டுப்பாடு ஒரு சமூகமானது தனது உறுப்பினர்களின் நடத்தைகளைச் சமூக விழுமியங்களுக்கு ஏற்ப நெறிப்படுத்தும் வழிமுறைகளைக் குறிக்கிறது. சமூகக் கட்டுப்பாடு இரண்டு வகைப்படும்.

- முறைசார் கட்டுப்பாடு: சட்டம், காவல்துறை, சிறைச்சாலை போன்றவற்றின் மூலம் வலுக்கட்டாயமாகப் பேணப்படுவது.
- முறைசாராக் கட்டுப்பாடு: இதுவே ஆற்றுகைகள் மற்றும் பண்பாட்டுடன் தொடர்புடையது. குடும்பம், மதம், சாதி, சடங்குகள், நம்பிக்கைகள், மற்றும் பொதுக்கருத்து ஆகியவற்றின் மூலம் தனிமனித நடத்தையைக் கட்டுப்படுத்துவதாகும்.



கிராமியச் சமூகங்களில் முறைசாராக் கட்டுப்பாடே அதிகம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஒரு தவறு செய்தால் 'தெய்வம் தண்டிக்கும்' என்ற பயம், 'ஊர் என்ன சொல்லும் ?' என்ற அவமான உணர்வு மற்றும் சடங்குகளின் போது முன்னிறுத்தப்படும் தார்மீகக் கதைகள் ஆகியவை தனிமனிதரைத் தவறு செய்யவிடாமல் கணிசமான அளவு தடுக்கின்றன.

ஆற்றுகைகள் மற்றும் சடங்குகளைப் பொறுத்தவரை, இவை இரண்டுமே ஒன்றிணைந்து செயற்படுகின்றன. சடங்கு நிகழ்த்தப்படும்போது, சமூகம் ஒன்றுகூடுகிறது (சமூகக் கண்காணிப்பு). தெய்வத்தின் பெயரால் குற்றங்கள் விசாரிக்கப்படுகின்றன (நீதி பரிபாலனம்). தவறு செய்தவர் தண்டிக்கப்படுவார் அல்லது மன்னிப்புக் கோருவார் என்ற நிலை உருவாக்கப்படுகிறது (சமூகக் கட்டுப்பாடு). எனவே, நீதி பரிபாலனம் என்பது முரண்பாட்டைத் தீர்க்கும் கருவி எனவும், சமூகக் கட்டுப்பாடு என்பது முரண்பாடு வராமல் தடுக்கும் மற்றும் நெறிப்படுத்தும் பொறிமுறை எனவும் வரையறுக்கலாம். இந்த இரண்டு செயற்பாடுகளையும் நிறைவேற்றும் மிக முக்கியமான சமூக ஊடகங்களாகவே நாட்டார் வழக்காறுகளும் ஆற்றுகைகளும் திகழ்கின்றன.

திருகோணமலை சேருவில பகுதியில் நடைபெறும் 'நாகதம்பிரான் வழிபாட்டு சடங்கு' இதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். கிராமப்புற மக்களிடையே ஏற்படும் திருட்டு, நிலத்தகராறு, குடும்பப் பிரச்சினைகள் மற்றும் தீர்க்க முடியாத நோய்கள் ஆகியவற்றுக்குத் தீர்வு காண மக்கள் இத்தெய்வங்களை நாடுகின்றனர். இங்கு சடங்கு என்பது ஒரு 'நீதி விசாரணை

முறையாக' மாறுகிறது. இச்சடங்கின் போது சாமியாடி (பூசாரி) உருவேற்றி அருள்வாக்குக் கூறுவதன் மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு வழங்குகிறார்.

இங்கு 'தெய்வம்' என்பது ஒரு கண்காணிப்புப் பொறிமுறையாக செயற்படுகிறது. 'நாகத்திற்குப் பயந்து' மக்கள் தவறுகள் செய்வதைத் தவிர்க்கின்றனர். இச்சடங்கு ஊர் மக்கள் அமைதி பெறுவதற்காகவும் கண்ணூறு கழிய வேண்டும் என்பதற்காகவும் நேர்த்தி வைக்கப்படுகின்றது'. இந்த இறை அச்சமானது சமூகத்தில் நிலவும் குற்றங்கள் குறையவும் தனிமனிதர்கள் சுயகட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளவும் உதவுகிறது.

சடங்குகளைப் போலவே நாட்டார் வழக்காறுகளும் சமூகக் கட்டுப்பாட்டுக் கருவிகளாகச் செயற்படுகின்றன. நாட்டார் பாடல்கள் பழமொழிகள் மற்றும் கதைகள் மூலம் சமூகத்தின் எதிர்க்குரல் பதிவு செய்யப்படுகிறது. ஆ. சிவசுப்பிரமணியம் குறிப்பிடுவது போல 'எதிர்க்க முடியாத வலுவான ஆதிக்க சக்திக்கு எதிரான தங்களுடைய கோபத்தை பழமொழிகள், பாடல்கள் மற்றும் நகைச்சுவை மூலமாக வெளிப்படுத்தினர். நாட்டார் வழக்காறுகளுக்கு ஆசிரியராக எந்த ஒரு தனிநபரையும் குறிப்பிட முடியாததால் இவ்வழக்காறுகள் அனுமதிக்கப்படுகின்றன. இது ஒரு குழுவின் வெளிப்பாடு; தனி நபரின் வெளிப்பாடு அல்ல... பாடுபவர் தன்னுடைய கருத்தை அல்ல, சமூகத்தின் குரலையே எதிரொலிக்கிறார்.'

இக்கதைகள் மற்றும் பாடல்கள் ஆற்றுகையாக நிகழ்த்தப்படும்போது, பார்வையாளர்கள் (சமூகம்) அந்தக் கதையின் நீதியோடு தங்களை அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள். சமூகத்தில் ஒரு தனிநபர் அல்லது ஆதிக்க சக்தி அறம் மீறும்போது, அது இக்கலைகளின் மூலம் விமர்சிக்கப்படுகிறது. 'தவறு செய்தவர் தண்டிக்கப்படுவார்' என்ற செய்தி பரப்பப்படுவதன் மூலம் இது சமூக உறுப்பினர்களை நெறிபிறழாமல் வாழச் செய்யும் ஒரு சமூகக் கட்டுப்பாட்டுப் பொறிமுறையாக அமைகிறது.

சமூக ஒருமைப்பாடு (Social Solidarity):

சமூக ஒழுங்கு என்பது அடக்குமுறையால் மட்டும் வருவதில்லை அது மக்களின் மனநிறைவிலும், ஒன்றிணைந்த உணர்விலும் தங்கியுள்ளது. சமூகத்தில் ஏற்படும் மன அழுத்தங்கள், பிளவுகள் ஆகியவற்றைச் சரிசெய்யும் மருத்துவக் கூடங்களாக ஆற்றுகைகள் விளங்குகின்றன.

திருவிழாக்கள் என்பவை சமூகத்தை ஒன்றிணைக்கும் முக்கியமான காரணிகளாகும். டேர்க்கைம் குறிப்பிடுவது போல, திருவிழாக்கள் 'கூட்டு மனசாட்சியை' உருவாக்குகின்றன. அன்றாட வாழ்வில் ஏற்படும் சிறு சிறு பூசல்கள், சண்டைகள் அனைத்தும் திருவிழாக்களின் போது மறக்கப்படுகின்றன அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுகின்றன.

வதனமார் சடங்கின்போது, 'போடிமார்களும், பூசகர்களும், இளந்தாரிமார்களும், பண்ணையாளர்களும், பொதுமக்களும் இணைந்து' வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாடு சாதி மற்றும் வர்க்க வேறுபாடுகளைச் சிறிது நேரமாவது மறக்கடித்து, அனைவரையும் 'ஊர் மக்கள்' என்ற ஒரே அடையாளத்தின் கீழ் கொண்டு வருகிறது. இது சமூகத்தில் பிளவுகள் (Social Fissures ஏற்படாமல் பாதுகாக்கிறது. விக்டர் டர்னர் இதனை 'Communitas' (சமூக இணக்கம்) என்று அழைக்கிறார். சடங்கு நிலையில் அனைவரும் சமம் என்ற பாவனை உருவாக்கப்படுகிறது.

சமூக அந்தஸ்தும் அதிகாரப் படிநிலையும்:

சமூக ஒழுங்கின் மிக முக்கியமான கூறு 'சமூகப் படிநிலை' ஆகும். ஒரு சமூகத்தில் யார் அதிகாரம் செலுத்துபவர், யார் கட்டுப்படுபவர், யாருக்கு என்ன சமூக அந்தஸ்து உள்ளது என்பதைத் தெளிவாக வரையறுப்பதன் மூலமே குழப்பங்கள் தவிர்க்கப்படுகின்றன. ஆற்றுகைகள், குறிப்பாகச் சடங்குகள், இந்த ஏற்றத்தாழ்வுகளைப் புனிதப்படுத்தி நிலைநிறுத்துகின்றன.

இந்தோனேசியாவின் சுலவேசித் தீவில் வாழும் டொராஜா (Toraja) இன மக்களிடம் நிகழும் சடங்குகள், சமூக அந்தஸ்தை நிர்ணயிக்கும் மற்றும் மறுஉற்பத்தி செய்யும் மிகத் தெளிவான களங்களாக உள்ளன. அங்கு ஒரு நபர் இறந்தால், அந்தச் சடங்கு ஒரு தனிப்பட்ட துக்கமாக மட்டும் பார்க்கப்படுவதில்லை; அது ஒரு பாரிய சமூகக் கடமையாக மாறுகிறது.

'டொராஜா இனத்தவராக இருப்பதன் அர்த்தமே, ஒரு அழைப்பை மதித்து ஏற்பதாகும். நீங்கள் எங்கே இருந்தாலும், என்ன செய்துகொண்டிருந்தாலும், பணம் இருந்தால் கண்டிப்பாக அந்தச் சடங்கில் கலந்துகொள்ள வேண்டும்'. இந்தச் சடங்குகள் மிகப்பெரிய அளவில் பொருளாதாரப் பரிமாற்றங்களையும், சமூக உறவுகளையும் புதுப்பிக்கும் களங்களாக அமைகின்றன. டொராஜா மக்கள் மத்தியில் 'சிரி' (Toraja) என்ற ஒரு கருத்துருவாக்கம் சமூக ஒழுங்கைப் பேணுவதில் மையமாக இருக்கிறது. 'சிரி' என்பது 'மானம்' மற்றும் 'அவமானம்' ஆகிய இரட்டைத் தன்மைகளைக் கொண்டது. 'சமூகத்தில் ஒருவருக்குரிய மரியாதை வழங்கப்பட்டால் அவர்கள் கௌரவிக்கப்பட்டதாக உணர்கிறார்கள்; அது மறுக்கப்பட்டால் அவமானமாக உணர்கிறார்கள்.' இந்த மானம் மற்றும் அவமானம் சார்ந்த உணர்வே மக்களைச் சமூக விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கச் செய்கிறது.

குறிப்பாக, இறுதிச் சடங்குகளில் நடைபெறும் 'எருமை மற்றும் பன்றி இறைச்சிப் பங்கீடு' என்பது மிக முக்கியமான அரசியல் மற்றும் சமூக நிகழ்வாகும். இதனை அவர்கள் இறைச்சி அரசியல் என்று அழைக்கின்றனர். இறைச்சித் துண்டுகள் யாருக்கு, எவ்வளவு பெரிய அளவில் வழங்கப்படுகின்றன என்பது அந்த நபரின் சமூக அந்தஸ்தை வெளிப்படையாக அறிவிக்கும் செயலாகும். 'அனைவரும் யார் பெயர் அழைக்கப்படுகிறது, இறைச்சியின் எந்தப் பகுதி வழங்கப்படுகிறது, அதன் அளவு என்ன என்பதை உற்று கவனிக்கின்றனர்.' இந்தக் கவனக்குவிப்பு ஒரு தற்செயலான நிகழ்வு அல்ல. இது சமூகப் படிநிலையை உறுதிப்படுத்துகிறது மற்றும்

ஒவ்வொருவரும் தங்கள் சமூக இடத்திலிருப்பதை உறுதி செய்கிறது. சடங்கில் அதிகமாக பங்கெடுத்து உழைத்தவருக்கு தலைப்பகுதியும், குறைந்த பங்கேற்பாளருக்கு உள்ளவர்களுக்குக் கால் பகுதியும் வழங்கப்படுவதன் மூலம், சமூக அடுக்கமைவு ஒவ்வொரு சடங்கிலும் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தப்படுகிறது. இதன் மூலம், சமூகத்தில் யார் தலைமையாளர் என்ற அச்சமூகத்துக்குரிய விதிமுறை 'ஒழுங்கு' அந்த சடங்கின் ஊடாகப் பேணப்படுகிறது.

டொராஜா மக்களைப் போலவே, தமிழகத்திலும் இலங்கையிலும் நாட்டார் தெய்வ வழிபாட்டு முறைகள் சமூக அதிகாரத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக உள்ளன. தொ. பரமசிவன் அவர்களின் பண்பாட்டு ஆய்வுகள், தமிழகச் சூழலில் சடங்கியல் உரிமைகள் எவ்வாறு சாதிய அதிகாரத்தை நிலைநிறுத்துகின்றன என்பதைத் துல்லியமாக விளக்குகின்றன.

பெருந்தெய்வக் கோயில்களில் (சிவன், பெருமாள்) ஆகம விதிகளின்படி வழிபாடு நடக்கும்போது, அங்கு பிராமணர்கள் சடங்கியல் தலைமையை ஏற்கிறார்கள். ஆனால், நாட்டார் தெய்வக் கோயில்களில் (சிறு தெய்வங்கள்) அந்தந்த ஊரில் ஆதிக்கம் செலுத்தும் இடைநிலைச் சாதியினரே முன்னுரிமை பெறுகின்றனர். இது குறித்து தொ. பரமசிவன் குறிப்பிடுகையில் 'நாட்டார் தெய்வ வழிபாட்டில் ஊர்த்தெய்வ வழிபாட்டில் மட்டும் சாதிய அதிகாரம் பிரதிபலிக்கின்றது என்பதை மறுக்க இயலாது. இது சமூக அதிகாரமே தவிரப் பண்பாட்டு அதிகாரம் அல்ல.'

ஒரு திருவிழாவில் யார் தேரை இழுப்பது, யார் முளைப்பாரி எடுப்பது, யார் முதலில் மரியாதை (முதல் மரியாதை) பெறுவது என்பது சமூகத்தில் யார் உயர்ந்தவர் என்பதைத் தீர்மானிக்கும் குறியீடுகளாக உள்ளன. இக்குறியீடுகள் சமூக அதிகாரத்தை வெளிப்படுத்தும் கருவிகளாகும். உதாரணமாக, கோவில்பட்டியில் அம்மன் கோவில் திருவிழாவில் தேருக்குக் கட்டை இடும் உரிமையைக் கொண்ட தலித் மக்கள், திருவிழா நடத்தும் உரிமையைக் கோரியபோது ஏற்பட்ட முரண்பாடு, சடங்கு என்பது வெறும் பக்தி சார்ந்தது மட்டுமல்ல, அது சமூக அதிகாரத்தின் வெளிப்பாடு என்பதைக் காட்டுகிறது.

இத்தகைய சடங்குகள் மூலம் ஆதிக்கச் சாதிகள் தங்கள் அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவும், ஒடுக்கப்பட்ட சாதிகள் தங்கள் இடத்தைத் தெரிந்து கொள்ளவும் நிர்பந்திக்கப்படுகிறார்கள். இது ஒரு வகையில் சமத்துவமற்றது எனினும், மரபார்ந்த சமூகங்களில் இதுவே 'ஒழுங்காக' கருதப்படுகிறது.

முடிவுரை:

சமூக ஒழுங்கு என்பது ஒரு நிலையான, மாறாத பொருள் அல்ல அது தொடர்ந்து கட்டமைக்கப்பட வேண்டிய ஒரு இயங்கியல் செயல்முறை. இந்தச் செயல்முறையில் சடங்குகளும், கலைகளும் வெறும் கேளிக்கைகளாக அல்லாமல், சமூகத்தைப் பிணைக்கும் வலுவான காரணிகளாகச் செயற்படுகின்றன. இந்தோனேசியாவின் டொராஜா இன மக்களின் மரணச் சடங்குகள் மற்றும் தமிழகத்தின் நாட்டார் வழிபாடுகள், சமூகப் படிநிலையையும் அந்தஸ்தையும் புனிதப்படுத்தி, அதிகாரக் கட்டமைப்பை உறுதி செய்கின்றன. இலங்கையின் சூட்டுக்களம் மற்றும் கன்னிப்பாளை போன்ற சடங்குகள், இயற்கையோடு இயைந்த வாழ்வியலையும், உற்பத்தி சார்ந்த தொழில்முறை ஒழுக்கத்தையும் பேணுகின்றன. கறுப்புசாமி மற்றும் வதனமார் வழிபாடுகள், சமூகத்திற்குள் எழும் முரண்பாடுகளைத் தீர்க்கும் நீதி மன்றங்களாகச் செயற்பட்டு, குற்றங்களைக் கட்டுப்படுத்துகின்றன. கூட்டு வழிபாடுகள் சமூக ஒருமைப்பாட்டையும், தனிமனித உளவியல் ஆரோக்கியத்தையும் பேணுகின்றன.

தொ. பரமசிவன் குறிப்பிடுவது போல, 'நம்பிக்கைகளுக்கும் மூட நம்பிக்கைகளுக்கும் இடையே என்ன இருக்கிறது? ஏதோ ஒரு வகையில் நுண் அரசியல் அதிகாரமும் சமூக அதிகாரமும்தானே இருக்கின்றன.' ஆம், ஆற்றுகைகள் என்பவை சமூக அதிகாரத்தை நிலைநிறுத்தும், சமூக உறவுகளைப் புதுப்பிக்கும், மற்றும் தனிமனிதரைச் சமூகத்தோடு பிணைக்கும் ஒரு வலுவான சமூகப் பசையாக செயற்படுகின்றன. நவீன சட்டங்கள் மேலிருந்து திணிக்கப்படும் ஒழுங்கைத் தரும்போது, இந்த ஆற்றுகைகள் மக்களின் அடிமனதிலிருந்து எழும் பயம், பக்தி மற்றும் நம்பிக்கையின் வழியாகச் சுயக்கட்டுப்பாட்டுடன் கூடிய ஒரு நிலையான சமூக ஒழுங்கை உருவாக்குகின்றன. எனவே, சமூக ஒழுங்கமைப்பைப் பேணுவதில் ஆற்றுகைகளின் பங்கு தவிர்க்க முடியாததும், இன்றியமையாததும் ஆகும்.

Sapithan.T@thaiveedu.com



தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.
விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.

E-mail:info@thaiveedu.com ***Fax: +1-416-849-0594*** ***Tel: +1-416-857-6406***

மாற வேண்டிய பெண்களின் உலகம்

சியாமளா யோகேஸ்வரன்

பெண்ணுரிமை என்பது கருத்தியல் ரீதியாகப் பெரும் பாய்ச்சலைக் கண்டிருக்கும் ஒரு யுகத்தில் நாம் வாழ்கிறோம். 'ஆணுக்குப் பெண் நிகர்' என்ற சமத்துவக் கோட்பாடு மேலோங்கி, அடக்கு முறையின் விலங்குகள் ஒவ்வொன்றாகத் தகர்ந்து வருவதை இன்றைய சமூகச் சூழல் பறைசாற்றுகிறது. பெண் சுதந்திரம் என்பது எவராலும் 'தங்கத்தட்டில்' வைத்து வழங்கப்பட வேண்டிய தானமல்ல; அது ஒரு பெண்ணின் பிறப்புரிமை. தமக்கான உரிமைகளைப் பயன்படுத்திக் கொள்ள எவரது அனுமதியையும் பெண்கள் எதிர்பார்க்கத் தேவையில்லை என்ற முழக்கங்கள் இன்று உலகெங்கும் உரக்கவே ஒலிக்கின்றன. இருப்பினும், ஒரு கசப்பான உண்மை என்னவென்றால், ஒரு பெண்ணின் வளர்ச்சியைச் சிதைக்கவோ, அவளது மன உறுதியைக் குலைக்கவோ நினைக்கும் உலகம், இன்றும் அவளது 'ஒழுக்கத்தை' ஒரு கூர்மையான ஆயுதமாகவே ஏவுகிறது. இது ஏதோ ஒரு குறிப்பிட்ட தேசத்திற்குரியது மட்டுமல்ல, மேலைத்தேயக் கலாசாரம் உள்ளிட்ட ஒட்டுமொத்தப் புவிப்பரப்பிலும் நீக்கமறத் தொடரும் ஒரு வன்மம். ஒரு பெண் தனது அசாத்தியத் திறமையால் ஈட்டும் வெற்றிகளைக் கூட, அவளது உழைப்பாகப் பார்க்க மறுக்கும் இந்தச் சமூகம், அதனை அவளது உடல் சார்ந்த சமரசங்களோடு தொடர்புபடுத்தி இழிவுபடுத்துவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது. ஒரு பெண்ணின் தார்மீக பலத்தைக் குலைக்க 'ஒழுக்கமற்றவள்' என்ற முத்திரை குத்துவதை விடவும் கொடிய ஆயுதம் வேறெதுவும் இல்லை என்ற நிலை இன்றும் மாறவில்லை. பெண்ணின் உன்னத வெற்றிகள் மீது பழிச்சொற்கள் வீசப்படும் போதெல்லாம், அவளுக்கான இந்தத் தீராச் சாபம் எப்போது முடிவுக்கு வரும் என்ற ஆதங்கமே எஞ்சுகிறது.

"ஒரு பெண்ணின் வளர்ச்சியைச் சிதைக்கவோ, அவளது மன உறுதியைக் குலைக்கவோ நினைக்கும் உலகம், இன்றும் அவளது 'ஒழுக்கத்தை' ஒரு கூர்மையான ஆயுதமாகவே ஏவுகிறது. இது ஏதோ ஒரு குறிப்பிட்ட தேசத்திற்குரியது மட்டுமல்ல, மேலைத்தேயக் கலாசாரம் உள்ளிட்ட ஒட்டுமொத்தப் புவிப்பரப்பிலும் நீக்கமறத் தொடரும் ஒரு வன்மம். ஒரு பெண் தனது அசாத்தியத் திறமையால் ஈட்டும் வெற்றிகளைக் கூட, அவளது உழைப்பாகப் பார்க்க மறுக்கும் இந்தச் சமூகம், அதனை அவளது உடல் சார்ந்த சமரசங்களோடு தொடர்புபடுத்தி இழிவுபடுத்துவதை வாடிக்கையாகக் கொண்டுள்ளது."



tg.theeban@gmail.com

கற்பு என்ற வார்த்தையைப் பெண்ணுக்கு மட்டும் அணிகல னாக்கி அவளின் மன உணர்வுகளையும், மதிப்பையும் சிதைத்த காலம் இப்போது மலையேறிப் போய்விட்டது. கற்பு என்ற சொல்லினுள் பெண்களுக்கு எதிரான அத்தனை அடக்கு முறைகளும் அடங்கியிருப்பதால், அந்த வார்த்தையைக் கேட்டாலே கொதித்தெழுபவர்களும், அந்தச் சொல்லை அகரா தியில் இருந்து நீக்க வேண்டும் எனுமளவுக்குக் குமுறுபவர் களும் இருக்கின்றார்கள். பெண்களுக்கான எல்லைக் கோட்டை வகுத்து, அவர்களின் உணர்வுகளோடு விளையாடி, இல்லாத ஒன்றைப் பூதாகரமாக்கி, பெண்களை வீட்டுக்குள் பூட்டி அடக்கி வைப்பதற்குக் காரணமான சொற்களில் இதுவும் ஒன்று என்பது காலத்தின் பதிவுகளில் மறுக்க முடியாத ஒரு வடுவான வரலாறாகப் பதிந்து போயிருக்கின்றது.

அந்தச் சொல்லை மட்டும் நீக்கி விட்டால் பெண்களை அவ தூறு சொல்வது மாறி விடுமா? ஒழுக்கம் பெண்களுக்கு மட்டுமே என்ற எண்ணம் வழிவழியாகக் கடத்தப்பட்டுப் ஆண் களின் மனதில் மட்டுமல்லாமல் பெண்களின் மனதிலும் ஆழமாக உறங்கிக் கொண்டிருக்கின்றது. இந்த உணர்வை ஏற்படுத்துவதில் இலக்கியங்களும், அவற்றின் வழியில் பேணப்பட்டு வந்த பண்பாடும், எமது மரபு வழிவந்த காரணி களின் தாக்கமும் பெரும் பங்கு வகிப்பது மறுப்பதற்கில்லை.

இலக்கியங்கள் கற்பு:

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்'

என்று திருவள்ளுவர் சொல்கின்றார். இதன் பொருள் பெண் ணுக்கு மிகப் பெரிய செல்வமாயிருப்பது உறுதியான மன நிலையைத் தரக்கூடிய கற்பு ஆகும் என்கிறார். கற்பைப் பெண்ணின் உடைமையாக்கி, அதை அவளது சொத்தாக்கு வதன் மூலம் அந்தக் கற்பை இழந்துவிட்டால் அவள் பெறு மதியற்றவளாகி விடுவாள் என்று கூறுகிறார் என்பதாகப் பொருள் கொள்ள வேண்டுமா?

சிலப்பதிகாரத்தில் கண்ணகி கற்பின் சின்னமாக வருகின் றாள். கணவன் தவறான உறவின் வழிச் சென்றாலும், அவனுக் காகக் காத்திருந்து, அவனைத் திருத்தி வாழ வழி காட்டிய உத்தமியான மனைவியாகவும் சித்திரிக்கப்படுகிறாள். பெண் என்றால் இப்படித் தான் பொறுமை காக்க வேண்டும் என்ப தான இலக்கியப் பெண்ணாகவும், இறை வடிவமாகவும் போற்றப்பட்டிருக்கின்றாள். நடந்ததைத் தீர விசாரிக்காமல் கணவனைக் கொன்று நீதியைத் தவற விட்ட பாண்டிய மன் னனுக்காக உயிர்களையும் பொருள்களையும் தீக்கிரையாக் கக் கூடிய காப்பிய நாயகியாகவும் கற்பின் வடிவமாகவும் மனங்களில் பதிய வைக்கப்பட்டிருக்கின்றாள்.

மகாபாரத நாயகியான பாஞ்சாலியின் அனுமதியைக் கோரா மலேயே அவளது கணவன்மார் அவளைச் சூதாட்டப் பந்த யப் பொருளாக்கியிருந்தார்கள். சூதாட்டப் பந்தயத்தில் கௌர வர்கள் அரச சபையில் அவளைத் துகிலுரிவதன் மூலம் பெண்மையை அவமானப்படுத்தலாம் என்று தப்புக்கணக் குப் போடுகின்றார்கள். பலர் கூடியிருந்த அவையில் பெண் ணுக்கு நேரக் கூடாத அபவாதம் நிகழ்ந்த போதும், தரும வான்களாய் கூடியிருந்த ஆண்கள் மௌனம் காக்கின்றார் கள். சபதம், பழிவாங்குதல், போர், மரணம் என்பனவெல்லாம் இச்சம்பவத்தின் தொடர்ச்சி என்றாலும், பெண்ணின் ஒழுக் கத்தையும் மானத்தையும் அவமதிக்கும் பாத்திரங்கள் காவி யங்களில் படைக்கப்பட்டிருந்தன. பஞ்சபாண்டவர்களில் ஒரு வரின் அல்லது ஐவரினதும் அணிகளைக் களைந்து அவமா னப்படுத்தி, அதற்காக ஒரு காப்பியம் உருவாக்கப்பட்டி ருக்கக் கூடுமா என்பது சந்தேகமே!

இறைவடிவமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட இராமர், இராவண னால் சிறைப் பிடிக்கப்பட்டிருந்த சீதாவின் கற்பை நிரூபிக் குமாறு கேட்கின்றார் என்பதாக இராமாயணம் சொல்கின்றது. வால்மீகியின் இராமாயணம் இராமர் சந்தேகப்பட்டார் என்ற தொனியிலும், கம்பரின் இராமாயணம் நீ சந்தேகத்துக்கு அப் பாற்பட்டவள் என்று இந்த உலகுக்கு நீரூபிக்க வேண்டும் என்று இராமர் கேட்டுக் கொண்டார் ரீதியிலும் காப்பியப்படுத் தப்பட்டிருக்கின்றது. பொதுவாக அரசர்கள் பல தாரங்க ளைக் கொண்டவர்களாகவும், அதுவே அவர்களுக்கு கௌர வத்தைத் தருவதாகவும் காண்பிக்கப்பட்டிருக்கின்றார்கள். மனைவியைக் கேள்வி கேட்கக்கூடிய நிலையில் ஏகபத்தினி விரதனான பாத்திரமாகவே இராமர் படைக்கப்பட்டிருக்கின் றாரா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

சீதையை அக்னிப் பரீட்சைக்கு இராமர் உட்படுத்தியதன் மூலம் சமூகத்தின் கருத்துக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதையும், பெண் என்பவள் உலகின் பார்வையில் உத்த மியானவளாக அதாவது மனதாலும் உடலாலும் கணவனுக்கு மட்டுமே உரித்துடையவளாக இருக்க வேண்டும் என்பதா கவுமே இராமாயணத்தில் சித்தரிக்கப்பட்டிருக்கின்றாளா?

காப்பியங்கள் ஒரு சமூகத்தையும், அதன் பழக்கவழக்கங் கள், பண்பாடும் மற்றும், நடைமுறையைப் பிரதிபலிப்பன வாகவே இருக்கின்றன. இந்தியக் கலாசாரத்தை எடுத்து நோக்குவோமாயின், பெண்களை விட ஆண்களைச் சமூகத் திலும் குடும்பத்திலும் உயர்நிலையில் வைத்திருந்தார்கள். பெண்களுக்கான ஒழுக்கமும், நெறிமுறைகளும் வரையறை செய்யப்பட்டுக் கட்டாயமாக்கப்பட்டிருந்தன. பரம்பரை பரம் பரையாகப் பெண்களுக்கான பண்பாடு பேணப்பட்டு வந்த தால், அது பெண்களின் மனதில் ஊறிப் போனதொன்றா கவே காணப்பட்டது. ஆணுக்கு அவ்வாறான நிர்ப்பந்தங்கள் ஏதுமிருக்கவில்லை என்பதால் அவனது செயற்பாடுகள் சுதந்திரமானவையாகவும் கட்டுப்பாட்டுக்கு உட்படாதவையு மாகவே இருந்தன.

கற்பு என்றால் என்ன என்பது பற்றிப் பல கருத்துகள் இருந் தாலும், காலத்தின் போக்கில் ஒழுக்கம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. ஆனாலும் பெண்கள் ஒழுக்க நெறியைப் பேண வேண்டும் என்று ஆணின் உள்மனது எதிர்பார்ப்பது மட்டு மல்லாமல் பெண்ணின் உள்ளுணர்வுக்குள்ளும் ஒழுக்கம் பற்றிய ஒரு அழுத்தம் இருப்பதை மறுப்பதற்கில்லை. அத னால் தான் ஒரு பெண்ணை இழிவுபடுத்த வேண்டுமாயின் அவளின் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம் அவளை உடைய வைத்து விடலாம் என்று இந்த சமூகம் தப்புக் கணக்குப் போடுகின்றது. ஆணின் ஒழுக்கத்தைப் பற்றிக் குறையாகப் பேசுவதை விடப், பெண் தான் வலை வீசினாள் என்பது போல் பெண்ணைக் குறை சொல்லிப் பாரதூரமான குற்றமாக்கி உருவகப்படுத்தப்படுவதுதான் உலக வழக் கமாக இருக்கின்றது.



ஆண்களுடன் பழகக் கூடாது என்ற அறிவுரையுடன் வளர்க்கப்பட்ட பெண்களுக்குத் தன் வீட்டினரைத் தவிர்த்த பிற ஆண்களுடன் பழகுவதற்குத் தயக்கம் இருக்கக் கூடும். அதனால் கள்ளமின்றி வெகு இயல்பாக ஆண்களுடன் பழகும் மற்றைய பெண்களைத் தவறான கண்ணோட்டத்துடன் பார்க்கக் கூடும். ஆண்கள் சிலருக்குப் பெண் என்பவள் ஒரு போகப் பொருள் மட்டுமே. அதனால் தம்மைப் போலவே எல்லா ஆண்களும் இருப்பார்கள் என்ற எண்ணத்துடன் தம் வீட்டுப் பெண்களைப் பொத்திப் பாதுகாப்பதாய் நினைத்துக் கொண்டு கட்டுப்பாட்டை விதிப்பார்கள். தம்மைப் போலவே பிறரும் இருப்பார்கள் என்று கணக்கிட்டு, எந்தக் கள்ளமுமின்றிப் பழகுபவர்களைத் தவறான உறவில் இருப்பவர்கள் என்று தயக்கமின்றி முத்திரை குத்தி விடுவார்கள். வேறும் சிலர் இருக்கின்றார்கள், தமது மனதை மட்டும் சுத்தமானதாகவும், தம்மை மட்டும் உத்தமர்களாகவும் எண்ணிக் கொண்டு மற்றவர்கள் எல்லாம் தவறானவர்கள் என்றும் கருத்துச் சொல்லக் கிளம்பி விடுகின்றார்கள். நட்பாகப் பழகுபவர்களுக்கிடையில் எந்தத் தவறான எண்ணங்களும் இல்லாவிடினும், பார்ப்பவர்களின் பார்வைகள் வேறுபடத்தான் செய்கின்றன.

ஆணும் பெண்ணும் எந்தத் தவறான உறவுமின்றிப் பழகக் கூடிய தற்கால சூழ்நிலையில் கூட இப்படியான பேச்சுகள் தாராளமாக உலவத்தான் செய்கின்றன. ஒருவரின் வலியில் ஊர்வம்பு பேசிப் பொழுது போக்கி மகிழ்பவர்களும் இருக்கின்றார்கள். ஊரின் வம்புப் பேச்சால் எந்தப் பாதிப்பும் இல்லாத நவீன காலத்துப் பெண்கள் என்று நிமிர்ந்து நின்று சொல்ல முடிந்தாலும், உள்ளுக்குள் ஒரு ஓரமாய் எங்கோ வலிக்கத் தான் செய்கின்றது. பார்ப்பவர்கள் பலதும் சொல்வார்கள் என்று ஒதுக்கி விட்டுப் போவதற்கான தைரியத்தை வளர்த்துக் கொள்வதற்கும் இடையில், இந்தச் சமூகத்தின் பொல்லாத வாயுடன் பெரும் போராட்டத்தையே நடத்த வேண்டியிருக்கின்றது.

ஒழுக்கத்தைக் குறி வைத்து அடிப்பதன் மூலம் ஒருவரை வீழ்த்தி விடலாம் என்று தப்புக் கணக்குப் போடுபவர்களின் முன் நிமிர்ந்து நிற்பதன் மூலம், அவர்களின் பழிச்சொல் பலிக்காது என்ற தெளிவான செய்தியைக் கொடுத்து விட வேண்டும். இளகிய மனம் கொண்ட, தட்டிக் கேட்கும் துணிச்சலற்ற மற்றப் பெண்களையும் இவ்வாறே தாக்கலாம் என்ற எண்ணத்துக்குத் தலையடி கொடுப்பதன் மூலம் பெண்களுக்கான உரத்த குரலாகவும் ஒலிக்க வேண்டும்.

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்'

நேர் கொண்ட பார்வையும், நிமிர்ந்த நன்னடையும், யாருக்கும் அஞ்சத் தேவையற்ற நெறியுடன் கூடிய சுய கட்டுப்பாடும், தெளிவான ஞானமும், தன்னைப் பற்றிய உணர்வும் கொண்ட பெண்கள் தம் கொள்கைகளிலிருந்து வழிமாறிப் போவதில்லை என்று பாரதியார் பெண்களுக்கான குரலாக ஒலித்திருக்கின்றார். சமையலறைக்குள் அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்கள் இன்று கால் வைக்காத துறைகளே இல்லை எனுமளவுக்கு தம் திறமை எனும் இறக்கை கொண்டு உயரப் பறக்கத் தொடங்கியிருக்கின்றார்கள். ஆணுக்கு இணையாகப் பெண்களின் உலகமும் பரந்து விரிந்ததில் ஆண் பெண் என்ற வேறுபாடின்றி பலருடனும் அவள் பழக வேண்டியிருக்கின்றாள். அன்பும் பரஸ்பரப் புரிந்துணர்வும் இருக்கும் போது, மனங்கள் மடை திறந்து விட, பால் வேறுபாடு மறைந்து, ஆண் பெண் நட்பில் வேறு களங்கங்கள் கலந்து விடாத தெளிவு பழகுபவர்களிடையே வந்து விடுகின்றது.

தன் மனதுக்கு உண்மையாகத் தன் நெஞ்சுக்கு பொய்யற்ற நியாயத்துடன் ஒரு பெண் நடக்கும் போது, அவளைக் களங்கப்படுத்தும் பேச்சுகளைக் காதில் வாங்கிக் கொள்ளத் தேவையில்லை. அவப்பேச்சுகளைக் காலில் இடறும் கல்லாக நினைத்து தன் வழியில் தளம்பாது தொடர்ந்து நடை போடுவதன் மூலம் பேசுபவர்களின் முகத்தில் கரியைப் பூச வேண்டும். இவ்வாறு அடுத்த பெண்ணின் ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுவதன் மூலம் தம்மையே இழிவுபடுத்திக் கொள்பவர்களின் பேச்சுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டியதில்லை. தாமும் பெண்கள், தமக்கு பெண் உறவுகள் இருக்கின்றார்கள் என்று சற்றேனும் சிந்திக்க முடியாதளவுக்கும் அறம் வழுவிப் போனவர்களைப் பற்றி அக்கறை கொள்ளத் தேவையில்லை.

இப்படி அடித்தால் வலிக்கும், நிலை குலைந்து போவார்கள் என்பதை அறிந்தே பெண்களின் ஒழுக்கத்தை ஆயுதமாகப் பயன்படுத்த நினைப்பவர்களின் முன்னால் துணிந்து நில்லுங்கள். முதுகுகளுக்குப் பின்னால் புறணி பேசுபவர்கள், பேசிவிட்டு அங்கேயே நின்று விடட்டும். புறணிகளுக்கும், புரளிகளுக்கும் அலைபவர்கள் தம் சக்தியையும் நேரத்தையும் ஆக்கபூர்வமில்லாத விடயத்தில் வீணாக்கிக் கொள்ளட்டும். பெண்மை வீறு கொண்டுவிட்டால் அவளைத் தடுத்திடவும் தகர்த்திடவும் அவள் நினைத்தால் மட்டுமே முடியும். சிறகுகளை விரித்து உயரப் பற பெண்ணே, உன் வெற்றியை அனைவரும் அண்ணார்ந்து பார்க்கட்டும். தடைகளில்லா வானம் உன் எல்லையாகட்டும்.



Shiyamala@thaiveedu.com

ராஜன் செல்லையா

தற்கொலை முடிவினை அழகியலுடன் மகிமைப்படுத்தும் அந்தோனி திரைப்படம்



அந்தோனி திரைப்படம், தாயகத்தின் கடலோரக் கதையொன்றை அழகியல் நேர்த்தியுடன் படமாக்கியுள்ளது. கதாநாயகன் கயல் வின்சென்ற் மற்றும் நாயகி T.J. பானு உட்படப் பலர் சிறப்பாக நடித்துள்ளனர். ஈழத்துத் திரைமுயற்சி களில் திரைப்படத்தின் காட்சிப்படுத்தல் சார்ந்து இது ஒரு குறிப்பிடத்தக்க திரைப்படமெனலாம். தமக்கு அறிமுகமான தாயகத்துக் கடலோரப் பகுதியொன்று கதைக்களமாக இருப் பது பலரைக் கவர்ந்தது கண்கூடு.

இது ஒரு முழுமையான சினிமா விமர்சனமல்ல, ஆனால் திரைப் படத்தின் முடிவுசார்ந்து அதன் சமூகப்பொறுப்பு சார்ந்து பேசு வதே இந்தச் சிறு கட்டுரையின் நோக்கம்.

திரைப்படத்தின் இறுதியில் தாயும் சிறுவயது மகளும் கடும் நோய்வாய்ப்படுகின்றனர். மகள் இறக்கின்ற துயரை எதிர் கொள்ளத் திராணியற்ற பாசமிகு கணவனும் மனைவியும் ஒரு கையறுநிலையில் கடலில் மூழ்கிக் கூட்டுத்தற்கொலை புரி கின்றனர்.

உணர்வுத் தூண்டல்:

காதல்வயப்பட்ட நாயகர்களை இவ்வகைக் கூட்டுத்தற்கொலை முடிவின் மூலம் தீர்வு காணவைப்பது, பார்வையாளர்களின் உணர்வுகளைத் தூண்டி காதலை மகிமைப்படுத்தலாம். அது திரை அரங்குகளில் ஒரு சிலரின் கண்ணீரை வரவழைக்கும். ஆனால் தற்கொலை முடிவில் உள்ள சிக்கலான பரிமாணத்தை அது வெளிப்படுத்துவதில்லை.

ஒரு போரையும் இன அழிப்பையும் எதிர்கொண்டு இன்றும் ஒரு கூட்டு மனவடுக்களுடன் வாழும் மக்கள் கூட்டத்திற்கு இவ் வகை முடிவுகளை வழங்குவது பற்றித் திரை ஆர்வலர்கள் அதி கவனம் கொள்வது அவசியமானது.

பாலச்சந்தரின் 'புன்னகைமன்னன்':

1986-ஆம் ஆண்டு தமிழகத்தில் 'புன்னகை மன்னன்' திரைப் படம் வெளியானபோது ஆரம்பக் காட்சியான கமல், ரேகாவின் தற்கொலை முயற்சி (அவர்கள் மலைக்குன்றிலிருந்து குதிக் கும் காட்சி) சர்ச்சையையும் விமர்சனங்களையும் ஏற்படுத்தியது. இளைஞர்களுக்குத் தவறான தாக்கத்தை அது ஏற்படுத்தும் என்ற குற்றச்சாட்டு அன்று எழுந்தது. குறிப்பாக, காட்சியின் பின்னணி - பாட்டு, இயற்கை அழகு - காரணமாக அது உணர்ச்சி ரீதியாக கவர்ச்சியாகக் காட்டப்படுகிறது என்ற விமர்சனம் இருந்தது. பாலச்சந்தர் அந்த விமர்சனங்களுக்கு,

தனது நோக்கமானது, காதல் தோல்வி வாழ்க்கையின் முடிவு எனக் காட்டவில்லை என்றார். உயிர் பிழைத்த நாயகன் குற்ற உணர்வுடன் வாழ்கிறான், அதுவே கதையின் உண்மை யான உணர்ச்சி என்றார். தற்கொலை உணர்வு அந்தக் காட்சி யின் மூலம் சிலர் மத்தியில் தோன்றலாம் என்ற வாதத்திற்கு, அது உண்மையில் ஒரு எச்சரிக்கைக் காட்சி, அதன் விளைவு களைக் காட்டுவதே தனது நோக்கமென்றார் பாலச்சந்தர். தான் தற்கொலையை அழகுபடுத்தவில்லை என்றும், அதன் துயரமான விளைவுகளையே படத்தில் சொன்னேன், என்றார். கதையின் நாயகன் அந்த முடிவிலிருந்து உயிர் பிழைத்து, பின்பு வாழ்க்கையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்வதே படத்தின் மையம் என்று அன்று விளக்கப்பட்டது.

சமூகத்தின் உண்மைநிலை:

அந்தோனி திரைப்படத்தில் வருவது போன்று ஒரு திரைப் படமானது ஒரு தம்பதியினரின் தற்கொலையை நித்திய காத லின் சான்று போல காட்டினால், தற்கொலை ஓர் அர்த்த முள்ள அல்லது புகழத்தக்க செயல் போலத் தோன்றலாம். இது சமூகத்தில் நிலவும் உண்மை நிலைமையினை மாற்றிக் காட்டுகிறது. குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் ஏற்படக் கூடிய வலி மற்றும் துயரத்தை அது மறைக்கிறது.

ஊடகங்களில் தற்கொலை எப்படிக் காட்டப்படுகிறது என்பது சில நேரங்களில் பாதிக்கப்படக்கூடிய பார்வையாளர்களை, அதனைப் பின்பற்ற தூண்டவல்லது. மனவியல் ஆய்வுகளில் இதனை விபரமாகக் குறிப்பிடுகிறார்கள்.

தற்கொலை–அழகியல்:

திரைப்படம் தற்கொலையை ஒரு தீர்வாகக் காட்டினால், வாழ்க்கையில் ஏற்படும் அழுத்தம், காதல் தோல்வி அல்லது சிக்கல்களிலிருந்து தப்பிக்க தம்மை அழித்துக்கொள்ளல் ஓர் இலகுவான வழி என்ற தவறான எண்ணத்தை அது உருவாக் கலாம்.

இளைஞர்கள் அல்லது மன அழுத்தம் அனுபவிப்பவர்கள் திரைப்படக் கதாபாத்திரங்களுடன் எளிதில் தங்களை இனங் கண்டு ஒப்பிடக்கூடிய நிலைமையை இது உருவாக்குகிறது. தற்கொலையை அழகியல் கலவையுடன் உணர்ச்சிகரமாகக் காட்டும்போது, சம்பந்தப்பட்டவர்களிற்கு, தம்மை அழித்துக் கொள்ளத் தோன்றும் எண்ணங்களை ஓர் இயல்பான, சாதார ணமான எண்ணமாகத் தோன்றச் செய்யும்.

இத்தகைய காட்சிகளிலும் கதைசொல்லலிலும் பல நேரங்களில் குடும்பத்தினரின் துயரம், தற்கொலை எண்ணங்களின் உள் ளார்ந்த மனவலி, உதவிபெறும் வாய்ப்புகள் மற்றும் மீண்டு வரும் சாத்தியம் என்பவை வெளிப்படுத்தப்படுவதில்லை.

சமூகப் பொறுப்பு:

சினிமாவானது மக்களின் எண்ணங்களையும் மனப்பாங்கு களையும் பாதிக்கிறது. அதனால் நல்ல ஒழுக்கநெறி கொண்ட கதை சொல்லல் தற்கொலை போன்ற விடயங்களை மிகுந்த பொறுப்புடனும் கவனத்துடனும் கையாள வேண்டும், அதை மகிமைப்படுத்தாமல் அதன் சிக்கலான தன்மையை காட்ட முயலவேண்டும். எமது சமூகத்தில் இவ்வகை முடிவு களை அழகியல் நேர்த்தியுடன் romantize பண்ணுவது - உண்மையைவிட அழகாக கற்பனை செய்து காட்டுதல் - பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியது. இது படைப்பாளிகளின் சமூகப்பொறுப்பு சார்ந்த விடயம்.

கலை கலைக்கானது மட்டுமா?

ஒரு படைப்பனது அதன் சொந்த அழகிற்காகவே இருக்கவேண் டும், அதற்கு சமூக, அரசியல், நெறி போன்ற வெளிப்புற நோக்கங்கள் தேவையில்லை என்கின்ற வாதத்தினைச் சிலர் கொண்டிருக்கலாம். கலை என்ன பயனைத் தருகின்ற தென்றோ, எதனைப் போதிக்கின்றதென்பதோ அவசியமில்லை. அது அழகு, உணர்ச்சி, கற்பனை ஆகியவற்றை வெளிப்படுத்து வதற்காக மட்டுமே இருக்கவேண்டும், கலைஞர் தனது சுதந் திரமான சிந்தனையை வெளிப்படுத்த வேண்டும். ஒரு படைப் பின் தாக்கத்திற்கு கருத்துச் சொல்ல மற்றையவர்கள் யார்? - இவ்வாறெல்லாம் அவர்கள் வாதிடலாம்.

இருந்தபோதும் நேர்த்தியுடன் தயாரிக்கப்படும் எமது திரைப் படங்களிற்கு, அழகியலிற்கு அப்பால் ஒரு சமூகநோக்கு இருக்கவேண்டும். கலை என்பது வெறும் ரசனைக்கானது மட்டுமல்ல, அது மக்களின் வாழ்க்கையை மாற்றும் சக்தி கொண்டது. ஆதலால் கலைஞர் ஒரு சாட்சியாளர், கலை ஒரு போராட்டம், கலை ஒரு சமூகபொறுப்பு என்கின்ற வாதமே எமது சமூகத்திற்குப் பொருந்தக்கூடியது.

ஆயிரம் கதைகள் உள்ளன:

இதிலும் நீண்ட நெடுங்காலப் போரிலிருந்து மீண்டு வந்துள்ள எமது மக்கள் கூட்டத்தில் ஆயிரம் கதைகள் இருக்கும். நம்பிக்கையுடன் வாழ்வை எதிர்கொண்டிருக்கும் அனைவரின் கதைகளும் நம்பிக்கை தருவன, அவை எமது சமூக இயக் கத்தை நகர்த்தும் சக்திகொண்டவை. திரைப்படத் தயாரிப்பாளர் களும் இயக்குநர்களும் இத்தகையதொரு சிந்தனைப் போக்கை வரித்துக் கொண்டால், கதைகள் விவாதிக்கப்படும் வேளை யிலேயே சரியான முடிவுகளை எட்டலாம். வர்த்தக ரீதியில் வெற்றி பெறுவதற்குக்கூட இவ்வகை அணுகுமுறை ஒன்றும் பாதகமானதல்ல. எமது வளங்களும் உழைப்புகளும் வெறும் பொழுதுபோக்குக்கானது மட்டுமல்ல, அவை எமது சமூக இயக்கத்திற்கும் மேம்பாட்டிற்கும் உதவக்கூடியன.

தொழிநுட்பத்தில் குறிப்பிடத்தக்க நேர்த்தியைக் கொண்டுள்ள அந்தோனி திரைப்படக்குழுவினர் போன்ற திரைமுயற்சியில் ஈடுபடுபவர்கள், இவ்வகைச் சிந்தனைக்கு ஆட்பட்டால் சமூ கத்திற்குப் பயன்படும் வீச்சான படைப்புகளை அவர்களால் தரமுடியும்.



Rajan.Chelliah@thaiveedu.com



‘நீளிரா’வும் அதன் புற அரசியலும்

- ரதன்

1943-ஆம் ஆண்டில் 133 போர் திரைப்படங்கள் வெளியிடப்பட்டன; இது அந்த ஆண்டின் மொத்தத் திரைப் பட வெளியீட்டில் 33 சதவீதத்தைச் சேர்ந்ததாகும். அன்றிலி ருந்து இன்று வரை ஹாலிவுட்டில் போர் சார்ந்த திரைப்படத் தயாரிப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, போர் கருப்பொருளை மையமாகக் கொண்ட வீடியோ விளையாட்டுகளும் உருவாக்கப்பட்டுள்ளன. குறிப் பாக, வியட்நாம் போரைக் கருத்தாகக் கொண்ட விளையாட் டுகளில், அமெரிக்க இராணுவ வீரர் ஒருவர் பல வியட்நாமி யப் போராளிகளைச் சுட்டுக் கொல்வது போன்ற காட்சிகள் இடம்பெறுகின்றன.

போர்க் காலங்களின் போதும், அதன் பின்னரும் புதிய இலக் கியப் படைப்புகளின் உருவாக்கம் சாத்தியமாகவேயுள்ளது. கடந்த காலங்களில் பல புதிய இலக்கிய படைப்புகள் உரு வாகியுமுள்ளன. இதற்கு சினிமாவும் விதிவிலக்கல்ல. பிரெஞ் நியுவேவ் (பிரெஞ் புதிய அலை), இத்தாலியின் நவ யதார்த்த வாத திரைப்படங்கள் உருவாகின. பிரெஞ் புதிய அலை இயக்கம் 1950-களின் இறுதியில் பாரம்பரிய படமாக்கல் முறைகளை நிராகரித்து, படத்தொகுப்பிலும் (Jump cuts) கதையாடலிலும் புதிய சோதனைகளைச் செய்தது. இத்தா லிய நவ யதார்த்தவாதம் (Neo-realism) இரண்டாம் உலகப் போருக்குப் பின் வறுமை, வேலையின்மை மற்றும் அன்றாட வாழ்க்கைச் சிக்கல்களைத் திரையரங்கு அரங்குகளுக்கு வெளியே, உண்மையான இடங்களில் படமாக்கியது. 1960 - 70-களில் பிரேசில் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்ட காலங் களில் தோன்றிய சினிமா நோவா (Cinema Novo) இயக்கம் ‘பசியின் அழகியல்’ (Aesthetics of Hunger) என்ற கொள்கை யோடு, வர்க்கப் போராட்டத்தையும் காலனித்துவ எதிர்ப்பை யும் பேசியது.

சினிமா நோவோ வன்முறையின் அழகியல் பழமையானது அல்ல. புரட்சிகரமானது என்று கற்பிக்கிறது. வன்முறை தோன் றும் அந்தக் கணமானது, குடியேற்றவாசிகள் காலனித்து வத்தின் இருத்தலை உணர்ந்து கொள்ளும் கணமாகும். வன் முறையை குடியேற்றவாதி எதிர்கொள்ளும் பொழுதே சுரண் டலின் வலிமையையும் பயங்கரவாதத்தையும் உணர்ந்து கொள்ளமுடிகின்றது. ஆயுதம் ஏந்தாதவரை குடியேற்றவாசி கள் அடிமையாகவேயிருப்பார்கள். பொதுவாகக் கூறுவார்கள் ‘முதலாவது பொலிஸ் கொல்லப்பட்டபோதே பிரான்ஸ், அல் ஜீரியர்களின் பலத்தை தெரிந்துகொண்டார்கள்’.

போருக்கு முற்பட்ட ஈழத்துப் படைப்புகளில் சினிமா நோவா வின் ஒரு சில தாக்கங்கள் இருந்துள்ளன என்பதனை மறுக்க முடியாது. இங்கு சினிமா நோவாவை உதாரணமாக காட்டு வதன் நோக்கம் ஈழத்து தேசிய விடுதலைப் போராட்டத்துடன் இலத்தீன் அமெரிக்க படைப்புகள் நெருக்கத்தைக் கொண் டுள்ளன. போருக்கு பின்னரும் முன்னருமான சிங்களத் திரைப்படங்களின் திரை மொழி போரினால் செழுமையடைந் துள்ளது.

பொதுவாக, போர்த் திரைப்படங்களை ஆய்வு செய்பவர்கள் மற்றும் சீரிய விமர்சகர்கள் பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்வார்கள்.

tg.theeban@gmail.com

முதலாவது அதன் உண்மைத் தன்மை. காட்சிகள் சண்டை யின் குழப்பத்துக்கான காரணம், மண்ணின் வெளிப்பாடு, போரிடுபவர்களின் காட்டுமிராண்டித்தனம் போன்றவை உண் மைத் தன்மையுடன் வெளிப்படவேண்டும், இதற்குள் போரிடு பவர்களது நடை, உடை, பாவனையின் யதார்த்தமும் அடங் கும். போரிடும் அரச குழுக்களிடையே உள்ள பிணைப்பு அல்லது உயிர் வாழ்தலுக்கான கேள்விக்குறியின் மனோ நிலை வெளிப்படுத்தப்பட வேண்டும். சிறந்த போர்த் திரைப் படங்கள் போரின் நிரந்தமற்ற தன்மை அல்லது பயனற்ற தன்மை, சண்டையின் உளவியல், குடும்பத்தை பிரிந்து இருப் பதனால் உள்ள வெறுமை போன்றவற்றையும் பதிவு செய்யும்.

இராணுவத்தின் போரிடும் அலகுகள் அல்லது ஒரு கப்டனின் கீழ் செயற்படும் படையணிகளுக்கும், போரைத் திட்டமிடும் அல்லது அதன் முடிவுகளை எடுக்கும் அதிகார அமைப்புக ளுக்கும் இடையிலான தன்மைகளும் முரண்பாடுகளும் சிறந்த போர்த் திரைப்படங்களில் வெளிப்படுகின்றன. வியட் நாம் போருக்கு எதிராக உருவான அமெரிக்கத் திரைப்படங் களில் பல இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் கூறப்படலாம். குறிப்பாக, Oliver Stone இயக்கிய வியட்நாம் போர் திரைப் படங்களில் இத்தன்மை தெளிவாகக் காணப்படுகிறது.

தனிநபர், சமூகக் குழு, மற்றும் விரிவான சமுதாயம் ஆகியவை போரை அணுகும் முறைகளிலும் அவற்றின் செயற்பாட்டு நிலைகளிலும் காணப்படும் வேறுபாடுகள் மற்றும் முரண் பாடுகள் பதிவுசெய்யப்பட வேண்டும்.

Émile Durkheim என்ற பிரெஞ் சமூகவியலாளர் புனிதத்துக் கும், தூயமையற்றவர்களுக்குமிடையிலான வேறுபாட்டை பற்றிய கருத்துகளை மதிப்பீடு செய்துள்ளார். இங்கு தூய் மையற்றவர்கள் என நாகரிகமாக குறிப்பிடுபவர்களே துரோகிகளாகக் கருதப்படுபவர்கள். வியட்நாம் போருக்கு முன்னராக அமெரிக்காவில் ஒவ்வொரு வீட்டிலும் அமெரிக்க கொடி பறக்க விடுதலும், அமெரிக்க இராணுவ சேவையும் புனிதமாக கருதப்பட்டது.

David Riesman என்ற மற்றொரு அமெரிக்க சமூகவியல் ஆய்வாளர் ஹொலிவூட் படங்களில் அமெரிக்க கதாநாய கர்கள் எவ்வாறு புனிதப்படுத்தப்படுகின்றார்கள் என ஆய்வு செய்துள்ளார். அமெரிக்க சார்பு ஹொலிவூட் வியட்நாம் படங்களின் கதாநாயகர்களில் இந்த புனிதத் தன்மை



வெளிப்படுகின்றது. இன்றும் அமெரிக்கர் என்ற புனிதமும், அமெரிக்கா என்ற புனித தளமும் உருவாக்கப்படுவதற்கும் ஹொலிவூட் திரைப்படங்கள் பெரும்பங்காற்றியுள்ளன.

இவ்வளவு கருதுகோள்களுடன் அண்மையில் வெளிவந்த நீளிரா என்ற திரைப்படத்தைப் பற்றிய சிறு பார்வையை முன் வைக்கின்றேன். இது விமர்சனமல்ல ஒரு உரையாடலுக்கான வெளியை உருவாக்கும் முயற்சியே. இவை அனைத்தும் என்னால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்துகள்.

எமக்கான சினிமா பற்றி நீளிரா வெளிவந்தவுடன் சமூக வலைத்தளங்களில் உரையாடப்பட்டன. மேலே குறிப்பிட்ட நியுவேவ், நவ யதார்த்தவாத மற்றும் சினிமா நோவா திரைப் பட வகைகளே பிரெஞ், இத்தாலி, பிரேசிலுக்கான திரைப்பட வடிவங்களை உருவாக்கின. இவற்றின் முக்கிய பங்கு உள் ளூர் நடிகர்களே பெரும்பாலான படங்களில் நடித்துள்ளனர். இதனை நான் தொடர்ந்து வலியுறுத்திவருகின்றேன். குறிப் பாக, மண் சார்ந்த சீரிய படங்களில் உள்ளூர் நடிகர்கள் அதிகளவு நடிப்பது அவசியம்.

நீளிரா பல விடயங்களில் சிறப்புத் தன்மையைக் கொண்டுள் ளது என்பது மறுப்பதற்கில்லை. இந்திய பாதுகாப்பு படை யின் காலத்தினைப் பதிவு செய்துள்ளது. ஒரு வீட்டினுள் இராணுவம் புகுவதனுடன் படத்தின் முக்கிய காட்சிகள் ஆரம்பமாகின்றன.

பாத்திரங்களில் முக்கியமாக வீட்டினரால் வளர்க்கப்படும் கோழியும் உள்ளது. சேவலை வெளியே இறைச்சியாக்கும் இந்தி பாதுகாப்பு படை வீட்டிற்குள் புகுந்தது. வீட்டின் முடிவு களை எடுக்கும் வீட்டுத் தலைவி. யாழ்ப்பாணத்து குடும்பங் களின் பொதுத் தன்மை இது. இவருக்கு போராளிகளின் மீது நன்மதிப்புண்டு. அவர்களுக்கு சமைத்து உணவும் கொடுக் கின்றார். அதே சமயம் வீட்டினை புற உறவுகளின் மற்றும் அரசியல் சம்பவங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற அவசியமும் அவருக்குள்ளது. மிகச் சிறப்பாக அந்த தாய் தனது பாத்திரத்தை வெளிப்படுத்துகின்றார். வயது முதிர்ந்த வீட்டின் மூத்த தலைவர். கணவர் மற்றும் பெண் பிள்ளைகள், சிறுவர்கள், வாலிப வயது இளைஞன் என குடும்பம் விரி கின்றது. இவர்கள் அனைவரும் போராளிகள் மீது அக்கறை யும் நேசமும் கொண்டவர்கள். மறுநாள் வீட்டின் மகளுக்கு பிரான்சில் வாழும் இளைஞருக்குமான திருமண நிகழ்வு. மணமகன் பிரான்சில் உள்ளார். ஆனால், குடும்பத்தவர்கள் அப்பெண்ணை வழியனுப்பி வைப்பதற்கான நிகழ்வு நடை பெறவுள்ளது. சேவலைக் கொன்ற இராணுவம் வீட்டினுள் புகுந்துள்ளது. அதன் பின்னர் நடைபெறும் உரையாடல் களும் சம்பவங்களுமே திரைப்படம். ஒரு இரவில் நடைபெறு வதனால் படத்தின் பெயர் நீளிரா. அதாவது நீண்ட இரவு. 90 நிமிடங்களில் கனகச்சிதமான படம். அந்தக் காலகட்டத்தை அழகாவும் ஆழமாகவும் வெளிப்படுத்தியுள்ளார்கள். தனி நபர்கள், குடும்பங்கள் என்றவுடன் போரைப் பற்றிய பார்வை இக்குடும்பத்தினுள் தடுமாறுவதனை இயக்குநர் சோமிதரன் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு வித சுயநலத்தன்மை இக் குடும்ப உறுப்பினர்களிடம் இருப்பதும் பதிவாகியுள்ளது. குடும்ப உறுப்பினர்களின் சிந்தனைகளுக்கும் யதார்த்த நிலைக்கும் உள்ள முரண்பாட்டால் ஒரு பதற்ற நிலை வெளிப்படுகின்றது. இதனையும் சோமிதரன் பார்வையாளர் கள் மத்தியிலும் புகுத்தியுள்ளார்.





நிலைத்தன்மை மற்றும் மாற்றம் பற்றிய பிரச்சினையும் போர்த் திரைப்படங்களில் முக்கியமானது. இங்கும் போராளி களுக்கு ஆதரவளிக்கும் குடும்பம், தங்கள் வாழ்க்கை நிலையை மாற்ற விரும்பவில்லை. தங்களது மகளை பிரான்சிற்கு நல் வாழ்வுக்காக அனுப்புகின்றார்கள். போர்ச் சமூகத்திலிருந்து விலகவே விரும்புகின்றார்கள். இது யதார்த்தமானது தங்க ளது சொந்த மதிப்புகள் பற்றிய விழிப்புணர்வு எழுந்தபோது அவர்களுக்கு ஒரு பதற்றம் ஏற்படுகின்றது. உள்ளே புகுந்த இராணுவம் மீது கோபம் வந்த போதும் அவர்களின் நட வடிக்கைகளில் ஏற்பட்ட மாற்றத்தையும் இயக்குநர் பதிவு செய்யத் தவறவில்லை. இது இப்படத்தின் சிறப்பம்சமாகும். இச்சூழலின் புறத்தையும் தலையாட்டி போன்ற சில காட்சி கள் மூலம் பதிவு செய்துள்ளார். ஆனால் அக்காட்சிகளின் இந்திய பாதுகாப்பு படையின் பொதுத் தன்மையிலிருந்து விலகியே உள்ளது.

இப்படத்தின் புற அரசியல் பற்றிய பல கேள்விகள் உள்ளது. பொதுவாகவே இந்திய பாதுகாப்பு படை என்றவுடன் அந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தவர்கள் மத்தியில் தோன்றும் எண் ணங்கள் கருத்துகள் வித்தியாசமானவை. பெண்கள் மீதான வன்முறைகளைச் செய்தவர்கள். கடும் அட்டூழியங்கள் செய் தவர்கள் என்பனவே ஞாபகத்திற்கு வரும். படத்தில் பெண் கள் ஒரு உடையின் மீது வேறு உடைகளை உடுக்கின்றார் கள். இந்த உடைகள் கூட சீருடை போன்றுள்ளது. இப்படத் தின் பார்வையாளர்களில் இந்திய தமிழர்களும் அடங்கு வார்கள். இவர்களுக்கு அங்கு என்ன நடைபெற்றது. ஏன் அவ்வாறு உடைகள் உடுக்கின்றார்கள் என்பது தெரியாது. இந்தக் காட்சியின் ஆழத்தை பொதுமைப்படுத்தி அர்த்த மற்றதாக்கிவிடுகின்றார்.

இந்திய பாதுகாப்பு படையின் கொடூரம் அழிக்கப்பட்டு ஒரு நல்ல இராணுவமாக சோமிதரன் வெளிப்படுத்தியுள்ளார். யாரை எதிரியாக நினைக்கின்றோமோ அவர் எதிரியல்ல என சோமிதரன் ஊடகவியலாளர் சுதிருடனான பேட்டியில் குறிப் பிடுகின்றார். இதனை அவரது அரசியல் கருத்தாக மட்டும் பார்க்காது படம் வெளிப்படுத்தும் இந்திய அரசாங்கத்துக் கான பிரச்சாரமாகவும் பார்க்க வேண்டியுள்ளது.

படத்தில் வரும் வயது முதிர்ந்தவர் பிரிட்டிஸ் காலத்தில் இந்தியா சென்று பிரிட்டிஸ் இராணுவத்துடன் இணைந்து பல இடங்களில் போரிட்டுள்ளார். அவர் கூறும் ஒரு வசனம் அப்பொழுதெல்லாம் விசா இல்லை. இந்தியாவெல்லாம் செல்லலாம். முதலாவது இவ்வாறானவர்கள் பலர் உள்ளனர். அண்மையில் தாய்வீட்டில் ஒரு முன்னாள் இராணுவத் தளபதி (தமிழர்) பற்றிய கட்டுரை வெளிவந்துள்ளது. அவரும் அவ் வாறே போர்களில் பங்குபற்றியவர். ஆனால், வெகு அரிதா கக் காணப்படுபவர்களை ஏன் வீட்டின் முதிய பாத்திரமாக் கியுள்ளார்? இதன் பின்னால் உள்ள நுண் அரசியல் ஆபத் தானது எனக் கருதுகின்றேன். அவர் பேசும் வசனங்களையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

படத்தின் இறுதிப் பகுதி ஒரு நாடகத் தன்மையுடன் வெளிப் படுகின்றது. மருத்துவக் கல்லூரி மாணவி, மனோ நிலை பாதிக்கப்பட்டு வீட்டினுள் பாதுகாக்கப்படுகின்றார். வீட்டுத் தலைவிக்கு இருக்கும் பதற்றம் பார்வையாளர்களிடம் இல்லை. ஏன் அவர் அவ்வாறு பாதிக்கப்பட்டார் என்று படம் வெளிப் படுத்த தவறிவிட்டது. வைத்தியசாலையின் மீது குண்டுகள் போட்டமையே காரணம். இன்று இஸ்ரேல் காசா வைத்திய சாலைகளை அழித்துள்ளது. லெபனானில் வைத்தியசாலை கள் மீது குண்டுகளைப் போட்டுள்ளது. இன்று இந்தியா இஸ்ரேலுடன் இணைந்து இயங்குகின்றது. சோமிதரன் தனது இருப்பையும், இந்தியாவையும் பாதுகாக்கும் நோக்கமாகவே இது வெளிப்படுகின்றது.

விடுதலைப் புலிகளை வெளிப்படுத்திய விதம் ஒரு விதத் தில் அவர்களை புனிதப்படுத்தியுள்ளது. அவர்களின் போரி டும் திறனைக் குறைத்துள்ளது. ஒரு காதலுக்காக அல்லது காதலியின் குரலைக் கேட்டவுடன் தங்களது இலக்கை விட்டு பொதுவாக புலிகள் வெளியேறவில்லை. அதுவும் காதலுக் காக வெளியேறவில்லை. இப்படத்தின் புற அரசியல் விமர் சனத்துக்குரியது. நேர்மையற்றது. அதே சமயம் எமக்கான சினிமாவைக் கோடம்பாக்கத்து சினிமாவினூடாகப் பெற முடியாது. அது எமது இயல்புத் தன்மையையே அழித்துவிடும்.


இக் கட்டுரை ஒரு உரையாடல் வெளிக்கான பார்வை.



rathan@thaiveedu.com

காலமும் அரசியலும் கலந்த கட்டுமானம் 3

சொர்ணவேல்



பேலா டார் (B´la Tarr):
அழிவின் மீவியற்பியல் மற்றும் இயங்கியலின் முடிவு:

யான்சோ அதிகாரத்தின் நடனத்தை அமைத்தார் என்றால், ஏஞ்ச லோபுலஸ் வரலாற்றின் இடிபாடுகளைத் தொல்லியல் ஆய்வு செய்தார் என்றால், பேலா டார் பிரபஞ்சத்தின் சிதைவை (entropy) படம்பிடிக்கிறார். 1970-களின் பிற்பகுதியில் 'புடாபெஸ்ட் பள்ளி'யின் (Budapest School) ஒரு பகுதியாகத் தனது வாழ்க்கையைத் தொடங்கிய டார், கையில் வைத்திருக்கும் கேமராக்கள் மற்றும் தொழில்முறையற்ற நடிகர்களைப் பயன்படுத்தி, சோசலிசத்தின் கீழ் வீட்டுவசதி நெருக்கடியை விமர்சிக்கும் Family Nest (1979) போன்ற சமூக யதார்த்தவாத 'ஆவணப் புனைகதைகளை' உருவாக்கினார். இருப்பினும், அவரது பாணி 1980-களில் ஒரு தீவிர மாற்றத்திற்கு உள்ளாகி, மீவியற்பியல் சார்ந்த, கருப்பு-வெள்ளை 'மெதுவான சினிமாவை' நோக்கி நகர்ந்தது. இது குறிப்பிட்ட அரசியல் ஆட்சி களைப் பற்றியது அல்ல, மாறாக இருத்தலின் 'மெய்யியல் மலத்தைப்' (ontological shit) பற்றியது.

சமூக யதார்த்தவாதத்திலிருந்து
காஸ்மிக் அவநம்பிக்கை வரை:

டாரின் ஆரம்பகாலப் படைப்புகள் 'புடாபெஸ்ட் பள்ளி' பாணியில் ஆழமாகப் பதிந்திருந்தன, இது அதிகாரப்பூர்வ சோசலிசப் பிரச்சா ரத்திற்கும் தொழிலாள வர்க்க வாழ்க்கையின் மோசமான யதார்த் தத்திற்கும் இடையிலான இடைவெளியை அம்பலப்படுத்த முயன்றது. Family Nest மற்றும் The Outsider (1981) ஆகியவை வீட் டுவசதிப் பற்றாக்குறை மற்றும் அரச சோசலிசத்தின் கீழ் குடும்ப அலகு சிதைவது பற்றிய நெருக்கடியான ஆய்வுகள். இருப்பினும், அரசியல் மாற்றத்தின் மூலம் சமூகப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்ற எண்ணத்தில் டார் ஏமாற்றமடைந்தார். 'மலம் என்பது அண்டவியல் சார்ந்தது' (the shit is cosmical), வெறும் சமூகம் சார்ந்தது மட்டுமல்ல என்பதை அவர் உணர்ந்தார்.



இந்த உணர்தல் Damnation (1988) படத்திற்கு வழிவ குத்தது, இது அவரது முதிர்ந்த பாணியில் அமைந்த முதல் படம் மற்றும் எழுத்தாளர் லாஸ்லோ கிராஸ்னஹோர்காய் (László Krasznahorkai) உடனான அவரது முதல் கூட்டுப்ப ணியாகும். Damnation கையொப்பமிட்ட டார் அழகியலை அறிமுகப்படுத்துகிறது: இடைவிடாத மழை, சேறு, மெது வான, மெய்மறக்க வைக்கும் ட்ராக்கிங் ஷாட்கள் (tracking shots) மற்றும் பாழடைந்த, தொழில்மயமாக்கலுக்குப் பிந்தைய நிலப்பரப்பில் சிக்கியுள்ள கதாபாத்திரங்கள் மீதான கவனம். இப்படம் துரோகம் பற்றிய ஒரு 'நுவாரிஷ்' (noirish) கதை, ஆனால் அதன் உண்மையான பொருள் இருத்தலின் தவிர்க்க முடியாத ஈர்ப்பு விசை ஆகும்.

S´t´ntang´ (1994): கம்யூனிசத்தின் போலி மெசியாகள்:

Sátántangó டாரின் தலைசிறந்த படைப்பாகும், இது ஏழு மணி நேர பிரம்மாண்டமான படைப்பு. இது கம்யூனிசத்தின் சரிவு மற்றும் முதலாளித்துவத்தின் தவறான விடியலுக்கான ஒரு அழிவுகரமான உருவகமாகச் செயற்படுகிறது. மழை ஒருபோதும் நிற்காத ஒரு பாழடைந்த கூட்டுப் பண்ணையில் அமைக்கப்பட்ட இப்படம், குடியிருப்பாளர்கள் இரிமியாஸ் (Irimiás) திரும்புவதற்குக் காத்திருப்பதைப் பின்தொடர் கிறது. அவர் தங்களைக் காப்பாற்றுவார் என்று அவர்கள் நம்பும் ஒரு கவர்ச்சியான நபர், ஆனால் உண்மையில் அவர் ஒரு காவல்துறை உளவாளி மற்றும் ஏமாற்றுக்காரர்.

மெசியாவாதத்தின் (messianism) மீதான விமர் சனமாக இப்படம் செயற்படுகிறது. மிருகத் தனமான அழுக்கு மற்றும் அற்பச் சண்டைக ளுக்குத் தள்ளப்பட்ட கூட்டுப் பண்ணை வாசிகள், ஒரு இரட்சகருக்காக ஏங்குகிறார்கள். அவர்கள் தங்கள் அற்பச் சேமிப்பை இரிமியாஸிடம் உடன டியாக ஒப்படைக்கிறார்கள், அவர் மீது ஒரு புதியக் கற்பனாவாதத்திற்கான தங்கள் நம்பிக் கைகளைத் திணிக்கிறார்கள். இந்த இயக்கவியல் கம்யூனிசத்திற்குப் பிந்தைய மாற்றத்தில் கிழக்கு ஐரோப்பிய மக்களின் பாதிப்பைப் பிரதிபலிக் கிறது - வாய்வீச்சாளர்கள், தேசியவாதிகள் அல்லது நுகர்வோர் முதலாளித்துவத்தின் தவறான வாக்குறுதிகளுக்கு எளிதில் பலியாகிறார்கள்.

இங்கே டாரின் அழகியல் உத்தி உணர்வுப்பூர் வமான மூழ்கடித்தல் மற்றும் சோர்வு ஆகிய வற்றில் ஒன்றாகும். சேற்றில் அலையும் மாடுகள் அல்லது குடித்துவிட்டு போதையில் ஆடும் குடி யிருப்பாளர்களின் 10 நிமிட நீண்ட காட்சிகள், அவர்களின் இருப்பின் முழுப் பொருள்சார் கனத்தை அனுபவிக்கப் பார்வையாளரைக் கட் டாயப்படுத்துகின்றன. யான்சோவின் அருவமான சதுரங்கக் காய்களைப் போலல்லாமல், டாரின் கதாபாத்திரங்கள் வலிமிகுந்த வகையில் உடல் தன்மை கொண்டவை. இங்கே 'அரசியல்' என்பது சமூகப் பிணைப்பின் சீரழிவில் காணப்படுகிறது. வெளிப்புற ஒடுக்குமுறையால் கூட்டு தோல்வியடையவில்லை, மாறாக உள் தார்மீகக் கட்ட மைப்பு அழுகிப்போனதால் தோல்வியடைந்தது. தலைப்பில் உள்ள 'சாத்தான்' ஒரு இயற்கைக்கு அப்பாற் பட்ட உயிரினம் அல்ல, மாறாக அவர்களின் வாழ்க்கையை ஆளும் என்ட்ரோபி (entropy) ஆகும்.

Werckmeister Harmonies (2000): சர்வாதிகாரம் மற்றும் கும்பல்:

Werckmeister Harmonies (Werckmeister harmóniák) வாய் வீச்சின் மீதான ஆய்வைத் தொடர்கிறது. ஒரு மர்மமான சர்க்கஸ் ஒரு சிறிய ஹங்கேரிய நகரத்திற்கு வருகிறது, இது ஒரு ராட்சத அடைக்கப்பட்ட திமிங்கிலத்தைக் காட்டுகிறது மற்றும் 'தி பிரின்ஸ்' (The Prince) என்று அழைக்கப்படும் ஒரு குரலால் வழிநடத்தப்படுகிறது. தி பிரின்ஸ் நகர மக்களை வன்முறைக்குத் தூண்டுகிறார், இது ஒரு கலவரத் திற்கு வழிவகுக்கிறது, அங்கு அவர்கள் ஒரு மருத்துவ மனையை அழித்து நோயாளிகளைத் தாக்குகிறார்கள்.

பாசிசத்தின் எழுச்சி அல்லது ஜனரஞ்சக சொல்லாட்சியால் மக்கள் எவ்வளவு எளிதாகக் கையாளப்படலாம் என்ப தற்கான உருவகமாக இப்படத்தைப் படிக்கலாம். இருப் பினும், திமிங்கிலத்தின் இருப்பு - ஒரு மௌனமான, உன்ன தமான, அழுகும் பிரம்மாண்டம் - அண்டவியல் மர்மத்தின் ஒரு அடுக்கைச் சேர்க்கிறது. திமிங்கிலம் 'முற்றிலும் பிறிதானதை' (totally other) பிரதிபலிக்கிறது, இது நாகரி கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்தும் விஷயங்களின் வரிசையில் ஒரு இடையூறு. அணிவகுத்துச் செல்லும் கும்பலுடன்



நகரும் ஒரு திகிலூட்டும் ட்ராக்கிங் ஷாட்டில் பட மாக்கப்பட்ட கலவரக் காட்சி, சினிமாவில் கூட்டு வன்முறையின் மிகவும் உறையவைக்கும் சித்த ரிப்புகளில் ஒன்றாகும். ஆண்ட்ரியாஸ் வெர்க் மைஸ்டரின் (Andreas Werckmeister) இசைக் கோட்பாடுகளைக் குறிக்கும் தலைப்பின் 'இசை வுகள்' (harmonies), குழப்பமான பிரபஞ்சத்தின் மீது ஒழுங்கின் செயற்கையான திணிப்பு என்று டார் விமர்சிக்கிறார். இசை, அரசியல், சமூகம் என அனைத்து அமைப்புகளும் யதார்த்தத்தின் என்ட்ரோபிக் தன்மைக்கு எதிராகத் தோல்வியடையப் பணிக்கப்பட்டுள்ளன என்று படம் கூறுகிறது.



The Turin Horse (2011): எதிர்-படைப்பு:

டாரின் இறுதிப் படமான The Turin Horse, அவரது அவநம் பிக்கைப் பார்வையை அதன் முழுமையான எல்லைக்குத் தள்ளுகிறது. டூரின் நகரில் அடிபட்ட குதிரையைப் பார்த்து நீட்சே அழுததாகக் கூறப்படும் கதையை அடிப்படையாகக் கொண்டு, குதிரை மற்றும் அதன் உரிமையாளரின் 'பிற்கால வாழ்க்கையை' இப்படம் சித்தரிக்கிறது. உலகம் படிப்ப டியாக முடிவடையும் போது ஒரு வண்டி ஓட்டுநர் மற்றும் அவரது மகளின் வாழ்க்கையில் ஆறு நாட்களை இது விவ ரிக்கிறது.

விமர்சகர்களும் டாரும் இப்படத்தை ஒரு 'தலைகீழ் ஆதியா கமம்' (Genesis in reverse) அல்லது 'எதிர்-படைப்பு' (anti-creation) கதை என்று விவரித்துள்ளனர். ஆறு நாட்களில், வாழ்க்கையின் அத்தியாவசியக் கூறுகள் அகற்றப்படு கின்றன: மரப்புழுக்கள் சத்தம் போடுவதை நிறுத்துகின்றன, குதிரை சாப்பிட மறுக்கிறது, கிணற்றில் உள்ள நீர் வற்றிப் போகிறது, இறுதியாக, ஒளியே அணைந்துவிடுகிறது. முன் னேற்றம் குறித்த மார்க்சியத் லட்சியத்தின் இறுதி மறுப்பு இதுவாகும். மார்க்சியத்தைப் பொறுத்தவரை, வரலாறு என்பது விடுதலையை நோக்கிய முன்நோக்கிய அணிவ குப்பு. டாரைப் பொறுத்தவரை, வரலாறு என்பது சிதைவின் செயல்முறை. மானுடவியல் (Anthropocene) அல்லது அரசி யலுக்குப் பிந்தைய காலத்தில் 'மனித' திட்டத்தின் சோர் வுக்கான உருவகமாக இப்படத்தைப் படிக்கலாம். வேக வைத்த உருளைக்கிழங்கைத் திரும்பத் திரும்பச் சாப்பி டுவது - கடுமையான விவரங்களுடன் படமாக்கப்பட்டது - வாழ்க்கையைத் தூய உயிரியல் பிழைப்புக்குக் குறைக் கிறது, இதில் அர்த்தமோ ஆழ்நிலையோ இல்லை. 'கம்யூனி சத்திற்குப் பிந்தைய மனச்சோர்வின்' சூழலில், The Turin Horse போராடுவதற்கு எந்தப் புரட்சியும் எஞ்சியிருக்க வில்லை என்பதைக் குறிக்கிறது; காற்றும் இருளும் மட்டுமே உள்ளன.



இயக்கக் கையொப்பங்கள்: கேமரா இயக்கங்களை வரையறுத்தல்:

இந்த மூன்று இயக்குநர்களிடையே உள்ள அரசியல் மற்றும் தத்துவார்த்த வேறுபாடுகள் கேமரா இயக்கத்தைக் கையாளும் அவர்களின் குறிப்பிட்ட முறைகளில் மிகவும் தெளிவாகப் பொதிந்துள்ளன. அனைவரும் நீண்ட காட்சிப் பதிவைச் சார்ந்திருந்தாலும், இயக்கத்தின் உள் தர்க்கம் அவர்களின் தனித்துவமான அழகியல் கையொப்பங்களை வரையறுக்கிறது.

யான்சோ மற்றும் சுற்றிவளைப்பின் வடிவியல் (Geometry of Encirclement): Red Psalm (1972) படத்தில், குறிப்பாகப் பிர பலமான 'மேபோல்' (Maypole) காட்சியில், யான்சோவின் கேமரா விவசாயிகள் மற்றும் வீரர்களை 360 பாகை சுற்றிவ ளைப்பை நிகழ்த்துகிறது. ஒரு காட்சியை ஆய்வு செய்யும் பாரம்பரிய 'பான்' (pan) போலல்லாமல், இந்த இயக்கம் செயல்மிகுந்தது மற்றும் மூடியது; இது வெளியேற முடியாத ஒரு மூடிய அமைப்பாக மாறும் அதிகார இயக்கவியலை வரைபடமாக்கு கிறது. கேமரா பக்கவாட்டில் நகர்கிறது, பெரும் பாலும் புலத்தின் ஆழத்தைத் (depth of field) தட்டையாக்க ஜூம் லென்ஸைப் பயன்படுத்து கிறது, இது புஸ்தாவின் முப்பரிமாண வெளியைப் புரட்சிகரச் சடங்கின் இரு பரிமாண நாடாவாக மாற்றுகிறது. இந்த 'நடன-எழுத்து' வரலாற்று நிகழ்வை ஒடுக்குமுறை மற்றும் எதிர்ப்பின் காலமற்ற, தொடர்ச்சியான சுழற் சியாக மாற்றுகிறது.

ஏஞ்சலோபுலஸ் மற்றும் காலப்-பயண பான் (Time-Travel Pan): The Travelling Players (1975) படத்தில், ஏஞ்சலோபுலஸ் 360-டிகிரி



பானை இடத்தை மூடுவதற்குப் பயன்படுத்தாமல், காலத்தைக் கடக்கப் பயன்படுத்துகிறார். கொண்டாடப்படும் 'அகோரா' (Agora) காட்சியில், கேமரா 1939-ஆம் ஆண்டின் ஒரு காட்சியைக் கட்டமைப்பதன் மூலம் தொடங்குகிறது, பின்னர் கிராமச் சதுக்கத்தின் குறுக்கே மெதுவாக நகர்கிறது, ஒரு வெட்டு கூட இல்லாமல், 1952-இல் நடைபெறும் ஒரு அரசியல் பேரணியில் வந்து நிற்கிறது. இடஞ்சார்ந்த தொடர்ச்சியைப் பராமரிக்கும் அதே வேளையில் காலத் தொடர்ச்சியைத் தீவிரமாகச் சீர்குலைப்பதன் மூலம், கடந்த காலம் 'முடிந்துவிடவில்லை' என்று ஏஞ்சலோபுலஸ் காட்சி ரீதியாக வாதிடுகிறார்; அது நிலப்பரப்பில் நிரந்தரமாகப் பதிக்கப்பட்ட ஒரு நிழல் அடுக்காகும். இந்த இயக்கம் தொல்லியல் ரீதியானது, அடியில் உள்ள தீர்க்கப்படாத அதிர்ச்சியை வெளிப்படுத்த நிகழ்காலத்தை உரித்துக்காட்டுகிறது.

டார் மற்றும் அணிவகுப்பின் கனம் (Heaviness of the March): Werckmeister Harmonies (2000) படத்தில், யான்சோவின் திரவப் பாலேவை (ballet) கைவிட்டு, இடைவிடாத, புவியீர்ப்புச் சார்ந்த கனத்திற்காக டாரின் கேமரா மாறுகிறது. மருத்துவமனைக் காட்சியின் போது, தெருக்களில் அணிவகுத்துச் செல்லும் அமைதியான கும்பலுக்குப் பின்னால் கேமரா நகர்கிறது. இயக்கம் மெதுவானது, நிலையானது மற்றும் திகிலூட்டும் வகையில் உடல்தன்மை கொண்டது, இது ஒரே நேரத்தில் நகரும் உடல்களின் முழு எடையையும் வலியுறுத்துகிறது. யான்சோவின் அருவமான சதுரங்கக் காய்களைப் போலல்லாமல், டாரின் உருவங்கள் புவியீர்ப்பு மற்றும் தார்மீகச் சிதைவால் பாரமாக்கப்படுகின்றன. கும்பல் மருத்துவமனைக்குள் நுழைந்து, கேமரா இறுதியாக ஒரு நிர்வாண, மெலிந்த முதியவரைக் கவனிக்க நிறுத்தும்போது, இயக்கத்தின் நிறுத்தம் ஒரு அதிர்ச்சியாகச் செயற்படுகிறது - கும்பலின் தடுக்க முடியாத சக்திக்கும் மனித உடலின் பலவீனமான யதார்த்தத்திற்கும் இடையிலான மோதல்.

கூட்டு விண்மீன் மண்டலங்கள்: நீண்ட காட்சிப் பதிவின் கூட்டுப் படைப்புரிமை:

நீண்ட காட்சிப் பதிவின் கடுமையான அழகியல் கோரிக்கைகள், இந்த இயக்குநர்கள் தங்கள் முக்கிய பங்களிப்பாளர்களுடன் ஆழ்ந்த, ஒத்திசைவான உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டியிருந்தது. பத்து நிமிடங்கள் அல்லது அதற்கு மேல் நீடிக்கும் ஷாட்களை உருவாக்குவது, சிக்கலான நடன அமைப்பு மற்றும் படத் தொகுப்புப் பாதுகாப்பு வலை (editing safety net) இல்லாதது, திரைப்படத் தயாரிப்பை இயக்கத்தின் தனிமைச் செயலிலிருந்து ஒரு கூட்டுச் செயற்றிறனாக மாற்றியது.

மிக்லோஷ் யான்சோ மற்றும் 'ஸ்டாக் கம்பெனியின்' உடல்தன்மை: யான்சோவின் படங்கள், குறிப்பாக 1960-களின் பிற்பகுதியில், ஜோசெஃப் மடராஸ், ஆண்ட்ராஸ் கோசாக் மற்றும் ஜார்ஜ் செர்ஹால்மி உள்ளிட்ட மீண்டும் மீண்டும் வரும் நடிகர்களின் 'ஸ்டாக் கம்பெனியை' (stock company) நம்பியிருந்தன. இந்த நடிகர்கள் ஸ்டானிஸ்லாவ்ஸ்கியன் (Stanislavskian) அர்த்தத்தில் உளவியல் ஆழத்தை வழங்கக் கேட்கப்படவில்லை; மாறாக, அவர்கள் யான்சோவின் நடமாடும் கட்டடக்கலையில் இயக்கக் கூறுகளாகச் செயற்பட்டனர். The Red and the White மற்றும் Red Psalm போன்ற படங்களில், நடிகர்கள் உடல்ரீதியாகச் சோர்வுற்ற நடைமுறைகளைச் செய்ய வேண்டியிருந்தது - அணிவகுத்தல், ஆடை அவிழ்த்தல், ஓடுதல் மற்றும் பாடுதல் - பெரும்பாலும் கேமராவின் இடைவிடாத பாதையில் செல்லும்போது. 'யான்சோ நடிகர்' ஓர் உணர்ச்சியற்ற முகம் மற்றும் ஒழுக்கமான உடலால் வகைப்படுத்தப்படுகிறார், தனிப்பட்ட நரம்பியல் நோய்க்குப் பதிலாக வரலாற்றுச் சக்திகளுக்கான ஒரு பாத்திரமாகச் செயற்படுகிறார். இந்த ஆள்மாறாட்ட நடிப்பு பாணி யான்சோவின் மார்க்சிய விமர்சனத்திற்கு அவசியமானது; முதலாளித்துவ உளவியலை அகற்றுவதன் மூலம், வர்க்கப் போராட்டத்தின் கூட்டுத் தன்மையையும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஒடுக்குமுறையாளர்களின் பரிமாற்றத்தையும் அவர் வலியுறுத்தினார்.


தியோ ஏஞ்சலோபுலஸ் மற்றும் நிலப்பரப்பின் ஒலி: எலெனி கரைண்ட்ரூ: தியோ ஏஞ்சலோபுலஸுக்கு, இசையமைப்பாளர் எலெனி கரைண்ட்ரூ (Eleni Karaindrou) வழங்கிய செவிப்புலன் பரிமாணம் இல்லாமல் நீண்ட காட்சிப் பதிவு முழுமையடையாது. Voyage to Cythera (1984) தொடங்கி அவரது இறுதி எட்டுப் படங்களில் ஒத்துழைத்த கரைண்ட்ரூ, அவரது சினிமாவின் 'பத்தாவது அருங்கலைவாணி' (tenth



muse) என்று அழைக்கப்பட்டார். ஓபோ, அக்கா ரியன் மற்றும் செல்லோ ஆகியவற்றைக் கொண்ட அவரது இசை, செயலை அடிக்கோ டிட்டுக் காட்டுவது மட்டுமல்ல; இது காட்சி மௌனத்திற்கு ஒரு 'எதிர்நிலையாக' (counter-point) செயற்படுகிறது, 'நிலப்பரப்பின் ஒலியையே' உள்ளடக்கியது. Eternity and a Day படத்தில், டையஜெட்டிக் (diegetic) மற்றும் நான்-டையஜெட்டிக் (non-diegetic) ஒலிக்கு இடையிலான எல்லை கரைகிறது; பின்னணி இசையாகத் தொடங்கும் இசை திரையில் ஒரு தெருக்கலைஞரிடமிருந்து வருவதாக வெளிப்ப டுத்தப்படலாம், இது ஏஞ்சலோபுலஸின் திரவமான காலக் கையாளுதலைப் பிரதிபலிக் கிறது. கரைண்ட்ரூவின் ஆழ்துயரம் தோய்ந்த, மீண்டும் மீண்டும் வரும் இசைக்கோர்வைகள், பால்கன் வரலாற்றின் சொல்லப்படாத சோகத்தை வெளிப்ப டுத்தி, இயக்குநரின் கோரும் கால அளவுகள் மூலம் பார்வை யாளரைத் தாங்கிப்பிடிக்கும் உணர்ச்சிகரமான நங்கூரத்தை வழங்குகின்றன.



பேலா டார் மற்றும் வெட்டின் தாளம்: ஆக்னஸ் ஹிரா னிட்ஸ்கி: ஒருவேளை மிகவும் ஆழமான ஒத்துழைப்பு பேலா டார் மற்றும் அவரது மனைவியும், படத்தொகுப்பாளரும், இணை இயக்குநருமான ஆக்னஸ் ஹிரானிட்ஸ்கிக்கு (Ágnes Hranitzky) இடையிலானதாகும். படப்பிடிப்புத் தளத் தின் குழப்பமான தளவாடங்களை டார் நிர்வகித்தபோது, ஹிரானிட்ஸ்கி வீடியோ கிராமத்தில் 'கண்களாக' இருந்தார், உண்மையான நேரத்தில் ஷாட்டின் உள் தாளத்தைக் கண் காணித்தார். ஒரு ஷாட் பத்து நிமிடங்கள் நீடிக்கும் சினிமாவில், 'படத்தொகுப்பு' திறம்பட டேக்கின் போதே நிகழ் கிறது. கேமரா இயக்கம் மற்றும் நடிகர்களின் பிளாக்கிங் (blocking) ஆகியவற்றின் வேகம் தேவையான பதற்றத்தைப் பராமரிப்பதை உறுதி செய்வது ஹிரானிட்ஸ்கியின் பணியாக இருந்தது, இது 'இறந்த நேரத்தை' மந்தமாக மாறுவதைத் தடுக்கிறது. அவர் டாரின் பிற்காலப் படங்களில் இணை இயக்குநராகக் குறிப்பிடப்படுகிறார், இது 'டார் அழகியல்' ஒரு இரட்டைப் படைப்பு என்பதை அங்கீகரிக்கிறது. தொடர்ச்சி மற்றும் வேகத்திற்கான அவரது கூர்மையான பார்வை, பொருள்சார் அமைப்பில் டாரின் வெறித்தனமான கவனத்திற்கு ஈடுசெய்தது, அவர்களின் உலகின் 'கனம்' வெறும் ஒடுக்குமுறையாக இல்லாமல் கட்டாயப்படுத்து வதாக இருப்பதை உறுதி செய்தது.



பிம்பத்தின் பிற்கால வாழ்க்கை: மரபுகள் மற்றும் வம்சாவளிகள்:

யான்சோ, ஏஞ்சலோபுலஸ் மற்றும் டார் ஆகியோரின் அழகியல் மற்றும் அரசியல் புதுமைகள் காப்பகங்களில் மறைந்துவிடவில்லை, ஆனால் சமகால உலக சினிமாவின் டிஎன்ஏ-இல் பரவியுள்ளன, இது இருபதாம் நூற்றாண்டின் பின்விளைவுகளுடன் மல்லுக்கட்டும் புதிய தலைமுறைத் திரைப்படத் தயாரிப்பாளர்களைப் பாதிக்கிறது.

யான்சோவின் டிஎன்ஏ: மிக்லோஷ் யான்சோவின் குறிப்பிட்ட பிராண்டான இயக்க, வெகுஜன-நடனமாடப்பட்ட ஆடம்பரம் அதன் முழுமையில் அரிதாகவே நகலெடுக்கப்பட்டாலும் - பகுதியளவில் அதற்குத் தேவைப்படும் மகத்தான தளவாட வளங்கள் காரணமாக - கேமராவை அவர் கருத்தியல் ரீதியாக விடுவித்தது அடிப்படையாக உள்ளது. கிழக்கு ஐரோப்பிய நீண்ட காட்சிப் பதிவின் அங்கீகரிக்கப்பட்ட 'தாத்தா' அவர். பேலா டார், யான்சோவை 'எக்காலத்திலும் சிறந்த ஹங்கேரியத் திரைப்பட இயக்குநர்' என்று மேற்கோள் காட்டி, வெட்டுக்கு (cut) எதிரான கிளர்ச்சியின் பரம்பரையை அங்கீகரித்தார். யான்சோவின் செல்வாக்கு நேரடிப் போலச் செய்தலில் குறைவாகவும், கேமரா வரலாற்றின் தன்னாட்சி முகவராக இருக்கும் சினிமாவின் சாத்தியக் கூறில் அதிகமாகவும் நீடிக்கிறது, இந்தக் கருத்து சமகால வீடியோக் கலைஞர்களின் நிறுவல் வேலைகளிலும் 'பெர்லின் பள்ளியின்' (Berlin School) கடுமையான சம்பிரதாயத்திலும் எதிரொலிக்கிறது.

ஏஞ்சலோபுலஸ் மற்றும் பால்கன் ஆன்மா: பால்கன் மற்றும் துருக்கியில், எல்லைகள் மற்றும் இடிபாடுகள் பற்றிய அந்த ஆழ்துயரம் தோய்ந்த, பனிமூட்டமான சிந்தனையான 'ஏஞ்ச லோபுலஸ் பார்வைக்கு' - நூரி பில்கே ஜெய்லான் (Nuri Bilge Ceylan) வடிவத்தில் ஒரு வாரிசு கிடைத்துள்ளார். சிலானின் சினிமா, குறிப்பாக Once Upon a Time in Anatolia (2011), புதைக்கப்பட்ட அதிர்ச்சியின் களஞ்சி



யமாக நிலப்பரப்பைப் பயன்படுத்துவதையும், இருத்தலியல் விசாரணைக்கான ஒரு கருவியாக வேகத்தைப் பயன்படுத்து வதையும் ஏஞ்சலோபுலஸைப் பிரதிபலிக்கிறது. கிரேக் கத்தில், மரபு மிகவும் பிளவுபட்டது. யோர்கோஸ் லாந்திமோஸ் (Yorgos Lanthimos) (Dogtooth) மற்றும் அதினா ரேச்சல் ட்சங்காரி (Attenberg) தலைமையிலான 'கிரேக்க விசித்திர அலை' (Greek Weird Wave), பெரும் பாலும் ஏஞ்சலோபுலஸின் புனிதமான, மகத்தான - வரலாற்று எடைக்கு எதிரான ஒரு எதிர்வினையாக நிலைநிறுத்தப்படு கிறது. ஆயினும்கூட, அவர்களின் கடுமையான சம்பிரதாயம், உயிரற்ற நடிப்பு மற்றும் மூடிய, ஹெர்மீடிக் (hermetic) அமைப்புகள் மீதான ஆவேசம், அவரது நவீனத்துவக் கண் டிப்புக்கு ஒரு ஆழமான, தலைகீழான கடனை வெளிப்படுத் துகின்றன. ஏஞ்சலோபுலஸ் வரலாற்றை நோக்கி வெளிப்புற மாகப் பார்த்த இடத்தில், அவர்கள் வக்கிரமான குடும்ப அலகை நோக்கி உள்நோக்கிப் பார்க்கிறார்கள், ஆனால் சட்டகத்தின் (frame) தீவிரம் அப்படியே உள்ளது.

டார் விளைவு: இருபத்தியோராம் நூற்றாண்டுத் திருவிழா சினிமாவில் பேலா டாரின் செல்வாக்கு ஒருவேளை மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. அவரது 'கனமான' நேரத்தின் அழகியல் கஸ் வான் சாண்டின் (Gus Van Sant) 'இறப்பு முத் தொகுப்புக்கு' - Gerry (2002), Elephant (2003) மற்றும் Last Days (2005) - நேரடி உத்வேகமாக இருந்தது. குறிப்பாக, Gerry, பாலைவன நிலப்பரப்புகளில் அதன் வார்த்தையற்ற நடைப்பயணக் காட்சிகளுடன், டார் அழகியலுக்கு ஒரு வெளிப்படையான அஞ்சலி ஆகும், இது ஹங் கேரியத் தரிசு நிலத்தை அமெரிக்க உன்னதத் திற்கு மாற்றுகிறது. மிக சமீபத்தில், டாரின் முன்னாள் உதவியாளர் லாஸ்லோ நெமெஸ் (László Nemes), தனது ஹோலோகாஸ்ட் நாடகமான Son of Saul (2015) படத்திற்கு நீண்ட காட்சிப் பதிவின் பாடத்தைத் தழுவினார். நெமெஸ் கால அளவை அப்படியே வைத்தி ருந்தார், ஆனால் சட்டகத்தை கதாநாயகனின் ஆழமற்ற-ஃபோகஸ் குளோசப்-க்கு (shallow-focus close-up) தீவிரமாகச் சுருக்கினார், டாரின் புறநிலை, அண்டவியல் பார்வையை ஒரு அகநிலை, உள்ளுறுப்பு கனவாக மொழிபெ யர்த்தார். சரஜேவோவில் உள்ள தனது film fac-tory பள்ளியின் மூலம், டார் 'மெதுவான சினிமா' படைப்பாளிகளின் புதிய தலைமுறைக்கு வழி காட்டியுள்ளார், இது டிஜிட்டலுக்குப் பிந்தைய உலகில் நேரம், பொருள் மற்றும் கண்ணியம் பற்றிய அவரது தத்துவம் தொடர்ந்து வளர்வதை உறுதி செய்கிறது.

ஒப்பீட்டுத் தொகுப்பு: நீண்ட காட்சிப் பதிவின் பாதை:

யான்சோ, ஏஞ்சலோபுலஸ் மற்றும் டார் ஆகியோரின் படைப்புகளில் நீண்ட காட்சிப் பதிவின் பரிணாமம் 1960-கள் முதல் 2010-கள் வரையிலான ஐரோப்பிய இடதுசாரிகளின் அறிவுசார் பாதையை வரைபடமாக்குகிறது. மூவரும் பகிர்ந்து கொள்ளும் இந்த அழகியல் சாதனம், மாறிவரும் அரசியல் நிலப்பரப்பைப் பிரதிபலிக்கும் வகையில், செயல்பாடு மற்றும் பொருளில் ஆழ்ந்த மாற்றங் களுக்கு உள்ளாகிறது.

குறிப்பிட்ட அரசியல் கருத்துகளுடனான அவர்களின் ஈடு பாட்டின் தீவிரத்தால் விளக்கப்பட்டுள்ளபடி, அவர்களின் படைப்புகளின் மேலாதிக்கக் கருப்பொருள் தனித்துவமான கட்டங்களில் மாறுகிறது.

யான்சோ மற்றும் மூலோபாய நெருக்கடி: 1960-களில், இடது சாரிகளுக்கான முதன்மைக் கேள்வி எப்படி புரட்சி செய்வது என்பதுதான். யான்சோவின் படங்கள் மூலோபாயக் கையேடுகள். அதிகாரத்தைத் தூக்கியெறிவதற்காக அவை அதைப் பகுப்பாய்வு செய்கின்றன. நீண்ட காட்சிப் பதிவு வெளிப்பாட்டின் ஒரு கருவியாகும் - சிறை முகாம் அல்லது போர்க்களத்தின் இடஞ்சார்ந்தத் தொடர்ச்சியைக் காட்டு வதன் மூலம், அவர் ஒடுக்குமுறையின் தொடர்ச்சியை வெளிப்படுத்துகிறார். அவரது படைப்புகளில் 'அரசு வன்முறை' மற்றும் 'புரட்சி' போன்ற கருப்பொருள்களின் உயர் தீவிரம் இந்தப் போர்க்குணமிக்க கவனத்தைப் பிரதிப லிக்கிறது.

ஏஞ்சலோபுலஸ் மற்றும் நினைவக நெருக்கடி: 1970-கள் மற்றும் 90-களில், புரட்சி தோற்கடிக்கப்பட்டது (கிரேக் கத்தில்) அல்லது அதிகாரத்துவமாக உறைந்து போனது (கிழக்கில்). எப்படி நினைவில் கொள்வது என்பது கேள்வி



யானது. ஏஞ்சலோபுலஸின் படங்கள் நினைவி டங்கள். நீண்ட காட்சிப் பதிவு வரலாற்றின் 'இறந்த நேரத்தைப்' பாதுகாக்க உதவுகிறது, நவதாராளவாத நிகழ்காலத்தின் மறதியால் கடந்த காலம் அழிக்கப்படுவதைத் தடுக்கிறது. மேலாதிக்கக் கருப்பொருள் 'வரலாற்று நினை வகம்' மற்றும் 'ஆழ்துயரம்' (Melancholy) என மாறுகிறது. 360-டிகிரி பான் ஒரு தொல்லியல் கருவியாகும், நிகழ்காலம் புதைக்க விரும்பும் பேய்களைத் தோண்டி எடுக்கிறது.



டார் மற்றும் இருத்தலின் நெருக்கடி: 1990-கள் மற்றும் 2000-களில், 'வரலாற்றின் முடிவுக்குப்' பிறகு, அரசியல் அடிவானம் முற்றிலும் மறைந்து விட்டது. எப்படித் தாங்குவது என்பது கேள்வி யானது. டாரின் படங்கள் இருத்தலியல் உயிர் வாழும் திகில் படங்கள் (ontological survival horrors). நீண்ட காட்சிப் பதிவு இனி வரலாறு அல்லது அதிகாரத்தைப் பற்றியது அல்ல; அது காலத்தின் 'கனத்தைப்' பற்றியது. மார்க்சியம் ஒரு பொருள்சார் அவநம்பிக்கையாகக் கரை கிறது. 'அண்டவியல் சிதைவு' (Cosmic Entropy) மற்றும் 'பொருள்சார் தன்மை' ஆகியவற்றின் கருப்பொருள் தீவிரம் இங்கே உச்சம் பெறுகிறது, அதே நேரத்தில் 'புரட்சிக்கான' நம்பிக்கை பூஜ்ஜியமாகக் குறைகிறது.

நாடகத்தன்மையற்றாக்குதலின் (Dedramatization) அழகியல்:

மூன்று இயக்குநர்களும் உணர்ச்சிகரமான அடையா ளத்தைத் தடுக்க 'நாடகத்தன்மையற்றாக்குதலைப்' பயன்ப டுத்துகிறார்கள், ஆனால் வெவ்வேறு நோக்கங்களுக்காக. யான்சோ சமூகப் பாத்திரங்களை (ஒடுக்குமுறையாளர், பாதிக்கப்பட்டவர், துரோகி) வெளிப்படுத்த தனிப்பட்ட உளவியலை நீக்கி, ஒரு கட்டமைப்புவாத சினிமாவை உரு வாக்குகிறார். ஏஞ்சலோபுலஸ் வரலாற்றுச் செயல்மு றைகளை (வன்முறையின் சுழற்சி, எல்லைகளின் தொடர்ச்சி) வெளிப்படுத்த நாடக உச்சக்கட்டத்தை நீக்கி, ஒரு பிரெக் டியன் சினிமாவை உருவாக்குகிறார். டார் பொருள்சார் யதார்த்தத்தை (மழை, சேறு, காற்று, நடப்பதன் உடல் முயற்சி) வெளிப்படுத்த கதை முன்னேற்றத்தை நீக்கி, ஒரு நிகழ்வியல் (phenomenological) சினிமாவை உருவாக்குகிறார்.



முக்கிய நீரோட்ட சினிமாவின் 'காட்சிப் பகட்டை' (spectacle) இவர்கள் கூட்டாக நிராகரிப்பது இவர்களின் ஆழமான அரசியல் செயல்பாடாகும். முதலாளித்துவத்தின் 'வேகம்' மற்றும் வெகுஜன ஊடகங்களின் 'கவனச்சிதறல்' ஆதிக்கம் செலுத்தும் உலகில், மெதுவான தன்மை, கால அளவு மற்றும் சிரமம் ஆகியவற்றில் இவர்களின் பிடிவாதம் எதிர்ப் பின் ஒரு வடிவமாகும். இது பார்வையாளரைப் பார்க்கும் வேலையில் ஈடுபடத் தூண்டுகிறது, இது செயலற்ற நுகர் வுக்குப் பதிலாக விமர்சன விழிப்புணர்வைக் கோரும் 'எதிர்-சினிமா' (counter-cinema) ஆகும்.

கம்யூனிசத்திற்குப் பிந்தைய மனச்சோர்வு (Post-Communist Malaise):

இறுதியில், இந்த மூன்று இயக்குநர்களின் வேலையும் ஒரு பகிரப்பட்ட நிலையைக்கண்டறிகிறது: 'கம்யூனிசத்திற்குப் பிந்தைய மனச்சோர்வு'. இது தனது கற்பனாவாத அடிவா னத்தை இழந்த ஐரோப்பாவின் நிலையாகும். யான்சோவின் பிற்காலப் படங்கள் ('Kapa and Pepe' தொடர் போன்றவை) அபத்தமான சுய-கேலியாகச் சிதைந்து, மாற்றக் காலத்தின் குழப்பத்தைப் பிரதிபலிக்கின்றன. ஏஞ்சலோபுலஸின் பிற்காலப் படங்கள் ஒரு காலத்தில் அரசியல் அர்த்தத்தை வரையறுத்த எல்லைகளின் இழப்பிற்கு வருந்துகின்றன, அவற்றைக் காவல்துறை அரசின் அர்த்தமற்ற எல்லைக ளுடன் மாற்றுகின்றன. டாரின் படங்கள் வெற்றி டத்தைத் தழுவி, 20-ஆம் நூற்றாண்டின் தோல்விக்கு ஒரே நேர்மையான பதில் இருளை உற்றுநோக்கி முடிவுக்காகக் காத்திருப்பதே என்று பரிந்துரைக்கின்றன.

முடிவுரை:

மிக்லோஷ் யான்சோ, தியோ ஏஞ்சலோபுலஸ் மற்றும் பேலா டார் ஆகியோரின் சினிமா, ஐரோப் பாவின் அரசியல் விதியுடனான நகரும் பிம் பத்தின் ஈடுபாட்டிற்கு ஒரு நினைவுச் சான்றாக நிற்கிறது. ஹங்கேரியின் காற்று வீசும் சமவெ ளிகள் முதல் பால்கனின் பனிமூட்டமான எல்லைகள் வரை, நூற்றாண்டின் துரோகங்களி



லிருந்து விலகிச் செல்ல மறுக்கும் ஒரு அழகியலை அவர்கள் உருவாக்கினர். நீண்ட காட்சிப் பதிவின் அவர்களின் பயன்பாடு ஒருபோதும் வெறும் பாணி சார்ந்தப் பகட்டு அல்ல, மாறாக விசாரணையின் ஒரு கடுமையான முறையாகும் - காலத்தைக் காணக்கூடியதாக்குவதற்கும், வரலாற்றுக்குக் கனத்தைக் கொடுப்பதற்கும், அதிகாரத்தின் முகத்தில் மனிதப் பொருளின் பலவீனத்தை அம்பலப்படுத்துவதற்குமான ஒரு வழியாகும்.

சர்வாதிகாரத்தின் சடங்குத் தன்மை புரட்சியை எவ்வளவு எளிதாக அபகரிக்க முடியும் என்பதைப் பற்றி யான்சோ நமக்கு எச்சரித்தார். கூட்டின் இழந்த கனவுகள் மற்றும் வரலாற்றிலிருந்து தோற்கடிக்கப்பட்டவர்களின் அழிப்புக்காக ஏஞ்சலோபுலஸ் வருந்தினார். சித்தாந்தங்கள் இறந்த பிறகு எஞ்சியிருந்த உலகின் சோர்வுக்கு டார் சாட்சியம் அளித்தார். அவர்களின் பணி எளிதான நம்பிக்கையையோ மீட்பையோ வழங்கவில்லை. மாறாக, அது ஒரு பார்வையை - தடுமாறாத, தொடர்ச்சியான மற்றும் ஆழ்ந்த வரலாற்றுப் பார்வையை - வழங்குகிறது; அத்தகைய பார்வை நமது சித்தாந்தத்திற்குப் பிந்தைய யுகத்தின் மனச்சோர்வை வழிநடத்த அவசியமானது. 'வரலாற்றின் முடிவு' என்ற கதையாடலே நொறுங்கத் தொடங்கும் போது, வரலாறு ஒரு கனமான, குவியும் சுமை என்றும், அதிகாரம் ஒரு இடைவிடாத வடிவியல் கண்ணி என்றும் சினிமாவின் மூலம் அவர்கள் நமக்கு எடுத்துப் பாடங்கள் எப்போதையும் விட மிகவும் பொருத்தமானவை.



Swarnavel@thaiveedu.com



தமிழ் அரங்கியலில் மரபும் நவீனமும்: மீளமைத்தல்

ம. கருணாநிதி

கலை இலக்கியங்கள் யாவும் சமூகத்தின் வெளிப் பாட்டுக் கருவியாகும். கலை இலக்கிய உருவாக்கத்திற்கும் சமூக உருவாக்கத்திற்கும் நேரடித் தொடர்புண்டு. கலை இலக்கியங்களின் உருவம், உள்ளடக்கம், உத்தி ஆகியன சமூக நிர்ப்பந்தங்களாலும் காலத்தின் உந்துதல்களாலும் மாற்றத்திற்குள்ளாகி வருகின்றன. ஐரோப்பியர் வருகையால் இந்திய-தமிழ் இலக்கியத் தளங்களிலும் அரசியல்-பொருளாதார-பண்பாட்டுத் தளங்களிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்தவகையில் இந்திய-தமிழ்ச் சமூகத்தில் நவீனவாதம் எனும் சிந்தனை முறை உருவாக்கம் பெற்றது எனலாம். நவீனவாதச் சிந்தனை இலக்கிய வகைகளிலும் பரவலாக்கம் பெற்றது.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் தொலை நோக்குக் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்டது. அதையடுத்து படிப்படியாக அறிவியல்சார் கண்டுபிடிப்பு, கடிகாரம், தொலைபேசி, தொலைக்காட்சி ஆகியன கண்டுபிடிக்கப்படுகின்றன. இரும்பு, எஃகு தொழிற்சாலைகள் உருவாக்கம் பெறுகின்றன. இவ்வாறான படிநிலை வளர்ச்சி சார்ந்த கண்டுபிடிப்புகளின் சூழலில் தொழினுட்ப வளர்ச்சியும் தகவல் தொடர்பு வளர்ச்சியும் பெருகத் தொடங்குகின்றன. முந்தைய சமூக அமைப்பான நிலப்பிரபுத்துவ சமூகக் கண்டுபிடிப்புகள் மாற்றம் பெற்று முதலாளித்துவ சமூகம் உருவாக்கம் பெறுகின்றது. இதன் விளைவால் தொழில் புரட்சி வேகம் பெறுகின்றது. மனித உறவு நிலைகளிலும், கலை இலக்கியங்களிலும் தொழில் புரட்சியின் விளைவுகளைக் காணமுடிந்தது.

நவீன எழுத்து உருவாக்கத்திற்கு முதலாளித்துவச் சூழலே காரணகர்த்தாவாக விளங்குகின்றதை அறிய முடிகின்றது. தனிமனிதத்துவம், நகர உருவாக்கம், நடுத்தர மக்கள் உருவாக்கம், இயந்திர உருவாக்கத்தினூடாக மனித மனநிலை அந்நியமாதல், வாழ்வினை அபத்தமாகக் காணுதல், உலகப் போர்களினால் ஏற்பட்ட பேரழிவு, மதம், கடவுள் குறித்தான கருத்தாக்கங்களின் மீது ஏற்பட்ட அவநம்பிக்கை, மனிதமனம் அனைத்தையும் சூன்யமாக சிதைவுண்டதாகவே அணுகியது. இத்தகைய மனித அடையாளங்களின் மையத்தைத் தேடும் பொருட்டு இலக்கியத்தின் குவிமையம் நவீனமாக நவீனத்துவம் உருப்பெற்றது.

படச்சட்டக அரங்க அமைப்பானது பார்வையாளர்களை இருளுக்குள் அமர வைத்து ஒவ்வொருவரையும் தனித்தனியாக அந்நிய மனோபாவத்தில் அமர வைக்கும் தன்மையைக் கொண்டதாகும். பாரம்பரிய நிகழ்த்துமரபு இவ்வமைப்பு முறையிலிருந்து வேறுபட்டதாக விளங்குகின்றது. இப்பாரம்பரிய நிகழ்த்துக்கலை சமூகத்தின் அனைத்து மட்டத்தினரும் கட்டுமான நிலையில் குழுவாய் ஒன்றுகூடி அமர்ந்து, நிகழ்த்துநர் - பார்வையாளர் எனும் பேதமின்றி கூட்டு நடவடிக்கை சார்ந்த நிகழ்வாய் வெளிப்படக்கூடியதாகும். ஆனால், படச்சட்ட நாடக மேடை உருவாக்கம் தனிமனிதர் சார்ந்த பின்புலத்தில் நகர் சார்ந்த மேடையாக விளங்குகின்றது. ஐரோப்பிய நாடக ஆசிரியர்களின் மூலமாகவும், பார்ஸி நாடகக் கம்பெனி மூலமாகவும் படச்சட்டக அரங்க அமைப்பு உருவானது என்பதை அறியலாம். வண்ண வண்ண திரைச்சீலைகளும் பிரமாண்டமான காட்சியமைப்புகளினூடாக நாடகம் நிகழ்த்தும் மரபு நகரங்களில் அறிமுகமாயின.

தெருக்கூத்து, தேவராட்டம், பாவைக்கூத்து, குதிரை ஆட்டம், காவடி ஆட்டம், பறையாட்டம் முதலிய மரபுசார் நாட்டுப்புறக் நிகழத்துக் கலை வடிவங்களை இணைத்து நாடகங்களை உருவாக்கும் முயற்சியின் விளைவாகவே நவீன நாடகக் கலை வடிவம் உருப்பெற்றது. இந்தச் சூழலில் உருவான மொழிவாரியான தேசிய இன எழுச்சியும், பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுப்பதற்கான தேடலும், வீன நாடகங்கள் தங்களின் அடிப்படை வேர்களைப் பாரம்பரிய அரங்கக் கலைகளிலிருந்தே பெற்றுள்ளதை அறியலாம். இச்சூழலில் மண் சார்ந்த அடையாளங்களைப் பேணுதல் எனும் குணநிலை சார்ந்த செயற்பாடு, கலை இலக்கியங்களின் அடிநாதமாக விளங்குகின்றது. சிறுகதை, நாவல்களில் சமூகத்தைப் பிரதிபலித்தல், பண்பாட்டு அடையாளங்களை மீட்டெடுத்தல் எனும் நிலை படைப்புகளில் வெளிப்பட்டன. மண்சார்ந்த அடையாளங்களை மீட்டெடுக்கும் சூழல் நவீன அரங்கில் மரபினை இணைத்தல் எனும் தன்மை உருவாகியுள்ளது.

நவீன சிந்தனை மரபால் கூட்டுச் செயற்பாடு, கூட்டு உணர்வு, கூட்டு நடவடிக்கை சார்ந்த மரபான அரங்க முன்னெடுப்புகளிலிருந்து வேறுபட்டு, தனிநபர் சார்ந்த - தனி அடையாளங்களை முன்வைக்கும் வகையிலேயே நவீன அரங்கு உருவாகியுள்ளது. பாரம்பரிய அரங்கிலிருந்து நவீன அரங்கு பெற்றுக்கொண்டவை எவை? பாரம்பரிய அரங்கிலிருந்து எதை எடுத்துக்கொண்டோம்? எடுத்துக் கொண்டவைகளை எப்படி பயன்படுத்துகிறோம்? பாரம்பரிய அரங்கு எந்தெந்த சூழலில், எங்கெங்கு, எப்பொழுது நிகழ்த்தப்படுகிறது? பாரம்பரிய அரங்கில் நடிகர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இருக்கக்கூடிய தொடர்பாடு யாது? பாரம்பரிய அரங்கிலிருந்து நவீன அரங்கிற்குத் தேவையானதை எவ்வாறு எடுத்துச் செல்லப்போகிறோம்? நவீன நாடகங்களில் பழைமையான மரபுக்கூறுகளின் பயன்பாடுகள் என்று பார்க்கும்போது மேற் குறிப்பிட்டுள்ள வினாக்கள் ஆய்வில் எழுகின்றன. நவீன நாடகங்களின் பாடுபொருள் எங்கிருந்து எடுக்கப்பட்டாலும் அவை மண்சார்ந்த மரபுக்கூறுகளைக் கொண்டே தயாரிக்கப் பட்டுள்ளன. 'உலகின் எந்த மூலையிலிருந்து நாடகப்

பாடங்களை எடுக்கத் தயங்குவதில்லை. ஆனால், எதைச் செய்தாலும் எமக்குரிய மரபோடு வழங்கவே விரும்புகிறோம்' என்று இளைய பத்மநாதன் கூறுகிறார். இக்கருத்தின் மூலம் மரபின் தேவையை உணரமுடிகிறது.

தமிழ்ச்சூழலில் மரபான அரங்கு குறித்துப் பார்க்கும்போது அவை பன்முகத்தன்மை கொண்ட செயற்பாட்டின் அடிப்படையில் விரிவடைந்துள்ளது.

- பார்வையாளருக்கும் நிகழ்த்துவோருக்கும் இடையில் எந்தவொரு இடைவெளியுமற்ற நெருக்கம்.
- பாத்திர வார்ப்பிற்கேற்பவும் தாளக்கட்டுகளுக்கு ஏற்பவும் உடலசைவு பாடல்களின் மூலமாகவும் காட்சிவெளியில் பயணம் செய்ய வைக்கும் காவியச்சாயல்.
- பார்வையாளர்களை காட்சியோடும் நாடக நிகழ்வோடும் உணர்வுபூர்வமாக ஒன்றவைத்தலும் அறிவுபூர்வமாக விலகவைத்தலும்.

இவ்வாறான மரபான நாடகங்களில் இருக்கும் நாடகக்கூறுகளைக் கொண்டு இயங்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஒவ்வொரு காலகட்டத்தின் சமூக நடவடிக்கைகளின் பின்புலத்தில் மரபுடனும் வரலாற்றுடனும் ஓர் உரையாடல் நிகழ்த்துவதாய் நவீன எழுத்துகள் செயற்படுகின்றன. நவீன எழுத்தென்பது பரிசோதனை முயற்சி கொண்டதாகும். மனித வாழ்க்கையினூடாகவும் சரித்திரத்தினூடாகவும், சமூக இயக்கத்தினூடாகவும் வாழ்வியல் குறித்தான பரிசீலனையின் அடிப்படையில் நவீன யுகத்தினைக் கலை இலக்கியங்களில் பிரதிபலிப்பதற்கான தேவையிருப்பதன் பொருட்டு மரபான நாடகக்கூறுகளை ஏற்பதும், சிலவற்றை மறுப்பதும் நவீன நிகழ்த்துக்கலைகளின் குணநிலையாகும்.

மரபு சார்ந்த நிகழ்த்துநர்களுக்கும் நாடகப் பார்வையாளர்களாகிய மக்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே மக்கள் உணர்கின்றனர். இத்தொடர்பு என்பது சடங்கு சார்ந்த திருவிழாக்களின் மூலமாக வருடந்தோறும் கூட்டுறவு நீடிக்கின்றது. வடஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய வட்டாரங்களில் நிகழ்த்தப்படும் தெருக்கூத்து நிகழ்வுகள், மதுரை மாவட்டம் சார்ந்து நிகழ்த்தப்படும் நாட்டுப்புற நாடகங்கள் மற்றும் நாட்டுப்புற நிகழ்த்துக் கலையாகிய தேவராட்டம், இராஜாராணி ஆட்டம், தென்மாவட்டங்களில் நிகழ்த்தப்படும் கணியான்கூத்து முதலிய கூத்துகள் கொங்கு வட்டாரம் சார்ந்த கூத்து வகைகள் எனும் இவ்வாறான மரபான நிகழ்விப்புகளின் மூலமாக மக்களுக்கும் கூத்து நாடகக் கலைஞர்களுக்கும் நெருக்கமான பிணைப்பு இருக்கும். இவ்வாறான பரிவர்த்தனையினூடாக மரபான நிகழ்த்துக் கூறுகளினூடாகவும் நவீன நாடக இலக்கியங்கள் - நவீனநாடக நிகழ்வுகள் சமூகமாற்றத்திற்கான மக்களின் விழிப்புணர்வு சார்ந்த மாற்று அரங்காக உருவாக வேண்டும்.

பாரம்பரிய அரங்கு நிகழ்த்தப்படும் சூழல் - இடம் - ஆற்றுகையாளர் பார்வையாளர்களுக்குமான உறவுநிலை - வாழ்வியல் நிலை - வாழ்க்கை பற்றிய நம்பிக்கை உலகியல் பற்றிய பார்வை இவைகளிலிருந்து துண்டித்துக்கொண்டு வெளிப்படுவதாய் நவீன அரங்கினை அவதானிக்க முடியும். பாரம்பரிய அரங்கு நம்பிக்கை சார்ந்தும் பழமரபுத் தொன்மம் சார்ந்தும் ஓர் உரையாடலை நிகழ்த்தி வருகின்றது. உதாரணமாக, திரௌபதி, பாரம்பரிய அரங்கினில் திரௌபதி அம்மன் வழிபாட்டுச் சடங்கோடும் மக்களின் நம்பிக்கையோடும் தெய்வீகத் தன்மையில் வெளிப்படக்கூடியது. இதில் திரௌபதி துகில் உரிதல் திரௌபதி துகில் உரிவதற்கு முன்பாக கூத்தாடக்கூடியவர் தீபம் ஏற்றி வணங்கிவிட்டு பார்வையாளர்களிடம் மன்னிப்பு வேண்டிவிட்டு இக்கூத்தின் காட்சியை நிகழ்த்துவர். இதில் குற்றம் குறையிருப்பின் மன்னித்தருளுக எனச் சொல்லிவிட்டு கூத்தினைத் தொடர்ந்து நடத்துவார்கள். திரௌபதியின் துகில் உரியும் துச்சாதனன் கூட சபையினர்களிடம் மன்னிப்பு வேண்டியும் தெய்வத்திடமும் மன்னிப்பு வேண்டியும் இதனை நிகழ்த்துவர். ஆற்றுகையாளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் இவ்வாறான பரிவர்த்தனை இருக்கும். ஆனால் நவீன அரங்கில் பார்த்தோமானால் திரௌபதியை, வெறும் பாத்திரமாக, இயக்குநரின் சிந்தனைப் புலத்தில் உருவாக்கப்பட்ட அறிவுபூர்வமான பாத்திரமாக மட்டுமே பயன்படுத்தும் தன்மையை அவதானிக்கலாம். இங்கு திரௌபதி சார்ந்த நம்பிக்கை, தொன்ம உருவாக்கம் பார்வையாளர்களின் மனநிலை போன்றவைகள்



கூத்து – திரௌபதி துகில் உரிதல்



நிஜநாடக இயக்கத்தில் முனி நாடகம் – தபசு மரம் போல் உருவாக்கல்



அர்ஜுனன் தபசு மரம் ஏறும் நிகழ்வு

மாற்றம் பெறுகின்றன. இங்கு பொது புத்திசார்ந்த செயற் பாடு, சடங்கு முதலியவை நீங்கி, நவீன அரங்கு பொதுமக்க ளுக்கு உரியதாக இல்லாமல் வெகுசிலருக்கானதாகவும் படித்த அறிவாளிக்கானதாகவும், தொடர் செயற்பாடற்றதாக வும், தனிநபரின் படைப்பாகவும் மாற்றம் பெறுகின்றது. திரௌபதி தொன்மத்தை நம்பிக்கையாக-சடங்காக-கூட்டுப் படைப்பாகப் பார்க்கும் விதத்திலிருந்து வேறுபட்டு காரண காரியத்தோடு அறிவுபூர்வமாகப் பார்க்கும் தன்மையை நவீன அரங்கு உருவாக்கியுள்ளது. இவை, படச்சட்டக அரங்கிற்குத் தேவையான அரங்கக் கூறுகளையும் அரங்க மொழியினை யும் கொண்டு விளங்குகின்றது. நவீன அரங்க மொழி பாரம் பரிய அரங்க மொழியினை நன்கு உட்செரித்து வெளிப்படும் நிலை குறைவாகவே உள்ளது.

அரங்கப் பயில்முறை பற்றிப் பார்க்கும்போது நவீன அரங் கிற்கும் பாரம்பரிய அரங்கிற்கும் வித்தியாசம் இருக்கின்றது. பாரம்பரிய அரங்கப் பயின்முறை மக்கள் மத்தியிலேயே நடைபெற்று செழுமை பெறக்கூடியது. இப்பயின்முறையை பார்க்கும் சிறுவர்கள் பார்த்துவிட்டு அவர்களும் போலச் செய்து விளையாடுவதும் நிகழும். பயின்முறையின் போதே ஆற்றுகையளர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் ஒரு தொடர்பாடு இருந்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு வட்டா ரத்திலும் பாரம்பரியக் கலைச் செயற்பாடும் பயின்முறையும் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கும். இதன் தொடர்ச்சி யாகவே பம்மல் நாடகங்களுக்கான ஒத்திகையைப் பார்வை யாளர்களுக்கு முன் நிகழ்த்திக்காட்டி அவற்றின்மூலம் நாட கம் செழுமைப்படுத்துவதற்கான முறையினைக் கையாண் டுள்ளதையும் அறியமுடிகின்றது. நவீன அரங்கப் பயின் முறை திறந்த இடத்தில் மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படுவ தில்லை. பயின்முறையும் கூட காட்சிக்குரியதாக இருக்குமே ஒழிய அவை பாரம்பரிய அரங்கில் உள்ளார்ந்து இருக்கக் கூடிய கூறுகளை உள்வாங்காமல் மேற்கத்திய வீதிநாடகக் கூறுகளை உள்வாங்கி காட்சிக்குரிய தன்மையில் மட்டுமே நிகழ்த்தக்கூடியதாக நவீன அரங்கு வெளிப்பட்டு வருகின் றது. நவீன அரங்கு, பாரம்பரிய அரங்கின் வடிவ - உள்ளடக் கத்தினை எவ்வாறு ஏற்றுக்கொள்வது? சமகாலச் சிந்த னைக்கு ஏற்றாற்போல எவ்வாறு பாரம்பரிய அரங்கினையும் நவீன அரங்கினையும் எடுத்துச் செல்லப்போகிறோம்? மாற் றப்பட வேண்டியவை, எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை எவையெவை? எனும் வினாக்கள் எழுகின்றன.

பாரம்பரியக் கலையைப் புனிதப்படுத்துதல் - நவீனப்படுத்து தல் எனும் செயற்பாடு பாரம்பரியக் கலைகளை அம்மக்களி டமிருந்து அந்நியப்படுத்தும் நிலையையே உருவாக்கும். பாரம்பரிய அரங்கு காலங்காலமாக முன்னெடுக்கப்படும் தன் மையிலேயே முன்னெடுக்கப்படுவதும் கலைஞர், சமூகத்துட னும் அந்தக் கலையோடு தொடர்புடைய கலைஞர்களுடைய சமூக முன்னேற்றமும், கலையின் வளர்ச்சியும் கலைஞர்க ளுடைய பிரச்சினைகளும் சமூக இழிவுகளில் இருந்து விடுத லையும் முன்னெடுக்கப்பட வேண்டும். சமூக விடுதலை யைப் பற்றிப் பேசும்போது பாரம்பரியக் கலைக்கும், கலையோடு தொடர்புடைய சமூகத்திற்கும் கலைஞர்க்கும் மாற்றமும் வளர்ச்சியும் ஏற்படக்கூடும். அப்பொழுதுதான் தற்காலத்தை எதிர்கொள்கின்ற வல்லமை பாரம்பரிய அரங்கிற்கு ஏற்படும். சமகாலச் சிந்தனைகளில் குறிப்பாக தலித்திய - பெண்ணிய அடிப்படையில் பாரம்பரிய அரங்கினைப் பார்க்கும்போது பாரம்பரிய அரங்கில் கேள்விக்குட்படுத்த வேண்டியவைகள் இருக்கின்றன. உதாரணமாக நந்தன், ஏகலைவன் முதலிய தொன்மங்கள் பாரம்பரிய அரங்கில் நிகழ்த்தப்படுகின்றன.

இத்தொன்மங்கள் நம்பிக்கை சார்ந்து இருந்தாலும் நவீன அரங்கில் இத்தொன்மங்களை அறிவுபூர்வமாக காரணகாரி யத்தோடு கொண்ட பாத்திரமாக மாற்றப்பெற்றுள்ளன. இத் தொன்மங்களைக் கொண்டு பாரம்பரிய அரங்கு உருவாக்கி யுள்ள பொதுபுத்தி சார்ந்த கற்பிதங்களை உடைப்பதற்கு நவீன அரங்க முன்னெடுப்புகள் நிகழ்ந்தாலும் பாரம்பரிய அரங்கு போன்று தொடர் பரிவர்த்தனையினூடாக தொடர்ச்சியாக முன்னெடுக்கும்போது தான் பாரம்பரிய அரங்கினைப்போல முழுமை நோக்கில் இருக்கமுடியும். இவையை வெறும் நவீன அரங்காக எடுத்துக் கொண்டு ஒன்றிரண்டு நிகழ்விப்புக்க ளிலேயே நிறுத்திக் கொள்வதிலிருந்து வேறு பட்டு தொடர் செயற்பாட்டில் கொண்டு செல்வது முக்கியமாகும். மணி மேகலை, கண்ணகி, திரௌபதி, நந்தன், ஏகலைவன் எனும் தொன்மங்களை வெறும் பாத்திரமாக எடுத்து நிகழ்த்தப் படாமல் பாரம்பரிய அரங்கு ஏற்படுத்தும் சூழல், தளம், இடம் இவைகளினூடாக தற்காலச் சூழலுக்கு ஏற்றாற்போல புதிய கருத்துருவாக்கத்தினைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் பாரம்பரிய அரங்கிலிருந்து நவீன அரங்கு புதிய பரிமாணங்கள் பெறமுடியும். அந்தவகையில் மரபின் கூறுகளை மீளமைக்கவும் அடையாளப்படுத்தவேண் டிய தேவையைக் கருத்தில் கொள்ளவேண்டும்.



Karunanidhi.M@thaiveedu.com

வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த கலையாக

காமன் கூத்து

- அருணாசலம் லெட்சுமணன் -

16



tg.theeban@gmail.com

தமிழக வரலாற்றோடு பின்னிப்பிணைந்திருந்த இந்திய வம்சாவளித் தமிழர்கள், பிரித்தானிய காலனித் துவம் தென்னாசிய நாடுகளில் ஏற்படுத்திய மாற்றங் களால் இலங்கைக்குப் புலம்பெயர வேண்டிய நிர்ப்பந் தத்திற்கு ஆளானார்கள். இது அவர்களின் வாழ்விய லில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. சங்க காலம் தொட்டே இயற்கையையும் உணர்வுகளையும் பக்தி மயப்படுத்துவதோடு, காதலையும் ஆராதிக்கும் பண் பாட்டுப் பக்குவம் கொண்ட தமிழர்களிடத்தில், தாயக மண்ணில் நிலவிய 'காமன் விழா' மீதான நேசிப்பு புலம் பெயர்வுக்குப் பின்னரும் தொடர்ந்தது. இத்தகைய காமன் வழிபாட்டுச் சடங்குகளில் 'தப்பு' இசைக்கருவி தவிர்க்க முடியாத ஒரு கருவியாகப் பிரயோகிக்கப்பட்ட தோடு, அது வாழ்வியல் சடங்குகள் மற்றும் பொழுது போக்குக் கலை ஊடகமாகவும் முக்கியத்துவம் பெற்றது. குறிப்பாக, தமிழகத்திலிருந்து இலங்கை நோக்கிய கரடு முரடான நடைப்பயணங்கள் மற்றும் கடல் பயணங் களின் போது, களைப்பைப் போக்க நிகழ்த்தப்பட்ட பாடல், இசை மற்றும் நடனச் செயற்பாடுகளில் தப் பிசையே முதன்மையான வாழ்வாதார இசையாக விளங்கியது

தகவல்களைப் பரிமாறும் ஒரு முக்கிய சமிக்ஞை ஊட கமாகவும் திகழ்ந்து வந்துள்ளது. உறங்குவோரைத் துயி லெழுப்பவும், ஒரு செயலுக்குத் தயார்படுத்தவும், நிகழ் வுகளின் தொடக்கம் மற்றும் முடிவை அறிவிக்கவும் இக்கருவி பயன்படுத்தப்பட்டது. குறிப்பாக, இலங்கை யின் தோட்டப்புற வாழ்வியலில் அதிகாலையில் எழும் தப்பொலியே தொழிலாளர்களைப் 'பிரட்டுக்களத் திற்கு' (வேலைத்தளம்) அழைக்கும் முதன்மைச் சமிக் ஞையாக அமைந்தது. இது தவிர, ஆலய வழிபாடுக ளுக்கு மக்களை அழைப்பதற்கும், சம்பளம் வழங்கும் இடத்திற்கு வரவழைப்பதற்கும், ஊரின் விசேட நிகழ்வு களை அறிவிப்பதற்கும் தப்பொலி ஒரு முக்கிய கருவி யாகத் தொழிற்பட்டது. பிற்காலத்தில் தப்பிசை ஆற்றிய அதே பணிகளைச் சங்கொலியும் தொடர்ந்தமை குறிப் பிடத்தக்கது. இவ்வாறாக, தப்பொலி என்பது வெறு மனே ஒரு சத்தமாக மட்டும் அமையாமல், சமூகத்தை ஒருங்குபடுத்தும் அழைப்பொலியாகவும், மக்களின் வாழ் வியலோடு கலந்த அழகியல் வெளிப்பாடாகவும் தனித் துவம் பெறுகிறது.

பயணத்தில், தப்பு வெறும் இசைக்கருவியாக மட்டு மன்றி, ஒரு பாதுகாப்பு அரணாகவும் திகழ்ந்து வந் துள்ளது. மன்னாரிலிருந்து அடர்ந்த காட்டு வழியே மலையகம் நோக்கிப் பயணித்தபோது, கொடிய விலங் குகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள 'தப்பொலி' ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டது. இத்தகைய சவால்கள் நிறைந்த நீண்ட நடைப்பயணத்தின் களைப் பைப் போக்க, ஓய்வு நேரங்களில் நிகழ்த்தப்பட்ட கலை அம்சங்களுக்குத் தப்பிசையே 'ஆதார சுருதி'யாக (அடிநாதமாக) அமைந்தது. தப்பொலியுடனேயே இம் மக்களின் இடப்பெயர்வு வரலாறு எழுதப்பட்டிருக்கிறது எனலாம். காட்டுப் பாதைகளில் விலங்குகளை விரட் டும் இந்த மரபு இன்றும் தொடர்வதைக் காணலாம். குறிப்பாக, வருடாந்தத் திருவிழாக்களின் போது காடு கள் மற்றும் ஓடைகளை நோக்கிச் செல்லும் 'கரகம் பாலித்தல்' சடங்குகளில், கரகம் எடுக்கும் இடத்திற்குச் செல்லும்போதும் அங்கிருந்து திரும்பி வரும்போதும் தப்பிசை முழங்கப்படுவது, இக்கருவிக்குரிய ஆன்மீக மற்றும் பாதுகாப்பு முக்கியத்துவத்தை இன்றும் பறை சாற்றுகிறது.

மலையக மக்களின் வாழ்விடச் சூழலில் 'ஸ்தோப்பு' எனப்படும் லயன் குடியிருப்புகளின் திறந்தவெளி முன் முகப்பு, வெறும் கட்டட அமைப்பாக மட்டுமன்றி, ஒரு சமூகக் கருத்தாடல் களமாகவும் கலைப்பயிற்சி மைய மாகவும் திகழ்ந்தது. தொழிலாளர்களின் பணிநேரம் தவிர்ந்த ஏனைய பொழுதுகளில், குறிப்பாக மாலை வேளைகளில் தேநீர் அருந்துதல், கதை கூறுதல், நாடகப் பயிற்சிகள் மற்றும் தப்பிசை உள்ளிட்ட இசைக் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஊடகமாக இது விளங் கியது. இத்தளம் மகிழ்ச்சியான தருணங்களை மட்டு மன்றி, சமூக முரண்பாடுகள், நியாயப்படுத்தல்கள் மற்றும் உடன்பாடுகள் எட்டப்படும் ஒரு 'மக்கள் மன்ற

மாகவும்' தொழிற்பட்டது. உணவுப் பகிர்வில் நிலவிய கூட்டு றவும் இங்கேயே அரங்கேறியது; ஒவ்வொரு வீட்டிலிருந்தும் பகிரப்படும் உணவுகளோடு அமையப்பெறும் இரவு நேரக் கலந்துரையாடல்கள், கலை மற்றும் சமூகக் கருத்துகளை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் பாலமாக அமைந்தன. தனிப்பட்ட உறக்கத்திற்காக உட்புறக் அறைகள் (காம்பிராக் கள்) பயன்படுத்தப்பட்டாலும், குடும்ப அங்கத்தவர்களின் பொதுவான உறக்கக் களமாகவும், கூட்டு வாழ்வின் அடையா ளமாகவும் இந்த 'ஸ்தோப்பு' கடந்த நூற்றாண்டு வரை மலை யகப் பண்பாட்டில் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தது.

உழைத்து களைத்த மக்கள் அன்றாடம் கலந்துரையாடவும் தங்களது இயல்பான கலையை வெளிப்படுத்தவும் ஏற்ற கள மாகவே லயக் குடியிருப்புகளின் 'ஸ்தோப்புகள்' திகழ்ந்துள் ளன. பல்துறை ஆளுமையாளர்களை ஒன்றிணைக்கும் கள மாகவும் 'ஸ்தோப்புகள்' மீதான கவனம் விரிவு பெறுகிறது. உழைப்பின் மகோன்னதங்கள், உரிமை சார்ந்த முனைப்பு கள், ஒற்றுமையின் தேவைப்பாடுகள் பற்றிய கலந்துரை யாடல்கள் நிறைவுக்கு வந்ததன் பின்னர் கலைகளை வெளிப் படுத்தும் முனைப்பு தினந்தோறும் அரங்கேறுவது தவிர்க்க முடியாத நிகழ்வாகவே அமையப்பெறும். மூத்தவர்களது உரையாடலைச் செவிமடுக்க வேண்டிய கட்டாயத்தில் இளந் தலைமுறையினரின் பங்கேற்பும் கூடிய கவனத்தை பெறுகின் றன. இதன் காரணமாக இயல்பாகவே கலைகள் ஊடுகடத் தப்பட்டமையை அறியலாம்.

தோட்டத்தின் பிரிவு ஒன்றில் பல லயங்கள் காணப்பட்டுள்ள நிலையில் அவ்லயங்கள் ஒவ்வொன்றும் ஸ்தோப்பு கட்டமைப் புகளைக் கொண்டுள்ளன. ஒவ்வொரு ஸ்தோப்புகளும் தொடர்ந்து இயங்கும் கலைக்கூடங்களாகவே அமையப்பெற் றுள்ளன. கலைகள் மட்டுமல்ல அலங்காரத்திற்கான திட்ட மிடல்களும் கலை வளர்ப்பிற்கான அணுகுமுறைகளும் இத்த ளங்களிலேயே தீர்மானிக்கப்பட்டன. அத்திட்டமிடல்கள் தொழிற் களங்கள், வழிபாட்டுத்தளங்கள், வீட்டு விசேஷங்கள் போன் றவற்றில் செல்வாக்குச் செலுத்தின. ஸ்தோப்புகளில் இருந்து வெளிக்கிளம்பும் உணர்வுகள் வழிபாட்டுத் தலங்களுக்கு ஊடுருவப்பெற்றன. இவ்வழிபாடுகள் பொதுவெளி நோக்கிய நகர்வுகளுக்கு காரணமாக அமைந்தன. சாதிய வேறுபாடுகள் பொதுவெளிகளின் உருவாக்கமாக அமைந்தன. பெருந்தோட் டங்களில் முச்சந்தி, நாலுரோட்டு, பொட்டல் ஆகிய தளங்கள் கலை வளர்ப்பின் பிரதான தளங்களாக உருப்பெற்றன. அவற் றில் காமன் பொட்டல் குறித்த அவதானம் கவனத்திற்குரிய தாகிறது. அவ்வாறே நாடக ஆற்றுகைக்கான களம் என்ற வகையில் மூன்று பக்கம் காட்சி தரும் திண்ணை முறை பற்றிய அவதானமும் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

மதன் மற்றும் ரதி ஆகிய பாத்திரங்களை மையமாகக் கொண்ட காமன் கூத்து, வெறும் அழகியல் சார்ந்த கலை வடிவமாக மட்டுமன்றி, மனிதகுலப் பண்பாட்டையும் சுயகட்டுப்பாட்டை யும் வலியுறுத்தும் ஒரு வாழ்வியல் பாடமாகவே வடிவமைக் கப்பட்டுள்ளது. சங்க காலம் மற்றும் சிலப்பதிகாரக் குறிப்புக ளின்படி, தொடக்கத்தில் இது ஓர் இரசனைக்குரிய களியாட்ட நிகழ்வாகவே (காமன் விழா) அணுகப்பட்டது. இருப்பினும், காலப்போக்கில் இப்பயிற்சி நிலை 'காமன் கூத்தாக' மாற்றம் பெற்றபோது, 'காமம் என்பது முறையாக அணுகப்பட வேண் டிய ஒன்று' என்ற சமூகக் கடப்பாட்டை உரக்கச் சொல்லும் ஒரு கருவியாக மாறியது. ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதத் தில் நிகழ்த்தப்பட வேண்டிய கட்டாயச் சடங்காக இது உறுதி பெற்றது. வெறுமனே பொழுதுபோக்கிற்கான ஊடகமாக இல் லாமல், ஒழுக்கநெறிகளைப் புகட்டும் ஓர் 'அறிமுறைப் பாடத் திட்டமாக' இதன் உள்ளடக்கம் கட்டமைக்கப்பட்டிருப்பதும் இதன் தனிச்சிறப்பாகும்.

பண்டைய தமிழர்களின் இலக்கியங்களில் காமன் தொடர் பான சித்தரிப்புக்கள் அவதானத்தைப் பெறுகின்றன. குறப்பாக கம்பராமாயணத்தில் காமன் பற்றிய செய்திகள் குறிப்பிடப் படுவதை அறியலாம். மகாபாரதத்திலும் மன்மதனின் ஊடாட் டம் நிலவுகிறது. சிலப்பதிகாரத்தில் காமவேல் கோட்டம், காம தேவன் ஆட்சி சிறப்பு, காமக்கடவுளுக்கான விழா போன்ற அம்சங்களை அவதானிக்கலாம். மணிமேகலை காமன்



மீதான வெறுப்புணர்வை எடுத்துரைக்கிறது. நாச்சியார் திரு மொழியில் மன்மதன் வழிபாடும் காமன் பண்டிகையும் முக்கி யத்துவம் பெறுகின்றன. கந்தபுராணத்தில் காமன் தகனப் படலம் குறித்த அவதானம் குறிப்பிடத்தக்கதாகும். கலித் தொகையில் காமன் வழிபாடு, வாமன புராணத்தில் காமன் வழிபாடு, சீவக சிந்தாமணியில் காமன் வழிபாடு என இலக்கி யங்களில் காமன் வழிபாடு தொடர்பான சித்திரிப்புக்கள் இடம்பெற்றன. இதன் தொடர்ச்சி நிலையிலேயே மலையகத் தில் காமன் கூத்துப் பிரதிகளும் எழுதப்படலாயின.

வருடமொன்றில் மாசி மாதம் பக்திக்குரிய சடங்கு முறையைத் தழுவியதாகக் காமன் கூத்து அணுகப்பட்டாலும் தினமும் வழிபாட்டிற்குரிய தளமாக தோட்டத்தில் காமன் பொட்டல் நிலைத்திருக்கிறது. தோட்டத்திலுள்ள ஏனைய வழிபாட்டுத் தளங்களின் விசேட தினங்களின் போது காமன் பொட்டல் தளமும் ஆராதிக்கப்படுகின்றது. திருமணம், பிள்ளைப்பேறு, குடும்பம் சார் சிக்கல் நிலைகள் தவிர்ப்பு போன்றவற்றுக்கு மதன் ரதி ஆகியோரின் அனுக்கிரகம் மீதான நம்பிக்கை நிலைபெற்று வருகின்றது. காமன் பொட்டலும், காமன் திட லும் என்றும் வழிபாட்டிற்குரிய இடமாகவே அமைகிறது. தோட்டத்தை பொறுத்த வரையில் நாட்டார் தெய்வ வழிபாட் டிற்குரிய அணுகுமுறையில் மதன் ரதி ஆகியோர் தெய்வங்க ளாகக் காணப்படுகின்றன. இத்தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்த நிலையில் பிள்ளைபேறு சாத்தியமானால் பிறப்பது ஆண் பிள்ளையாக இருந்தால் 'காமராசு', 'மதன்' போன்று மன்மதனுக்கு பொருந்தும் பெயர்களைச் சூட்டும் நடைமுறை யும் உள்ளன. பெண் பிள்ளை பிறந்தால் 'ரதி', 'ரதிதேவி' போன்று ரதிக்குப் பொருந்தும் பெயர்களை சூட்டுவதும் வழக் காறாகும்.

பொதுவாக நாட்டார் பாடல்கள் வாய்வழியாகப் பேணப்பட்டு வந்த நிலையிலேயே பின்னர் எழுத்துரு பெறுகின்றன. இருப தாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தில் வாய்மொழிப்பாடல் கள் எழுத்துரு பெறுகின்றன. தமிழகத்தில் காமன் கூத்துப் பாடல்கள் தொகுக்கப்பட்டு நூல்களாக வெளிவரத் தொடங் குகின்றன. அத்தொகுப்புகள் இலங்கை மலையகத்திலும் காமன் கூத்துகளில் செல்வாக்கு பெறுவதை அவதானிக்க லாம். செவிவழியாக அறியப்பட்ட பாடல்கள் மனப்பாடத்தின் ஊடாக பிரயோகிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். அவ்வாறு காமன் கூத்துப் பாடல்களை தொகுப்பாக்கம் செய்வதில் பின்வருவோர் குறித்த கவனம் பெறுகின்றனர். டி.வி. மங்களதாஸ் - நவரத்தின ஒப்பாரி, டி.டி. குப்புசாமி பிள்ளை - மதன் ரதி ஒப்பாரி, டி. மாணிக்கப்பிள்ளை - மதன் ரதி ஒப்பாரி, ஆர். ஆறுமுக ஆச்சாரி – மதன் ரதி ஒப்பாரி, டி. முதலியார் - மதன் ரதி ஒப்பாரி, ஸ்ரீமான் துரைசாமி நாவலர் - மதன் ரதி ஒப்பாரி, எம்.கே.டி. பாகவதர் - மதன் ரதி ஒப்பாரி, வி.டி. இராஜேந்திரன் - ரதி மதன் நவீன நவரத்தின ஒப்பாரி, அருட்கவி பி. சண்முகவேல் பிள்ளை - வினாவிடை எரிந்த காட்சி லாவணி, திரிசிபுரம் மங்களதாஸ் - நவீன நவரத்தின மதன் ரதி ஒப்பாரி, டி.ஆர். தங்கவேலு தாஸ் - லீலாவதி ஒப்பாரி, டி.எஸ். சுடலைமுத்து தாஸ் - அரிவையர் புலம்பல் அமிர்த ஒப்பாரி முதலானவற்றின் தொகுப்பசிரியர்களும் தொகுப்பு நூல்களும் காமன் கூத்து பாடல்களை மக்கள் மத்தியில் ஊடுகடத்துவதில் பெரிதும் செல்வாக்குப் பெறு கின்றன. அவ்வாறே சென்னைப் பல்கலைக்கழக தமிழ் இலக் கியத்துறை தொகுத்து வெளியிட்ட 'காமன் கதைப்பாடல்' நூலின் பணியும் கவனத்தைப் பெறுகிறது. மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம் தொகுத்த 'மன்மதன் ஒப் பாரி' இணைய பதிப்பின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத்தில் காமன் கூத்தோடு தொடர்புபட்டவர்களினதும் கலை ஆர்வலர்களிடத்தேயும் எழுத்தறிவு வீதம் அதிகரிக் கின்ற நிலையில் நாட்டார் பாடல்களும் இதிகாச புராண பாடல்கள் மற்றும் அவசியமான கருத்து நிலைப்பாடல்களும் எழுத்துகளாக பதியும் முனைப்பு தொடர்கிறது. அப்பாடல் களைத் தழுவிப் பாடல்களும் எழுதப்படுகின்றன. இதன் விளைவாக சிறு சிறு புத்தகங்கள் வெளியாகின்றன. பக்தி யைப் பாடுபொருளாக கொண்டு எழுதப்பட்ட இப்பாடல்கள்



பின்னர் சமூக அடக்குமுறைக்கும் தொழில் உரிமை சார்ந்த கோசத்துடன் வியாபகம் பெறுகின்றன. இத்தொடர்ச்சி நிலையில் மலையகத்தில் எதிர்ப்பு இலக்கியம் எனும் பார்வையில் முச்சந்தி இலக்கியம் கவனம் பெறுகின்றது. முச்சந்தி இலக்கியப் பகுதிக்குள் மலையக வீதிப்பாடல்கள் முக்கியம் பெறுகின்றது. இவ்வாறு எழுந்தப்பட்ட பாடல்கள் பல, காமன் கூத்துப் பாடல்களைத் தழுவிய நிலையிலேயே எழுதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக இத்தன்மையை வீதிப்பாடலாசிரியர் வி.எஸ். கோவிந்தசாமி தேவரின் பாடல்களில் அவதானிக்கலாம். அறுபதுகளை மையப்படுத்திய நிலையில் தமிழகத்தில் திராவிடச் சிந்தனையை ஊடுகடத்தும் செயற்பாடுகள் மலையகத்திலும் தொடர்ந்தன. தமிழ் சினிமாவிலும் திராவிட கருத்து நிலைகள் பாடல்களாக வெளிப்படுத்துவதை அவதானிக்க முடிகிறது. அதன் தாக்கத்தால் அக்காலத்தில் முனைப்பு பெற்ற சினிமாப்பாடல்களின் தழுவலாக மலையக வீதிப்பாடல்கள் பல வெளியாகின. இவ்வாறான எழுச்சி நிலைப் பாடல்கள் உருவாவதற்கு காமன் கூத்தின் பயில் நிலை அனுபவம் தூண்டுதலாக அமையப்பெற்றன.

மலையகப் பகுதிகளில் காமன் கூத்துப் பாடல்களைத் தழுவி உருவான இராமர் பஜனைப் பாடல்களும் நாடகப் பாடல்களும், சாதாரண மக்களிடையே பல மட்டங்களில் சமூக எழுச்சியை ஏற்படுத்தும் வீதிப் பாடல்களாகத் திகழ்ந்தன. காலனித்துவ அடக்குமுறையிலிருந்து விடுபட்ட போதிலும், சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையில் ஐக்கிய தேசியக் கட்சியின் திட்டமிட்ட அரசியல் நகர்வுகளால் மலையக மக்கள் ஒருவித உளவியல் நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டனர். 1947-ஆம் ஆண்டின் சோல்பரி யாப்பு வழங்கிய ஆரம்பகட்ட நம்பிக்கையைச் சிதைக்கும் வகையில், சுதந்திர இலங்கை அரசு மிகவும் நுட்பமான சட்டங்களை இயற்றி அம்மக்களின் வாக்குரிமையையும் குடியுரிமையையும் பறித்தது. 1964-இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் கையெழுத்தான சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், மலையக மக்களின் வாழ்வியலில் நிலவிய பாதிப்புகளை மேலும் ஸ்திரப்படுத்தி வரலாற்றுக் கொடுமையாக மாறியது. குறிப்பாக, 1970-ஆம் ஆண்டு வரை நடைமுறையிலிருந்த தோட்ட அத்துமீறல் சட்டமானது, தோட்ட நிர்வாகத்தின் அனுமதியின்றி எவரும் உள்ளே நுழைய முடியாதவாறு ஒரு மூடிய சிறைச்சூழ்நிலையை உருவாக்கியது. தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கூடத் தொழிலாளர்களைச் சந்திக்க முடியாத அளவுக்குக் கடுமையான தடைகள் விதிக்கப்பட்டிருந்த நிலையில், தொழிற்சங்கங்களும் இடதுசாரி அமைப்புகளும் தொடர்ச்சியாகக் கொடுத்த அழுத்தங்களின் விளைவாகவே அத்துமீறல் சட்டம் இறுதியாக முடிவுக்கு வந்தது.

இதன் பின்னர் தோட்டங்களில் உரிமை சார்ந்த கோசங்களும் நிகழ்வுகளும் எழுச்சி பெறுகின்றன. செங்கொடி சங்கம் கலைப் பண்பாட்டு அம்ச அணுகுமுறைகளோடு தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. காமன் கூத்தை தோட்டங்களில் ஆற்றுகை செய்வதற்கு தொழிற்சங்கங்கள் அனுசரனை வழங்கின. இடதுசாரிய சிந்தனைகள், திராவிட கருத்து நிலைகள் தோட்டங்களுக்குள் ஆழமாகவே உட்புகுந்தன. கலை நிகழ்வுகள், நாடக முயற்சிகள் தோட்டங்களில் கலைக்கட்டத் தொடங்குகிறது. மக்களின் அபிமானத்தைப் பெற்ற காமன் கூத்து செங்கொடி சங்கத்தினரால் நவீன காமன் கூத்தாக ஆடப்பட்டது. 'நவீன காமன் கூத்தில் மதசாயமில்லை, நவீன உடைகளோடு ரதியும் மன்மதனும் ஆடுவார்கள். தப்பிசையும், உடுக்கையும், தாளமும் அதில் உண்டு. செங்கொடி சங்க தோழர்களான திலகரட்ணம் - தங்கராஜா ஜோடி நவீன ரதி மதனாக நடித்து தொழிலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றனர். 1969 முதல் 1971 வரையில் செங்கொடி சங்க கலை விழாக்களில் நவீன காமன் கூத்து இடம் பெற்றது' என்ற ஓ.ஏ. இராமையாவின் கருத்தும் கவனத்திற்குரியதாகிறது. இவ்வரங்குகளில் வில்லுப்பாட்டு மற்றும் எம். ஆர். ராதாவின் கீமாயணம் நாடகமும் அரங்கேற்றப்பட்டது. தோட்டங்களில் 'கீமன் கூத்து' என்ற தலைப்பிலும் மாற்றுத் தளங்களிலும் காமன் கூத்து பரீட்சிக்கப்பட்டது. இவ்விடயங்கள் தொடர்பிலான ஓ.ஏ. இராமையாவின் பதிவுகளை 'தோழர் ஓ.ஏ. இராமையாவின் 'நிழலும் நிஜமும்' நூல் உள்வாங்கியிருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக, தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகக் கிளை மற்றும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி என்பன காமன் கூத்து மரபையொட்டி வீதி நாடகங்களை முன்னெடுத்தன. போராட்டக் களங்களில் இவ் அணுகுமுறையைப் பிரயோகித்ததோடு, ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரி மற்றும் கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஆகியவற்றின் ஆசிரியப் பயிலுனர்களும் இத் தகைய வீதி நாடக முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். மேலும், 'நல்லாட்சி' போன்ற எண்ணக்கருக்களைப் பரப்பும் நோக்கில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் வீதி நாடகங்களை அரங்கேற்றியது. மனித அபிவிருத்தி தாபனம், பிரிடோ நிறுவனம் போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களும் தமது உரிமை சார்ந்த கோரிக்கைகளை வீதி நாடகங்கள் வாயிலாக முன்வைத்தன. பொதுவாக, இவ்வாறான நாடகங்கள் காமன் கூத்தின் கலைத்துவ அணுகுமுறையையே பின்பற்றின. குறிப்பாக, காமன் கூத்தின் பிரதான இசைக்கருவியான 'தப்பு' (தப்பிசை) இங்கும் முதன்மை பெற்றதோடு, கூத்தின் தாளக்கட்டுகளுடனேயே அது ஒத்திசைந்து இயங்கியமையும் கவனத்திற்குரியது. இப்போக்கு மலையக மக்களோடு காமன் கூத்து இரண்டறக் கலந்துள்ளதை உணர்த்துவதுடன், அம்மக்கள் இக்கலை வடிவத்தை காலத்திற்கேற்ப எவ்வாறு உருமாற்றிப் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கும் சிறந்த சான்றாக அமைகிறது.

காமன் கூத்து மாஸ்டர்கள் தாங்கள் மனப்பாடம் செய்து வைத்திருந்த பாடல்களைக் கொப்பிகளுக்குள் எழுத்துகளாக பதியச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இருந்த போதிலும் பல மாஸ்ட்டர்கள் எழுத்தாகப் பதியும் விடயத்தை ஆதரிக்கவில்லை. கிடைத்த பாடல்களைச் சிலர் பதிவும் செய்தனர். இம்முயற்சியில் பசறையூர் வேலாயுதம், வட்ட கொடை இராஜசேகரன் ஆகியோரின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கன. பாடசாலையொன்றின் பிரயத்தனம் என்ற வகையில் கேகாலை மாவட்டம் கந்தலோயா தமிழ் வித்தியாலயத்தின் செயற்பாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கடந்த காலங்களில் அதிபர் மு. கருணகரன் தலைமையில் இப்பாடசாலையின் மாணவர்கள் மலையகத்தின் சகல பிரதேசங்களுக்கும் விஜயம் மேற்கொண்டு காமன் கூத்து பாடல்களைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வெற்றியும் கண்டனர்.

காமன் கூத்து பாடல்கள் எழுத்தாவணமாக ஆவணப்படுத்தும் முனைப்புகளும் கவனத்தைப் பெறுகின்றன. அவ்வகையில் 2002-ஆம் வருடம் சந்தனம் சத்தியநாதனின் முயற்சியில் 'காமன் கூத்து' ஓர் கள ஆய்வு எனும் தலைப்பில் முப்பது

பாடல்கள் வரை ஆவணப்படுத்தப்பட்டிருக்கின்றமை கவனத் திற்குரியதாகும். மேற்படி நூல் சங்குவாரி தோட்ட காமன் வாத்தியார் டி.எம். பெருமாள் அவர்களின் குரலில் ஒலிக்க தொகுப்பாசிரியரினால் தொகுக்கப்பட்டுள்ளது. இதில் காமன் கூத்துப் பாடல்களும், அப்பாடல்களுக்கான ஆசிரியரின் விளக்கங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அட்டபாகை தோட்ட காமன் வாத்தியார் இராசு ஐயாத்துரை, டெல்டா தோட்ட காமன் கூத்து வாத்தியார் முருகேசு பாலகிருஸ்ணன் ஆகியோர் பற்றிய குறிப்புகளுடன் நூலின் உள்ளடக்கம் அமையப்பெற் றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இத்தொகுப்பு நூல் ஞானம் பதிப்பக உரிமையாளர் தி. ஞானசேகரனால் பதிப்பிக்கப்பட் டுள்ளது.

சந்தனம் சத்தியநாதனின் தொகுப்பு நூலில் அறிமுகப்படுத் தப்பட்ட புசல்லாவைத் தோட்ட காமன் வாத்தியார் முருகேசு பாலகிருஸ்ணன் 2024-ஆம் வருடத்தில் தான் அறிந்த காமன் கூத்துப் பாடல்களைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளார். 'ரதி, மதன் நவரத்தின பாடல்கள் - 100' எனும் தலைப்பில் 101 பாடல்களின் தொகுப்பாக இந்நூல் வெளிவந்துள்ளது. மலை யக நட்சத்திர கலை இலக்கிய பேரவையின் வெளியீடாக வெளிவந்த இந்நூலுக்கான நூலக ஆவணமாக்கல் சபையின் பதிவிலக்கத்தை பெறாமை இதன் குறைபாடாக இருக்கின் றது. இருந்த போதிலும், நூற்றுக்கு மேற்பட்ட பாடல்கள் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவந்திருப்பது இதுவே முதற் தடவையாக அமைகிறது. காமன் கூத்து மூல நகர்வின் பதிவு களை ஒழுங்கு முறையில் வடிவமைக்கும் பிரதியாக்கமாக இந்நூலின் தொகுப்பு முயற்சி, திருப்தியைத் தருகிறது.

மீரா எஸ். ஹரீஸ் 2014 ஆம் ஆண்டு வெளியிட்ட 'இலங்கை யின் இந்திய வம்சாவழி மக்களின் பாரம்பரியக் கூத்துக்கள்' எனும் நூல் பரவலான கவனத்தைப் பெற்றுள்ளது. கண்டி 'நிர்த்ய கலாலயத்தின்' வெளியீடாக வந்துள்ள இந்நூல், பேரா சிரியர் சி. மௌனகுருவின் வாழ்த்துரையோடும், பேராசிரியர் துரை மனோகரனின் அணிந்துரையோடும் வெளிவந்துள்ளது. மலையகத்தின் முக்கூத்துகளை ஆவணப்படுத்தும் முயற் சியில் இந்நூலின் உள்ளடக்கம் முக்கியத்துவம் பெறுகிறது; குறிப்பாக, 'காமன் கூத்து' பிரதியாக்கத்தை நுணுக்கமாக முன்வைப்பதில் நூலாசிரியரின் முனைப்பு பாராட்டுக்குரியது. எனினும், இந்நூலாக்கத்தின் போது தரவுகள் மற்றும் தகவல் களைப் பெற்றுக்கொண்ட மூலாதாரங்களையும், தகவல் வழங்கியவர்களையும் முறையாகக் குறிப்பிடாமல் இருட்ட டிப்பு செய்துள்ளதாக ஆசிரியர் மீது ஒரு குற்றச்சாட்டு முன் வைக்கப்படுகிறது.

மேலும், ஒரு கள ஆய்வாளர் குறிப்பிட்ட கருப்பொருள் குறித்து ஆய்வு செய்யும்போது, அது தொடர்பான தொடர்ச் சியான தேடலும் அர்ப்பணிப்பும் அவரிடம் வெளிப்பட வேண் டியது ஆய்வு அறத்தின் அடிப்படைத் தேவையாகும். இருப் பினும், இந்நூல் வெளியீட்டிற்குப் பிறகு ஆய்வுக்கு உட்படுத் தப்பட்ட களம் சார்ந்து நூலாசிரியரிடமிருந்து எவ்விதமான தொடர் முன்னெடுப்புகளோ அல்லது ஆக்கபூர்வமான ஈடு பாடுகளோ புலப்படவில்லை என்ற விமர்சனம் பரவலாக நிலவுகிறது.

காமன் கூத்து குறித்த ஆய்வுகளில், 1993-ஆம் ஆண்டு காலப் பகுதியில் 'உதயம்' நிறுவனம் மேற்கொண்ட முன்னெடுப்பு கள் மிக முக்கியமானவை. குறிப்பாக, 'இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும்' என்ற ஆய்வுத் தொகுப்பிற்காக ஆய்வாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பதிப்பித்த இந்நூலில் இடம்பெற்ற, மாத்தளை வடி வேலனின் 'மலையக தமிழ் மக்களின் ஆற்றுகை கலைகள்' எனும் கட்டுரை காமன் கூத்து தொடர்பான உரையாடல்களை முனைப்புப் பெறச் செய்தது. இதனைத் தொடர்ந்து, மாத் தளை வடிவேலனின் பல்வேறு எழுத்துகளில் காமன் கூத்து குறித்த நுணுக்கமான அவதானிப்புகளைக் காண முடிகிறது. மலையகத் தமிழர்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும் ஒரு முக்கிய ஆவணமாகத் திகழும் இத்தொகுப்பு குறித்துப் பதிப் பாசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'மலையகப் பண்பாட்டைப் பண்பாட்டாய்வியல் நியமங்களுக் கேற்ற முறையில் விவரிப்பதே முதற்கடமையாகும். விவரணத் தெளிவு இல்லையேல் ஆரோக்கியமான விமர்சனம் தோன்ற முடியாது. இந்த அடிப்படையிலேயே 'பெருந்தோட்டத் தமிழரின் பண்பாடும் கருத்துநிலையும்' எனும் இவ்வாய்வு உருவானது.'

இந்த வரிகள், மலையகப் பண்பாட்டு ஆவணவாக்கத்தில் பேராசிரியருக்கு இருந்த ஆழமான ஈடுபாட்டைப் பிரதிபலிக் கின்றன. பேராசிரியரின் இத்தகைய தொடர்ச்சியான அக்க றையும் வழிகாட்டலுமே, 2011-ஆம் ஆண்டு கோவையில் நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், மலை யகக் கலைஞர்கள் காமன் கூத்தை அரங்கேற்றுவதற்கான அரிய வாய்ப்பைப் பெற்றுத் தருவதற்கும் அடிப்படையாக அமைந்தது எனலாம்.

மலையகத் தமிழ் இலக்கியப் பண்பாட்டுச் சூழலில் 1997-ஆம் ஆண்டு ஒரு மைல்கல்லாகத் திகழ்கிறது. அவ்வாண் டில் முன்னெடுக்கப்பட்ட 'மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு' மலையகக் கலை, இலக்கிய மற்றும் பண்பாட்டு ஆய்வுகளில் ஒரு புதிய பாய்ச்சலை ஏற்படுத்தியது. மத்திய மாகாண இந்து கலாசார அமைச்சராக வீ. புத்திரசிகாமணி பதவி வகித்த காலத்தில், இம்மாநாடு குறித்த எண்ணக்கரு நடைமுறை வடிவம் பெற்றது.

இம்மாநாட்டின் விளைவாக, மலையகப் பாரம்பரியக் கூத்து கள் பற்றிய ஆய்வுகள் விரிவடைந்தன. குறிப்பாக, 'காமன் கூத்து' ஒரு முக்கிய பேசுபொருளாக உருவெடுத்தது. அக்கா லகட்டத்தில், இலங்கைச் சூழலில் 'காமன் கூத்தெல்லாம் ஒரு கூத்தா?' என்ற நையாண்டிகளும், எள்ளல் பார்வைகளும் நிலவின. இதனால் இக்கூத்துக் கலைஞர்களும் ஆர்வலர் களும் ஒருவிதத் தாழ்வுச் சிக்கலுக்கும் மனச்சஞ்சலத்திற்கும் உள்ளாகியிருந்தனர்.

இந்தச் சூழலில்தான், மலையகச் சமூக அசைவியக்கத்தின் முக்கிய ஆளுமையான செந்தூரனின் காமன் கூத்து தொடர் பான பதிவுகளும், வி.டி. தர்மலிங்கம் போன்றோரின் களச் செயற்பாடுகளும் இக்கலைக்கு ஒரு தார்மீக அங்கீகாரத் தைப் பெற்றுத்தந்தன. அவற்றைத் தரவுகளாகக் கொண்டு, லெனின் மதிவானனின் முற்போக்கான எழுத்துக்களும், வ. செல்வராஜாவின் ஆழமான உரைகளும் காமன் கூத்து குறித்த பார்வையை அறிவுத்தளத்தில் மாற்றியமைத்தன. இவர்களின் ஒருங்கிணைந்த முயற்சிகள், காமன் கூத்தை வெறும் சடங் காகப் பார்க்காமல், ஒரு பண்பாட்டு அடையாளமாக மீட்டெ டுக்க உதவின.

மலையகக் கூத்துகள் குறித்த ஏளனமான விமர்சனங்கள் நிலவிய ஒரு காலகட்டத்தில், அவற்றைப் பண்பாட்டு ரீதியாக நிலைநிறுத்தியதில் பேராசிரியர் காரை சுந்தரம்பிள்ளையின் பங்களிப்பு மிக முக்கியமானது. மலையகத்தில் பயில்நிலை யிலுள்ள முக்கூத்துகள் தொடர்பாக அவர் மேற்கொண்ட ஆய்வுகளின் விளைவாக, 2005-ஆம் ஆண்டு 'ஈழத்து மலை யகக் கூத்துக்கள்' எனும் நூல் வெளிவந்தது. இந்நூல் மலை யகத்தின் முதன்மையான முக்கூத்துகளான காமன் கூத்து, அருச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் ஆகியன பற்றிய விரி வான விவரணங்களைத் தாங்கி வெளிவந்தது. காமன் கூத் தைப் பொறுத்தவரையில், அதன் கதையோட்டம் மற்றும் அரங்காற்றுகை முறையியல் ஆகியவற்றைத் துல்லியமாகப் பதிவு செய்வது காரை சுந்தரம்பிள்ளையின் அணுகுமுறை யாக இருந்தது. குறிப்பாக, வடபுலத்தின் 'காத்தவராயன்' கூத் துடன் காமன் கூத்தை ஒப்பிட்டு அவர் முன்வைக்கும் பார்வை கள் கவனத்திற்குரியவை.

'மலையக மக்கள் போற்றும் காமனும், யாழ்ப்பாண மக்கள் வணங்கும் காத்தவராயனும் கருவளத் தெய்வங்கள் (Fertility Gods). சிற்றின்பம் துய்த்துச் சந்ததி விருத்தி பெறச் செய்ப வன் மன்மதன்; அதேபோல் காத்தவராயனும் சிற்றின்பம் நல் கிச் சந்ததி பெருகச் செய்பவன்.'

இவ்வாறு இவ்விரு தெய்வங்களுக்குமிடையிலான ஒற்றுமை யைச் சுட்டிக்காட்டும் அவர், இந்த இரண்டு கூத்துகளும் சமயச் சார்புடையவையாக இருந்தபோதிலும், தத்தமது சமூ கங்களில் நிலவும் குறைகளைச் சுட்டிக்காட்டும் சமூகப் பொறுப்புணர்வுடன் தொழிற்படுவதை வலியுறுத்துகிறார். 'இரண்டு கூத்துகளும் சமுதாயத்தை விமர்சனம் செய்கின் றன' என்ற அவரது கூற்று, இக்கூத்துக்களின் பின்னுள்ள அறி வுத்தளத்தை வெளிப்படுத்துகிறது. மேலும், வேல்முருகு மற் றும் அம்பிகை வேல்முருகு ஆகியோரின் பல்கலைக்கழகச் செயற்பாடுகளும், மலையகக் கூத்துகள் - குறிப்பாகக் காமன் கூத்து, அருச்சுனன் தபசு குறித்த பார்வைகள் மலையகக் கூத்துக்களை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தின. காரை சுந்தரம் பிள்ளை உள்ளிட்ட இவர்களின் கூட்டு உழைப்பும் ஈடுபாடும், மலையக அரங்காற்றுகைக் கலைகள் பல்கலைக்கழக மட் டத்தில் காத்திரமான ஆய்வுப் பொருளாக மாறுவதற்குப் பெரும் தூண்டுதலாக அமைந்தன.

காமன் கூத்து தொடர்பான எழுத்தாவணங்களில், பல்கலைக் கழகத் தளத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட ஓர் ஆய்வுப் பார்வையாக சோதிமலர் ரவீந்திரனின் பங்களிப்பு தனித்துவ மானது. பேராதனைப் பல்கலைக்கழகப் பின்னணியில் அவர் மேற்கொண்ட ஆய்வின் விளைவாக, 'காமன் கூத்தும் மலை யகப் பாரம்பரியமும்' எனும் நூல் வெளிவந்தது. ஐந்து இயல் களைக் கொண்டுள்ள இந்நூல், காமன் கூத்தை ஏனைய கூத்து மரபுகளுடன் ஒப்பிட்டு ஆராய்வதை முதன்மை நோக் கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, காமன் கூத்துப் பிரதி யாக்கத்தை ஆவணப்படுத்துவதுடன், கூத்துக்கலை மற்றும் காமன் கூத்தின் வரலாற்றுப் படிமங்களை ஆழமாக ஆராய் வது இந்நூலின் சிறப்பம்சமாகும். இந்நூலில் ஆசிரியர் முன் வைக்கும், 'கூத்துக்கள் பழைமையின் சின்னங்களாகவும், பண்பாட்டின் படிவங்களாகவும் விளங்குகின்றன' எனும் கூற்று, மலையகக் கலைகளை வரலாற்று நோக்கில் அணுகு வதற்கான ஒரு திறவுகோலாகும். இப்பார்வையின் ஊடாக, உலக நாடுகளில் காணப்படும் பல்வேறு கூத்து மரபுகள் குறித்த தெளிவான விளக்கங்களை ஆசிரியர் வழங்கியுள் ளார். மேலும், சமூகச் சிக்கல்களைத் தெளிவுறுத்துவதில் கூத்துக்கலை வகிக்கும் பங்களிப்பு குறித்தும் அவர் விரி வாகப் பேசியுள்ளார். பேராசிரியர் துரை மனோகரனின் முன் னுரையும், பேராசிரியர் க. அருணாசலத்தின் அணிந்துரையும் இந்நூலின் கனதிக்கும், காமன் கூத்தின் மேன்மைக்கும் வலுச் சேர்க்கும் சான்றுகளாக அமைந்துள்ளன. மலையகப் பண் பாட்டுப் பதிவுகளில் இந்நூல் ஒரு தவிர்க்க முடியாத ஆவண மாகக் கருதப்படுகிறது.

மலையகத்தின் 'திறந்தவெளிப் பாடசாலை' எனக் கருதப் படும் காமன் கூத்தை ஆய்வு செய்வதில், பொன் பிரபாக ரனின் பங்களிப்பு தனித்துவமானது. மலையகச் சமூகத்தின் விடுதலை வேட்கையோடு தனது சிந்தனைகளையும் செயற் பாடுகளையும் ஒருங்கிணைக்கும் இவரது அணுகுமுறை, ஒரு புதிய பண்பாட்டு அசைவியக்கத்தைத் தோற்றுவித்துள்ளது. வெறும் கலைப் பாதுகாப்பு என்ற எல்லையைத் தாண்டி, ஒரு தீவிரமான சமூக நேசிப்புடன் இவர் காமன் கூத்தை அணுகும் விதம் இவரை ஏனைய ஆய்வாளர்களிடமிருந்து வேறுப டுத்திக் காட்டுகிறது. இவரது நீண்டகால அகநிலை அவதா னிப்பின் வெளிப்பாடாகவே, 'காமன் கூத்து - இலங்கை மலை யகத் தமிழர் பண்பாட்டு வகைப்பட்ட அரசியல் பொருண்மிய ஆய்வு' எனும் காத்திரமான நூல் உருப்பெற்றது. இந்நூல் மலையகக் கலைத்துறைச் சூழலில் பெரும் தாக்கத்தை ஏற்ப டுத்தியதோடு, காமன் கூத்தை அரசியல் மற்றும் பொருளா தாரப் பின்னணியில் ஆழமாக விவாதித்தது. ஏனைய கூத்து களுடன் ஒப்பிடுவதைத் தவிர்த்து, காமன் கூத்தின் உட் பொருளை மட்டும் முழுமையாக ஆராய்வதே இந்நூலின் தனிச்சிறப்பாகும். தமிழர் பண்பாட்டோடும் மலையகத் தனித் துவத்தோடும் இக்கலையை இணைத்துப் பார்க்கும் பொன் பிரபாகரன், காமன் கூத்தை மலையகத் தமிழர்களின் மரபுரி மையாகவும், தனித்துவமான சமூக அரங்காகவும், அரசியல் அதிகாரமற்ற எளிய மக்களின் 'பேராயுதமாகவும்' அடை யாளப்படுத்துகிறார்.

காமன் கூத்து தொடர்பான அம்சங்களை ஆவணப்படுத்தும் முயற்சியில், 2011-ஆம் ஆண்டு 'தினக்குரல் - உதயசூரியன்' இதழில் வெளிவந்த 'காமன் கூத்து கலையறிவோம்' எனும் தொடர் மிக முக்கியமான முன்னெடுப்பாகும். அ. லெட்சு மணன் அவர்களால் எழுதப்பட்ட இத்தொடர் ஓராண்டு காலம் தொடர்ச்சியாக வெளிவந்து வாசகர்களின் பலத்த வரவேற் பைப் பெற்றது. இத்தொடரின் மிக விரிவான வடிவமே 'தாய்வீடு' இதழில் என்னால் எழுதப்பட்டு, தொடர்ச்சியாக வெளிவரும் இக்கட்டுரையாகும். இத்தகைய ஆழமான தொடர் பதிவுகள், காமன் கூத்து குறித்த ஆய்வுக் களங்கள் மற்றும் அரங்கேற்றக் களங்கள் பற்றிய மேலதிகத் தேடல்க ளுக்கான அவசியத்தை இன்றைய ஆய்வாளர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளன.

(தொடரும்...)



letsumanan.a@thaiveedu.com

இராமானுஜன் எனும் கணித மேதை


- குமார் புனிதவேல்



சென்ற நந்தார் விடுமுறை காலத்தில் கணினியில் உலாவிக் கொண்டிருந்தபோது, டிசம்பர் 22-ஆம் திகதி இந்தியாவின் தேசிய கணித தினம் (National Mathermatics Day) எனக் குறிப்பிடப்பட்டிருப்பதை அவதானித்து வியப்படைந்தேன். இதற்கு முன் எத்தனையோ விடயங்கள் தேசிய தினமாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் கணிதத்திற்கு தேசிய தினம் அறிவிக்கப்பட்டுள்ளது இதுவே முதன்முறையாகும். கணிதத்தின் மீதான ஆர்வத்தை மாணவர்களிடையே வளர்ப்பதே இத்தினத்தின் முதன்மை நோக்கமாகும். இத்தினத்தைப் பற்றி நான் கற்றறிந்த தகவல்களை உங்களுடன் இங்கே பகிர்ந்துகொள்கிறேன்.

அந்தச் சிறப்புமிக்க தினம், உலகமே வியந்து போற்றும் இந்தியக் கணித மேதை சீனிவாச இராமானுஜன் அவர்களின் பிறந்த தினமாகும். கணிதத் துறையில் அவர் ஆற்றிய அளப்பரிய சாதனைகளைக் கௌரவிக்கும் விதமாக, 2012-ஆம் ஆண்டில் அவரது 125-ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, அன்றைய இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் டிசம்பர் 22-ஆம் தேதியை 'தேசிய கணித தினமாக' பிரகடனம் செய்தார். ஈரோட்டின் எளிய சூழலில் பிறந்து, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் வரை தனது கணிதப் புலமையால் உலகை அதிரச் செய்தவர் அவர். ஒரு தமிழனுக்குக் கிடைத்த இந்தச் சர்வதேச அங்கீகாரம், அவருக்குக் கிடைத்த கௌரவம் மட்டுமல்ல; உலகெங்கும் வாழும் தமிழர்களாகிய நம் அனைவருக்கும் இது மட்டற்ற மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் தருவதாகும்.

இந்த உலகப் புகழ்பெற்ற தமிழ்க் கணித மேதைக்குக் கிடைத்துள்ள கௌரவங்கள் எண்ணற்றவை. அவரது 75-ஆவது பிறந்த தினமான 1962-ஆம் ஆண்டில், இந்திய அரசு முதன்முதலாக ஒரு சிறப்புத் தபால் முத்திரையை வெளியிட்டு அவரைச் சிறப்பித்தது. அதனைத் தொடர்ந்து, அவரது 125-ஆவது பிறந்த தினமான 2012-ஆம் ஆண்டிலும் மற்றுமொரு முத்திரை வெளியிடப்பட்டது. இதுவரையில், இராமானுஜரின் உருவம் பொறித்த நான்கு வெவ்வேறு தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. உலகக் கணித வரலாற்றில் இத்தனை முறை முத்திரைகள் மூலம் கௌரவிக்கப்பட்ட மேதைகள்மிகச் சிலரே.





1887 டிசம்பர் 22-ஆம் திகதி ஈரோடு மாவட்டத்தில் சீனிவாசன், கோமளம் தம்பதிகளுக்கு இராமானுஜன் பிறந்தார். தனது மூன்றாவது வயதுவரை பேசும் திறனில்லாமல் இருந்தார். அத் தம்பதிகளுக்கு இராமானுஜனுக்கு பின் பிறந்த மூன்று குழந் தைகள் ஓரிரு ஆண்டுகளிலேயே இறந்து போனார்கள். வறுமையில் வாடிய பெற்றோர் 1892-இல் காஞ்சிபுரத்திற்கு இடம் பெயர்ந்தார்கள். இராமானுஜன் 1892-இல் தொடக்கப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். இரண்டே வருடங்களில் அவர்கள் குடும்பம் 1894-ஆம் ஆண்டில் கும்பகோணத்திற்கு இடம் பெயர்ந்தது. அங்கு கல்வியை தொடர்ந்த இராமானுஜன் முதலிட சித்தி பெற்றார்.

1897-ஆம் ஆண்டில் கும்பகோணம் நகர் உயர் நிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பில் சேர்க்கப்பட்டார். கணிதப்பா டத்தை ஆர்வத்துடன் படித்த இராமானுஜன் 12-வது வயதில், லோனி எழுதிய Trignomatry எனும் முக்கோணவியல் பாடப் புத்தகத்தை பக்கத்து வீட்டில் வசித்த மாணவனிடம் இருந்து வாங்கிப் படித்தார். முழுப்புத்தகத்தையும் படித்த இராமா னுஜன் அதிலுள்ள அனைத்து கணக்குகளையும் சரியாகச் செய்து முடித்ததை கண்ட மற்ற மாணவர்கள் ஆச்சரியமடைந் தார்கள்.

அதைத் தொடர்ந்து கார் என்பவருடைய Carr's Synopsis எனும் தொகை நூலையும் கற்றார். தூய கணிதத்தின் அடி மட்டத் தோற்றத் தொகை என்று பெயர் கொண்ட அந்தப் புத்த கத்தின் உட்பொருள் அவரை அப்படியே ஈர்த்தது. அதில் ஏறக்குறைய 6000 தேற்றங்கள் இருந்தன. பாதிக்கு சரியான நிறுவல்கள் இல்லை. அதில் இருந்தவையும் நிறைவற்றதாக இருந்தன.

இராமானுஜன், அதிலிருந்த ஒவ்வொரு தேற்றத்திற்கும் தனக்குத் தோன்றிய நிறுவல்களை ஒரு குறிப்பேட்டில் எழுதி வைக்கத் தொடங்கினார். அந்த ஆய்வில் புதியதாகத் தேற் றங்களும் தோன்ற, அவைகளையும் குறிப்பேட்டில் எழுதி வைத்தார். இப்படியே 16 வயதிலேயே கணித மேதை எனத் கூறக்கூடிய தகுதியை அடைந்தார். ஆனால் குடத்தில் எரியும் விளக்குபோல் வெளி உலகுக்கு தெரியாதிருந்தது.

1903-ஆம் ஆண்டு தனது 16-வது வயதில் சென்னை பல்க லையின் மெட்ரிகுலேசன் தேர்வில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

அதன் காரணமாக கும்பகோணம் அரசுக் கல்லூரியில், தற்போதைய 11 மற்றும் 12-வது வகுப்பிற்குச் சமமான கல்வியில் சேர்ந்ததுடன், அக்கல்விக்கான 'சுப்பிரமணியம் உபகாரச் சம்பளம்' எனும் உதவித் தொகையும் பெற்றார். கல் லூரியில், ஆங்கிலம், கணிதம், உடற்செயலியல், ரோமானிய கிரேக்க வரலாறு மற்றும் வடமொழிப் பாடங்கள் இருந்தபோ திலும் கணிதப்பாடத்தில் மட்டுமே அதிக கவனம் செலுத் தினார். அதனால் கணிதம் தவிர மற்றைய அனைத்துப் பாடங் களிலும் தோல்வி கண்டார். அதனால் அவருக்குத் தரப்பட்ட உபகார சம்பளத்தையும் இழந்தார். அதன் பின் பள்ளிப்ப டிப்பை நிறுத்திவிட்டு ஆந்திராவுக்கு சென்றுவிட்டார்.

ஒரு வருடத்தின் பின் அவர் மீண்டும் கும்பகோணம் அரசு கல் லூரியில் இணைந்து படிப்பைத் தொடர்ந்தார். ஆனால் 1905 டிசம்பர் தேர்வுக்குத் தேவையான வருகைச் சான்று கிடைக்கா ததால் அவரால் தேர்வு எழுத முடியாது போனது. அதன் பின்னர், சென்னை, பச்சையப்பா கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார். அங்கு அவர் S.P. சிங்காரவேலு முதலியாரிடம் கணிதம் கற்றார். இருவரும் சேர்ந்து விவாதித்து பல கணக்கு களுக்கு விடை கண்டார்கள். இந்நிலையில் இராமானுஜருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டதனால் சென்னையிலிருந்து கும் பகோணம் திரும்பினார்.

1910-இல் இந்தியக் கணிதக் கழகத்தைப் பற்றி கேள்விப்பட்ட ராமானுஜன் அதனைத் தொடங்கிய பேராசிரியர் வி. ராமஸ்வாமி அய்யர் என்பவர் உதவியை நாடினார். அவரு டைய அறிமுகத்தால் பேராசிரியர் சேஷு அய்யர் என்பவர் மூலம் நெல்லூர் மாவட்ட ஆட்சியாளராக இருந்த திவான் பகதூர் ஆர். ராமச்சந்திராவை அணுகினார். அவர், இராமா னுஜன் கணிதத்தில் பெரும் சாதனை செய்யக்கூடியவர் என்று உணர்ந்து இராமானுஜருடைய செலவுகளைச் சில காலத் திற்கு தானே ஏற்றார். அத்துடன் இராமானுஜன் துறைமுக அலுவலகத்தில் ஒரு வேலையைப் பெற்று தனது ஆராய்ச் சியை தொடர்ந்தார்.

1911-இல் இந்திய கணித கழக பத்திரிகையில் அவருடைய முதல் ஆய்வுக் கட்டுரை வெளியாகியது. அதனை தொடர்ந்து 1913-ஆம் ஆண்டில் சென்னை பல்கலைக்கழத்தில் ஆராய்ச் சியாளராக மாதம் 75 ரூபா சம்பளத்தில் சேர்ந்தார்.

இதனை தொடர்ந்து சில அறிஞர்கள் இணைந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த G.H. ஹார்டிக்கு (Hardy) அவரது கண்டு பிடிப்பான 120 தேற்றங்களையும் இணைத்து ஒரு கடிதம் எழுதினார்கள்.

ஆரம்பத்தில் அசட்டையாக இருந்த பேராசிரியர் Hardy, அதில் உள்ள தேற்றங்களில் சிறப்பு நோக்கி, அவரது ஆராய்ச்சியை தனது பல்கலைக்கழகத்தில் தொடர செலவுகளை தாம் ஏற்பதாக அழைப்பு விடுத்தார்.

1914-ஆம் ஆண்டு கேம்பிரிட்ஜ் சென்ற இராமானுஜம் நான்கு ஆண்டுகள் அங்கு இருந்தார். அக்காலத்தில் 27 ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். அதில் ஏழு பேராசிரியர் Hardy யுடன் இணைந்து எழுதப்பட்டது. 1918-இல் அவருக்கு FRS (Fellow of the Royal Socierty) என்ற சிறப்பு வழங்கப்பட்டது. அதே ஆண்டில் டிரினிடி கல்லூரியின் Fellow ஆகவும் தேர்வு செய்யப்பட்டார். இவ்விரண்டு சிறப்புகளையும் பெற்ற முதல் இந்தியர் இவரே. அக்காலகட்டத்தில் கசநோய் அவரைத் தாக்கியதால் 1919-இல் இந்தியா திரும்பி அதே நோயால் தனது 32-வது வயதில் 1920-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 26-ஆம் திகதி மறைந்தார்.

இவர் தன் குறுகிய வாழ் நாளில் மூவாயிரத்திற்கு மேற்பட்ட புதுக் கணிதத் தேற்றங்களைக் கண்டறிந்தார்.

கணித உலகின் முடிசூடா மன்னராகத் திகழும் சீனிவாச இராமானுஜனின் 125-ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு, உலகப் புகழ்பெற்ற 'கூகுள்' நிறுவனம் தனது தேடு பொறியின் முகப்புப் பக்கத்தில் சிறப்பு 'டூடுலை' (Doodle) வெளியிட்டு அவருக்குச் சர்வதேச அளவில் மரியாதை செலுத்தியது. எண்களுடன் அவர் நடத்திய மாயாஜாலங்கள் இன்றைய தலைமுறைக்கும் உத்வேகம் அளிப்பவை என்பதற்கு இது ஒரு சிறந்த சான்று.

அவரது வாழ்க்கைப் பயணத்தை உலகிற்குப் பறைசாற்றும் வகையில் 2014-ஆம் ஆண்டு 'இராமானுஜன்' என்ற வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் வெளியானது. திறமைமிகு இயக்குநர் ஞான ராஜசேகரன் அவர்களின் எழுத்து மற்றும் இயக்கத்தில், தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் படமாக்கப்பட்டது. அறிவியலின் மொழியான கணிதத்தில் உலகையே வியக்கவைத்த அந்தப் பேரறிஞரின் தாய்மொழியும், எனது தாய்மொழியும் 'தமிழ்' என்பதில் நான் மட்டற்ற பெருமை கொள்கிறேன்.

.



kumar.punithavel@thaiveedu.com





இலக்கிய ஆளுமை பத்தினியம்மா திலகநாயகம் போல்

– வே. விவேகானந்தன்

இலங்கையின் வடக்கே, யாழ்ப்பாணக் குடாநாட்டின், வடமராட்சிப் பிரதேசத்தில், கற்றோரும், கலை இலக்கியவாதிகளும் நிறைந்த கரவெட்டியில், சிதம்பரப்பிள்ளை பார்வதிப்பிள்ளை இணையருக்கு இளைய மகளாக 1944-ஆம் ஆண்டு செப் ரெம்பர் மாதம் ஒன்பதாம் திகதி பத்தினியம்மா பிறந்தார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியில் கற்றார். இடைநிலை மற்றும் உயர் கல்வியை முறையே யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் தொடர்ந்தார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டப்படிப்பை நிறைவு செய்த இவர், இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையிலும் சாதனை படைத்து, அரச உயர் பதவிகளை வகித்தார். அத்துடன், சிறுகதை, சிறுவர் இலக்கியம், தொடர்கதை, என இலக்கியத் துறையிலும் ஈடுபட்டு சிறந்த பெண்ணியல் எழுத்தாளராக வலம் வந்தார்.

இவர் இலக்கிய உலகில் கால் பதிப்பதற்கு, அகச்சூழல் மட்டுமின்றி புறச்சூழலும் சாதகமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும். குழந்தைப் பருவத்திலிருந்தே கதை கேட்பதில் அதிக ஆர்வம் இருந்தமையால், தன் தாயின் மடிதான், தனது கதை உலகின் முதல் ஆரம்பம் என அவர், தனது 'நிஜத்தின் நிழல்' என்ற சிறுகதைத் தொகுப்பில், 'என்னுரை' என்னும் பதிவில் குறிப்பிட்டுள்ளார். தனது தாயார், உண்மையாகவோ, பொய்யாகவோ, கற்பனையாகவோ, கதைகளை உருவாக்கி, ஆர்வத்துடன் கேட்கும் வகையில், இங்கிதமாகவும், நளினத்துடனும் சொல்லும் ஆற்றல் படைத்தவர் எனக் குறிப்பிடும் அவர், அதுவே தனது கற்பனை வளத்துக்கும், எழுத்தாற்றலைத் தூண்டவும் அடிப்படையாக அமைந்தது எனப் பெருமைப்படுகின்றார். ஐந்து வயதிலேயே வாசிக்க ஆர்வம் கொண்ட பத்தினியம்மா, அப்போது சுதந்திரன் பத்திரிகையில் தொடர்ந்து வெளிவந்த 'ஆசை ஏணி' என்னும் தொடர்கதையினைத் தவறாது விரும்பி வாசித்தார். வீட்டில் இவரது பெற்றோர் வாங்கும் கல்கி, விகடன், செந்தமிழ்ச் செல்வி, போன்ற சஞ்சிகைகளும், பாடசாலை நூலகத்தில் இருந்த கலைமகள், கலைக்கதிர், மஞ்சரி, குமுதம், போன்ற சஞ்சிகளைகளும் இவரது வாசிப்பின் தீவிரத்துக்கு உரமாக அமைந்தன.

ஆரம்பத்தில் பத்தினியம்மா சிறுகதைகளை எழுதிய போதிலும், அவற்றைப் பிரசுரிப்பதிலோ, அவற்றைப் பேணிப் பாது



காப்பதிலோ ஆர்வம் கொள்ளவில்லை. தான் எழுதும் சிறுகதைகள், எந்தளவுக்குச் சரியானவை?, என்பது தொடர்பாக மனதில் ஏற்பட்ட குழப்பமே காரணம் எனக் குறிப்பிடும் அவர், 1963-ஆம் ஆண்டு, பேராதனைப் பல்கலைகழகத்தில் முதலாவது வருட மாணவியாகப் படிக்கும்போது, அகில இலங்கை எழுத்தாளர் சங்கம், சிறுகதைப் போட்டி ஒன்றை நடாத்தியது. இப்போட்டிக்கு, தான் எழுதி அனுப்பிய சிறுகதைக்குப் பரிசு கிடைத்தமை, பெரு மகிழ்ச்சியைத் தந்ததாகவும் தொடர்ந்தும் சிறுகதைகளை எழுத வேண்டும் என்ற ஊக்கத்தைக் கொடுத்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார். பல்கலைக்கழகமாகிய புறச்சூழலும், பத்தினியம்மா சிறுகதை எழுத்தாளராகப் பரிணமிக்க சாதகமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இவர் பல்கலைகழகத்தில் படித்த சமகாலத்தில், சிறுகதைகளை ஆர்வத்துடன் எழுதும், செங்கையாழியான், செம்பியன் செல்வன், செ. யோகநாதன், கலாபரமேஸ்வரன், பரராசசிங்கம், குந்தவை போன்ற கலை இலக்கிய ஆர்வமுடைய ஒரு மாணவர் குழுவும் இருந்தது. அத்துடன் பேராசிரியர்கள் வித்தியானந்தன், கைலாசபதி போன்றவர்களின் ஆளுமைகளும் இவருக்குப் பக்கபலமாக அமைந்தன. சிறுவயதிலேயே எழுதவேண்டும் என்று மனதில் ஏற்பட்ட துளிர், ஆலமர விருட்சம் போல் பரந்து வளர்ச்சியடைய, இந்தப் புறச்சூழல் உந்துசக்தியாக அமைந்தது. 1965-ஆம் ஆண்டு சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்த இவர், பாலபண்டிதர் பரீட்சையிலும் சித்தியடைந்து தமிழிலும் சமஸ்கிருதத்திலும் புலமை பெற்றிருந்தார்.

பத்தினியம்மா பெண்ணிலைவாத எழுத்தாளராகத் தன்னை உருவாக்கிக் கொள்ள, சிறுவயதில் தனக்கு ஏற்பட்ட இரு அனுபவங்களைக் குறிப்பிடுகின்றார். ஒரு நாள், சில ஊர்ப் பெரியவர்கள் தனது தந்தையிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது, 'உங்கள் பிள்ளைகள் எல்லோரும் படிப்பில் கெட்டிக்காரர்கள்தான் ஆனாலும் என்ன, பிற்காலத்தில் உங்கள் பெயர் விளங்க ஓர் ஆண் பிள்ளை இல்லையே' எனக் கூற, தந்தையாரின் முகமும் வாட்டமடைவதனை அவதானித்துள்ளார். மூத்தவர் ஆண், இறந்துவிட்டார். பெண்களே மிஞ்சியிருந்தனர். ஆனால் தந்தையின் பெயரைத் தன்னால் விளங்கச் செய்ய முடியும் எனத் தீர்மானித்த பத்தினியம்மா, 'சிதம்பர பத்தினி' என்ற புனை பெயரில் எழுத்துத்துறையில் கால் பதித்தார். பின்னர், 'சித்தி', 'நங்கை', 'பிரக்ஞா', ஆகிய புனை பெயர்களிலும் தனது படைப்புகளை வெளியிட்டார்.

பத்தினியம்மாவின் மனதைப் பாதித்த மற்றொரு விடயமாக, பாடசாலையில் நடந்த சம்பவம் ஒன்றைக் குறிப்பிடுகிறார். பாடசாலையில் படிக்கும்போது தான் கணித பாடத்தில் மிகவும் திறமைசாலி எனவும், தான் முழுக் கணக்கையும் சரியாகச் செய்தாலும், ஆசிரியர் 99 புள்ளிகளையே போடுவார் எனவும், ஆண்களுக்கு 100 புள்ளிகள் போடுவார் எனவும், காரணம் கேட்டால் நீ பெண்பிள்ளை எனக் கூறுவார் எனவும், எனினும், விடாமல் வாக்குவாதம் செய்து, 100 புள்ளிகளைப் பெற்று விடுவேன் எனக் குறிப்பிட்டுள்ளார். இளமையில் ஏற்பட்ட இத்தகைய அனுபவங்கள், அதாவது, ஆண்கள், பெண்களைச் சமமாக நினைப்பதில்லை, மதிப்பதில்லை, மதிப்பதற்குத் தாயாராகவும் இல்லை. அழகும், வறுமையும் பெண்களுக்கு, இச்சமுகத்தில் எப்படி எதிரிகளாகின்றன? ஆண்களால் கொடுமைக்குள்ளாகும் பெண்கள் அவர்கள் முன்பு எவ்வாறு தலை நிமிர்ந்து வாழ்ந்து காட்டுவது? போன்ற எண்ணங்கள் அவரின் அடிமனதில் பதிந்தமையால், பெண்களின் சமத்துவம், சுதந்திரம், அவர்கள் நோக்கும் சமூக, பொருளாதார சவால்கள் முதலானவற்றை முன்னிறுத்தி ஏராளமான சிறுகதைகளை எழுதிப், பெண்ணிலைவாத எழுத்தாளராகப் பரிணமித்தார். அவரது பல சிறுகதைகள் சுதந்திரன், ஈழநாடு, தினகரன் போன்ற பத்திரிகைகளில் பிரசுரமாகின.

பத்தினியம்மா அவர்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்புகளில், 'நிஜத்தின் நிழல்' சிறந்தவொரு படைப்பாகும். உலகத்தின் கண்கள், சுழல் பந்தம், அக்கினி குண்டம், உருமாறும் கருவறைகள், கல்லறை, என்ன தவறு செய்தேன்?, அண்ணா, சாந்தி, மன்னிப்பு, பகுத்தறிவு போன்ற, பதின்னெட்டு சிறுகதைகளை உள்ளடக்கிய இச்சிறுகதைத் தொகுப்பு, யாழ். இலக்கிய வட்டத்தால் 2000-ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இத்தொகுப்பில் உள்ள பல கதைகள் காதல், குடும்பம், பெண்ணிலைவாதம் சார்ந்தனவாகும், பகுத்தறிவு, இளந்துறவி, மெய்ஞானி, ஆகிய சிறுகதைகள் உருவகப் பண்பு கொண்ட கதைகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன.

பத்தினியம்மாவின் கற்பனை வளம் வாசிக்கும் போது மெய் சிலிர்க்கும். 'பகுத்தறிவு' என்னும் கதையில் வரும் பின்வரும் பந்தி அவரது கற்பனை வளத்தின் ஒரு துளியாகும்.

'பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து இராமநாதன் விடுதியை நோக்கிச் சென்றால், சற்றுத் தூரத்திற்கப்பால் ஒரு வளைவு. வாழ்க்கையில் நிதானமாக - விழித்து நடவுங்கள் - இல்லையேல் வழுக்கி விழ வேண்டி நேரிடும் என்று போவோரையும் வருவோரையும் எச்சரிப்பது போன்று அமைந்த ஒரு வளைவு - ஒரு நெளிவு - ஒரு பள்ளம். அதன் வலப்புறத்தே நோக்கின், கண்கவர் கவின்பூங்கா. வாழ்க்கையே ஒரு ஓட்டப் பந்தயம் தான், என்று சொல்லாமல் சொல்லிக்கொண்டே சலசலக்கும் சிற்றோடை. எழில்மிகு மலர்கள் பூத்துக்குலுங்கும் பூச்செடிகள்; இனிய நறுமணம்; இத்தனை அலங்காரம் செய்தும் எங்களின் இயற்கை அழகிற்கு ஈடாவீர்களா? என்று பெண்களை எள்ளி நகையாடுவது போன்றமைந்த குரோட்டன்கள், நடுவில் ஒரு சுனை - சிறிய வட்டமான சுனை. இத்தகைய சூழ் நிலையிலும் துறவிகள் வாழமுடியும், என்பதை எடுத்துக் கூறுவன போன்று நிமிர்ந்து - நேர்கொண்ட பார்வையுடைய,

நீருடன் ஒட்டியும் ஒட்டாமலிருக்கின்ற தாமரை இலைகள்; கண் விழித்த கமலங்கள்; இவ்வளவும் நிறைந்த அந்தப் பூங்கா வில்... என அக்கதை தொடர்கிறது. பத்தினியம்மா எழுதிய 'நானாக நான்' என்ற சிறுகதைத் தொகுப்பு மற்றுமொரு சிறந்த படைப்பாகும்.

சிறுவர்களின் கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்ட பத்தினி யம்மா, சிறுவர்களைக் கவரும் பாடல்கள் நிறைந்த, சிறுவர் நூல்களை எழுதி, சிறுவர் இலக்கியத்துக்கும் பங்களிப்புச் செய்துள்ளார். 'மழலைப் பாக்கள்', 'தேன்வதை' ஆகிய சிறுவர் இலக்கிய படைப்புகள் இங்கு குறிப்பிடத்தக்கனவாக்கும். 'மழலைப் பாக்கள்' என்னும் படைப்பில், அம்மா, பாட்டி, அன்பு, ஏழு சகோதரர்கள், என் நண்பர்கள், இளங்கன்று, எனது பூனை, எங்கள் இனிய ஆசிரியை, அப்பா, அணிலும் பூனையும், அகரம் பாடுவோம், தெய்வம், எனப் பல தலைப்பு களில், சிறுவர்கள் விரும்பிப் படிக்கும் வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. அன்பு என்னும் தலைப்பில் அமைந்த பாடல் பின்வருமாறு அமைந்துள்ளது.

அன்பே எங்கள் தெய்வம்
அறிவே எங்கள் ஜீவன்
நன்றே கற்போம் கல்வி
நலமே வாழ்வோம் என்றும்

அன்பைப் போலப் பெரிதும்
உலகில் எதுவும் இல்லை
இன்பம் யாவும் தருமே
இனிய சுகமும் பெறுவோம்

அம்மா அன்பு நித்தம்
அப்பா அன்பு முத்தம்
அக்கா அன்பு பட்சம்
அண்ணா அன்பு மிச்சம்

சைவ சமயத்தில் அளவிலாப் பற்றுக் கொண்ட பத்தினியம்மா 'ஊரும் பேரும் சைவத் திருக்கோயில்களும் - வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு' என்னும் ஆய்வு நூலை 2011-ஆம் ஆண்டு வெளியிட்டார். வலிகாமம் வடக்கு பிரதேச செயலாள ராகவும், இலங்கை நிர்வாக சேவை தரம் 1-இல் அரசாங்க அதிபராகவும் பணியாற்றிய காலப்பகுதியில், 'வலிகாமம் வடக்கு பிரதேச மலர்' என்னும் ஆவணப் பதிவினை, பிரதம ஆசிரியராக செயற்பட்டு வெளியிட்டார். வலிகாமம் வடக்கு பிர தேசத்தின் அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாக, மற்றும் சமய, கலை, கலாசார விடயங்களை, அவ்வத் துறைகளில் அறிவும் அனுபவமும் பெற்றவர்களால், எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. 2000-ஆம் ஆண்டு வெளிவந்த இம்மலர், இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர், போர்க் காலத்தில், வலிகாமம் வடக்குப் பிரதேசம் பற்றி அறியவும், ஆய்வு செய்யவும் ஆர்வம் உடையவர்க ளுக்குச் சிறந்த ஒரு ஆவணமாக விளங்குகிறது.

பத்தினியம்மா தனிப்பாடல்கள் பலவற்றையும் எழுதியுள்ளார். அப்பாடல்களுக்கு இவரது கணவரும், சிதம்பரம் அண்ணா மலைப் பல்கலைக்கழகத்தில் சங்கீதபூஷணம் பட்டம் பெற்ற வரும், புகழ் பெற்ற இசை ஆசிரியரும், உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான, அமரர் திலகநாயகம் போல் அவர்கள், ஆர். முத்துசாமியின் இசைய மைப்பில், பாடி உயிர் கொடுத்தார். பத்தினியம்மா எழுதிய தனிப் பாடல்களில் ஒன்று பின்வருமாறு அமைகிறது.

இதயத்தில் இனிமையை உணரவிட்டு - அங்கு
இன்பமும் துன்பமும் ஏன் கொடுத்தாய்
மனதினில் அன்பினை வளரவிட்டு - பின்பு
உறவையும் பிரிவையும் ஏன் கொடுத்தாய்

மலரினை மனமுடன் மலரவிட்டு - அங்கு
மதுவையும் முள்ளையும் ஏன் கொடுத்தாய்
மனிதனை உயிருடன் வாழவிட்டு - பின்பு
வாழ்வையும் தாழ்வையும் ஏன் கொடுத்தாய்

சிந்தையில் நினைவினை வளரவிட்டு - அங்கு
கனவையும் நனவையும் ஏன் கொடுத்தாய்
பந்தத்தில் மனிதனைப் பழகவிட்டு - பின்பு
பாசமும் நேசமும் ஏன் கொடுத்தாய்

பகுத்திட அறிவினைக் கொடுத்துவிட்டு - அங்கு
நட்பையும் பகையையும் ஏன் கொடுத்தாய்
மதித்திட உணர்வினைக் கொடுத்துவிட்டு - பின்பு
நன்மையும் தீமையும் ஏன் கொடுத்தாய்

இசையால் வசமான பத்தினியம்மா, 2009-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐந்தாம் திகதி அமரத்துவம் அடைந்த, தனது கணவர் நினைவாக 'இசையின் இமயம் திலகநாயகம்' என் னும் இசை நூலையும் 'நானோ இதற்கு நாயகமே - வாழ்வோ வியம்' என்னும் வாழ்க்கை வரலாற்று நூலையும் எழுதி வெளி யிட்டார். பதவியில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் சிறுவர்க ளுக்கான கல்வி, வறியோருக்கான உதவி போன்ற சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தார்.

பத்தினியம்மாவிடம் இருந்த தனித்துவமான ஆளுமை, அனு பவ முதிர்ச்சி, அரச கடமை காரணமாக, இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து, பல்லின மக்களுடன் பழகிய அனுபவம், தமிழ் இலக்கியங்களில் பெற்றிருந்த பரந்த அறிவு, வடமொழிப் புலமை போன்றவை அவரது வளமான இலக்கியப் படைப்புகளுக்கு அடித்தளமாக அமைந்தன. அதன் மூலம் அரச உயர் அதிகாரியாக மட்டுமின்றி, சிறந்த இலக்கிய ஆளுமையாகவும் பிரகாசித்தார். சிறுகதை எழுத் தாளர், நூலாசிரியர், பாடலாசிரியர், சிறுவர் இலக்கியவாதி, திறமை மிக்க நிர்வாகி எனப் பன்முக ஆளுமை கொண்ட பத் தினியம்மா, 2013-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் திகதி அமரத்துவம் அடைந்தார். எந்தவொரு ஆரவாரமும் இன்றி, இலைமறை காயாக, அரச பணியோடு இலக்கியப் பணியையும் ஆற்றி வந்த பத்தினியம்மா, இலக்கிய உலகில் வாழ்ந்து வந்த சிறந்த இலக்கிய ஆளுமைகளில் ஒருவராவார், என்பதனை அறிந்து நாம் அனைவரும் பெருமை கொள்வோ மாக.

vivekananthan.v@thaiveedu.com



தென்கிழக்குப் பல்கலைக்கழக உருவாக்கமும்

முன்னாள் துணைவேந்தர்

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின்

கல்விப் பணிகளும்

இக்பால் அலி



இலங்கையின் உள்நாட்டுப் போர் சூழலில், முஸ்லிம் பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு பாரபட்சங்கள், ஒடுக்கு முறைகள் மற்றும் இழப்புகளை எதிர்கொண்டனர். 1983-ஆம் ஆண்டுக்குப் பிந்தைய அசாதாரண சூழல், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைப் பூர்வீகமாகக் கொண்ட மாணவர் களின் இயல்பு வாழ்க்கையைப் பாரிய அளவில் நிலைகுலையச் செய்தது. எவ்விதப் பாதுகாப்பு உத்தரவாதங்களுமற்ற சூழலில், இடப்பெயர்வுகள் மற்றும் வாழ்வாதார இழப்புகளுக்கு மத்தியில் அவர்களின் உயர்கல்விக் கனவுகள் தொடர்ச்சியான அச்சுறுத் தல்களைச் சந்தித்தன. இத்தகையக் கடும் சோதனைகளையும் ஒடுக்குமுறைகளையும் கடந்து, தங்களின் தனித்துவமான சமூக இருப்பு, கல்வித் தரம் மற்றும் அரசியல் அடையாளம் ஆகிய வற்றைத் தேசிய மட்டத்தில் நிலைநிறுத்துவதற்காக அந்த மாணவர்கள் மேற்கொண்ட பயணம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

1990-களில் வட மாகாண முஸ்லிம்கள் வெளியேற்றல், வடக்கு கிழக்கில் இடைக்கிடையே நிலவும் குண்டு வெடிப்புக்கள், திடீரெனப் போடப்படும் ஊரடங்குச் சட்டம், ஹர்த்தால் அனுஷ் டிப்பு, சுற்றிவளைப்பு, தமிழ் முஸ்லிம் குழுக்களால் தோற்றுவிக் கப்பட்ட இனக்கலவரங்கள், போக்குவரத்துப் பிரச்சினைகள், பாதுகாப்பற்ற சூழல்கள், பாதுகாப்பு படையினரின் கெடுபிடி கள் முதலான காரணங்களால் முஸ்லிம் பல்கலை மாணவர்கள் கல்வியை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை க்குத் தள்ளப்பட்டனர். அதேபோல், இந்தப் போரினால் இலங் கையின் நாலாபுறங்களிலும் இருந்து வடக்கு கிழக்குப் பல் கலைக்கழகங்களில் கல்வி கற்ற மாணவர்கள் இடம்பெயர்ந்து கல்வியைத் தொடர முடியாமல் சிதறுண்டு போனார்கள். இப் பல்கலைக்கழக மாணவர்களின் உரிமைகளுக்காக ஸ்ரீலங்கா முஸ்லித் காங்கிரஸின் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்க ளுடைய குரல் பாராளுமன்றத்திலும் அரசியல் அரங்குகளில் எதிரொலிக்கத் தொடங்கியது. அதன் வெளிப்பாடாக தென் கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி தோற்றம் பெற்றது. அதன் ஸ்தாபகப் பணிப்பாளராக எம்.எல்.ஏ. காதர் நியமிக்கப்பட்டார். அதன் பின்பு அவர் பல்கலைக்கழகத்தை அர்த்தமுடையதாக மாற்றுவதற்கும் அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்த மாணவர் களும் எவ்விதப் பாகுபாடுமின்றித் தங்களது உயரிய இலக் குகளை எட்டுவதற்கு அவர் வகுத்துத் தந்த பாதையும், உப வேந்தராக அவர் ஆற்றிய பணிகளும், இலங்கையின் உயர் கல்வி வரலாற்றில் இன நல்லிணக்கத்திற்கான ஒரு முக்கிய அடையாளமாக போற்றப்படுகின்றன.

1990-களில் நிலவிய போர்க்காலச் சூழல், மட்டக்களப்பில் இருந்த கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வர்த்தக மற்றும் கலைப் பீடங்களை வந்தாறுமூலைக்கு மாற்றியது. இந்த இடமாற்றத்திற்குப் பின்னர், அங்கு நிலவிய பாதுகாப்பற்ற சூழல் காரணமாக முஸ்லிம் மாணவர்கள், விரிவுரை யாளர்கள் மற்றும் அதிகாரிகள் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறினர். குறிப்பாக, கடமையாற்றிய எஸ்.எச்.எம். ஜெமீல், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் ஜவ்பர் சாதீக், பீடாதி பதிகளான எம்.வை.எம். சித்தீக், எம்.ஐ.ஏ. றசாக் ஆகியோர்களுடன் விரிவுரையாளர்களான கே. இசாக், எம்.ஐ.எம். கலீல், எம்.எஸ்.எம். ஜலால்தீன், எஸ்.எம். ஆலீப், எம்.எம்.எம். ரபீக், நஷீர் அஹமட், ஆகியோர் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகளும் பேராசிரியர்களும் அங்கு தங்கி யிருந்து கற்பிக்கும் சூழல் நிலவவில்லை. இது முஸ்லிம் மாணவர்களுக்கு மட்டுமல்லாது, தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களுக்கும் பாதுகாப்பற்ற இடமாகவே மாறியது. இதன் விளைவாக, 1987 - 1988 கல்வியாண்டில் பல்கலைக் கழகத்திற்குத் தேர்வான அறுபதுக்கும் மேற்பட்ட மாணவர் களில், பாதிக்கும் மேலானோர் பாதுகாப்பு அச்சத்தால் தமது கல்வியைக் கைவிட வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டது. 1990-களில் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றத்தின் போது, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ற முஸ்லிம் மாணவர்களும் விரிவு ரையாளர்களும் பல்வேறு துயரங்களைச் சந்தித்து அங்கிருந்து வெளியேறினர். இத்தகைய கசப்பான அனுப வங்களே, முஸ்லிம் மாணவர்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் கல்வி கற்பதற்கான ஒரு புதிய பல்கலைக் கழகத்தின் தேவையை உணர்த்தி நின்றன.

அக்காலகட்டத்தில், கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முஸ்லிம் மாணவர்கள் எதிர்கொண்ட துயரங்களை விளக்கி பல்வேறு துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. குறிப்பாக, 1994 ஒக்ரோபரில் 'கிழக்குப் பல்கலைக் கழகமும் முஸ்லிம் மாணவர்களது அவதி நிலையும்' என்ற தலைப்பில் மாணவர் அமைப்பால் வெளியிடப்பட்ட துண்டு பிரசுரம் முக்கியமானது. 1995 ஏப்பிரலில் இலங்கை சி.வை.ஓ. (CYO) அமைப்பாலும் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இத்தகைய தொடர்ச்சியான போராட்டங்களும் கோரிக்கைகளும் புதிய பல்கலைக் கழகம் ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தின. இதன் விளைவாக, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கிளைகளை அம்பாறையில் உருவாக்குவதற்குப் பதிலாக, முஸ்லிம் மாணவர்களுக்கெனத் தனித்துவமான 'தென்கிழக்குப் பல்கலைக்கழகம்' உருவானது. இதுவே இப்பிராந்திய த்திற்கு ஒரு தனியான நிர்வாக அலகு தேவை என்ற வாதம் வலுப்பெறவும் காரணமாக அமைந்தது. அதேவேளையில் இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு என இடம் பெயர்ந்த மாணவர்களுக்கான பிரத்தியேகமாக தனிப் பிரிவு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் ஆரம்பி க்கப்பட்டது. அதன் இணைப்பதிகாரியாக கே.எச்.எம். காலிதீன் கடமையாற்றினார். பேராதனை பல்கலைக் கழகத்தில் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கான பாட நெறிகளும் நடைபெற்றன.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கம் என்பது விரிவுரையாளர்கள், இடம்பெயர்ந்த மாணவர்கள், சிவில் அமைப்புகள் மற்றும் அரசியல்வாதிகளின் நீண்டகாலப் போராட்டத்தின் அறுவடையாகும். குறிப்பாக, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய அறிவுசார் விரிவுரை யாளர்களே இதற்கான எண்ணக்கருவை உருவாக்கிச் சாத்தியப்படுத்தினர். முஸ்லிம்களுக்கெனத் தனித்துவமான தேசியப் பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்பதை வலியுறுத்தி, அவர்கள் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு மற்றும் உயர்கல்வி அமைச்சு ஆகியவற்றின் கவனத்திற்குக் கோரிக்கைகளைக் கொண்டு சென்றனர்; அத்துடன் அன்றைய தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களிடமும் தம் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினர். இந்தப் போராட்டத்திலும் பங்களிப்பிலும் எம்.ஐ.எம். கலீல், கே. இஷாக், எஸ்.எம். ஆலிப், எம்.எஸ்.எம். ஜலால்தீன் மற்றும் எம்.எம்.எம். ரபீக் ஆகிய விரிவுரையாளர்கள் முதன்மையானவர்களாகக் கருதப்படுகின்றனர். இப் பல்கலைக்கழக உருவாக்கத்தில் அன்றைய அமைச்சர் களான ரிச்சட் பத்திரன, விஸ்வ வர்ணபால மற்றும் எச்.எம். அஷ்ரஃப் ஆகியோருடன் இணைந்து, தென்கிழக்குக் கல்லூரியின் முதல் பணிப்பாளர் எம்.எல்.ஏ. காதர் மற்றும் அறிவு ஜீவிகளும் ஒருங்கிணைந்து செயற்பட்டனர்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கத்தில் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் பங்களிப்பை முழுமையாக மதிப்பிடப் பல வினாக்களுக்கு விடை காண்பது அவசியமாகும். குறிப்பாக, அவர் முன்வைத்த அபிவிருத்தித் திட்டங்கள் எத்தகையவை, அவை ஏனைய பல்கலைக்கழகச் செயற்பாடுகளுடன் ஒருங்கிணைந் தவையா மற்றும் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபன ரீதியான வளர்ச்சியை அவர் எவ்வாறு முன்னெடுத்தார் என்பன போன்ற வினாக்கள் முக்கியமானவை. இத்தகைய ஆய்வின் மூலமே அவரது செயற்பாடுகளில் நிலவிய முற்போக்கான மற்றும் பிற்போக்கான நிலைப் பாடுகளையும், பல்கலைக்கழகத்தின் இருப்பிற்காக அவர் வழங்கிய உண்மையான பங்களிப்பையும் நாம் தெளிவாக அறிந்துகொள்ள முடியும்.

1995 ஜூலை 26 அன்று தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரியின் முதல் பணிப்பாளராகப் பொறுப்பேற்ற பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர், ஆரம்பத்தில் கொழும்பி லுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவில் தனி ஒருவராக இருந்து அதன் நிர்வாகக் கட்டமைப்புகளைத் தீவிரமாக உருவாக்கினார். பல்கலைக்கழக அபிவிருத் தியை முன்னெடுக்க மறைந்த அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரஃப் தலைமையில் ஒரு செயலணி நிறுவப்பட்டது; இதில் எம்.ஐ.எம். முகைதீன் மற்றும் லெப்பை உள்ளிட்டோர் இடம்பெற்றனர்.

'தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி' என்ற அடையாளத்தை வலுப்படுத்திய பேராசிரியர் காதர், விரிவுரையாளர்கள், பதிவாளர், பொருளாளர் (Bursar), நூலகர் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் நியமனங்களை மேற்கொண்டார். அத்துடன் நூலகத்திற்கான புத்தகங் களைக் கொள்முதல் செய்தல், பாடத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வளங்களைத் திரட்டுதல் என ஒரு பல்கலைக்கழகத்திற்குத் தேவையான அனைத்து

அடிப்படைப் பணிகளையும் விரிவான தளத்தில் நின்று கட்டியெழுப்பினார். இப்பணிகளில் அவருக்கு உதவியாக முதல் விரிவுரையாளர் எம்.ஐ.எம். கலீல், விரிவுரையாளர் கே. இஸாக் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஐ.எம். முஸாதிக் ஆகியோர் இணைந்து செயற்பட்டனர்.

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் தலைமையில், 1995 ஒக்ரோபர் 23 அன்று அட்டாளைச்சேனையில் 33 மாணவர்களுடன் வர்த்தக முகாமைத்துவம் மற்றும் கலைப் பீடங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்நிகழ்வில் அமைச்சர்களான ரிச்சட் பத்திரன மற்றும் எம்.எச்.எம். அஷ்ரஃப் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். தென் கிழக்குப் பல்கலைக்கழகமானது அறிவியல், பொறியியல், மொழியியல் மற்றும் சமூக விஞ்ஞானம் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத் தியுள்ளது.

குறிப்பாக, பழைய கல்வி முறைகளைத் தவிர்த்து, இலங்கையிலேயே முதன்முறையாக செமஸ்டர் (Semester) முறையிலான நவீன கல்வித் திட்டத்தை அறிமுகப் படுத்திய பெருமை இப்பல்கலைக்கழகத்தையே சாரும். அவுஸ்திரேலியப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய பேராசிரியர் அமீர் அலியின் ஆலோசனையின் பேரில் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. ஆரம்பத்தில் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியபோதிலும், அவற்றைத் தாண்டி இப்புதிய கல்வி முறை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டது. இதன் பின்னரே இலங்கையின் ஏனைய பல்கலைக்கழகங்களும் இம்முறையைப் பின்பற்றத் தொட ங்கின.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தனது ஆரம்ப காலக் கல்விப் பாடத்திட்டங்களை உருவாக்கப் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பாடவிதானங்களையும், அங்குள்ள பேராசிரியர்களின் ஆலோசனைகளையும் வழிகாட்டல் களையும் சிறந்த முறையில் பயன்படுத்திக்கொண்டது. இப்பல்கலைக்கழகத்தின் முதன்மைச் செயல்பாட்டாள ராகவும் வழிகாட்டியாகவும் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் விளங்கினார். அவருடைய சிறந்த நிர்வாகத் திறமையின் காரணமாகப் பேராதனை, யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களிலிருந்து பல்துறை சார்ந்த பேராசிரி யர்கள் வருகைதரு விரிவுரையாளர்களாக இங்கு சமூகமளி த்தனர். குறிப்பாகப் பேராசிரியர்களான வை. நந்தக்குமார், அம்பலவாணர் சிவராசா, எம்.எஸ்.எம். அனஸ், சிரேஷ்டப் பேராசிரியர் பி.எம். ஜமாஹீர், எம்.ஏ. நுஹ்மான், செ. யோகராசா மற்றும் வி.கே. கணேசலிங்கம் உள்ளிட்ட பல முன்னணி அறிஞர்கள் இப்பல்கலைக்கழகத்தின் கல்வி வளர்ச்சிக்குத் தங்கள் பங்களிப்பை வழங்கினர்.

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்களின் வழிகாட்டலில் ஆசிரியர் சங்கம், மாணவர் சங்கம் போன்றவை நிறுவப் பட்டன. மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 'களம்', 'அதிர்வு' போன்ற சஞ்சிகைகளும் வெளியிட ப்பட்டன. அத்துடன் ஆய்வு மாநாடுகள், சர்வதேசப் பல்கலைக்கழகங்களுடனான தொடர்புகள் மற்றும் விளை யாட்டுத்துறை எனப் பல்வேறு தளங்களில் பல்கலைக் கழகத்தின் தரம் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் காரணமாக, 1996 மார்ச் 27 அன்று கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன வினால் இப்பல்கலைக்கழகம் 'தேசியப் பல்கலைக் கழகமாக'த் தரம் உயர்த்தப்பட்டது.

முஸ்லிம்கள் மத்தியிலிருந்து உருவான முதல் உபவேந்தரான எம்.எல்.ஏ. காதரின் ஆளுமையையும் தென்கிழக்குப் பல்கலைக்கழக வளர்ச்சியில் அவரது பங்களிப்பையும் பாராட்டி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் 2003-இல் 'Seven Years of Evolution Under the Leadership of M.L.A. Cader (Vice-Chancellor)' எனும் ஆங்கில நூலொன்றை எழுதி வெளியிட்டார். அந்த நூல், பேராசிரியர் காதரின்



'தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கல்லூரி' என்ற அடையாளத்தை வலுப்படுத்திய பேராசிரியர் காதர், விரிவுரையாளர்கள், பதிவாளர், பொருளாளர், நூலகர் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் நியமனங்களை மேற்கொண்டார். அத்துடன் நூலகத்திற்கான புத்தகங்களைக் கொள்முதல் செய்தல், பாடத்திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் வளங்களைத் திரட்டுதல் என ஒரு பல்கலைக்கழகத்திற்குத் தேவையான அனைத்து அடிப்படைப் பணிகளையும் விரிவான தளத்தில் நின்று கட்டியெழுப்பினார்.

வியக்கத்தக்க சாதனைகளின் தொகுப்பாகவும், பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிப் பாதையைச் சொல்லும் ஆவணமாகவும் திகழ்கிறது.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சி மற்றும் எம்.எல்.ஏ. காதரின் ஆளுமை குறித்து நூலாசிரியர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் மூன்று முக்கிய கருத்தோட்டங்களை முன்வைக்கிறார். இப்பல்கலைக் கழகம் பல்லின மக்களுக்கும் பொதுவான ஒரு தேசிய நிறுவனமாகத் திகழ வேண்டும் என்பதோடு, அங்குப் பல்லின மாணவர்கள் பயின்றபோதிலும் முஸ்லிம் மாணவர்களின் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்துகிறார். அதேவேளை, இப்பல்கலைக்கழகம் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் வரலாற்றுச் சொத்தாகும் என்பதையும் ஒரு முக்கியமான நிலைப்பாடாக அவர் நிலைநிறுத்துகிறார். இத்தகைய கொள்கை ரீதியான அடித்தளத்துடனேயே இப்பல்கலைக் கழகம் தனது வளர்ச்சிப் பாதையைத் தொடர்ந்தது. போர்க்காலச் சூழலில் பௌதீக வளங்களைத் திரட்டுவது பெரும் சவாலாக இருந்தது. குறிப்பாக ஒலுவில் பிரதேசத்தைத் தெரிவு செய்தல் மற்றும் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் ஆகிய சவால்களை, மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அரசியல் பலத்தின் மூலம் பேராசிரியர் காதர் வெற்றிகொண்டார். பல்கலைக்கழகத்தின் இன்றைய எழில்மிகு முகப்புத் தோற்றம், முஸ்லிம் நாடொன்றின் கட்டடக்கலையைத் தழுவி அஷ்ரஃப் அவர்களால் முன்மொழியப்பட்டதாகும். மேலும், முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் அவர்களின் முயற்சியால் குவைத் அரசாங்கத்தின் உதவியும் இப்பல்கலைக்கழகத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்டது. மாணவர் போராட்டங்கள் மற்றும் பல்வேறு நிர்வாகச் சவால்களுக்கு மத்தியிலும், பேராசிரியர் காதர் கல்வித் தரத்தை விஸ்தரித்து, ஒரு தனித்துவமான தேசியப் பல்கலைக்கழகமாக இதனை நிலைநிறுத்தினார்.


தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உருவாக்கமானது வெறும் கல்விசார் தேவைக்கானது மட்டுமல்ல; அது யுத்தச் சூழலால் வடகிழக்கு பல்கலைக்கழகங்களிலிருந்து இடம்பெயர்ந்து சொல்லொணாத் துயரங்களை அனுபவித்த முஸ்லிம் மாணவர்களினதும், விரிவுரையாளர்களினதும் உரிமைக் குரலாகும். இத்தகைய வரலாற்றுப் பின்னணியில், முஸ்லிம்களின் கலாசார விழுமியங்களையும் கட்டடக்கலை மரபுகளையும் பிரதிபலிக்கும் ஒரு தேசியக் கல்வி நிறுவனமாகப் பல்கலைக்கழகத்தை மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்கள் அடையாளப்படுத்தினார்.

அவருடைய தூரநோக்குச் சிந்தனையைச் செயல்பாட்டு வடிவாக்கிய உபவேந்தர் எம்.எல்.ஏ. காதர், 1995 முதல் 2002 வரையான தனது பதவிக்காலத்தில் பல்கலைக் கழகத்தின் ஸ்தாபனக் கட்டமைப்பை உறுதிப்படுத்தினார். அவர் ஓய்வுபெறும் போது சுமார் 1160 மாணவர்கள் அங்கு பயின்றதுடன், விவசாயம், அரபு மொழி, விஞ்ஞானம் மற்றும் தொழினுட்பம் போன்ற முக்கிய பீடங்கள் நிறுவப் பட்டு, தேவையான விடுதி மற்றும் பௌதீக வளங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அன்று அவர் இட்ட வலுவான அடித்தளமே, இன்று இப்பல்கலைக்கழகம் பல்லின மாணவர்கள் பயிலும் ஒரு தேசிய மற்றும் சர்வதேசப் புகழ்மிக்க கல்வி மையமாகத் திகழக் காரணமாகும். இது ஒட்டுமொத்த கிழக்கு மாகாணத்தின் கல்வி மேம்பாட் டிற்குப் பேராசீர்வாதமாக அமைந்துள்ளது.

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் பிறப்பும் கல்விநிலையும்:

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் பொதுப்பணிகளிலும் பள்ளிப்பரிபாலன நிர்வாகத்திலும் புகழ்பெற்ற 'லெப்பை' குடும்பத்தைச் சேர்ந்த மீராலெப்பை

இப்பல்கலைக்கழகம் பல்லின மக்களுக்கும் பொதுவான ஒரு தேசிய நிறுவனமாகத் திகழ வேண்டும் என்பதோடு, அங்குப் பல்லின மாணவர்கள் பயின்றபோதிலும் முஸ்லிம் மாணவர்களின் தனித்துவமான பண்பாட்டு அடையாளங்கள் அங்கீகரிக்கப்பட்டுப் பேணப்பட வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்துகிறார். அதேவேளை, இப்பல்கலைக்கழகம் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் வரலாற்றுச் சொத்தாகும் என்பதையும் ஒரு முக்கியமான நிலைப்பாடாக அவர் நிலைநிறுத்துகிறார்.



முஹம்மது லெப்பை மற்றும் செகுதாவூத் உம்மா அப்துல் காதர் தம்பதியினருக்கு மகனாக 1943-ஆம் ஆண்டு பெப்பிரவரி 26-ஆம் திகதி இவர் பிறந்தார்.

தனது ஆரம்பக் கல்வியைப் பொத்துவில் ஆண்கள் பாடசாலையில் ஏழாம் வகுப்பு வரை (1955) கற்ற இவர், பின்னர் மேலதிகக் கல்விக்காகக் கொழும்பு மருதானை ஸாஹிரா கல்லூரியில் இணைந்தார். அங்கு 1961-இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலும், 1963-இல் க.பொ.த உயர்தரப் பரீட்சையிலும் சித்தியடைந்து பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெற்றார். இவர் ஸாஹிரா கல்லூரியில் பயின்ற காலத்தில் கலாநிதி ஏ.எம்.ஏ. அஸீஸ் அதிபராக இருந்தார். அத்துடன், கணிதப் பாடத்தில் கலாநிதி நடேசன், ஆங்கிலப் பாடத்தில் எம்.எம்.எம். மஹ்ரூப் மற்றும் தமிழ், ஆங்கிலப் பாடங்களில் பேராசிரியர் கா. சிவத்தம்பி போன்ற சிறந்த ஆளுமைகளிடம் கல்வி கற்கும்பேறு இவருக்குக் கிடைத்தது.

அவர் 1968-ஆம் ஆண்டு பேராதனை, இலங்கை பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளங்கலை (சிறப்பு) பட்டத்தைப் பெற்றார். தனது பட்டப்படிப்பை இரண்டாம் வகுப்பு உயர் பிரிவில் (Second Class Upper Division) சித்தியடைந்து நிறைவு செய்தார். அவர் பயின்ற காலத்தில் ஈ.ஓ.ஈ. பெரேரா பல்கலைக்கழகத்தின் உப வேந்தராகப் பணியாற்றினார். பேராசிரியர்களான கேர்ல் குணவர்த்தன (ஐரோப்பிய வரலாறு), அரசரட்ணம் (வரலாறு) மற்றும் ஏ.ஜே. வில்சன் (அரசறிவியல்) போன்ற புகழ்பெற்ற அறிஞர்கள் இவருக்குக் கற்பித்த பேராசிரியர்களாவர்.

அதனைத் தொடர்ந்து, 1976-ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் கான்பெராவிலுள்ள தேசியப் பல்கலைக்கழகத்தில் (Australian National University) பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் (Public Administration and Management) முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். பின்னர், 1994-ஆம் ஆண்டு சுவீடனின் உப்சாலா பல்கலைக்கழகத்தில் (Uppsala University) முரண்பாடு தீர்வு (Conflict Resolution) குறித்த முதுகலைப் பட்டப் படிப்பையும் வெற்றிகரமாக நிறைவு செய்தார்.

1972-இல், அவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஐ.எம். அப்துல் மஜீத்தின் மகளான சம்மாந்துறையைச் சேர்ந்த மு. ஹசினாவை மணந்தார். அவருக்கு சிப்லி (அமெரிக்கா), பாத்திமா சிபானா (கனடா) முஹமட் ஸாமிர் (இலங்கை) பாத்திமா ஷிஸ்னி (அவுஸ்திரேலியா) என நான்கு பிள்ளைகள். 35 ஆண்டுகளுக்கும் மேலாக தனது பணிக்களை செவ்வனே செய்வதில் செயற் திறன்மிக்கவராக விளங்கினார். இலங்கையின் கல்வி மற்றும் அறிவுசார் தளத்தில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை ஆற்றிய ஒரு புகழ்பெற்ற கல்வியாளர். தொலைநோக்குமிக்க சிறந்த நிர்வாகத் திறன் கொண்டவராகவும் விளங்கினார்.

கல்விப் பணி:

அவர் 1969-ஆம் ஆண்டு பேராதனை, இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறை உதவி விரிவுரையாளராகத் தனது கல்விப் பணியைத் தொடங்கினார். அவுஸ்திரேலியாவில் முதுகலைப் பட்டத்தைப் பெற்றுத் திரும்பிய பின், 1976-இல் அதே பல்கலைக் கழகத்தின் அரசறிவியல்துறை விரிவுரையாளராக நியமிக்கப் பட்டார்.

பேராசிரியர் காதரின் பணிக்காலத்தின் மைல்கல்லாக அமைந்தது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஸ்தாபகத் துணைவேந்தர் (1996 - 2002) பொறுப்பாகும். இக்காலப் பகுதியில் பல்கலைக்கழகத்தின் கல்விக் கட்டமைப்பு, உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகை முறைகளை ஒரு முறையான சட்டகத்திற்குள் கொண்டுவருவதில் அவர் தீர்க்க மான பங்காற்றினார். 2001-ஆம் ஆண்டு இப்பல்கலைக் கழகத்தின் முதலாவது பொதுப் பட்டமளிப்பு விழாவைத் தலைமை தாங்கி நடத்தி வைத்தமை குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும்.

கல்வித்துறைக்கு அப்பால், தேசிய மட்டத்திலும் அவர் பல்வேறு முக்கிய பொறுப்புகளை வகித்தார். குறிப்பாக, பிரதமரின் அலுவலகத்தில் முஸ்லிம் அமைதிக்கான ஆலோசனைக் குழுவின் தலைவராகவும், கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் இருந்து தேசிய ரீதியான பங்களிப்புகளை வழங்கினார். மேலும், தென்கிழக்குப் பிராந்தியத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் கலாசார அருங்காட்சியகம் ஒன்றையும், உயர் கல்வி ஆய்வுகளை விரிவுபடுத்தும் பொருட்டு ஆய்வு மையத்தையும் அவர் நிறுவினார். பல்கலைக்கழக விரிவாக்கத்திற்காக அவர் முன்னெடுத்த ஆழமான மற்றும் காத்திரமான கல்விசார் நடவடிக்கைகள் இன்றும் விதந்து போற்றத்தக்கவை.

ஆரம்பத்தில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் தற்காலிகமாக இயங்கியது. கற்றல்-கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் போதிய வளங்கள் இல்லாத சூழலிலும், அப்போதைய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபருடன் மிகச் சிறந்த நல்லிணக்கத்தைப் பேணி, பல்கலைக்கழகத்தை ஒலுவில் வளாகத்திற்கு மாற்றும் வரை பேராசிரியர் காதர் நிதானமாகவும் பக்குவமாகவும் வழிநடத்தினார்.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் தங்களது விளையாட்டு மைதானம், கேட்போர் கூடம், விடுதிகள் உள்ளிட்ட அனைத்துப் பௌதீகத் தேவைகளுக்கும் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வளங்களையே பயன்படுத்த வேண்டியிருந்தது. அதேபோன்று, ஏ.ஆர்.ஏ. அஸீஸ் அவர்கள் அதிபராகக் கடமையாற்றிய அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரியின் வளங்களும் இப்பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் துணைநின்றன. இப்பல்கலைக் கழகம் ஒரு நிலையான இடத்தைப் பெறும் வரை, இத்தகைய நிறுவனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பும் அவற்றின் அதிபர்களின் பங்களிப்பும் இன்றியமையாத காரணிகளாக அமைந்தன.

எம்.எல்.ஏ. காதர் கல்விமானாகவும் நிர்வாகியாகவும் அகலக் கால் பதித்து காத்திரமான பங்களிப்பு நல்கியவர். சிறந்த

ஆய்வாளராகவும் எழுத்தாளராகவும் சிறந்த விரிவுரையாளராகவும் நூல் பதிப்பாசிரியராகவும் திகழ்ந்தவர். இலங்கையின் பிரபல்யமான எழுத்தாளரும் ஆய்வாளருமான எம்.எம்.எம் மஹ்ரூப் அவர்கள் பல்வேறு பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் எழுதிய கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து 2015-இல் ஆங்கிலத்தில் 'Exploring Sri Lankan Muslims Selected of M.M.M. Mahroof' என்னும் மிகவும் காத்திரமான நூலை பதிப்பித்தவர். இதுபோலவே 'மர்ஹூம் டாக்டர் எம்.எஸ்.எம். மீராலெப்பை அவர்கள் எழுதிய 'சம்மாந்துறை சரித்திரம்' என்ற நூலையும் 2018-இல் பதிப்பித்தவர். 'அஷ்ரஃப் எனும் அரசியல் விவேகி' என்னும் வரலாற்று நூல் 2002-இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரசியல் ஆராய்ச்சி சங்கத்தின் வெளியீடாக வெளி வந்தது.

இலங்கை முஸ்லிம்களுடைய அரசியல், சமூக-பொருளாதாரப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி பல ஆய்வுக் கட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். அந்த வரிசையில் எழுதப்பட்ட கட்டுரைகள் தம் சமூக வேர்களைத் தேடவும் தமது சமூகத்தின் இருப்பை நிலை நாட்டவும் வழிசெய்தன. 'அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் வரலாறு குறித்த ஒரு ஆய்வு', 'இலங்கையின் சுதந்திரத்தின் 50-வது ஆண்டு விழா', 'இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தல்கள்: முஸ்லிம்களின் கண்ணோட்டம்', 'இலங்கையின் இனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் சூழலில் முஸ்லிம்களின் நிலை', 'ஏ.எம்.ஏ. அஸீஸ்', 'இலங்கையில் குடியுரிமை மற்றும் நிர்வாகப் பணிகளில் சீர்திருத்தங்கள்', 'இலங்கை அரசாங்கத்தில் அதிகாரப் பரவலாக்கம் மற்றும் அதிகாரப் பகிர்வு', 'அம்பாறை மாவட்டத்தின் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இலங்கை முஸ்லிம்களின் நிவாரணம்', 'மீள்குடியேற்றம் மற்றும் புனரமைப்பு', 'இலங்கையில் வறுமை ஒழிப்பும் முஸ்லிம்களும், இலங்கையில் அரச கைத்தொழில் நிறுவனங்கள்: அவற்றின் வளர்ச்சி மற்றும் நிர்வாகத்தின் சில அம்சங்கள்', 'இனம், மதம்', 'பன்மைத்துவம் மற்றும் உள்நாட்டு மோதல்: நான்கு நாடுகளின் ஒப்பீட்டுப் பகுப்பாய்வு', 'அம்பாறை மாவட்டத்தின் கடலோரப் பகுதி சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை ஒரு நவீன நிலையான விவசாயச் சூழல் அமைப்பின் மூலம் மேம்படுத்துதல்', முதலான பல கட்டுரைகளை இவர் எழுதி வெளியிட்டுள்ளார். கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுடைய சமூக, அரசியல், கலாசார பொருளாதார மரபுகளையும், பிரச்சினைகளையும் நற்பண்புகளையும் இனம் காட்டும் பல ஆய்வுக் கட்டுரைகளை அவர் நிறையவே எழுதி ஆரோக்கியமான எதிர்காலத்திற்கான வழி காட்டினார்.

"ஓர் உபவேந்தருக்குரிய தனித்துவமான ஆளுமை, மாணவர்களிடம் காட்டிய சமத்துவமான அன்பு, அனைவருக்குமான உதவிக்கரம் மற்றும் ஆசிரியர்-மாணவர் தேவைகளை உணர்ந்து செயலாற்றும் பரந்த மேலாண்மைத் திறன் எனப் பன்முக ஆற்றல்களைக் கொண்டவராகப் பேராசிரியர் காதர் திகழ்ந்தார்."



இவருடைய கட்டுரைகள் பேராதனை பல்கலைக்கழக வெளியீடுகளிலும், தென்கிழக்குப் பல்கலைக்கழக வெளியீடுகளிலும் மற்றும் அரச நிறுவனங்களின் வெளியீடுகளிலும் வெளி வந்தன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக இவருடைய கட்டுரைகள் அனைத்தையும் தொகுத்து ஒரு நூலாக வெளிக்கொணரப்பட வேண்டியது அவசியமாகும். இது பற்றி தென் கிழக்குப் பல்கலைக்கழகம் கட்டாயம் விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

ஓர் உபவேந்தருக்குரிய தனித்துவமான ஆளுமை, மாணவர்களிடம் காட்டிய சமத்துவமான அன்பு, அனைவருக்குமான உதவிக்கரம் மற்றும் ஆசிரியர்-மாணவர் தேவைகளை உணர்ந்து செயலாற்றும் பரந்த மேலாண்மைத் திறன் எனப் பன்முக ஆற்றல்களைக் கொண்டவராகப் பேராசிரியர் காதர் திகழ்ந்தார். அவரது 35 ஆண்டுகால நீண்ட கல்விச் சேவை பல்கலைக்கழக மாணவர் சமூகத்திற்குக் கிடைத்த ஒரு மகத்தான கொடையாகும். நேர்மை, துணிவு, ஒழுக்கம், பொறுப்புணர்வு மற்றும் தன்னடக்கம் போன்ற உயரிய பண்புகள் அவரிடம் இயல்பாகவே குடி கொண்டிருந்தன.

உண்மையில், அவர் பல்கலைக்கழக வளாகத்தில் நடந்து சென்றாலே அது தலைமைத்துவத்தின் ஆளுமை வடிவமாகவும், கல்வி நிர்வாகத்தின் அலாதியான அழகியலாகவும் பார்க்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கான ஒளிக்கீற்றாகவும், ஒரு நிலையான விருட்சமாகவும் அவரது ஆளுமை வளாகமெங்கும் பிரகாசித்தது. அவர் ஓய்வுபெற்ற பின்னரும், அவரது அந்த கம்பீரமான நடையும் நிர்வாகப் பண்பாடும் இன்றும் பலரது நினைவுகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன. இவைதான் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர் அவர்கள் விட்டுச் சென்ற அழியாத கல்விச் சேவையின் பதிவுகளாகும்.

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதர், மாணவர்களின் விமர்சனங்களை ஆக்க பூர்வமாக உள்வாங்கி, வளாகத்தில் முரண்பாடுகள் நிலவும்போது சமநிலையையும் அமைதியையும் பேணி, கற்றல் சூழலை உறுதிப்படுத்துவதில் வல்லவராகத் திகழ்ந்தார். வெற்றியை விடவும் தனது நேர்மையான முயற்சியின் மதிப்பை நிலைநிறுத்திய அவர், காலத்தால் மெருகூட்டப்பட்ட ஒழுக்கமும் மனிதநேயமும் மிக்கதொரு பாதையை அடுத்த தலைமுறைக்குக் காட்டினார்.

பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் கல்விப் பணிகளை அங்கீகரிக்கும் விதமாக, 2012-ஆம் ஆண்டு இலங்கையின் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் அவருக்குக் கௌரவ இலக்கிய முனைவர் (D.Litt) பட்டம் வழங்கி கௌரவித்தது.

அவரது அளப்பரிய வாசிப்பு அறிவும், பேராதனைப் பல்கலைக்கழக நூலகத்தை அவர் பயன்படுத்திய விதமும் இன்றைய மாணவர் சமூகத்திற்கு ஒரு சிறந்த வழிகாட்டி யாகும். அவரது வழிகாட்டலில் உருவான மாணவர் குழாம் இன்று அரசியல் விஞ்ஞானத் துறையில் பேராசிரியர் களாகவும், ஆய்வறிஞர்களாகவும் உயர் பதவிகளை வகித்து வருவது அவரது கல்விப் பணிக்குச் சான்றாகும். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரை யாளராகப் பணியாற்றிய காலம் முதல், எளிய மாணவர்கள் மீது அவர் காட்டிய அன்பும், கல்வி மேம்பாட்டிற்காக அவர் ஆற்றிய அர்ப்பணிப்பும் மகத்தானவை. சுருக்கமாகக் கூறின், பேராசிரியர் காதரின் பணிகள் தற்காலிகமானவை அல்ல; அவை பல்கலைக்கழக மாணவர் சமூகத்தின் வாழ்வியலை அர்த்தமுள்ளதாக மாற்றியமைத்த அழியாத வரலாற்றுப் பதிவுகளாகும்.

முடிவுரை:

'பல்கலைக்கழகம் என்பது என்ன?' என்ற வினாவிற்குத் தனது வாழ்நாள் பணியின் மூலம் விடை தந்தவர் பேராசிரியர் காதர். அறிவைத் தேடி வரும் மாணவர் சமூகம் சிதை வில்லாத தெளிவான அறிவைப் பெறுவதற்கும், கல்வி எனும் சிறகை விரித்து உலக அரங்கில் வான் நோக்கிப் பறப்பதற்கும் தேவையான சகல பௌதீக மற்றும் கல்வி வளங்களையும் கொண்டதொரு சர்வகலாசாலையாகத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தை அவர் வடிவமைத்தார். தனது உடல் உழைப்பையும், காலத்தையும் தியாகம் செய்து அவர் உருவாக்கிய அந்த அடித்தளமே, இன்று இப்பல் கலைக்கழகம் கலை, விஞ்ஞானம், வர்த்தக முகாமை த்துவம், பொறியியல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் எனப் பல்வேறு துறைகளில் எழுச்சி பெற்றுத் திகழக் காரணமாகும். 1995-இல் ஒரு பணிப்பாளராகப் பொறுப்பேற்று, அதனைத் தேசியப் பல்கலைக்கழகமாகத் தரம் உயர்த்தி, முஸ்லிம்கள் மத்தியிலிருந்து உருவான முதல் உபவேந்தராக அந்தப் பீடத்தில் அமர்வதற்கு அவர் மேற்கொண்ட முயற்சிகள் வரலாற்று ஆதாரங்கள் நிறைந்தவை. தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் பேராசிரியர் எம்.எல்.ஏ. காதரின் வகிபாகம் ஈடு இணையற்றது. இப்பல்கலைக் கழகத்தின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் அவரது உழைப்பு கலந்திருக்கிறது. தனது மகத்தான கல்வித் தொண்டின் மூலம், இப்பல்கலைக்கழகம் உள்ளவரை பேராசிரியர் எம் எல்.ஏ. காதரின் பெயர் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.



Iqbal.ali@thaiveedu.com

நெடுந்தீவு மக்கள் ஒன்றியம் கனடா ஆதரவுடன்...



நூல் அறிமுக விழா அழைப்பு

நெடுந்தீவு ஜெயராம்...

"இவன் உனக்காக காதலின் உச்சம்"

சமூக நீதி, கல்வி, மருத்துவம், மங்கிய இலங்கை தென் இந்திய தமிழர் மண்ணில், 1820 தொடங்கி அவரது நான்கு தலைமுறை நாற்பது பேர், 1074 வருடமணித்தியால உழைப்பின் மறைக்கப்பட்ட வரலாற்றுக் காவிய நூல்.

MAY

SATURDAY 16 2PM - 5PM

Scarborough Civic Centre, 150 Borough Drive, Scarborough, ONT M1P 4N6

உங்கள் வருகையால் இந்நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

RSVP: Jeyarajah Ramanathan : +61426 885 170



தென் நூலகீர்த்தி மீநிலங்கோ

ஃபிடல் காஸ்ட்ரோ நூற்றாண்டு

4

காஸ்ட்ரோ: எதிர்ப்பின் உலகளாவிய சின்னம்

தொடக்கக் குறிப்புகள்:

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சில அரசியல் தலைவர்களே தேசிய எல்லைகளைக் கடந்து, நீடித்த உலகளாவிய சின்னங்களாக உருவெடுத்தனர். அவர்களில், ஃபிடல் காஸ்ட்ரோ ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளார். அவர் ஒரு வெற்றிகரமான புரட்சியை வழிநடத்திய தலைவர் மட்டுமல்ல, உலகளாவிய தெற்கின் எதிர்ப்பின் ஒரு பிரதிநிதியும் ஆவார். அவரது பிம்பம், குரல், அரசியல் நிலைப்பாடு ஆகியவை ஒரு பரந்த போராட்டத்தின் உருவகமாக அமைந்தன. சக்திவாய்ந்த அரசுகளாலும் பொருளாதாரப் படிநிலைகளாலும் ஆதிக்கம் செலுத்தப்படும் ஒரு உலக ஒழுங்கிற்கு எதிராக, சிறிய நாடுகள் தங்கள் கண்ணியத்தையும் இறையாண்மையையும் நிலைநாட்டும் போராட்டம் அது.

காஸ்ட்ரோவை ஒரு சின்னமாகப் புரிந்துகொள்வது என்பது அவரை ஒரு பிம்பமாகவோ அல்லது கட்டுக்கதையாகவோ சுருக்குவதல்ல. மாறாக, அரசியல் செயல்பாடு, கருத்தியல் வெளிப்பாடு, வரலாற்றுச் சூழல் ஆகியவை எவ்வாறு இணைந்து ஒரு குறியீட்டு சக்தியை உருவாக்கின என்பதை ஆராய்வதாகும். காஸ்ட்ரோவின் முக்கியத்துவம், அவர் கியூபாவிற்குள் செய்த வற்றில் மட்டுமல்ல, காலனித்துவ வரலாறு, சமமற்ற வளர்ச்சி, புவிசார் அரசியல் ஓரங்கட்டப்படுதல் ஆகியவற்றால் குறிக்கப் பட்ட கண்டங்கள் முழுவதும் அவரது செயல்கள் எவ்வாறு எதிரொலித்தன என்பதிலும் அடங்கியுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதி ஓர் ஆழமான மாற்றத்தின் காலகட்டமாக இருந்தது. ஆசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு முழுவதும், காலனித்துவப் பேரரசுகள் சரிந்து கொண்டிருந்தன. கெடுபிடிப்போரின் அழுத்தங்களைச் சமாளித்து, புதிதாகச் சுதந்திரம் பெற்ற நாடுகள் உருவாகின. இலத்தீன் அமெரிக்காவில், நீண்டகால ஏற்றத்தாழ்வுகளும் அமெரிக்காவின் செல்வாக்கும் அரசியல் அமைதியின்மையும் புரட்சிகர ஆர்வத்தின் அலைகளை உருவாக்கின. இந்தச் சூழலில்தான் 1959-இல் கியூபப் புரட்சி வெடித்தது. அது உலக அரசியலுக்கு மின்சாரம் பாய்ச்சிய ஒரு தருணம்.

தெற்கு உலகில் உள்ள பலருக்கு, காஸ்ட்ரோ முன்னெப்போதும் இல்லாத ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்:

- அமெரிக்க ஆதரவு பெற்ற ஆட்சியை வெற்றிகரமாக வீழ்த்திய ஒரு தலைவர்
- ஆதிக்க சக்தி அணிகளுடன் கூட்டணி அமைக்க மறுத்த ஒரு அரசாங்கம்
- சமூக நீதியில் வேரூன்றிய இறையாண்மைக்கான ஒரு தொலைநோக்குப் பார்வையை வெளிப்படுத்திய ஓர் அரசு

இந்தச் சூழலில், காஸ்ட்ரோவின் எதிர்ப்பு, கியூபாவின் புவியியல் மற்றும் பொருளாதார அளவைத் தாண்டிய ஒரு குறியீட்டு முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. தாடியுடன், ஆலிவ்-பச்சை நிற இராணுவ சீருடையில், குறிப்புகள் ஏதுமின்றி மணிக்கணக்கில் பேசும் அவரது தோற்றம் உடனடியாக அடையாளம் காணக்கூடியதாக மாறியது. ஆனால், குறியீடுகள் மட்டுமே அவரது செல்வாக்கை விளக்கவில்லை. காஸ்ட்ரோவை ஒரு சின்னமாக மாற்றியது அவரது சொல்லாட்சிக்கும் செயல்களுக்கும் இடையிலான



ஒத்திசைவுதான். அவர் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் பேசுவ தோடு நின்றுவிடவில்லை. விடுதலை இயக்கங்களையும் ஆத ரித்தார். அவர் உலகளாவிய சமத்துவமின்மையை விமர்சிப்பதோடு நிற்கவில்லை. மாற்று நிறுவனங்களையும் அவர்களுக்கிடையிலான ஒற்றுமைகளையும் உருவாக்க முயன்றார்.

பேச்சும் செயலும் இணைந்த இந்தக் கலவையானது, ஆதிக்க அணிகளுக்கு வெளியே உள்ள நாடுகளுக்கு ஒரு கூட்டு அடையா ளத்தையும் செயற்றிட்டத்தையும் வெளிப்படுத்த முயன்ற ஒரு அரசியல், அறிவுசார் இயக்கமான, 'மூன்றாம் உலகவாதம்' என்று அறியப்பட்டதில் காஸ்ட்ரோவை ஒரு மைய மனிதராக நிலைநிறுத் தியது. இந்த அடையாளத்தின் மையமாக இருந்த எதிர்ப்பு என்ற கருத்து, காலனித்துவ ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பு மட்டுமல்ல, பொருளாதாரச் சார்புநிலை, கலாசார ஆதிக்கம், புவிசார் அரசியல் அடிமைத்தனம் ஆகியவற்றுக்கு எதிரான எதிர்ப்பு. காஸ்ட்ரோவின் கியூபா இந்த எதிர்ப்பின் மிகவும் வெளிப்படையான வெளிப்பாடு களில் ஒன்றாக மாறியது. அது ஹவானாவை புரட்சிகர இராஜதந்தி ரத்தினதும் கருத்தியல் பரிமாற்றத்தினதும் மையமாக உருமாற்றியது.

இந்தக் கட்டுரை, காஸ்ட்ரோ எவ்வாறு மூன்றாம் உலக நாடுகளின் எதிர்ப்பின் சின்னமாக ஆனார் என்பதையும், அந்தச் சின்னம் ஏன் தொடர்ந்து முக்கியத்துவம் பெறுகிறது என்பதையும் ஆராய்கிறது. அணிசேரா இயக்கத்தில் அவரது தலைமை, உலகளாவிய தெற்கு நாடுகளின் செயற்பாட்டிற்கான ஓர் அரசியல் மையமாக ஹவானாவை வடிவமைப்பதில் அவரது பங்கு, விடுதலைப் போராட்டங்க ளுக்கான அவரது ஆதரவு, ஆபிரிக்காவில் அவர் மேற்கொண்ட தீர்க்கமான தலையீடுகள் ஆகியவற்றை இது ஆராய்கிறது. நிறைவாக, காஸ்ட்ரோவின் உலகளாவிய அடையாளத்தைக் கட்ட மைப்பதில் பேச்சு, படிமம், அரசியல் செயற்பாடு ஆகியவற்றின் பங்கை இது கருத்தில் கொள்கிறது. காஸ்ட்ரோவைப் பொறுத் தவரை, சொற்கள் செயலுக்கு இரண்டாம் பட்சமானவை அல்ல. அவை செயலின் ஒருங்கிணைந்த பகுதியாக இருந்தன. அவரது உரைகள் பெரும்பாலும் நீளமானவை, விரிவானவை, விமர்சனத் தன்மை கொண்டவை, இலட்சக்கணக்கான மக்களிடம் எதிரொ லித்த ஒரு மேலாதிக்க எதிர்ப்பு உலகக் கண்ணோட்டத்தை வெளிப் படுத்துவதற்கான வாகனங்களாக இவை செயற்பட்டன. ஆகவே, காஸ்ட்ரோவின் குறியீட்டு சக்தியைப் புரிந்துகொள்வது என்பது, உலக அரசியலில் கருத்துகள், செயல், பிரதிநிதித்துவம் ஆகியவற் றுக்கு இடையேயான உறவைப் புரிந்துகொள்வதாகும். ஒரு சிறிய கரீபியன் தீவைச் சேர்ந்த தலைவர், ஒடுக்கப்பட்டவர்களின் அரசியல் கற்பனையில் எவ்வாறு ஒரு மைய இடத்தைப் பிடித்தார் என்பதையும், பல பத்தாண்டுகளுக்குப் பிறகும் அந்தப் பிம்பம் ஏன் நிலைத்திருக்கிறது என்பதையும் காண்பதாகும்.

அணிசேராமையும் மூன்றாம் உலகவாதத்தின் தலைநகராக ஹவானாவும்:

இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அணிசேரா இயக்கத்தின் (Non Alliend Movement) எழுச்சியானது உலக அரசியலில் ஒரு அடிப்படை மாற்றத்தைப் பிரதிபலித்தது. காலனி ஆதிக்கத்திலி ருந்து புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் உருவானபோது, அவை ஒரு கடுமையான தேர்வை எதிர்கொண்டன: அமெரிக்கா மற்றும் சோவியத் யூனியன் தலைமையிலான கெடுபிடிப்போரின் இரண்டு கூட்டணிகளில் ஒன்றில் அணிசேர்வதா ? அல்லது ஒரு சுதந்திரமான பாதையை வகுக்க முயற்சிப்பதா ? என்பதே அது.



ஜவஹர்லால் நேரு, கமால் அப்துல் நாசர், ஜோசிப் ப்ரோஸ் டிட்டோ போன்ற தலைவர்கள் அணிசேராமையின் ஆரம்பகால சிற்பிகளில் அடங் குவர். இறையாண்மை, காலனித்துவ எதிர்ப்பு, அமைதியான சகவாழ்வு ஆகியவற்றில் உறுதி யுடன், வல்லரசுப் போட்டியின் அழுத்தங்களை எதிர்க்கும் நாடுகளின் கூட்டணியை அவர்கள் கற்பனை செய்தனர். இருப்பினும், கியூபா இந்த இயக்கத்தில் இணைந்த நேரத்தில், அணி சேராமை ஏற்கனவே பரிணமித்துக்கொண்டிருந்தது. கியூபாவின் இணைவு, வெறுமனே அணிசேர் வதைத் தவிர்ப்பது பற்றியதாக இருக்கவில்லை. அது பெருகிய முறையில் உலகளாவிய சமத்துவ மின்மைக்கு சவால் விடுப்பது மற்றும் கூட்டு சக்தியை நிலைநாட்டுவது பற்றியதாக இருந்தது.

காஸ்ட்ரோ அணிசேரா இயக்கத்திற்கு ஒரு தனித் துவமான விளக்கத்தைக் கொண்டு வந்தார். அவர் முறையாக அணிசேராமையை ஏற்றுக்கொண்டாலும், அவரது புரிதல் பல தலைவர்களின் புரிதலை விட மிகவும் தீவிரமானதாக இருந்தது. காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, அநீதிக்கு எதிராக நடுநிலை வகிப்பது சாத்தியமானதும் அல்ல, விரும்பத்தக் கதும் அல்ல. அவரது பார்வையில், அணி சேராமை என்பது வல்லரசுகளுக்கு இடையே சமதூரம் என்று பொருளல்ல. அது ஒடுக்கப்பட்ட வர்களுடன் அணிசேர்வதாகும். இந்த விளக்கம் இயக்கத்தை மிகவும் வெளிப்படையான ஏகாதி பத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை நோக்கித் தள்ளியது. 1979-இல் ஹவானாவில் நடந்த அணி சேரா இயக்க உச்சிமாநாட்டில், காஸ்ட்ரோ இந்த நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார்: 'அணிசேராமை என்பது செயலற்ற தன்மையல்ல. அது ஏகாதிபத்தியம், காலனித்துவம் உட்பட்ட அனைத்து வகையான ஆதிக்கங்களுக்கும் எதிரான ஒரு தீவிரமான போராட்டத்தைக் குறிக்கிறது.'

இந்த மறுவரையறை, இயக்கத்தின் முக்கியத்து வத்தை ராஜதந்திர சமநிலையிலிருந்து அரசியல் ஈடுபாட்டிற்கு மாற்றியது. 1979-இல் ஹவானாவில் நடைபெற்ற அணிசேரா இயக்கத்தின் ஆறாவது உச்சிமாநாடு, அந்த அமைப்பிற்குள் கியூபாவின் செல்வாக்கின் உச்சகட்டத்தைக் குறித்தது. 90-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள் ஹவானாவில் கூடி, அந்நகரத்தை உலகளாவிய தெற்கு அரசியலின் ஒரு மையப் புள்ளியாக மாற்றினர். புரவலராகவும் தலைவராகவும் இருந்த காஸ்ட்ரோ, தனது தொடர் உரைகளில் நான்கு விடயங்களை முன்னிலைப்படுத்தினார்.

- வடக்கு-தெற்கிற்கு இடையிலான பொருளா தார ஏற்றத்தாழ்வு.
- காலனித்துவ சுரண்டலின் மரபு.
- ஒரு புதிய சர்வதேச பொருளாதார ஒழுங்கின் தேவை.
- வளரும் நாடுகளிடையே ஒற்றுமை.

அவரது மிகவும் பரவலாக மேற்கோள் காட்டப்பட்ட கருத்துகளில் ஒன்றில், அவர் இவ்வாறு அறிவி த்தார்: 'உலகின் செல்வம் ஒரு சில கைகளில் குவிந்துள்ளது, அதே நேரத்தில் மனிதகுலத்தின் பெரும்பான்மை வறுமையில் வாழ்கிறது. இது ஒரு தற்செயல் நிகழ்வு அல்ல - இது ஒரு அமைப்பின் விளைவு.'

இந்த உச்சிமாநாடு இராஜதந்திர ஒருங்கி ணைப்பை விட மேலான ஒன்றைக் குறித்தது. இது மூன்றாம் உலக நாடுகளின் ஒற்றுமையை நிறுவன மயமாக்குவதற்கும், உலகளாவிய முதலாளித்து வத்தின் மீதான ஒரு கூட்டு விமர்சனத்தை வெளிப் படுத்துவதற்குமான ஒரு முயற்சியைக் குறித்தது. 1960-கள் மற்றும் 1970-களில், ஹவானா புரட்சிகர இயக்கங்கள், அறிவுசார் பரிமாற்றம், அரசியல் ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கான மையமாக மாறியது. இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா முழுவதிலுமிருந்து வந்த ஆர்வலர்கள், கெரில்லாத் தலைவர்கள், அரசியல் அகதிகள் இந்த நகரத்தின் வழியாகச் சென்று, ஒற்றுமை வலைப்பின்னல்களை உருவாக்கினர்.

கியூபா, மூன்றாம் உலகவாதத்தின் மையமாகத் தனது நிலையை வலுப்படுத்தும் மாநாடுகள், பயிற்சித் திட்டங்கள், கலாசாரப் பரிமாற்றங்களை நடத்தியது. சிலி, நிகரகுவா, அங்கோலா, பாலஸ் தீனம் போன்ற நாடுகளில் உள்ள விடுதலை இயக் கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப் புகள் கியூபாவின் நிறுவனங்களுடன் தொடர்பு களைப் பேணி வந்தன. காஸ்ட்ரோவின் அர சாங்கம் இந்தப் பங்கைத் தீவிரமாக வளர்த்தெ டுத்தது. ஹவானா வெறும் தலைநகரமாக மட்டும் இருக்கவில்லை. அது எதிர்ப்பின் ஒரு குறியீட்டு வெளியாக இருந்தது. அங்கு உலக ஒழுங்கின் மாற்றுப் பார்வைகள் விவாதிக்கப்பட்டு முன்னெ டுக்கப்பட்டன.

அணிசேராக் கொள்கை குறித்த காஸ்ட்ரோவின் தீவிரமான விளக்கம் உலகளவில் ஏற்றுக்கொள் ளப்படவில்லை. சில உறுப்பு நாடுகள் மோத லைத் தவிர்த்து, நடுநிலைமை மற்றும் இராஜ தந்திர சமநிலையை வலியுறுத்தும் ஒரு மிதமான அணுகுமுறையை விரும்பின. இந்தப் பதற்றங்கள் ஹவானா உச்சிமாநாட்டின் போது குறிப்பாக வெளிப்பட்டன, அங்கு இயக்கத்தின் திசை குறித்துக் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. சோவியத் ஒன்றியத்துடனான கியூபாவின் நெருங்கிய உறவு, அணிசேராமைக்கான அதன் கூற்றைப் பல வீனப்படுத்துவதாக விமர்சகர்கள் வாதிட்டனர். அணிசேராமை என்பது முறையான நடுநிலை மையால் அல்ல, மாறாக ஏகாதிபத்தியத்திற்கு எதிரான நிலைப்பாட்டால் வரையறுக்கப்பட வேண்டும் என்று காஸ்ட்ரோ வலியுறுத்தினார்: 'நீதிக்கும் அநீதிக்கும் இடையில் நாங்கள் நடுநிலை வகிப்பதில்லை.'

இந்த நிலைப்பாடு, இயக்கத்திற்குள் இருந்த கருத்தியல் பன்முகத்தன்மையையும், வெவ்வேறு அரசியல் அமைப்புகள் மற்றும் மூலோபாய நலன்களைக் கொண்ட நாடுகளிடையே ஒற்றுமையைப் பேணுவதில் உள்ள சவால்களையும் எடுத்துக்காட்டியது. இந்தப் பதட்டங்கள் இருந்த போதிலும், ஹவானா உச்சிமாநாடு உலக அரசியலில் ஒரு நீடித்த முத்திரையைப் பதித்தது. அது வளரும் நாடுகளிடையே கூட்டு நடவடிக்கைக்கான சாத்தியக்கூறுகளை வெளிப்படுத்தியதுடன், சர்வதேச முடிவெடுக்கும் செயற்பாடுகளில் பெரும்பாலும் ஓரங்கட்டப்படும் நாடுகளின் குரல்களையும் வலுப்படுத்தியது.

காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, இந்த உச்சி மாநாடு ஒரு பரந்த திட்டத்தின் உச்சகட்டமாக அமைந்தது: கியூபாவை ஒரு சிறிய கரீபியன் நாட்டிலிருந்து, உலகளாவிய தெற்கு அரசியலில் மையப் பங்குதாரராக மாற்றுவதே அத்திட்டமாகும். மூன்றாம் உலகவாதத்தின் மையமாக ஹவானா ஆற்றிய பங்கு, ஒரு சர்வதேச ஆளுமையாக காஸ்ட்ரோவின் அந்தஸ்தை வலுப்படுத்தியது. இங்குதான் அவரது கருத்துகள், கொள்கைகள், குறியீடுகள் ஒன்றிணைந்து, கியூபாவைத் தாண்டியும் எதிரொலித்த ஒரு சக்திவாய்ந்த எதிர்ப்புப் பிம்பத்தை உருவாக்கின.

நடைமுறையில் சர்வதேசவாதம்: மூன்றாமுலக விடுதலைப் போராட்டங்கள்:

ஃபிடல் காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, சர்வதேசவாதம் என்பது ஒரு அருவமான தார்மீக நிலைப்பாடோ அல்லது சொல்லாட்சிக் கடமையோ அல்ல. அது புரட்சியின் ஒரு நடைமுறை நீட்சியாகும். ஏகாதிபத்தியமும் சுரண்டலும் உலகளாவிய அளவில் இருந்தன என்றால், எதிர்ப்பும் தேசிய எல்லைகளைக் கடக்க வேண்டியிருந்தது. இந்த அர்த்தத்தில், கியூபப் புரட்சி அந்தத் தீவுக்குள் மட்டும் முடங்கிவிட முடியாது. அது, உலகளாவிய தெற்குப் பகுதி முழுவதும் ஆதிக்கக் கட்டமைப்புகளைத் தகர்ப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பரந்த வரலாற்று இயக்கத்தில் பங்கேற்க வேண்டியிருந்தது. 1966-இல் ஹவானாவில் நடந்த முக்கண்ட மாநாட்டில் ஆற்றிய உரையில் காஸ்ட்ரோ இந்த நிலைப்பாட்டைத் தெளிவாக எடுத்துரைத்தார்: 'ஒவ்வொரு புரட்சியாளரின் கடமையும் புரட்சியை உருவாக்குவதே. ஒவ்வொரு புரட்சிகர தேசத்தின் கடமையும் மற்றவர்கள் அதை உருவாக்க உதவுவதே.'

இந்தக் கூற்று காஸ்ட்ரோவின் அரசியல் சிந்தனையின் ஒரு விமர்சனப் பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. சர்வதேசவாதம் என்பது தர்மமாக அல்ல, மாறாக ஒரு கடமையாக - காலனித்துவம், சார்புநிலை, போராட்டம் ஆகியவற்றின் பகிரப்பட்ட அனுபவங்களில் வேரூன்றிய ஒரு தார்மீக மற்றும் வரலாற்றுப் பொறுப்பாக - வடிவமைக்கப்பட்டது. கியூபாவின் சொந்தப் புரட்சி, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்களின் ஒரு பெரிய அலையின் பகுதியாகப் புரிந்துகொள்ளப்பட்டது, மேலும் அதன் வாழ்வு மற்றவர்களின் வெற்றியுடன் இணைக்கப்பட்டிருந்தது. இந்தக் காரணமே இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் கியூபாவின் ஈடுபாட்டிற்கு உந்துதலாக இருந்தது. அங்கு அது, காலனித்துவ அல்லது சர்வாதிகார ஆட்சிகளை வீழ்த்த முயன்ற இயக்கங்களுக்கு இராணுவப் பயிற்சி, அரசியல் வழிகாட்டுதல், இராஜதந்திர ஆதரவு, மனிதாபிமான உதவி போன்ற பல்வேறு வகையான ஆதரவை வழங்கியது.

இலத்தீன் அமெரிக்காவில், கியூபாவின் சர்வதேசவாதம் ஆரம்பத்தில், அப்பகுதி முழுவதும் புரட்சிக்கான சூழல்கள் கனிந்திருந்தன என்ற நம்பிக்கையால் உந்தப்பட்டது. கியூபப் புரட்சியின் வெற்றி, அமெரிக்காவால் ஆதரிக்கப்படும் வேரூன்றிய ஆட்சிகளை ஆயுதப் போராட்டத்தால் வீழ்த்த முடியும் என்று உணர்த்தியது. கியூபா புரட்சிகரப் பயிற்சிக்கான ஒரு மையமாக மாறியது. பொலிவியா, குவாத்தமாலா, வெனிசுலா மற்றும் நிகரகுவா போன்ற நாடுகளைச் சேர்ந்த கெரில்லாப் போராளிகள் கியூப முகாம்கள் வழியாகச் சென்று, இராணுவ, சித்தாந்தப் பயிற்சிகளைப் பெற்றனர்.

இந்த முயற்சியின் மிகவும் அடையாளபூர்வமான உதாரணம், 1966 - 1967-இல் சே குவேரா தலைமையிலான பொலிவியப் புரட்சிகர முனைப்பாகும். பொலிவியாவில் ஒரு கொரில்லா மையத்தை நிறுவுவதன் மூலம் ஒரு கண்டப் புரட்சியைத் தூண்ட குவேரா முயன்றார். கியூபாவின் ஆரம்ப ஆதரவு இருந்தபோதிலும், அந்தப் படையெடுப்பு இறுதியில் தோல்வியடைந்தது, அதன் உச்சகட்டமாக 1967-இல் குவேரா கைது செய்யப்பட்டு தூக்கிலிடப்பட்டார். இந்த நிகழ்வைப் பற்றிப் பின்னர் சிந்தித்துப் பார்த்த காஸ்ட்ரோ, அதன் இலட்சியத்தையும் வரம்புகளையும் ஒப்புக்கொண்டார். 1968-ஆம் ஆண்டு ஆற்றிய ஓர் உரையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்: 'புரட்சியை இயந்திரத்தனமாக ஏற்றுமதி செய்ய முடியாது. ஒவ்வொரு மக்களும் தமக்கான பாதையைத் தாமே கண்டறிய வேண்டும்.'

இது இலத்தீன் அமெரிக்காவுடனான கியூபாவின் அணுகுமுறையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. புரட்சிகர இயக்கங்களுக்கான ஆதரவு தொடர்ந்தபோதிலும், அது மேலும் எச்சரிக்கையுடன் உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப



மாற்றியமைக்கப்பட்டது. இதைவிட வெற்றிக ரமான ஓர் உதாரணம் நிகரகுவாவில் உருவானது; அங்கு 1979-இல் சாண்டினிஸ்டா தேசிய விடுதலை முன்னணி (FSLN) சோமோசா சர்வாதி காரத்தை வீழ்த்தியது. கியூபா பயிற்சி, ஆயுத உதவி, மற்றும் புரட்சிக்குப் பிந்தைய கல்வி, சுகாதார உதவிகளை வழங்கியது. முந்தைய முயற்சிகளைப் போலல்லாமல், நிகரகுவா புரட்சி யானது, வலுவான உள்நாட்டு இயக்கங்களுடன் இணையும்போது கியூபாவின் சர்வதேசவாதம் நீடித்த அரசியல் மாற்றத்திற்குப் பங்களிக்க முடியும் என்பதை நிரூபித்தது.

கியூபாவின் மிக முக்கியமான மற்றும் நீடித்த சர்வதேச ஈடுபாடுகள் ஆபிரிக்காவில் நடை பெற்றன. அங்கு, காலனித்துவ எதிர்ப்புப் போராட் டங்களும் கெடுபிடிப்போர் காலப் போட்டிகளும் சிக்கலான வழிகளில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருந்தன. காஸ்ட்ரோவைப் பொறுத் தவரை, ஆபிரிக்கா ஒரு தார்மீக, வரலாற்றுத் தேவையாக விளங்கியது. கியூபாவின் சொந்த மக்களில் அடிமைப்படுத்தப்பட்ட ஆபிரிக்கர் களின் வழித்தோன்றல்களும் இருந்தனர். மேலும், காஸ்ட்ரோ இந்தத் தொடர்பை ஒற்றுமைக்கான ஒரு அடிப்படையாக அடிக்கடி வலியுறுத்தினார்.

1975-ஆம் ஆண்டு ஆற்றிய ஓர் உரையில், அவர் இவ்வாறு அறிவித்தார்: 'நாங்கள் ஒரு இலத்தீன் ஆபிரிக்க மக்கள். எங்கள் இரத்தம் எங்களை ஆபிரிக்காவுடன் பிணைக்கிறது, மேலும் அதன் போராட்டங்களுடன் துணை நிற்க எங்கள் வரலாறு எங்களைக் கடமைப்படுத்துகிறது.' இந்த வரலாற்றுத் தொடர்பு உணர்வே, கினியா-பிசாவ், மொசாம்பிக், அங்கோலா போன்ற நாடுகளில் உள்ள விடுதலை இயக்கங்களுக்குக் கியூபா அளித்த ஆதரவிற்கு அடிப்படையாக அமைந்தது. கினியா-பிசாவில், அமில்கார் கப்ரால் தலைமை யிலான சுதந்திர இயக்கத்திற்கு கியூபா மருத்துவ உதவியையும் தொழினுட்ப ஆதரவையும் வழங் கியது. கப்ரால் அவர்களே கியூபாவின் ஒற்று மையைப் பாராட்டினார். அது வெளிப்புறத் திணிப்பைக் காட்டிலும், பகிரப்பட்ட போராட் டத்தில் வேரூன்றியிருந்தது என்றும் குறிப்பிட்டார்.

இருப்பினும், அங்கோலாவில்தான் கியூபாவின் சர் வதேசவாதம் அதன் மிக வியத்தகு வெளிப் பாட்டை எட்டியது. 1975-இல் அங்கோலா சுதந் திரம் பெற்றதைத் தொடர்ந்து, அந்நாடு தென்னா பிரிக்கப் படைகள், அமெரிக்க ஆதரவுப் பிரிவுகள் மற்றும் சோவியத் ஆதரவுக் குழுக்கள் சம்பந்தப்பட்ட ஒரு போர்க்களமாக மாறியது. கியூபா தீர்க்கமாகத் தலையிட்டு, பல்லாயிரக்க ணக்கான துருப்புகளுடன் மருத்துவப் பணியாளர் களையும் ஆலோசகர்களையும் அனுப்பியது. இந்தத் தலையீடு ஆபத்துகளற்றதாக இருக்க வில்லை. குறைந்த வளங்களைக் கொண்ட ஒரு சிறிய நாடான கியூபா, உலகளாவிய தாக்கங் களைக் கொண்ட ஒரு தொலைதூர மோதலில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டது. காஸ்ட்ரோ இந்த முடிவை வெளிப்படையான ஏகாதிபத்திய எதிர்ப்பு வார்த்தைகளில் நியாயப்படுத்தினார்: 'நாம் செயற்படாமல் இருந்திருந்தால், நிறவெறி தெற்கு ஆபிரிக்கா முழுவதும் தனது ஆதிக் கத்தை விரிவுபடுத்தியிருக்கும்.' அங்கோலாவில் கியூபாவின் பங்கு, பிற்காலத்தில் பிராந்திய அதிகார சமநிலையில் ஒரு திருப்புமுனையாக அங்கீகரிக்கப்பட்டது. இது நமீபியாவின் இறுதிச் சுதந்திரத்திற்கும் நிறவெறி தென்னாபிரிக்காவின் பலவீனத்திற்கும் பங்களித்தது.

ஆசியாவில், புவிசார் அரசியல் யதார்த்தங்கள் மற்றும் வலுவான புரட்சிகர இயக்கங்களின் இருப்பு ஆகியவற்றால் வடிவமைக்கப்பட்ட கியூபாவின் சர்வதேசவாதம் ஒரு மாறுபட்ட வடிவத்தை எடுத்தது. கியூபா, வியட்நாம், லாவோஸ், கம்போடியா போன்ற நாடுகளுடன் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி, அரசியல் ஆதரவையும் ராஜதந்திர ஒற்றுமையையும் வழங் கியது. 1973-இல் காஸ்ட்ரோ வியட்நாமிற்கு மேற்கொண்ட பயணம், அவரது சர்வதேசவா தத்தின் மிகவும் சக்திவாய்ந்த அடையாளச் செயல்களில் ஒன்றாக இன்றும் விளங்குகிறது. அந்நாடு போரில் சிக்கியிருந்த ஒரு காலகட் டத்தில், காஸ்ட்ரோ போர்க்களத்திற்குப் பயணம் செய்து, அமெரிக்கத் தலையீட்டிற்கு எதிரான வியட்நாமியப் போராட்டத்திற்குத் தனது ஒற்றுமையை வெளிப்படுத்தினார். இந்தப் பய ணத்தின் போது, அவர் புகழ்பெற்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார்: 'வியட்நாமுக்காக, கியூபா தனது சொந்த இரத்தத்தைக் கூட கொடுக்கத் தயாராக உள்ளது.'

இந்தக் கூற்று கியூபாவின் சர்வதேசவாதத்தின் நெறிமுறையை உள்ளடக்கியது: ஒற்றுமை என்பது ஒரு கருத்தியல் அல்ல, மாறாக தியா கத்தைப் பகிர்ந்து கொள்ளும் விருப்பம். மேலும் கியூபா, மத்திய கிழக்கிலும் தெற்காசியாவிலும் உள்ள இயக்கங்கள் மற்றும் அரசாங்கங்களுடன் உறவுகளைப் பேணி, சர்வதேச மன்றங்களில் காலனித்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாடுகளுக்காக வாதிட்டது. ஆபிரிக் காவில் நடந்த ஆயுதப் போராட்டங்களுடன் ஒப்பி டுகையில், ஆசியாவில் அதன் நேரடி ஈடுபாடு குறைவாக இருந்தபோதிலும், அதன் இராஜ தந்திர மற்றும் கருத்தியல் ஆதரவு, பரந்த உலக ளாவிய எதிர்ப்பு வலையமைப்புகளுக்குப் பங்க ளித்தது. கியூபாவின் சர்வதேசவாதப் பார்வையின் உச்சகட்டத்தை, 1966-இல் ஹவானாவில் நடை பெற்ற முக்கண்ட மாநாட்டில் காணலாம். இந்தக் கூட்டம், கண்டங்கள் முழுவதும் ஏகாதிபத்திய

எதிர்ப்புப் போராட்டங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில், ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் பிரதிநிதிகளை ஒன்றிணைத்தது.

இந்த மாநாடு, பிராந்திய எல்லைகளைக் கடந்து, ஓர் உலகளாவிய தெற்கு அரசியல் அடையாளத்தின் எழுச்சியை அடையாளப்படுத்தியது. கியூபா தன்னை இந்தப் பிராந்தியங்களுக்கு இடையேயான ஒரு பாலமாக நிலைநிறுத்தி, உரையாடல் மற்றும் ஒத்துழைப்பை எளிதாக்கியது. காஸ்ட்ரோவின் தொடக்க உரை ஒற்றுமையை வலியுறுத்தியது: 'ஆசியா, ஆபிரிக்கா மற்றும் லத்தீன் அமெரிக்க மக்கள் சுரண்டலின் கடந்த காலத்தை மட்டுமல்ல, போராட்டத்தின் எதிர்காலத்தையும் பகிர்ந்து கொள்கிறார்கள்.' இந்த முக்கண்டக் கட்டமைப்பு, தனித்த தேசிய இயக்கங்களிலிருந்து ஏகாதிபத்தியத்தை எதிர்க்கும் ஓர் ஒருங்கிணைந்த உலகளாவிய முயற்சிக்கு மாறியதைப் பிரதிபலித்தது.

கியூபாவின் சர்வதேசவாத முயற்சிகளின் பரந்த தாக்கம் மறுக்க முடியாதது. ஒற்றுமை, சித்தாந்தம், அர்ப்பணிப்பு ஆகியவற்றின் மூலம் ஒரு சிறிய நாடு குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்த முடியும் என்பதை கியூபா நிரூபித்தது. அது வளரும் நாடுகளுக்கான சர்வதேச ஈடுபாட்டின் சாத்தியக்கூறுகளை மறுவடிவமைத்ததுடன், உள்நாட்டுப் புரட்சியை உலகளாவிய போராட்டத்துடன் இணைப்பதற்கான ஒரு முன்மாதிரியையும் வழங்கியது. உலகளாவிய நீதி, தெற்கு-தெற்கு ஒத்துழைப்பு, மற்றும் சர்வதேச ஒழுங்கை வடிவமைப்பதில் சிறிய நாடுகளின் பங்கு ஆகியவை குறித்த சமகால விவாதங்களில் காஸ்ட்ரோவின் சர்வதேசவாதம் பற்றிய பார்வை தொடர்ந்து எதிரொலிக்கிறது.


கியூபாவின் தீர்க்கமான தருணம்: அங்கோலா, நமீபியா, இனவெறியின் தோல்வி:

கியூபாவின் சர்வதேசவாதத்தின் மிக முக்கியமான சோதனையும், ஃபிடல் காஸ்ட்ரோவை மூன்றாம் உலக நாடுகளின் எதிர்ப்பில் ஒரு மைய நபராக நிலைநிறுத்திய தருணமும், 1970-களின் நடுப்பகுதியில் தெற்கு ஆபிரிக்காவில் அரங்கேறியது. 1975-இல் அங்கோலாவின் காலனித்துவ நீக்கம், சுதந்திரத்திற்கான ஒரு நிலையான மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. மாறாக, அது உள்நாட்டுப் போட்டிகளாலும் வெளித் தலையீடுகளாலும் வடிவமைக்கப்பட்ட ஒரு சிக்கலான, வன்முறைப் போராட்டத்தைத் தூண்டியது. போர்த்துகீசிய காலனித்துவ ஆட்சி வீழ்ச்சியடைந்தபோது, மூன்று முக்கிய இயக்கங்கள் அதிகாரத்திற்காகப் போட்டியிட்டன: MPLA (அங்கோலாவின் விடுதலைக்கான மக்கள் இயக்கம்), UNITA, மற்றும் FNLA. சோசலிசச் சார்புகளையும் வலுவான நகர்ப்புற ஆதரவையும் கொண்டிருந்த MPLA, நவம்பர் 1975-இல் சுதந்திரத்தை அறிவித்தது. ஏறக்குறைய உடனடியாக, அங்கோலா கெடுபிடிப் போரிலும் இனவெறி தென்னாபிரிக்காவிற்கு எதிரான பிராந்திய மோதலிலும் ஒரு போர்க்களமாக மாறியது.

காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, அங்கோலா ஒரு புவிசார் அரசியல் நெருக்கடியை விட மேலான ஒன்றைக் குறித்தது. அது ஒரு தார்மீக, வரலாற்றுத் திருப்புமுனையாக இருந்தது. MPLA-க்கு எதிரான படைகளுக்கு ஆதரவளிக்க எல்லையைக் கடந்து படைகளை அனுப்பிய நிறவெறி தென்னாபிரிக்காவின் தலையீடு, அந்த மோதலை இன ஆதிக்கம் மற்றும் பிராந்திய மேலாதிக்கத்திற்கு எதிரான ஒரு பரந்த போராட்டமாக மாற்றியது. காஸ்ட்ரோ பின்னர் அந்த முடிவெடுக்கும் தருணத்தை இவ்வாறு விவரித்தார்: 'நாங்கள் அலட்சியமாக இருக்க முடியவில்லை. அங்கோலா மீதான ஆக்கிரமிப்பு என்பது ஆபிரிக்காவுக்கு எதிரானது, நீதிக்கு எதிரானது, சுதந்திரத்திற்காகப் போராடிய அனைவருக்கும் எதிரானது.' இந்தக் கண்ணோட்டம், காஸ்ட்ரோ அந்த மோதலை எவ்வாறு புரிந்துகொண்டார் என்பதை வெளிப்படுத்துகிறது. அவர் அதை ஒரு தொலைதூரப் போராகப் பார்க்காமல், ஆதிக்கத்திற்கும் விடுதலைக்கும் இடையிலான ஓர் உலகளாவிய மோதலின் பகுதியாகப் பார்த்தார்.

1975-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், கியூபா MPLA அரசாங்கத்திற்கு ஆதரவாக அங்கோலாவிற்கு ஆயிரக்கணக்கான துருப்புகளை அனுப்பி, கார்லோட்டா நடவடிக்கையைத் தொடங்கியது. காலப்போக்கில், இது ஒரு வளரும் நாடு மேற்கொண்ட மிகப்பெரிய வெளிநாட்டு இராணுவ நடவடிக்கைகளில் ஒன்றாக வளர்ந்தது. இந்த மோதல் காலத்தில் 300,000-க்கும் மேற்பட்ட கியூப வீரர்கள் அங்கோலாவில் பணியாற்றினர்.

இந்தத் தலையீட்டின் அளவும் வேகமும் பல பார்வையாளர்களை ஆச்சரியப்படுத்தியது. பொருளாதாரத் தடையின் கீழ் இருந்த ஒரு சிறிய தீவு நாடான கியூபா, குறிப்பிடத்தக்க அபாயங்களைக் கொண்ட ஒரு தொலைதூரப் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. ஆயினும், இந்த முடிவு பொருளாதார நலன்களாலோ அல்லது வெளிப்புற அழுத்தத்தாலோ எடுக்கப்படவில்லை, மாறாக கொள்கையின் அடிப்படையிலேயே எடுக்கப்பட்டது என்று காஸ்ட்ரோ வலியுறுத்தினார். இந்தத் தலையீட்டைப் பற்றிப் பேசிய ஓர் உரையில், அவர் பின்வருமாறு கூறினார்: 'நாங்கள் அங்கோலாவில் நிலப்பரப்பிற்காகவோ, செல்வத்திற்காகவோ இல்லை. ஒரு மக்கள் உதவி கேட்டதாலும், நீதி அதைக் கோரியதாலும் நாங்கள் அங்கு இருக்கிறோம்.'



இந்தக் கூற்று கியூபாவின் சர்வதேசவாதக் கதை யாடலுக்கு மையமாக இருந்தது. பெரும் வல்லரசு களைப் போலல்லாமல், அங்கோலாவின் நிலப்ப ரப்பின் மீது கியூபா எந்தப் பொருளாதாரச் சலு கைகளையோ, இராணுவத் தளங்களையோ அல்லது அரசியல் கட்டுப்பாட்டையோ கோர வில்லை. அதன் ஈடுபாடு விரிவாக்கமாக அல்லாமல், ஒற்றுமையின் வெளிப்பாடாகவே கட் டமைக்கப்பட்டது. அதே நேரத்தில், இந்தத் தலையீடு தெளிவான மூலோபாய தாக்கங்களைக் கொண்டிருந்தது. தென்னாபிரிக்கப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து, MPLA அரசாங் கத்தை நிலைப்படுத்தியதன் மூலம், கியூபா பிராந்திய அதிகாரச் சமநிலையை மாற்றிய மைத்து, தெற்கு ஆபிரிக்காவில் இனவெறி தென் னாபிரிக்காவின் ஆதிக்கத்திற்கு சவால் விடுத்தது.

கியூபாவின் ஈடுபாட்டின் தீர்க்கமான கட்டம் 1980-களின் பிற்பகுதியில், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஆபிரிக்காவில் நடந்த மிகப் பெரிய மரபுவழிப் போர்களில் ஒன்றான குயிட்டோ குவானாவாலே போரின்போது வந்தது. தென்னாபி ரிக்கப் படைகள், தங்கள் கூட்டாளிகளுடன் சேர்ந்து, MPLA-வைத் தோற்கடித்து, கியூபாவின் ஆதரவை பலவீனப்படுத்த முயன்றன. இந்தப் போர், இனவெறி மற்றும் விடுதலை இயக்கங்க ளுக்கு இடையிலான பரந்த போராட்டத்தின் மையப் புள்ளியாக மாறியது.

அங்கோலா மற்றும் நமீபியப் படைகளுடன் இணைந்து பணியாற்றிய கியூபப் படைகள், தென் னாபிரிக்காவின் முன்னேற்றத்தைத் தடுப்பதில் ஒரு முக்கிய பங்காற்றின. இந்தப் போர் மரபுவழி அடிப்படையில் ஒரு தெளிவான இராணுவ வெற்றியைத் தரவில்லை, ஆனால் அது மூலோ பாய சூழ்நிலையை அடிப்படையாக மாற்றியது. காஸ்ட்ரோ தனது பின்னோக்கிய உரைகளில் அந்தப் போரின் முக்கியத்துவத்தை இவ்வாறு விவரித்தார்: 'குயிட்டோ குவானாவாலேவில், இனவெறி இராணுவத்தின் வெல்லமுடியாத தன்மை குறித்த கட்டுக்கதை தகர்க்கப்பட்டது.' இந்தத் தருணம் ஆழமான உளவியல் மற்றும் அரசியல் விளைவுகளை ஏற்படுத்தியது. அப்பகுதியில் நீண்ட காலமாக இராணுவ ரீதியாக உயர்ந்தவர்க ளாகக் கருதப்பட்ட தென்னாபிரிக்கப் படைகள், ஒரு சிறிய கரீபியன் நாட்டை உள்ளடக்கிய ஒரு கூட்டணியால் முதல் முறையாகத் திறம்படத் தடுக் கப்பட்டன.

கியூபாவின் தலையீட்டின் விளைவுகள் அங்கோ லாவையும் தாண்டி வெகுதூரம் பரவின. குயிட்டோ குவானாவாலேவில் ஏற்பட்ட தேக்கநிலையும், அங்கு பரவலாக இருந்த கியூபாவின் இராணுவப் பிரசன்னமும், அங்கோலா, கியூபா, தென்னாபி ரிக்கா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் சம்பந் தப்பட்ட பேச்சுவார்த்தைகளுக்கு வழிவகுத்த சூழல்களை உருவாக்கின. இந்தப் பேச்சுவார்த் தைகளின் விளைவாக, அங்கோலாவிலிருந்து கியூபா மற்றும் தென்னாபிரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் மிக முக்கியமாக, தென் னாபிரிக்காவின் கட்டுப்பாட்டில் இருந்த நமீபி யாவின் சுதந்திரம் ஆகியவற்றை உள்ளடக்கிய தொடர் ஒப்பந்தங்கள் ஏற்பட்டன.

1990-இல் நமீபியாவின் சுதந்திரம், தெற்கு ஆபி ரிக்காவில் காலனித்துவ எதிர்ப்பு இயக்கங்க ளுக்கு ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியாக அமை ந்தது. அது இனவெறிக் கொள்கை கொண்ட தென் னாபிரிக்காவின் பிராந்திய நிலையையும் பலவீ னப்படுத்தியதுடன், இறுதியில் இனவெறிக் கொள் கையின் முடிவுக்கு வழிவகுத்த உள் அழுத்தங்க ளுக்கும் பங்களித்தது. சிறையிலிருந்து விடுத லையான பிறகு பேசிய நெல்சன் மண்டேலா, கியூபாவின் பங்களிப்பை வெளிப்படையாக ஒப் புக்கொண்டார்: 'ஆபிரிக்க மக்களின் இதயங் களில் கியூபா மக்களுக்கு ஒரு சிறப்பு இடம் உண்டு. குயிட்டோ குவானாவாலேயில் இனவெறி இராணுவம் தோற்கடிக்கப்பட்டது, ஒட்டுமொத்த ஆபிரிக்காவிற்கும் கிடைத்த வெற்றியாகும்.' மண் டேலாவின் இந்தக் கூற்று, கியூபாவின் தலை யீட்டின் பரந்த முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டு கிறது. அது வெறும் ஓர் இராணுவ நடவடிக்கை மட் டுமல்ல. நவீன வரலாற்றில் மிகவும் ஆழமாக வேரூன்றியிருந்த இன ஆதிக்க அமைப்புகளில் ஒன்றுக்கு எதிரான போராட்டத்தில் அது ஒரு திருப் புமுனையாக அமைந்தது.

அங்கோலாவில் கியூபாவின் ஈடுபாடு ஒரு விலையைக் கொடுத்தது. ஆயிரக்கணக்கான கியூப வீரர்கள் தங்கள் உயிரை இழந்தனர், மேலும் ஏற்கனவே வளப் பற்றாக்குறையை எதிர் கொண்டிருந்த ஒரு நாட்டிற்கு, அந்தப் பணியைத் தொடர்வதற்கான பொருளாதாரச் சுமை குறிப்பி டத்தக்கதாக இருந்தது. காஸ்ட்ரோ இந்தத் தியா கங்களை வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்: 'எங்கள் மக்கள் தங்கள் இரத்தத்தை வெற் றிக்காக அல்ல, மற்றவர்களின் சுதந்திரத்திற் காகக் கொடுத்திருக்கிறார்கள்.' உடனடிப் பொருளாதார ஆதாயம் இல்லாமல் விலை களைத் தாங்கிக்கொள்ளும் இந்த விருப்பம், உலக அரசியலில் ஒரு கொள்கைப்பிடிப்புள்ள சக்தியாக கியூபாவின் பிம்பத்தை வலுப்படுத் தியது. மேலும் இது, கியூபாவிற்கும் ஆபிரிக்க விடுதலை இயக்கங்களுக்கும் இடையிலான உணர்வுபூர்வமான, குறியீட்டு ரீதியான தொடர் புகளை ஆழப்படுத்தியது.

சர்வதேச உறவுகளில் அதிகாரம் குறித்த மேலோங்கிய அனுமானங்களுக்கு அங்கோ

லாவின் தலையீடு சவால் விடுத்தது. செல்வாக்கு என்பது பொருளாதார அளவு அல்லது இராணுவத் திறனால் மட்டும் தீர்மானிக்கப்படுவ தில்லை, மாறாக அரசியல் உறுதிப்பாடு, சித் தாந்தத் தெளிவு, மூலோபாய அர்ப்பணிப்பு ஆகி யவற்றாலும் தீர்மானிக்கப்படுகிறது என்பதை அது நிரூபித்தது. உலகளாவிய தெற்கில் உள்ள பலருக்கு, கியூபாவின் நடவடிக்கைகள், நடைமு றையில் மேலாதிக்க எதிர்ப்பு அரசியல் எப்படி இருக்கும் என்பதற்கு ஒரு சக்திவாய்ந்த உதார ணமாக அமைந்தது. ஒரு சிறிய நாடு, ஒரு தொலைதூர மோதலில் தலையிட்டு, பிராந்திய வரலாற்றின் போக்கை மாற்றி, இன ஒதுக்கல் கொள்கையை ஒழிப்பதற்குப் பங்களித்தது. இவை அனைத்தையும் ஒரு வல்லரசின் வழக் கமான அடையாளங்கள் எதுவுமின்றிச் செய்தது. காஸ்ட்ரோ இந்தச் சாதனையை ஒரு பரந்த கண் ணோட்டத்தில் முன்வைத்தார்: 'வரலாறு நாடுக ளின் அளவை நினைவில் கொள்ளாது, மாறாக அவற்றின் செயல்களின் நீதியையே நினைவில் கொள்ளும்.'

அங்கோலா, நமீபியா மற்றும் இனவெறிக்கு எதிரான போராட்டத்தில் கியூபாவின் ஈடுபாடு, காஸ்ட்ரோவின் சர்வதேசவாதப் பார்வையின் மிகவும் உறுதியான நனவாக்கத்தைக் குறிக் கிறது. அது இராணுவ ஈடுபாடு, அரசியல் ஒற்றுமை, கருத்தியல் அர்ப்பணிப்பு ஆகிய வற்றை ஒன்றிணைத்து, கியூபா குறித்த உலக ளாவிய கண்ணோட்டங்களை மறுவடிவமைத்தது. காஸ்ட்ரோவைப் பொறுத்தவரை, இது வெறும் வெளியுறவுக் கொள்கை வெற்றி மட்டுமல்ல கியூபப் புரட்சியின் கொள்கைகளான கண்ணி யம், ஒற்றுமை, எதிர்ப்பு ஆகியவை உலகளாவிய விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதற்கான ஒரு செயல் விளக்கமாகும். இந்த நிகழ்வுகளைப் பற்றிச் சிந்தித்து, அவர் கூறினார்: 'ஆபிரிக் காவில் நாங்கள் செய்தது ஆபிரிக்காவிற்கு மட் டுமல்ல. அது மனிதகுலத்திற்காக.'

நிறைவுக் குறிப்புகள்:

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், ஃபிடல் காஸ்ட்ரோ ஒரு தேசியத் தலைவர் என்ற வகைப் பாட்டைக் கடந்து, உலகளாவிய அரசியல் குறி யீட்டியல் தளத்திற்குள் நுழைந்தார். அவரது முக் கியத்துவத்தை இனிக் கொள்கை முடிவுகள், நிறுவன சீர்திருத்தங்கள் அல்லது சர்வதேச தலையீடுகள் மூலமாக மட்டுமே புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் எதிர்ப்பின் சின்னமாக மாறியிருந்தார். ஆதிக்கம், சமத்துவமின்மை மற்றும் மேலாதிக்கத்திற்கு எதிரான பரந்த போராட்டங்கள் கற்பனை செய்யப்பட்டு வெளிப் படுத்தப்பட்ட ஒரு பேராளுமையாக அவர் திகழ்ந்தார்.

இந்த மாற்றத்தைப் புரிந்துகொள்ள, அரசியல் சமூகவியல், பண்பாட்டுக் கோட்பாடுகளிலிருந்து தத்துவார்த்த நுண்ணறிவுகளைப் பெறுவது பயனுள்ளதாக இருக்கும். அந்தோனியோ கிராம்சி அதிகாரம் என்பது வற்புறுத்தலால் மட்டும் நிலை நிறுத்தப்படுவதில்லை, மாறாக மேலாதிக் கத்தால் நிலைநிறுத்தப்படுகிறது என்பதை வலி யுறுத்துகிறார். மேலாதிக்கம் என்பது, ஆதிக்கம் செலுத்தும் குழுக்கள் இயல்பானது, சட்டபூர்வ மானது மற்றும் சாத்தியமானது என்று கருதப்ப டுவதை வடிவமைக்கும் திறன் ஆகும். எனவே, மேலாதிக்க எதிர்ப்பு அரசியலுக்குப் பொருள்சார் எதிர்ப்பு மட்டுமல்ல, குறியீட்டு ரீதியான சீர்கு லைவும் தேவைப்படுகிறது.

காஸ்ட்ரோவின் நீடித்த செல்வாக்கை இந்த அடிப்படையில் துல்லியமாகப் புரிந்துகொள்ள முடியும். அவர் சக்திவாய்ந்த நாடுகளின் புவிசார் அரசியல் ஆதிக்கத்தை மட்டுமல்லாமல், சிறிய நாடுகளைச் சார்ந்திருப்பவையாகவும், அடிப ணிந்தவையாகவும், தன்னாட்சி வளர்ச்சிக்குத் திறனற்றவையாகவும் கட்டமைத்த குறியீட்டு ஒழுங்கையும் எதிர்த்தார். உலகளாவிய அரங்கு களில், புரட்சிகரக் கூட்டங்களில், சர்வதேச நெருக்கடிகளில் அவரது இருப்பு, இந்த அனுமா னத்தின் ஒரு வெளிப்படையான மறுப்பாகச் செயற்பட்டது.

இந்த அர்த்தத்தில், காஸ்ட்ரோ வெறுமனே அதி காரத்தை எதிர்க்கவில்லை. அவர் அதிகா ரத்தைப் பற்றிய கற்பனையை மறுவரையறை செய்தார்.

காஸ்ட்ரோவின் குறியீட்டு அதிகாரத்திற்கு மையமாக இருந்தது, அவர் பேச்சை ஓர் அரசியல் கருவியாகப் பயன்படுத்தியமையே. அவரது உரைகள் - பெரும்பாலும் நீளமானவை, விரிவானவை, மற்றும் குறிப்புகள் இன்றி வழங் கப்பட்டவை - வெறும் தகவல் தொடர்புச் செயல் களாக இருக்கவில்லை. அவை உலகளாவிய உரையாடலில் நிகழ்த்தப்படும் செயற்றிறன் மிக்க தலையீடுகளாக இருந்தன. இராஜதந்திர மொழிக்குரிய கவனமாகத் திட்டமிடப்பட்ட சுருக் கத்தைப் போலல்லாமல், காஸ்ட்ரோவின் சொற்பொழிவு ஒரே நேரத்தில் விளக்கவும், இணங்க வைக்கவும், அணிதிரட்டவும் முயன்றது. அவர் பார்வையாளர்களை செயலற்ற பெறுநர்க ளாகக் கருதாமல், அரசியல் பகுத்தறிவின் ஒரு பகிரப்பட்ட செயற்பாட்டில் பங்கேற்பாளர்க ளாகக் கருதினார்.

1960-இல் ஐக்கிய நாடுகள் சபையில், காஸ்ட்ரோ நான்கு மணி நேரத்திற்கும் மேலாகப் பேசி, அந்த அமைப்பின் வரலாற்றிலேயே மிக நீண்ட உரைகளில் ஒன்றை நிகழ்த்தினார். இது ஒரு மித



மிஞ்சிய செயல் என்பதற்கு மாறாக, அரசியல் அங்கீகாரத் திற்கு விளக்கம் தேவை என்ற அவரது நம்பிக்கையை இந்த உரை வெளிப்படுத்தியது: 'நாம் இங்கு கிசுகிசுக்க வரவில்லை, மாறாகத் தெளிவாகப் பேசவே வந்துள்ளோம்; அப்போதுதான் நம் மக்களுக்கு என்ன நடக்கிறது என்பதை உலகம் புரிந்துகொள்ளும்.' இத்தகைய உரைகளின் மூலம், காஸ்ட்ரோ ஒரு மேலாதிக்க எதிர்ப்புப் பார்வையை முன் வைத்தார். அது உலகளாவிய சமத்துவமின்மையை வளர்ச்சிப் பின்தங்கிய நிலை என்பதற்குப் பதிலாக அமைப்பு ரீதியான அநீதியாகவும், ஏகாதிபத்தியத் தலை யீட்டை உதவி என்பதற்குப் பதிலாக ஆதிக்கமாகவும் மறு வரையறை செய்தது.

அவரது சொல்லாட்சி உத்தியில் நான்கு முக்கியக் கூறுகள் அடங்கியிருந்தன:

- வரலாற்று அடித்தளம்: சமகாலப் போராட்டங்களைக் காலனித்துவ வரலாறுகளுடன் இணைத்தல்
- தார்மீகக் கட்டமைப்பு: அரசியல் மோதல்களை அறநெறிக் கேள்விகளாக முன்வைத்தல்
- கூட்டு அடையாளம்: கியூபாவிற்காக மட்டுமல்லாமல், 'உலக மக்களுக்காகவும்' பேசுதல்
- படிநிலையை மீறுதல்: உலகளாவிய சக்திகளைப் பணிவின்றி எதிர்கொள்ளுதல்

இந்தக் கூறுகள் காஸ்ட்ரோவின் உரைகளை அவற்றின் உடனடிச் சூழலுக்கு அப்பாற்பட்டு வெகுதூரம் எதிரொ லிக்கச் செய்தன. அவை, உலகளாவிய தெற்கில் உள்ள பார்வையாளர்கள் தங்களின் சமத்துவமின்மை மற்றும் ஓரங் கட்டப்படுதல் குறித்த சொந்த அனுபவங்களைப் புரிந்து கொள்ள உதவும் உரைகளாக மாறின.

காஸ்ட்ரோவின் குறியீட்டு சக்தி மொழிக்குள் மட்டும் அடங் கியிருக்கவில்லை. அவரது உடல் இருப்பு - அவரது தாடி, இராணுவ உடைகள், கண்டிப்பான தோரணை- எதிர்ப்பின் ஒரு காட்சி இலக்கணத்தின் பகுதியாக மாறியது. உலக ளாவிய உயரடுக்கினரின் முறையான உடைக்கு மாறாக, காஸ்ட்ரோவின் தோற்றம், அதிகாரத்தின் நிறுவப்பட்ட நெறிகளை நிராகரிப்பதைக் குறித்தது. ஆலிவ்-பச்சை நிறச் சீருடை அவரைக் கெரில்லாப் போராட்டத்துடன் இணை த்தது, அதே சமயம் ஆடம்பரமின்மை அவரைச் சாதாரண மக்களுடன் அடையாளப்படுத்திக் கொள்வதை வலுப்படுத் தியது.

இந்த அழகியல் தற்செயலானதல்ல. அது ஆழ்ந்த அரசியல் தன்மை கொண்டது. இந்த வகையில், காஸ்ட் ரோவின் உடலே அரசியல் அர்த்தத்தின் களமாக மாறியது. அவர் போற்றிய விழுமியங்களை அது தன்னகத்தே கொண் டிருந்தது. உடை, பேச்சு அல்லது நடத்தை என எதுவாக இருந்தாலும், இராஜதந்திர மரபுகளுக்கு இணங்க மறுத்த அவரது குணம், அமைப்பை உள்ளிருந்தே சவால் விடும் ஒரு வெளியாட்டகாரர் என்ற அவரது பிம்பத்தை வலுப்படுத் தியது.

காஸ்ட்ரோவின் குறியீட்டு ரீதியான தாக்கம் உலகத் தெற்கில் குறிப்பாக வலுவாக இருந்தது, அங்கு அவரது பிம்பம் பரந்த எதிர்ப்புக் கதையாடல்களுடன் பின்னிப் பிணைந்தது. இலத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவின் சில பகுதிகளில், காஸ்ட்ரோ ஒரு கியூபத் தலைவராக மட்டுமல்லாமல், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தின் ஒரு பிரதிநிதியாகவும் பெரும்பாலும் கரு தப்பட்டார். விடுதலை இயக்கங்களுக்கான ஆதரவு, மருத் துவப் பணிகள், இராஜதந்திரப் பரிந்துரைகள் போன்ற கியூபாவின் உறுதியான செயல்களால் இந்தக் கருத்து வலுப்படுத்தப்பட்டது. குறியீட்டுத்தன்மையும் நடைமு றையும் ஒன்றையொன்று வலுப்படுத்தி, ஒரு சக்திவாய்ந்த பின்னூட்டச் சுழற்சியை உருவாக்கின.

ஒரு கோட்பாட்டு ரீதியான கண்ணோட்டத்தில், காஸ்ட் ரோவின் நீடித்த குறியீட்டு சக்தியை மூன்று கருத்துகளின் சந்திப்பின் மூலம் புரிந்து கொள்ள முடியும்:



"காஸ்ட்ரோவின் உடல் இருப்பு - அவரது தாடி, இராணுவ உடைகள், கண்டிப்பான தோரணை- எதிர்ப்பின் ஒரு காட்சி இலக்கணத்தின் பகுதியாக மாறியது. உலகளாவிய உயரடுக்கினரின் முறையான உடைக்கு மாறாக, காஸ்ட்ரோவின் தோற்றம், அதிகாரத்தின் நிறுவப்பட்ட நெறிகளை நிராகரிப்பதைக் குறித்தது"

- மாக்ஸ் வெபரின் கருத்துக்களைப் பின்பற்றி, காஸ்ட்ரோவின் தலைமைத்துவத்தைக் கவர்ச்சிகரமான அதிகாரத்தின் ஒரு வடிவமாகக் காணலாம். அதாவது, உணரப்பட்ட அசாதாரண குணங்களிலிருந்து பெறப்பட்ட சட்டபூர்வத்தன்மை. இருப்பினும், வெபரின் இலட்சிய வகையைப் போலல்லாமல், காஸ்ட்ரோவின் கவர்ச்சி முற்றிலும் தனிப்பட்டதாக இருக்கவில்லை. அது புரட்சியின் மூலம் நிறுவனமயமாக்கப்பட்டு, வெகுஜன மக்களுடனான தொடர்ச்சியான ஈடுபாட்டின் மூலம் நிலைநிறுத்தப்பட்டது.
- நவீன அரசியல் கோட்பாடு, தலைமைத்துவத்தின் செயற்பாட்டுத் தன்மையை வலியுறுத்துகிறது. காஸ்ட்ரோவின் உரைகள், பொதுத் தோற்றங்கள், சர்வதேசத் தலையீடுகள் வெறும் செயல்களாக இருக்கவில்லை. மாறாக, அவை அரசியல் அர்த்தத்தைக் கட்டமைத்த செயற்பாடுகளாக இருந்தன. மீண்டும் மீண்டும் நிகழ்த்துதல் மற்றும் நிலைத்தன்மையின் மூலம், இந்தச் செயற்பாடுகள் ஒரு அங்கீகரிக்கப்பட்ட அடையாளத்தை உருவாக்கின.
- கிராம்சியின் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, காஸ்ட்ரோவின் அரசியலை, உலகளாவிய அதிகாரத்தின் மீதான ஒரு பொதுவான விமர்சனத்தைச் சுற்றிப் பல்வேறுபட்ட குழுக்களை ஒன்றிணைக்கும் ஓர் ஆதிக்க எதிர்ப்பு அணியைக் கட்டமைக்கும் முயற்சியாகப் புரிந்து கொள்ளலாம். இந்தத் திட்டத்தில் அவரது குறியீட்டுப் பங்கு மையமாக இருந்தது. அது அடையாளம் காணுதலுக்கும் அணிதிரட்டலுக்கும் ஒரு மையப் புள்ளியை வழங்கியது.

உலகளாவிய நிலைமைகள் மாறியபோதும் காஸ்ட்ரோவின் செல்வாக்கு ஏன் நீடித்தது என்பதை இந்த இரண்டு கட்டமைப்புகளும் சேர்ந்து விளக்க உதவுகின்றன. அவரது அதிகாரம் கியூபாவின் பொருள்சார் திறனை மட்டும் சார்ந்திருக்கவில்லை, மாறாக அவர் தன்னுள் கொண்டிருந்த மற்றும் வெளிப்படுத்திய அர்த்தங்களைச் சார்ந்திருந்தது. அவர் பிறந்து ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, காஸ்ட்ரோவின் பொருத்தப்பாடு குறித்த கேள்வி வெறும் வரலாற்றுப் பிரச்சினை மட்டுமல்ல. இது மிகவும் சமகாலத்தன்மை வாய்ந்தது. இருபத்தியோராம் நூற்றாண்டின் உலகம், கட்டமைப்பில் வேறுபட்டிருந்தாலும், காஸ்ட்ரோவின் அரசியலை வடிவமைத்த பல ஏற்றத்தாழ்வுகளையும் அதிகாரச் சமச்சீரின்மைகளையும் தொடர்ந்து வெளிப்படுத்துகிறது.

அவரது அனுபவத்திலிருந்து நாம் பல பாடங்கள் கற்க முடியும்:

- அரசியல் சுதந்திரத்துடன் பொருளாதார மற்றும் சமூக சுயாட்சியும் இணைந்திருக்க வேண்டும் என்ற காஸ்ட்ரோவின் வலியுறுத்தல் இன்றும் மிகவும் பொருத்தமானதாக உள்ளது. கடன், வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வெளித் தாக்கங்களால் வடிவமைக்கப்பட்ட உலகில், பல நாடுகள் முந்தைய ஆதிக்க முறைகளை ஒத்த சார்புநிலைகளுடன் தொடர்ந்து போராடி வருகின்றன.
- கியூபாவின் சர்வதேசப் பங்கு, செல்வாக்கு என்பது அளவு அல்லது செல்வத்தால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதில்லை என்பதை நிரூபிக்கிறது. வியூகத் தெளிவு, கருத்தியல் அர்ப்பணிப்பு மற்றும் சர்வதேச ஒற்றுமை ஆகியவை சிறிய நாடுகள் உலகளாவிய விளைவுகளை வடிவமைக்க உதவும்.
- காஸ்ட்ரோவின் சர்வதேசவாத மாதிரி - குறிப்பாக மருத்துவ இராஜதந்திரம் வழியாக - சர்வதேச உறவுகளில் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளுக்கு ஒரு மாற்றுக்கருத்தை வழங்குகிறது. வரம்புகள் இல்லாமல் இல்லை என்றாலும், பகிரப்பட்ட அனுபவத்தில் வேரூன்றிய ஒத்துழைப்பு அர்த்தமுள்ள விளைவுகளை உருவாக்க முடியும் என்று அது சுட்டிக் காட்டுகிறது.
- காஸ்ட்ரோவின் மரபு அரசியலில் விவரிப்பின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. உலகளாவிய சமத்துவமின்மை குறித்த ஒரு சீரான விமர்சனத்தை முன்வைத்து, ஒரு மாற்றுப் பார்வையை முன்வைத்ததன் மூலம், சாத்தியமாகக் கருதப்பட்டவற்றின் எல்லையை அவர் விரிவுபடுத்தினார்.

அரசியல் கற்பனை பெரும்பாலும் ஆதிக்கப் பொருளாதாரக் கட்டமைப்புகளால் கட்டுப்படுத்தப்படும் உலகில், இந்தப் பாடங்கள் குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்தவை.

பெரும்பாலும் எதிர்ப்பு ஓரங்கட்டப்படும் அல்லது ஒடுக்கப்படும் ஒரு உலகில், ஒரு தொகுதி அரசியல் சாத்தியக்கூறுகளுக்கு உருவாவதற்கான - அதாவது எதிர்ப்பைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான - அவரது திறனில்தான் காஸ்ட்ரோவின் நீடித்த முக்கியத்துவம் அடங்கியுள்ளது. அவரது வாழ்க்கை, அதிகாரத்திற்கும் கொள்கைக்கும், தலைமைக்கும் குறியீட்டிற்கும், மற்றும் தேசியப் போராட்டத்திற்கும் உலகளாவிய ஒற்றுமைக்கும் இடையிலான உறவு குறித்துச் சிந்திக்கத் தூண்டுகிறது. அவர் ஒருமுறை கூறியது போல்: 'மனிதர்கள் விதியை வடிவமைப்பதில்லை. விதியை வடிவமைப்பது கருத்துகள்தான், மேலும் கருத்துக்கள் பாதுகாக்கப்படும்போது அவை யதார்த்தமாக மாறும்.'

ஒரு மேடையில் நின்று, மணிக்கணக்கில் பேசி, பணியமறுக்கும் ஃபிடல் காஸ்ட்ரோவின் பிம்பம், நவீன அரசியல் வரலாற்றில் எதிர்ப்பின் மிகவும் அடையாளம் காணக்கூடிய சித்திரிப்புகளில் ஒன்றாகத் திகழ்கிறது. அது தொடர்ந்து பரவி, உத்வேகம் அளித்து, விவாதங்களைத் தூண்டும் ஒரு பிம்பமாகும். ஆனால் அந்தப் பிம்பத்திற்கு அப்பால் ஒரு ஆழமான மரபு உள்ளது: சமத்துவமின்மையால் கட்டமைக்கப்பட்ட ஒரு உலகில்கூட, எதிர்ப்பு சாத்தியம், கண்ணியம் விட்டுக்கொடுக்க முடியாதது, வரலாறு மாற்றத்திற்குத் திறந்திருக்கிறது என்ற வலியுறுத்தல். இதனால்தான் காஸ்ட்ரோ, கடந்த காலத்தின் ஒரு நபராக மட்டுமல்லாமல், நிகழ்காலத்தின் அரசியல் கற்பனையில் ஒரு தொடர்ச்சியான இருப்பாகவும் நிலைத்திருக்கிறார்.



meenilankco@thaiveedu.com

யோகவதி தளையசிங்கம்

பாவேந்தர் பாரதிதாசன் மொழியும் பண்பாடும்



tg.theeban@gmail.com

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய வரலாற்றில், மொழிப்பண்பாட்டை ஓர் அறச்சீற்றமாகவும், அரசியல் ஆயுத மாகவும் மாற்றியவர் பாவேந்தர் பாரதிதாசன். தமிழ் மறு மலர்ச்சி இலக்கியத்தின் முக்கிய ஆளுமைகளில் ஒருவரான பாவேந்தர் பாரதிதாசன், மொழியை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் பார்க்கவில்லை; அவர் மொழியை ஒரு பண்பாட்டு அடையாளமாகவும், சமூக மாற்றத்தின் கருவி யாகவும் பயன்படுத்தினார். 'தமிழுக்கும் அமுதென்று பேர்' எனத் தொடங்கிய அவரது கவிதை வரிகள், வெறும் ரசனைக் காகப் பாடப்பட்டவை அல்ல; அவை தமிழினத்தின் தனித்து வத்தையும், பண்பாட்டு அடையாளத்தையும் நிலைநிறுத்த எழுந்த பேரொலிகள். இவரது படைப்புகளில் மொழிப்பண் பாடு எவ்விதம் பன்முகத் தன்மையுடன் வெளிப்படுகிறது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது.

மொழிப்பண்பாடு ஓர் இனத்தின் ஆன்மா:

பாரதிதாசனைப் பொறுத்தவரை தமிழ் என்பது வெறும் தகவல் தொடர்பு ஊடகம் மட்டுமல்ல; அது தமிழர்களின் வாழ்வாதாரமும் ஆகும். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சத்தமிடு' என்ற வரிகளின் மூலம், ஒரு சமூகத்தின் பொருளாதார வளமும் வாழ்வியல் செழுமை யும் அதன் மொழிப்பண்பாட்டிலேயே தங்கியுள்ளன என்பதை அவர் உணர்த்தினார். பாரதிதாசன் தமிழை 'அமுது', 'நிலவு', 'மணம்' என இயற்கையோடு இணைத்துப் பாடுவதன் மூலம், தமிழ்மொழி தமிழர்களின் வாழ்வில் பிரிக்க முடியாத ஒரு பண்பாட்டுத் தொடர்ச்சியாக இருப்பதை உறுதிப்படுத்து கிறார். தமிழை உயிருக்கு நிகரான 'அமுது' என்று அழைப் பதன் மூலம், அது வாழ்வைத் தக்கவைக்கும் வாழ்வாதாரச் சக்தி என்பதை உணர்த்துகிறார். சமூகத்தின் அறியாமை இருளை நீக்கி வழிகாட்டும் ஒளியாகத் தமிழை 'நிலவு' என்கிறார். ஒரு பூவின் மணம் எப்படி அதன் பிரிக்க முடி யாத அடையாளமோ, அப்படியே தமிழும் தமிழரின் வாழ் வோடு பின்னிப் பிணைந்த 'மணம்' போன்றது என்கிறார்.

'தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்'

என்ற வரிகள், தமிழ் என்பது வெறும் மொழியல்ல; அது தமி ழர்களின் அடையாளத்தோடும், உணர்வோடும் ஊடுருவி நிற்கும் ஒரு பண்பாட்டுக் கூறென மெய்ப்பிக்கின்றன. பாரதி தாசன் காலத்திய மொழிப்பண்பாடு என்பது வெறும் துதி பாடல் அல்ல; அது ஒரு விடுதலை அரசியல். மொழிப்பற்று என்பது ஒருவரை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கும் சக்தியாக அவர் கண்டார். 'தமிழ் உணர்வு இல்லாதவர் பிணம்' என்று அவர் சாடியது, பண்பாட்டு ரீதியாக விழிப் படையாத சமூகம் எளிதில் வீழ்ந்துவிடும் என்பதால்தான். இன்றைய நவீனச் சூழலில், பாரதிதாசன் காட்டிய மொழிப் பண்பாடு என்பது நமது வேர்களைப் பாதுகாக்கும் கவச மாக உள்ளது. தகவல் தொழினுட்பம் பெருகினாலும், நமது வாழ்வாதாரச் செழுமை என்பது நமது மொழி சார்ந்த

அறிவிலேயே தங்கியுள்ளது. பாரதிதாசன் தமிழை ஒரு இனத்தின் 'ஆன்மா' என அழைத்தது மிகப்பொருத்த மானது. உடல் அழிந்தாலும் ஆன்மா அழியாதது போல, காலங்கள் மாறினாலும் தமிழ்மொழி என்ற பண்பாட்டு ஆன்மா இருக்கும் வரைதான் தமிழினம் தனது தனித்துவத்தை உலகுக்குப் பறைசாற்ற முடியும். 'தமிழை வளர்ப்பது என்பது தமிழனை வளர்ப்பது' என்பதே அவரது வாழ்நாள் செய்தி யாகும்.

சமூக நீதி மற்றும் சமத்துவ மொழிப்பண்பாடு:

பாரதிதாசன் தனது கவிதைகளைச் சமூகச் சீர்திருத்தத்திற் கான உளியாகப் பயன்படுத்தினார். சாதி ஒழிப்பை அவர் 'இணைப்போம் தமிழரை' என்ற முழக்கத்தின் மூலம், சாதி அடுக்குகளால் சிதைந்து கிடந்த தமிழ்ச் சமூகத்தை 'மொழி' என்ற ஒற்றைப் பண்பாட்டு அடையாளத்தின் கீழ் ஒன்றிணைக்க முயன்றார். தொழிலாளர் நலத்தை பற்றிக் கூறும்போது 'உல கம் உண்ண உண் உடுத்த உடுத்து' என்ற பாரதி தாசனின் வரிகள், உழைக்கும் வர்க்கத்தின் வலிமையைப் பேசும் ஒரு பொதுவுடைமை மொழிப்பண்பாட்டைத் தமிழுக்கு வழங்கின. உழைப்பின் வலிமை பற்றி அவரது சிந்தனையை நோக்கின் செல்வமெல்லாம் ஒரு சிலரிடம் குவிந்து கிடப்பதைச் சாடிய அவர், உழைக்கும் வர்க்கமே இந்த உலகின் உண்மையான உரிமையாளர்கள் என்றார். 'வியர்வை சிந்துபவனின் கைகளே வரலாற்றைப் படைக்கின்றன' என்பது அவரது மொழிப் பண்பாட்டின் அடிப்படை. பாரதிதாசன் தமிழுக்கு ஒரு புதிய சமூகவியல் மொழியை உருவாக்கிக் கொடுத்தார்.

'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை' 'எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும், இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' இத்தகைய வரிகள் மூலம் அவர் உரு வாக்கிய மொழிப்பண்பாடு 'சமைப்பது பெண்களுக்குப் பட்ட யம்' என்ற நிலையை மாற்றி, சமையல் தொழில் இருவருக்கும் பொதுவானது என்ற சமத்துவத்தைப் பேசினார். நிலப்பிரபுத் துவ சிந்தனைகளைத் தகர்த்து, அதிகாரம் சாமானிய மனி தரின் கைகளுக்கு வர வேண்டும் என்பதைத் தனது எழுத்தின் மூலம் உறுதிப்படுத்தினார். பாரதிதாசன் தனது கவிதை களில் பயன்படுத்திய சொற்கள், வெறும் கவித்துவத்திற்காகப் படைக்கப்பட்டவை அல்ல; அவை சமூகத்தின் ஏற்றத்தாழ்வு களைச் சமன்படுத்தும் சமத்துவக் கருவிகள். மொழிப்பற்றை வெறும் உணர்ச்சியாக மட்டும் பார்க்காமல், அதைச் சமூக மாற்றத்திற்கான ஒரு அரசியல் சக்தியாக மாற்றியதே புரட்சிக் கவிஞரின் தனிச்சிறப்பு.

பெண்மையியல் மற்றும் மொழிப்பண்பாடு:

பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகளில் பெண்ணிலை வாதம் என்பது வெறும் கருப்பொருளாக அன்றி, ஒரு வலு வான மொழிப்பண்பாட்டுப் புரட்சியாகவே வெளிப்படுகிறது. பாரதிதாசன், பெண்களைப் போகப் பொருளாகச் சித்தரித்த மரபார்ந்த இலக்கிய மொழிப்பண்பாட்டை உடைத்து, அவர் களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் முக்கியத்துவம் அளிக்கும் புதிய மொழிநடையைப் புகுத்தினார். இவரது பெண் சுதந் திரக் கவிதைகள் மற்றும் பெண் கல்வி குறித்த பாடல்களில் பயின்றுவரும் சொற்கள், சமூகக் கட்டுப்பாடுகளுக்கு எதிரான ஒரு துணிச்சலான போராட்ட மொழியாகத் திகழ்கின்றன. அடுப்படியில் முடங்கிக் கிடந்த பெண்களைத் தட்டி யெழுப்பி, உலகை ஆளச் சொல்லும் அவரது விழிப்புணர்வு மொழி, காலப்போக்கில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான சமத்துவ மொழியாகப் பரிணமித்தது. 'கல்வி இல்லாத பெண்கள் களர்நிலம்' போன்ற அவரது நேரடிச் சொல்லாடல்கள், பெண்ணிலைவாதத்தை ஒரு சமூகக் கடமையாக மாற்றியதோடு, தமிழுக்கு ஒரு புரட்சிகரமான 'பெண்ணிலைவாத மொழிப்பண்பாட்டை' (Feminist Linguistic Culture) பெற்றுத் தந்தது.

பாரதிதாசனின் படைப்புகளில் மொழிப்பண்பாடு 'பெண்ணிய' நோக்கில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. 'குடும்ப விளக்கு' கவிதையில் மரபார்ந்த குடும்ப அமைப்பிற்குள் நின்றுகொண்டே, பெண்ணின் கல்வி மற்றும் அறிவார்ந்த சிந்தனையை அவர் போற்றினார். தன் படைப்புகளின் வழியே அதிகாரமிக்கக் குரலில் ஒலித்த பாரதிதாசன், 'இருண்ட வீடு' காட்டும் அறியாமை விலக வேண்டுமெனில் 'பெண் விடுதலை' அவசியமென்பதை வலியுறுத்தினார். பெண்ணடிமைத்தனம் நீங்கி அவர்கள் கல்வி பெற்று உயர்வடைவதே ஒரு பண்பட்ட சமூகத்தின் உண்மையான அடையாளம் என்பதையும் அவர் நிலைநாட்டினார்.

சமூகப் பயனும் மொழிப்பண்பாட்டுத் தாக்கமும்:

பாரதிதாசனின் படைப்புகள் தமிழர்களிடையே ஒரு மாபெரும் தமிழ்ப்பற்றையும் இன உணர்வையும் தட்டி எழுப்பின.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கை முழங்கு!'

என்று அவர் முழங்கிய வரிகள், வெறும் சொற்களல்ல; அவை தமிழினத்தின் எழுச்சிப் பிரகடனமாகும். தாய்மொழிக் கல்வி யின் அவசியத்தை வலியுறுத்தியதன் மூலம், மொழி என்பது வெறும் பாடமல்ல, அது ஒரு சமூகத்தின் அடிப்படை உரிமை என்பதை உணர்த்திப் பெரும் கல்வி விழிப்புணர்வை ஏற்ப டுத்தினார். 'கல்வி கற்ற பெண்ணே ஒரு நாகரிகச் சமூகத்தின் அச்சாணி' எனப் பெண்ணியக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்த தன் மூலம், சமூகத்தின் சரிபாதிப் பிரிவினருக்குப் புதிய அடையாளத்தைப் பெற்றுத் தந்தார். மேலும், சாதி அடுக்குக ளையும் ஏற்றத்தாழ்வுகளையும் தனது கவிதைகளால் கடுமை யாகச் சாடிய அவர், சமூக நீதிச் சிந்தனையை வெகுமக்க ளிடையே கொண்டு சேர்த்தார். சுருக்கமாகச் சொன்னால், பாரதிதாசனின் மொழிப்பண்பாடு என்பது வெறும் கலை வடிவம் மட்டுமல்ல; அது ஒடுக்கப்பட்ட மக்களின் குரலா கவும், விழிப்புணர்வு இயக்கத்தின் மிக வலிமையான கலா சாரக் கருவியாகவும் திகழ்ந்தது.

மொழி – அடையாள அரசியல் (Identity Linguistics):

பாவேந்தர் பாரதிதாசனின் மொழிப்பண்பாடு என்பது மொழி யியல் ரீதியாக வெறும் சொல் அடுக்குகள் அல்ல; அது தமிழர் அடையாளம் மற்றும் திராவிடச் சுயமரியாதை ஆகிய வற்றின் அரசியல் வெளிப்பாடாகும். அவர் மொழியை ஒரு பண்பாட்டு எதிர்ப்பு (Cultural Resistance) ஆயுதமாகக்

கையாண்டு, மேலாதிக்கக் கருத்துகளுக்கு எதிராகத் தமிழ் மொழியின் தனித்துவத்தை நிலைநிறுத்தினார். 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சத்தமிடு' போன்ற வரிகள், மொழியை ஒரு இனத்தின் அரசியல் உரிமையாகவும், சமூக விடுதலையின் கருவியாகவும் மாற்றின. இவரது படைப்புகள் மொழியை ஒரு தகவல் தொடர்பு ஊடகமாக இருந்த நிலையிலிருந்து உயர்த்தி, அதனை ஒரு 'அரசியல் பண்பாட்டு இயக்க மொழியாக' (Political-Cultural Activist Language) உருமாற்றின. இதன் விளைவாக, மொழி என்பது வெறும் பேச்சாக மட்டுமல்லாமல், ஒரு சமூகத்தின் ஒட்டு மொத்தப் போராட்ட வடிவமாகவும், அடையாள அரசியலின் அடித்தளமாகவும் பரிணமித்தது.

பாரதிதாசனின் கவிதைகள் திராவிட இயக்கத்தின் கருத்தியல் அடித்தளமாக விளங்கின. இந்தி எதிர்ப்பு பிறமொழி மேலாதிக்கத்தைத் தடுத்து நிறுத்தி, தமிழின் தூய்மையையும் தனித்துவத்தையும் காக்க அவர் கையாண்ட 'போர்க் குணமிக்க சொற்கள்', தமிழை ஒரு அரசியல் விடுதலைக்கான மொழியாக மாற்றின. சுயமரியாதை பற்றி கூறும் போது 'தன்னிகரில்லாத தமிழ்' என்ற சிந்தனை, தமிழர்களிடையே சுயமரியாதை உணர்வைத் தூண்டி, பண்பாட்டு மேலாதிக்கத்தை எதிர்க்கும் வலிமையை வழங்கியது.

இலக்கிய வடிவங்களில் மொழிப்பண்பாட்டின் பன்முகம்:

பாரதிதாசனின் கவிதைகள், மொழியை வெறும் ரசனைக் குரிய 'உணர்ச்சி மொழியாக' மட்டுமன்றி, இனத்தின் உரிமைகளைப் பேசும் 'அரசியல் மொழியாகவும்', தமிழ் மரபைப் பறைசாற்றும் 'பண்பாட்டு மொழியாகவும்' ஒருங்கே கையாளுகின்றன. அவரது நாடகங்கள், சமூகக் கட்டமைப்பில் நிலவும் முரண்பாடுகளைக் களைவதற்கான 'சமூக உரையாடல் மொழியை' முன்னிறுத்தியதோடு, பாமர மக்களும் எளிதில் புரிந்துகொள்ளும் வகையிலான 'பொதுமக்கள் நடையை' இலக்கியத் தளத்தில் நிலைநிறுத்தின. அதேபோல, அவரது கட்டுரைகள் மேலோட்டமான கருத்துகளைத் தவிர்த்து, தர்க்கரீதியான 'பகுத்தறிவு மொழியையும்', சமூக மாற்றத்திற்கான 'சீர்திருத்தச் சொற்பயன்பாட்டையும்' முதன்மைப்படுத்தின. இவ்வாறு கவிதை, நாடகம், கட்டுரை என அனைத்துத் தளங்களிலும் மொழியை வெவ்வேறு பரிமாணங்களில் கையாண்டதால்தான், பாரதிதாசனின் படைப்புகள் காலத்தைக் கடந்த 'பன்முக மொழிப்பண்பாட்டு ஆவணங்களாக' இன்றும் போற்றப்படுகின்றன.




பாவேந்தர் பாரதிதாசனின் மொழிப்பண்பாடு என்பது மொழி யியல் ரீதியாக வெறும் சொல் அடுக்குகள் அல்ல; அது தமிழர் அடையாளம் மற்றும் திராவிடச் சுயமரியாதை ஆகியவற்றின் அரசியல் வெளிப்பாடாகும். அவர் மொழியை ஒரு பண்பாட்டு எதிர்ப்பு ஆயுதமாகக் கையாண்டு, மேலாதிக்கக் கருத்துகளுக்கு எதிராகத் தமிழ் மொழியின் தனித்துவத்தை நிலைநிறுத்தினார்.

சமூக சீர்திருத்த மொழி:

பாரதிதாசன் தனது படைப்புகளின் வழி சாதி ஒழிப்பு, சமத்துவம் மற்றும் உழைப்பாளர் உரிமைகளை முன்னிறுத்தி, ஒரு புதிய 'சமூகச் சீர்திருத்த மொழியை' உருவாக்கினார். வெற்று அலங்கார வர்ணனைகளைத் துறந்த அவரது நடை, நேரடியான மற்றும் வலிமையான கருத்தியல் தளத்தைக் கொண்டது. இது உயர்தட்டு மக்களுக்கான 'இலக்கிய மொழி' என்ற குறுகிய எல்லையைக் கடந்து, சாமானியர்களின் உரிமைகளைப் பேசும் 'அரசியல் மொழி'யாகப் பரிணமித்தது. சமூகத்தின் அடித்தட்டு மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை அதிகார மையங்களை நோக்கிக் கேள்வி கேட்கத் தூண்டிய ஒரு புரட்சிகரமான கருவியாக இம்முறைமை திகழ்ந்தது.

உயர்ந்த செந்தமிழைத் தரம் குறையாமல் கையாண்ட அதேவேளையில், மக்களின் அன்றாட வாழ்வோட்டத்தோடு கலந்த பேச்சுவழக்கையும் பாரதிதாசன் செறிவாகப் பயன்படுத்தினார். அவரது கவிதைகள் மற்றும் நாடகங்களில் நாட்டுப்புறச் சொற்களும் எளிய உரையாடல் நடையும் இயல்பாகப் பின்னிப் பிணையப்பட்டுள்ளன. குறிப்பாக, தொழிலாளர் சமூகம் மற்றும் பெண்களின் அனுபவங்களைப் பதிவு செய்யும்போது, அவர் கையாண்ட பொதுமக்கள் பயன்பாட்டுச் சொற்றொடர்கள் இலக்கியத்திற்கு ஒரு 'வாழ்வியல் நெருக்கத்தை' வழங்கின. இலக்கியம் என்பது மேட்டுக்குடியினருக்கானது மட்டுமல்ல, அது சாமானிய மக்களின் பண்பாட்டு அடையாளம் என்பதை நிலைநிறுத்தியதில் இத்தகைய மக்கள் மொழி வடிவம் முக்கிய பங்கு வகிக்கிறது.



தொல்காப்பியர் காலத்து இலக்கண மரபையும், கால மாற்றத்திற்கு ஏற்ப உருவெடுத்த நவீன சமூகத் தமிழையும் பாரதிதாசன் மிக இலாவகமாக ஒருங்கிணைத்தார். இது தமிழின் 'பரிணாமப் பண்பாட்டை' (Evolutionary Linguistics) உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் ஒரு சிறந்த முயற்சியாகும். ஒருபுறம் தூய தமிழ் முயற்சிகளின் மூலம் மொழியின் தனித்துவத்தைப் பேணியவர், மறுபுறம் நவீன காலத்திற்குத் தேவையான அரசியல் கலைச் சொற்களைத் தாராளமாகப் புகுத்தித் தமிழை ஒரு நவீனப் போர்வாளாக மாற்றினார். பழைய மரபு சிதையாமல் புதிய உலகளாவிய கருத்துகளைத் தாங்கி நிற்கும் இவரது நடை, தமிழை ஒரு செழுமையான 'நவீன மொழிப்பண்பாட்டு ஆவணமாக' நிலைநிறுத்தியுள்ளது.

திராவிட பண்பாட்டு விழிப்புணர்வு மற்றும் மொழி:

தந்தை பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன், திராவிடப் பண்பாட்டு மறுமலர்ச்சியைத் தமிழ் மொழி வழியாக ஒரு மக்கள் இயக்கமாக மாற்றினார். இவரது மொழிப்பண்பாடு வெறும் அழகியல் சார்ந்தது மட்டுமல்ல; அது சமஸ்கிருத மேலாதிக்க எதிர்ப்பிலிருந்தும் தார்மீகக் கோபத்திலிருந்தும் உருவானது. மொழியில் ஊடுருவியிருந்த பிறமொழி ஆதிக்கத்தைக் களைந்து, தமிழை அதன் தனித்தன்மையோடும் சுயமரியாதையோடும் மீட்டெடுப்பதையே பாரதிதாசன் தனது முதன்மை நோக்கமாகக் கொண்டார்.

திராவிட அடையாள மொழியை வடிவமைப்பதன் மூலம், தமிழர்கள் தங்கள் இன வரலாற்றையும் உரிமைகளையும் உணருமாறு அவர் செய்தார். தாய்மொழிக் கல்வி மற்றும் சாதி ஒழிப்பைத் தனது படைப்புகளின் மையப்பொருளாகக் கொண்ட பாரதிதாசன், மொழி என்பது சமூக நீதிக்கான ஒரு வலிமையான ஆயுதம் என்பதை உரக்கச் சொன்னார். கடினமான இலக்கண நடையைத் தவிர்த்து அவர் கையாண்ட எளிய தமிழ், உழைக்கும் மக்களின் 'மக்கள் மொழியை' இலக்கியத்தின் உன்னத உயரத்திற்குக் கொண்டு சென்றது. இதன் மூலம் திராவிட இயக்கக் கருத்துகளை அடித்தட்டு மக்களிடமும் கொண்டு சேர்த்து, தமிழை ஒரு 'விடுதலை மொழியாக' அவர் உருமாற்றினார்.

பாரதிதாசனின் படைப்புகள் தனிமனித வெளிப்பாடுகள் மட்டுமல்ல; அவை தமிழ்ச் சமூகத்தின் மொழி மற்றும் பண்பாட்டு மாற்றத்தின் ஆவணங்களாகும். தொல்காப்பிய மரபின் செழுமை சிதையாமல், அதனுள் நவீன விழுமியங்களை உட்புகுத்தியது இவரது தனிச்சிறப்பாகும். பண்டிதர்களுக்கு மட்டுமே உரியதாக இருந்த தமிழைச் சாமானிய மக்களின் கரங்களில் ஒப்படைத்தவர் பாரதிதாசன். இவரது கவிதை, நாடகம் மற்றும் கட்டுரைகள் அடையாள அரசியலை வலுவாக்கியதோடு, மேலாதிக்கப் பண்பாட்டிற்கு எதிரான தற்காப்புக் கேடயமாகவும் திகழ்ந்தன.

இவரது இலக்கியப் பன்முகம் என்பது கவிதை, நாடகம், கட்டுரை என அனைத்து வடிவங்களிலும் அடையாள அரசியலை வலுவாக்கியதோடு, மேலாதிக்கப் பண்பாட்டிற்கு எதிரான ஒரு தற்காப்புக் கேடயமாகவும் அமைந்தது. குறிப்பாக, சமூகச் சீர்திருத்த மொழி மற்றும் பெண்மையியல் சார்ந்த சொல்லாடல்கள், பல நூற்றாண்டுகளாகத் தேங்கிக் கிடந்த ஒடுக்குமுறைச் சிந்தனைகளைத் தகர்த்தெறிந்தன. சமூக நீதி மற்றும் சமத்துவ மொழிப் பண்பாடு இவரின் வரிகளில் ஒரு போராட்டக் குரலாக ஒலித்ததன் விளைவாக, தமிழ்ச் சமூகம் இன்று பெற்றுள்ள விழிப்புணர்வும் உரிமைகளும் ஒரு பெரும் சமூகப்பயனாக அறுவடை செய்யப்பட்டுள்ளன.

சுருக்கமாகச் சொன்னால், பாரதிதாசன் உருவாக்கிய மொழிப் பண்பாடு என்பது மொழியைப் புதுப்பித்து, இனத்தை உணர்வு பெறச் செய்து, சமூகத்தை நீதிநோக்கி நகர்த்திய ஒரு பண்பாட்டுப் புரட்சியாகும். இவரது மொழியியல் பங்களிப்புகள், வரும் தலைமுறையினருக்கும் ஒரு திசைகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. பாரதிதாசன் ஒரு கவிஞராகச் சொற்களை மட்டும் கையாளவில்லை; அவர் ஒரு பண்பாட்டுச் சிற்பியாகத் தமிழ்ச் சமூகத்தின் சிந்தனை வடிவத்தையே செதுக்கினார். இவரது படைப்புகளில் மொழி என்பது ரசனைக்குரிய 'கலை' மட்டுமல்ல, அது சமூகத்தைச் சீரமைக்கும் 'அறிவியல்'. அவரது பன்முகப் பார்வையிலான மொழிப்பண்பாடு, இன்றைய நவீனத் தமிழ்ச் சமூகத்தின் அரசியல், சமூக மற்றும் இலக்கியத் தளங்களுக்கு இன்றும் உந்துசக்தியாக விளங்குகின்றது.




yogavathy-t@thaiveedu.com

தன் சமூகத்தை மனதார நேசித்த உன்னத மனிதர்

மனுவல் ஜேசுதாசன்!

கிம் அன்ரனி ஸ்டாசியுக் (Kym Anthony Stasiuk) தமிழில்: குயின்ரஸ் துரைசிங்கம்



அன்பான குடும்பத்தினரே, நண்பர்களே, வாசகர்களே, என் மாமியார் திருமதி ஜேசுதாசன் (அம்மம்மா), என் மனைவியின் சகோதரிகள் அஜந்தா மற்றும் அனிதா, அனிதாவின் கணவர் ஏட்ரியன் மற்றும் அவர்களின் மகள் நைரீ, என் மனைவி அஜித்தா, எங்கள் பிள்ளைகள் காஸ்மன், அயன், எம்ஜே, மற்றும் அவரை மிகவும் நேசித்த அனைத்துக் குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சார்பாக, நாங்கள் அன்புடன் டடி அல்லது அப்பா என்று அழைத்த எங்கள் அன்புக்குரிய மனுவல் ஜேசுதாசனைக் கௌரவிக்கவும் நினைவு கூரவும் இப்பதிவை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

எனது மாமாவான மனுவல் ஆசீர்வாதம் ஜேசுதாசன் அர்களது இறுதி நிகழ்வில் கலந்து கொள்வதற்காக உலகெங்கிலும் இருந்து பயணம் செய்து வந்திருந்த மக்களைக் காண்டதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். மேலும், அப்பாவின் அற்புதமான வாழ்க்கையை நினைவுகூரவும், துயரத்தில் பங்கு கொள்ளவும், அவரின் வாழ்வைக் கொண்டாடவும் நீங்கள் அனைவரும் எங்களுடன் இருந்ததை அவர் உண்மையிலேயே நன்றியுடன் ஏற்றுக்கொண்டிருப்பார் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஏற்கனவே உங்கள் அனைவருக்கும் தெரிந்தபடி, அப்பா எல்லா வகையிலும் ஒரு சிறந்த மனிதர். அவர் 78 ஆண்டுகள் ஒரு நிறைவான, உயிரோட்டமான வாழ்க்கையை, அன்பு, குறிக்கோள், மற்றும் மக்களுடன் இணையும் அபாரமானதிறன் ஆகியவற்றால் நிரப்பி, நிறைவாக வாழ்ந்தார். 50 அற்புதமான ஆண்டுகள் அம்மம்மாவுடன் திருமண பந்தத்தில் இருந்த அவர், எங்கள் குடும்பத்தின் இதயமாகத் திகழ்ந்தார் - எப்போதும் எங்களுக்கு முன்னுரிமை அளித்து, எங்களை உற்சாகப்படுத்தி, அமைதியும் நிலையானதுமான அர்ப்பணிப்பு என்ன என்பதை வாழ்ந்து காட்டினார்.

அவர் தனது மூன்று மகள்களின் வளர்ச்சியில் மகிழ்வடைந்தார்: ஒரு மருத்துவராக குணப்படுத்துதலில் தன்னை அர்ப்பணித்த அஜந்தா, ஒரு வழக்கறிஞராக நீதிக்காகப் போராடி அவரது அடிச்சுவடுகளைப் பின் பற்றிய அஜிதா, மற்றும் ஒரு முன்னணி ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் தொழில்முனைவு வணிக நிர்வாகியான அனிதா ஆகியோரைக் கண்டு பெருமிதம் கொண்டார். அவர் தனது மகள்களையும், காஸ்மன், அயன், நைரி மற்றும் எம்ஜே ஆகிய நான்கு பேரக்குழந்தைகளையும் மிகவும் நேசித்தார். அவர்களும், இங்குள்ள அவரது

மருமகன்களும் அவருக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியாக இருந்தனர். அவர்கள் வளர்வதைப் பார்ப்பது, கதைகளைப் பகிர்ந்து கொள்வது, மற்றும் குடும்பத்தின் இளைய தலைமுறையினருக்கு சந்தோசத்தைக் கொடுக்கின்ற, சிரித்து மகிழ்கின்ற, அறிவார்ந்த 'அப்பாவாக' இருப்பதை அதிகம் விரும்பினார். அவர் விலங்குகளையும் நேசித்தார் - குறிப்பாக பல ஆண்டுகளாக தங்கள் வீட்டிற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வந்த சாஷா, தோலா மற்றும் மிக சமீபத்தில் மைரோ ஆகிய வெவ்வேறு செல்ல நாய்களை நேசித்தார்.

இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாவாந்துறை என்ற ஊரில் பிறந்தார், அங்குதான் அவர் அம்மம்மாவைச் சந்தித்தார். திருமணத்திற்குப் பிறகு, அவர் ஆரம்பத்தில் இங்கிலாந்தில் சட்டம் படிப்பதற்காக அம்மம்மாவை விட்டுப் பிரிந்திருந்தார். அவர் இலங்கைக்குத் திரும்பியதும், 1977-ஆம் ஆண்டின் இனக்கலவரங்கள் அவரது வாழ்க்கைப் போக்கை மாற்றிவிட்டன. தனது தாய் நாட்டில் வழக்கறிஞராகப் பணியாற்றும் அவரது கனவுகளுக்கு அரசியல் சூழல் மிகவும் பாதகமாக மாறியது. அதனால் 1979-இல், வேறு சிறந்த வாய்ப்புகளைத் தேடி இலங்கையைவிட்டு வெளியேற அவர் முடிவுசெய்தார்.

இறுதியில், கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய தீவான செஷல்ஸில் சிரேஷ்ட அரச சட்ட ஆலோசகராக அவருக்கு வேலை கிடைத்தது. அங்கு அவர் தனது மனைவி மற்றும் குழந்தைகளுடன் குடும்பமாகக் குடிபெயர்ந்தார். அந்தத் தருணத்திலிருந்து, அவர் ஒரு அர்ப்பணிப்புள்ளவராக, தனது வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் தனது குடும்பத்தினருடனே செலவிட்டார். பணியிடத்திலும், வீட்டிலும், சமூகநிகழ்வுகளிலும், வெளிநாட்டுப் பயணங்களிலும், அவர்கள் ஒருவருக்கொருவர் காட்டிய நிபந்தனையற்ற அன்பைக் கண்டால், அவர்களுடைய திருமணம் நிச்சயிக்கப்பட்டது திருமணம் என்று உங்களால் ஒருபோதும் யூகிக்க முடிந்திருக்காது.



யாழ்ப்பாணத்தில் ஐரிஷ் கத்தோலிக்க பாதிரியார்களினால் நடத்தப்பட்ட புனித பத்திரிசியார் கல்லூரியில் அப்பா கல்விபயின்றார். அங்கு அவர் பிரித்தானிய கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொண்டார், நீதியின் மீது பேரார்வத்தையும், ஆங்கிலப் பொதுச் சட்ட அமைப்பின் மீது ஆர்வத்தையும் வளர்த்துக்கொண்டார். அந்த அடித்தளம் அவரை இங்கிலாந்தில் சட்டம் பயிலவும், இறுதியில் ஒரு வழக்கறிஞராக உருவாகவும் தூண்டியது. 1980-களில் செஷல்ஸ் வழியாக கனடாவிற்கு வந்த அவர், உறுதியுடனும் தாராள மனப்பான்மையுடனும் இங்கு ஒரு புதிய வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்.

சேவையால் வரையறுக்கப்பட்ட ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கான வாய்ப்பை கனடா அவருக்கு வழங்கியது. அவரைப் போலவே, தமிழ் சமூகத்தைச் சார்ந்த பலரும் கனடாவைத் தங்களின் பாதுகாப்பான புகலிடமாகத் தேர்ந்தெடுத்தனர். 1980-களின் நடுப்பகுதியில், அறிமுகமில்லாத மற்றும் அச்சுறுத்தலான சட்ட அமைப்பில் பயணிக்கும் அகதிகளுக்கு உதவ, தமிழ் பேசும் வல்லுநர்கள் அவசரமாகத் தேவைப்பட்டனர். ஒரு வழக்கறிஞராக, அவர்களுக்கு உதவத் தகுதியுடையவராகவும், தார்மீகக் கடமையுள்ளவராகவும் தான் இருப்பதாக அப்பா உணர்ந்தார். கனடாவில் கண்ணியம் மற்றும் ஒரு பாதுகாப்பான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பத் துடிக்கும் தமிழ் அகதிகளுக்கு உதவுவதற்காகத் தனது சட்டப் பணியை அர்ப்பணித்தார்.

அவரது தொழில் வளரவளர, அம்மம்மா அவருடன் சேர்ந்து கொண்டார். காலப்போக்கில், அவர் தனது பரபரப்பான குடிவரவுப் பணிகளுக்குமேலாக, குடும்ப மற்றும் குற்றவியல் சட்ட வழக்குகள், உயில் மற்றும் சொத்து வழக்குகள், நிலம் மற்றும் வணிகப் பரிவர்த்தனைகளையும் கையாளத் தொடங்கினார். ஒரு கட்டத்தில், இளம் வழக்கறிஞர்களான எனக்கும் என் மனைவிக்கும் அவர் பொறுமையுடனும் ஞானத்துடனும் வழிகாட்டி, தனது அலுவலகத்தில் பணிக்கு அமர்த்தினார். அவரது தன்னலமற்ற வழிகாட்டுதலும் ஆதரவும் இல்லாமல், இன்று நாங்கள் அனுபவிக்கும் வெற்றிகரமான சட்டத் தொழில் வாழ்க்கையை நாங்கள் அடைந்திருக்க முடியாது. மேலும், பல ஆண்டுகளாகப் பயிற்சிபெறும் மாணவர்களுக்கு வழிகாட்டி, இதே போன்ற அன்பு மற்றும் அக்கறையால் எண்ணற்றோருக்கு அவர் உதவினார். தமிழ் சட்டசமூகத்திற்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். கனடாவில் உள்ள பல தமிழ் வழக்கறிஞர்களுக்கு அவர் வழிகாட்டினார். அவர் தனது சட்ட அலுவலகத்தை விற்ற பின்னரும்கூட, ஓய்வில் இருந்தபடியே வழக்கறிஞர் தொழிலைத் தொடர்ந்தார், சமூக உறுப்பினர்களுக்கான சிறப்பு வழக்குகளைக் கையாண்டார்.

புலம்பெயர் தமிழர்களிடையே, அப்பா மிகவும் நேசிக்கப்பட்ட ஒருவராகத் திகழ்ந்தார். அவர் பல கட்டுரைகளை எழுதினார், சமூகத்தைப் பாதிக்கும் சட்ட மற்றும் பிறவிடயங்கள் குறித்து வானொலி மற்றும் தொலைக்காட்சியில் தனது குரலைப் பகிர்ந்துகொண்டார். தனது வாடிக்கையாளர்களுடனான அவரது உரையாடல்கள், அவர்களின் போராட்டங்கள், மனவுறுதி மற்றும் வெற்றிகளைப் பற்றி அறிந்து கொண்டார். இப்படி அறிந்துகொண்ட அனுபவப் பகிர்வுகள், புதிய குடிவரவாளர்கள் எதிர்கொள்ளும் சட்ட மற்றும் உணர்ச்சிபூர்வமான சவால்களைப் பிரதி பலிக்கும் ஒரு நாவலையும் சிறுகதைத் தொகுப்பையும் எழுத அவரைத் தூண்டியது.

இளைஞராக இருந்தபோது, மிகப் பழமையான, ஏன்... தொன்மையான, செவ்வியல் தமிழ் நூல்களின் இருப்பிட மான வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பொது நூலகத் தில் அவர் பணியாற்றினார். அக்காலத்தில் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த அனைத்துப் புதிய நூல்களையும் பதிவு செய்து பட்டியலிடுவதே அவரது பணியாக இருந்தது. இது வும், அவரது புனித பத்திரிசியார் கல்லூரி வழங்கிய கல்வி யறிவும் தான், அவருக்கு அத்தகைய அழகான, நேர்த்தியான கையெழுத்து இருப்பதற்குக் காரணமாக அமைந்தது.

யாழ். பொது நூலகம் துயரமான முறையில் தீக்கிரையான போது, அந்த வேதனையான நினைவு, அவரது வாழ்நாள் பணிகளில் ஒன்றைத் தொடங்க உதவியது. தமிழ் இலக்கி யத் தோட்டத்தில் தனது தலைமைத்துவத்தின் மூலம், எழுத வும் பேசவும் பாவிக்கப்படும் தமிழ் மொழிமூலசொற்களின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஆழமான புரிதலை அவர் வெளிப்படுத்தினார். மற்றவர்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும், தமிழ் மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் செழு மையை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் அவர் ஒரு தீவிரமான ஆதரவாளராக இருந்தார்.

அவர், புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். அண் மையில், ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் தலைவராகப் பணியாற்றி, பலருக்கும் மகிழ்வையும் பிணைப்பையும் ஏற் படுத்திய நிகழ்வுகளை நடத்தினார். கற்றல் அமர்வுகள் மற்றும் வெளிநாட்டுக் குழுப் பயணங்களைக்கூட ஏற்பாடுசெய்தார்.

பல ஆண்டுகளாக, அவர் தனது சமூகத்திற்குப் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியதை ஒரு பெரும் கௌரவமா கக் கருதினார். புனித பத்திரிசியார் கல்லூரி பழையமாணவர் சங்கத் தலைவராக, சேக்கம் சமூகசேவை அமைப்பின் செய லாளராக, ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத் தலைவராக, கனடா திருமறைக்கலாமன்றத்தின் தலைவராக, மற்றும் 1995-இல் ரொறன்ரோ மாநாட்டு மையத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மூன்று நாள் சர்வதேச தமிழ் பண்பாட்டு மாநாட்டை ஏற்பாடுசெய்த சர்வதேச தமிழ் பண்பாட்டு இயக் கத்தின் செயலாளராக என, சமூகப் பணிகளில் முழுமூச்சு டன் ஈடுபட்டிருந்தார்.

அப்பாவுக்கு ஒரு படைப்பாற்றல் மிக்க ஆன்மா இருந்தது. அவர் 'கூத்து' எனும் பாரம்பரிய தமிழ் நாட்டுக்கூத்துக்கலை உட்பட பலநாடகங்களில் நடித்தார். பல ஆண்டுகளாக அவர் திருமறைக் கலாமன்றத்தில் ஈடுபட்டிருந்தார். அங்கு அவர் தனது கலைத் திறமைகளை வெளிப்படுத்தி, தமிழ் நாடகங்களில் நடிப்பு, பாட்டு, நடனம் ஆகியவற்றால் மேடை களை ஒளிரச் செய்தார். அனைவரையும் வரவேற்று, உயிர்ப் புடன் உணரவைக்கும் அந்த மகிழ்ச்சியான, சிறந்த ஆற்ற லுடன் அவர் எப்போதும் திகழ்ந்தார். கடந்த கிறிஸ்மஸ் அன்று நடந்த தனது இறுதி நாடகத்தில், பெரும்பாலும் இந் துக்களான தமிழ் முதியவர்களுக்காக ஒரு மணிநேரத்திற் கும் மேலாக மேடையில் நடித்து, இந்துக்களுக்குக் கிறிஸ் தவத்தைப் பற்றிக் கற்பிக்கும் ஒரு கதையை அவர்களுக்கு வழங்கினார்.

தனது சட்டத் தொழில் மற்றும் சமூக ஈடுபாட்டைத் திரும்பிப் பார்க்கையில், தனது முன்னாள் வாடிக்கையாளர்களைச் சந் திக்கும்போது, 'எனது பிள்ளை ஒரு வழக்கறிஞர்' அல்லது 'எனது பிள்ளை ஒரு மருத்துவர்' என்று அவர்கள் பெருமை யுடன் கூறுவதைக் கேட்கும்போது, அதுவே அவருக்குக் கிடைத்த மிகப்பெரிய வெகுமதிகளில் ஒன்றாக இருந்தது. இந்தத் தனிப்பட்ட வெற்றியுடன், செழிப்பான ஒரு தமிழ் வணிக சமூகம் உருவாவதையும் அவர் கண்டார். அது பொருளா தார ரீதியாகவும், கலாசார ரீதியாகவும் மட்டுமல்லாமல், அர சாங்கத்தின் அனைத்து மட்டங்களிலும் அரசியல் ரீதியா கவும் பங்களித்து வருவதைப் பார்த்து பெருமிதமடைந்தார்.

அப்பா விருந்தோம்பலை மிகவும் விரும்பினார். ஏஜாக்ஸில் உள்ள தனது வீட்டின் கீழ்மாடியில் அவர் கலகலப்பான விருந்துகளை நடத்தினார். அங்கு, விளையாட்டு மற்றும் தமிழ் திரைப்படங்களைப் பார்ப்பதற்காக ஒரு பெரிய திரை தொலைக்காட்சி, ஒரு மரத்தாலான நடனத் தளம், மற்றும் தமிழ் இசைக்காக ஒரு அதிநவீன ஒலி அமைப்பு ஆகிய வற்றை நிறுவியிருந்தார். அப்பா விளையாட்டுகளின் தீவிர ரசிகராகவும் இருந்தார் - குறிப்பாக கால்பந்து, கிரிக்கெட் மற்றும் லீஃப்ஸ், ராப்டர்ஸ் அணிகளை உற்சாகப்படுத்து வதில் அவருக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது. 2019-இல் ராப்டர்ஸ் அணி சாம்பியன் பட்டம் வென்றதை, குடும்பமாக அந்த நிலக்கீழ் அறை தொலைக்காட்சியில் பார்த்தது எங்கள்



சிறந்த நினைவுகளில் ஒன்றாகும். அவர் ஒரு அற்புதமான பிங் பாங் வீரராகவும் இருந்தார். நுட்பமான சர்வ் மற்றும் வலிமையான ஓவர்ஹேண்ட் ஸ்மாஷ் ஆகியவற்றை அவர் கொண்டிருந்தார். 78 வயதிலும், அவர் எங்கள் குடும்பத்தில் டேபிள் டென்னிஸில் தோற்கடிக்க முடியாத சாம்பியனாகத் திகழ்ந்தார்.

அப்பா மக்களை மட்டுமல்ல, இயற்கையையும், செடிகளையும், பூக்களையும், மரங்களையும் நேசித்தார். குறிப்பாக, ஒவ்வொரு வசந்தகாலத்திலும், கனடாவில் கோடைகாலம் முழுவதும் அம்மாவுடன் சேர்ந்து தோட்டம் செய்வதை அவர் மிகவும் விரும்பினார்.

மொத்தத்தில், கிறிஸ்துவைப் போலவே, அப்பா பெறுவதை விட கொடுப்பவராகவே இயல்பாக இருந்தார். மேலும், தனது பலபரிசுகளையும், திறமைகளையும், வளங்களையும் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சமூகத்தினருடன் பகிர்ந்து கொள்வதில் அவர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை, ஏனெனில் 'ஜேசுதாசன்' என்ற பெயருக்கு நேரடிப் பொருள் 'இயேசுவைப் பின்பற்று பவர்' என்பதாகும். அவரது ஆளுமை மிகவும் கனிவானதாகவும் வசீகரமானதாகவும் இருந்ததால், அவரை ஒரே ஒரு முறை சந்தித்தாலே மற்றவர்கள் மனதில் நீடித்த தாக்கத்தை ஏற்படுத்திவிடுவார். புகைப்படங்களில் நீங்கள் காண்பது போலவும், உங்கள் மனதில் நினைவில் கொள்வது போலவும், அவரது புன்னகை காலத்தால் அழியாததாகவும் உண்மையானதாகவும் இருந்தது. அவர் ஒரு மிகவும் சிறந்த தனித் தன்மை கொண்ட ஆன்மா.

எல்லாவற்றிற்கும் மேலாக, மனுவல் ஜேசுதாசன் அவர்கள், அன்பானவராகவும், ஞானமுள்ளவராகவும், எல்லையற்ற சாதகமான எண்ணம் கொண்டவராகவும் இருந்தார். பிரார்த்தனையின் சக்தி, நேர்மறைசிந்தனை, ஈர்ப்புவிதிகள் மீதான நம்பிக்கை உட்பட, நாம் வாழவிரும்பும் வாழ்க்கையை கற்பனைசெய்து வெளிப்படுத்தும் திறன் நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது என்ற ஆழமான நம்பிக்கையை அவர் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த மகத்தான வாழ்க்கை, இந்த உலகக் கண்ணோட்டத்தில் அவர் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் உறுதிக்கும் தெளிவான சான்றாக இருந்தது. ஒரு குறிப்பிட்ட உதாரணமாக, ரொறன்ரோவில் ஒரு நெரிசலான குடியிருப்பில் தனது இளம் குடும்பத்துடன் வசித்துவந்த போது, புடியா வீதியில் அமையவிருந்த தங்கள் வீட்டைப் பார்ப்பதற்கு முன்பே, தனது குடும்பத்தின் இளமைப் பருவத்தைக் கழிக்க விருந்த வீட்டின் துல்லியமான வரைபடத்தை அவர் கையால் வரைந்தார். தனது மனதின் ஆற்றலால் கனவுகளை நனவாக்கும் தனது திறனை நினைவூட்டும் விதமாக, அந்த வரைபடத்தை அவர் பல ஆண்டுகளுக்குப் பிறகும் பாதுகாத்துவந்தார்.

அப்பா, பிறர் சொல்வதைக் கவனமாகக் காதுகொடுத்துக் கேட்கும் குணம், தனது நகைச்சுவை உணர்வு, மற்றும் பரந்த உள்ளம் ஆகியவற்றால் மற்றவர்களை உற்சாகப்படுத்தும் ஒரு அருமையான வழியைக் கொண்டிருந்தார். கடினமாக உழைப்பது, சவாலான இலக்குகளை அடைய முயற்சிப்பது, சமூகத்திற்குத் திருப்பிக் கொடுப்பது, மற்றும் தன்னலமின்றி வாழ்ந்து குடும்பத்தைக் கவனித்துக்கொள்வது எப்படி என்பதற்கு அவர் நம் அனைவருக்கும் ஒரு உத்வேகமூட்டும் மற்றும் ஒளிமயமான உதாரணமாகத் திகழ்ந்தார். உலகெங்கிலும் உள்ள அவரது உறவினர்களும் நண்பர்களும் அவரது அன்பையும் ஊக்கத்தையும் முன்னோக்கி எடுத்துச் செல்வார்கள்.

தனிப்பட்டமுறையில், அப்பா எனக்கு ஒரு இரண்டாவது தந்தை போல ஆனார். மேலும், என்னை தன் சொந்த மகனைப் போலவே நேசித்தார். பல ஆண்டுகளாக நாங்கள் ஒரு வலுவான பிணைப்பை வளர்த்துக் கொண்டோம் - நாங்கள் ஒன்றாகப் பயணம் செய்தோம், விளையாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டோம், ஒன்றாகச் சட்டம் பயின்றோம், நாங்கள் படித்த புத்தகங்களைப் பரிமாறிக்கொண்டோம், ஒன்றாகச் சிரித்து மகிழ்ந்தோம், மேலும் பல குடும்ப நிகழ்வுகளை ஒன்றாகக் கொண்டாடினோம். அரசியல், வணிகம் மற்றும் சட்டம் உட்பட பல அறிவுசார் கருத்துகளையும் நாங்கள் ஆர்வத்துடன் பகிர்ந்துகொண்டோம்.

நாங்கள் வெவ்வேறு பின்னணியில் இருந்து வந்திருந்தாலும், எங்களுக்குள் 30 வயது வித்தியாசம் இருந்தாலும், எங்கள் பிணைப்பு, கலாசாரம், வயது, இனம்... காலத்தைக் கடந்தது. நாங்கள் முதன்முதலில் சந்தித்த கணத்திலிருந்தே அவர் ஒரு சிறப்பான மனிதர் என்பதை நான் அறிந்திருந்தேன். ஆனால், என் வாழ்வின் துணையாக இவரது மகளை நான் மணந்தபோது, அவளுடைய தந்தை என் வாழ்வில் மிகமுக்கியமான, செல்வாக்குமிக்க மற்றும் அன்புக்குரிய நபர்களில் ஒருவராகவும், என் சிறந்த நண்பர்களில் ஒருவராகவும் மாறுவார் என்பதை நான் சிறிதும் உணரவில்லை. அவர் மறைந்ததால் நாங்கள் உணரும் வெற்றிடம் மிகப்பெரியது, அவர் இல்லாமல் எதுவும் முன்போல் இருக்காது. அவருக்கு மிகவும் நெருக்கமாக இருந்த அனைவராலும் அவர் அளவிடமுடியாத அளவிற்கு உண்மையாகவே இழக்கப்படுவார்.

அவருடைய மறைவு எவ்வளவு சோகமானதாக இருந்தாலும், உங்களுக்கு அவரைத் தெரிந்திருந்தால், அவர் எல்லையற்ற சக்திவாய்ந்த சாதகமான உணர்வாற்றலால் நிரம்பியிருந்தார் என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நாம் அவருக்காகத் துக்கம் அனுசரிக்கவேண்டும் என்று அவர் எவ்வளவு விரும்புகிறாரோ, அதைவிட அதிகமாக நாம் அவரைக் கொண்டாடவேண்டும் என்றும், அவருடன் நாம் பகிர்ந்துகொண்ட சிறப்பு நினைவுகளைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்றும் அவர் விரும்புவார் என்பதை என் இதயத்தில் நான் அறிவேன்.

மனுவல் ஜேசுதாசன் எனும் அற்புதமான பரிசை இறைவன் இவ்வுலகிற்கு வழங்கியதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து கடவுளுக்கு நன்றி செலுத்துவோம். நம்முடைய இறுதி நாட்கள் வரை அவரைப் பற்றிய நமது இனிய நினைவுகளை நாம் பகிர்ந்துகொள்ளுவோம், அவருடைய சாந்தமான ஆன்மா என்றென்றும் அமைதியில் இளைப்பாறட்டும், மேலும் நமது மென்மையான இதயங்களில், அவரை நேசிக்கவும் நினைவுகூரவும் நமக்கு எப்போதும் இடமிருக்கும் என்பதை அறியச் செய்வோம்.

Kym.Anthony@thaiveedu.com



நின்ற சொல்லர்

அ. முத்துலிங்கம்

திடீரென்று நம்மை விட்டுப் பிரிந்துபோன அருமை நண்பர் மனுவல் யேசுதாசன் பற்றி எதைத்தான் எழுதுவது? மருத்துவ மனையிலிருந்து என்னுடன் பேசினார். 'ஒன்றும் பயப்படும்படியாக இல்லை' என்ற நம்பிக்கையை அவருடைய குரல் தந்தது. இறப்பதற்கு இரண்டு நாள் முன்னதாக ஒரு குறுஞ்செய்தி அவரிடமிருந்து வந்தது. அப்பொழுதும் மருத்துவ மனையில்தான் இருந்தார். 'உங்கள் உடம்பை பார்த்துக் கொள்ளுங்கள். நான் நலமே' அப்படி எழுதியிருந்தார். ஆனால் விதி வேறுவிதமான முடிவைத் தந்தது. அந்தக் கடைசி நேரத்திலும் அவர் தன்னைப் பற்றி நினைக்கவில்லை. மற்றவரைப் பற்றியே எண்ணினார். இதுவே அவருடைய மேன்மை. மனித நேயம்.

ரொறன்ரோவில் ஒரு மாலை நேரம், சமூக மையம் ஒன்றில் தற்செயலாக அவரைச் சந்தித்தேன். அவர் பிரபலமான வழக்கறிஞர். எல்லோரும் அவரை அறிவர். நான் அவருக்கு வணக்கம் சொன்னேன். அப்படித்தான் எங்கள் முதல் சந்திப்பு நிகழ்ந்தது. அவருடைய தமிழ் பற்று எங்களை அடிக்கடி சந்திக்க வைத்தது. தமிழுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்ற உந்துதல் அவரிடம் இருந்தது. ஏற்கனவே கலை விழாக்கள் பல நடத்தியிருந்தார். நல்ல பாடகர். நாட்டுக்கூத்துகள் எழுதி மேடையேற்றியிருக்கிறார். இதுவெல்லாம் நான் கேள்விப்பட்டதுதான். ஆனால், என்னை முழுக்க அவர்பால் ஈர்த்தது அவர் எழுதி வெளியிட்ட '90 நாட்கள்' நாவல் என்றுதான் சொல்ல வேண்டும்.

அதைப் பாராட்டி அவருடன் பேசினேன். அகதிகளின் பிரச்சினை பற்றி விவரிக்கும் சுவையான நூல். புதிதாக கனடாவுக்கு வருபவர்களிடம் அந்தப் புத்தகத்தை படிக்கச் சொல்லி படிக்க வைத்தேன். பலர் அதனால் பயன் பெற்றார்கள். அவர் பெயர் பிரபலமாகியது. இந்தியாவிலும் அந்தப் புத்தகம் பேசப் பட்டது.

அப்போது தமிழ் இலக்கியத் தோட்டம் இலக்கியத்துக்கான பல விருதுகளை வருடாவருடம் வழங்கி வந்தது. இலக்கியத் தோட்டத்துக்கு தலைவராக திரு. மனுவல் யேசுதாசன் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் சட்டத்தரணியாதலால் இலக்கியத் தோட்டத்துக்கு ஆரம்பத்தில் ஏற்பட்ட சில சட்டக் குழப்பங்களைத் தீர்த்து வைத்தார். தமிழ் இலக்கியத் தோட்டத்தைச் சரியான பாதையில் வழிநடத்தியதுடன், விருதாளர்கள் தேர்விலும் நல்ல ஆலோசனைகள் வழங்கினார்.

இவர் கொடைவள்ளல் என்பது எல்லோரும் அறிந்ததே. தமிழையும், தமிழ் கலாசாரத்தையும் வளர்க்கும் எந்த அமைப்புக்கும் உதவினார். ரொறன்ரோ பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைக்க நிதி திரட்டியபோது முன்னணியில் நின்று ஆதரவு தந்தார். தமிழ் சமூக மையம் கட்டடத்துக்கு நிதி தாராளமாக வழங்கியதுடன் மற்றவர்களுடைய பங்களிப்பையும் ஊக்குவித்தார். தமிழ் இலக்கியத் தோட்டத்துக்கும், இன்னும் பல அமைப்புகளுக்கும் தொடர்ந்து நிதியுதவி வழங்கி ஆதரித்தார்.

இவர் சட்டத்தரணியாதலால் இவரிடம் பலர் உதவி கோரினார்கள். புதிதாகக் குடியேறியவர்கள் பலரை நான் அவரிடம் ஆலோசனைக்கு அனுப்பியிருக்கிறேன். அவர்களுக்குத் தயங்காமல்





தன் நேரத்தைக் கொடுத்து அறிவுரை சொல்லியுள்ளார். ஆனால் பணம் வாங்க மறுத்துவிட்டார். இவரை நினைக்கும் போது

'ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப் படும்.'

என்ற திருக்குறள்தான் மனதில் தோன்றும். உயிர் வாழ்தலின் அர்த்தமே பிறருக்கு உதவுவதுதான்.

இவரும் மோனிக்காவும் எங்கள் வீட்டுக்கு அவ்வப்போது வருவார்கள். கதவு திறந்து உள்ளே வந்த நிமிடம் தொடங்கி அவர்கள் திரும்புமட்டும் வீடு சிரிப்பினால் நிறைந்திருக்கும். இவரிடம் நூற்றுக்கணக்கான வழக்குகள் வருவதுண்டு. பெயர்களைச் சொல்லாமல் சுவையான சம்பவங்களை மட்டும் கதையாகச் சொல்வார். இவர் நல்ல கதை சொல்லி. நாங்கள் விழுந்து விழுந்து சிரிப்போம்.

இவரை நினைக்கும் போதெல்லாம் 'நின்ற சொல்லர், நீடு தோறு இனியர்' என்ற வரிகள் மனதில் வரும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் யாரோ இவருக்காக எழுதி வைத்துவிட்டுப் போனதுபோல இருக்கும். இவர் சொன்ன வார்த்தையில் எப்போதும் நிற்பவர். பழகுவதற்கு என்றென்றும் இனிமையானவர்.

ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் அவருடைய வேலைப்பளு இரண்டு மடங்காகியது. இரவும் பகலுமாக அதற்கு உழைத்தார். நிறையக் கூட்டங்களுக்கும், சந்திப்புகளுக்கும் நேரம் ஒதுக்கினார். பயணங்களும் அவருடைய நேரத்தை எடுத்தன. இத்தனை பணிகளுக்கும் நடுவில் அவர் கனடா முதியோர் நிலைமை குறித்து ஒரு நாடகம் எழுதி, இயக்கி அரங்கேற்றினார். பெருந்திரளான மக்கள் நாடகத்தைப் பார்த்துப் பாராட்டினார்கள். நான் பார்த்துவிட்டு நாடகத்தை மெச்சி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். அதன் வெற்றி, இன்னும் நிறையச் செய்யவேண்டும் என்ற உத்வேகத்தை அவருக்கு அளித்தது.

ரொறன்ரோவில் இவர் வாழ்க்கையின் உச்சமான சம்பவம் ஒன்று யூலை 6, 2013 அன்று நடந்தது.

யேசுதாசனின் தந்தையார் புகழ்பெற்ற நாட்டுக்கூத்து கலைஞர். சிறுவயதில் இருந்தே யேசுதாசன் நாட்டுக்கூத்துகளில் தகப்பனாருடன் பங்கேற்றிருக்கிறார். கனடாவுக்கு குடிபெயர்ந்த காலத்திலிருந்து, தானே இயக்கிய நாட்டுக்கூத்துகள் பல வற்றை மேடையேற்றியிருக்கிறார். அப்படி ஒன்றுதான் 2013-இல் நடந்தது. கனடாவின் புகழ்பெற்ற சோனி செண்டரில் வட-அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை நடாத்திய வருடாந்த விழாவில் 'வேந்தனின் சீற்றம்' என்ற நாட்டுக்கூத்து ஆயிரம் பார்வையாளர்களின் முன் மேடை ஏற்றப்பட்டது. 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகையில் நாட்டுக்கூத்தையும், யேசுதாசனையும் பாராட்டி எழுதிய கட்டுரை வெளிவந்திருந்தது. 'ரொறன்ரோ ஸ்டார்' பத்திரிகை ஆசிரியர்களில் ஒருவர் இவரைப் பேட்டி கண்டு நேரிலும் பாராட்டினார். அப்பொழுது அங்கே இருந்த நான் பெருமையாக உணர்ந்தேன். இவருடைய வாழ்க்கையில் இந்த வெற்றி பெரும் புகழைக் கொடுத்ததோடு மன நிறைவையும் தந்தது. தன் தகப்பனாருக்கு இதை அர்ப்பணித்தது, தான் வாழும் வாழ்க்கையை பொருள் உள்ளதாக மாற்றியதாக அவர் உணர்ச்சி பொங்க என்னிடம் கூறியிருக்கிறார்.

இந்த நேரத்தில் என்ன ஆறுதல் வார்த்தைகளைக் கூறமுடியும். மோனிக்காவுக்கும், பிள்ளைகளுக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் எங்கள் இதயங்கனிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழுக்காகவும், கலைக்காகவும், மனிதநேயத்துக்காகவும் அல்லும்பகலும் ஓடியோடி உழைத்தீர்கள் அல்லவா ? சற்று ஓய்வெடுங்கள், நண்பரே.

muththulingam.a@thaiveedu.com





குடும்ப நண்பர்

கதிர் துரைசிங்கம்

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஆறாவது மகாநாடு, 1996-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் Toronto Convention Centre-இல் நடந்தபோது, திரு. மனுவல் ஜேசுதாசனை நான் முதலில் சந்தித்தேன். தன்னார்வத் தொண்டராக பணியாற்றிய எனது மகள் ராதினி மூலம், மனுவல் அவர்களின் அறிமுகம் கிட்டியது. முதல் சந்திப்பே அவரின் முப்பரிமாண ஆளுமையை வெளிப் படுத்தியது. தொழிலில் - கனடிய சட்டத்தரணி: பண்பாட்டு இயக்கத்தில்-நிர்வாகச் செயலர்: மேடையில் - நாட்டுக் கூத்துக் கலைஞர். சட்டத்தரணிகளில் பேச்சாளர்கள் ஆகவும், அரசியல்வாதிகள் ஆகவும் பார்த்திருக்கிறேன்; ஆனால் கலைஞனாக நான் சந்தித்த முதல் சட்டத்தரணி மனுவல் ஜேசுதாசன்.

அவர் மேல் ஏற்பட்ட ஈர்ப்பு, நட்பாக மலர்ந்தது, குடும்ப நட்பாக வளர்ந்தது. சட்டத்துறையில் எனது முதல் நண்பராக மனுவல் அமைந்தார். அன்றிலிருந்து எங்கள் வீட்டு வைபவங்களை மனுவல்-மெனிக்கா இணையர்கள் அலங்கரித்தனர். அவர்கள் வீட்டு வைபவங்களில் நாங்கள் பங்கேற்றோம்.

1999-ஆம் ஆண்டு '90 நாட்கள்' என்ற அவரது முதல் நாவல் மூலம், சிறந்த கற்பனை வளம்மிக்க படைப்பிலக்கியவாதியாக மனுவல் அறிமுகமானார். 'வேந்தனின் சீற்றம்' என்ற மனுவல் ஜேசுதாசனின் நாட்டுக்கூத்து நாடகம், 2003-ஆம் ஆண்டு 'உதயன்' விழாவில் மேடையேறியது. இவரின் பாட்டுடன் ஆட்டம், நடிப்பு மூன்றையும் இரசித்துக் கொண்டு இருந்த வீரகேசரி வார இதழ் ஆசிரியர் திரு தேவராஜ், 'இவர் ஒரு தொழில் முறைக் கலைஞர் தானே' என வினவிய போது, 'மனுவல் ஒரு புகழ் பெற்ற சட்டத்தரணி' என நான் கூறியதும், அவரது ஆச்சரியம் அடங்க சிறிது நேரம் எடுத்தது.

மனுவல் அவர்கள் சிறீலங்கா, இங்கிலாந்து, சீசெல்ஸ், கனடா என வெவ்வேறு கண்டங்களைச் சேர்ந்த நான்கு நாடுகளில் 50 ஆண்டுகள் சட்டத்தரணியாகப் பணிபுரிந்து, சாதனை படைத்தவர்.

2004-ஆம் ஆண்டு தாய் நாட்டில் ஏற்பட்ட சுனாமிப் பேரழிவின் போது, பாதிக்கப்பட்டவர்களை கனடாவிற்குக் குடிபெயரச் செய்ய கனடிய அரசு முன்வந்தது. அப்போது மனுவல் தனது MJ Lawyers நிறுவன சட்டத்தரணி குழுவுடன் இணைந்து. உதவி நாடி வந்தோர்க்கு ஆலோசனை வழங்குதல், படிவம் நிரப்புதல், உறுதிப்படுத்தல் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளையும் இலவசமாக இரண்டு மாத காலம் வழங்கி உதவியவர்.

சொல்புதிது (2006), சொற்கோவை (2010) என இரு நூல்கள் வெளிவரக் காரணமாய் இருந்த சொல் ஆக்கக் குழுவில், மனுவல் ஓர் உறுப்பினராக இருந்து பணி ஆற்றியவர். IMHO Canada-வின் ஸ்தாபக இயக்குனர் சபையில் அங்கம் வகித்த மனுவல், ஐக்கிய அமெரிக்காவில் பணியாற்றி வரும் அவரது நண்பர் DR Kanaga Sena மூலம் IMHO-வின் நற்பணிகளுக்கு தொடர்ந்து பங்களித்து வந்துள்ளார்.

மனுவல் அவர்கள், ரொறன்ரோவின் அமைப்புகள் பலவற்றில் காப்பாளர், இயக்குனர், தலைவர், செயலாளர், ஆலோசகர் என பல்வேறு பதவிகளை வகித்து, அவற்றின் மேம்பாட்டிற்குச் சேவை புரிந்தவர்.

சட்டம் மற்றும் அதன் நுணுக்கங்கள் தொடர்பாக மனுவல் ஜேசுதாசன் 'தமிழர் தகவல்', 'தாய் வீடு' ஆகிய மாத இதழ்களில் எழுதிவந்த கட்டுரைகள் மற்றும் வானொலி, தொலைக் காட்சி வாயிலாக வழங்கிய உரைகள், செவ்விகள் அனைத்தும் புதிய குடிவரவாளர்களுக்கு மட்டுமன்றி ஏனையோர்க்கும் வரப்பிரசாதமாக அமைந்தன.



மனுவல் அவர்களின் ஆற்றல்களையும் ஆளுமையையும் கருத்திற் கொண்டு 'தமிழர் தகவல்' அமைப்பு தனது 2008-ஆம் ஆண்டு விருது விழாவில் 'பன்முகப் புலமை வித்தகர்' எனும் பட்டத்தை மனுவல் ஜேசுதாசனுக்கு வழங்கி, தங்கப் பதக்கம் சூட்டிக் கௌரவித்தது.

பண்டிதர் அலெக்சாந்தர் தனது ஆசான் எனவும், 'அதிபர்' கனகசபாபதி, 'கவிநாயகர்' கந்தவனம் இருவரும் வழிகாட்டிகள் எனவும், தனது மணிவிழா மேடையில், கூறி மகிழ்ந்த மனுவல், இம்மூவரின் குடும்ப நண்பர் மட்டுமன்றி, குடும்பச் சட்டத்தரணியாகவும் விளங்கியவர்.

கனடாவில் கற்று LLB பரீட்சை தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் Accredited (அங்கீகாரம் பெற்ற) LLB பட்டதாரிகள் என MJ Lawyers நிறுவனத்தில் Articling (பயிற்சி) பெற்ற பலர் சட்டத் தரணிகளாகி கனடாவில் தொழில் புரிகிறார்கள்.

எதையும் சிந்தித்து, துணிந்து, ஆர்ப்பாட்டம் இல்லாமல் செய்யும் மனுவல் தான் சந்திக்கும் ஒவ்வொருவரையும் தன் வசப்படுத்தும் இயல்பு கொண்டவர். இதற்கு இவரது ஆளுமையும், கலை, இலக்கிய ஈடுபாடும் அதில் உள்ள ஆற்றலும் துணை நின்றது எனலாம். மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து, அவர்களுக்கு மதிப்பளித்துப் பழகும் பண்பு, மனுவலிடம் இருந்த காரணத்தால், அவரை நண்பர்கள் அனைவரும் நெருக்கமாகவே நேசித்தார்கள். எல்லோரிடமும் தோழமையுடன் பழகும் பாங்கு, கனிவான பேச்சு, பாராட்டும் பண்பு ஆகியன அவரின் நட்பு வட்டத்தை விரிவாக்கியது.

கனடாவில் கலாசார நிகழ்வுகள் மற்றும் அமைப்புகள் பலவற்றிற்கு ஆதரவாளராகவும் அனுசரணையாளராகவும் விளங்கிய மனுவல், எனது வேண்டுகோளின் பேரில், 'மனவெளி கலையாற்றுக் குழு'; 'பவதாரணி பாரதி கலைக்கூடம்'; 'மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்', ஜேர்மனி 'வெற்றிமணி' ஆகியவற்றிற்கு ஆதரவு நல்கிவந்தவர்.

மனுவல் தனது மனைவியுடன் விடுமுறைக்காக ஸ்ரீலங்காவிற்கு சென்ற ஒரு சந்தர்ப்பத்தில், கொழும்பில் வசித்து வந்த எனது பெற்றோரையும் சகோதரர்களையும் சந்தித்ததுடன் என்னைப் பற்றிய தகவல்களையும் திரட்டி உள்ளார். அவற்றின் அடிப்படையில், 2012-ஆம் ஆண்டு என்னைப்பற்றி வெளியான 'கதிர் உலா' என்ற பாராட்டுப் பனுவலில் சிறந்த கட்டுரை ஒன்றை எழுதி, என்னை மகிழ்வித்தார். எனது பிறந்த நாள் ஒன்றிற்கு வரசித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சமயச் சடங்கிற்கு வருகை தந்த மனுவல்-மொனிக்கா இணையர்கள், அச்சடங்கில் பங்கேற்று, எங்களை வாழ்த்தி கௌரவித்தனர்.



திருச்சபையில் ஜேசுதாசன் ஆகவும், ஆலயங்களில் ஆசீர்வாதம் ஆகவும், சமூகத்தில் மனித நேயம் நிறைந்த மனுவல் ஆகவும் வாழ்ந்தவர் 'மனுவல் ஆசீர்வாதம் ஜேசுதாசன்' அவர்கள்.

மனுவலைப் போலவே, அவரது மனைவியும் பிள்ளைகளும் தங்கள் துறைகளைக் கடந்த ஆற்றலும் பன்முகத் திறமைகளும் உடையவர்கள்.

மொனிக்கா: வீட்டு நிர்வாகியும், சட்ட நிறுவன நிர்வாகியும் ஆவார். **அஜந்தா:** M.D., வைத்திய கலாநிதி; பரதநாட்டிய அரங்கேற்றம் கண்டவர்; நாட்டுக்கூத்து கலைஞர். **அஜித்தா:** LLB, கனடிய சட்டத்தரணி; பரதநாட்டியத்தில் பயிற்சி பெற்றவர்; நாட்டுக்கூத்து கலைஞர். **அனித்தா:** BBA வணிக மற்றும் நிதி நிர்வாகி; பரதநாட்டியத்தில் பயிற்சி பெற்றவர்; நாட்டுக் கூத்துக் கலைஞர்; கர்நாடக இசையில் பயிற்சி பெற்றவர். மனுவல் ஜேசுதாசனின் குடும்பம் ஒரு பல்கலைக்கழகம் எனச் சொன்னால் அது மிகையாகாது.

'ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தின்' (STC-Ontario) தலைமையை ஏற்ற மனுவல், 2024-ஆம் ஆண்டு மன்றத்தில் இடம் பெற்ற தீபாவளி நிகழ்வுக்கு என்னைச் சிறப்புப் பேச்சாளராக அறிமுகம் செய்தார். அவரின் மொழிப்பற்று, கலைத்திறன் மற்றும் மன்ற நிகழ்ச்சிகளால் கவரப்பட்டு, இந்த ஆண்டில் நான் உறுப்பினராக இணைந்தேன்.

வாரா வாரம் தொலைபேசி மூலமும், தேவைகள் நிமித்தம் நேரிலும், என்னுடன் தொடர்பில் இருந்த நண்பர் மனுவல் ஜேசுதாசனை 2026 மார்ச் 17 அன்று Centenary Hospital-இல் சந்தித்தேன். என்றும் போல் மொனிக்கா அவர் அருகில் நின்றார். அஜந்தாவும் உடன் இருந்தார். சோர்வாய் இருந்த போதும், மனுவல் தனது புன்னகையை இழக்கவில்லை.

சிறிய உரையாடலின் முடிவில், 'நீங்கள் விரைவில் வீடு திரும்புங்கள், சந்திப்போம்' என்றேன், 'சரி' என்றார், மனுவல் ஜேசுதாசன்.

மார்ச் 22 அதிகாலை, மனுவல் ஜேசுதாசன் இனி ஒருபோதும் என்னைச் சந்திக்க வரமாட்டார் என்ற செய்தி அறிந்ததும்: பாவேந்தர் பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில்...' என்று தொடங்கும் கவிதையில் வரும் 'அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால் ஆடிக் காட்டமாட்டாயா?' என்ற வரிகள் நினைவிற்கு வந்தன.



kathir.thuraisingam@thaiveedu.com

ஜேசுதாசனும் சூரி அண்ணனும்...!

அ. யேசுராசா

ஜேசுதாசன் குடும்பம் நாவாந்துறையைச் சேர்ந்தது; எங்கள் குடும்பம் குருநகரைச் சேர்ந்தது. இரத்த உறவு ஏது மில்லை; அப்படியிருக்க எவ்வாறு இவ்வளவு உறவு நெருக்கமெனப் பலர் கேட்டுள்ளனர். 1995-இல் ஜேசுதாசனின் தந்தை மனுவல் ஆசீர்வாதம் மாமா இறந்தபோது, மரணச் சடங்குக்காக நாவாந்துறைக்குச் சென்றிருந்தோம். அங்கே போனதும் பிரேதப் பெட்டியைத் தொட்டபடி அம்மா 'அண்ணன்... அண்ணன்...' எனச் சொல்லித் தொடர்ந்து அழுதபடியிருந்தா. பழையவர்களுக்குத் தெரியும்; ஆனால் இப்படி அழும் இவர் யாரெனத் தெரியாத புதிய தலைமுறையினருக்கு ஆச்சரியம்! கோவிலிலிருந்து சவக்காலைக்கு உறவினர்கள் பிரேதப் பெட்டியைத் தூக்கிச் சென்றபோது, இடைவழியில் சிறிது தூரம் நானும் பிரேதப் பெட்டிக்குத் தோள் கொடுத்துச் சுமந்துசென்றேன்; என்னையும் பலர் ஆச்சரியமாகப் பார்த்தது இன்றும் நினைவிலுள்ளது.

***

எனது அம்மா 1921-இல் பிறந்தவர். அம்மாவின் சிறுவயதிலேயே அப்பு (அம்மாவின் தகப்பன்) இறந்துவிட்டார். பெரிய - சொந்த வளவில் ஆச்சியும் அம்மாவும் பெரியம்மாவும். ஒரு கொட்டிலில் வசித்தனர். (நான் சிறுவனாக இருந்தபோதுதான் பிந்திய பெரிய கல்வீடு கட்டப்பட்டது) அதே வளவில் ஏற்கெனவே தனது தகப்பனை இழந்துவிட்ட சிறுவனான ஆசீர் மாமாவும் தாயும் இன்னொரு கொட்டிலில் வசித்தனர். ஆசீர் மாமா, அம்மா, பெரியம்மா எல்லோரும் சிறுவயது முதல் இவ்வாறு சேர்ந்தே சகோதர பாசத்துடன் வளர்ந்தனர். அக்காலத்தில் கரையூரில் வாழ்ந்த (பிற்காலத்தில்தான் குருநகர் எனப் பெயர் மாற்றப்பட்டது) கொஞ்சக் குடும்பங்கள், பிற்காலத்தில் நாவாந்துறைக்குச் சென்றுவிட்டனர். ஆசீர் மாமாவும் தாயும் அவ்வாறே நாவாந்துறைக்குச் சென்றனர்.

ஆயினும் தொடர்புகள் தொடர்ந்தன; இரு குடும்பத்தவர்களின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் வழியாகவும் இன்று வரை நெருங்கிய அந்தப் பாசப்பிணைப்புகள் செழித்துள்ளன. ஒரு மாதத்தில் இரண்டு தடவைகளாவது முன்பு ஆசீர் மாமா எங்கள் வீட்டுக்கு வந்துபோவது எனக்கு நினைவிலுள்ளது.

***

நான் பிறந்தது 1946 மார்கழி; ஜேசுதாசன் பிறந்தது 1948 பங்குனி - இருவருக்கும் ஒன்றேகால் வருட வயது வித்தியாசம். சுவாமிக்குப் படிப்பதற்காக நுகேகொடையிலுள்ள 'யூனியறேற்' என்ற செமினரிக்கு அவனை அனுப்பி வைத்தனர் பெற்றோர்; அங்கு சில்லாலையைச் சேர்ந்த





அல்போன்சும் மாணவனாக இருந்தார். என்ன காரண மெனத் தெரியவில்லை; இருவருமே கொஞ்சக் காலத்தின் பின் செமினரியை விட்டு விலகி, ஊருக்குத் திரும்பிவிட் டனர். பிற்காலத்தில் - எழுபதுகளில் இதே அல்போன்ஸ் எனது இரண்டாவது தங்கையைத் திருமணம் செய்து, தற்போது குடும்பத்துடன் அமெரிக்காவில் வசிக்கின்றார்.

யாழ்ப்பாணம் திரும்பியபின் சம்பத்திரிசியார் கல்லூரியில் ஜேசுதாசன் கல்விகற்றார். கல்வியில் கெட்டிக்காரனா கவே இருந்தார். நாவாந்துறை சென். மேரிஸ் கழக உதை பந்தாட்ட அணியின் பி. பிரிவில் அவர் விளையாடியதைப் பார்த்திருக்கிறேன். குருநகர், பாசையூர், நாவாந்துறை ஆகிய கடலோரக் கிராமங்கள் உதைபந்தாட்டத்தில் பேர் பெற்றவை. ஜேசுதாசனும் அதில் நல்ல இரசிகனாயுமிருந் தார். பிந்திய காலங்களில் ஒரு தடவை சந்திக்கையில், 'சரசக்காவட ரொக்கட்சன் புட்போளில இங்க கலக்கி றான்... அந்தமாதிரி விளையாட்டு...!' என்று வியந்தது, இன்னும் கண்ணுக்குள் நிற்கிறது! வெளி மாவட்டங்களில் அக்காலங்களில் நான் பணியிலிருந்ததால், அவனது சிறப் பான ஆட்டத்தைப் பார்க்கக் கிடைக்கவில்லை. ரொக் கட்சன் எனது ஒன்றுவிட்ட அக்காவின் மகன்; சம்பத்திரி சியார் கல்லூரி அணியிலும், பாடும்மீன் கழக அணியிலும் புகழ் பெற்றவன்; தேசிய இளைஞர் உதைபந்தாட்ட அணியிலும் இடம்பெற்றவன்!

***

ஜேசுதாசன் படிப்பில் கெட்டிக்காரனாயினும், விஞ்ஞானப் பிரிவில் கற்ற அவர், அக்காலத்தில் சில குழப்படிகளால் ஒ.எல். சோதனையில் சித்தியடையவில்லை. மாமா கண் டித்திருக்கிறார்; 'சூரி அண்ணனைப் பார்..!' என்று என்னை உதாரணம் காட்டி அடிக்கடி அவர் கதைப்பதாகவும், கேள்விப்பட்டிருக்கிறேன். கோபத்தில் ஜேசுதாசன் வீட் டைவிட்டு வெளியேறி, குருநகரிலுள்ள எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவிடம், 'மாமி.., நான் இனி இஞ்ச இருந்து படிக்கப்போறன்...' என்று சொல்லவே, அம்மாவும் சரியென்று சொன்னார். விஞ்ஞானப் பிரிவை மாற்றி கலைப்பிரிவுப் பாடங்களைப் படிக்கப்போவதாகச் சொல்லி, தானாகவே அக்கறையுடன் படித்தார். நான் அவ்வேளை ஏ.எல். சோதனை எடுத்திருந்தேன்; தபாற்கந்தோர்த் தலைவரும் தந்தியாளரும் சேவைக்கான போட்டிப் பரீட்சையும் எழுதி யிருந்தேன். ஜேசுதாசன் ஒ.எல். சோதனையில் சித்திபெற் றார். சிறிது காலத்தின்பின் எனக்கு வேலைக்கான நியமனக் கடிதம் வந்து, 1967-இன் ஆரம்பத்தில், கொழும்புத் தலைமைத் தபாற் கந்தோருக்குச் சென்றுவிட்டேன். 1968-ஆக இருக்கலாம்; ஜேசுதாசனிடமிருந்து கடிதமொன்று வந்தது. அதில், தான் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை எழுதப்போவதாகவும், பொது அறிவு, பொது விவேகம் ஆகியவற்றுக்கான வழிகாட்டி நூல்களை, அற்லஸ்ஹோல் என்ற தனியார் கல்வி நிறுவனத்தில் வாங்கி அனுப்பு மாறும் கேட்டிருந்தான். மருதானையிலிருந்த அந்த நிறு வனத்துக்குச் சென்று அவற்றை வாங்கி, பொதி அஞ்சலில் அனுப்பினேன். அந்த நுழைவுச் சோதனையில் தேறி, சட் டக் கல்லூரியில் கற்பதற்குக் கொழும்பு வந்த ஜேசுதாசன், புஞ்சி பொரளையிலுள்ள 'கத்தோலிக்க விடுதி'யில் தங்கிப் படித்தார்.

***

ஒரு நாள் சந்தித்தபோது, றாகமவுக்குக் கிட்ட கருங்கல் லால் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுக்கொண்டிருந்த கத் தோலிக்க தேவாலயத்தைப் போய்ப் பார்க்கவேண்டுமெனச் சொன்னான். அடுத்துவரும் ஞாயிறன்று போவதாக முடி வெடுத்து, அன்று தொடருந்தில் சென்று றாகமவில் இறங்கி, சுமார் ஒரு மைல் தொலைவிலுள்ள தேவத்த என்ற இடத்துக்குப் பேருந்தில் சென்றோம். சூழலும் கோவி லும் வித்தியாசமாக இருந்தன. எல்லாவற்றையும் பார்த் தபின், சிறிது நேரம் கோவிலின் உள்ளே ஜேசுதாசன் செபம் சொல்லிக்கொண்டிருந்தார்; நான் வெளியே வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றேன். செபம் முடிந்து வெளியில் வந்த ஜேசுதாசன், 'அண்ணன், கோவில் சுவா மியையும் சந்தித்துவிட்டுப் போவம்' என்றார். இருவரும் சுவாமி தங்கியிருக்கும் 'அறைவீடு'க்குச் சென்றோம். நடுத் தர வயதுச் சுவாமியொருவர் அங்கு இருந்தார். ஜேசுதாசன் முதலில் அவருக்கு ஆங்கிலத்தில் வணக்கம் சொல்லி, 'நாங்கள் இருவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் - கோவிலைப் பார்க்க வந்தோம்' எனத் தெரிவித்தார். சிங்க ளவரான அந்தச் சுவாமி உடனே, 'Two kallaththonies are from Jaffna!' என்று சொன்னார். கோபமடைந்த நான் உடனே, 'Vijaya is the first kallaththoni in Ceylon. Our villages are in Jaffna' என்று சொன்னேன்; அவர் உடனே சிரித்துச் சமாளிக்கப் பார்த்தார். எரிச்சல் அடைந்திருந்த

இருவரும் அவருடன் தொடர்ந்து கதைக்க மனமின்றி, உடனே திரும்பிவிட்டோம். ஒரு கத்தோலிக்க மதகுருவிடம் அத்தகைய செயலை அன்று எதிர்பார்க்கவில்லை! ஆனால் நெருக்கடிகள் அதிகரித்த பிந்திய காலங்களில், மேலும் மோசமான நிலைமைகள் பலவற்றைச் சிங்களக் கத்தோலிக் கச் சூழலில் கசப்புடன் காணநேர்ந்தது! அர சாங்கத்தின் பொருளாதாரத் தடைகளுக்குள் வட பிர தேசம் இருந்தபோது, 1987-இல் இந்திய விமானங்கள் உண வுப் பொதிகளைப் போட்டன. கருணையினால் அல்ல!; தனது பூகோள அரசியல் தேவைக்காகவே இந்தியா அதைச் செய்தது என்பது வேறு விடயம். ஆனால், பொரு ளாதாரத் தடைகளைக் கண்டிக்காத தென்னிலங்கைச் சிங்களக் கத்தோலிக்க சமூகம் - மதகுருமார், அருட்கன னியர்கள், பொதுநிலையினரெனப் பெரும் எண்ணிக்கை யானோர் - இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்டமையைக் கண்டித்துக் கொழும்பு வீதிகளில் ஊர் வலம் போனமை, எரிச்சலுடன் நினைவுக்கு வருகிறது.

***

ஜேசுதாசனுக்கு புத்தகங்கள் வாசிப்பதில் ஈடுபாடு இருந் தது; அதிலும் ஆங்கிலக் கவிதை, கதைகளை வாசிப் பதில் கூடுதல் விருப்பம் இருந்தது. ஒருநாள் இருவரும் கொழும்பு பொது நூலகத்துக்குச் சென்றோம், பருவ இதழ்ப் பகுதியில் பலவற்றைப் பார்த்து விட்டு, புத்தகங்கள் உள்ள பகுதிக்குச் சென்று சிலவற்றைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தோம். ஆங்கிலப் பகுதியில் ஒரு கவிதைத் தொகுப்பை எடுத்துப் பார்த்தபோது, சாரா ரீஸ்டேல் என்ற அமெரிக்கப் பெண் கவிஞரின் சுமார் பத்து வரிகளுக்குட் பட்ட சிறிய கவிதையொன்று என்னைக் கவர்ந்தது. அதனை ஜேசுதாசனிடம் காட்டியபோது அவருக்கும் பிடித்துக் கொண்டது; உடனே ஒரு கடதாசித் தூண்டில் அக்கவிதை யைக் குறித்துக்கொண்டு, நூலகத்தில் சேர்ந்து இதுபோன்ற புத்தகங்களைப் படிக்கவேண்டுமென்று சொன்னார். இது நடந்தது 1969 அல்லது 1970-களாக இருக்கலாம். கவிதை வரிகளை நான் மறந்துவிட்டேன்; ஆனால் சாரா ரீஸ்டேல் பெயர் மட்டும் இன்றும் நினைவிலுள்ளது. 2016-இல் கனடா சென்று ஜேசுதாசனின் வீட்டில் தங்கிநின்றபோது ஒருநாள், கொழும்பு பொது நூலகத்துக்குச் சென்றதை நினைவு படுத்தியபோது, உடனே சாரா ரீஸ்டேல் பெயரைக் குறிப் பிட்டுவிட்டு, அந்தக் கவிதையையும் சொல்லிக் காட்டி னார்; நான் ஆச்சரியப்பட்டேன்!

***

1975-இல் சட்டக்கல்லூரிப் படிப்பை முடித்தபின் நாவாந்து றையில் மனைவி மொனிக்காவின் வீட்டிலும் பிறகு கடற் கரை வீதியிலிருந்த ஒரு வீட்டிலும் வசித்தார்; யாழ்ப்பாண நீதிமன்றில் சட்டத்தரணியாகப் பணியாற்றினார். பிறகு 1978-இல் பரீஸ் சென்று அங்கு ஆறு மாதங்கள் இருந்த பின், இலண்டன் சென்று சொலிசிற்றர் படிப்பை முடித்த பின் 1980-இல் இலங்கை திரும்பினார். யாழ்ப்பாணத்தில் பிரதான வீதியிலுள்ள ஒரு வாடகை வீட்டில் குடும்பத் துடன் வசித்தபடி, யாழ்ப்பாண நீதிமன்றில் பணியாற் றினார். பிறகு 1982-இல் செஷெல்ஸ் தீவு சென்று நீதிபதி யாகப் பணியாற்றி, 1986-இல் கனடாவுக்குச் சென்று குடி யேறினார். அங்கு சட்டத்துறையிலும் சமூகச் செயற்பாடுக ளிலும் அர்ப்பணிப்புடன் தொடர்ச்சியாக ஈடுபட்டு, ஒரு முக்கிய ஆளுமையாகப் பின்னர் அடையாளம் காணப் பட்டமை மகிழ்ச்சிக்குரியது. தமிழ்ச் சட்டத்தரணிகள் அதிக மில்லாத அன்றைய கனடாச் சூழலில், மனிதாபிமான உணர்வுடன் அவர் தமிழர் பலருக்குச் சட்ட உதவி வழங்கி யமையைக் கேள்விப்பட்டிருக்கிறேன்; அது முக்கிய மானது. சாதாரண குடும்பப் பின்னணியிலிருந்து சமுதாய ஏணியில் மேலே மேலே எறிச்செல்லும் பெரும் அவா, அவரிடம் ஆழமாக வேரூன்றியிருந்தது. சுய முன்னேற்றத் துக்குரிய ஆங்கில நூல்களை அடிக்கடி வாசிப்பார். குறிப் பாக டேல் காணர்ஜியில் அவருக்குக் கூடுதல் விருப்பம்; பல நூல்களைச் சேகரித்து வைத்துள்ளார்; அவைபற்றிக் குறிப்பிட்டு என்னையும் வாசிக்கும்படி சொல்லுவார். ஆனால் நானோ, இந்தச் 'சமுதாய ஏணி'யில் அக்கறையற் றவன் என்பதால், சுய முன்னேற்ற நூல்களை வாசிப்ப தில்லை. ஆயினும், தனது இலக்கினைத் தேர்ந்து உரிய முயற்சிகளில் ஈடுபடுதல் என்பதில், ஜேசுதாசனின் வாழ்க்கை பலருக்கு உதாரணமாகலாம்.

***





போர்ச்சூழல், இடப்பெயர்வுகள், வடபிரதேசத்தின் வசதிக் குறைபாடுகள் போன்றவற்றால் - பிந்திய காலங்களில் இருவருக்குமான நேரடித் தொடர்பு குறைந்துவிட்டது; இடைக்கிடை சிறிய தொடர்புகள் மட்டும் இருந்தன. ஆனால், அவ்வப்போது சில தகவல்களை வேறு வழிகளில் அறிய முடிந்ததுதான். நீண்ட காலத்தின் பின், 2016-இல் ஜேசு தாசன் யாழ்ப்பாணம் வந்தபோது, எங்கள் வீட்டில் நான் கைந்து நாள்கள் தங்கினார். கனடாவுக்குத் திரும்பும் நாளன்று, தான் கனடா சென்றபின் நானும் மனைவியும் அங்கு வருவதற்குரிய ஒழுங்குகளைச் செய்து அறிவிப்ப தாகவும், இருவரும் கட்டாயம் வரவேண்டு மென்றும் சொல் லிச் சென்றார். மூன்று மாதங்களின் பின், எல்லா ஒழுங்குக ளையும் தனது தம்பி ஆசைதாசன் மூலம் செய்து எமக்கு அறிவிக்கவே, இருவரும் 2016 நடுப்பகுதியில் கனடா சென்று, அஜெக்சிலுள்ள ஜேசுதாசனது வீட்டில் இரண்டு மாதங்கள் தங்கினோம். எனது 'நினைவுக் குறிப்புகள்' நூலின் வெளியீட்டு நிகழ்வை, குருநகர் சமூகசேவை அமைப் புடன் இணைந்து அங்கு சிறப்புற ஒழுங்குசெய்தார்.

கனடாவில் அந்த இரண்டு மாதங்கள் மகிழ்ச்சியான பய னுள்ள அனுபவங்களைத் தந்தன. உறவினர்கள் - ஊரவர் களைச் சந்தித்தல் ஒருவகையானால்; தெரிந்த - பழக்க மில்லாத, பல்வேறு துறைசார்ந்த பலரைச் சந்தித்துக் கதைப்பது இன்னொரு வகையில் புதிய அனுபவங்களைத் தந்தது. முக்கியமான இடங்களுக்குச் சென்று பார்க்கும் வாய்ப்புகளும் கிடைத்தன. இந்த வாய்ப்புகளுக்கெல்லாம் ஜேசுதாசனுக்கும் மொனிக்காவுக்கும், நானும் மனைவியும் நன்றிக் கடன் பட்டுள்ளோம் என்றுதான் சொல்லவேண்டும்.

இலங்கை திரும்புவதற்கு இரண்டொரு நாட்களின் முன், முக்கியமானதெனக் கூறிச் சிலவற்றை அவரிடம் குறிப் பிட்டேன். வாழ்க்கையில் செல்வத்தையும் சமூகத்தில் முக் கியமானதோர் இடத்தையும் அவர் பெற்றுவிட்டார். அப்போது கனடா இலக்கியத் தோட்டம் அமைப்பிலும் முக்கியமான ஒருவராக இருந்தார்; எழுத்தாளர் அ. முத்துலிங்கத்துடன் மிக நெருக்கமானவர். அதன் காரணமாகவும் ஒருநாள் இரவு, அ. முத்துலிங்கம் எனக்கும் மனைவிக்கும் தனது வீட்டில் விருந்தளித்தார். ஏற்கெனவே ஒரு நாவலையும் சிறுகதைத் தொகுப்பொன்றையும் வெளியிட்டுள்ளார். ஆகவே இனி, பணம் தேடும் சட்டத் தொழிலில் ஓய்வுபெற்று, அவருக்கு ஈடுபாடுள்ள இலக்கியத்துறையில் கூடுதலாக ஈடுபடவேண்டும்; ஆங்கிலத்திலிருந்து பலவற்றை மொழி பெயர்க்கலாம்; நல்ல விடயங்களைத் தமிழில் அறிமுகப் படுத்தலாம்; சொந்தப் படைப்பு முயற்சிகளிலும் ஈடுபட லாம் என்பவற்றையே அன்று வற்புறுத்தினேன். தனக்கும் அந்த எண்ணம் அடிமனதில் உள்ளதாகவும், சிலவருடங் களில் ஓய்வுபெற்றுச் செயற்படப்போவதாகவும் அவர் சொன்னபோது, நான் அது நல்லதென்றேன்!

இறுதியாக, முகநூலில் வந்த எனது சிறு குறிப்புடன் இதனை முடிக்கலாம்; அது வருமாறு :

'மரணம் கள்வனைப் போல் வரும்'
என்பதை,
சமய பாடத்தில்
சிறுவயதுமுதல் அறிந்திருந்தாலும்,
அதிர்ச்சியான செய்தி இது!

'அண்ணன்..!' என்று அழைக்கும்
அவனது குரல்,
என்றென்றைக்குமாய்
இனிக் கேட்கப்போவதில்லை
என்பதை,
இழப்பின் கசப்புடன்
ஏற்பதைத் தவிர,
வேறு வழியுமில்லைத்தான்;
எனது ஆழ்ந்த அஞ்சலி!



Jesurasa.A@thaiveedu.com

அமரர் மனுவல் ஆசீர்வாதம் இயேசுதாசன்

– குயின்ரஸ் துரைசிங்கம்



சட்டத்தரணி மனுவல் யேசுதாசன் அவர்களது இழப்பு, அவரது குடும்பத்திற்கும் உறவுகளுக்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்திற்கும் ஒரு பேரிழப்பாக அமைந்துவிட்டது.

மிக அற்புதமான ஒரு பண்பாளர். மனித நேயமும் மனித மாண்பும் மனிதப் பண்பும் தெரிந்த, அறம் தவறாது வாழ்ந்த அற்புதமான மனிதர். எந்த நிதியும் பெற்றுக்கொள்ளாமல், இவர் வழங்கிய சேவைகளும் உதவிகளும் ஏராளம். தமிழர் சமூகத்திற்காக தன்னலமின்றி உழைத்த அற்புதமான தன்னார்வத் தொண்டர்.

78 ஆண்டுகள் ஒரு நிறைவான, வெற்றியான, ஊருக்கும் உறவுகளுக்கும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மைபயக்கும் கற்பகதருவாக வாழ்ந்த ஓர் அன்பர். யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்வி பயின்ற இவர், அங்கு ஒரு பன்முகத் திறமைகள் கொண்ட சிறந்த மாணவராக விளங்கினார். பாடற்குழு உறுப்பினர், நாடகங்கள், மேடை நிகழ்வுகளில் முக்கிய அங்கத்தவர், பேச்சுப்போட்டி, விளையாட்டுத் துறை, இல்ல விளையாட்டுப் போட்டிகள் என அனைத்திலும் தனது திறமைகளை வெளிப்படுத்தினார். ஒரு கத்தோலிக்க குருவாக வருவ தற்கான ஆர்வத்தை வெளிப்படுத்தி, தனது குருத்துவக் கல்வியையும் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில், இளைஞராக இருந்தபோது, பழமையும் தொன்மை யும் கொண்ட செவ்வியல் தமிழ் நூல்களின் இருப்பிடமான வரலாற் றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் இவர் பணியாற்றினார். அக்காலத்தில் கையெழுத்தில் எழுதப்பட்டிருந்த அனைத்து புதிய நூல்களையும் பதிவுசெய்து பட்டியலிடுவதே இவரது பணியாக இருந்தது.

1975-இல் சட்டப்படிப்பை முடித்து, யாழ்ப்பாண நீதிமன்றில் சட்டத் தரணியாகப் பணியாற்றினார். பின்னர், இலண்டன் சென்று சட்ட மேற் படிப்பை முடித்தபின் இலங்கை திரும்பினார். நாட்டின் பிரச்சினைகள் காரணமாக, கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள சிறிய தீவான செஷல்ஸில் சிரேஷ்ட அரச சட்ட ஆலோசகராக வேலை பெற்று, தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் நாட்டிலிருந்து குடி பெயர்ந்தார்.

அங்கு சிலகாலம் பணியாற்றிய பின்னர், 1986-இல் கனடாவிற்கு வந்த அவர், சட்டத்துறையில் காலடி வைத்த காலத்திலிருந்து, தன் னாலியன்ற வகையில் எல்லாம் புதிய குடிவரவாளர்களுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கத் தவறியதில்லை. தனது சட்ட அலு வலகம் ஊடாகவும் குடும்பப் பிரச் சினைகள், கிரிமினல் குற்றங்கள், சொத்து மற்றும் வீடு வாங்க விற்கத் தேவைப்படும் சட்ட அலுவல்கள் என, பல்வேறு சேவைகளை சிறப்பாக வழங்கிவந்தார்.

சேக்கம் சமூகசேவை அமைப்பின் நிர்வாகக் குழுவில் முக்கிய உறுப்பினராக விளங்கிய திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்கள், அதன் செயலாளராகவும் பணியாற்றி அளப்பரிய சேவை செய் தார். புதிய குடிவரவாளர்களுக்கு ஆலோசனைகளை வழங்கி, பல்வேறு உதவிகளையும் செய்துகொடுத்து, அவர்களது புலம் பெயர்வின் ஆரம்ப அத்தியாயத்தில் காணப்பட்ட சவால்களைக் குறைப்பதற்கு பெரிதும் பங்களித்தார்.

ரொறன்ரோவிற்கு ஏராளமான கத்தோலிக்க குடும்பங்களும் புலம்பெயர்ந்து வந்துகொண்டிருந்த நிலையில், ரொறன்ரோ அதியுயர் கத்தோலிக்க மறைமாவட்டத்தினால் தமிழ் கத்தோலிக்க



மக்களுக்கென வழிபாடுகளை நடத்துவதற்கான ஆரம்ப செயற்பாடுகளில் முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவர். இதனால் உருவாக்கப்பட்ட தமிழ் கத்தோலிக்க ஆன் மீகப் பணியகத்தின் நிர்வாகக் குழுவில் ஓர் உறுப்பினராக இணைந்து, அதன் வளர்ச்சிக்கும், அதை ஒரு தமிழ்ப் பங்காக வளர்த்தெடுப்பதற்கும் அரும்பாடுபட்ட அன்பர். பின்னர் உரு வாகிய தூய ஆரோக்கிய அன்னை தமிழ் கத்தோலிக்க பங்கின் இருப்பிற்கும், அதன் சிறந்த ஆரம்பகால செயற்பாட் டிற்கும் அயராது உழைத்தவர்.

1993-இல், திருமறைக்கலாமன்றத்தின் இயக்குநர் அருட்கலா நிதி நீ. மரியசேவியர் அடிகள் கனடாவிற்கு வருகை தந்தபோது, அவரது வேண்டுகோளுக்கிணங்க, கனடாவில் திருமறைக் கலாமன்றத்தின் கிளையை நிறுவி, அதன் முதலாவது தலை வராகப் பொறுப்பேற்றார். அவரது சிறப்பான நிர்வாகத்தில், பல கலைஞர்களும் நிர்வாகத் திறமைமிக்கோரும் இணைந்து கொண்டு, ஒரு சில வருடங்களில் கனடா திருமறைக் கலாமன் றத்தை சிறந்த நிலைக்குக் கொண்டுசென்றனர். இவரது தலை மையில், நூற்றுக்கும் அதிகமான ரொறன்ரோ வாழ் சிறந்த கலைஞர்களை உள்ளடக்கியதாக, முதன்முதலில் 'பலிக் களம்' என்ற பாரிய திருப்பாடுகளின் காவியம் மேடையேறி வரலாறு படைத்தது. கே.எஸ். பாலச்சந்திரன், சிவா சின்னத் தம்பி போன்ற முன்னணிக் கலைஞர்களும் பங்கேற்றுசாதனை படைத்தனர்.

1995-இல் ரொறன்ரோ சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், வர லாற்றுச் சிறப்புமிக்க மூன்று நாள் சர்வதேச தமிழ் பண்பாட்டு மாநாட்டை 'சர்வதேச தமிழ் பண்பாட்டு இயக்கம்' நடத்தியது. இந்த பண்பாட்டு இயக்கத்தின் செயலாளராகவும் திரு. மனுவல் ஜேசுதாசன் முழுமூச்சுடன் ஈடுபட்டிருந்தார்.

'தமிழ் இலக்கியத் தோட்டம்' என்ற அமைப்பில் இணைந்து, எழுதவும் பேசவும் பாவிக்கப்படும் தமிழ் மொழிமூல சொற்க ளின் முக்கியத்துவத்தைப் பற்றிய ஆழமான புரிதலை அவர் வெளிப்படுத்தினார். இவ்வமைப்பின் மூலம், தமிழ் மொழியின் சிறப்புகளை மேம்படுத்துவது, சாதனைத் தமிழர்களை கௌர விப்பது என, விரிந்துபட்ட பணிகளை மேற்கொண்டார். அத் துடன், மற்றவர்களுக்குக் கல்வி கற்பிப்பதிலும், தமிழ் மொழி, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தின் செழுமையை மேம்படுத் துவதிலும் பாதுகாப்பதிலும் பல்வேறு செயற்பாடுகளை முன் னெடுத்தார்.

யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடா கிளையின் தலைவராகவும், நிர்வாகக் குழு உறுப்பின ராகவும் பணியாற்றியுள்ளார். இவர் தலைவராக இருந்த காலத் தில், பல்வேறு கலை நிகழ்வுகளை மேடையேற்றிய பெருமை யும் இவருக்கு உண்டு.

திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்கள் ஓர் ஆற்றல்மிக்க நாட் டுக்கூத்துக் கலைஞர், தானே பாடி நடிக்கக்கூடிய ஒருவர், பிரதான அரச பாத்திரம், மற்றும் அரசிக்கான பெண் பாத்தி ரம் உட்பட, எந்தப் பாத்திரத்தையும் சிறப்பாக நடித்துவிடக் கூடிய ஆற்றல் அவரிடம் இருந்தது. அத்துடன், நாட்டுக்கூத் துக்களைப் பழக்கி,நெறியாள்கை செய்து மேடையேற்றும் திறமையும் அவரிடம் இருந்தது. பல விதமான நடனங்களை யும் தானே நடித்து, மேடை நாடகங்களை மெருகூட்டும் ஆற்ற லும் அவரிடம் நிறையவே இருந்தது. சிறந்த மேடைப் பேச்சாள ராகவும், தலைமைதாங்குபவராகவும், அறிவிப்பாளராகவும், விமர்சகராகவும், நடுவராகவும், நூல் வெளியீடு மற்றும் பட்டி மண்டபம் போன்றவற்றைத் தலைமை தாங்கி நடத்தும் ஒருவ ராகவும் சமூகத்தில் நன்கு அறியப்பட்டிருந்தார்.

தான் பிறந்து, வளர்ந்த தனது ஊரான நாவாந்துறையை நெஞ்சார நேசித்த இவர், அவ்வூர் மக்களோடு மிகுந்த வாஞ் சையுடன் பழகினார். அவர்கள் இவரை அணுகும்போதெல் லாம் எந்த உதவியையும் செய்து கொடுக்கும் நல்மனம் கொண்டவராக விளங்கினார். தனது ஊரின் பெருமைகளை எடுத்தியம்புவதில் பெருமையும் கொண்டிருந்தார்.

அண்மைக் காலமாக, கனடாவில் இயங்கும் மூத்தோர் தமிழ் அமைப்புகளில், ஆகக்கூடிய தமிழ் அங்கத்தவர்களைக் கொண்ட ஒன்ராறியோ முதுதமிழர் மன்றத்தின் தலைவராகப் பொறுப்பேற்று, மிகச் சிறந்த பணியாற்றி வந்தார். மூத்தவர்க ளுக்கு மகிழ்வையும் பிணைப்பையும் ஏற்படுத்தும் நிகழ்வுக ளையும் கற்றல் அமர்வுகள், வெளிநாட்டுக் குழுப் பயணங்க ளையும் ஏற்பாடு செய்தார். இவ்வருடம் நடைபெற ஏற்பாடாகி யிருந்த இந்த அமைப்பின் 40-வது ஆண்டு விழாவிற்காக அதிகபட்ச ஈடுபாட்டுடன் உழைத்துக்கொண்டிருந்த வேளை, யாரும் எதிர்பார்க்காமல் இவரது பிரிவு நடைபெற்றுவிட்டது.

சிறந்த பாடகர், நகைச்சுவையாளர், நல்ல வாசகர், பேச்சா ளர், தொகுப்பாளர், நெறியாளர், நடிகர், கூத்துக் கலைஞர் என இவரது சிறப்புகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். இவ ரது மனைவி திருமதி. மொனிக்கா அவர்களை தன்னோடு எப்போதும் அழைத்து வருவார். மிகவும் அன்பான, அன்னி யோன்னியமான, அனைவரையும் மலர்ந்த முகத்துடன் வர வேற்று உரையாடும் பண்பாளர்கள். தாம் செய்கின்ற எதையும் வெளியே சொல்லி தம்பட்டம் அடிக்காமல், வேகமாக இரு வரும் அடுத்த பணிக்குச் சென்று விடுவார்கள். தமிழ் சமூகத் திற்கு இவ்வளவு தூரம் தொண்டாற்ற இடமளித்து, இவருக்கு ஆதரவாக இருந்த இவரது மனைவி திருமதி மொனிக்கா அவர்களுக்கும் எமது தமிழ் சமூகம் பெரிதும் கடமைப் பட்டுள்ளது.

திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்களது இழப்பு, கனடா வாழ் தமிழ் சமூகத்திற்கு ஒரு மிகப்பெரிய வெற்றிடத்தை உருவாக் கியிருக்கிறது என்று கூறினால் அது மிகையில்லை.

எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய அன்பு நண்பரும் ஆர் வலருமான திரு. மனுவல் ஜேசுதாசன் அவர்களது ஆன்மா நித்திய இளைப்பாற்றி அடைய, இறையாசி வேண்டிநிற்கிறோம்.



Quintus.Thuraisingham@thaiveedu.com

உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்

- குரும்பசிட்டி ஐ. ஜெகதீஸ்வரன்

பல்துறைப் புலமையாளரும், சட்டத்துறைசார் நிபுணரும், சமூக ஆர்வலருமான பெரியவர் மானுவல் ஆசீர்வாதம் ஜேசுதாசன் அவர்கள் மார்ச் 22 அன்று எம்மை விட்டுப் பிரிந்த மிகக் கனமான இப்பொழுதுகளில், இப்பெருமகனார் தலைமை தாங்கி (2024 ஓகஸ்ட் 16 - 2026 மார்ச் 22) வழிநடத்திய ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்தில் இவர் வழங்கிய அளப் பரிய சேவைகள், பங்களிப்புகள் குறித்து எண்ணுவதே இப் பத்தியின் நோக்காகும்.

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது தள்ளினுந் தள்ளாமை நீர்த்து'

'நாம் மனதில் எப்போதும் உயர்ந்த எண்ணங்களைத் தாங்கி யவாறே செயற்படவேண்டும். அவை உடனடியாக நனவாக வில்லை என்றாலும், அந்த எண்ணங்களை மறந்துவிடக் கூடாது. அந்த எண்ணங்களே நம்மை அடைய வேண்டிய உயரத்தை நோக்கி இட்டுச் செல்லும்.

நம் மன்றத்திற்கு நிரந்தரப் பணியகம் அவசியம் என்பதை உறுதியாக எண்ணினோம். அந்த எண்ணம் இன்று நிறைவேறி நம் மன்றினை புதிய உயரத்திற்கு இட்டுச்செல்லவில்லையா? இது போன்று பயன் தரும் எண்ணங்களைத் தொடர்ந்து விதைக்க வேண்டும்.

'என் மனதில் உதித்துள்ள பலவற்றுள் நம் மன்றிற்கு வரு மானம் ஏற்படுத்தும் நிறுவனம் ஒன்றை மாகாண சட்ட விதிக ளுக்கமைய அமைக்கவேண்டும் என்பதும் ஒன்று என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்' என முது தமிழர் மன்றத்து 39-ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஆற்றிய தலைமை யுரையின் போது அமரர் ஜேசுதாசன் அவர்கள் கூறியிருந் தமை நேற்றுப்போல இன்னமும் எம்மனத்திடையே எதிரொலித் துக்கொண்டிருக்கிறது.

ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் 2026 ஜனவரி 14 தைப் பொங்கல் தினத்தில், தனது நாற்பதாவது ஆண்டில் தடம் பதித்தது. இதனையொட்டி வெளிவந்திருந்த மன்றத்தின் 'சங் கநாதம்' காலாண்டுச் செய்தியிதழில் ஒன்ராறியோ முது தமிழர் மன்றத்துடனான என் பயணம் மூன்று தசாப்தங்களுக்கு முன் ஏற்பட்டது. சட்ட ஆலோசகராக எனது உறவு ஆரம்பித்தது என்ற வாக்குமூலத்துடனேயே தமது தலைமைக்குறிப்பை ஆரம்பித்திருந்தார் மானுவல் ஜேசுதாசன் அவர்கள்.

மன்றத்தின் செயற்பாடுகளில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த இவர் 2006 நியூ ஹொரைசன் ஆதரவுடன் முன்னெடுக்கப் பெற்ற 'Seniors and Youth in Synergy' - முதியோர் இளை யோருக்கான பாலம் எனும் ஒரு வருடத் திட்டத்தில் நடை பெற்ற கருத்தரங்குகள், தகவற் பட்டறைகள் ஆகியவற்றில் கலந்து பல்வேறு சிறப்புரைகளை ஆற்றியிருந்தார். முது தமிழர் மன்றத்துடன் தமக்கிருந்த ஈடுபாட்டினை மெய்ப்



பிக்கும் வகையில் 2008 ஜனவரியில் தம்மை அங்கத்தவராக இணைத்து இருந்தார். 2011 - 2012 காலப்பகுதியில் திரு. SMJ இம்மானுவேல் தலைமையிலான இயக்குனர் சபையில் உப-தலைவராகத் திறம்படச் செயலாற்றி அனைவரது பாராட்டு தலுக்கும் உரியவரானார்.

இவரது தந்தை மானுவேல் ஆசீர்வாதம் பிரபல்யமான நாட்டுக்கூத்து அண்ணாவியார், இதனால் இயல்பாகவே இக்கலை மீது நாட்டம் கொண்டிருந்த இவர், தந்தையாரின் நெறிப்





படுத்துகையிலேயே மேடை நிகழ்ச்சிகளில் கூத்துக் கலைஞனாக மிளிர்ந்து வந்தார். புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகள் மாறிய வேளையிலும் இக்கலையைத் தம்முடனேயே எடுத்துச்செல்வதும், பேணி வளர்ப்பதும் மிகவும் பாராட்டுதற்குரிய வொன்றே.

முது தமிழர் மன்ற விழாக்களில் சத்தியவான் சாவித்திரி போன்ற கூத்துகளிலும், புதியதோர் உலகம் செய்வோம், சங்கே முழங்கு உள்ளிட்ட பல்வேறு நாடக, இசைநாடக நிகழ்வுகளிலும் தமது முத்திரையைப் பதித்துப் பலரது அபிமானத்தையும் தம்பால் ஈர்த்தவர். இவ்வகையில் முது தமிழர் மன்றத்தின் பரிமாணத்தையும் வீரியமாக்கியவர்.

2022-2024 கால இடையில் முது தமிழர் மன்றம் திரு. சீ. மகேந்திரா தலைமையிலான இயக்குனர் சபையால் நிர்வகிக்கப் பெற்ற வேளை, வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட சொந்த அலுவலகம் அமைக்கும் பணியில் சட்டவாளரான ஜேசுதாசன் அவர்களின் அபரிமிதமான பங்களிப்பும், ஆலோசனைகளும் தமக்குப் பெரிதும் உறுதுணையாக இருந்ததென சீ, மகேந்திரா அவர்கள் மனநெகிழ்ச்சியோடு கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். 2020 - 2022 காலப் பகுதியில் சீரமைக்கப்பட்டிருந்த முது தமிழர் மன்றத்து அமைப்புவிதி (constitution) 2024-இல் மன்றத்திற்கான சொந்தப் பணிமனை அமையப் பெற்ற காரணத்தினால் சில திருத்தங்களுக்கு உட்படவேண்டியிருந்த தருணத்திலும் அமரர் ஜேசுதாசன் அவர்களின் காத்திரமான பங்களிப்பு சுட்டிக்காட்டத் தகுந்தது.

ஒன்ராறியோ முது தமிழர் மன்றம் தங்கள் அங்கத்தவர்களைப் புத்துணர்வூட்டும் நோக்கில் ஆறு மாதத் திட்டமொன்றினை 'Empowering Seniors Through Cultural Engagement and Elder Abuse Prevention' (ஜனவரி - ஜூன் 2025) மிக நேர்த்தியாக ஒழுங்கமைத்திருந்தது. மன்றத் தலைவராக அமரர் ஜேசுதாசன் அவர்கள் மிகுந்த சிரத்தையோடு Financial Abuse Workshop, Physical Abuse Workshop, Mental & Verbal Abuse Workshop போன்ற தகவற் பட்டறைகளில் தானும் ஒரு உரையாளராகக் கலந்துகொண்டு தம் பங்களிப் பினை வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது. மேலும், முது தமிழர் மன்ற அங்கத்தவர்களுக்கான சட்ட ஆலோசனைகளையும் 2024 ஜூலை தொடக்கம் இலவசமாக வழங்கிவந்தார் என்பதை நாம் நன்றியுடன் இக்கணத்தில் நினைவிற் கொள்வோம்.

1948 மார்ச் 26-இல் பிறந்த இவர், 1972-இல் இலங்கைச் சட்டக்கல்லூரியில் இணைந்து, 1975-இல் சட்டத்தரணியாகி, மூன்றாண்டுகள் அங்கேயே பணியாற்றிய பின் இங்கிலாந்து, வேல்ஸ், சீசெல்ஸ் போன்ற நாடுகளில் சேவையாற்றி 1986-இல் தம் குடும்பத்தினருடன் கனடாவை வந்தடைந்தார்.

1994-இல் ஒன்ராறியோ மாகாண சட்டத்தரணியாக தமது சேவையை வழங்க ஆரம்பித்த இவர் அதே ஆண்டில் 'தொண்ணூறு நாட்கள்' எனும் நாவலையும், 2007 இல் 'வயது பதினாறு' சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டு சமூகத்தின் சகல தரப்பினரது அபிமானத்தையும், அன்பையும், மதிப்பையும் பெற்றுக்கொண்டார்.

பல்வேறு பொது அமைப்புகளிலும் தம்மை இணைத்துக் கொண்டு சமூக அக்கறையுள்ள மனித நேயராக, சட்டத்துறை சார் நிபுணராக, அன்புசால் குடும்பத் தலைவராக, ஒன்ராறியோ முது தமிழர் மன்ற தகைசால் தலைமைப் பண்பாளராக வாழ்ந்து எங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாக நம் இதயங்களில் என்றும் நிலைத்திருக்கும் பெரியவர் ஜேசுதாசன் அவர்களின் குடும்பத்தினர், உறவினர் மற்றுமவர் நட்புகளோடு நாமும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போமாக.



jegatheeswaran@thaiveedu.com

உரமேறிய சோழகத்தில் அணியம் உயர்த்திச் சீறிப்பாய்ந்த பாய்மரத் தோணி எப்படிச் சாய்ந்தது?

எங்கள் தோட்டத்தில் வானளாவி உயர்ந்த விருட்சம் ஏன் சரிந்தது?

நினையாதது, நினையாத நேரத்தில் ஏன் நிகழ்ந்தது?

காற்றிலும், நட்சத்திரங்களிலும், நிலவிலும் திசையறிந்த எம்மில் தனக்கென திசையமைத்த திசைகாட்டி ஏன் நின்றுபோயிற்று?

வழிகாட்டியற்ற வழிகாட்டி இன்று ஏன் வழிமாறியது?

இளைப்பாறா உழைப்பாளி ஏன் நித்தியத்தில் இளைப்பாறினார்?

விடையறியா வினாக்களுக்கு மனம் ஏன் விடைதேடுகிறது?

யார் இந்த விருட்சம்?

அதன் வளர்ச்சிப் படிமங்களில் அதன் வேர்கள் உறுஞ்சி எடுத்த கனி மங்கள் எங்கிருந்து வந்தன? எங்கிருந்து பெற்ற மூலகங்களிருந்து அந்த விருட்சத்தின் தொகுப்புகள் நிகழ்ந்தன?

எந்தத்தாக்கிகளின் இடைவினை இந்த விருச்சத்தினை வளர்த்தெடுத்தது?

மனுவல் ஆசீர்வாதம் யேசுதாசன்!



ஓர் அலையின் ஆக்கம்...

- பீற்றர் மனுவல்பிள்ளை

யாழ்ப்பாணத்தில் நாவாந்துறை என்ற ஊரில் 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26-ஆம் நாள் மனுவல் ஆசீர்வாதத்திற்கும் இன்நேசம் பிரகாசிக்கும் மூத்த மகனாக - இரண்டாவது பிள்ளையாக யேசுதாசன் பிறந்தார். சிறுவயதிலேயே அவரிடத்தில் சுறுசுறுப்பும், உலக நடப்பு பற்றிய ஆர்வமும் அவதானிக்கப் பட்டது. மேலும் இச்சிறு வயதில் நாவாந்துறையில் 1950-களில் மேடையேற்றப்பட்ட இம்மனுவல் நாட்டுக்கூத்தில் இவர் கட்டியகாரனாக நடித்தார். தந்தை யாருக்கு நாட்டுக்கூத்து எழுத்துருக்களைப் பிரதி செய்து உதவினார். இளைஞ னாக மற்றைய நண்பர் களுடன் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் பல நாடகங் களில் நடித்தார். ஆரம்பக்கல்விக்காக யாழ்ப் பாணத் திலுள்ள கொழும்புத்துறை அரச பள்ளியில் சேர்க்கப் பட்டார். அங்கு ஒரு திருப்புமுனைச் சம்பவம் நிகழ்ந்தது.



ஒரு நாள் கல்வி அதிகாரி ஒருவர் இவர் வகுப்பிற்கு மேற்பார்வைக்கு வந்தபொழுது, அவரின் பல வினாக் களுக்கு இவரின் பதில்கள் வியப்பை ஊட்டின. ஆகவே கல்வி அதிகாரி தன்னைக் காணவரும்படி இவரின் தகப்பனாருக்கு ஒரு குறிப்பை எழுதி அனுப்பியிருந் தார். இவரது தந்தையைச் சந்தித்த அந்த கல்வி அதிகாரி, தான் சிபார்சுக்கடிதம் தருவதாகவும் இவரைப் புனித சம்பத் திரிசியார் கல்லூரியில் (St. Patrick's College) சேர்க்கும் படியும் தந்தையாரை வற்புறுத்தினார். இந்த வகுப்பின் ஆசிரி யரான ம.செ. அலெக்சாந்தரினதும், அந்தக் கல்வி அதிகாரியி னதும் தூண்டுதலால் யேசுதாசன் புனித சம்பத்திரிசியார் கல் லூரியில் சேர்க்கப்பட்டார். பொதுவாக கத்தோலிக்க குடும்பங் களில், தங்கள் தலை சிறந்த பிள்ளைகளைத் திருச்சபையின் பணிக்காக அனுப்பும் உந்துதல் காணப்பட்ட காலத்தில், சம்பத் திரிசியார் கல்லூரியில் கல்விகற்கின்றபொழுது, கத்தோலிக்க குருவானவராக பயிற்றுவிப்பதற்கு யேசுதாசன் கொழும்பிலி ருந்த ஒரு குருமடத்திற்கு அனுப்பப்பட்டார். அங்குகற்றபோது மொழிகளைக்கற்கும் ஆர்வம் மேலெழுந்தது என நம்புகின் றேன். தமிழில் மட்டுமல்லாது, ஆங்கிலத்திலும், சிங்களத் திலும் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. இந்தமூன்று மொழிக ளிலும் அச்சுப்போல அவர் கையெழுத்துகள் இருக்கும். ஏதோ காரணத்தால் அவரின் குருமடக் கல்வி முடிவுக்கு வந்தது. வீட்டு நிலமை காரணமாக கூறப்பட்டாலும் திருச்சபை ஒரு நல்ல ஊழியனை அல்லது தலைவனை இழந்தது என நம்பு கிறேன்.



கல்வியில் நாட்டம் குன்றி கடற்தொழிலுக்கு செல்வதற்கான எண்ணம் இவருக்குத் தோன்றியபோது, இவரது தந்தை யார் ஒரு விடயத்தைச்செய்தார். யேசுதாசனை வள் ளத்தின் அணியத்தில் இருக்கவைத்து அன்றைய பொழுது தொழிலுக்கு அழைத்துச் சென்றார். வள் ளத்தில் ஏற்பட்ட ஆட்டமும், குலுக்கலும் அவரை பலமுறை வாந்தி எடுக்கவைத்தது. இந்தத் தொழிலும் சவால் நிறைந்தது என்பதை யேசுதாசனுக்கு உணர்த்தவே இவரது தந்தை அவ்வாறு செய்தார். அதன்பின்னர் க.பொ.த சாதாரண தேர்வுக்கு தன் னைத் தயார் செய்து அதில் சித்தி எய்தினார். குறிப் பாக ஆங்கிலப் பரீட்சையில் அதிவிசேட சித்தி பெற்றார். இந்தச் சித்தி அவரை யாழ். பொதுசன நூலகத்தில் தற்காலிக அலுவலராகப் பணிசெய்ய உதவியது. இதன்போதுதான் புத்தகங்களின் பாகு பாட்டு சிட்டைகள் பல இவர் கையெழுத்துகளால் எழுதப்பட்டன. இதுபற்றிய நினைவுகளை இவர் ஒரு காணொளியில் பதிவுசெய்துள்ளார். மேலும் யாழ். பொது நூலகம் எரிந்த செய்தி அறிந்த போது புத்தகங்களின் பகுப்புச்சிட்டைகளிலிருந்த தன் முத்துமுத்தான கையெழுத்துகளும் எரிந்து

போனதை என்னிடத்தில் கூறி வருத்தப்பட்டதை இப்பொழுதும் நினைக்கின்றேன். இந்த நூலகப் பணி தனது வாழ்வின் இன்னொரு திருப்புமுனையாக அமைந்ததாக இவர் குறிப்பிட்டுள்ளார்.

யாழ். மாநகரசபையின்கீழ் இயங்கிய நூலகத்திலிருந்து இவர் மாநகரக் களஞ்சியசாலைக்கு மாற்றலாக்கிப் பணியாற்றும் போது இலங்கைச் சட்டக்கல்லூரிக்கான புகுமுகத்தேர்வில் தேர்ச்சிபெற்றுப் பின்னர் சட்டக்கல்வியை நிறைவுசெய்தார். சட்டக்கல்லூரிக்கான அனுமதிக் கடிதம் கிடைத்ததும் அதனைத் தன்வீட்டில் தெரிவித்தபோது அங்கு ஒரு குழப்பநிலை இருந்தது. இவர் தந்தையார் இவரைக் கல்விகற்க தூண்டியது ஒரு அரச உத்தியோகத்தில் சேர்வதற்காகத்தான். ஆனால் இப்படியொரு உயர்கல்வியை தன்மகன் தேர்ந்தெடுப்பார் என நினைக்கவில்லை.



இவரது தந்தை ஆசீரவாதம் ஊரிலிருந்த வலிமையான ஆளுமைகளுள் ஒருவர். சாமர்த்தியமாக நிலமைகளைக் கையாளக்கூடியவர். ஒரு நாட்டுக்கூத்து அண்ணாவி. பல வருடங்கள் விளையாட்டுத் துறை தலைவராக இருந்து விளையாட்டுகளுக்கு ஊக்கமளித்தவர். நாவாந்துறை பரலோக மாதா ஆலய உருவாக்கத்திலும், அதன் நிர்மாண பணிகளிலும் தீவிரமாக பணியாற்றியவர். ஆலய பங்குத்தந்தைகளுக்கும், மற்றவர்களுக்கும் ஊரின் நிலமைகளை எடுத்துக்கூறி வில்லங்கங்களை விலக்கக்கூடியவர். எடுத்த காரியங்களை முழுமையாக முடிப்பதில் கருத்தாயிருப்பவர். மதிப்புக்குரிய மனிதனாக வாழ்ந்து முடித்தவர்.

யேசுதாசனின் தந்தை மனுவல் ஆசீர்வாதம் இலங்கைத் தமிழ்காங்கிரசின் பெரும் ஆதரவாளர். தமிழ்காங்கிரசின் தலைவர் ஜீ.ஜீ. பொன்னம்பலம் அவர்களை நாவாந்துறையின் விடயங்கள் தொடர்பாக பலமுறை சந்தித்திருக்கிறார். தமிழ்க் காங்கிரசின் முதன்மை உறுப்பினர் 'புறொக்ரர்' சங்கரப்பிள்ளையுடன் ஊர் விவகாரங்களில் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்.

இவ்வாறானவர்கள் கற்ற சட்டக்கல்வியைத் தன் மகன் கற்கமுடியுமா என்ற சந்தேகம் அவருக்கு ஏற்பட்டது. இதனால் அவர் முடியாதவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்படக்கூடாது எனக் கூறினார். 'நான் முடியாதவனல்ல மலையேறி கொம்புத்தேன் கொணர்வேன்' என சபதம் எடுத்தார் யேசுதாசன். அதனையும் செய்து முடித்தார்.

இவரின் தாயார் பிரகாசி, என்ன செலவானாலும் நாங்கள் பார்த்துக்கொள்வோம் நீ போய் படி எனக் கூறினார். இவரின் தாயார் பல முயற்சி களுக்கூடாக இவரின் கல்விச் செலவுகளுக்கும் பங்களிப்புச் செய்தார். இவரின் தாயார் கைவைத்தியத்தில் சிறந்தவர். ஊரில் பலரும் அவரிடத்தில் வைத்தியம் செய்துகொண்டனர். சட்டக்கல்வியின்போது இவருக்கு ஏற்படக்கூடிய சவாலை இவரின் முழுக் குடும்பமும் ஏற்றுக்கொண்டது.

சட்டக்கல்லூரியில் படிக்கும்போதே ஊரில் இளைஞர்களை விளையாட்டில் ஊக்கப்படுத்தி அவர்களைச் சரியான பாதையில் கொண்டுசெல்லவேண்டும் என்ற எண்ணம் இவருக்கு இருந்தது. கொழும்புலிருந்து விடுமுறைக்கு வந்தபோது உதைபந்தாட்டத்தில் ஆர்வமுள்ளவர்களைத் திரட்டி மூன்று அணிகளாகப் பிரித்து ஓர் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தினார். இதற்காக ஒவ்வொரு விளையாட்டு வீரர்ருக்கும் உதைபந்தாட்டக் காலணிகளை (Adidas boots) பெற்றுக்கொடுத்தார். தாங்கள், காலணிகளுடன் விளையாடிய அனுபவத்தை முதல் தடவையாக பெற்றுக்கொண்டதாக இன்றும் பலர் நினைவுகூர்கிறார்கள். யேசுதாசன் தன்னார்வமாக ஆட்களைத் திரட்டுவதிலும், சமூகப் பணிகளை மேற்கொள்ளவதிலும் அவரிடமிருந்த திறன்களின், தலைமைப் பண்புகளின்





உருவாக்கம் இவரது தகப்பனாரிடமிருந்தும், ஊரிலிருந்தும் உருவாகின என எண்ணுகின்றேன். குறிப்பாக இவர் தந்தை யாரிடமிருந்து கற்றுக்கொண்டாரென எண்ணுகின்றேன்.

மனுவல்யேசுதாசன் 1975-இல் சட்டத்தரணியாக சத்தியப்பிர மாணம் எடுத்ததைக் கொண்டாடும் முகமாக இவருக்கு ஒரு வரவேற்பு நிகழ்வு நாவாந்துறையில் நிகழ்ந்தது. யாழ்ப் பாணத்திலுள்ள பல பிரமுகர்களும், இவரது சட்டக்கல்லூரி நண்பர்களும், ஊரைச் சார்ந்தவர்களும் கலந்துகொண்டனர். அங்கு உரையாற்றிய சட்டக்கல்லூரி நண்பர் ஒருவர் 'யேசு தாசன் துணிச்சல்காரர் மட்டுமல்ல துணிதெரிவதிலும் கெட் டிக்காரர்' எனக் கூறினார். இதன்பின்னர் மற்றுமொரு வர வேற்பு மெலிஞ்சிமுனை - கரம்பனிலும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இவ்வரவேற்புகள் ஊரில் கல்வி தொடர் பான ஒரு விழிப்புணர்வுக்கும், இவரின் சட்டவாண்மை விருத் திக்கும் உதவுவதாக அமைந்தன.

யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணியாக தொழில்புரியும்போது, 1976-இல் மொனிக்கா ஆசீர்வாதம் அவர்களைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந் தனர்.

தொடர்ந்து கல்விகற்கும் நோக்குடன் முதலில் பிரான்சிற்கும், பின்னர் பிரித்தானியாவுக்கும் சென்று அங்கு சட்டக்கல்வி கற்று 1980-இல் சொலிசிற்றர் (Solicitor in England and Wales) தகமையைப் பெற்றார். இலங்கை திரும்பியபின் சில காலம் சட்டத்தரணியாக தொழிலைத் தொடர்ந்தார். இதன் பின்னர் சீசெல்ஸ் நாட்டில் மூத்த அரச வழக்கறிஞராக 1982-1986 பணியாற்றினார். சீசெல்சில் 1981-இல் நடந்த ஆட்சிக்க விழ்ப்பு தொடர்பான வழக்கில் இவர் அரச வழக்கறிஞராக கட மையாற்றினார். பின்னர் கனடா நாட்டிற்குப் புலம்பெயர்ந்து கனடாவிற்கான சட்டக்கல்வியைக் கற்று வழக்கறிஞராக இறக்கும்வரை சேவையாற்றினார்.

கனடாவில் புலம்பெயர் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டு பல சமூகப்பணிகளை ஆற்றியதுடன் பல பண் பாட்டு நிகழ்வுகளை ஒழுங்குசெய்வதிலும், மற்றும் எழுத்து, கலை, பண்பாட்டு முயற்சிகளிலும் தானும் பங்குகொள்வதி லும் ஈடுபட்டார். இவற்றிற்கான அடித்தளம் இவர் சிறுவனாக இருந்தபோதே இடப்பட்டது. இதுவே கனடாவில் இவரின் அத் திவாரமாயும் அமைந்தன என நம்புகின்றேன்.

ஒரு பேராளுமை, சமூக அக்கறையுடன் செயல்பட்டவர், எங்கள் பலரின் கல்வி முயற்சிகளுக்கு வழிகாட்டியாக நின்றவர், தனக்கென வழிகாட்டிகள் இல்லாத போதும் தன்னை வளர்த் துக் கொள்வதில் மட்டுமல்லாது எங்களில் பலருக்கு முன் னோடியாக இருந்து வழிகாட்டியவர். தான் சந்திக்கின்ற எவ ரையும் ஆழ்ந்து நோக்கி அவர்களின் திறமைகளை வெளிக் கொணர ஊக்குவிப்பவர். கனடாவின் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் உருவாக்கத்தின் பல தொடக்கங்களின் விதை இவரிடத்திலிருந்து வந்தது எனலாம்.

நினையா நேரத்தில் 2026 மார்ச் மாதம் 22-ஆம் நாள் திரு. மனுவல் யேசுதாசன் அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார். இவரது இறுதி அஞ்சலி நிகழ்வு களிலும், சமூகவலைத்தளங் களிலும் இவர் பற்றி பலரின் கருத்துகள் இவரது சமூகப் பணியை எடுத்துரைத்தன. அன்னாரின் ஆன்மா சாந்தியடை வதாக.



Peter.Manuelpillai@thaiveedu.com

ஒற்றன்
- நாவல் -

சு. வேணுகோபால்



பழக்கப்பட்ட உலகத்திற்கு வேறான மாறுபட்ட, அந்நியமான உலகிற்குள் சிறிது காலம் இருக்க நேருகிற எழுத்தாளரின் அனுபவங்கள் 'ஒற்றன்' நாவலாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அன்றாட வாழ்வின் நகர்வில் இயங்குகிற மனிதர்களின் அடுத்த கணம் ஓரளவு ஊகிக்கக் கூடிய ஒன்றுதான். பணியிடமாயினும் சரி, எதிர்கொள்ளப்படும் மனிதர்கள் ஆயினும் சரி அன்றைய நாள் ஓரளவு திட்டமிட்டபடியே நகர்ந்து முடிகிறது. சுவாரஸ்யம் குறைந்த சவால்கள் கிட்டத்தட்ட இல்லாத வாழ்க்கையைத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதற்கெல்லாம் முன்னமே தீர்மானிக்கப்பட்ட இழைகள் அல்லது பிணைத்துக் கொள் ளப்பட்ட இழைகள் நம்மை வழிநடத்தவும் செய்கின்றன. உறவு முறைகள், பணிமுறைகள், நட்புவட்டங்கள் மற்றும் பண்பாட்டுப் பிணைப்புகள் என ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட இழைகளால் நம் அடுத்த கணம் ஓரளவுக்குத் தீர்மானிக்கப்படுகிறது. இந்த பின்னல்கள் முற்றிலும் துண்டிக்கப்பட வேறொரு சூழலில் வாழ நேர்கிற - மனிதர் எதிர்கொள்கிற பிரச்சினைகள், புதிய அனுபவங்கள், விறுவிறுப்பான மாற்றங்கள், ஊகிக்க முடியாத சந்திப்புகள், இணைப்புகள், திருப்பங்கள் அமையப்பெற்ற குறுகிய கால வாழ்க்கையைச் சொல்கிறது ஒற்றன் என்ற நாவல். கொஞ்சம் கூடுதலான அழுத்தத்தோடு சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். அதாவது பாதுகாப்பே இல்லாத ஒருவர் புதுச்சூழலில் வாழ நேர்கிற திகில் நிறைந்த வாழ்க்கையைச் சொல்லவில்லை. அங்கீகரிக்கப்படாத புது நாட்டில் மறைந்து வாழ்கிற அகதியின் வாழ்க்கையைச் சொல்லவில்லை. அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புடன் அமெரிக்காவில் இருக்க வாய்ப்பளிக்கப்பட்ட கீழைநாட்டு எழுத்தாளருக்கு நேர்கிற அனுபவங்கள் மற்றொரு கீழைதேசத்தவர் இருக்க நேர்ந்தாலும் அதற்கு இணையான அனுபவங்கள் வந்தடையும் என்றே நினைக்கிறேன். இப்படிச் சொல்லலாம் அமெரிக்காவில் பல கீழையத்தேய மனிதர்கள் இருக்க வாய்ப்பு வருகிறது என வைத்துக்கொள்வோம். அவர்கள் பார்த்த உலகத்தை அல்ல பார்த்த உலகத்தில் பார்க்க முடியாது போன பக்கங்களைக் கண்டு சொல்வதுதான் எழுத்தாளரின் சவால். 'ஒற்றன்' அந்த வகையில் பெரிய சாதனை என்று சொல்ல முடியாது. சிறிய சாதனை. நமக்கு இந்த நாவலின் உலகம் புதிதாகவும் புதிராகவும் நிச்சயமற்ற வாழ்க்கையைச் சொல்வதாகவும் இருக்கும். அமெரிக்கர்களுக்கு இது அன்றாட வாழ்க்கையாக இருக்கும். அமெரிக்கர்களுக்கும் இந்த நாவலின் வழி வாழ்க்கையின் புதிர்களைக் கண்டுசொல்வ தாக இருந்தால்தான் பரிமாணம் கூடுதல் முக்கியத்துவமுடைய தாக மாறும். அதுவே நாவல் கலையின் பெரிய சாதனை.

நமக்கு 'ஒற்றன்' நாவல் புதுசாக இருக்கிறது. அந்த வகையில் தமிழ் நாவல் இலக்கியத்தில் ஒற்றனுக்கு தனித்த இடம் இருக்கிறது. அது காட்டும் புதிய உலகம் நமக்கு சில புதிய மானிடர்களை அடையாளம் காட்டுகிறது. அசோகமித்திரன் என்ற முக்கியமான எழுத்தாளரின் இலக்கியப் பார்வை இந்நாவலில் வெளிப்பட்டிருக்கிறது. உலகமெங்கும் மனிதர்கள் சுயநலம் மிக்கவர்களாகவே இருக்கின்றனர். அது எழுத்தாளர்களாக இருந்தாலும் சரி. எழுத்தாளர்களும் சாதாரண மனிதர்கள் போல ஆசாபாசம் கொண்டவர்கள்தான் என்பதை அழகாக வெளிப் படுத்துகிறது இந்நாவல். சுந்தரராமசாமி 'ஜே.ஜே. சில குறிப்புகள்' நாவலில் எழுத்தாளரைத் தனித்த உயர்ந்த பிறவியாக எடுத்து வைத் திருக்கிறார். அசோகமித்திரன் அதற்குமாறாக எழுத்தாளரும் சாதாரண

மனிதர்களின் மனவியல்போடு இருப்பதாகக் காட்டுகிறார். வேறுவகையில் சொல்வதாயின் அமெரிக்காவில் ஒன்றுகூடும் எழுத்தாளர்கள் மனிதர்கள் போலவே அற்பமானவர்களாகத் தான் இருக்கிறார்கள் என்று அசோகமித்திரன் சொல்வதாக வும் கொள்ளலாம். எழுத்தாளர்கள் உலகம் ஒன்றும் புனித மானதில்லை என்பதுதான் நிதர்சனமானதும் கூட.

அசோகமித்திரனின் விவரிப்பில் சம்பவங்கள் ஒன்றன் மேல் ஒன்றாக மிக நிதானமாக அடுக்கப்படுகின்றன. ஆனால், இந்த அடுக்குகளின் அடியில் ஓடிக்கொண்டிருக்கும் மெல்லிய அச்சம், கதையின் இறுதியில் ஒரு மோசமான உண்மையை அல்லது தரிசனத்தைத் திறந்து காட்டி வாசகனை நிலை குலையச் செய்கிறது' என்று நீங்கள் குறிப்பிடலாம். ஒரு ஆகச்சிறந்த சிறுகதையின் முடிவிற்கு நிகராக இருக்கின்றன இவரின் நாவல்கள். அதற்கேற்ற வகையில் சம்பவங்களை முன்பின்னாக மாற்றி இறுதிப் பகுதிக்கு பெரிய முக்கியத் துவம் அளித்திருப்பதை ஊகிக்க முடியும். நாவல் முழுக்க இப்படி பல தலைகீழ் ஆட்டங்கள் விரவி வருவதில்லை. நாவல்கலை என்பது அதுதான். ஆனாலும் அசோகமித்திர னின் சிறிய நாவல்களின் இலக்கிய அந்தஸ்த்தை குறைத்து மதிப்பிட்டுவிட முடியாது. அதனளவில் அவருடைய நாவல் கள் தமிழுக்கு நல்ல பங்களிப்பைத் தருகின்றன.

எதையும் ஆற அமர நோக்கும் அசோகமித்திரனின் தனித்து வமான பார்வை, 'ஒற்றன்' நாவலிலும் சிறப்பாகக் கைகூடி வந்திருக்கிறது. தீவிரமாக ஆராயாமல் காதலிக்கத் தொடங் கிப் பின் தோல்வியைத் தழுவும் இலாரியா; மரணப் படுக்கை யிலிருக்கும் தாயைப் பற்றிப் பகிர்ந்துகொள்ளத் தயங்கும் கொரிய நாவலாசிரியர் சேக்; இலக்கியக் கனவுகளோடு வந் திருக்கும் இலாரியாவைத் தன் வசப்படுத்த முயலும் பிரேசில் கவிஞர் அடெள வெண்டுரா; அமெரிக்காவில் இறங்கியதுமே வெளித்தோற்ற மோஸ்தருக்கு முக்கியத்துவம் அளிக்கும் எதியோப்பிய எழுத்தாளர் அபேக்கு பேக்னா எனப் பலதரப் பட்ட மனிதர்களை இதில் காண்கிறோம். மேலும், அடுத்தவர் அறைகளைக் கண்காணிக்கும் ஹோட்டல் மேனேஜர் ஜார்ஜ்; நீண்ட இடைவெளிக்குப் பின் சந்தித்து வெறும் 15 நிமிடங் கள் மட்டுமே உரையாடிக் கொள்ளும் காதலர்களான ஜப்பா னியப் பெண் கஜுரோ மற்றும் கருப்பினத்தவர் மார்ட்டின்; அந்த ஜப்பானியப் பெண்ணைக் கவர நினைக்கும் அபேக்கு பேக்னா; அமெரிக்கப் பயண வாய்ப்பைப் பெற்று, ஒரு மாதத்தில் நாவல் எழுதுவதாகக் கூறிக்கொண்டு தன் காதலி யுடன் பொழுதைக் கழிக்கும் பெருநாட்டு எழுத்தாளன் பிராவோ; கணவனைப் பிரிந்து ஜிம்பார்க்கன் எனும் ஓவிய ருடன் வாழும் சூஸி; அவளோ அடிக்கடி ஆட்களை மாற்றிக் காமக் களியாட்டத்தில் ஈடுபடுபவள் என்று குற்றம் சாட்டும் அவளது கணவன் - இப்படியான கலைஞர்களின் சாதாரண வாழ்வியலுக்குள் அசோகமித்திரன் என்ற கதாபாத்திரமும் இணைந்து இயங்குவதை இந்நாவல் சிறப்பாகச் சித்திரிக் கிறது. இந்த சம்பவ இணைப்பிற்கு அப்பால் இம்மனிதர் களுக்குள் சுயநலம் குமிழியிடுவதை அசோகமித்திரன் இனங் காட்டுகிறார். வெறுப்பிற்கும் பிரிவிற்குமான காரணங்களுக்கு தங்களுக்குள் சுய பரீசிலனை செய்து கொள்ளாமல் பிறர் மீது குற்றம் சுமத்தும் மனிதர்களாக இருப்பதை அறிய வைக்கிறார். வாசகர்களைக் கீழ்மையிலிருந்து மேன்மையை நோக்கி ஒருபடி நகர்த்துகிற வேலையைச் செய்கிறவர் எழுத் தாளர்கள் என நம்பப்படுகிற பொது மனநிலைக்கு மாறாக அவர்களும் சகல தந்திரங்களோடு உலவும் மனிதர்களாக இருப்பதைக் காட்டுகிறார். யார் மீதும் குற்றம் சுமத்தாமல் அவர்களின் செயல்களை முன்வைத்து மறைமுகமாக விமர்சிக்கிறார். நேரடியாக ஒரு விமர்சனமும் இல்லை.

அமெரிக்காவின் அயோவா நகரில் (Iowa City) எட்டு மாதங் கள் தங்கியிருந்த காலத்தில், அசோகமித்திரனுக்குக் கிடைத்த நேரடி அனுபவங்களோடு மற்றவர்களின் வாழ்வியல் சம்ப வங்களையும் உள்வாங்கிச் செரித்து, உருவான புனை கதையே 'ஒற்றன்'. எதியோப்பிய எழுத்தாளரான அபேக்கு பேக்னா, அமெரிக்கா வந்ததும் தனது 'ஒற்றன்' நாவலை ஆங்கிலத்தில் வெளியிடுவதிலேயே முழு கவனத்தையும் செலுத்துகிறான்; காதலில் தோல்வியுற்றாலும் அந்த முயற் சியில் அவன் வெற்றியடைகிறான். மறுபுறம், பெருநாட்டைச் சேர்ந்த பிராவோ, தனது ஆகச்சிறந்த படைப்பான 'மகா ஒற்றன்' நாவலை எழுதப்போவதாகக் கூறிக்கொண்டு ஒரு மாதம் மூடிய அறைக்குள் முடங்கிக்கிடக்கிறான். அங்கே காமக் களியாட்டங்களும் அரங்கேறுகின்றன. இறுதியில் நாவல் வெளிவருகிறது. ஆனால், அவனது மனைவியே 'அவன் எழு திய நாவல்களிலேயே படுமோசமானது இந்த 'மகா ஒற்றன்' தான்' என்று கிண்டலாக விமர்சிக்கிறாள். உலக எழுத்தாளர் களின் உயரிய சிந்தனைகளைக் கண்டு, கேட்டு, தெளிவு பெற்று வரச் சென்ற தமிழ் எழுத்தாளன், அவர்களின் மேன்மை யான பக்கங்களைவிடக் கீழ்மையான நினைவுகளையே அதி கம் சேகரிக்க நேரிடுகிறது. இந்த வகையில், தமிழ் எழுத் தாளனும் ஒரு 'ஒற்றன்' வேலையைத்தான் செய்ய முடிந்தது என்பதை வாசகர் உணரும்படி அசோகமித்திரன் இந்நாவ லைப் படைத்துள்ளார். இது ஒருவகையில் படைப்பாளிக்குக் கிடைத்த 'ஆக்கபூர்வமான சுயநலம்' எனலாம். படைப் பாளனே அடிப்படையில் ஒரு ஒற்றன்தான் என்பதும், அவனது அமெரிக்கப் பயணமும் அத்தகையதொரு உளவு வேலை யாகவே அமைந்துவிட்டது என்பதும் நாவலின் கருப்பொரு ளோடு மிகச் சரியாகப் பொருந்துகிறது.

அசோகமித்திரனின் நாவல்களில் எது ஆகச்சிறந்து என்று கேட்டால் உடனே பதில் சொல்ல முடியாது. ஒரே தரத்திலான வையாக இருக்கின்றன. இதே கேள்வியை ஜெயகாந்தன் படைப்புகளின் முன் எழுப்பினால் மிக இலகுவாகப் பதில் சொல்லிவிடலாம். 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' என்று. அசோகமித்திரன் படைப்புகளிலிருந்து உடனடியாக ஒன்றை சொல்லமுடியாதபடி பல நாவல்களை உயர்ந்த தரத்தில் எழுதியிருக்கிறார். இவ்வகையில் தமிழ் நாவல் இலக்கியத் திற்கு பங்களிப்பு செய்திருக்கிறார். 'ஒரு எழுத்தாளனாக' இவ்விதம் இயங்கியிருப்பது முக்கியமானதாகக் கொள்ள லாம். 'கரைந்த நிழல்கள்', 'தண்ணீர்', '18-ஆவது அட்சக் கோடு', 'ஒற்றன்', 'இன்று' நாவல்களைச் சொல்லலாம். இவற் றில் ஆகச்சிறந்தது என்றால் கொஞ்சம் யோசித்து 'கரைந்த நிழல்கள்' அல்லது '18-ஆவது அட்சக்கோடு' என்பேன். ஆனால் 'ஒற்றனை' உடனடியாக சொல்லமாட்டேன்.

எஸ். ராமகிருஷ்ணன் தமிழின் சிறந்த பத்து நாவல்களில் ஒன்றாக 'ஒற்றனை'ச் சொல்லியிருக்கிறார். ஒற்றனில் ஒரு

டூரிஸ்ட் மனோபாவம் இருக்கிறது. புதியதொரு இடத்திற்குச் செல்லும்போது அங்கிருக்கும் அனைத்தும் புதிதாகத் தெரிவது இயல்பு; மனிதர்களும் அவ்வாறே. ஆனால், இதையே ஒரு பெரிய 'இலக்கியக் கண்டுபிடிப்பாக' (Literary discovery) கருதிவிட முடியாது. புதிய களம் அல்லது அந்நியச் சூழல் என்ற அடிப்படைத் தகுதியே ஒரு படைப்பிற்கு மிகச்சிறந்த 'இலக்கிய அந்தஸ்தைப்' பெற்றுத் தந்துவிடும் என்று எஸ். ராமகிருஷ்ணன் கருதுகிறார். புதிய பிரதேசங்களை அடையாளப்படுத்தினால் மட்டுமே போதும் என்ற நிலையில், வாழ்க்கையின் ஆழ அகலங்களுக்கு முக்கியத்துவம் அளிக்காத ஓர் இலக்கியவாதியாகவே எஸ். ராமகிருஷ்ணன் விளங்குகிறார். ஒரு படைப்பில் கையாளப்படும் 'வகைமாதிரிகள்' இலக்கியத்தின் பரப்பை வேண்டுமானால் அகலப்படுத்தலாம். ஆனால், தமிழில் ஒரு புதிய வகைமை இலக்கியம் எழுதப்படுவதாலேயே அதற்கு இலக்கிய அந்தஸ்து கிடைத்துவிடாது என்பது என் கருத்து. ஒரு படைப்பு புதிய களத்தையோ, புதிய பாணியையோ கையாளும்போது, அது வாழ்க்கையை எவ்வளவு தூரம் நுட்பமாகப் பரிசீலித்திருக்கிறது என்பதைக் கொண்டே அதன் இலக்கிய உயர்வை மதிப்பிட வேண்டும்.

ஒற்றன்' ஒரு நல்ல நாவல் என்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. இதில் வாழ்க்கை ஒரு சீட்டுக்கட்டு போலத் தொடர்ந்து கலைந்தும், பின் அடுக்கப்பட்டும் கொண்டிருக்கிறது. ஒன்றுக்கொன்று தொடர்பற்ற மனிதர்கள் ஓரிடத்தில் குழுமியிருப்பதால், ஒருவரைப் பற்றி மற்றவர் எளிதில் அனுமானிக்க முடிவதில்லை. அவர்களோடு இணைந்து இயங்குவதில் ஒரு புதிர்த்தன்மை நீடிக்கிறது; ஒவ்வொருவரும் தத்தமக்கான விளையாட்டைத் தங்களுக்குள்ளேயே ஆடிக் கொண்டிருக்கிறார்கள். நாம் ஒரு கணிப்பிற்கு வரும்போதே, வாழ்க்கை வேறொரு திருப்பத்தைத் தருகிறது. வாழ்வின் இந்த நிச்சயமற்ற தன்மையை 'ஒற்றன்' மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. இதற்கு அதன் வேறுபட்ட களமும் சூழலும் பெரும் உதவிபுரிகின்றன. எனினும், இதில் ஒரு 'பார்வையாளரின் கோணம்' மட்டுமே பிரதானமாக இருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்தப் பார்வையாளரின் எல்லைக்கு அப்பாற்பட்ட மற்ற மாந்தர்களின் அக உலகம் இதில் சொல்லப்படாமலேயே இருக்கிறது. வெறும் புதிர்த்தன்மையையும், புதிய களத்தையும் மட்டுமே இலக்கிய அந்தஸ்திற்கான அளவுகோலாகக் கொண்டு ஒரு நாவலை அணுகுவது அதன் உண்மையான ஆழத்தைக் குறுக்கிவிடும் செயலாகவே எனக்குத் தோன்றுகிறது. ஒரு நல்ல நாவலை, அதன் இயல்பான தன்மையோடு அணுகவிடாமல் இத்தகைய முன்முடிவுகளும் 'தேர்வுப் பட்டியல்களும்' தடுத்துவிடுகிறதோ என்ற ஐயம் எழுகிறது.



venugopal@thaiveedu.com

ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்

நடத்தும்

இணையவழிக் கலந்துரையாடல்



நாள் : 15 மே வெள்ளிக்கிழமை 2026

நேரம் : இரவு 8:00 - 10:00 மணி (கனடா ரொறன்ரோ)

நாள் : 16 மே சனிக்கிழமை 2026


நேரம் : காலை 1:00 - 3:00 மணி (இலண்டன்)
காலை 5:30 - 7:30 மணி (இலங்கை, இந்திய)
காலை 10:00 - 12:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி)

"தமிழரின் நிகழ்த்துகலைச் சிந்தனைகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி மற்றும் எழுத்தாளர் ஜெயகாந்தன் ஏற்படுத்திய திருப்பங்கள்"

உரை நிகழ்த்துபவர்: 'கனடா' மூர்த்தி

Zoom ID: 84777257162 Passcode: 554268

மலையகத் தமிழர் குறித்த மறுவாசிப்பாக...
இலங்கை இந்தியர் வரலாறு



- மல்லியப்பு சந்தி திலகர்

இன்று 'மலையகம்' எனும் அடை யாளம் பெறும் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி தமிழர் கடந்த 2024-ஆம் ஆண்டு வரை இலங்கைச் சனத்தொகைக் கணக்கெடுப்பில் 'இந்திய தமிழர்' என்றே பதிவு செய் யப்பட்டு வந்தனர். 2024-ஆம் ஆண்டு முதல் இந்தியத் தமிழர் / மலையகத் தமிழர் என பதிவு செய் யப்படுகின்றனர்.

இந்த இந்தியத் தமிழர் / மலை யகத் தமிழர் வரலாறு இலங்கை யில் 200 வருடங்களைக் கடந்து செல்கிறது. அதன் 160-வது வய தில் 'இலங்கை இந்திய வரலாறு' எனும் நூலை விஞ் ஞானபூர்வ ஆய்வு நூலாக எழுதி உள்ளார் பேராசிரியர் சோ. சந்திரசே கரன்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் மறைந்து நான்கு ஆண்டு நிறை வில் கொழும்புத் தமிழச் சங்கம் அதன் முன்னாள் தலைவரான பேராசிரியரின் பணிகளை நினைவு கூர்ந்து உரையரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. இந்த உரை அரங்கத்தில் மலையகம் குறித்த மறுவாசிப்பு ஒன்றை வேண்டி நிற்பதாக இருந்தது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டப்படிப்பு காலத்தில் பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்களின் வழி காட்டலில் இந்த நூலை எழுதத் தொடங்கிய சோ. சந்திரசே கரன் நூலின் சில பகுதிகளைக் கட்டுரையாக தனது மாமனா ரான ரா.மு. நாகலிங்கம் ஆசிரியராக இருந்து நடத்திய 'செய்தி' பத்திரிகையில் வெளியிட்டுள்ளார். பின்னாளில் இந்தியாவில் சில காலம் தங்கியிருந்த காலத்தில் நிறைவு செய்துள்ளார். இந்தியாவில் தங்கியிருந்த காலத்தில் 1989-ஆம் ஆண்டு 'இலங்கை இந்தியர் வரலாறு' எனும் நூலை அங்கேயே வெளியீ டும் செய்துள்ளார். பின்னாளில் 2001-ஆம் ஆண்டு குமரன் பதிப்பகம் இலங்கையில் இந்த நூலை இரண்டாம் பதிப்பும் செய்துள்ளது.

இலங்கை இந்தியர்களின்,

- குடிவருகைக்கான காரணங்கள்
- ஓப்பந்த முறை, கங்காணி முறை, துண்டு முறை
- குடிவருகையும் ஆரம்ப காலப் பிரச்சினைகளும்
- குடியமர்வின் சில இயல்புகளும் இந்தியர் சமூகத்தின் வளர்ச்சியும்
- இந்தியத் தமிழர்களின் தொழிற் சங்க இயக்கத்தின் தோற்றம்
- இந்தியர் பிரச்சினையும் தீர்வுக ளும்
- இலங்கையின் இனப்பிரச்சினை யும் இந்திய வம்சாவழித் தமிழர் களும்
- நிறைவுரை

எனும் ஏழு அத்தியாயங்களைக் கொண்ட இந்த நூல் இலங்கையில் வாழ்கின்ற இந்தியர்களின் வரலாற் றைப் பேச முனைந்தாலும் இயல் பாகவே அவர்களுள் பெரும்பான் மையெண்ணிக்கையினரான மலை யகப் பெருந்தோட்ட மக்களைப் பற்றியே பேசுகிறது. இதன் மூலம் அவர்கள் தவிர்க்கமுடியாத சமூ கப், பண்பாட்டு பொருளாதார அடையாளத்தைக் கொண்டவர்க ளாகவும் - கட்டி எழுப்பியவர்களா கவும் இருந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

தமிழர் அல்லாத இந்தியர்கள் இலங்கையில் வாழ்கின்ற போதும் இந்த வரலாற்று நூலில் அவர்களின் இலங்கை வரலாற்றுக்கு போதிய இடமில்லை. அதேபோல பெருந்தோட்டப் பொருளாதாரத்தில் தங்கியி ருக்கும் இந்தியத் தமிழர்கள் தவிர்ந்த ஏனைய இந்தியத் தமி ழர்கள் பற்றியும் இந்த வர லாற்று நூலின் பக்கங்கள் விரிய வில்லை. இதையெல்லாம் தாண்டி பெருந்தோட்டப் பொருளாதார முறைமையில் தங்கிவாழும் இந்தியத் தமி ழர்கள் பற்றியே இந்த நூல் பேசுகிறது. எனினும், 1960-கள் முதலே இந்தியத் தமிழர்கள் 'மலையகத் தமிழர்கள்' என அடையாளப்படுத்தப்பட்டுவரும் நிலையில் 1989, 2001-ஆம் ஆண்டுகளில் இரண்டு பதிப்புகள் வெளிவந்தபோதும் நூலில் எங்கும் 'மலையகத் தமிழர்கள்' என குறித்துரைக்கவில்லை.

அதேநேரம் இந்த நூலுக்கு முன்னுரை எழுதி இருக்கும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகக் கடமை யாற்றிய பேராசிரியர் B.E.St.J. பஸ்தியாம்பிள்ளையின் அணிந் துரையில் அண்மைய இந்திய வம்சாவளி (Tamils of Recent Indian Origin) எனும் சொற்றொடர்களைப் பயன்படுத்தி யுள்ளார். இது இந்த இந்திய தமிழர்களைத் தவிர நாட்டின் ஏனைய இனத்தவரும் இந்திய வம்சாவளியினரே எனும் பொருளை உணர்த்துகிறது. இதனையே கவிஞர் சக்தீ பால அய்யா தனது வாழ்நாள் முழுதும் மலையகத் தமிழர்களை இவ்வாறே விளித்து வந்தார். எனினும் இவர்களின் அடுத்தத் தலைமுறையினரான பேராசிரியர் சோ. சந்திரசேகரன் இந்த மக்களை 'இந்தியர்கள்' என விளிப்பது விநோதமானதே. ஆனாலும் சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியத்

தமிழர் எனும் சொல்லாடல் சரியானதே. அதேபோல சனத் தொகைக் கணக்கெடுப்பு தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து இந்த நூல் எழுதப்படும் காலம் வரை சனத்தொகை எண்ணிக்கை குறித்து தெளிவான புள்ளி விவரத் தரவுகளைக் கொண்டுள்ளது.

இவ்வாறு இன அடையாளம் தொடர்பில் இந்த நூல் 'இந்தியர்' எனும் அடையாளத்தைக் காட்டிய போதும் கூட மலையகத் தமிழ் மக்களின் பெருந்தோட்டப் பொருளாதார நிலை குறித்து பல்வேறு தகவல்களைப் புள்ளிவிபரங்களுடன் எடுத்துக்காட் டுகின்றது. குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூலிகளாக, கங்காணி முறைமையின் கீழ் துண்டு முறையில் இயங்கிய விதம் குறித்து மிகத் தெளிவான வரலாற்றைப் பதிவு செய்கிறது. பின்னாளில் அதுவே நாட்கூலி முறைமைக்கு மாறி இன்றுவரை அத்தகைய நாட்கூலி முறைமையிலேயே இந்தச் சமூகம் வைக்கப்பட்டுள்ளமை காரணமாக இந்த வரலாறு இன்றைய தலைமுறைக்கு அவசியமானதாகும்.

மிகவும் குறிப்பாக 1890 முதல் 1946 வரையான காலப்பகு தியில் சிங்களவர்கள், இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள் எத்தனை எண்ணிக்கையானோர் பெருந்தோட்டத்துறையுடன் தொடர்புபட்டு இருந்தனர் என்பது தொடர்பான புள்ளிவிப ரங்கள் இன்றைய ஒப்பீட்டுக்கு மிக முக்கியமான தகவல் களைத் தருகின்றது. உதாரணமாக 1946-ஆம் ஆண்டு இந்தி யர்கள் (மலையகத் தமிழர்கள்) ஆறு லட்சத்து ஐம்பதினா யிரம் அளவில் காணப்பட்டபோது சிங்களவர்கள் எழுபத்தாறா யிரம் பேர் மாத்திரமே பெருந்தோட்டப் பொருளதாரதாரத்தில் பங்கு கொண்டுள்ளனர். அதேநேரம் இன்று எண்பது அண்டுகள் கழித்து 2026-ஆம் ஆண்டு ஆகும்போது இந்த எண்ணிக்கை தலைகீழாக மாறியுள்ளது. அதாவது இந்தி யர்கள் (மலையகத் தமிழர்கள்) நாட்கூலி தொழிலாளர் எண் ணிக்கையில் கூட வெறும் எண்பதினாயிரம் அளவாகக் குறைவடைய, ஐந்தரை லட்சம் முதல் ஆறு லட்சம் வரையான சிங்களவர்கள் வசம் பெருந்தோட்டம் சிறுதோட்டமாக மாறி யுள்ளது. சிறுதோட்ட உடைமையாளர்களாக மாற்றப்பட்டு சிங் களவர்களுக்கு நிலத்துடன் கூடிய பொருளாதாரமாக கட்ட மைக்கப்பட்டுள்ளது. 2026 ஜனவரி மாதம் வழங்கப்பட்ட 1750 ரூபா நாட்கூலி அதிகரிப்பு வெறும் எண்பதினாயிரம் எண்ணிக் கையான இந்தியத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களுக்கு மட்டுமே என்பதைப் புரிந்துகொள்ள இந்த மறுவாசிப்பு அவசி யமாகிறது. மலையகத் தமிழர்கள் இலங்கை ஆட்சியாளர் களால் நிலவுடைமை மறுக்கப்பட்டவர்களாக உள்ளனர் என்ப தையும் எடுத்துக் காட்டுகிறது.

அதேநேரம் இந்தியர்கள் (மலையகத் தமிழர்கள்) குறித்த சிங் களவர்கள் கொண்ட பயம் குறித்து தெளிவாக இந்த நூலில் எழுதப்பட்டுள்ளது. பெருந்தோட்டப் பொருளாதாரம் என்பது அந்நிய (பிரித்தானிய) முதலீட்டையும் அந்நிய (இந்திய) உழைப்பையும் இலங்கையின் நிலத்தையும் கொண்டு கட்ட மைக்கப்பட்டது என்ற வகையில், பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரம் கிடைத்த பின்னரும் கூட இந்தியர்கள் (மலையகத் தமிழர்கள்) அந்த நிலத்தை மையமாகக் கொண்ட பொருளா தாரத்தில் ஈடுபடுவது சிங்களவர்களுக்கு உறுத்தலாகவே இருந்தது, இருக்கின்றது. இந்தப் பயமே இலங்கை இந்தியர் களின் குடியுரிமைப் பறிப்பு, ஒப்பந்தம் செய்து இந்தியாவுக்கு நாடுகடத்தல் முதலான கடுமையான தீர்மானங்களை எடுக்கக் காரணமாகியது.

பெருந்தோட்டத்துறையில் ஆரம்பத்தில் இலங்கையர்களின் பங்களிப்பு இருக்கவில்லை அல்லது மிகக் குறைவாக இருந்தது. இந்திய குடியேற்றத் தொழிலாளர் கட்டளைச் சட்டம் (1923), அதனோடு தொடர்புடைய தோட்டத் தொழிலா ளர் கட்டளைச் சட்டங்கள் தோட்டங்களில் தொழில் செய்த இந்தியத் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பு, ஊதியம், மற்றும் வாழ்க்கை நிலைமைகளை பாதுகாப்பதை நோக்க மாகக் கொண்டிருந்தது. அவர்களுக்கு நியாயமான சம்ப ளத்தை பெற்றுக்கொடுப்பது, வீட்டு வசதி சுகாதாரம் முதலா னவற்றை உறுதி செய்வது தொடர்பில் இந்தச் சட்டங்கள் வலி யுறுத்தல்களைச் செய்கின்றன.

இவை தொழிலாளர்களின் நலன் கருதி என்பதைவிட பிரித்தா னியர் தமது பெருமுதலீட்டு வணிகமாக பெருந்தோட்டத்து றைக்கு அவசியமான தொழிலாளர்களை நிரந்தரமாகப் பேணிக் கொள்வதற்காக செய்த ஏற்பாடுகளாகும். ஆனாலும் அவை மறுபக்கத்தில் இலங்கை சுதந்திரத்தின் பின்னதாக குடியுரிமை பறிக்கப்பட்ட பின்னரும் கூட தோட்டங்களில் வேலை செய்வதற்கும் அங்குள்ள லயன் வீடுகளில் வாழ்வ தற்கும் அவர்களுக்கு வாய்ப்பளித்தது, இன்றுவரையும் கூட அது நீள்கிறது. இதில் இருந்து மீள்வதற்கான போராட்டமே இப்போது மலையகத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

மேற்படி சட்ட ஏற்பாடுகளின் காரணமாக பெருந்தோட்டப் பொருளாதாரம் இந்தியர்களின் உழைப்பில் தங்கியிருக்கும் நிலை தொடர்ந்ததன் காரணமாக சிங்களவர்கள் பயம் கொண் டனர் என்பதை பேராசிரியர் சோ. சந்திரசேகரன், மிகத் தெளிவாக இந்த நூலில் விளக்கியுள்ளார்.

இந்தக் கட்டுரையில் கையாளப்படும் 'சிங்களவர்கள் பயந் தார்கள்' என்பது அந்த நூலில் உள்ளது உள்ளபடி கூறும் முறையே தவிர உண்மையில் இலங்கை அரசின் மனநிலை என்பதே மிகச்சரியாக அமையும். உண்மையில் இந்த சிங்கள அல்லது இலங்கை அரச மனநிலையின் பின்னால் இருப்பது ஒரு சித்தாந்தம் என்பது இந்த மறுவாசிப்பில் புரிந்து கொள் ளப்படவேண்டியது. இந்திய நிலையில் இந்திய சுதந்திர போராட்டம் என்பது பிரித்தானியர்களுக்கு எதிரானது. ஆனால் இலங்கை நிலையில் சுதந்திர போராட்டம் என்பது பிரித்தானி யர்களுக்கும், இந்தியர்களுக்கும் ஏனைய சிறுபான்மை இனங் களுக்கும் எதிரானது. இந்த சித்தாந்த உருவாக்கம் இலங்கை பௌத்த அரசியல் சித்தாந்த கோட்பாட்டாளர்களில் முக்கிய மானவராகக் கருதப்படும் அநகாரிக தர்மபாலவுடையது. இலங்கை விடுதலை பெற வேண்டியது பிரித்தானியர்களிடம் இருந்து மட்டுமல்ல. பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் ஊடாக இலங்கையை ஆக்கிரமித்து இருக்கும் இந்தியர்க ளுக்கும் எதிரானது. எனவே பிரித்தானியர்களுக்கு எதிரான மனநிலை மாத்திரமல்ல இந்தியர்களுக்கு எதிரான மனநிலை இலங்கை சிங்களவர்கள் மத்தியில் வேரூன்றியது.

இந்த சித்தாந்த அடிப்படையிலேயே பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த அதே 1948-ஆம் ஆண்டு இந்தி யர்களின் இலங்கைக் குடியுரிமையைப் பறிக்க இலங்கை சுதேச அரசு சட்டம் கொண்டுவந்தது. தொடர்ந்தும் 1954, 1964, 1974-ஆம் ஆண்டுகளில் இந்தியர்களை (மலையகத் தமிழர்களை) இலங்கையில் இருந்து நாடு கடத்தும் ஒப்பந் தங்களை இலங்கை இந்தியாவுடன் செய்தது. 1984 வரை

இந்த நாடு கடத்தல் தொடர்ச்சியாக இடம்பெற்றமை கவனத்துக்குரியது. அதனையடுத்து தொடங்கிய ஈழயுத்தமும் அதனால் நிற்க நேர்ந்த ராமானுஜம் கப்பலும் இந்த நாடுகடத்தலை நிறுத்தியது. எனினும் இந்த மக்கள் நாடற்றவர்களாகவே இலங்கையில் வாழ நேரிட்டது. உடனடுத்த வந்த திம்பு கோட்பாடு இவர்களுக்கு இலங்கைக் குடியுரிமைக்கான அத்திவாரத்தை இட்டது.

ஆனாலும் அநகாரிக தர்மபாலவின் அந்த சித்தாந்தம் இன்னும் இலங்கை அரசை ஆளும் எந்த அரசாங்கம் எனினும் அதில் வேரூன்றி நிற்பது வெளிப்படை. இந்திய வம்சாளிகளான இந்த மக்களுக்கு இலங்கையில் நிலவுரிமை வழங்குவதில் இலங்கை அரசாங்கங்கள் காட்டும் தயக்கம் இந்த சித்தாந்த வேரூன்றுதலே ஆகும்.

இந்த இறுதி அத்தியாயத்தில் இந்த மக்களை இந்திய வம்சாவழி மக்கள் என்று விளிக்கின்றார் பேராசிரியர் சோ. சந்திரசேகரன், முதல் பதிப்பு வெளியான காலத்தில் அறிமுகமான 13-வது அரசியலமைப்புத் திருத்தம் அதன் ஏற்பாடுகளால் உருவான மாகாண சபை முறைமையில் இந்திய வம்சாவளி தமிழர்களுக்கு எவ்வித தீர்வும் இல்லை என மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எனவே இந்தியத் தலையீட்டுடன் மாகாண சபை முறைமையில் இலங்கை வாழ் இந்தியர்களுக்கு எந்த ஏற்பாடும் இல்லை என 'இலங்கை இந்தியர் வரலாறு' நூலில் இடம்பெறுவது முக்கியமானது.

2013-ஆம் ஆண்டுக்குப் பின்னதாக இன்றுவரை நடைபெறாமல் இருக்கும் மாகாண சபை தேர்தல்களை நடாத்துவதற்கு நடப்பு அரசாங்கம் முனைப்புகளைக் காட்டும் இந்தத் தருவாயில், மாகாண சபைத் தேர்தல் முறைமை குறித்த தீர்மானம் எடுக்கும் சட்டத் திருத்தங்கள் வரவுள்ள நிலையில், பேராசிரியர் சொ. சந்திரசேகரனின் இந்த கூற்று முக்கியமாக மறுவாசிப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டியது.

நிறைவுரையாக இந்த நூலில் ஒரு பகுதியை எழுதியிருக்கும் பேராசிரியர் சோ. சந்திரசேகரன், தனது இந்த நூலின் முதலாவது பதிப்பு 1989-ஆம் ஆண்டு வெளிவந்தபோது அதில் பல குறைபாடுகள் உள்ளதை உணர்ந்து இரண்டாம் பதிப்பு கொண்டு வர நினைத்து 2001-ஆம் ஆண்டு அது சாத்தியமாகியது. அதேநேரம் இந்த நூலின் தொடர்ச்சியாக ஒரு நூலை எழுத வேண்டும் எனும் தனது விருப்பத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அவர் மறைந்து இன்று நான்கு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் அதற்கான சாத்தியமில்லை. ஆனால் அவரின் நினைவாக நடைபெற்ற புலமைத்துவ நினைவேந்தல் நிகழ்வும் அதில் அவரது 'இலங்கை இந்தியர் வரலாறு' நூல் குறித்த ஒரு பார்வையும் அதனை நினைவூட்டுவதாக அமைந்தன. இலங்கை வாழ் இந்தியர்களின் வரலாற்றை விஞ்ஞானபூர்வ ஆய்வு முறையில் அணுகி அவர்களது வருகையை, வரலாற்றை, பொருளாதாரத்தை, தொழிற்சங்கத்தை, வாழ்வியலை, அரசியல் இருப்பை எழுதி வைத்தவர் ஒரு கல்வியியல் பேராசிரியர் என்பதும், அவர் எழுதியுள்ள நூலில் கல்வியியலுடன் நேரடியாக தொடர்புபடாத ஒரே நூல் இதுவென்பதும் கூட வரலாறாகிறது. இப்போதைய இந்திய வம்சாவளி மலையகத் தமிழ் கல்வியியலாளர்கள் மாத்திரமல்ல, கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் அனைவருக்கும் இந்த வரலாற்றின் தொடர்ச்சியை ஆய்வு செய்து எழுதும் அவசியத்தை வலியுறத்தி நிற்கிறது 'இலங்கை இந்தியர் வரலாறு' எனும் நூல்.




thilagar@thaiveedu.com



— செங்கதிரோன் —

வ.அ.இராசரத்தினம் எழுதிய ‘ஒருகாவியம் நிறைவுபெறுகிறது’ குறுநாவலும் ‘கிழக்கின் நூறு சிறுகதைகள்’ தொகுப்பு நூலும்



தமிழ்த்தின் சிறந்த சிறுகதை எழுத்தாளர் வரிசையில் முன்வைக்கப்பட வேண்டிய ஒருவர் எழுத்துலகில் ‘வ.அ’ என அழைக்கப்பெற்ற அமரர் வஸ்தியாம்பிள்ளை அந்தோனி இராசரத்தினம் அவர்கள் (05.06.1925 - 22.02.2001). அமரர் ‘வ.அ’-வின் ‘ஒருகாவியம் நிறைவுபெறுகிறது’ எனும் குறுநாவல் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 2021-இல் ‘கிழக்கின் 100 சிறுகதைகள்’ என்ற பெயரில் வெளியிட்ட இத்தொகுப்பு நூலில் இருபத்தைந்து பக்கங்களைப் பிடித்து இடம்பெற்றிருப்பதே என் அவதானித்திற்குரியதாகியது. வ.அ. இராசரத்தினம் பற்றிய வேறு கட்டுரைகள் - குறிப்புகள் சிலவற்றில் இக்கதை குறுநாவலென்றே குறிப்பிடப் பட்டுள்ளமையே எனது கவனத்தை ஈர்த்தமைக்குக் காரணம். ‘1975-இல் வீரகேசரியில் நாலைந்து வாரங்கள் குறுநாவலாகவே இது வெளிவந்துமிருந்தது. அதே ஆண்டில் வ.அ.-வின் ‘தங்கம்’ வெளியீடாக (அமுதா அச்சகம்) நூலுருப் பெற்றது.

‘ஹைட்ரோபோபியா’ வியாதி வந்து (02.09.1975 அன்று) உயிர் நீத்ததன் அன்பு மனைவி ‘லில்லி’-யின் (மேரிலில்லிதிரிஷா - அவரும் ஆசிரியப் பணியிலிருந்து அதிபராக உயர்ந்தவர்) பிரிவுத்துயரின் உணர்வு வெளிப்பாட்டை மறைந்த தன் மனைவியுடன் ஊடாடிய, உறவாடிய, வாழ்ந்த நினைவுகளிடை தோய்ந்து மிகுந்த கலாநேர்த்தியோடு இக்கதை மூலம் வ.அ. அவர்கள் இலக்கியமாக்கியிருக்கிறார், காவியமாக்கியிருக்கிறார். தனது தாம்பத்திய வாழ்வில் தான் நுகர்ந்த இன்ப துன்பங்களையெல்லாம் ஒளிவு மறைவின்றி ஒப்புவித்திருக்கிறார்.

காதல் மனைவியின் பிரிவுத்துயர் தூண்டிவிட்ட அத்தனை நினைவுகளையும் உணர்வுகளையும் உள்ளத்திலிருந்து எழும் கலப்படமற்ற, களங்கமற்ற புனைவு மொழியில் கொட்டித் தீர்த்திருக்கிறார். இக்கதை மூலம் தனது மனப் பாரத்தை இறக்கிவைக்க எத்தனித்திருக்கிறார்.

கதையில் வரும் பெயர்கள் - பிரதான மற்றும் உபமாந்தர்கள் அனைத்தும் உண்மையானவை. நிகழ்வுகள் அத்தனையும் உண்மையே. கற்பனையென்றொன்று அறவே இல்லாத கதை. கற்பனையே இல்லாத ஒரு கதையை, காவியத்தைச் சாத்தியமாக்கியிருக்கிறார், சாதனையாக்கியிருக்கிறார் வ.அ. அவர்கள்.

மூத்தமகள் வசந்தி, பெறாமகன் ஆனந்தன், சிவப்பிரியன் ஐயா, டாக்டர், அடுத்த வீட்டில் கார் வைத்திருக்கும் அம்பலவாணர், மனைவியின் தம்பி ஜீவரத்தினம், வ.அ.-இன் இலக்கிய நண்பரான உதவி வைத்திய அதிகாரி, மனைவியின் சித்தப்பா மகனான ஆயுர்வேத வைத்தியன், சுவாமியார், பெரியண்ணா, நாட்டு வைத்தியர் தியாகராசா, மச்சான் ‘நிக்கொலஸ்’ பண்டிதர், குடும்பநண்பனும் உறவினருமாகிய கதிர்காமத்தம்பி, லியோ அண்ணா, உறவினரே அல்லாத வங்கி முகாமையாளர், மனைவியின் அக்கா, மனைவியின் அம்மா, மச்சான் மனோகரன், மனைவியின் அப்பா, அபூபக்கர் மாஸ்டர், செல்லையா அண்ணன், உறவினன் தாசன், துரைரத்தினசிங்கம், உதவி ஆசிரியர் கவிஞர் கனகசிங்கம், விபுணசேகரம், எழுத்தாளர்கள் முல்லைமணி, அருள்சுப்பிரமணியம், பண்டிதர் வைரமுத்து, குமாரதுரை (கிளிவெட்டி), மனைவியின் மாணவன் கேசவராசாவும் அவன் மனைவியும், மனைவியின் பாடசாலையில் சக ஆசிரியர் சுன்னாகம் சண்முகம் மாஸ்டர், அவர் மனைவி சங்கானைஅக்கா, மூத்தமகன் ரவி, சோதியன், சேனையூர் வித்தியாலய உயர் வகுப்பு மாணவர்கள் சுகுமார், ரெத்தினசிங்கம், பக்கத்துவீட்டு றீற்றா, உதவி டிறெக்டர் (கல்வித் திணைக்களம்) எதிரிசூரிய, முருகேசுமாஸ்டர், எழுத்தாளர்களான எஸ்.பொ - ரகுமான், உதவி மந்திரி மஜீத், ஹசன் விதானையார், தம்பல

காமத்துச் சித்திரவேல், கணேசபிள்ளை, மனைவியின் தம்பி அந்தோணி டொக்டர், தங்கத்துரையண்ணன் (பா.உ.), தம்பி ஸ்டணிஸ்லாஸ், மட்டக்களப்பு இராசேந்திரா, பங்குக் குரு சொய்சா, அரசரெத்தினம் அடிகளார், காமினி பெர்னான்டோ அடிகளார், சந்திரா அடிகளார், ஜோசப்மேரி அடிகளார், சின்ன மகன் நோயெல், நாகூரில் பங்கு குரு ஹமில்டன் அடிகளார் என்று எல்லாப் பாத் திரங்களுமே உண்மைப் பாத்திரங்களே.

மொகலாய மன்னன் ஷாஜஹான் தனது காதல் மனைவி 'மும்தாஜ்'ஜுக்கு எழுப்பிய 'தாஜ்மஹால்' கட்டடம் போன்று வ.அ. அவர்கள் தன் மனைவி லில் லிக்குக் கட்டிய காவியம்தான் இக்குறுநாவல் காலத்தால் அழியாதது.

எழுத்தாளர் அமரர் வ.அ. இராசரத்தினம் அவர்களிலோ, அவரது படைப்பாற் றலிலோ, 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' எனும் குறுநாவலிலோ எந்தவிதமான எதிர்மறை விமர்சனங்களும் எழ நியாயமில்லை. அத்துணை அருமையான, அற் புதமான படைப்பு இது. குறுநாவலின் நிறைவிலே வ.அ. செய்யும் பிரகடனம் அவரது உணர்வு வெளிப்பாட்டின் உச்சம். அது இது தான்.

'...இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழங்கும் தமிழ் இலக்கியத்திலே புல வர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது தவிர அவர்களை உருவாக்கிவிட்ட அவர்களின் மனைவியருக்கு சரித்திரமே கிடையாது. தமிழ் இலக்கியத்துக்கே முற்றிலும் புதுமையான அக்கலைப்ப டைப்பை நான் படைத்தே தீருவேன்'

வ.அ. அவர்கள் தனது பிரகடனத்தை இக்குறுநாவல் மூலம் அச்சொட்டாக நிறை வேற்றியிருக்கிறார். ஆனால், மேலே குறிப்பிடப்பெற்ற 'கிழக்கின் நூறு சிறுக தைகள்' எனும் பெரும் தொகுப்பு நூலில் இக்குறுநாவல் இடம்பெற்றிருப்பதுதான் இக்குறிப்பை எழுத என்னைத் தூண்டியது.

வ.அ. அவர்களின் 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' என்னுமிக்குறுநாவலை கிழக்கின் சிறுகதைகளுக்குள் வகைப்படுத்தியிருப்பது பொருத்தமாகத் தெரிய வில்லை. இக்கதை ஐம்பது சிறுகதைகள் கொண்ட வ.அ.-இன் 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' (1996) என்ற தொகுப்பு நூலிலும் இடம்பெற்றுள்ளதாக அறியக் கிடக்கிறது. அது வேறு விடயம்.


'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' எனுமிக்கதையை வ.அ. அவர்களே குறுநாவல் என்றுதான் குறிப்பிட்டுள்ளார். வ.அ. இராசரத்தினம் எழுதிய 'இலக்கிய நினைவுகள்' (அன்பர் வெளியீடு, திருகோணமலை - 1995 தை மாதம்) என்னும் நூலிலும் இரு இடங்களில் இதனைப் பதிவுசெய்துள்ளார்.

'1975 செப்ரெம்பரில் என் மனைவியை இழந்தேன். இழந்த நான்காம் நாளிலேயே, என் அளப்பரிய சோகத்தை 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' என்ற குறுநா வலாக எழுதி என் துயருக்கு வடிகால் சமைத்தேன். அக்கதை வீரகேசரியில் தொடர்ந்து பிரசுரமாகிச் சூடாறு முன்னரே நூலுருப் பெற்றது'. ('இலக்கிய நினைவுகள்' பக்கம் 60)

'மனைவி இருந்தவரை நான் 'அரிசி விலை தெரியாத' இலக்கியக்காரன். நான் எனக்கென்று உடுதுணிகள் வாங்கி அறியமாட்டேன். எல்லாமே என் மனைவியின் கைங்கரியங்கள்தான். மனைவி இறந்துபோனபொழுது கண்ணைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட குழந்தையாகித் தடுமாறிக் கலங்கினேன். அவள் இறந்த நான்காம் நாளே என் மனைவியின் நினைவுகளை ஒரு குறுநாவலாக எழுதி என் சோகத்திற்கு வடிகாலமைத்தேன். 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' என்ற குறுநாவல் வீரகேசரியில் தொடர்ந்து வெளிவந்தது. சரவணையூர் மணிசே கரனின் தாரணி அச்சகம் அந்நூலையும் வெளியிட்டது.' ('இலக்கிய நினைவுகள்' பக்கம் 157/158)



இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வழங்கும் தமிழ் இலக்கியத்திலே புலவர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் சரித்திரம் எழுதப்பட்டிருக்கிறது தவிர அவர்களை உருவாக்கிவிட்ட அவர்களின் மனைவியருக்கு சரித்திரமே கிடையாது.



வ.அ. அவர்களே குறுநாவல் எனக் கருதிய 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' என்னுமிக்கதையை இத்தொகுப்பு நூலின் தொகுப்பாளர் (கள்) ஏன் சிறுகதையாகத் தேர்வுசெய் தார்(கள்)? இந்நூலின் தொகுப்புப் பணியில் ஈடுபட்டவர்க ளிடம் பரந்த வாசிப்புப் பரப்பும், அர்ப்பணிப்புடன் கூடிய இலக்கியக் கரிசனையும் இருந்திருக்கவில்லை என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

வ.அ. அவர்கள் முந்நூறுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழு தியவர். அவரின் அறுபத்தைந்து சிறுகதைகள் 'தோணி' (15) மற்றும் 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' (50) ஆகிய தொகுப்பு நூல்களில் வெளிவந்துள்ளன. இருபத்தைந்து பக்கங்களைப் பிடித்துள்ள 'ஒருகாவியம் நிறைவுபெறுகிறது' என்னுமிக்க தையைத் (இது ஒரு தனி நூலாக வெளியிடக்கூடிய தகுதியை உடையது) தவிர்த்து வ.அ. அவர்களின் பக் கங்கள் குறைந்த (ஐந்தாறு பக்கங்களில் அடங்கக்கூடிய) வேறு சிறந்த கதையொன்றினை இத்தொகுப்பில் சேர்த்திருக் கலாம்.

ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் சிறந்த சிறுகதைகளாகச் சிலாகிக்கப்படுவனவற்றுள் வ.அ. அவர்களின் 'தோணி' சிறு கதையும் அடங்கும்.

'தோணி' 20.12.1953 'ஈழகேசரி'ப் பத்திரிகையில் முதன்முதல் வெளிவந்தது. 1950-இலிருந்து 1957-வரையிலான காலப்பகு தியில் வ.அ. அவர்கள் 'ஈழகேசரி'யில் இருபத்தியொன்பது சிறுகதைகள் எழுதியுள்ளார். (செங்கையாழியான் கலாநிதி க. குணராசா - 'ஈழகேசரியும் வ.அ. இராசரத்தினமும்' கட்டுரை)

'தோணி' சிறுகதை, கொழும்பிலிருந்து 'இளம்பிறை' ரகுமானின் முதலாவது அரசு வெளியீடாக 1962-ஆம் ஆண்டில் வெளிவந்த 'தோணி' என்னும் சிறுகதைத் தொகுதி யிலும் இடம்பெற்றுள்ளது. மட்டுமல்லாமல் கிழக்கிலங் கையின் மண்ணிற்கு முதன் முதல் இலக்கிய சாகித்தியமண் டலப் பரிசு பெற்றுத்தந்த பெருமையும் 'தோணி'க்குண்டு. கே.எஸ். சிவகுமாரன் எழுதிய 'திறனாய்வுப் பார்வைகள்' நூலில் 'தோணி' சிறுகதை பற்றிய மதிப்பீடும் இடம்பெற் றுள்ளது.

'தோணி' சிறுகதை வீரகேசரியில் பிரசுரமானபோது இலங்கை யர்கோனால் வெகுவாகப் பாராட்டப்பெற்ற கதை. அதன் தரம் கருதி 'மஞ்சரி'யில் மறுபிரசுரமானது. 'ஈழத்துச் சிறுக தைகள்', 'அக்கரை இலக்கியம்' ஆகிய சிறுகதைத் தொகுப்பு நூல்களில் இடம் பிடித்தது. ஏ.ஜே. கனகரத்னா வினால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு 'ஒப்சேவர்' (OBSERVER) பத்திரிகையில் வெளிவந்தது. ரஷ்ய மொழியிலும் மலையாள மொழியிலும் மொழிபெயர்க்கப் பட்டது. த. கனகரத்தினம் அவர்கள் சிங்களத்தில் மொழிபெ யர்த்துச் சிறுகதைத் தொகுதியொன்றில் சேர்த்தார்.

இந்தப் பின்புலத்தில் 'கிழக்கின் 100 சிறுகதைகள்' நூலைத் தொகுத்தவர்களால் 'தோணி' சிறுகதை ஏன் தவிர்க்கப்பட்ட தெனத் தெரியவில்லை. இப்பெரும் தொகுப்பு நூலைத் தொகுத்தவர்களிடம் 'கிழக்கின் சிறுகதைகள்' என்பதற்கான தெளிவான அளவுகோலும் முறையான தேடலும் தொடர்பா டலும் கலந்துரையாடலும் பக்கச்சார்பற்ற இலக்கியக் கரி சனையும் இருக்கவில்லையென்றே எடுத்துக் கொள்ளவேண் டியுள்ளது.

கிழக்கிலங்கையின் சிறுகதைச் சித்தர்களாகச் சிறப்பித்துக் கூறப்படவேண்டியவர்கள் இருவர். ஒருவர் பித்தன் (கே.எம்.ஷா). மற்றவர் வ.அ. அவர்கள். பித்தன் ஷா-வின் 'பாதிக் குழந்தை'யை இத்தொகுப்பு நூலில் சேர்த்துக் கொண்ட தொகுப்பாளர்கள் வ.அ.-இன் 'தோணி'யை எந்தக் கடலில் தொலைத்தார்கள்?

ஒரு வாதத்திற்காகத் 'தோணி'யை விட்டாலும் வ.அ. எழுதிய வேறு பல சிறப்பான சிறுகதைகளும் உள்ளன.

எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் வீரகேசரியில் பணிபுரிந்த காலத்தில் வ.அ. அவர்களின் முயற்சியில் மூதூரில் தமிழ் விழாவொன்று நடந்தது. 1964-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தின் மூன்றாம் வாரத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு என மூன்று நாட்கள் நடைபெற்ற இவ்விழாவையொட்டி எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் ஞாயிறன்று விழாமலரொன்றை வெளி யிட்டார். இம்மலரில் வ.அ. எழுதிய 'சுடலைஞானம்' என்ற சிறு கதையும் இடம்பெற்றது. இச்சிறுகதையும் சிறந்ததெனச் சிலாகிக்கப்பட்டதொன்றாகும்.

'கனி' என்ற தலைப்பில் வானொலியில் ஒலிபரப்பப்பட்டுப் பின்னர் 'வானொலி' என்ற இதழிலும் பிரசுரமான கதையைத் தன் சிறந்த கதைகளிலொன்றென வ.அ.-வே குறிப்பிட் டுள்ளார். ('இலக்கிய நினைவுகள்' பக்கம் 49)

வ.அ. அவர்களின் 'உண்ணி' எனும் சிறுகதையும் சிறப்பான தாகப் பேசப்பட்டதொன்றாகும். இது எம்.ஐ.எம். ஜபார் அவர்களை இதழாசிரியராகக் கொண்டு வெளிவந்த 'ஆகவே' எனும் சிற்றிதழில் (இதழ்-2 - டிசம்பர் 1992) இடம் பெற்றுள்ளது.

தமிழ் ஒளி, கலாபூஷணம் வ.அ. இராசரத்தினம் அவர்களின் பவளவிழாவையொட்டி 2000-ஆம் ஆண்டு சித்தி அமரசிங் கத்தைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு திருகோணமலை' முத்தமிழ் வளர்கலைமன்றம்' வெளியிட்ட 'இலக்கியப் பூந்துணர்' எனும் மலரில் இடம்பெற்றுள்ள 'பயணம்' எனும் சிறுகதையும் (பக்கம் 178) சிறப்பானதொன்றாகும். இக்கதை இரசிகமணி கனகசெந்திநாதன் நினைவுச் சிறுகதைப்போட் டியில் முதற்பரிசு பெற்று 21.02.1999 'தினக்குரல்' பத்திரி கையில் பிரசுரமானது.

'கிழக்கின் 100 சிறுகதைகள்' எனும் இந்நூலின் தொகுப்புப் பணியில் ஈடுபட்டவர்களின் தேடலின்போது கண்ணில் படாமல் இக்கதைகள்தானும் எங்கே ஒளிந்துகொண்டன?

இந்தப் பின்னணியில் நோக்கும்போது 'கிழக்கின் 100 சிறுக தைகள்' நூலின் தொகுப்பாளர்களால் அந்நூலில் 'வ.அ'-இன் சிறந்த சிறுகதைகள் எதுவும் இடம்பெறாமல் 'இருட்டடிப்பு'ச் செய்யப்பட்டுள்ளது என்றே சந்தேகத்துடன் எண்ணத் தோன் றுகிறது.



Senkathiron@thaiveedu.com

கிரேக்க மொழியியலும் தொல்காப்பியமும்


11

மொழியியலில் கிரேக்க அறிஞர்கள் பங்களிப்பு – 3

நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு

அறிஞர் குழு:

மொழியியல் வளர்ச்சியில் கிரேக்கர்களது பங்களிப்பு அள விடமுடியாது என்பது வரலாறு. உலகத்தில் முதன் முதலில் நாகரிகம், மொழி பற்றிய ஆய்வில் தமக்கென ஒரு தனி இடத்தினைப் பெற்றவர்கள். அந்த வகையில் மொழியியல் ஆய்விற்கு இவர்களது பங்களிப்பு இருவேறுபட்ட காலகட்டங் களில் இருவேறுபட்ட நிலையில் காணப்பட்டது. மொழியியல் வளர்ச்சிக்கு மொழியியல் அறிஞர்கள் தனித்தனியாக நின்று இருவேறுபட்ட கருத்துகளை முன்வைத்து தமது மொழியி யல் வளர்ச்சிக்கு பங்கு ஆற்றினார்கள். அதாவது மொழி மனிதரது இன்றியமையாத் தேவையினால் தோன்றியது என் றும் அது இறைவனால் கொடுக்கப்பட்டது என்றும் இறை நம்பிக்கையோடு கூடிய கொள்கை கொண்ட அறிஞர்கள் கருதினர். கிரேக்க வரலாற்றில் மனிதரைவிட இறைமை உயர்ந்தது எனும் அடிப்படையில் பொருட்களின் பெயர்கள் முதன் முதலில் இறைவனால் சுட்டப்பட்டது என நம்பினர். மற்றுமொரு சாரார் 'மனிதரது இன்றியமையாத் தன்மையினால் மொழி தோன்றினாலும் அது இயற்கையாக தோன்றவில்லை, சமுதாயத்தின் பரஸ்பர உடன்பாட்டினாலும் பழக்கத்தினா லும் தோன்றியது' என்று கருதினர். அது மட்டுமல்ல உலகில் காணப்படும் அனைத்துப் பொருட்களும் பிரிக்க முடியாத சிறிய துகள்களால் ஆனவை என்றும் அந்த துகள்களுக்கு 'அணுக்கள்' என்றும் பெயரிட்டனர். இதன் அடிப்படையில் கிரேக்கத்தில் இரு மெய்விளக்கக் குழுக்கள் அமைந்து மொழியியலுக்கு பெரும் பங்காற்றினர். ஒன்று மரபுக் கோட் பாட்டுக் குழு, மற்றையது இயற்கைக் கோட்பாட்டுக் குழு வாகும். அது போல மொழியியல் அறிஞர்கள் பலர் சேர்ந்த குழுக்களும் இருவேறுபட்ட கருத்துகளை முன்வைத்து தமது மொழியியல் வளர்ச்சிக்கு வித்திட்டனர். மொழியானது ஒழுங் கானது, சட்டதிட்டங்களுக்குள் அடங்கி நடக் கக் கூடியது என்று ஒருசாராரும், மறுசாரார் மொழி ஓர் ஒழுங்கற்றது அதனை சட்டதிட் டங்களுக்குள் அடக்கிவிட முடியாது என இருவேறுபட்ட கருத்துகளை முன்வைத்தனர். அந்த வகையில் கிரேக்கர்களின் மொழியி யல் பங்களிப்பில் இரண்டு மிக முக்கிய அறிஞர் குழுக்களாக ஸ்டாய்க் அறிஞர் குழு மற்றையது அலெக்சாண்டரியன் அறி ஞர் குழு என்பன செயற்பட்டு வந்தன.



tg.theeban@gmail.com

> ***"ஸ்டாய்க் குழுவினர் இடைச்சொல்லை இலக்கண உலகிற்கு அறிமுகப்படுத்தினர். வினைச் சொல்லில் செயல் முடிந்த நிலையினையும், முடியாமல் நிற்கின்ற நிலையினையும் இக்குழுவினர் ஆராய்ந்தனர். வினைச் சொற்களில் தன்வினை, பிறவினை செயற்பாட்டு வினை என்பவற்றையும் தெளிவுபடுத்தியவர்கள் இவர்களாவர்."***

• ஸ்டாய்க் அறிஞர் குழு (Stoics):


அலெக்சாண்டரியா அறிஞர்களுக்கு இணை யாக மொழியியல் வரலாற்றில் ஸ்டாய்க் அறிஞர்கள் ஆற்றிய பங்கு மிகவும் மகத் தானது. அலெக்சாண்டரியர்கள் இலக்கணத் தின் 'வடிவத்திற்கு' (Form) முக்கியத்துவம் கொடுத்தார்கள் என்றால், ஸ்டாய்க் அறி ஞர்கள் மொழியின் 'பொருள்' (Meaning) மற்றும் தர்க்கத்திற்கு (Logic) முக்கியத்து வம் கொடுத்தார்கள். ஸ்டாய்க் குழுவினர் மொழியியலுக்கு மிக முக்கிய பங்களிப்பை

வழங்கினர். மொழி என்பது வெறும் தகவல் பரிமாற்றக் கருவி மட்டுமல்ல அது மனித சிந்தனையின் வெளிப்பாடு என்றும் மொழியியலை தர்க்கவியலின் ஒரு பிரிவாகவே கருதி னார்கள். நவீன மொழியியலின் தந்தை என அழைக்கப்படும் பெர்டினண்ட் டி சசூர் (Ferdinand de Saussure) உருவாக் கிய சைன் (Sign) கோட்பாட்டுக்கு ஸ்டாய்க் அறிஞர்களே முன்னோடி. அவர்கள் ஒரு சொல்லை அதன் செயற்பாட்டின் அடிப்படையில் மூன்று நிலைகளில் பகுத்து ஆராய்ந்தனர். முதலாவதாக, ஒரு சொல்லை உச்சரிக்கும்போது வெளிப் படும் ஒலி அல்லது அதனை எழுதப் பயன்படுத்தப்படும் வரி வடிவம்; இரண்டாவதாக, அந்தச் சொல்லைக் கேட்டவுடன் நம் மனதில் சட்டெனத் தோன்றும் கருத்து, மனப்பிம்பம் அல் லது அப்பொருளின் பண்பு; மூன்றாவதாக, இவ்வுலகில் புற வயமாக, உண்மையாகவே காணப்படக்கூடிய அந்தப் பொருள் (Referent) என அவற்றில் ஒவ்வொன்றையும் தனித்தனியா கப் பிரித்து விளக்கினர். இத்தகைய ஆழமான பகுப்பாய்வு முறையே, பிற்காலத்தில் சசூர் தனது மொழியியல் கோட் பாடுகளை வடிவமைப்பதற்கான அடிப்படைத் தத்துவத் தள மாக அமைந்தது.

ஸ்டாய்க் குழுவினர் மொழி ஆராய்ச்சிக்கென்று தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள். கிரேக்க அறிஞர் குழுக்கள் எல்லோரும் மெய் விளக்கத்தோடு சேர்ந்த மொழி ஆராய்ச் சியை மேற்கொண்டவர்கள். கிரேக்கர்களது வரலாற்றில் 3-ஆம் நூற்றாண்டில் ஸ்டாய்க் (Stoics) என்ற அறிஞர் குழு இலக்கண வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினர். சொற்களைப் பாகுபடுத்தும் சொல் வகைப்பாட்டினையும் அவற்றிற்கு பெயர் கொடுப்பது போன்ற அடிப்படை இலக்கண கருத்து களையும் முதலில் முன்வைத்தனர். வேற்றுமையை குறிக்கும் 'ப்தோசிஸ்' எனும் கிரேக்கப் பதத்தை உலகிற்கு முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்கள் இவர்களே. பின் இச்சொல் இலத்தீன் மொழியில் காஸஸ் (casus) என்றும் பிரெஞ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கேஸ் (Case) எனவும் வழங் கப்பட்டது.

3-ஆம் நூற்றாண்டில் வேற்றுமை எனும் சொல்லை இவர்கள் அறிமுகப்படுத்தினாலும் இந்திய மொழி களில் ஒன்றான வடமொழியில் 5-ஆம் நூற்றாண் டில் பாணினியால் எழுதப்பட்ட அஸ்டாத்தியாயி எனும் இலக்கண நூலில் வேற்றுமை என்பது கராகம் என்னும் பதம் கொண்டும் அது ஆறு பிரிவுகளைக் கொண்டு அமைக்கப்பட்டதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது.

மேற்கு உலகில் மொழியியல் ஆய்வு மேலே குறிப்பிட்ட கருத்துகளுடன் இருக்க, இதற்கு ஒருபடி மேலே சென்று பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு அளவில் (அல்லது அதற் குச் சற்று முன்) தொல்காப்பியரால் இயற்றப்பட்ட தொல்காப்பியத்தில் வேற்றுமை கூறப்பட்டது மட்டுமல் லாமல் வேற்றுமை இயல்கள், வேற் றுமை மயங்கியல், விளிவேற்றுமை என வேற்றுமைக்கே பல இயல்கள் உருவாக்கப்பட்டதும் நினைவு கொள் ளத்தக்கது.




டயோனிசியஸ் த்ராக்ஸ்
(Dionysius Thrax)

ஸ்டாய்க் குழுவினர் இடைச்சொல்லை இலக்கண உலகிற்கு அறிமுகப்படுத்தினர். வினைச் சொல்லில் செயல் முடிந்த நிலையினையும், முடியாமல் நிற்கின்ற நிலையினையும் இக் குழுவினர் ஆராய்ந்தனர். வினைச் சொற்களில் தன்வினை, பிறவினை செயற்பாட்டு வினை என்பவற்றையும் தெளிவு படுத்தியவர்கள் இவர்களாவர். அத்துடன் மொழியை விதி களின் ஒழுங்கினாலும், மொழிச் சட்டங்களினாலும் அடக்கி விட முடியாது என்றும், மொழி ஓர் ஒழுங்கற்ற தன்மையது போன்ற கோட்பாட்டினையே இக்குழுவினர் கொண்டிருந் தனர் என்பது குறிப்பித்தக்கது. தமது மொழி, இலக்கணம் என்பவற்றின் வளர்ச்சிக்கு இவர்களது பங்கு அளப்பரிய தாகக் காணப்பட்டது. ஸ்டாய்க் குழுவில் பல்வேறுபட்ட அறிஞர்கள் குழுவாக இருந்தாலும் மிக முக்கியமாக மூன்று அறிஞர்களை குறிப்பிட்டுக் கூறலாம். சீனோ (Zeno) ஸ்டாயிக் தத்துவத்தின் நிறுவுனர். கிறிசிப்பஸ் (Chrysippus): மொழியி யல் மற்றும் தர்க்கவியலில் அதிகப் பங்களிப்பு செய்தவர். கிராட்ஸ் (Crates of Mallus): அனோமலி கோட்பாட்டைப் பரப்பியவர்.

- **அலெக்சாண்டரியன் அறிஞர் குழு:**

ஸ்டாய்க் என்ற குழுவைத் தொடர்ந்து அலெக்சாண்டரியன் எனும் கிரேக்க அறிஞர்கள் குழு பல்வேறு இலக்கணக் கூறுகளை வெளிக்கொணர்ந்தனர். அலெக்சாண்ிரியன் அறி ஞர் குழு (Alexandrian Grammarian) மொழியியல் மற்றும் இலக்கண வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு மிக மிக முக்கிய மானது. பொ.ஆ.மு 3-ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.மு 1-ஆம் நூற்றாண்டு வரையான காலகட்டத்தில் எகிப்தின் அலெக்சாண்ரியோ நகரில் இருந்த புகழ் பெற்ற நூலகத்தை மையமாகக் கொண்டு இந்த அறிஞர்கள் குழு மொழியி யலுக்கு தமது பங்களிப்பை செய்வதற்கான இடமாகப் செயற்படுத்தினர். இவர்கள் மொழியியலுக்கு ஆற்றிய பங் களிப்புகள் இலக்கணத்தை ஒரு தனித்துறையாக மாற்றியது. இதற்கு முன் மொழி என்பது தத்துவத்தின் ஒரு பகுதியா கவே பார்க்கப்பட்டது. அலெக்சாண்டரிய அறிஞர்கள் கொண்ட குழுவே முதன் முதலில் மொழியைத் தத்துவத்திலிருந்து பிரித்து, அதற்குரிய விதி களை முறைப்படுத்தி இலக்கணத்தை ஒரு தனி அறிவியல் துறையாக உருவாக்கியது.

அலெக்சாண்டரிய குழு அறிஞர்களில் ஒருவரான டயோனிசியஸ் த்ராக்ஸ் (Dionysius Thrax) என்பவர் Technē Grammatikē' என்ற நூலை எழுதினார். இதில் கிரேக்க மொழியின் சொற்களை எட்டு வகைகளாகப் பிரித்தார்: பெயர் சொல், வினைச்சொல், வினையெச் சம், பெயரெச்சம், சுட்டுப்பெயர், பிரதிப் பெயர், இடைச்சொல், வினை உரிச்சொல், இணைப் புச் சொல் சொற்களின் வகைப்பாடு (Parts of Speech) ஒன்றை உருவாக் கினார். இன்றும் நவீன ஆங் கிலம் உள்ளிட்ட பல ஐரோப் பிய மொழிகளின் இலக் கணத்திற்கு அடிப்படையாக



> ***கிரேக்க மொழியின் கட்டமைப்பை முறைப்படுத்தியதன் மூலம், பிற்கால ரோமானிய (இலத்தீன்) இலக்கணத்திற்கும், அதன் வழியாக நவீன மொழியியலுக்கும் அலெக்சாண்டரிய அறிஞர்கள் ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.***

உள்ளது. வாதப் பிரிவாதங்களை முன்வைத்து மேலும் இலக்கணத் தெளிவை உருவாக்கினார்கள். அலெக்சாண்டரியா அறிஞர்கள் வெறும் இலக்கண ஆசிரியர்கள் மட்டுமன்றி மிகச் சிறந்த நூலகர்களும் ஆவர். ஹோமரின் காவியங்கள் போன்ற பழங்கால கிரேக்க இலக்கியங்களைச் சிதையாமல் பாதுகாப்பதற்கான குறியீடுகளையும், திருத்த முறைகளையும் இவர்கள் உருவாக்கினார்கள். இந்த அறிஞர் குழுவில் அரிஸ்டார்கஸ் (Aristarchus) ஹோமரின் நூல்களை ஆய்வு செய்தவர். டயோனிசியஸ் த்ராக்ஸ் (Dionysius Thrax): மேற்கத்திய இலக்கணத்தின் தந்தை எனப்படுபவர். அப்பல்லோனியஸ் டிஸ்கோலஸ் (Apollonius Dyscolus): தொடரியல் (Syntax) பற்றி விரிவாக எழுதியவர்.

இவர்கள், வினையடை, எச்சங்கள், மூவிடப்பெயர்கள், முன்னொட்டுகள் போன்ற இலக்கணக் கூறுகளை தெளிவுபடுத்தி தமது மொழியியல் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றினர். வகைப்பாட்டு இலக்கணம் (Descriptive Grammar): பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் பொ.ஆ.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை அலெக்ஸாண்டிரியாவில் இயங்கிய அறிஞர்கள் கிரேக்க மொழியின் இலக்கண விதிகளைத் தொகுப்பதில் முக்கிய பங்காற்றினர்.

அலெக்சாண்டரிய அறிஞர்கள் குழுவிற்கு முன்பே ஸ்டாய்க் அறிஞர் குழுவினர் சொற்களை பெயர்ச்சொற்கள், வினைச் சொற்கள், இணைப்புச் சொற்கள், சுட்டுப்பெயர்கள் என நான்காக வகைப்படுத்தினர். இவர்கள் வினைச் சொற்களின் காலங்களை முறைப்படுத்தியமை மிகப் பெரிய சாதனையாகப் பார்க்கப்படுகிறது. காலங்களை இரண்டு நிலைகளில் பார்த்தார்கள். ஒன்று முற்றுப் பெற்ற செயல், இரண்டாவது முற்றுப் பெறாத செயல். இதனடிப்படையில் நிகழ்காலம், கடந்த காலம், எதிர்காலம் எனக் காலங்களை வகைப் படுத்தினர். அலெக்சாண்டரிய அறிஞர்கள் இலக்கண விதிகளின் 'காவலர்களாக' இருந்தனர் என்றால், ஸ்டாய்க் அறிஞர்கள் மொழியின் 'உளவியலை' ஆராய்ந்தனர் எனலாம். அலெக்சாண்டரிய அறிஞர்கள் மொழி என்பது விதிகளுக்கு உட்பட்டது (Analogy) என்று வாதிட்டபோது, ஸ்டாய்க் அறிஞர்கள் அதற்கு மாறாக 'அனோமலி' கோட்பாட்டை முன்வைத்தனர். மொழி என்பது இயற்கையாக உருவானது அல்ல, அது மனிதர்களின் பயன்பாட்டால் உருவானது; எனவே அதில் ஒழுங்கற்ற தன்மைகளும், குழப்பங்களும் இருப்பது இயல்பு என்று அவர்கள் கருதினர்.

சுருக்கமாகச் சொன்னால் கிரேக்க மொழியின் கட்டமைப்பை முறைப்படுத்தியதன் மூலம், பிற்கால ரோமானிய (இலத்தீன்) இலக்கணத்திற்கும், அதன் வழியாக நவீன மொழியியலுக்கும் அலெக்சாண்டரிய அறிஞர்கள் ஒரு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர்.

மொழியியலின் படிமுறை வளர்ச்சி:

கிரேக்கர்களுக்கு பின் அவர்களது இலக்கண நூல்களை அப்படியே உள்வாங்கி சிறிது தமது கருத்துகளை உட்புகுத்தி ரோமர்கள் தங்களது மொழியை வளர்த்தார்கள். கிரேக்கர்களும் ரோமர்களும் மொழி ஆராய்ச்சியிலிருந்து ஓய்ந்த காலப்பகுதி பொ.ஆ.பி. 7-ஆம் நூற்றாண்டு தொடக்கம் பொ.ஆ.பி. 14-ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியாகும். இக்காலப்பகுதி ஐரோப்பா ஓர் இருண்டகாலம் என வர்ணிக்கப்பட்ட காலப்பகுதியாகும். இக்காலத்தில் மொழியியல் ஆய்வில் அரேபியர்களது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. இக்காலகட்டத்தில் அரேபியர்களின் மொழியாராய்ச்சியினால் ஐரோப்பா செழிப்புற்று விளங்கியது. இவர்களது மொழி ஆராய்ச்சி அவர்களது சமயநூலான 'குர் ஆனைச்' சார்ந்த நிலையில் காணப்பட்டது. இவர்களும் கிரேக்க அறிஞர்கள் போல தத்துவார்த்த ரீதியில் ஆய்வினை மேற்கொண்டனர். அரேபிய மொழியியல் வரலாற்றில் ஒரு சிறந்த மொழியியல் அறிஞராகப் போற்றப்படுபவர் அல்-காலில். இவர் மொழிகளின் ஒலி ஒலியன் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். மொழி தொடர்பான ஆய்வில் அரேபியர் மிக முக்கியமாக இரண்டு பெரும் பிரிவுகளை நோக்கினார்கள். ஒன்று சொற்கள் தொடர்பானது, மற்றையது வாக்கியங்கள் தொடர்பானதாகக் காணப்பட்டது.

(தொடரும்...)

nageswary@thaiveedu.com



பாக்கியநாதன் அகிலன்



கண்(நூறு): கண்டவையும் காணாதவையும்

tg.theeban@gmail.com



ஈழத்தாலியும் பிருத்தானிய காசும்:

வாழி விக்டோரியா மகாராணி மண்ணுலகில் ஆழி சூழ் வையக மெல்லாம் ஒருகுடைக்கீழ் - வாழி

ஆறுமுகநாவலர்

வெள்ளை முண்டம் வெறித்திருக்கு - நம்ம
வேலியே ஏறி மிதித்திருக்கு!
காசு கேட்டு மிரட்டல் போடும் - இந்த
கயவன் கூட்டத்தை ஓட்ட வேணும்

நாட்டுப்பாடல்

தாலிக் கொடி பெருமளவுக்கு (தென்) இந்தியப் பண்பாட்டு வட்டகையில் இடம்பெறும் திருமணத்தின்போது கட்டப்படும் மங்கல நாண் ஆகும். அது புனிதமானதாகவும், திருமணம் எனும் சமூக ஒப்பந்தத்தின் காட்சிக் குறியீடாகவும் காணப்பட்டது. ஈழத்தமிழர்கள் பெரும்பாலும் தாலியையும், கொடியினையும் தங்கத்தாற் செய்கிறார்கள். பண்டைக்காலத்தில் தென் இந்தியர்கள் பெரும்பாலும் செய்வதுபோல மஞ்சள் நூலிற் கோத்துக் கட்டுதல் என்பது பொது வழக்காக இருந்திருக்க வேண்டும். அதனாற்றான் தாலி பூட்டப்பட்டாலும், இன்றும் சாதாரண வழக்கிலதைத் 'தாலி கட்டுதல்' என்று அழைக்கிறார்கள்.

தமிழ் பண்பாட்டில் தாலி ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுகாலப் பழமையுள்ளதாக ஆய்வாளர்கள் கருகின்றார்கள். அவர்கள் மஞ்சள் கிழங்கை வைத்துக்கட்டல் எனும் பண்டைய வழக்கை இதன் தோற்றமூலமாகக் காண்கிறார்கள். இன்னுஞ் சிலர் தாலி என்பதன் சொற்பொருள் மூலத்தை முன்னிலைப்படுத்தி 'தால' எனும் பனையினைக் குறிக்குஞ் சொல், பண்டைக்காலத்தில் ஓலையை கழுத் தைச் சுற்றி ஆபரணமாகக் கொள்ளும் மரபின் தொடர்ச்சியாகக் கொள்வர். ஆனால் வேறு சிலர் பொ.ஆ.பி. 10 - 14-ஆம் நூற்றாண்டிற்றான் விலை மதிப்புடைய உலோகங்களான தாலி மரபு உருவாகியது என்பர். கந்தபுராணம் 'பொன்னாலான மங்கலநாண்' பற்றிப் பேசுகிறது.

தாலி ஈழத்தமிழர்களிடம் அவர்களது பொருளாதார வலிமையை - அதனால் வர்க்க மேன்மையைச் சுட்டுவதாகவும் உருவாகியுள்ளது. அதனாற்றான் 'எத்தனை பவுண் தாலி' என்ற 'விண்ணாணம்' சமூகத்தில் முக்கியமானதாகக் காணப்படுகிறது. அத்துடன் இந்தியத் தமிழ்போல ஈழத்தமிழில் 'சவரன்' (எத்தனை சவரன்?) என்ற சொல் தங்கத்தின் அளவீட்டில் பெரும்பாலும் முன்நிலைப்படுத்தப்படுவதில்லை. இதேவேளை இந்திய மரபிற் பயன்படுத்தப்படும் 'சவரன்' என்ற சொல்லும் 'Sovereign coin' என்ற ஆங்கிலப் பிரயோகத்தில் இருந்தே முன்னிலைப்படுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக ஈழத்தமிழரிடம் 'பவுண்' (எத்தனை பவுண்?) என்ற சொல் அதிகம் மேலாதிக்கஞ் செலுத்துகிறது. இது Pound என்ற பிருத்தானிய பண அளவீட்டின் தமிழ்நிலையாக்கம் என்ற வகையில் ஈழத்தமிழில் அது பவுண் (Pawn) என்ற பிருத்தானிய பண அளவீட்டின் தமிழ்நிலையாக்கமாக பவுண் எனப் பெயரிடப்பட்டது.

“இந்திய மரபிற் பயன்படுத்தப் படும் 'சவரன்' என்ற சொல்லும் 'Sovereign coin' என்ற ஆங்கிலப் பிரயோகத்தில் இருந்தே முன்னிலைப்படுத்தப்பட்டது. அதற்குப் பதிலாக ஈழத்தமிழரிடம் 'பவுண்' (எத்தனை பவுண்?) என்ற சொல் அதிகம் மேலாதிக்கஞ் செலுத்துகிறது. இது Pound என்ற பிருத்தானிய பண அளவீட்டின் தமிழ்நிலையாக்கம் என்ற வகையில் ஈழத்தமிழில் அது பவுண் (Pawn) என்ற பிருத்தானிய பண அளவீட்டின் தமிழ்நிலையாக்கமாக பவுண் எனப் பெயரிடப்பட்டது.”







ஈழத்தாலி, பிருத்தானிய சவரன்கள், தமிழகத் தாலி வகைகளில் ஒன்று, வட இந்திய மங்கல சூத்திரம் புலிப்பல் பதக்கம், ஜோர்ஜிய கால மோதிரம்.

ஆனால் இந்தக் கட்டுரை நேரடியாகத் தாலி பற்றியதல்ல: பதிலாக ஈழத்தமிழ் தாலியோடு இருபுறமும் கோர்க்கப்பட்டி ருக்கும் 'காசு' எனப் பொதுவாக அழைக்கப்படும் வட்டவடிவ உருஅமைப்புப் பற்றியதாகும். இந்தக் காசு இன்றுவரை ஈழத் தமிழ் பிராந்தியங்களில் பிருத்தானிய அரசர், மற்றும் அரசியின் தலை ஆகியவற்றைப் பொறித்ததாகக் காணப்படுகிறது. செல் வச் செழிப்பின் அடையாளமாக பிருத்தானிய காலனிய காலத் தில் இது மேட்டுக்குடிகளிடம் பரவியதாக லவன் கந்தையா கொள்கிறார்.

குறிப்பாக, 20-ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் 5-ஆம் ஜோர்ஜ் மன்னர், மகாராணி மேரி ஆகியோரின் மெய்யுருக் களைக் கொண்டதாக இக்காசுகள் காணப்பட்டதாகவும், 20-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து அது 6-ஆம் ஜோர்ஜ், எலிசபெத் மகாராணியின் மெய்யுருவாக மாற்றமுறு வதையும் அவதானிக்க முடிகிறது என்பர். இந்த மரபின் ஊற்றுகள் பேரரசுக்கால பிருத்தானியாவின் ஆபரண மரபில் இருந்து பெறப்பட்டதும், காலனிய பூகோளமயமாக்கலூடாக (colonial globalization) காலனியத்திற்கு உட்பட்ட நாடுக ளிடம் வந்து சேர்ந்தது எனவும் கொள்ள முடியும். குறிப்பாக ஜோர்ஜிய கால பிருத்தானியவில் மெய்யுருக்களை உட்கொண்ட ஆபரணங் கள் என்பன உயர் ஆடம்பரத்தினதும், நெருங்கிய உறவுமுறை அல்லது திருமண பந்தத்தினது காட்சிக் குறிகாட்டியாகவும் இடம்பெற்றது. குறிப்பாக மோதிரம், தொங்கலணி (pendent), மற்றும் வளையலணி களில் (bracelets) மேற்படி மெய்யுருப் பதிப்புகள் ஆரம்ப மாகின. பெருமளவுக்கு இந்த மெய்யுருக் கள் அரச, பிர புத்துவ சமூக உறுப்பினர்களைப் பிரதிபலிப்பன வாய் அமைந்திருந்தன.

காலனிய கால யாழ்ப்பாணத்தில் - குறிப்பாக 18-ஆம் நூற் றாண்டின் பின்பதாக தங்கத்தின் பாவனை மேட்டுக்குடிகள் மத்தியில் அதிகரித்தது. இது அவர்களது புதிய காலனியப் பொருளாதார கட்டமைப்புடன் தொடர்புபட்டதாய்க் காணப் பட்டது. அவ்வகையில் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் மெதுவாகப் பணப் பொருளாதாரமாக மாற்ற முறத் தொடங்கியது. இதன் பின்னணியில் தங்கத்தில் சேமிப் பது முன்னிலை பெற்றதுடன், நிலத்தோடு ஒப்பிடுகையிற் தங்கம் காவிச் செல்லத்தக்க சொத்தாகவும் காணப்பட்டது. அது காலனியத்தோடு உருவாகிய மேல் வர்க்கங்களது அடை யாளமாக பெருமளவு இக்காலகட்டத்தில் மாறத் தொடங்கியது. வெள்ளாடைத் தொழில்கள், மலேசியா முதலான காலனியப் பிறவிடங்களில் இருந்து பெறப்பட்ட உபரிகள், புகையிலை வர்த்தகம், கடலோடிகளது வர்த்தகங்கள் ஊடாக ஈட்டப்பட்ட அதிகரித்த பணப்புரள்வு முதலானவை அதனை சாத்தியப் படுத்தின. இந்த மாற்றத்தின் அதிகரித்த தேவை தென் இந்தி யாவிலிருந்து பல பொற்கொல்லர் குடும்பங்களை யாழ்ப்பா ணத்தை நோக்கி நகர்த்தியது. 'தட்டா தெருக்களும்' நகைக் கடைத்தெருக்களும் இதன் பின்னணியில் அதிகரித்தன.

அவ்வகையில், காலனியம் உருவாக்கிய இப்புதிய பணப்பொரு ளாதாரம் அதன் பின்னணியில், முழுவதும் தங் கத்தாலான தாலியை உருவாக்கியதுடன் பிருத்தானிய அரசர், அரசிகளின் தலைகளையுடைய தங்கக் காசுகளை தாலியின் இருபுறமும் தொங்கல்களாக ஏற்கும் புதிய பண்பாட்டையும் தொடக்கி வைத்தது. இந்தக் காசுகள் அதனைச் சூடுபவர் களின் பொரு ளாதார வலிமையைக் குறிக்கும் ஆற்றுகையாக மட்டும் நின்றுவிடாமல் காலனியம் உருவாக்கிய மேற்கத்திய - உள்ளூர் கலப்பொட்டு (hybrid) நிலவரத்தினதும் அதனுள் உள்ளடங்கி மறைந்திருக்கும் போட்டியிடுதலினதும் (collision) வெளிப்பாடாக, நிலைபெற்றன என்பதுடன் காலனிய முதலீட்டை மீள் தகவமைக்கும் உள்ளூர் செயற்பாடாகவும் அமைந்தது.

அவ்வகையில் அதிகாரத்தைப் போற்றுதல் - நெருங்கியிருத் தல், அதன் பேரரசுத் தராதரத்தை (imperial standard) பண் பாட்டுத் தராதரமாக (cultural standard) ஏற்கும் காலனிய தங்குநிலை உளவியலின் குறிகாட்டியாகவும் இருந்தன.

அதேவேளை நாளாந்தப் பொருளாக இருத்தல் (everyday object) என்பதன் பின்னணியில் - அதிலும் சிறப்பாக சாதா ரண மக்களுக்கும் அரச பரம்பரைகளுக்குமான வேறு பாட்டின் அடிப்படையில் சாதாரண மனிதர்களது நாளாந்தப் பொரு ளாக இருத்தல் அவர்களது கழுத்தில் ஏறல் மூலமாக அரச பரம்பரையின் (monarchy) உயர்நிலை நாளாந்தம் என்பது இன்னொருவகையில் அவர்களது சிரசுகளை உள்ள டக்கிய காசுகளை அணிதல் ஊடாக தலைகீழாக்கம் (subverting) செய்யப்படுகிறது.

அதனால், தாலியோடு சேர்த்து பிருத்தானிய அரசர், அரசி களது சிரசுடன் கூடிய காசுகளைக் கோர்த்தல் எனும் பயில் வினுள் கண்ணுக்குப் புலனாகாத பிருத்தானிய முடியாட்சிக் கெதிரான கூட்டுப் பொருள்சார் எதிர்ப்பு (collectivematerial resistance) என்பதும் மறைந்திருக்கிறதா ?

packiyanathan.ahilan@thaiveedu.com



ஈழத்தில் தமிழ் பௌத்தர்கள்

செல்வநாயகி ஸ்ரீதாஸ்

20

இதுவரை...

- மகாவம்சம் பொ.ஆ.பி. 6-ஆம் நூறாண்டளவில், பாளி மொழியில், மகாநாம தேரர் என்னும் பௌத்த பிக்குவால் தொகுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.
- பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான, (நம்பகத்தன்மை அற்ற) செவிவழிக் கதைகள் முதலியவற்றைத் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள்.
- இது, பின் ஒரு காலத்தில், கால வரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட்டகதா-மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.
- தேவநம்பிய தீசன் காலத்தில் பௌத்தம் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.
- தேவநம்பிய தீசனுக்கும் அசோகச் சக்கரவர்த்திக்கும் சிறந்த நட்பு நிலவியது.
- சுமணன் என்னும் பௌத்த தேரர் (அசோகச் சக்கரவர்த்தி சுமணனின் பாட்டன்), அசோகச் சக்கரவர்த்தியிடமிருந்து புத்தரின் அஸ்தியையும் அவர் பயன்படுத்திய பிட்சாபாத்திரத்தையும் இந்திரனிடமிருந்து புத்தரின் வலது காரை எலும்பின் அஸ்தியையும் வாங்கி வந்தான்.
- அசோகச் சக்கரவர்த்தி, போதிமரத்தை சகல மரியாதைகளுடனும் வணங்கி, தனது இராச பதவியை மூன்று முறை போதி மரத்திற்கு வழங்கி, போதிமரத்தை இராஜாதிராஜனாகப் பட்டாபிசேகம் செய்து வைத்தார். பின்,
- 'நான் மூன்று முறை எனது அரசபதவியை போதி மரத்திற்கு அளித்துப் பூசித்தேன். அதே போல் என் நண்பனான அரசனும் (தேவநம்பியதீசனும்) அரச பதவியை அளித்து பூசை செய்வானாக' என்று கூறி, போதி மரக் கிளையை சங்கமித்திரை என்னும் தேரி மூலமாக அனுப்பிவைத்தார்.
- இதனால் அறியவருவது,
  - இலங்கையில் பௌத்தம் கொண்டுவரப்பட்டதில் அசோகச் சக்கரவர்த்தியின் நேரடித் தொடர்பு இருந்ததாக நம்பப்பட்டிருக்கிறது. அது நாட்டார் பாடல்கள் (கதைகள்) வாயிலாக எடுத்து வரப்பட்டிருக்கிறது.
  - அசோகன் காலம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டு. எனவே, இலங்கையில் பௌத்தம் பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டளவில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.
  - அப்படியாயின் பௌத்தம் வருவதற்கு முன் இலங்கையில் இருந்த வழிபாட்டு முறை யாது? இலங்கையில் பௌத்தம் வருவதற்கு முன்னர் வாழ்ந்த மக்கள், அவர்கள் மொழி, மதம் அல்லது வழிபாட்டு முறை வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கையில் வாழ்ந்த மக்கள் இன அடிப்படையில் ஒரே இனக் குழுவைச் சார்ந்தவர்களாக இருந்திருக்கிறார்கள் என்று கொள்வதே பொருத்தமானதாகும். அவர்கள் பேசிய மொழி எவ்வாறு, எக்காலத்தில் வேறுபட்ட வையாக இருந்தன என்று கூறுவது கடினமாயினும் ஊகிக்கக் கூடியாத இருக்கிறது.
- இலங்கைத் தமிழர் அல்லது ஈழத்தமிழர் (Sri Lankan Tamils) என்னும் தொடர், இலங்கையைத் தமது மரபுவழிப் பிறப்பிடமாகக் கொண்டு வாழும் தமிழர்களைக் குறிக்கப் பயன்பட்டு வருகிறது. இலங்கையின் அதிகாரபூர்வ ஆவணங்களிலும் இந்தப் பொருளிலேயே இத்தொடர் பயன்பட்டு வருகிறது. இவர்களை இலங்கை வம்சாவளித் தமிழர் எனவும் குறிப்பிடுவது உண்டு.
- இலங்கை, புவியியல் ரீதியாக இந்தியத் தீபகற்பத்திலிருந்து பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பே (சுமார் 5 முதல் 25 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்) பிரிந்ததாக அறிவியலாளர்கள் கருதுகின்றனர்.
- இராமேஸ்வரம் கோயில் பதிவுகளின்படி, 1480-இல் ஏற்பட்ட சூறாவளியால் 'ஆதாம் பாலம்' (Adam's Bridge) எனப்படும் நிலத் தொடர்பு தண்ணீரில் மூழ்கிப் பிரிந்ததாகவும் கூறப்படுகிறது.
- தமிழ் நாட்டிற்கும் இலங்கைக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என்பதை நிறுவும் சான்றுகள் உள.



மகாவம்சம், தீபவம்சம்:

மகாவம்சம் ஒரு வரலாற்று ஆவணம் என்று ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு அதன் தன்மை அமையவில்லை. பெரும்பாலானவர்களால் ஐயமின்றி ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. நாடோடிக் கதை வடிவத்தில் பல நூற்றாண்டுக ளாகப் பயணித்து, பௌத்த குருமார்களால் தொகுத்து எழு தப்பட்டது மகாவம்சம். மகாவம்சம் இலங்கை மரபுவழித் தமிழர் தோற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கான ஆதா ரங்கள் எதையும் தரவில்லை.

மகாவம்சம் குறிப்பிடும் விஜயன் காலத்தில் விஜயனதும் அவன் நண்பர்களினதும் திருமணத்திற்காகப் பாண்டி நாட் டிலிருந்து பெருமளவில் தமிழர்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதாகத் தெரியவருகிறது. ஆனால், இவர்கள் சிங்கள இனத் தோற்றத்தின் ஒரு பகுதியாக ஆகி யிருப்பார்கள் என்று கருதுவதே பொருத்தமாகும்.

இத்தகைய குறிப்புகளிலிருந்து, இலங்கைக்கும் இந்தியத் துணைக் கண்டத்திற்குமிடையே திருமணம், வர்த்தகம் முதலாய தொடர்புகள் இருந்திருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. அத்துடன், இலங்கைத் தீவுடன் தமிழ்நாட்டின ருக்கு நல்ல பரிச்சயம் இருந்தது என்பதும், இலங்கைத் தீவுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான தொடர்புகள் மக்கள் எளிதாகப் போக்குவரத்துச் செய்யக் கூடிய அளவில் இருந்தது என்பதும் தெளிவாகின்றது.

மகாசேனனின காலம் வரை (206 - 302) தமிழருக்கு ஏதிரான உணர்வுகள் காணப்படவில்லை. எல்லாளன், சேனன், குட்டகன் ஆகிய தமிழ் மன்னர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தர்மநெறி தவறாது ஆண்டனர். இது பற்றி மகா வம்சம், தீபவம்சம் ஆகிய நூல்கள் அவர்களை 'தம்மென ராஜ்யம் காரயும்' என்கின்றன. இவ்வாறு வேறு எந்த மன்னர் பற்றியும் கூறப்படவில்லை.

'மகாவம்சம் எந்த ஒரு பிரிவினரையும் ஆரியர் என்று குறிப் பிடவில்லை. ஆயினும் விஜயன், பாண்டுவாசுதேவன் ஆகியோர் பற்றிய புனைகதைகளை ஆதாரமாகக் கொண்டு இலங்கையில் ஆரியர் குடியேற்றங்கள் ஏற்பட் டதான கதையை இக்கால வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று நூல்களில் புகுத்திவிட்டனர்' என்கிறார் பேரா. பத் மநாதன்.

ஈழத்தில் தமிழரின் தொன்மையைப் பறைசாற்றும் முக்கிய ஆதாரங்களாகக் கொள்ளத் தக்கவை:

- **அசோகரது கிர்னார் இரண்டாம் பெரும்பாறைக் கல்வெட்டு:**

அசோகரது கிர்னார் இரண்டாம் பெரும் பாறைக் கல்வெட்டில் (Girnar Rock Edict II), அசோகர் தனது மௌரியப் பேரரசின் எல்லைக்கு அப்பாற்பட்ட அண்டை நாடுகளைப் பட்டியலிடும்போது 'தாமரபரணி' (Thambapanni) என்று இலங்கையைக் குறிப்பிடுகிறார். அசோகர் தனது கல் வெட்டில் தமிழ்நாட்டின் மூவேந்தர்களான சோழர், பாண்டியர், சத்தியபுத்திரர், கேரளபுத்திரர் ஆகியோருடன் சேர்த்து 'தாமரபரணி' (இலங்கை) நாட்டையும் குறிப்பிடு கிறார்.

- **பெருங்கற்காலப் பண்பாடு:**

பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டிற்கு (அசோகர் காலத்திற்கு) முன்னரே ஈழத்தில் தமிழர் அல்லது தமிழரின் முன்னோர் களான திராவிடப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்ததற்கான வலுவான தொல்லியல் சான்றுகள் உள்ளன.

- பெருங்கற்காலப் பண்பாடு: பொ.ஆ.மு. 1000 முதல் பொ.ஆ.மு. 500 வரையிலான காலப்பகுதியில், தென்னிந் தியாவிலும் இலங்கையிலும் ஒரே மாதிரியான பெருங்கற் காலப் பண்பாடு நிலவியது. பெருங்கற்காலப் பண்பாடு பரவிய இடங்களின் வேறுபட்ட வளங்கள் காரணமாக இடத்திற்கு இடம் பெருங்கற்காலப் பண்பாடு வேறு பட்டுக் காணப்பட்டன. பெருங் கற்காலப் பண்பாட்டுச் சின்னங்கள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் காணப்படுகின்றன.

  தென்னிந்தியாவிலிருந்து பரவிய ஆதி இரும்புக்கால மக்களே முதன் முதலாக உற்பத்தி முறை ஒன்றினை இலங்கையில் உருவாக்கினார்கள். பயிர்ச் செய்கை, நீர்ப்பாசனம், உலோகவார்ப்பு, மட்கல உற்பத்தி, கிராம, நகர அமைப்புக்கள், பண்டமாற்று, சந்தைப்படுத்தல், கடற்பிரயாணம் முதலிய யாவும் அவர்களின் வருகையோடு வழமையாகின.

- ஈமச் சின்னங்கள்: தமிழ்நாட்டின் ஆதிச்சநல்லூர் போன்ற அகழாய்வுத் தளங்களில் காணப்படும் முதுமக்கள் தாழிகள் மற்றும் ஈமச் சின்னங்கள் போன்றே இலங் கையின் பொம்பரிப்பு (Pomparippu) மற்றும் இப்பன் கடுவ (Ibbankatuwa) ஆகிய இடங்களிலும் ஈமச் சின் னங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

- மட்பாண்டங்கள்: கறுப்பு-சிவப்பு மட்பாண்டங்கள் (Black and Red Ware) மற்றும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள குறியீடுகள் தென்னிந்தியப் பண்பாட்டோடு ஒத்துப் போகின்றன.



கிர்னார் பெரும்பாறைக் கல்வெட்டு

- **பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருதக் கல்வெட்டுக்களில் தமிழர் பற்றிய செய்திகள்:**

இவ்வகையில் 2000-க்கு மேற்பட்ட பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருதக் கல்வெட்டுக்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை அளவில் மிகச் சிறியவை. தமிழர் பற்றி அவை கூறுவது:

- தமிழர் சமூகப் பிரிவுகளின் பெயர்கள்
- பிராகிருத மயமான தமிழ்ச் சொற்கள்
- தொழில்சார் சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த சமூகக் கட்டமைப்பு
- உற்பத்தி முறை
- பௌத்த சமயச் செல்வாக்கு

பிராகிருத மொழிக் கல்வெட்டுக்கள் அறிவியல் சிந்தனை அடிப்படையில் மீளாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்கிறார் பேரா. சிவ. பத்மநாதன்.

பேரா. சிவ. பத்மநாதன் அவர்களின் இலங்கைத் தமிழர் வரலாறு, கிழக்கிலங்கையில் நாகரும் தமிழும் (பொ.ஆ.மு. 250 - பொ.ஆ.பி. 300 வரை) என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையிலான தகவல்கள்:

இப்பொழுது கிடைத்துள்ள புராதனமான தமிழ்க் கல்வெட்டுக்களில் 90%-ற்கும் அதிகமானவை நாகர் பற்றியவை. இவை அளவில் சிறியவை, பெயர்ச் சொற்களால் ஆனவை. கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தான் முதன் முதலாகத் தமிழ் பிராமி எழுத்துகள் அடையாளம் காண முடிந்தது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் படுவான் கரையிலும் எழுவான் கரையிலும் அவை காணப்பட்டன. அம்மாவட்டத்தின் வட, தென் பகுதிகளில் வயல் வெளிகளிலும் மலைகளிலும் காடுகளிலும் பரந்து காணப்படுகின்றன.

இவ்வகையான கல்வெட்டுக்கள் திருகோணமலை அம்பாறை மாவட்டங்களிலும் காணப்படுகின்றன.

யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலுள்ள அருங்காட்சியகங்களிலும் இத்தகைய தமிழ்க் கல்வெட்டுக்கள் பல வகையான பொருட்களிலும் காணப்படுகின்றன. இவை வரலாற்றுச் சான்றுகளாகவும் பண்பாட்டுச் சின்னங்களாகவும் சிறப்புப் பெறுகின்றன. மலைப் பாறைகளிலும் நூற்றுக்கணக்கான தூண்களிலும் சொற்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கல்லில் பொழிந்த செக்கு, உரல், ஆட்டுக்கல், அம்மி ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. பித்தளை விளக்கு, இரும்பு விளக்கு உலோகங்களாலான காட்சிப் பொருட்கள் முதலியவற்றிலும் தமிழ்ச் சொற்கள் காணப்படுகின்றன.

தமிழ்ப் பிராமி வடிவங்களில் பெயர்கள் வெட்டிய சங்குகள் பலவற்றைக் கற்பிட்டியில் காணக்கூடியதாக இருந்தது. வழிபாட்டுச் சாதனங்களாகப் பயன்படுத்தப்பட்ட முக்கோண வடிவிலான சிறிய கற்கள், சிறிய சுடுமண் படிமங்கள் என்பன இலங்கையின் மூன்றில் ஒரு பாகத்தில் பரந்து காணப்படுகின்றன. நாகர் உருவாக்கிய கேணிகளிலும், மலைமேல் வெட்டப்பட்ட தடாகங்களின் விளிம்புகளிலும் தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. செங்கற்கள், கலவோடுகள், கட்டட அழிபாடுகள் என்பவற்றிலும் அவற்றைக் காணலாம்.

பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருத மொழிக் கல்வெட்டுகள் குகைத் தளங்களின் நீர்வடி விளிம்புகளிற் பெரும்பாலும் காணப்படுகின்றன. அவை அனைத்தும் பௌத்த மதம் தொடர்பானவை.

- அவற்றின் சமகால ஆதி இரும்புக்காலப் பண்பாட்டு மக்களின் ஈமத்தலங்களிலுள்ள கல்லறைகள், தாழிகள் முதலியவற்றில் தமிழ் மொழியில் வாசகங்கள் எழுதப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவை நாகரோடு தொடர்புடையவை. இலங்கையில் குறிப்பாக வட, கிழக்கு மாகாணங்களிலும் புத்தளம் மாவட்டத்திலும் பெரும்தொகையான தமிழ்ப் பிராமி வடிவங்களில் அமைந்த தமிழ்க் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுட் சில மிக அண்மைக்காலத்துக் கண்டுபிடிப்புக்களாகும். ஆதிகால இலங்கை வரலாற்றிலும் இலங்கைத் தமிழரின் உற்பத்தி பற்றிய சிந்தனையிலும் மாற்றங்கள் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகி விட்டது என்று பேரா. சி. பத்மநாதன் அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.
- பிராமி வரிவடிவங்களில் எழுதிய பிராகிருதக் கல்வெட்டுக்கள் குகைத்தளங்களில் நீர்வடி விளிம்புகளில் பெரும்பாலும் காணப்படுகின்றன. இவை அனைத்தும் பௌத்த மதம் தொடர்பானவை. ஒரு தொடர்பு மொழியில் எழுதப்பட்டவை.
- அவற்றின் சமகாலத்தவையான தமிழ் பிராமிக் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புடையவை. புராதன இலங்கை வரலாறு பற்றிப் போதிக்கப்படும் சிந்தனைகளை மீள் பரிசீலனை செய்து மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை ஒன்று இவற்றின் வெளிப்பாட்டால் ஏற்பட்டுள்ளது.



பாமர பெண் பக்தை நாகவின் குகை - முத்துக்கல் கல்வெட்டு

- இலங்கையில் மூன்றில் ஒரு பாகத்தில் தமிழர் சமுதாயம் பொ.ஆ.மு. முதலிரு நூற்றாண்டுகளிலும் உருவாகி விட்டது என்பதையும் தொடர்ச்சியான ஒரு நிலப்பகு தியில் தமிழ் மொழி பேசுவோர் வேளிர் ஆட்சியின் கீழமைந்த சிற்றரசுகள் பலவற்றை உருவாக்கிவிட்டனர் என்றும் சொல்லக் கூடிய காலம் வந்துள்ளது. நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் என்பதாலும் ஆதி இரும்புக் காலப் பண்பாட்டைப் பிரதானமாக அவர்களே இலங் கையில் பரப்பினார்கள் என்பதாலும் பொ.ஆ.மு. 7-ஆம் நூற்றாண்டு முதல் தமிழ் ஒரு பேச்சுவழக்கு மொழியாக நிலைபெற்றுள்ளமை உய்த்துணரப்படுகின்றது.

  தமிழ் நாட்டில், தமிழ் நன்கு வளர்ச்சி பெற்று, இலக்கி யங்கள் பல இயற்றிய ஒரு பொற்காலத்தில் தொல்காப் பியம் எழுதப்பட்டது என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. தொல்காப்பியம் எழுந்த காலம் பொ.ஆ.மு. 711 என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

- சங்க இலக்கியத்தில் 'ஈழத்துப் பூதன் தேவனார்' என்னும் புலவர் பாடல் பாடியிருக்கிறார். சங்க இலக்கியமான 'பட் டினப்பாலையில்', 'ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்' (பட்டினப்பாலை அடி 191) என்று ஈழத்து டனான வர்த்தகத் தொடர்பு பற்றிக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவர் பாடிய இப்பாடல், சோழ மன்னன் கரிகால் சோழனின் காவிரிப்பூம்பட்டினம் (புகார்) துறைமுகத்தில் குவியும் செல்வங்களுள் 'ஈழத்தி லிருந்து கொண்டு வரப்பட்ட உணவு' (குறிப்பாக பயறு வகை) பற்றி விவரிக்கிறது.

'கங்கை வாரியும் காவிரிப் பயனும்
ஈழத்து உணவும் காழகத்து ஆக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி...'

(பட்டினப்பாலை 190 - 192)

ஆனைக்கோட்டை முத்திரை:

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் நடந்த அகழ் வாய்வில் கண்டெடுக்கப்பட்ட ஒரு முத்திரை மிகவும் முக்கி யமானது.

- இம்முத்திரையில், பிராமி எழுத்துகளுடன் மெகலிதிக் குறியீடுகளும் உள்ளன.
- அந்த முத்திரையில் 'கோ வேதா' (Ko Veta) என்று எழு தப்பட்டுள்ளது. 'கோ' என்பது தமிழில் 'அரசன்' அல்லது 'தலைவன்' என்று பொருள்படும். இது பொ.ஆ.மு. 3-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது என ஆய்வாளர்கள் கருதுகின் றனர்.

நாகர் இனம் மற்றும் பெயர்கள்:

இலங்கையின் ஆதிக்குடிகளாகக் கருதப்படும் நாகர்கள், திராவிட அல்லது தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்புடைய வர்கள் எனப் பல வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின் றனர்.

ஆரம்பகாலப் பிராமிக் கல்வெட்டுகளில் 'தமேட' (Damela/Dameda) என்ற சொல் தமிழர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மொழி மற்றும் வணிகத் தொடர்பு:


பொ.ஆ.மு. 500-க்கு முன்னரே ஈழத்தில் வாழ்ந்த மக்களின் மொழித் தாக்கம், பிற்காலத்தில் உருவான சிங்களப் பிராகிருத மொழியில் உள்ளதாக மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

குதிரை வணிகம் மற்றும் முத்து வணிகத்திற்காகத் தமிழ கத்தில் இருந்து தமிழர்கள் ஈழத்திற்குத் தொடர்ந்து வந்து சென்றதற்கான சான்றுகள் இலக்கியங்களிலும் (பட்டி னப்பாலை) கல்வெட்டுகளிலும் காணப்படுகின்றன.

புத்தரின் புனித சின்னமான வெள்ளரசுக்கிளை, சங்க மித்தை என்னும் தேரியால் இலங்கைக்குக் கடல் வழியாக எடுத்துவரப்பட்டு, யாழ்ப்பாணத்தில் ஜம்பு கோளப் பட்டி னத்தில் இறக்கப்பட்டு அனைத்து அரச மரியாதைகளு டனும் அனுராதபுரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது பற்றி மகாவம்சம் கூறும் தகவல்கள் ஏற்கெனவே பதிவு செய்யப் பட்டது.

தேவநம்பியதீசன் ஜம்புக்கோளப் பட்டினத்திற்கு அண்மையில் விகாரை ஒன்று கட்டியதாகவும் அதனை முதலாம் விஜயபாகு முதலாய பின்வந்த அரசர்கள் புதுப் பித்துக் கட்டினார்கள் என்றும் கூறப்படுகிறது. இவ்வர லாற்றுக் குறிப்புகள் வன்னிப் பிராந்தியத்தின் சில இடங்க ளிலும் யாழ்ப்பாணத் தீபகற் பத்தில் கந்தரோடை, சுன்னாகம், வல்லிபுரம், நவக்கிரி, நெடுந்தீவு, நயினாதீவு முதலிய இடங்களிலும் கண்டு பிடிக்கப்பட்ட புத்தர், போதிசத்துவர் சிலைகள், பௌத்த வழிபாட்டு எச்சங்கள் என்பன உறுதி செய்கின்றன.

இந்தத் தகவல்கள் ஈழம் மற்றும் தென்னிந்தியா ஆகிய இரண்டு பகுதிகளிலும் ஒரு பொதுவான பண்பாட்டுத் தளத்தில் இணைந்தி ருந்ததை உறுதிப்படுத்துகின்றன.



ஆனைக்கோட்டை முத்திரை

இலங்கையில் தமிழர் இருப்புப் பற்றி பேரா. இந்திரபாலா அவர்கள் கருத்து,

'நுண்கற்காலப் பண்பாடு இலங்கை தென்னிந்தியா முழுவ தற்கும் பொதுவான பண்பாடாக இருந்துள்ளது. இனம், மொழிகள், பண்பாட்டுக் கூறுகள், தொழினுட்பம் என்ப வற்றில் பொதுத்தன்மை காணப்பட்டது (இந்திரபாலா 2006: 87). இப்பண்பாட்டைத் தொடர்ந்து முன்னேற்றகரமான பெருங்கற்காலப் பண்பாடும், மக்களும் இலங்கைக்கு புலம் பெயர்ந்து வந்தபோது அப்பண்பாட்டை முன்பு இங்கு வாழ்ந்த நுண்கற்கால மக்கள் பின்பற்றினர் அல்லது பெருங்கற்காலப் பண்பாடு, அப்பண்பாட்டை உள்வாங்கிக் கொண்டது எனக் கூறலாம். இதனால் வரலாற்றுக் காலத்தில் இருந்து மொழியடிப்படையில் தமிழ், சிங்களம் என வேறுபடுத்திப் பார்க்கப்படும் மக்கள் இன அடிப்ப டையில் ஓர் இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று கூறுவதே பொருத்தப்பாடாகும் (இந்திரபாலா 2006: 86).'

பேரா. புஷ்பரட்ணம் அவர்கள் கருத்து,

'தமிழ் மொழி பேசும் மக்கள் தமிழ்நாட்டிலிருந்து தமிழ் மொழி பேசும் மக்களாக இலங்கைக்கு வருவதற்கு முன்னரே அவர்களின் மூதாதையினர் வரலாற்றிற்கு முற்பட்ட கற்காலத்திலிருந்து இலங்கையில் வாழ்ந்துள் ளனர் (புஷ்பரட்ணம் 2003: 2-41, இந்திரபாலா 2006: 86).

செ. இராசநாயக முதலியார் (யாழ்ப்பாண வரலாறு),

'கிறித்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே இன்றைய யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பகுதிகளில் தமிழர் ஆட்சி நில வியிருக்கக் கூடுமென்பது யாழ்ப்பாண வரலாறு எழுதிய செ. இராசநாயக முதலியார் அவர்களுடைய கருத்து'. எனினும், இதற்கான ஆதாரங்கள் போதிய அளவில் கிடைக்கவில்லை.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே இலங்கையில் தமிழர் பரவலாக வாழ்ந்து வந்தபோதிலும், அனுராதபுரம், பொலநறுவை ஆட்சிகளின் வீழ்ச்சியுடன் சிங்களவர் அதிகாரம் தெற்கு நோக்கி நகர்ந்தபோது நாட்டில் புவியியல் முறையில் தமிழ், சிங்கள முனைவாக்கம் தீவிரப் பட்டிருக்கக் கூடும். இதுவே 12-ஆம் நூற்றாண்டளவில் யாழ்ப்பாண அரசின் தோற்றத்துக்கும் வித்திட்டது எனலாம்.

ஈழம் தமிழ் நாட்டிலிருந்து பிரிந்த காலம் முதலாக, ஈழத்தை (இலங்கை) தம் நாடாகக் கொண்ட தமிழ் இன மக்கள், ஈழத்தில் தொடர்ந்து வசித்து வந்திருக்கிறார்கள். தொடர்ந்து, தென்னிந்தியப் படையெடுப்புக்களாலும், தென் இந்திய அரசுகளின் ஆதிக்கத்தின் கீழ் ஈழம் பல நூற்றாண் டுகள் இருந்த காரணத்தினாலும் பல்லாயிரக் கணக்கான தமிழர் ஈழத்தில் குடியேற்றப்பட்டார்கள். அது மட்டு மல்லாது, கடைசிச் சிங்கள மன்னனான சிறிவிக்கிரமராஜ சிங்கன் உள்ளிட்ட சிங்கள மன்னர்கள் தென்னிந்தியாவுடன் தொடர்ந்து திருமண பந்தம் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பது வரலாறு. இதன் அடிப்படையிலும் ஈழத்தினை உரிமை கொண்டாடும் தமிழ் பேசும் சமூகம் ஒன்று தொன்று தொட்டு இருந்து வந்திருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

தமிழ் மொழியின் தொன்மை பற்றித் தமிழ்நாட்டுத் தொல் பொருட் சின்னங்களை ஆதாரமாக்கி நிர்ணயிக்க முடியாத வற்றை இலங்கையில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுக் களின் அடிப்படையில் சொல்ல முடிகின்றமை ஒரு குறிப்பி டத்தக்க விடயமாகும்.

மகாவம்சம்: பல நூற்றாண்டுகளாக, மக்கள் மத்தியில், நாட்டார் பாடல்களாகப் பாடப்பட்டுவந்த கதைகளை, பொ.ஆ.பி. 6-ஆம் நுற்றாண்டளவில், மகாநாம தேரர் என்னும் பௌத்த பிக்கு பாளி மொழியில் தொகுத்ததாக நம்பப்படுகிறது.

பௌத்தத் துறவிகள் ஒருங்கிணைந்து, மகிந்தன் மூலமாக பௌத்தம் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட வரலாறு, பல்லாயிரக்கணக்கான மக்கள் இலங்கையில் பௌத்த மதத்தைத் தழுவிக் கொண்டது, பௌத்த மதத்தின் பெருமையைக் காட்டும் வகையிலான, செவிவழிக் கதைகள் முதலியவற்றைத் திரட்டி 'அட்டகதா' என்னும் பெயரில் 'பாளி' மொழியில் தொகுத்தார்கள். இது, பின் ஒரு காலத்தில், கால வரிசைப்படி ஒழுங்கு செய்யப்பட்டு 'அட் டகதா-மகாவம்சம்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டது.

பதிற்றுப்பத்து: வரலாற்றில், தொடர்ந்து ஆட்சி செய்த பத்துச் சேர மன்னர்களின் அரசியல் சாதனைகள், கொடை முதலிய சிறப்புக்களை, சங்க இலக்கியத்தில் சிறந்த புல வர்களாகப் போற்றப்படும் கபிலர், பரணர், அரிசில் கிழார், காக்கைபாடினியார் முதலிய பத்துப் புலவர்கள் தனித் தனியாகப் பாடியிருக்கும் நூல் பதிற்றுப் பத்து என்னும் சங்க இலக்கியம்.

தமிழ் நாட்டினது வரலாற்றை வரைவதற்குச் சங்க இலக்கி யங்களை ஆவணங்களாக ஏற்றுக் கொள்ளாத காலம் ஒன்று இருந்தது. இலக்கியச் சான்றுகளை ஏற்றுக்கொள்ளத் தக்க புறச் சான்றுகள் கேட்கப்பட்ட அதே காலகட்டத்தில் மகாவம்சம் வரலாற்று ஆவணமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது என்பது இன்றைய ஆய்வாளர்களுக்கு வியப்புத் தரும் செய்தியாகும்.

இந்த ஆய்வில், பத்துச் சேர மன்னரின் தொடர் வரலாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ள பதிற்றுப்பத்து என்னும் வரலாற்று இலக்கியம், நாடோடிப் பாடல்களாகப் பல நூற் றாண்டுகளாக எடுத்துவரப்பட்டு பௌத்த பிக்குகளால் நூல் வடிவம் பெற்ற மகாவம்சம் என்னும் வரலாற்று நூலுடன் ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

அடுத்த இதழில் 'பதிற்றுப் பத்தும் மகாவம்சமும்' ஆய்வு.

(தொடரும்...)



selvanayaki.s@thaiveedu.com



tg.theeban@gmail.com

சித்தரும் வணங்கிய சித்தர் பாரதி

கிருங்கை சேதுபதி

‘எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்’

என்று தொடங்கி, மகாகவி பாரதியார் எழுதிய ‘பாரதி அறுபத்தாறு’ - நூலினைப் படித்த பிறகும், பாரதியார் ஒரு சித்தரா என்கிற கேள்வியை இன்னும் எழுப்புபவர்கள் இருக்கிறார்கள்; பதில் தரும் வண்ணம் விவரிக்கும் வகையில் நூல்களும் கட்டுரைகளும் எழுதியவர்கள் இருக்கிறார்கள். விடையும் வினாக்களுமாகத் தொடர்கிற இக்கருத்தாக்கத்திற்கு முடிவில்லை என்றாலும், பாரதியாருக்குச் சித்தர்களுடன் இருந்த தொடர்புகளை யாரும் மறுக்கவில்லை.

பாரதி அறுபத்தாறு நூலின் மூலம் அறியவரும் மகான்களாகிய சித்தர்கள் மூவர். அவர்களுள் முதன்மையானவர் குள்ளச்சாமி. அவரையே குருவெனக் கொண்டாடவும் செய்கிறார் பாரதி. அது குறித்து ஏற்கனவே, தாய்வீடு இதழ்களில் விரிவாகக் கண்டோம். அக்கட்டுரைகளின் தொகுப்பாக, ‘மகாகவி பாரதியும் மகான் குள்ளச்சாமியும்’ தனி நூல் வந்ததையும் வாசகர்கள் அறிந்திருத்தல் கூடும்.

தனது சித்த மார்க்கத்திற்கு வழிகாட்டிய மகான்களைப் புகழ்ந்து பாடிய பாரதி, அவர்களது பெயர்களுடன் புகழ் என்ற சொல்லையும் இணைத்து, குருக்கள் ஸ்துதி (குள்ளச்சாமி புகழ்), கோவிந்தசாமி புகழ், யாழ்ப்பாணத்துச் சாமி புகழ்’ என்று உள் தலைப்புகளும் இடுகிறார். அந்த வரிசையில், குவளைக்கண்ணன் புகழ் என்று தலைப்பிட்டு, குவளைக் கிருஷ்ணமாச்சாரியார் குறித்தும் பாரதி பாடியிருக்கிறார். கண்ணன் பாட்டிலும் அவர்க்குத் தனியிடம் இருப்பதனை முந்தைய கட்டுரைகளில் கண்டோம். சீடராக வந்து, சீலம் மிகுந்த சித்தர்களை, பாரதிக்கும் பாரதி குறித்து அந்தச் சித்தர்களுக்கும் எடுத்துக் கூறி, இணைப்புப் பாலமாக இருந்தவர் குவளைக் கண்ணன் என்று தனித்துக் குறித்து நன்றி பாராட்டுகிறார் பாரதி.

இதில் வியப்புக்குரிய செய்தி என்னவெனில், மகாகவி பாரதிக்கு நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் இருந்தவர் குவளைக்

கண்ணன். ஆயினும் அவருக்குக் குள்ளச்சாமி பற்றிய அறிமுகமும் அவருடன் தொடர்பும் இருந்திருக்கிறதா, இல்லையா என்பதைக் கிடைக்கும் தரவுகளைக் கொண்டு தீர்மானிக்க முடியவில்லை. இல்லை என்றே சொல்ல முடிகிறது. ஆனால், ஏனைய மகான்களான கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி ஆகியோர் குறித்துப் பேசும்போது, குவளைக் கண்ணனையும் இணைத்தே குறிக்கிறார் பாரதி. அதுமட்டுமன்றி, குவளைக் கண்ணன் ஸ்ருதிகளின்பால் உறுதியான பற்றுக் கொண்டவர் என்று சொல்வதோடு, 'சிவனடியார் இவன்மீது கருணை கொண்டார்' என்றும் விளக்கியுரைக்கிறார்.

இந்தக் கருணையை நேருறக் கண்டதோடு, அவர்கள் சிவனடியார்கள் என்றும் தெளிவுபடுத்திவிடுகிறார். இத்தனைக்கும் குவளைக் கண்ணன் வைணவர். அவரே தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'நான் ஒரு சிறிவைஷ்ணவன்; வைதிக ஆசாரங்களில் தவறாத குடும்பத்திலே பிறந்தவன். ஜாதியென்றும் மதமென்றும் பிரிவு செய்யும் கொடுமையிலே கொக்கரிக்கும் சமூகக்காற்றைச் சுவாசித்தவன்' என்று அறிமுகப் படுத்திக் கொண்டவர். ஆயினும், அவர் சாதுக்களோடும் சாமியார்களோடும் தொடர்பில் இருந்திருக்கிறார்; நட்புப் பாராட்டியிருக்கிறார். அதுமட்டுமா?

மகத்தான முனிவர் எலாம் கண்ணன் தோழர்
வானவர் எல்லாம் கண்ணன் அடியார் ஆவார்

என்று பாரதியாரே வியந்து சொல்லும் அளவிற்கு நெருக்கம் கொண்டிருக்கிறார். (இந்தப் பாடல் அடியில் இடம்பெறும் 'மகத்தான முனிவர்' என்ற தொடருக்குள் குள்ளச்சாமி இல்லை. அதுபோல், வேணுமுதலியுடன் குவளைக் கண்ணன் இருந்ததாகவும் தரவுகள் கிடைக்கவில்லை. 'வானவர் எல்லாம் கண்ணன் அடியார்' ஆன விதம் ஆய்வுக்குரியது.) மகத்தான முனிவர் எலாம் கண்ணனின் தோழர் எனில், இதில் மகாகவி பாரதியும் இருப்பார் தானே. அதனை உறுதி செய்யும் ஓர் உரையாடலைக் குவளைக்கண்ணனே பதிவிட்டிருக்கிறார்.

ஒருநாள், குவளைக் கண்ணனை அதட்டும் குரலில் அழைத்திருக்கிறார் பாரதி. குவளைக் கண்ணன் என்று பாடலில் குறித்திருந்தாலும், அவரது இயற்பெயரான கிருஷ்ணன் என்றே பெயர் கூறி விளிப்பது பாரதியின் வழக்கம். (செல்லம்மா - பாரதியார் கவிதைகளில் கண்ணம்மா ஆனதுபோல, குவளையூர்க் கிருஷ்ணமாச்சாரியார் - குவளைக் கண்ணன் ஆகிவிடுகிறார். இரண்டிலும் கண்ணன் இருப்பது இங்கு கவனிக்கத் தக்கது.) கிருஷ்ணனை உரிமையுடன் ஒருமையில் பேசுவது பாரதியின் இயல்பு. அன்றும் அப்படித்தான் நடத்திருக்கிறது. குவளைக் கண்ணன் கூறுகிறார்.

•

'கிருஷ்ணா' என்று அதட்டற் குரலிலே பாரதியார் என்னை அழைத்தார்.

'ஏன்?' என்றேன்.

'நீ என்ன மகா பொல்லாதவனாக இருக்கிறாயே. எவன் எவனோ என்னுடைய காலிலே வந்து விழுகிறான். எங்கே வந்தாயென்றால் குவளை கிருஷ்ணமாச்சாரியால் என் பெருமை தெரிந்ததாகச் சொல்கிறான். இந்த வேஷதாரிகளையெல்லாம் எதற்காக என்னிடம் அனுப்புகிறாய்? என்னைப்பற்றி அநாவசியமாக ஏன் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறாய்?' என்று அவர் என்னைக் கோபித்துக் கேட்டார்.

'யார் அப்படி உங்களிடம் வந்தார்கள்?'

'யார்? யாரோ ஒருத்தன் கோவிந்தஸ்வாமியாம்! யானைக் காலோடு வந்து காலிலே விழுகிறான். எனக்கு உடம்பு நடுங்கிவிட்டது.'

பாரதியார் கோபத்தோடு பேசுவதன் காரணம் எனக்கு விளங்கிவிட்டது. அவருக்கு நோயாளிகளைக் கண்டால் அருவருப்பு அதிகம். நோயாளியைத் தொட்டுவிட்டால் உடனே முழுகுவார். அவர் பாதத்தில் யானைக்காலுடைய ஒருவர் விழுவதென்றால், அவருக்கு ஏன் எரிச்சல் வராது?

'இல்லை; அவர் பெரியவர்; நல்லவர்' என்று நான் சொல்ல ஆரம்பித்தேன்.

'என்ன பெரியவர்! உடம்பை நன்றாக வைத்துக் கொள்ளத் தெரியவில்லை' என்று அவர் நான் மேலே சொல்லாதவாறு தடுத்தார்.

இவ்வாறு பேசிய பாரதியாரே பிறகு அந்தத் துறவியைப் பற்றி,

'அன்பினால் முக்திஎன்றான் புத்தன் அந்நாள்
அதனைஇந்நாள் கோவிந்த ஸாமி செய்தான்
துன்பமுறும் உயிர்க்கெல்லாம் தாயைப் போலே
சுரக்கும் அருள் உடையபிரான் துணிந்த யோகி
அன்பினுக்குக் கடலையுந்தான் விழுங்க வல்லான்
அன்பினையே தெய்வம் என்பான் அன்பே ஆவான்
மன்பதைகள் யாவும் இங்கே தெய்வம் என்ற
மதியுடையான் கவலைஎனும் மயக்கம் தீர்ந்தான்'

என்று பாராட்டிப் பாடினார். கோவிந்தஸ்வாமி, பாரதியாருடைய காலில் முதலில் வீழ்ந்தாலும் பிறகு பாரதியாரைத் தம்முடைய காலில் வீழச் செய்தார்.

•

இந்தப் பாடல், பாரதி பாடிய 'பாரதி அறுபத்தாறு' நூலில், 38-ஆவது பாடலாக இடம்பெறுகிறது. இதற்கு முன்னும் பின்னும் தலா ஒரு பாடல் வீதம், இவரைப் பற்றிய இருபாடல்கள் இடம் பெற்றிருக்கின்றன. முதலாவதாக வரும் பாடல், கோவிந்த சாமி யார் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இவரும் குள்ளச் சாமி போல் ஒரு மகான். பாரதியின் குருநாதராகவும் விளங்கியிருக்கிறார்.

குருக்கள் ஸ்துதி என்னும் குள்ளச்சாமி புகழ் பாடி முடித்த கையோடு, பாரதி பாடிய சித்தர் கோவிந்தசாமி. இவரை, 'வண்மை திகழ் ஞானி' என்றும், 'எம்பெருமான்' என்றும், 'தேவன்' என்றும், 'அருளுடைய பிரான்' என்றும், 'யோகி', 'மாயோகி' என்றும், 'அன்பே ஆனவன்' என்றும், 'தீங்கற்ற குணம் உடையவன்' என்றும், 'பரமஞானத்து அனுபூதி உடையவன்' என்றும்,

'மன்னன்' என்றும், 'தன் குரு' வென்றும் குறிப்பிட்டுக் கொண் டாடுகின்றார். 'புதுவையூரார் செய்த தேவன்' என்று குறிப்ப தனால், இவர் ஊர் புதுவையாகிய புதுச்சேரி என்பது தெரிய வருகிறது. மேலும், இம்மகான் அத்வைதி என்பதும், வருணா சிரம நெறியில் நிற்பவர் என்பதும் இப்பாடல்களினால் அறிய வருகின்றன.

மாங்கொட்டைச் சாமி என்ற பெயருடைய குள்ளச்சாமியை அடுத்துக் கோவிந்தசாமியினைக் குறிப்பிட்டு, அவர்தம் குணங் களைப் புகழ்ந்துரைக்கிறார் பாரதி. பாடல் இப்படித் தொடங் குகிறது.

மாங்கொட்டைச் சாமி புகழ் சிறிது சொன்னோம்
வண்மைதிகழ் கோவிந்த ஞானி, பார்மேல்
யாம் கற்ற கல்வி எலாம் பலிக்கச் செய்தான்,
எம் பெருமான் பெருமையை இங்குஇசைக்கக் கேளீர்!
தீங் கற்ற குணம் உடையான், புதுவை ஊரார்
செய்த பெரும் தவத்தாலே உதித்த தேவன்,
பாங் குற்ற மாங் கொட்டைச் சாமி போலே
பயிலு மதி வர்ணாசிரமத்தே நிற்போன்

இது முதற்பாடல். இதற்கு அடுத்த பாடல்தான், குவளைக் கண்ணன் குறிப்பிட்ட பாடல்.

இவ்விரு பாடல்களிலும், கோவிந்தசாமியின் புகழ் வெளிச்ச மாவதைவிட, அவர் தனக்கு ஆதர்சமாக விளங்கிய தன்மை யையே பாரதி குறிப்பிட்டுக் காட்டுகிறார். குள்ளச்சாமிக்கும் பாரதிக்கும் இடைப்பட்ட உறவில் நேர்ந்த அனுபவங்கள் பதி வான அளவிற்குக் கோவிந்தசாமி உடனான அனுபவங்கள் பதிவாகவில்லை. ஆனால், சுருக்கமும் செறிவும் மிக்க ஒரு தொடராக, 'யாம் கற்ற கல்வியெலாம் பலிக்கச் செய்தான்' என்பது விளங்குகிறது. அது ஏட்டுக் கல்வியா? அல்லது சித்த மார்க்கத்தில் அவர் பெற்ற யோகக் கல்வியா?' என்று கேட்கத் தோன்றுகிறது. ஆனால், பாடல் இடம்பெற்ற பகுதி, அதன் பாங்கு இவற்றை வைத்துப் பார்க்கிறபோது, குள்ளச் சாமியின் உபதேசம் பெற்று, அதனைப் பயிற்சியாக மேற் கொண்ட காலத்தில் கோவிந்தசாமியின் தொடர்பால், அந்த யோகப் பயிற்சி மேலும் வலுப்பெற்றிருக்கவேண்டும் என்றே கருதத் தோன்றுகிறது. அதுவே, அதுவரையில் தான் கற்ற ஏட் டுக்கல்வியையும் இணைத்து அவரைத் தேட வைத்திருக்கிறது.

எது கல்வி? தேடத் தூண்டித் துணை நிற்க உதவும் சாதனம் கல்வி. 'தேடு கல்வியிலாததொர் ஊரினைத் தீயினுக்கு இரை யாக மடுத்தல்' என்பது அவர்தம் பாடல். தேடு, கல்வியிலாத ஊரினைத் தீயினுக்கு இரையாக்கு' என்று கட்டளையிடும் கவிவாக்காக இதனைக் கொள்வதைவிட, 'தேடுகல்வி' இலாத ஊர் எதுவாக இருந்தாலும் அதனைத் தீயினுக்கு உணவாக் கிவிடுதல்' என்று கொள்ளுதல் பொருந்தும். தேடுகல்வி போல, தீயினுக்கும் தனி விளக்கம் கொள்ள வேண்டும். அது தீமை தரும் தீயன்று. தீயினும் அஞ்சத்தக்க தீமைகளை எரிக் கும் அறிவுத் தீ. அன்புத் தீ. பாரதிதான் தீயின் வகைகள் அனைத்தையும் பட்டியலிட்டுத் தன் வசன கவிதையில் தந்தி ருக்கிறாரே?

அறத் தீ, அறிவுத் தீ, உயிர்த் தீ, விரதத் தீ, வேள்வித் தீ, சினத் தீ, பகைமைத் தீ, கொடுமைத் தீ - இவையனைத்தை யும் தொழுகின்றோம். இவற்றைக் காக்கின்றோம் இவற்றை ஆளுகின்றோம்.

ஏன், தீயே உயிரின் தோழன். அது எப்படித் தீமை தரும்?
நின்னைப்போல, எமதுயிர் நூறாண்டு வெம்மையும் -
சுடரும் தருக,
தீயே நின்னைப்போல, எமதுள்ளம் சுடர்விடுக.
தீயே, நின்னைப்போல எமதறிவு கனலுக.
இங்கே தீ ஞானத்தின் குறியீடாகிறது.
தீயினை நிறுத்திடுவீர்! - நல்ல
தீரமும் தெளிவும் இங்கு அருள்புரிவீர்!

என்று சரஸ்வதிக்குத் தோத்திரம் செய்து வேண்டுகிறார். வேத வழிநின்று தீயினை அக்கினி பகவான் என்று ஆராதிக்கிறார். அவன், அச்சத்தைச் சுட்டு அங்கு சாம்பரும் இல்லாமல் அழித் திடும் வானவன். அது, செய்கை ஆற்றும் மதிச் சுடர், தடையற்ற பெருந்திரல், நம்முள் இச்சையும் வேட்கையும் ஆசையும் காதலும் ஏற்றதோர் நல்லறமும் கலந்தொளி ஏறும் தவக்கனல்' என்கிறார்.

தீ வளர்த்திடுவோம் - பெருந் தீ
வளர்ந்திடுவோம்

என்று பாடுகிற பாரதி, அது அன்புத் தீ என்கிறார். அதனை வளர்க்கும் இடம் எதுவென அடையாளமும் காட்டுகிறார். ஆவியி னுள்ளும் அறிவினிடையிலும் அன்பை வளர்த்திடுவோம்.

'எங்கள் வேள்விக் கூடமிதில் ஏறுதே தீ தீ தீ' என்று உள்ளக் கினி வளர்த்து உயிர் ஓம்புதல் செய்யும் வல்ல சித்தராக பாரதி வளர்ந்து வரும் திறத்தை, அவர் பாடிய பாடல்களின் மூலம் அறிந்து கொள்ள முடிகிறதே. தேடித் தேடி உண்மையில் உண்மை உணர்ந்து அவற்றை நாடி பிடித்து நல்லது கெட் டது நன்கு ஆராய்ந்து உலகம் உய்ய அவர் தந்த படைப்பு கள் அவர் வாழ்ந்த காலத்திலும் அதிக கன அடர்த்தி உள் ளவை. ஆழ்ந்து கவனித்தால், அவர் கல்வியில் நுனிப்புல் மேய்ந்தவர் அல்லர். கசடறக் கற்றவர். கற்க வேண்டியவற் றைக் கசடறக் கற்றவர். கற்றவற்றை நடைமுறையில் பயன் படுத்தி, மெருகேற்றிக் கொண்டவர். அவர் கற்ற கல்வி தேடு கல்வி. தேடித் தேடிக் கற்ற வேத, உபநிடத ஆய்வுகள், யோக சூத்திரங்கள், திருக்குறள், ஔவைக்குறள் உள்ளிட்ட அருந்த மிழ்த் திரவியங்கள் யாவும் கூடிக் கனன்றதன் குறுவடிவம் தான், அவர் கவிதையின் ஆதிக்கனல். அது அக்கினிக்குஞ்சு. 'தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்' என்று சித்தரைப்போல் ஆட வைத்த விசித்திரம் அவர் கற்ற கல்விவழி பெற்ற ஞானத்திற்கு உண்டு.

கோவிந்தசாமியின் புகழ் என்பதாகத் தலைப்புத் தெரிவித் தாலும், 'எம்பெருமானின் பெருமையினை இங்கு இசைக்கக் கேளீர்' என்பதனால், இவர்தம் பெருங்குணத்தை விரிக்கப் போகிறார் என்பது தெளிவாகிறது.

குள்ளச்சாமி போல், கோவிந்தசாமியும் குரு. அதேசமயம், புத்தரைப் போன்று அன்பினைப் போதித்தவர். அதன் வழி முக்தி என்பதைச் செயலில் செய்து வருகிறவர். பாரதியின் கொள்கையும் அதுதான்.

‘அன்பு தன்னில் செழிக்கும் வையம்’ என்று கண்டுகொண்ட அவர், ‘அன்பென்று கொட்டு முரசே மக்கள் அத்தனைபேரும் நிகராம்’ என்று முரசறைகிறார். மேலும்,

‘வேட்டை அடிப்பது வில்லாலே அன்புக்
கோட்டை பிடிப்பது சொல்லாலே’

என்கிறார்.

‘துன்ப நினைவுகளும் சோர்வும் பயமும் எல்லாம்
அன்பில் அழியுமடி கிளியே
அன்பிற்கு அழிவில்லை’

என்பது அவர் கண்ட வாழ்வியல் அனுபவம்.

இந்தப் புவிதனில் வாழும் மரங்களும்
இன்ப நறுமலர்ப் பூஞ்செடிக் கூட்டமும்
அந்த மரங்களைச் சூழ்ந்த கொடிகளும்
ஒளடத மூலிகை பூண்டுபுல் யாவையும்
எந்தத் தொழில் செய்து வாழ்வனவோ?

அந்தத் தொழில் செய்து வாழுங்கள் என்று மானிடர்க்கு அன் புக் கட்டளை இடுகிறார். அது அன்பு செய்தல் என்ற அறத் தொழில். அதனால் தான், ‘மானுடரே, நீவிர் என் மத்தைக் கைக் கொள்வீர்’ என்ற அவர்,

‘உங்களுக்கு தொழில் இங்கே
அன்பு செய்தல் கண்டீர்’

என்கிறார்.

‘பாட்டினில் அன்பு செய்.’
‘பூமண்ட லத்தில் அன்பும் பொறையும் விளங்குக!’

என்றெல்லாம் ஆணையிடுகிறார்.

புகை நடுவினில் நெருப்பு இருப்பதுபோல,

‘பகை நடுவினில் அன்புருவான நம்
பரமன் வாழ்கின்றான் - நன்னெஞ்சே!’

எனவே. ‘பகைவனுக்கு அருள்வாய்’ என்று கூறி மனத்தைப் பக்குவப்படுத்துகிறார். ‘அன்பு கனிந்த கனிவே சக்தி’ என்றும், ‘சங்கரன் அன்புத் தழலே சக்தி’ என்றும் கண்டு கொண்டாடு கிறார்.

‘அன்பு மிகுந்த தெய்வமுண்டு - துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!’

என்று பாப்பாவுக்குச் சொன்ன அவரே, ‘உயிர்களிடத்தில் அன்பு வேணும்’ என்று போதிக்கவும் செய்கிறார். ‘அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்’ என்று அடையாளம் காட்டுகிறார்.

‘அன்பு வாழ்க என்று அமைதியில் ஆடுவோம்.’
‘அன்பு நெறியில் அறங்கள் வளர்ந்திட
நல்லது தீயது நாமறியோம்’

என்றெல்லாம் விரியும் பாடல் வரிகள் அவர்தம் அன்புப் பெருக்கினை அடையாளப்படுத்துவன. இவை அனைத்துக் கும் மேலாக, ‘செய்க தவம்! செய்க தவம்!’ என்று நெஞ்சுக்கு வலியுறுத்தி,

நெஞ்சே! தவம்செய்தால்
எய்த விரும்பியதை எய்தலாம்!

என்று நம்பிக்கையும் கொடுக்கிறார். அது என்ன தவம்? வையகத்தில் அன்பிற் சிறந்த தவமில்லை என்று அறுதியிட்டு உரைத்த அவரே அதன் பயனையும் சொல்கிறார். ‘அன்பு டையார் இன்புற்று வாழ்தல் இயல்பு’ இத்துடன் திருக்குறள் அன்புடைமை அதிகாரத்தையும், திருமந்திரத்தின் அன்பே சிவம் என்ற பாடலையும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இந்த அன்பு வந்துவிட்டால், யாருடனும் பகை கொள்ள முடியாது. யாருக்கும் தீங்கு புரியவோ, நினைக்கவோ இயலாது.

இதனையே தனது தவமாகக் கொண்டவர் பாரதி. அதுபோல், அன்பே தவம் என வாழ்ந்து வந்தவர் கோவிந்த சாமி. குவ ளைக் கண்ணன் வழி பாரதியின் பண்புநலன்களை அறிந்த அவர், பாரதியைக் கண்டதும் தாளில் வீழ்ந்து பணிந்திருக் கிறார். சித்தரும் வணங்கிய சித்தராக, பாரதி இருப்பதைப் பாரதிக்கே உணர்த்திய சித்தர், கோவிந்த சாமி. காரணம் அவர், ‘அன்பே தெய்வம்’ என்றவர் அவ்வாறே தானும் ஆனவர். அதுமட்டுமல்ல, மன்பதைகள் யாவும் மக்கள் இனம் அனைத் தும் தெய்வம் என்றவர். இதனை உணர்ந்து கடைப்பிடித்து ஒழுகுகிற அறிவுடையவர். அதனால், கவலை என்னும் மயக் கம் தீர்ந்தவர். யாருக்கும் தீங்கு நினைக்காத, செய்யாத பண்பு உடையவர். அதேவேளை, துன்பப்படுகிற எல்லாவுயிர்க்கும் தாய் போல் அன்பு காட்டி அருள் கொடுக்கும் தெய்வமாக விளங்கியவர்.

அருவருக்கத் தக்க ஆனைக்கால் வியாதி உடைய கோவிந்த சாமியைக் குருவெனக் கொள்வதற்கு உரிய காரணங்கள் இவை என்பதைப் பின்னரே விரிவுற அறிந்து விளம்புகிறார் பாரதி.

தோற்றம் கருதி, மாங்கொட்டைச் சாமி என்றும் குள்ளச்சாமி என்றும் பெயர் பெற்றிருக்கிற ஞானகுரு பிறந்த ஊர் எது வெனத் தெரியாது. ஆனால், அவரை அடுத்து வந்து தன்னை ஆட்கொண்ட கோவிந்த சாமியை, புதுச்சேரி ஊரார்கள் செய்த பெருந்தவத்தால் வந்து உதித்த தேவன் என்று, பாரதி குறிப்ப தால், அவர் புதுச்சேரியில் பிறந்த மகான் என்பது தெளிவாகிறது.

அதே வேளையில், ‘கோவிந்தஸ்வாமி, பாரதியாருடைய காலில் முதலில் வீழ்ந்தாலும் பிறகு பாரதியாரைத் தம்முடைய காலில் வீழச் செய்தார்’ என்று குவளைக்கண்ணன் குறிப்பிடும் அள விற்கு, அவர் பாரதி வாழ்வில் என்ன அற்புதங்கள் செய்தார்? அவருக்கும் குவளைக் கண்ணனுக்கும் உள்ள தொடர்பு யாது? என்பன குறித்துத் தொடர்ந்து சிந்திக்கலாம்.




sethupathi@thaiveedu.com


வானத்தின் கீழே புரணம் ஒன்றுமில்லைஃ
ஈழத்துப் புலவர் சரிதையும் கவிதைத் திரட்டும்

வில்லியம் நெவின்ஸ் முதல் ஆ. சதாசிவம் வரையிலான வரலாற்று வரைபு

பாகம் - 2

- செல்லத்துரை சுதர்சன்









நமக்குக் கிடைக்கும் ஆதாரங்களின் அடிப்படையில், ஈழத்துப் புலவர்கள் குறித்த தனித்த வரலாறு என்ற வகையில், முதன்முதலில் தமிழில் வெளிவந்த எழுத்து, 'நாவலர் கோட்டம்' ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை (1858 - 1917) அவர்களின் 'ஈழமண்டலப் புலவர் சரித்திரம்' எனும் சிறுநூலே. ஈழத்துப் புலவர் வரலாற்றின் ஒரு சுருக்க முன்வரைபாக அமையும் இந்நூல், 1922-ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் நாவலர் அச்சுக் கூடத்தில் அச்சிடப்பட்டு வெளியாகியது. கையடக்கப் பதிப்பாக வெளிவந்த இந்நூல், 12 பக்கங்களைக் கொண்டது. இந்நூல் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் ஆற்றிய உரையின் அச்சு வடிவமே என்பதை, 1960-ஆம் ஆண்டு மருணீக்கியார் என்பார் தொகுத்து, யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சகம் வெளியிட்ட, 'ஈழநாட்டுத் தமிழ் விருந்து' என்ற நூலின் வாயிலாக அறியமுடிகிறது. மருணீக்கியார் தொகுத்த நூலில் இடம்பெறும் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் கட்டுரையின் நிறைவில் '1912-ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் செய்த ஒரு சொற்பொழிவு' (1960:17) என்ற குறிப்பு இதனைத் தெளிவு படுத்துகிறது. இக்கட்டுரையின் முக்கியத்துவத்தை, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

'இதனை எழுதிய முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் தொடாத விஷயம் இல்லையென்றே சொல்லலாம்... ஈழமண்டலப் புலவர்களைப்





பற்றிச் சொல்லுபவர்கள் அரசகேசரியிலிருந்து தொடங்குவது வழக்கம். முத்துத் தம்பிப்பிள்ளை அரசகேசரிக்கு மேலே அடியார்க்கு நல்லார் (சிலப்பதிகார உரையாசிரியர்), அவருக்கு மேலே சிங்கையாரிய சக்கரவர்த்தி, சக்கரவர்த்திக்கு முன் அந்தகக்கவி வீரராகவன் என்று போய், முரஞ்சியூர் முடிநாகராயரில் தொடங்குகிறார். ஈழத்துப் பூதந் தேவனாரைப் பற்றி ஒன்றுஞ் சொல்ல வில்லை. அரசகேசரிக்குப் பின் ஆறுமுக நாவலர் பரியந்தம் விபரித்து, அப்பாலும் அப்புலவர் பரம்பரை நடக்குமாறு காட்டியிருக்கின்றார்... இது ஈழமண்டலப் புலவர் சரித்திரம் எழுதுபவர்களுக்கு ஓர் அடி நிலைக் கருவூலம்.' (1960: xi)

மேற்குறித்த பண்டிதமணியின் கூற்று, ஈழத்துப் புலவர்களுக்கென்றே தனியான சரிதம் எழுதும் முயற்சியின் அடிநிலைக் கருவூலம், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளையின் எழுத்தோடுதான் ஆரம்பிக்கிறது என்பதைத் தெளிவிக்கிறது. இச்செய்தி வரலாறு ஒன்றின் தொடக்கப் புள்ளியையும் சுட்டிநிற்கிறது.

•

இரத்தினசாமி ஐயர் என்பார், 1930-இல் 'மேன் மக்கள் சரித்திரம்' என்றொரு நூலை எழுதினார். அவர், தான் மேன்மக்கள் எனக் கருதும் 371 நபர்களின் சரிதக் குறிப்புகளை அந்நூலில் பதிவுசெய்துள்ளார். ஆறுமுக நாவலர் அவர்கள் எழுதிய, 'சுப்பிரபோதம்' எனும் பிரசுரம், 1853-ஆம் ஆண்டு எழுதி

வெளியாகியது. அது, 24 பக்கங்களைக் கொண்டது. அதில், 'சைவாகமங்களை ஓதியுணர்ந்தவர்களும் நல்லொ ழுக்க முள்ளவர்களுமாகிய மேன்மக்கள்...' (ஆறு முகநாவலர் பிரபந்தத் திரட்டு, 1996:13) என அவர் எழுதுவது, 'மேன் மக்கள்' எனும் பதம் குறித்த அவரது பொருள் கோடலைத் தெரிவிக்கிறது. நாவலரது சுப்பிரபோதம் வெளியாகி, சுமார் 77 வருடங்களுக்குப் பின்னர் வெளிவந்த, இரத்தினசாமி ஐயரின் மேன்மக்கள் சரித்திரத்தில், காலனிய ஆட்சியின் நீதி, நிர்வாகிகள், காலனிய வர்த்தக விசுவாசிகள், புலமை யாளர்கள் என 371 நபர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

அவர் குறிக்கும் 371 நபர்களின் தகவல்களைப் பகுப்பாய்வு செய்தபோது, யாழ்ப்பாணத்தில் காலனிய காலத்தில் ஏற்பட்ட சமூக, பொருளாதார, கல்வி மாற்றங்களின் விளைவாகத் தோன்றிய செல்வாக்குமிக்க சமூகக் குழுவாகிய காலனிய உயர்குழாத்தினரில் (Colonial Elites) 346 நபர்களின் சரிதக் குறிப்புகளை, இந்நூல் தருவதை அறியமுடிகிறது. ஏனைய 25 நபர்கள் மாத்திரமே தமிழ், வடமொழி, சைவம் மற்றும் கலை ஆகியவற்றோடு தொடர்பான புலமையாளர்கள் என்பது தெளிவாகிறது. இவர்களைக் காலனியத் தமிழ்ப்புலமை உயர் குழாம் (Colonial Tamil Intellectual Elites) எனக் குறிப்பது பொருத்தமானது. 25 தமிழ்ப் புலமையாளர்களின் சரிதக் குறிப்புகள் இடம்பெறுகின்றன எனினும், அவர்களது செய்யுட்கள் எதுவும் இந்நூலில் இடம்பெறவில்லை. நூலின் நோக்கம் அது அல்ல என்பதால், நூலாசிரியர் அதனைத் தவிர்த்திருக்கிறார் போலும்.

•

மகாவித்வான் சி. கணேசையர் அவர்கள் எழுதிய 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' என்ற நூல் 1939-ஆம் ஆண்டு வெளியாகியது. ஈழகேசரி அதிபர் நா. பொன்னையா அவர்களால் இது பதிப்பிக்கப்பட்டு, சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சிடப்பட்டது. ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை யின் 'அடிக் கருவூல' முயற்சியின் பெரும்விளைவாக இதனைக் காணமுடிகிறது. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர்களை மாத்திரம் விரித்துக் கூறும் முதல் முயற்சியாக இந்த நூல் அமைகிறது. தமிழ்ப் புலவர் சரித்திரம் எழுதிய சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் பாடங்கேட்ட கணேசையர், புலவர் எழுதுவதிலும் துணைசெய்திருக்கிறார். குமாரசுவாமிப் புலவர், 'துணைபுரியுங் குணசீலராய சிலசில உபகார புருடர்களையும் பலவாறாய துணை விரும்பித் தழுவினாம்... இவர்களுந் திருத்தமும் பிறவுமாகச் சிலசில துணைபுரிந்தார்கள்' (2006:iv) எனக் கூறி, பெயர் சொல்லும் அறிஞர் எழுவருள், 'புன்னைக் கணேசையர்' என்ற பெயரும் இடம்பெற்றிருப்பது இதைத் தெளிவுபடுத்துகிறது.

தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையபிள்ளை அவர்களை ஆசிரியராக் கொண்டு வெளிவந்த 'வித்தகம்' பத்திரிகையில், 'ஈழநாடும் தமிழும்' என்ற தலைப்பில், ஈழநாட்டுப் புலவர் சரிதங்களை, ஐயரவர்கள் சில ஆண்டுகளாக எழுதினார். 'ஈழகேசரி' நா. பொன்னையபிள்ளை அவர்களின் வேண்டு கோளால் மீதியும் எழுதப்பட்டு, முன்னர் எழுதியவற்றோடு சேர்க்கப்பட்டு ஐயரது சரிதம் வெளிவந்தது.

இந்த நூலின் வரலாற்று முக்கியத்துவம் குறித்துச் சிலவற்றைக் குறித்துக்கொள்வது பயனுடையது. தமிழ்ப் புலவர் சரித எழுதுகையானது, 1939-ஆம் ஆண்டு வரையும், தமிழ்நாடு, ஈழம் ஆகிய இரு நிலத்தினையும் உள்ளடக்கிய தாகவே அமைந்திருந்தது. கணேசையர், தனது காலம்வரை தொடர்ந்த இந்தப் போக்கை, மாற்றி அமைத்து, ஈழத்துக் கெனத் தனியானதும் தனித்துவமானதுமான புலவர் பலரது சரிதங்கள் எழுதுவதையும் அவர்களது கவிதைகளைத் திரட்டுவதையும் ஆரம்பித்து வைத்தார். இந்தவகையில், ஐயரவர்களின் இந்த முயற்சியை ஒரு முன்னோடி முயற்சி எனக் குறிக்கலாம். 'இந்நூலின் பெயர் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் என்பதாகும். ஈழநாடு எனினும் இலங்கைத் தீவு எனினுமொக்கும்.' (2006:ix) என்ற அவரது கூற்றானது, ஈழம் என்ற அடையாளப் பேணுகையைத் தெளிவுறுத்தி நிற்கிறது. ஈழநாட்டு எல்லைக்குட்பட்டு நின்று தனது நூலை எழுதுகிறார், ஐயர்.

சரிதமெழுதுகை தொடர்பாக, ஐயரவர்கள் ஒரு கொள்கையை வகுத்திருந்தார் என்பதை அவரது 'முகவுரை' தெளிவுறுத்து கிறது. அக்கொள்கையில் அடங்கும் அம்சங்களில் முதலா வது எனக் குறிப்பிடக்கூடியது, பாட்டுக் கட்டுவோர் மாத்திரமே புலவர் எனக் கணிக்கப்பெறும் தமிழ்ச் சூழலில், அவர்க ளல்லாத புலமையாளர்களையும் ஐயர் தமது நூலுள் அடக்கியமையே.

'இச்சரிதத்தின் கண்ணே, இலக்கணங்களில் நன்கு பயின்று கவிபாடுந் திறமுடைய புலவர்களுடைய சரிதம் மாத்திரம் கூறினேமல்லேம். இயற்கையிற் கவிபாடுந் திறனமையாதவரா யினும், இலக்கண இலக்கியங்களில் அதி திறமைவாய்ந்த புலவர்கள் சரிதமும் கூறியுள்ளாம். அதற்குக் காரணம், கவிபாடுந் திறமுடையார் காலஞ் செல்லச் செல்ல அருகினமையே. நம் ஈழநாட்டுக்கு மட்டுமன்றித் தமிழ்நாடு முழுமைக்கும் பெரும் பயனளித்துப் பெரும்புகழ் படைத்த புலவரும் இவருட் சிலருளர்' (2006:xx)

அடுத்ததாகக் குறிப்பிடக்கூடிய அம்சம், புலவர்களைத் தொகுத்த ஒழுங்குமுறை. ஐயருக்கு முற்பட்டோர், புலவர்க ளது பெயர்களை, அகர வரிசையில் தொகுத்து அமைக்க, ஐயர் காலத்தைக் கருத்திற்கொள்கிறார். சரிதம் என்பது வரலாற்று அமைவுக்கு உட்பட்டது என்பதை மிகுந்த கரிசனையோடு ஏற்றுக்கொண்டிருந்ததை, அவரது பின்வரும் கூற்றுகள் புலப்படுத்துகின்றன.

'இந்நூலின்கண் வரும் புலவர்களின் சரித வைப்பு முறை, அவர்களுடைய இறந்த காலத்தின் முறையே முறையாகப் பெரிதுங்கொண்டு வைக்கப்பட்டுள்ளது. மறந்து விடப்பட்ட புலவர்கள் சிலர் சரிதங்களையும், பலர்க்குந் தெரியாது மறைந்துபோன புலவர்கள் சிலர் சரிதங்களையும், இயற்கை யிற் கவிபாடுந் திறமாத்திரமமைந்த புலவர்கள் சிலர் சரிதங்களையும் அநுபந்தமாகச் சேர்த்துக் கூறியுள்ளாம்.' (2006:xx)

'இச்சரிதங்களுள் நீண்டகாலத்துக்கு முன்னும் அதன் பிற்காலத்தும் இறந்தவர்களுடைய சரிதங்களேயன்றி, சமீப காலத்திலே இறந்தவர்களுடைய சரிதங்களைத் தாமும் பெற்றுக்கொள்ளுதல் மிக அருமையாயிருந்தது. அவர்கள் காலத்தைப் பெறுதல் அதனினுமரிதாயிருந்தது. புலவர்களு டைய சரிதங்களை, அவர்கள் சுற்ற மித்திரர்கள் வாயிலாகவே பெறுதல் அரிதாயிருந்ததெனின், ஏனையோர் வாயிலாகப் பெறுதலைப் பற்றி யாம் இங்கே எடுத்துக்கூறன் மிகையாகும்.

சில புலவர்களுடைய காலத்தை அவர்களோடு ஒரே காலத்திருந்த புலவர்களுடைய காலங்களைக்கொண்டு ஒரு வாறு நிச்சயித்தெழுதியுள்ளேம். இற்றைக்குச் சில மாதங்களின் முன் இறந்த புலவரொருவருடைய பிறந்த ஆண்டை அறிதற்கு யாம் பெரிது முயற்சித்தும் பெற்றிலே மெனின், அதற்கு முன் இறந்தவர்களுடைய காலங்களைச் சரியாக அறிவதெப்படி என்பதை அறிஞர்கள் சிந்திப்பார்க ளாக. ஆதலாற் காலவரையின்கண் வரும் பிழைகளை அறிஞர்கள் பொறுத்துகொள்வார்களென எண்ணுகின்றோம்.' (2006:xi-xii)

'சில புலவர் சரிதங்கள் முற்சரிதங்களைச் சுருக்கி எழுதப் பட்டன', 'சில சரிதம் எமக்குத் தெரிந்தவாறே எழுதப்பட்டன', 'இச்சரிதங்கள் எனலாம் புனைந்துரையின்றி உண்மையாகவே எழுதப்பட்டனவாகும்', 'எம்காலத்திலிருந்து இறந்த புலவர்களு டைய சரிதங்களுள் எமக்கு உண்மையென்று காணப்படாத சில சரிதங்களை நீக்கியுள்ளாம்' (2006:xii) என்றெல்லாம் கூறுவது கவனத்திற்குரியது.

சரிதம் எழுதுகையில் நவீன காலத்துக்கேற்ற தமிழ்நடையைப் பின்பற்ற வேண்டும் என்ற ஐயரின் சிந்தனை. அவர் பின்வருமாறு கூறுகிறார்.

'இச்சரிதங்களிலுள்ள வாக்கியங்களுள் வருந் தொடர்மொழிக ளுட் பெரும்பாலன படிப்போர் எளிதுணரற்பொருட்டுச் சந்திநோக்காது பிரித்தெழுதப்பட்டும், புலவர்களுடைய இயற் பெயர்களுட் சில இலக்கணவிதி நோக்காது வழங்கிவந்த படியே எழுதப்பட்டும் உள்ளன.' (2006:xxii)

இந்நூலில் ஈழத்துப் பூதந்தேவனார் முதலாக 64 புலவர்களது சரிதங்களும் கவிதைகளும் நூலின் முதற்பகுதியில் அமை கின்றன. அநுபந்தப் பகுதியில் 37 புலவர்களது சரிதக் குறிப்புகளும் கவிதைகளும் அமைகின்றன. ஈழமண்டலப் புலவர்கள் தொடர்பான நுணுக்கமான ஆய்வுக் குறிப்புகளை ஐயர் தருகிறார். புலவர் வரலாற்றினூடு, ஈழத்து இலக்கிய வரலாற்றைக் கட்டமைப்பது, அவரது நூலின் வரலாற்று முக்கியத்துவம் எனக் குறித்துக்கொள்ளலாம். மரபையும், மரபிலிருந்து கிளைக்கும் புதுமையையும், புதுமைக் காலத் தின் அனுசரிப்பையும் ஐயர் எழுதிய சரிதக் குறிப்புகளில் காணமுடிகிறது. புலவர்களது காலகட்டம் தொடர்பான ஐயரது கணிப்புகள், வரலாறு மீதான அவரது கரிசனையைக் காட்டுகிறது. சில புலவர்களது சரிதங்களை எழுதிவிட்டு, அவர்களது கவிதைகளைத் தருவதற்கு முன்னதாக, புலவர்கள் இறந்த பின்னர் எழுதப்படும் திதிநிர்ணய வெண் பாவைத் தருவது காலத்தின் மேலான ஐயரது கரிசனையைக் காட்டுகிறது. ஐயரவர்கள் தனக்கு முன்னர் வெளிவந்த, தமிழ்ப் புளூராக், பாவலர் சரித்திர தீபகம், தமிழ்ப் புலவர் சரித்திரம் ஆகிய மூன்று நூற் செய்திகளையும் ஈழ அடிப்படையில் வகுத்துத் தொகுத்து தானும் சேர்த்து ஒன்றாக்கித் தந்துள் ளார்.

•

ஈழத்துப் புலவர் சரிதத்துக்கெனக் கணேசையர் வகுத்த புதுப் பாதையில், பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்கள் பயணித்ததன் பயனே, ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். இது 1966-ஆம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலத்தி னால் வெளியிடப்பட்டது. ஆ. சதாசிவம் அவர்கள் தாம் எழுதிய 'ஈழமும் தமிழும்' என்ற ஈழத்து இலக்கிய வரலாறு தொடர்பான கட்டுரையை, ஈழத்துப் பூதந்தேவனாரில் ஆரம்பித்து, கணேசையரில் நிறைவு செய்கிறார். 'இருபதாம் நூற்றாண்டில் ஈழத்தில் வாழ்ந்து தமிழ்மொழிக்குச் சிறந்த தொண்டாற்றிய பெரியோர்களுள் வித்துவான் கணேசைய ரைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்' (2024:156-157) என்கிறார். இதன் மூலம், ஆ. சதாசிவம் அவர்கள், ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் எனும் தமது முயற்சிக்கு, ஐயரவர்களின் தொகுப்பு நெறியை ஆதர்சமாகக் கொள்ள விரும்பியிருக் கிறார் எனவும் ஐயரைத் தமக்கு முன்னோடியாக வரித்துள் ளார் எனவும் ஊகிக்க முடிகிறது. இந்த ஊகம் சரியானதுதான் என்பதை, ஆ. சதாசிவம் அவர்கள் தமது களஞ்சியத்தின் முகவுரையில் கூறும் பின்வரும் கூற்று மேலும் உறுதிப்படுத்து கிறது.

'இவ்வரலாற்றுக் குறிப்புகளை எழுதுவதற்குத் துணை புரிந்த நூல்கள் சதாசிவம்பிள்ளை எழுதிய பாவலர்சரித்திர தீபகமும், வித்துவான் கணேசையர் எழுதி ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரிதமுமாகும். அந்நூல்களிற் காணப்படாத பல புலவர்கள் பற்றிய குறிப்புகள் அப்புலவர்களின் வழித்தோன்றிய பரம் பரையினரிடமிருந்து பெற்றுச் சேர்க்கப்பட்டன. காலத்தைப் பற்றிய செய்திகள் தெரிந்த அளவிற் கூறப்பட்டன.' (1966:xviii-xix)

கணேசையர் எழுதிய சரிதத்தின் பின்னரும், ஆ. சதாசிவம் அவர்களின் இந்த நூலுக்கான தேவை என்ன என்பது குறித்த ஒரு வினா எழுகிறது. அதற்கு, யாழ்ப்பாணம், ஆறுமுகநாவலர் காவிய பாடசாலைத் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள் பின்வரும் கூற்றைப் பதிலாக உரைக்கலாம்.

'வித்துவசிரோமணி பிரமஶ்ரீ சி. கணேசையர் அவர்களாலி யற்றப்பட்ட 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம்' பொ.ஆ.பி. 1939-ஆம் ஆண்டில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அத னால், அக்காலத்திலும் அதன் பின்னரும் வாழ்ந்து மறைந்த தமிழ்ப் புலவர்களையும் அவர்களின் நூல்களையும் தனிப் பாடல்களையும் அந்நூலினால் அறிதல் இயலாது. அக்கவிதை களையும் புலமையாளரையும் தொகுத்து அறியும் வாய்ப்பும் இந்நூலாற் பெறத்தக்க ஒரு விசேட பயனாகும்' (1966: xii-xiii)

மேற்படி கூற்றின்வழி, ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு இன்றுவரையும் செம்மையாக எழுதப்படாத நிலையில் நின்று நோக்கும் போதுதான், ஆ. சதாசிவம் அவர்களது களஞ்சிய முயற்சியின் பயனும் அவசியமும் எத்துணை வரலாற்று முக்கியத்துவமானது என்பது புலப்படுகிறது. அவரது களஞ்சி யம் நவீன புலமைநெறிக்கு உட்பட்ட தொகுப்பு. அவர் தனியொருவராக இதைச் சாதித்திருப்பது என்பது, ஈழத்தவர் பெருமையுடன் கொண்டாட வேண்டிய மகத்தான சாதனைகளுள் ஒன்று.

•

ஈழத்து இலக்கியம் என்பது, ஈழத்து இயற்கைச் சூழலையும், ஈழத்து மக்களின் வாழ்வியலையும் பிரதிபலிப்பவை. இந்தத், தெளிவான நோக்குடன், அவர் தொகுப்பு முயற்சியில் ஈடுபட்டதை, 'ஈழத்துத் தமிழ்ப் புலவர்களால் யாக்கப்பட்ட செய்யுளிலக்கியங்களுந் தனிப்பாடல்களும் ஈழத்து இயற்

கைச் சூழலினடியிற் றோன்றியவை. மக்கள் தம் பண்பாட்டினையும், வாழ்க்கை முறைகளையுந் தமிழ் மரபு பிறழாது கூறுபவை' (1966:xvii) எனும் அவரது கூற்றுப் புலப்படுத்துகிறது. ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், ஈழத்துப் பூதன்தேவனாரிலிருந்து க. வைத்தியலிங்கம் பிள்ளைவரை 143 ஈழத்துப் புலவர்களின் தேர்ந்த கவிதை களைக் கொண்டமைந்தது. ஆயினும், வெறுமனே ஒரு கவிதைக் களஞ்சியமாக இது அமையாமல், நூலின் அமைப்பு மற்றும் பகுப்பு முறையாலும், ஆய்வுநிலைத் தரவுகளாலும் இது ஒரு வரலாற்று ஆவணமாக அமைந்துள்ளது. இது இக்களஞ்சியத்தின் மேன்மை எனலாம்.

கணேசையரின் காலவாரியான தொகுப்பு நெறியைத் தனக்கு முன்னோடியாகக் கொண்டு, அதிலிருந்து மரபு மற்றும் நவீனம் ஒன்றிக் கலந்த ஒரு பெரும் பாய்ச்சலை, வரலாற்று ஒழுங்கு பேணுவதில் நிகழ்த்திக் காட்டியுள்ளார், ஆ. சதாசிவம் அவர்கள். 'ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம்' என்னும் இந்நூல் ஈழநாட்டில் வாழ்ந்த புலவர்களால் இயற்றப்பட்ட சிறந்த தமிழ்ப் பாடல்களின் தொகுதியாகும்.' (1966: xvii) என அவர் தனது முகவுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடுகிறார். இதன் மூலமாக, தேர்ந்த கவிதைகளின் களஞ்சியம் உருவாக்கும் அவரது நோக்கத்தைத் தெளிவுறக் கூறிவிடு கிறார். 'தெரிந்தெடுத்த தீஞ்சுவைக் கவிதைகளின் களஞ்சிய மாகிய இந்நூலுக்கு 'ஈழத்துத் தமிழ்க் களஞ்சியம்' எனப் பெயரிடப்பட்டது' (1966:xviii) என அவர் கூறுவது இதனை மேலும் உறுதிப்படுத்துகிறது. 358 செய்யுள் நூல்களின் பெயர்களை இக்களஞ்சியத்தில் அவர் தருகிறார். ஈழத்துப் புலவர்கள் பலரும் பாடிய 147 செய்யுள் நூல்களிலிருந்தும் தனிப்பாடல்களிலிருந்தும் கவிதைகளைத் தேர்ந்து திரட்டி வழங்கியுள்ளார்.

இக்களஞ்சியம் ஈழத்துக் கவிதை வரலாற்றை ஆறு காலகட்டங்களாக வகுத்து நோக்குகிறது. 'இந்நூல் பெரும் பாலும் அரசியற்காலப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலம், யாழ்ப்பாணத் தமிழ்வேந்தர் காலம் 1261 - 1505, போர்த்துக்கேயர் காலம் 1505 - 1658, ஒல்லாந்தர் காலம் 1658 - 1796, ஆங்கிலேயர் காலம் 1796 - 1947, தேசிய எழுச்சிக் காலம் 1948 - என ஆறுகாலப் பகுதிகளாக இலக்கிய வரலாற்றாசிரியர் கோட்பாடுகளுக்கேற்ப வகுக்கப்பட்டது' (1966:xix) என்பது ஆ. சதாசிவம் அவர்களது கூற்று.

இக்காலப்பகுதிகளின் பெயர்களில், சங்ககாலம் நிறுவன ரீதியில் காலப்பெயர் பெற்றதை, நாம் மனங்கொள்ளல் வேண் டும். ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் சங்ககாலத்தை முதற்காலமாகக் கொள்ளவேண்டும் என்பது அவரது துணிபு. 'தமிழ் கூறும் நல்லுலகத்து இலக்கியத்தின் ஒரு கூறே ஈழத் தமிழிலக்கியம் என்பதனையும், தமிழிலக்கிய மரபு என்பது இரு நாட்டுக்கும் ஒன்றே என்பதனையும் உணர்த்துமுக மாகவே முதலாவது காலப்பகுதியைச் சங்ககாலம் என அழைத்தனம் என்க' (1966:xix-xx) என அவர் கூறுவதும் ஏற்றுக்கொள்ளத் தக்கதே. அவர் தமது இத்துணிபுக்கும் கணேசையரையே முன்னோடியாகக் கொண்டுள்ளார். கணே சையர் எழுதிய சரிதத்திலும் 'ஈழத்துப் பூதந்தேவனார்' முதலில் வருகிறார். ஆ. சதாசிவம் அவர்கள் தமது களஞ்சியத்தில் சங்ககாலம் பற்றிய அறிமுகத்தில்,

'திருவளர் மதுரைத் தென்றமிழ்ச் சங்கப்
புலவரு ளொருவராய்ப் புவியிசை நாட்டிய
பூதந்தேவனார் முதலிய சான்றோர்
தோன்றுதற் கிடமாந் தொன்றுகொள் சீர்த்தித்
திரைவளை யீழத்து வடபால்...'

என்ற கணேசையரின் பாயிரப் பகுதி ஒன்றை வழங்குவதாலும் இதனை உணரலாம். தேசிய எழுச்சிக் காலம் என்பது 1948-ஆம் ஆண்டிலிருந்து இக்களஞ்சியம் வெளிவந்த 1966-ஆம் ஆண்டுவரை எனக் கருதிக்கொள்வது பொருத்தமானது.

●

ஆ. சதாசிவம் அவர்கள், தமது களஞ்சியத்தில் தாம் வகுக்கும், ஆறு காலகட்டப் பகுதிகளிலும், அவர் புலவர்களை வைக்கும் கால ஒழுங்கு, புலமை ரீதியாக நயக்கத்தக்கது. புலவர்களின் கால ஒழுங்கை அவர்கள் இறந்த ஆண்டுகளை அடிப்படையாகக்கொண்டு அவர் ஒழுங்கமைக்கிறார்.

'சிவசம்புப் புலவர் பிறந்த ஆண்டு 1852 எனவும் இறந்த ஆண்டு 1910 எனவுந் திட்டமாகக் கூறப்பட்டன. சில புலவர்களின் இறந்த ஆண்டு மட்டும் அவர் பெயர்க்கெதிரே கூறப்பட்டது. உதாரணமாகப் பொன்னம்பலபிள்ளை -1891 என அவரிறந்த காலம் மட்டுங் காட்டப்பட்டது. பீதாம்பரப் புலவர் 1819 என்பது அவர் 1819 என்னும் ஆண்டை உள்ளிட்ட காலப்பகுதியில் வாழ்ந்தார் எனப் பொருள்படும். இந்நூலிற் புலவர்களின் வரிசையமைந்த விதம் அவர் இறந்த ஆண்டையொட்டியதாகும். உதாரணமாக முருகேச பண்டிதர் 1830 - 1900, தாமோதரம்பிள்ளை 1832 - 1901 திருஞான சம்பந்தப்பிள்ளை 1849 - 1901, வயித்தியலிங்கபிள்ளை 1852-1901, சபாபதி நாவலர் 1843 - 1903 என்போரது வரிசையை நோக்குக. ஒரே ஆண்டில் இறந்த பல புலவர்களை வரிசைப்படுத்தும்போது, அவர்கள் பிறந்த ஆண்டு வரிசையுங் கருத்திற் கொள்ளப்பட்டது.' (1966:xix)

சிவசம்புப் புலவர் பிறந்த ஆண்டு 1852 என்பது தவறானது. 1829 என்பதே சரியானது என, பிற்கால ஆய்வு மூலம் உறுதிசெய்யப்பட்டதையும் இங்கு மனங்கொள்ளல் தகும். (சுதர்சன், செ. 2014: 570 - 575)

இந்த நூலமைப்பின் இன்னொரு சிறப்பம்சம், ஒவ்வொரு காலகட்டப் பிரிவின் ஆரம்பத்தில், அமையும் அறிமுகப் பகுதி. அப்பகுதி, இரு பிரிவுகளைக் கொண்டமைந்துள்ளது. முதற்பிரிவு, குறித்த காலகட்ட இலக்கிய உருவாக்கத்திற்கான அரசியல், சமூக, பண்பாட்டுக் காரணிகளைத் தெளிவாகவும் கட்டுறுக்கமாகவும் கொண்டுள்ளது. இரண்டாவது பிரிவு, குறித்த காலகட்ட இலக்கியப் போக்கை விளக்குவது. முக்கியமான புலவர்கள், அவர்களின் புலமைச் சாதனைகள், இலக்கியங்களின் பொருள், செய்யுள், மொழி மரபுகள் ஆகியவற்றின் நிலவரங்களைத் தருவது.

இந்த நூலமைப்பின் பிறிதொரு சிறப்பம்சம், ஒவ்வொரு புலவரின் செய்யுட் பகுதிக்கு முன்னே அமையும் புலவர் குறித்த அறிமுகம். இது புலவர் குறித்த வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்டமைந்துள்ளது. புலவர் பெயர், வாழ்ந்த காலம், வசித்த ஊர், புலமை வம்சாவளி, செய்யுள் நூல்கள், பிற தமிழ்ப் பணிகள் என்பவற்றைத் தெளிவாகவும்

சுருக்கமாகவும் தருவதாக அந்த அறிமுகம் அமைந்துள்ளது. களஞ்சியத்தில், நான்கு பிற்சேர்க்கைகள் அமைந்துள்ளன. காலம் கணிக்க முடியாத புலவர்களது பாடல்கள் மற்றும் நூல் தொகுக்கும் காலத்தில் வந்துசேரப் பிந்திய பாடல்கள், முதற் சேர்க்கை. நூலில் அடங்கிய புலவர்களை அகரவரிசைப் படுத்தித் தரும் புலவர் அகராதி, இரண்டாவது சேர்க்கை. களஞ்சியத்தில் நூல்களை அகரவரிசையில் தரும் நூல் அகராதி, மூன்றாவது சேர்க்கை. களஞ்சியத்தில் இடம்பெற்ற செய்யுட்கள் அனைத்தினதும் முதற்குறிப்பை அகரவரிசையில் தரும் செய்யுள் அகராதி, இறுதிச் சேர்க்கை.

இக்களஞ்சியத்தில், சில புலவர்களுக்கு ஒரு பாடல் மாத்திரமே இடம்பெற்றுள்ளது. சில புலவரது நூல்கள் கிடைக்காத நிலையில், சைமன் காசிச்செட்டி, குமாரசாமிப் புலவர், அ. சதாசிவம்பிள்ளை, கணேசையர் ஆகியோரை அனுசரித்து, அவர்கள் தமது நூல்களில் காட்டிய பாடல்களை, ஆ. சாதாசிவம் அவர்கள், தாமும் உள்வாங்கி அடக்கி, தொடர்ச்சி பேணியிருப்பது சிறப்பிற்குரியது. கல்வெட்டுகளில் வரும் பாடல்கள், உதிரிப் பாடல்கள், சித்திர கவிகள், யாழ்ப்பாண வைபவ கௌமுதியில் வரும் பாடல்கள் முதலியவற்றையும் தமது இரண்டாவது பதிப்பில் உள்வாங்க அவர் எண்ணியிருக்கலாம்.

•

இக்களஞ்சியத்தின் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பாகச் சில கருத்துகளை இங்கு பதிவுசெய்வது பொருத்தமானது. முதலாவது, ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு எழுதுகைக் குரிய நேர்த்தியான ஒரு முன்வரைபு ஒன்றை, இக்களஞ்சி யத்தின் கட்டமைப்பு வழங்குவது. இத்தன்மை காரணமாக, இக்களஞ்சியத்தை ஒரு கருவி நூல் எனும் அந்தஸ்து வழங்கி வியக்கிறார், பேராசிரியர் வி. செல்வ நாயகம் அவர்கள். அவரது பின்வரும் கூற்று இங்கு நோக்கத்தக்கது.

'ஈழநாட்டுத் தமிழிலக்கிய வளத்தினை வரலாற்று முறைப்படி ஆராய்வதற்கும், ஈழத்துத் தமிழ்ப் பிரபந்தங்களின் இலக்கியச் சிறப்பினை மட்டிடுவதற்கும் ஒரு சிறந்த கருவியாக இந்நூல் அமைந்துள்ளது' (1966:vii)

இரண்டாவது, 1965-ஆம் ஆண்டு காலவரையான, ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றை, அதன் பன்முகத் தன்மையை வரைய இக்களஞ்சியமே இன்றுவரை முதன்மை நூலாக அமைந்து விளங்குகிறது. இதுவரையும், ஈழத்துத் தமிழ்க் கவிதை வரலாற்றை உரைக்கும் நூல்கள் சிலவும், கட்டுரைகள் பலவும் வந்திருப்பினும், அவை யாவுமே காலக் கரிசனை இன்றியும், கவிதைத் தேர்வில் தவறியும் போயிருக் கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது, ஈழத்துச் செய்யுள் இலக்கிய வரலாற்று நூலாக விளங்குவது. ஈழத்துச் செய்யுள் இலக்கிய வரலாறு இன்னமும் செம்மையாக எழுதப்படாத நிலையில், இக்களஞ்சியமே அத்தேவையைப் பூர்த்திசெய்து வருகிறது. ஈழத்துச் செய்யுள் இலக்கிய வரலாறு பற்றிய கற்கை நெறி இன்னமும் ஒழுங்கு படுத்தப்படவில்லை. உருவம், உள்ளடக்கம், உணர்த்துமுறை என்ற பழைய கஞ்சியே இப்போதும், சூடாக்கி வார்க்கப்படு கிறது.

நான்காவது, ஈழத்துப் புலமை வரலாற்றைக் கவிதைகள் வழியாக அறிவதற்கும், ஈழத்தின் கவிப்புலமைத் திறத்தின் செழுமையை அறிவதற்கும் முதல் நூலாக அமைவது. கவிதை வரலாற்றைப் பொறுத்துவரை, இது மிக முக்கிய மானது. காலந்தோறும் தேர்ந்த கவிதைகளை வரிசைப் படுத்துதல் என்பது, கவிதை வரலாற்றுக்குக் பலமளிப்பது. கவிதை வரலாறு என்பது, என்பதைக் 'கவித்துவம் மிக்க கவிதை வரலாறு' எனக் கட்டமைக்க அது உதவுகிறது.

ஐந்தாவது, ஈழத்துப் புலவர் வரலாற்றை காலவரன்முறையில் அறியத் தருவது. ஈழத்துப் புலவர் வரலாறு குறித்த நூல்களுள் கணேசையரின் ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம் நீங்கலாக உள்ள அனைத்துமே, காலவரிசைக் கரிசனைக்குட்பட்டு அமையவில்லை. அதன் காரணமாக ஈழத்துப் புலவர் வரலாறு பற்றிய அறிகைக்கு இந்நூல் ஆதாரமாக அமைகிறது.

ஆறாவது, ஈழத்துப் பிரபந்த வரலாற்றை அல்லது சிற்றிலக்கிய வரலாற்றைக் கால ஒழுங்கில் அறியத்தருவது. ஈழத்துச் சிற்றிலக்கிய வரலாறு இதுவரை எழுதப்படாத நிலையில், இந்த நூலே அத்தேவையைப் பூர்த்திசெய்து வருகிறது. ஈழத்தில் தோன்றிய பிரபந்தங்களை இக்களஞ் சியம் முப்பத்தொன்றாக வகைப்படுத்தி, வரலாற்று ஒழுங்கில் தருகிறது. அதன் காரணமாக, ஈழத்துப் பிரபந்த வரலாற்று நூலாகவும், இக்களஞ்சியமே அமைந்துள்ளது எனலாம்.

ஏழாவது, செய்யுள் இலக்கியங்களூடாகச் சமூக வரலாற்றை அறிய உதவுவது. இது மிக மிக முக்கியமானது. இக்களஞ் சியம் காலவரிசையில் கவிதைகளைத் தருவதனால், நிலப்பிரபுத்துவ காலத்திலிருந்து தேசிய எழுச்சிக்காலம் வரையான ஒரு சமூக வாசிப்பை, கவிதைகளின் வழி நிகழ்த்த, இக்களஞ்சியம் துணை செய்கிறது. அந்த வகையில், இது ஒரு சமூகவியல் ஆய்வுக்கான வரலாற்று நிலைத் திரட்டாக அமைகிறது.

எட்டாவது, ஈழத்துப் பிரதேசங்களின் இலக்கிய வளர்ச்சி மற்றும் புலமைச் செயற்பாடுகளை அறிய உதவுவது. ஈழத்தில் பிராந்திய இலக்கிய வளர்ச்சி பற்றிய வரலாற்று ரீதியான எழுத்துகள் இன்னமும் செம்மையாக எழுதப்பட வில்லை என்றே தோன்றுகிறது. எழுதப்பட்டனவும், தமிழ்த் தேசிய காலகட்டத்திலிருந்தே ஆரம்பிக்கின்றன. எனவே, மரபிலிருந்து கிளைக்கும் புதுமை என்ற அடிப்படையில் பிராந்திய இலக்கிய வரலாறு எழுதுகைக்கு இந்தக் களஞ்சியம் மாத்திரமே, இப்போது தரமான ஒரு வரலாற்று வழிகாட்டியாய் அமைகிறது.

ஒன்பதாவது, ஈழத்தில் கிறிஸ்தவம், இஸ்லாம், சைவம் ஆகிய சமயங்களின் இலக்கிய வளர்ச்சியை அறியவும், அவை குறித்த வரலாற்றை எழுதவும் துணைசெய்வது. அதாவது, இலங்கையில் தமிழ் மொழி பேசும் சிறுபான்மை மக்களின் இலக்கியமாக, அவர்களின் சமய அடையாளங்களைச் சுமந்த இலக்கியமாக வரைவதற்கு உதவுகிறது. ஈழத் தமிழ் இலக்கிய வரலாற்றை, ஈழத்தில் சைவ இலக்கிய வரலாறு, ஈழத்தில் கிறிஸ்தவ இலக்கிய வரலாறு, ஈழத்தில் இஸ்லாமிய இலக்கிய வரலாறு, ஈழத்தில் தமிழ் பௌத்த இலக்கிய வரலாறு என்றவாறெல்லாம் வரைவதற்கான முதன் நூலாக இக்களஞ்

சியம் அமைகிறது. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்கள், 'தமிழ்பேசும் எல்லாச் சாகியத்தவரும் ஏற்றுப் போற்றத்தக்கவாறு, சகல சாகியப் புலமையாளர்களுடைய கவிதைகளும் இந்நூலிற் கோவைப்படுத்தித் தொகுக்கப் பட்டுள்ளன' (1966:xii) எனக் கூறுவது, இங்கே நோக்கத்தக்கது.

பத்தாவது, ஈழத்துக் கோயில் இலக்கிய வரலாற்றை அறிய உதவுவது. ஈழத்துக் கோயில் இலக்கிய வரலாறு, ஈழத்துப் பண்பாட்டுப் பாரம்பரியத்தின் அடிப்படையில் இன்னமும் ஆராயப்படவில்லை. சிலர் தாம் விரும்பியவாறு கோயில்க ளின் வரலாற்றை, அக்கோயில்களின் இலக்கியங்களை மாத்திரமே, இதுவரை எழுதி வைத்துள்ளனர். ஈழத்தில் முற் போக்கு இலக்கிய எழுச்சியே இலக்கியம் எனக் கருதுவோர், கோயில் இலக்கியம் என்றவுடன் முகம் சுளிக்கின்றனர். ஆனால், அக்கோயில்கள் பற்றிய ஆய்வுகளை வெள்ளைத் தோல் ஆய்வாளர்கள் செய்தால், கண்மூடித்தனமாக மொழி பெயர்க்கின்றனர். இன்றும், ஈழத்துக் கோயில் இலக்கியம் பற்றிய ஆய்வுக்கு ஈழத்து, நிலவியலின் அடிப்படையில் ஒரு வழிகாட்டியாக இருப்பது, இக்கவிதைக் களஞ்சியமே.

பதினொன்றாவது, ஈழத்துத் தனிப்பாடல் வளர்ச்சியை அறியத் துணை செய்வது. தனிப்பாடல் திரட்டு என்ற மூன்று தொகுதிகள் இதுவரை தமிழில் வெளிவந்துள்ளன. அந்த மூன்று தொகுதிகளிலும், ஈழத்துப் புலவரது தனிப் பாடல் ஒன்றுகூட இடம்பெறவில்லை. ஆனால், இக்கவிதைக் களஞ் சியம், ஈழத்துப் புலவர்கள் பலரின் தனிப்பாடல்களை அடையாளங்காட்டுகிறது. எனவே, ஈழத்துத் தனிப்பாடல் திறத்தை ஆராய்ந்து அறிவதற்கும், அவற்றைத் தொகுப் பதற்கும், அதன் வரலாற்றை வரைவதற்கும் இக்களஞ்சியம் உதவுகிறது. 2007-ஆம் ஆண்டு இக்கவிதைக் களஞ்சியத்தில் இடம்பெற்ற தனிப்பாடல்களையும் உள்வாங்கி, 'ஈழநாட்டுப் புலவர்களின் கவித்திறமும் தனிப்பாடல்களும்' என்ற நூலை, பன்மொழிப் புலவர் த. கனகரத்தினம் அவர்கள் எழுதியுள்ளமையும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

பன்னிரெண்டாவது, ஈழத்துச் சித்திரக் கவி வரலாறு குறித்தது. தமிழகத்தோடு ஒப்பிட்டு நோக்கினால், ஈழத்துப் புலவர்களின், வித்துவக் கவித்துவ மேன்மை தெரியும் துறைகளுள், சித்திரக் கவித்துறையும் ஒன்று. ஈழத்து ஆய்வாளர் ஞானம் பாலச் சந்திரன் அவர்கள், 'ஈழமும் தமிழும் 6 - சித்திரக் கவித்திரட்டு' என்ற வரலாற்று முக்கியத்துவமுடைய நூலை 2016-ஆம் ஆண்டு வெளியிட்டார். ஆ. சதாசிவம் அவர்களின் கவிதைக் களஞ்சியத்தை வாசிப்போர், ஞானம் பாலச்சந்திரனின் ஈழத்துச் சித்திரக் கவித்திரட்டையும் கவனத்திற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கிறது.

பதின்மூன்றாவது, ஒரு கவிதைக் களஞ்சியத்தைப் புலமைசார் செயற்பாட்டாக எவ்வாறு உருவாக்க வேண்டும் என்பதற்கு இன்றுவரை வழிகாட்டியாய் இருப்பது, இக்களஞ்சியமே. இவ்விடத்தில், பேராசிரியர் வி. செல்வநாயகம் அவர்கள் 'எம்முடைய நாட்டில் எழுந்த நூல்களுள் இன்னும் அச்சிடப்படாதனவற்றைத் தக்க முறையிலே ஆராய்ந்து அச்சிடுவதற்கு வேண்டிய ஊக்கத்தை இந்நூல், தமிழறிஞர் களிடையே எழச்செய்யும் என்பதில் ஐயமில்லை' (1966:viii) எனக் கூறுவது கவனிப்புக்குரியது. அவசரத்தில் பெற்றெடுக் கும், காலக்கரிசனை அற்ற புதுக்கவிதை நாமாவளி அகரவரிசைத் தொகுப்புகள் பல இன்றும் ஈழத்தில் வந்தவாறுள்ளன. அவை, வரலாற்றுக்குப் பயனற்றவை.

பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களின் பெரும் முயற்சியில் வெளிவந்த கவிதைக் களஞ்சியம், இதுவரை நான்கு பதிப்புகளைக் கண்டுள்ளது. மூன்றாவது பதிப்புப் பற்றி, நூலகவியலாளர் என். செல்வராஜா அவர்கள் எழுதிய, 'நூற் றாண்டு நினைவுகளில் பேராசிரியர் ஆ. சதாசிவம்' என்ற கட்டுரை வீரகேசரியில் வெளிவந்தது. அதை வாசித்தால் மூன்றாவது பதிப்பைப் புரிந்து கொள்ளலாம். 'இலங்கையில் ஆசிரிய வெளியீட்டாளர்களும் அவர்களுக்கான பதிப்புரிமை யும்' என்ற அவரது கட்டுரையை மீள்பதிப்பு முயற்சியில் ஈடுபடுபவர்கள் வாசிக்க வேண்டும். இவற்றையெல்லாம், பதிப்பு மற்றும் தொகுப்புப் பணியில் ஈடுபடுவோர் கவனத்தில் கொள்வார்களாக. ஆ. சதாசிவம் என்பவரைக் கொண்டாடு வது என்பதே, அவரின் புலமை வழியில் நடப்பதுதான்!

●

வில்லியம் நெவின்ஸிலிருந்து ஆ. சதாசிவம் வரையும் நிகழ்ந்த, ஈழத்துப் புலவர் சரிதையாக்க முயற்சிகளையும், கவித் திரட்டு முயற்சிகளையும் வரலாற்றின் நேர்கோட்டில் வைத்துப் பார்க்கும்போது, ஆ. சதாசிவம் அவர்கள் மேற் கொண்ட களஞ்சிய முயற்சி ஈழத்துத் தமிழ் வரலாற்றில், மகத்தான சாதனை என்பது புலனாகிறது. ஈழத்தில், அண்மைக் காலத்தில் நிகழ்ந்த சில தொகுப்பு முயற்சிகள், தொகுப்பு முறைக்குரிய ஆய்வுநெறிமுறை அற்றும், சமூக மற்றும் சுய அரசியல் எல்லைகளுக்குள் சிக்கியும் பயனற்றுப் போயுள்ளன. இந்த நிலையில், உயரிய ஆய்வு நோக்குடனும் சீர்மையான புலமை அறத்தோடும், காலங்கடந்தும் வாழும் வரலாற்று ஆவணமாக, ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியத்தை ஆக்கித் தந்தமைக்கு, ஈழத்துத் தமிழ் உலகு, பேராசிரியர் ஆ. சதாசிவம் அவர்களுக்கு நன்றிக்கடன்பட்டது. இந்நூலை அதன் அசல் வடிவில் மீள் பதிப்புச் செய்த, அம்மையார் திருமதி திருஞானேஸ்வரி சதாசிவம் அவர்க ளுக்கு, தமிழ் உலகின் சார்பில் பாராட்டுகள்.

'ஈழத் தெழுந்த புலவர் திறங்குறித்
தீழத் துத்தமிழ்க் கவிதைக் களஞ்சியம்
எனத்தொகை நூலொன் றியற்றின னம்ம
தனக்கிணை யில்லாத் தண்டமிழ் மரபு
வனப்பொடு நிலவும் வகைபுரி நல்லோன்
தொல்கட லிலங்கையிற் தோற்றி நிறுவும்
பல்கலைக் கழகச் சொல்வலர் தம்முள்
வராலுகள் வயல்வள மருவு
மராலிச் சதாசிவ மெனும்பெய ரவனே'

புலவர் பாண்டியனார்

உசாத்துணை:

- இரகுபரன், க. (ப.ஆ), ஆறுமுக நாவலர் பிரபந்தத் திரட்டு, கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 1996.
- இரத்தினசாமி ஐயர்., மேன் மக்கள் சரித்திரம்;, கொழும்பு: மீனாம்பாள் அச்சியந்திரசாலை, 1930,
- கணேசையர், சி., ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரிதம், சுன்னாகம்: திருமகள் அழுத்தகம், 1939.
- கணேசையர், சி., ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம், (செவ்விதாக்கம்: க. இரகுபரன்) கொழும்பு: இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2006.
- கனகரத்தினம், த., ஈழநாட்டுப் புலவர்களின் கவித்திறமும் தனிப்பாடல்களும், சென்னை: மணிமேகலை பிரசுரம், 2007.

- குமாரசுவாமிப் புலவர், அ., தமிழ்ப் புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம்: சைவப்பிரகாச யந்திரசாலை, 1916.
- குமாரசுவாமிப் புலவர், அ., தமிழ்ப் புலவர் சரித்திரம், கொக்குவில்: சோதிடப்பிரகாச யந்திரசாலை, 1951.
- சதாசிவம், ஆ., (தொ.ஆ) ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம், கொழும்பு: சாகித்திய மண்டலம், 1966.
- சதாசிவம், ஆ., மொழி - இலக்கியம் - இறைநெறி, கொழும்பு: குமரன் அச்சகம், 2024.
- சதாசிவம்பிள்ளை, அ., பாவலர் சரித்திர தீபகம், மானிப்பாய்: ஸ்ட்ரோங் அண்ட் அஷ்பரி அச்சகம், 1886.
- சண்முகலிங்கம், க., சமூக வரலாறும் வரலாற்றில் தனி நபர்களும், சென்னை - கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 2015.
- சுதர்சன், செல்லத்துரை., நாவில்லா உபதேசிகள்: காலனிய யாழ்ப்பாணத்தில் சிறுபுத்தகக் கலாசாரமும் சமயக் கருத்தாடலும், பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுப் பேருரை, யாழ்ப்பாணம்; யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 2022.
- நித்தியானந்தன், மு., கூலித்தமிழ், சென்னை: க்ரியா, 2014.
- நீலகண்டன், கா., சுதர்சன், செ., சிவசம்புப் புலவர் பிரபந்தப் பெருந்திரட்டு, உடுப்பிட்டி: புலவர் இல்லம், 2014.
- நெவின்ஸ், வில்லியம்., செந்தமிழ் ஆசிரியரின் சில நூல்களிலே தெரிந்துகொண்ட இலக்கிய சங்கிரகம், யாழ்ப்பாணம்: அமெரிக்கன் மிஷன் அச்சகம், 1847.
- பாலச்சந்திரன், ஞானம்., ஈழமும் தமிழும் 2 - சைமன் காசிச் செட்டியின் அகராதி முயற்சிகள், கொழும்பு: ஞானம் பதிப்பகம், 2015.
- பாலச்சந்திரன், ஞானம்., ஈழமும் தமிழும் 6 - சித்திரக் கவித்திரட்டு, கொழும்பு: ஞானம் பதிப்பகம், 2015.
- பூபாலபிள்ளை, ச., தமிழ் வரலாறு, மட்டுநகர்: சுத்தரத்வைத யந்திரசாலை, 1920.
- பூலோகசிங்கம், பொ., தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெருமுயற்சிகள், கொழும்பு - சென்னை: குமரன் பத்தக இல்லம், 2002.
- மருணீக்கியார் (தொ.ஆ)., ஈழநாட்டுத் தமிழ் விருந்து, யாழ்ப்பாணம்: வண்ணார்பண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சகம், 1960.
- முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., ஈழமண்டலப் புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம்: நாவலர் அச்சுக்கூடம், 1922.
- வேங்கடாசலபதி, ஆ. இரா. (ப.ஆ)., உ. வே. சாமிநாதையர் கடிதக் கருவூலம், சென்னை: டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், 20018.
- Cimon Casie Chetty., The Tamil Plutarch Containing A Summary Account of The Lives of The Poets and Poetesses of Southern India and Ceylon from the Earliest to the Present time, with Select Specimens of Their Compositions, Jaffna: Ripley & Strong Printers, 1859.
- Cimon Casie Chetty., The Tamil Plutarch Containing A Summary Account of The Lives of The Poets and Poetesses of Southern India and Ceylon from the Earliest to the Present time, with Select Specimens of Their Compositions, Colombo: General Publishers Ltd, 1946.

Sutharsan.S@thaiveedu.com





tg.theeban@gmail.com



நாஞ்சில் நாடன்

கொதுகு

எழுதும் மேசையில் வாசிக்கும் ஒரு புத்தகம். கிடக்கும் மற்றொன்று படுத்து உறங்கும் இடத்தில் தலைமாட்டில் தலையணை மேல் கிடக்கும். தலைமாடு என்றால் தலைப் பக்கம், கால்மாடு எனில் கால்பக்கம். அதாவது மாடு எனில் - எருது அல்லது பசு, இடம் (Place), பக்கம் (Side), செல்வம் (Wealth), பொன் (Gold), சீதனம் (Dowry), அகன்மணி (Large Gem), ஓர் ஏழனுருபு. மூன்றாவது புத்தகம் வரவேற்பறையில் கிடக்கும் சோபாவின் கை வைக்கும் இடத்தில் இருக்கும்.

அன்று முற்பகலில் சோபாவில் தலையணை வைத்து நீட்டிப் படுத்துக் கிடந்து வாசித்தவாறு இருந்தேன். கையில் இருந்த நூல் 'மணற் பூக்கள்', சிறுகதைத் தொகுப்பு, தேவி லிங்கம் எனும் இளம் படைப்பாளி எழுதியது. 2025 டிசம்பரில் வெளி யானது. தமிழ்வெளி பதிப்பகம். மொத்தம் பதினொரு கதை களில் பத்தாவது கதையான 'தொடுகை'யில் ஆழ்ந்திருந் தேன். சிறுகதைப் பாங்கும் வாசிப்பு ஈர்ப்பும் என்னை நடத்திக் கொண்டிருந்தது.

ஆனால் வாசிப்புக்கு இடையூறாக சிறைப்படுத்திக் கொண்டி ருந்தது கொசு ஒன்று (சிறை - தொந்தரவு). அதற்கு நம்மேல் ஏதோ முற்போக்கு - சமூகநீதி வெறுப்பாக இருக்கக் காரண மில்லை. முன்பகையோ, ஒருதலைப்பட்சமான ஆங்காரமோ இருக்கவும் நீதி இல்லை.

சிறுகதையில் சிரத்தையும் கொசு கடிக்கும் இடத்தில் கைய டியுமாக இருந்தேன். அடி விழுந்த எண்ணிக்கை இதுவரை, நட்சத்திரத்துக்கு ஒன்று என்ற கணக்கில் இருபத்தேழு கொசுக்களாவது இறந்து விழுந்திருக்க வேண்டும். ஆனால் ஒரு சவம் கூடக் கண்படவில்லை. 'பட்டனன் என்ற போதும் எளிதினிற் படுகிலேன், யான்' என்று இராவணன் கூற்றாகக் கம்பன் மொழிந்ததை ஒத்திருந்தது கொசுவின் துரிதப்பாடு.

கொசுவுக்கு ஏன் வாசிக்கின்ற ஒரு மனிதன் மீது இத்தனை வன்மம் என்று தோன்றியது. என்னைக் கடித்தே, உதிரம் குடித்தே தீர வேண்டும் என்று வைராக்கியமா? ஒருவேளை வாக்கு உடன்பாடிலாத ஏதோவோர் அரசியல் கட்சியைச் சார்ந்ததாக இருக்குமோ? மாவட்ட, மாநில, தேசிய செயற்கு ழுவில் அங்கம் வகிக்கும் முரண் எழுத்தாளர் கொசு ஏதும் ஏவி இருக்குமோ, 'நாயின்ற மோனை சங்கரித்து வா' என!

அதற்கெல்லாம் வாய்ப்பே இல்லை. 4500 நூலகங்களுக்கு வாங்கி அடுக்க என எழுபது படிகளே வாங்கும் தரத்திலான நூல்கள் எழுதும் புறம்போக்கு எழுத்தாளர் மீது என்ன பெரிய காழ்ப்பு இருக்க இயலும்? ஆயிரம் படிகள் வாங்கி அடுக்கி விட்டாலும் வாசித்துவிடப் போகிறார்களா சினிமாப் பேய் பிடித்து அலையும் மக்கள் கூட்டத்தினர்?

'என்னை முன் நில்வன்மின் தெவ்விர் பலர்என்னை முன்நின்று கல்நின் றவர்'

எனும் குறட்பாவின் மறம் ஒளிரும் இனமானம் அல்லவோ மக்கள்?

வழக்கமாக வீட்டில் இருக்கும்போது ஒற்றை வேட்டி மட்டுமே உடுத்துபவன். கவனிக்கவும் - கைலி, லுங்கி, சாரம் அல்ல வேட்டி. பண்டு அவன் முன்னோர் அரைஞாண் கயிற்றில் முறுக்கிக் கட்டிய கோமணம் அணிந்து அதன்மேல் ஒற்றை ஈரிழை வடசேரிக் கைத்தறி வேட்டி உடுத்தினார்கள். கோமணம் எனும் எம்மொழிச் சொல் பொருளாகவில்லை எனில் கோவணம் அல்லது கௌபீனம் எனக் கொள்க. இளம் படைப்பாளி லக்ஷ்மி சரவணகுமாரின் சிறுகதை ஒன்றின் தலைப்பு, 'கட வுளின் பட்டுக் கௌபீனம்'.

சிறுவயதிலேயே கோவணம் கட்டப் பழகியிருக்கவில்லை. அப்பாவைப் பெற்ற ஆத்தா பறக்கை நெடுந்தெருக்காரி வள்ளியம்மை சொல்வார் - 'பண்டத்தைக் காக்கா கடிச்சுக் கொண்டு போயிராமலே!' என்று. உங்களுக்கு இப்போது தோன்றலாம், கோமணம் - கோவணம் - கௌபீனம் எம் மொழிச் சொல் என! ஆதித் தமிழ் அன்றி அயல்மொழிச் சொற் களை அயர்த்தும் மறந்தும் ஆண்டுவிடலாகாது என்ற அடம் ஆழ்மனதில் உண்டுதானே தமிழ்ப் பெருங்குடியினர்க்கு?

கோமணம் அல்லது கோவணம் அயற்சொல் இல்லை. ஆனால் கௌபீனம், சமற்கிருதப் பிறப்பு. பொருள் நீர்ச்சீலை, கங் கணம் எனப் பட்டியலிடுகிறது அயற்சொல் அகராதி.

பேரகராதி கீழ்க்காணும் பதிவுகளைத் தருகிறது.

கௌபீன சுத்தம் - அயற்பெண்களின் கூட்டுறவு அற்றிருக்கும் தூய தன்மை.
கௌபீன சுத்தன் - பிற பெண்களைச் சேராதவன்.
கௌபீன தோஷம் - பிற பெண்களைச் சேர்தலாகிய குற்றம்.
கௌபீனம் - கோவணம். Man's loin cloth.

கௌபீன சுத்தம் குறித்து நம்மில் பெரும்பாலோர் பேசாது இருப்பதே பெருமை. கோவணம் எனும் சொல் தேடிப் புறப்பட்டால் அங்கும் சுவையான செய்திகள் உண்டு.

கோவணம் - கௌபீனா - வடமொழி
கோவணமு - தெலுங்கு
கோவணி - துளு
கோவணம் - மலையாளம்
கோவணா - கன்னடம்
கோவணவன் - கோவணன்
கோவணன் - வசிஷ்டன், காமதேனுவைப் பொருந்தியவன். (சதுரகராதி) கோ+அணன். கோ - பசு.
கோவணாண்டி - கோவணம் மட்டுமே உடைய பிச்சைக் காரன். கதியற்றவன்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர் கோவணம் எனும் சொல் ஆள்கிறார். திருச்சாழல் பகுதியின் இரண்டாவது பாடல் -

'என்னப்பன் எம்பிரான் எல்லார்க்கும் தான் ஈசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறை நான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாகச் சாத்தினன் காண் சாழலோ'

என்று பேசும். சட்டப் பேராசிரியர் கா. சுப்ரமணிய பிள்ளை உரை எழுதினார். எந்தையாயும் எம் தலைவனாயும் எல்லார்க்கும் முதல்வனாயும் உள்ள பெருமான் கிழிந்த துணிகள் சேர்த்துத் தைத்த ஆடையைத் தான் கௌபீனமாகக் கொண்டது எதனால் எனின் நான்கு மறைகளையே பெரிய அரைநாணாகவும் நிலைபெற்ற மெய்ந்நூலில் நிறைந்துள்ள பொருள் தன்னையே கௌபீனமாகவும் தரித்தனன் என்றறிக.

பன்னிரு திருமறையில் ஒன்பதாம் திருமுறை, திருவிசைப்பா. திருவிசைப்பா அருளியவர் ஒன்பது பேர். அவரில் ஒருவர் கருவூர்த்தேவர். அவர் திரைலோக்கிய சுந்தரத்து இறைவன் சுந்தரேசுவரர், இறைவி அகிலாண்டேசுவரி ஆகியோரைப் பாடுகிறார் -

'மைஞ்ஞின்ற குழலாள்தன் மனந்தரவும் வளைதாரா(து)
இஞ்ஞின்ற கோவணவன் இவன் செய்தது யார் செய்தார்?
மெய்ஞ் ஞின்ற தமர்க்கெல்லாம் மெய்ஞ்ஞிற்கும் பண்பினுறு
செய்ஞ்ஞன்றி இவன்; கோடைத் திரைலோக்கிய
சுந்தரனே!'

என்று, காந்தாரப் பண்ணில். என்னென்று வியக்க எம் தமிழை?

கோவணம் எனும் சொற்பிறப்பே கோமணம், கோமணத் தாண்டி எனும் சொற்களும். 'கோமணம் பீ தாங்குமா?' என்பது நாஞ்சில் நாட்டுப் புகழ்பெற்ற சொலவங்களில் ஒன்று. ஒருவனிடம் கடன் கேட்டுப் போவோம். அவன் இல்லை என்பான். கையில் காசை வைத்துக்கொண்டுதானே தர மறுக்கிறாய் என ஆட்சேபம் சொல்வோம். அவன் திருப்பிக் கேட்பான் - 'இன்னா, கோவணத்துக்குள்ளே ஒழிச்சு வச்சிருக்கேன், வந்து எடுத்திற்றுப் போ' என்று.

சங்க இலக்கிய நூல்களேதும் கோவணம் எனும் சொல்லை ஆளவில்லை. திருக்குறளிலும் இல்லை. உடனே புறப்பட்டு வருவார்கள்! பண்டு தமிழனுக்குக் கோவணம் கட்டவும் தெரியாது! முப்பாட்டனார் மூலக்கருப்பராயன்தான் தமிழனுக்குக் கோவணம் தரிக்கக் கற்றுத் தந்தான் என.

எனக்குப் புத்தி பிடரியில் இருக்கிறது! கொசுவில் புறப்பட்ட நான் கோவணத்தில் வந்து நிற்கிறேன். கிடந்து வாசிப்பவருக்கு இடுப்புக்கு மேல் கழுத்துவரை கொசுவின் வேட்டைப் பிரதேசம். கனிமக் களவு போல் இது உதிரக் களவு. உத்தேசமாக 65 கிலோ முதல் 80 கிலோ வரை எடையுள்ள ஒரு மனித உடலில் 4.5 லிட்டர் முதல் 5.7 லிட்டர் வரை இரத்தம் - அரத்தம் - சோரி - சோரை - குருதி - செங்குருதி - செவ்விரத்தம் - செந்நீர் - பிளட் இருக்கும் என்பார்கள். அதில் ஒரு கொசு எவ்வளவு கடித்து உறிஞ்சிவிடப் போகிறது?

நமது பிரச்சினை துமியளவு செந்நீரைக் கொசு கடித்து உறிஞ்சிப் போனால் என்ன கெட்டுப் போகும் என்பதில் இல்லை. நாம் வாசிப்பதைத் தொந்தரவு செய்கிறது என்பதில். வலியே தெரியாமல் குடம் குடமாக நம் குருதியை உறிஞ்சிக் கொண்டுதானே உல்லாசமாக வாழ்கிறார்கள் சகல துர்கலா வல்லரும் வல்லியரும்? வலியுணர்ந்து நம் மயிர் ஏதும் அசைகிறதா?

கொசு என நாம் புழங்கும் சொல்லைக் கொதுகு என்பர் மலையாளத்தில். கொது என்பாரும் உளர். நாஞ்சில் நாட்டில் ஒலுங்கு என்றொரு சொல் உண்டு. ஈழத்திலும் கொசுவுக்கான மாற்றுச்சொல் ஒலுங்கு என்பதே என அறிவு.

கொசு என்ற சொல்லுக்கு, Mosquito, கொதுகு எனப் பொருள் தரும் பேரகராதி. அதில் பெருங்கொதுகு, சிறு கொதுகு என இருவகை. சிறிய கொசு போன்ற தேனீக்கள் சேர்த்து வைக்கும் தேன், கொசுத்தேன் எனப்பட்டது. கொசுத் தேனீ சேகரிக்கும் தேன். ஊசி மிளகாயைக் கொசு மிளகாய் என்று வழங்கினர். Bird Pepper என்கிறது ஆங்கிலம். கொசுக்களை விரட்டுவதற்காக மூட்டும் புகையைக் கொசு மூட்டம் என்றனர். கொசுவலை என்றனர் Mosquito-net எனும் வலையை. சிறிய உள்ளான் வகைப் பறவையைக் கொசு உள்ளான் என்பர்.

குசர் என்பதோர் உருதுச் சொல். Any thing extra obtained from shop keeper as a bargain என்பது பொருள். குசர் எனும் உருதுச் சொல் திரிந்து கொசுறு என்று இன்று வழங்கப் பெறுகிறது. மக்கட்பணி எனும் சொல்லோ மயானக் கொள்ளை எனப் பொருள் தரும் சொல்லாகப் பயன்பாட்டுக்கு வந்துவிட்டது சில பத்தாண்டுகளாக!

கொதுகு எனும் சொல்லுக்குப் பேரகராதி - Mosquito, gnat, fly, கொசுகு எனப் பொருள் தருகிறது. இன்று வழங்கப் பெறும் கொசுறுகளுக்குத்தானே வாக்காளர் பெருங்குடியினர் வாய் பிளந்து மல்லாந்து கிடக்கிறார்கள்!

ஒலுங்கு என்றால் பெருங்கொசுகு, Big Mosquito எனப் பொருள் தரப்பட்டுள்ளது. ஒலுங்கு எனும் சொல் உலங்கு எனும் சொற்பிறப்பு. உலங்கு எனும் சொல்லுக்கும் Gnat, Mosquito, கொதுகு என்றே பொருள் தரப்பட்டுள்ளது. கம்ப ராமாயண அகராதி, உலங்கு எனும் சொல்லுக்குக் கொசுகு எனப் பொருள் தருகிறது.

கம்ப ராமாயணத்தில் சுந்தர காண்டத்தில் பஞ்ச சேனாதிப திகள் வதைப்படலத்தில், இரண்டாம் பாடல் உலங்கு எனும் சொல் ஆண்டுள்ளது. அசோக வனம் கருக்கி, இராவணன் அனுமன் மேல் ஏவிய கிங்கரர்களை வதைத்து, இராவண னின் தலைமை அமைச்சர் பிரகதத்தன் மகன் சம்புமாலியைக் கொன்றும் ஆங்காரம் அடங்காமல் நின்ற அனுமனைப் போரில் எதிரிட இராவணன் தயாராகும் காட்சி. அப்போது பஞ்ச சேனாதிபதிகள் வேண்டுகோள் வைக்கிறார்கள்.

முதற்பாடல் -

'சிலந்தி உண்பது ஓர் குரங்கின் மேல் சேறியேல், திறலோய்!
கலந்த போரில் நின் கண்புலக் கடுங்கனல் கதுவ,
உலந்த மால்வரை அருவி ஆறு ஒழுக்கு அற்ற ஓக்கம்
புலர்ந்த மாமதம் பூக்கும் அன்றோ, திசைப் பூட்கை?'

என்பது. கோவை கம்பன் கழகம் பதிப்பின் உரை - வலிமை வாய்ந்தவனே! சிலந்திப் பூச்சியைப் பிடித்துத் தின்னும் ஒரு குரங்கின் மேல் போர் செய்யப் போவாயானால்; எட்டுத் திக்கு யானைகளை நீ எதிர்த்துப் புரிந்த போரில், உனது கண் களில் இருந்து கொடிய நெருப்புப் பொறி பறக்க கோடை வெயிலால் காய்ந்து போன பெரிய மலையில் அருவிகள் தம் வழியிலே செல்லும் ஓட்டம் அற்றுப் போனது போல, அற்றுப் போன மிக்க மதநீர் மீண்டும் தோன்றப் பெறும் அல்லவா?

இரண்டாவது பாடல் -

'இலங்கு வெஞ் சினத்து அம் சிறை எறுழ் வலிக் கலுழன்
உலங்கின் மேல் உருத்தென்ன, நீ குரங்கின்மேல் உருக்கின்
அலங்கல் மாலை நின் புயம் நினைந்து,அல்லும் நன் பகலும்
குலுங்கும் வன்துயர் நீங்குமால், வெள்ளியங் குன்றம்'

என்பது. உரை - விளங்குகின்ற கொடிய கோபத்தையும், அழகிய சிறகுகளையும், மிக்க வலிமையையும் உடைய கருடன்; ஒரு கொசுவின் மேல் கோபித்துப் போர் செய்வது போல, நீ அற்பக் குரங்கின் மீது போர் செய்யச் சென்றால், அசைந்தாடும் வெற்றி மாலை அணிந்த நினது தோள் வலி மையை நினைந்து கயிலை மலை இரவிலும் நல்ல பகலிலும் அச்சத்தால் நடுங்கும் கொடுந்துன்பம் நீங்கப்பெறும்.

வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும் கொசு போன்ற அனுமனுடன் போரிடச் செல்வதா என்பதே கேள்வி! இலங்கையில் நடக்கும் சம்பவம் ஆனபடியால், கம்பன் உலங்கு என்ற வட்டார வழக்குச் சொல்லைப் பயன் படுத்தினான் எனச் செம்மொழித் தமிழ்ப் பேராசிரியர்கள் உரைக்கக் கூடும்.

தேவாரத்தில் அப்பர் அடிகளாலும் கம்பனாலும் உலங்கு பாடப் பெற்றுள்ளது. எனவே அது இசுலாமிய அல்லது ஐரோப்பிய படையெடுப்புகளால் கொணர்ந்து தூவப்பட்ட இனம் அல்ல. அன்றேல் பீகார், உத்தராஞ்சல், உத்தர்காண்ட், சத்தீஸ்கர், அசாம், நாகாலாந்து, அருணாசலப் பிரதேசம், வங்காளம், ஜார்கண்ட் மாநிலங்களில் இருந்து அரத்தம் குடித்து உயிர் பிழைக்கப் புலம் பெயர்ந்து வந்தவையும் அல்ல.

எனில் கொது - கொதுகு - கொசு - கொசுகு - ஒலுங்கு - உலங்கு - எதுவாயினும் அது இறைவன் படைப்புத்தானே! அல்லது இயற்கையின் ஆக்கம்தானே! ஏன் அது இறை அல்லது இயற்கை மனிதக் குருதியை, விலங்கினங்களின் உதிரத்தை உணவாகக் கொண்டு உயிர்வாழப் படைக்கப் பெற்றது? கேட்டால் கொதுகு நம்மிடம் திருப்பிக் கேட்கும் தானே - விலங்கைப் பறவையை மீனை மனிதர் உணவாகக் கொள்வதில்லையா? பாலும் தேனும் முட்டையும் படைக்கப் பெறுவது மாந்தர் உணவுக்கா?

மனிதர் தனக்கு சாதகமில்லாத, அனுகூலமில்லாத எதுவா யினும் அதனைக் களையாகவும் பகையாகவும் பார்த்தார் கள். எமது பயிருக்கு இடைஞ்சலாக இருக்கும் எந்தத் தாவர மும் களை நமக்கு. 'இளையதாக முள்மரம் கொல்க'. 'Fittest will survive' இவைதானே நம் உலகியல் நீதி? தடை செய் யப்பட்டிருந்தாலும், அரசியல், சினிமா, அதிகார செல்வாக்கி ருந்தால் மானை வேட்டையாடித் தின்னலாம். சட்டமும் நீதி யும் அன்றாடங் காய்ச்சிகள் அனுசரிக்க வேண்டியவை. ஆனால் புலி மானை வேட்டையாடித் தின்றால் கொடுமை. 'கொன் றால் பாவம் தின்றால் தீரும்' என்பதுதானே நமது சமூகநீதி?

வளர்க்கும் கோழிக்குஞ்சினை கருடன் - கலுழன் - காய்சினம் - பருந்து - தின்னத் தூக்கிப் பறந்தால் அது அநியாயம். ஆனால் நாம் காடையை, கொக்கை, நாரையை, புறாவை, கானக்கோழியை, குயிலை வேட்டையாடித் தின்றால் அது விருந்து.

அணிலை, எலியை, அவயானை, முயலை, கீரியை, உடும்பை, காட்டுப் பன்றியை நாம் தேடிக் கொன்று தின்றால் வீரம். நமது கொய்யா, மா, பப்பாளிப் பழங்களை அணில் கொறித் தால் அது மாபாதகம்.

நாம் எதனையும் நியாயப்படுத்த முயலவில்லை ஈண்டு. நமக்கு எழும் ஐயங்களை, வினாக்களைப் பொதுவெளியில் வைக்கிறோம், அவ்வளவே!

ஒரு காலத்தில் ஆடும் மாடும் நாயும் பன்றியும் கழுதையும் குதிரையும் வனவாசிகள்தானே? உணவுக்கும் பாலுக்கும் வேலைக்கும் நாம் அவற்றைப் பயன்படுத்திக் கொண்டோம். அவற்றால் தீங்கு ஏதும் நேராதவரைக்கும் அவை நம் கூட் டணிக் கட்சிகள். நோய் பரப்பினால் எதிரணிக் கட்சிகள்.

யாவுமே இயற்கையின் படைப்புத்தானே? அன்னாசிப்பழம் நன்று, பேய்த்தாழை தீது! செங்கரும்பு நன்று, பேய்க்கரும்பு தீது! வெண்டை கத்தரி புடலை பீர்க்கு வாழை தெங்கு நன்று, திருகுக்கள்ளி, சப்பாத்திக் கள்ளி, கொடுக்கள்ளி, உடை, காராமுள் தீது! எமக்குப் பயன்பட்டால் தாராளமாக மகிழ்ச் சியாக எம்முடன் இரும். எமக்கு இடைஞ்சல், துன்பம், இடர் என்றால் அழிந்து போ! இம்மண்ணில் வாழ எமக்கு அனு கூலமில்லாத எதற்கும் அருகதை இல்லை என்பதே நமது நீதியா?

நாய் உன்மத்த நோய் பரப்புகிறது. மலேரியா, டெங்கு, சிக்கன் குனியா போன்ற நோய்களைப் பரப்புகிறது கொசு. இந்த நோய்க் கிருமிகளை கோழியோ, காகமோ, நாயோ, கொசுவோ உற்பத்தி செய்வதில்லை. ஆனால் பரப்புகிறது. மனிதனால் பரப்பப்படும் நோய்கள் எவையெவை என எவ ரேனும் கூறுவார்களா? புற்றுநோய், மாரடைப்பு, பக்கவாதம் முதலாய நோய்களை யார் பரப்புகிறார்கள்? மூல காரணங் களைக் கண்டுபிடித்து அழிக்க நமக்குப் போக்கில்லைதானே!

இந்தியாவில் ஓராண்டில் பாம்புக் கடியால், நாய்க்கடியால் இறப்பவர்கள் எத்தனை? இருசக்கர வாகனம், கார், பேருந்து விபத்துகளால் இறப்பவர்கள் எத்தனை? எய்தவன் இருக்க அம்பினை நோவது சரியா?

பதினான்கு ஆண்டுகளுக்கு முன்பு, இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் நினைவு ஆண்டுவிழாவுக்கு தென்காசி போயிருந்தபோது எனக்கு சிக்கன் குனியா பாதிப்பு ஏற்பட்டிருப்பதை உணர்ந்தேன். கவிஞர் கலாப்பிரியாவின் மூத்த மகள் எழுத்தாளர், மருத்துவர் அகிலாண்ட பாரதி என்னைப் பரிசோதித்து மருந்துகள் எழுதித் தந்தார். என் மகளும் அவரும் ஒரே சமயத்தில் மருத்துவம் பயின்றவர்கள். வலியுடன் கோவை திரும்பிப் பன்னாட்கள் வருந்திய காலம். சிக்கன் குனியா கொசு பரப்பும் நோய்தான்.

2020-ஆம் ஆண்டு தொடக்கத்தில் கொரானா நோய் பாதிப்பு எனக்கு. என் மகள் மயக்க மருந்தியல் மருத்துவர். மருமகன் எலும்பு சிகிச்சை மருத்துவர். எனக்கு, மனைவிக்கு, மகளுக்கு, மருமகனுக்கு, இரு பேரன்களுக்கு என யாவர்க்குமே நோய்த் தொற்று. கோவை E.S.I.C. மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு ஏழு நாட்கள் ஆங்கே சிகிச்சையில் இருந்தேன். மீண்டபடியால்தானே இதை இன்று எழுதிக் கொண்டிருக்கிறேன். உலகத்தையே உலுக்கிப் பல உயிர்களை உதிர்த்த அசம்பாவிதம் அது.

பெரிய அளவில் மருந்துகள் தயாரித்து வைத்துக்கொண்டு பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளை நோய்களை முனைந்து பரப்புகின்றன என்று ஊடகங்கள் பூடகமாகப் பேசுகின்றன. அரசியலும் அதிகாரமும் வணிகமும் தரகும் சினிமாவும் மனித மேம்பாட்டு மார்க்கங்களும் இறைப்பணி நிறுவனங்களும் ஆற்றும் மர்மச் செயல்பாடுகளை நாம் ஏதறிவோம்.

சிலசமயம் தோன்றும், எல்லாம் சரி, உனக்குப் புத்தி எங்கே போயிற்று என! மாலை நடைப்பயிற்சி போகும்போது உத்தேசமாகத் தினமும் 4200 காலடிகள் நடப்பேன். என் ஒரு காலடி 0.71 மீட்டர். நடக்கப் புறப்படும்போது ஏதும் சில்லறை சாமான் வாங்கச் சொல்லி அனுப்புவாள் மனைவி. அப்படியொரு நாள் வீட்டு உபயோகப் பொருள்கள், பல சரக்குகள் விற்கும் மால் ஒன்றினுள் நுழைந்தேன். பலவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டு - பூசணிக்காய்க் கீற்று முதல் சாராயக் கலப்பில்லாத ஒயின் வரை - நடந்த என் கண்களில் கன நீள் சதுக்கமான ஒரு லிட்டர் கொள்ளளவுள்ள டெட்ரா பேக்கிங் ஒன்று கண்பட்டது. ஆர்வத்துடன் எடுத்துப் பார்த்தேன். ஒரு லிட்டர் மோர். விலை 85 பணம். பக்கத்து மாநில அரசு ஆதரவு பெற்ற நிறுவனத் தயாரிப்பு. மோர் பேக்கிங் செய்யப்பட்டு எட்டு மாதம் ஆகியிருந்தது. மேலும் நான்கு மாதங்கள் சென்றபின்னான காலாவதி தேதியும் இருந்தது. படைத்தவனே என் மனம் கூவியது. ஒருவேளை 18 வருடப் பழைய விஸ்கி என்பதுபோல் இனி மோரும் வந்துவிடக் கூடும். நல்ல வேளையாக இனிப்பு தயாரிக்கும் நிறுவனங்கள் அச்சிட்டு விளம்பரம் செய்வதுபோல் சுத்தமான பசு நெய்யில் தயாரிக்கப்படுவது என்பதுபோல, சுத்தமான பசும் பாலில் பசுமோர் உறையூற்றிக் கடையப்பட்டது எனும் அறிவிப்பு இல்லை.

விருப்பு வெறுப்பின்றி யோசித்துப் பாருங்கள், ஓராண்டுக்கு முன்பு உறையூற்றிக் கடையப்பட்ட மோர் என்பதை! 'காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசைப்படுத்த தயிர்' ஓராண்டுவரை பருகத் தகுந்தது எனில், அது கெடாதிருக்க என்னென்ன சேர்மானங்கள் சேர்க்கப்பட்டிருக்கும்? இஞ்சிக்கும் பூண்டுக்கும் பச்சை மிளகாய்க்கும் ஆறுமாத காலாவதி தேதியுடன் விழுதுகள் வந்துவிட்டன. அடுத்து ஒரு சொற்றொடர் எழுத மனம் பரபரக்கிறது. அடக்கி வாசிக்க முயல்கிறேன்! 1985 - வாக்கில் பம்பாய் மாநகரின் புறப்பகுதியான நவிமும்பை பகுதியில், நெரூல் எனும் இடத்தில், வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில், 1 BHK வீட்டில் தங்கியிருந்தபோது நான்கு பேர் கொண்ட எம் குடும்பத்தை சின்னம்மை தாக்கியது. தரை வெளுக்குமுன் தலையில் துவர்த்து போட்டு மூடிக் கொண்டு பால் பூத் போய் வருவேன். சிறுவயதில் அம்மன் கண்டிருக்கிறது. பொன்னுக்கு வீங்கி எனும் அம்மன் கட்டு வந்திருக்கிறது. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, தனது 'மலரும் மாலையும்' எனும் கவிதைத் தொகுப்பில், 'சிரங்கு' எனும் தலைப்பில் நான்கு வெண்பாக்கள் எழுதியுள்ளார். அவற்றுள் முதல் வெண்பா -

'செந்தில் குமரா! திருமால் மருகா! என
சிந்தை குடிகொண்ட தேசிகா! – நொந்த இம்
மெய்யிற் சிரங்கை விடியு மட்டும் சொறியக்
கையிரண்டு போதாது காண்'

என்று. சிரங்குக்கு சொறிசிரங்கு, வங்கு எனும் மாற்றுப் பெயர்களும் உண்டு. வந்தால் மூன்று மாதம் அகலாதிருக்கும். பத்து வயதில் பட்டிருக்கிறேன் பாடு. பழையாற்றங்கரை வழியாக நான்கு மைல் நடத்திக் கூட்டிக் கொண்டு போய் தெரிசனங்கோப்பு எனும் கிராமத்தில் இருந்த ஸ்ரீ சாரதா ஆயுர்வேத மருத்துவமனையின் வைத்தியர் மகாதேவ ஐயரிடம் காட்டி எண்ணெய் வாங்கித் தந்தாள் அம்மா.

பம்பாயில் வாழ்ந்தால் ஒருமுறையாவது மஞ்சள் காமாலை வராது போகாது. வயிற்றுப் போக்கு, வயிற்றிளைச்சல், அமீபியாஸிஸ் சர்வ சாதாரணம். சின்ன வயதில் ஈளை - இருமல் - இளைப்பு நோயும் இருந்தது. என் சிறுகதை 'முள்ளெலித் தைலம்' வாசிக்கலாம் மேல் விவரம் வேண்டுவோர். தெரு நாய் இரண்டு வெவ்வேறு முறை கடித்திருக்கிறது. தண்ணீர்ப் பாம்பு கடி வாங்கியதுண்டு. காலில் உடைமுள், காராமுள், நெருஞ்சிமுள், கள்ளி முள் குத்தியதுண்டு. கண்ணாடிச் சில் பூறியதுண்டு. இடது கை மணிக்கட்டில் மண்வெட்டி பட்ட தடம் இன்றுமுண்டு. இரத்த அழுத்தம், நீரிழிவு காணாத மாந்தருண்டா? இதயத்தின் அடைப்புக்கு இருபத்தைந்து ஆண்டுகளாக ஸ்டென்ட் இருக்கிறது. சிக்கன் குனியாவும் கொரானாவும் கண்டாயிற்று.
இவற்றுள் சிலவோ பலவோ பலரும் பட்டிருப்பார்கள். வாழ்க்கை என்றால் யாவும் அனுபவித்தே ஆகவேண்டும். பட்டுத்தான் தேற வேண்டும். ஊரில் சொல்வார்கள் - 'அரிசிப் புழு தின்னாதவனும் இல்லை; அவுசாரி கையில் சாப்பிடாதவனும் இல்லை' என்று. தெரிந்தவர் தேர்க!

திருக்குறள் மொத்தம் 1330 பாக்களில் நோய் எனும் சொல் ஆளப்பட்ட குறட்பாக்கள் 36. 'நோய்ப்பால' எனக் குறித்த தனித்த குறளும் உண்டு. மருந்து அதிகாரத்துக் குறள் ஒன்று பேசும் -

'நோய் நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்'

என்று.

பல நோய்களையும் மனிதரே மனிதருக்குப் பரப்புகிறார்கள், அறிந்தும் அறியாமலும். அதற்காக தெருநாய்க்கு வழங்கும் நீதி இங்கே செயல்படுமா? நான் தற்குத்தறம் - திண்டுக்கு முண்டு பறைவதாகக் கொளல் வேண்டா! எந்த வெளிநாட்டு அறக்கட்டளையின் பெருநிதியம் பெற்றுக்கொண்டு 'கொசு சன்மார்க்க சங்கம்', 'நாய் பாதுகாப்பு மையம்' தொடங்குவ தும் நம் நோக்கமல்ல. எந்த வெளிநாட்டு இலக்கிய பவுண் டேஷன் முகவரியும் அறியோம் யாம்!

இன்று பணியப்பெறும் வீடுகளில் எல்லா கதவு யன்னல் களுக்கும் கொசு பாதுகாப்பு திரை உண்டு. கட்டிலுக்குக் கொசுவலை. கொசு விரட்டி ஊதுவத்திகள். ஆடையில் தடவும் திரவங்கள். மேனியில் பூசும் கிரீம்கள். பேட்மின்டன் பேட் போல, பேட்டரியில் இயங்கும் அதிர்வுக் கொல்லி உண்டு. சாக்கடையை ஒழிக்க, கழிவுநீக்க கால்வாயை சுத்தம் செய்ய, சீரமைக்க வழி இல்லை. ஆனால் கொசு உற்பத்தியாகும் சாக்கடைமீது இரசாயனங்கள் தூவுவோம்.

சாயங்காலம் ஐந்தே முக்காலுக்கு அனைத்து இல்லங்களி லும் கதவும் யன்னல்களும் மூடப்பட்டு விடுகின்றன. கொசு புகுந்துவிடும் என்பதால். நானறிய பல வீடுகளில் யன்னல் கள் எப்பொழுதும் எந்நாளும் திறக்கப்படுவதே இல்லை. பெயின்ட் அடிக்கும்போது திறக்கப்படும் போலும். பிற கெதற்கு காலதர் - சாளரம் - யன்னல் - ஜன்னல் வைத்து வீடு கட்ட வேண்டும்?

இதையெல்லாம் எழுதுவதன் மூலம் நான் எதையும் நிறுவ முற்படவில்லை. எனக்கேற்படும் கேள்விகளை வெளிப்படை யாக முன்வைக்கிறேன். எதற்கும் தீர்ப்பெழுத நாம் யார்? குற்றம் செய்யாதவர் கல்லெறிக எனப் புகலும் விவிலிய வாசகமும் நினைவில் உண்டு.

'புலால் மறுத்தல்' அதிகாரத்துக் குறள் தெரியும் -

'கொல்லான் புலால் மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்'

என்று. கொல்லான் புலால் மறுத்தானை அவனால் கொன்று தின்னப்படும் கோழி, ஆடு, மாடு, பன்றி முதலியவை மட்டுமே அல்ல தொழும். எல்லா உயிரும் தொழும்! தெரியும்தான், அறிவோம்தான், உணர்வோம்தான்! ஆனால் செய்வதென்? ஞாயிற்றுக்கிழமையானால் பையைத் தூக்கிக்கொண்டு கறிக் கடைக்கும் மீன் சந்தைக்கும் ஓடுகிறோம்தானே!

'துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்'

என்ற திருக்குறளும்,

'உண்ணற்க கள்ளை உணில் உண்க சான்றோரால்
எண்ணப்பட வேண்டா தார்'

என்ற குறளும் அறியாதவரா நாம்? 1972-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் இதை எழுதுகிற 2026 மே மாதம் வரை அதைப் பொருட்படுத்தாமல்தானே வாழ்கிறேன்!

'தன் ஊன் பெருக்கற்குத் தான் பிறிது ஊன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்'

என்று கேட்பதும் திருவள்ளுவர்தானே!

ஆன்மீகச் சொற்பொழிவுத் தொழில் முனைவோரில் பலரும் மேடையில் ஜீவகாருண்யம் பேசிவிட்டு இரவு உணவாக பக்கெட் பிரியாணியும் சவர்மாவும் சிக்கன் தந்தூரியும் கரிமீன் பொள்ளிச்சதும் தின்பதை யார் என்ன செய்ய இயலும்?

தீவிரமாக வாசித்துக் கொண்டிருக்கும் இந்த முற்பகலில், காதருகே வந்து ராம நாம சங்கீர்த்தனம் பாடிக்கொண்டு உட்கார்ந்து கடிக்கத் தோதான இடம் தேடும் இந்த ஒற்றைக் கொசுவை அடித்து வீழ்த்தி விட்டால் அது எமக்கு அமைச்ச ரவையில் இடம் பிடித்ததைப் போல.

என்றாலும் ஒரு வினா! இந்தக் கொசுக்கள் அறியாவா, உண வுக்காக, உயிர்வாழ்தலுக்காக இரத்தம் குடிக்க முயலும் வேளையில் மனிதக் கரங்களாலோ, விலங்குகளின் வாலாலோ, பூச்சிக்கொல்லி மருந்துகளாலோ செத்துப் போக மாட்டோமா என்று! கடவுள் அவற்றுக்கு அந்த அறிவைத் தரவில்லையா?

தெரிந்தால்தான் என்ன செய்கிறோம்? கொலை செய்கிறவர், வன்புணர்வாளர், கொள்ளையடிப்போர், வரி ஏய்ப்போர், சுரண்டுவோர், ஏமாற்றுவோர் அறிய மாட்டாரா அகப்பட்டால் தண்டிக்கப்படுவோம் என? ஆறறிவுடன்தானே விடாது நாம் வாக்களிக்கிறோம் மக்கள் விரோத சக்திகளுக்கு? சில்ல றைப் பரிசுப் பொருட்கள் பெறுவதற்கான நிதி எவரது என அறியோமா?

'அஞ்சுவது அஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்'

என்பது அறிவுடைமை அதிகாரத்துத் திருக்குறள். நாம் அறி வுடையவர்தாமா?

என்ன சொல்ல முயல்கிறேன், என்னதான் தீர்வு, எனது உத்தேசம் என்ன என்று கேட்கலாம் நீங்கள். எட்டுப்பத்து ஜெர்மானிய, பிரஞ்சு, இத்தாலிய, ரோமன், ஜப்பானிய, சீன, கொரிய, ஸ்வீடிஷ், எத்தியோப்பிய, ரஷ்ய தத்துவ மேதை களின் பெயர் சொல்லும் தரத்துக்கு எனக்கு விபரம் போதாது. என்றாலும் திருமூலரின் அறிவுரை எடுத்தாளலாம்.

'அவ்வியம் பேசி அறம் கெட நில்லன்மின்
வெவ்வியன் ஆகிய பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்வியர் ஆகிச் சிறந்து உண்ணும்போது ஒரு
தவ்வி கொடு உண்மின் தலைப்பட்டபோதே'

பாடல் - திருமந்திரம் எண். 196

அவ்வியம் - அழுக்காறு, வஞ்சகம். வெவ்வியன் - கொடிய வன். வவ்வன்மின் - கவராதீர். செவ்வியர் - நேர்மையாளர். தவ்வி - அகப்பை, மலையாளத்தில் தவி.



nanjilnadan@thaiveedu.com



கம்பனின் கருவூலம் திறந்து...

- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

> ***“யாராலும் கடந்துபோக முடியாத ஊழ்வினைப் பயன் தானாக ஒருவரைச் சேர்வதைப்போல, அந்த மான் அவர்கள் முன்னே வந்து நின்றது என அழகானதொரு உவமையை இங்கே கம்பர் எடுத்தாண்டுள்ளார்.”***

இராவணன், கேட்ட மங்கையான சீதையை மறந்திலா தானாக அவளைக் கவர்ந்துவரும் பொருட்டு மாரீசனை மாய மானாகச் சென்று அவளை மயக்குமாறு வற்புறுத்துகிறான். இராவணனுக்கு மாரீசன் எத்தனையோ வழிகளில் அறிவுறுத்து கிறான். எதையும் கேளாத இராவணன் பெரிதும் வற்புறுத்தி மாரீசனைத் தனது விருப்பத்திற்கு உடன்படவைக்கின்றான். இச்செய்திகளைச் சென்ற மாதத் தாய்வீடு இதழில் கம்பரின் கவித்துவத்துடன் அறிந்துகொண்டோம். இந்த இதழில், கம்ப ராமாயணம், ஆரணிய காண்டம், மாரீசன் வதைபடலத்தின் இறுதிப்பகுதியில் நிகழ்வனவற்றைத் தேர்ந்தெடுக்கப்பட்ட கம்பரின் கவிதைகளோடு சுவைத்து மகிழ்வோம். இராவண னின் வற்புறுத்தலுக்காக இணங்கிய மாரீசன் தான் இறந்துபடு வது திண்ணம் என்று கருதி மனம் குலைந்தாலும் இராவணனின் கட்டளையை மீறமுடியாதவனாகி இராமனுள்ள இடத்தை அடைகின்றான். மாரீசன் முன்னர் இருதடவை இராமனிருக்கு மிடத்துக்குச் சென்றிருக்கின்றான். இது மூன்றாவது தடவை. அவன் அங்கே சென்றதை மாச்சீராகிய அளவடி நான்கு கொண்ட கலிவிருத்தங்களால் கம்பர் பாடியுள்ளார்.

தன்மா னமிலா ததயங் கொளிசால்
மின்வா னமும்மண் ணும்விளங் குவதோர்
பொன்மான் உருவம் கொடுபோ யினனால்
நன்மா னனையாள் தனைநா டுறுவான்

கம்ப. ஆரணிய. 772

தன்மானம் இலாத - தனக்கு நிகரில்லாத, தயங்கு ஒளிசால் - மிகுந்த ஒளிவீசுகின்ற, மின்வானமும் மண்ணும் விளங்குவ - மின்னல்போன்ற தனது உடலின் ஒளியால் வானமும் மண்ணும் ஒளி பெருகும் படியாக, ஓர் பொன்மான் உருவம் கொடு போயினனால் - மாரீசன் ஒரு பொன்மானின் உருவத்தை எடுத் துக்கொண்டு போய், நன்மான் அனையாள்தனை நாடுறுவான் - சிறந்த மான் போன்றவளான சீதை தனது உருவத்தைப் பார்த்து மயங்கி விரும்புமாறு அவளின் எதிரிலே சென்றான். பொன்மானின் ஒளியை வருணித்த கம்பர், சீதையை நன்மான் என நயம்படக் குறிப்பதை நோக்கலாம். நன்மான் போன்ற சீதை தன்னை விரும்பும்படியாக மாரீசன் தனது மாயையி னாற் பொன்மான் வடிவம் கொண்டு போனான் என்பதாம்.

அந்தப் பொன்மானைக் கண்டு ஈர்க்கப்பட்டு அந்த வனத்தி லேயுள்ள மற்றைய மான்களெல்லாம் அதன் பின்னே அங்கே வருகின்றன.

பொய்யா மெனவோ துபுறஞ் சொலினால்
நையா விடைநோ வநடந் தனளால்
வைதே விதன்வால் வளைமென் கையெனும்
கொய்யா மலரால் மலர்கொய் குறுவாள்

கம்ப. ஆரணிய. 774

வைதேவி தன் வால்வளை மென்கையெனும் - சீதை தனது தூய்மையான வளையல்களை அணிந்த மென்மையான கைகளாகிய, கொய்யா மலரால் - பறிக்கப்படாத தாமரை போன்ற மலர்களினால், மலர்கொய் குறுவாள் - பூக்களைப் பறித்துக்கொண்டு, பொய்யாம் எனவோது புறம் சொலினால் - இவளுக்கு இடை உண்டென்பது பொய்யே என்று பிறர் சொல் வதற்கேற்ப, நையா இடை நோவ நடந்தனளால் - மெலிந்த இடை வருந்த நடந்து வந்தாள்.

சீதையின் கையைப் பறிக்கப்படாத மலரென உருவகித்து, அந்த மலரால் மலர்பறித்து வந்தாள் என்று, கொய்யா மலரால் மலர்கொய் குறுவாள் என்னும் கம்பரின் சொல்நயம் இச்செய் யுளுக்குச் சிறப்புச் சேர்க்கிறது.

கேடு வருவதற்கு முதற்குறியாக, இதுவரை ஒருநாளும் மனதில் நினைத்துப் பார்த்துமிராத காட்சியைச் சிலர் கனவில் காண் பதுபோல, அப்போது சீதை தனக்கு வரவிருக்கின்ற துன்பத் தின் முதற் குறியாக அப்பொன்மானைக் காண்கிறாள். இது



tg.theeban@gmail.com

மாய மான் என்பதை அறியாத சீதை அதனிடத்தே விருப்பம் கொள்கிறாள். இராமனிடம் வந்து அந்த மானைக் குறித்துச் சொல்லி அதனைப் பிடித்துத் தரும்படி கேட்கிறாள். இப்படிப் பட்ட மான் உண்மையாகவே இவ்வுலகத்தில் இருக்க முடியுமா என்று ஆராயாதவனாக இராமனும் அந்த மானைப் பார்க்க ஆவல் கொள்கிறான். ஆனால் இலக்குமணனுக்கு ஐயம் தோன்றுகின்றது. 'அந்த மானின் பண்பு இயல்பானதொன் றல்ல. மாயை உருவமாக இருக்க வேண்டும்' என்று, அதனைப் பார்க்கச் செல்ல நினைக்கும் இராமனது அந்த ஆசை தவ றென இலக்குமணன் சுட்டிக்காட்டுகிறான். 'இந்த உலகத்தில் பல்லாயிரங்கோடி உயிர்கள் இருக்கின்றன. இல்லாதன எது வுமில்லை. ஐயங்கொள்ள வேண்டியதில்லை.' என்று இலக்கு மணனுக்கு இராமன் மறுமொழி கூறுகிறான். 'நீங்கள் இருவரும் இப்படிப் பேசிக்கொண்டிருக்க அந்த மான் போய்விடுமே,' என்று சீதை வருந்துகிறாள். அதனால் அந்தப் பொன்மானைப் பார்ப்பதற்காக இராமன் செல்கிறான். அதனைக் கம்பர் இவ்வாறு கூறுவார்:

அனையவள் கருத்தை யுன்னா வஞ்சனக் குன்ற மன்னான்
புனையிழை காட்ட தென்று போயினான் பொறாத சிந்தைக்
கனைகழற் றம்பி பின்பு சென்றனன் கடக்க வொண்ணா
வினையென வந்து நின்ற மானெதிர் விழித்த தன்றே

கம்ப. ஆரணிய. 785

அனையவள் கருத்தை உன்னா - அங்ஙனம் வருந்திய சீதை யின் மனநிலையைக் கருத்தில் கொண்டு, அஞ்சனக் குன்றம் அன்னான் - மைநிறமான மலையைப் போன்ற இராமன், புனையிழை காட்டு அதென்று போயினான் - பெண்ணே அந்த மானைக் காட்டுக எனக்கேட்டு, அவள் பின்னே செல்கிறான், பொறாத சிந்தைக் கனைகழற் தம்பி பின்பு சென்றனன் - அவர்களது செயலைப் பொறாத மனத்தையுடையவனாக, ஒலிக்கின்ற வீரக் கழல்களையுடைய தம்பி இலக்குவனும் அவர்கள் பின்னே செல்கிறான். கடக்க வொண்ண வினையென வந்து நின்ற மானெதிர் விழித்த தன்றே - அப்போது, கடக்க முடியாத ஊழ்வினைப் பயனைப்போல அந்தப் பொன்மா னானது அவர்களின் எதிரே வந்து நின்று அவர்களை மருட்சி யுடன் பார்த்தது. அவர்கள் பொன்மானைத் தேடிப் போவ தற்கு முன்பே அது அவர்கள் முன்னே வந்து நின்றது என்ப தற்குக் கம்பர் கூறும் உவமை சிறப்பானது. 'யாராலும் கடந்து போக முடியாத ஊழ்வினைப் பயன் தானாக ஒருவரைச் சேர் வதைப்போல, அந்த மான் அவர்கள் முன்னே வந்து நின்றது' என அழகானதொரு உவமையை இங்கே கம்பர் எடுத்தாண் டுள்ளார்.

சீதை அந்த மானைப் பிடித்துத் தரும்படி இராமனை வேண்ட, அது மாயமான் என இலக்குவன் தடுக்க. 'அது மாயமானாக இருந்தால் எனது அம்புக்கு இரையாகும். உண்மையான மானாக இருப்பினும், மாயமானாக இருப்பினும் அதனைப் பிடிக்க முயல்வதில் தீங்கில்லை' என்று இராமன் கூறுகின் றான். எதனையும் சீர்தூக்கிப் பாராமல் செய்வது தகுதியன்று என இலக்குவன் தடுக்க, இராமன் அதனை மறுக்க, இலக் குவன் தான்சென்று அதனைப் பிடித்து வருவேன் எனப் புறப் படுகின்றான். இலக்குவன் தனது கருத்துக்குத் தொடக்கத்தி லிருந்தே மாறுபடச் சொல்லி வருவதால் அவனிடம் நம்பிக்கை இல்லாமல் கோபத்தாலும் சோகத்தாலும் கண்ணிலிருந்து நீர் வழிய, 'நீயே போய்ப் பிடித்துத் தரமாட்டாயா?' என்று இரா மனிடம் கேட்டுவிட்டுச் சீதை அங்கிருந்து விலகிச் செல்கிறாள்.

போனவள் புலவி நோக்கிப் புரவலன் பொலன்கொள் தாராய்
மானிது நானே பற்றி வல்லையின் வருவன் அன்றே
கானியல் மயிலன் னாளைக் காத்தனை இருத்தி யென்னா
வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரைய லுற்றான்

கம்ப. ஆரணிய. 797

போனவள் பு
லவி நோக்கிப் புரவலன் - அவ்வாறு சொல்லிவிட்டுச் சென்ற சீதையினது கோபத்தைப் பார்த்த இராமன் சீதையை நோக்கி, பொலன்கொள் தாராய் - அழகு கொண்ட

மாலையை அணிந்தவளே!, மானிது நானே பற்றி வல்லை யின் வருவன் அன்றே - இந்த மானை நானே போய்ப் பிடித் துக்கொண்டு விரைவில் வருவேன் எனச் சொல்லிவிட்டு, கான் இயல் மயில் அன்னாளை - வனத்திலே இருக்கின்ற மயிலைப் போன்ற சீதைக்கு, காத்தனை இருத்தி என்னா - காவலாக இருப்பாய் என்று இலக்குவனை வேண்டிக்கொண்டு, வேனகு சரமும் வில்லும் வாங்கினன் விரையல் உற்றான் - வேல் போன்ற கூர்மையான அம்புகளையும், வில்லையும் எடுத்துக் கொண்டு இராமன் விரைந்து சென்றான். கார்மேகத்தைக் கண்டு களிக்கும் மயிலைப்போல இராமனது கார்வண்ண மேனியைக் கண்டு களிப்பவள் சீதை எனப் பொருள்பட, 'கான் இயல் மயில் அன்னாள்' என்று உவமை கூறுகின்றார் கம்பர்.

அங்ஙனமே இலக்குமணன் சீதைக்குக் காவலாக இருக்க இராமன் மானைத் தொடர்ந்து செல்கிறான். முன்னர் தம்மைத் தாக்குதற்கு வந்த அரக்கர் மூவருள் இருவர் இறந்துபடத் தப்பிச் சென்ற மாரீசனாகத்தான் இம்மாய மான் இருக்க வேண் டும் எனச் சந்தேகித்த இலக்குமணன் இராமனுக்கு நல்லதே நடக்கட்டும் என்று வாழ்த்தி அனுப்புகிறான். இராமன் மானைப் பிடிப்பதற்கு அதன் பின்னே செல்ல, அம்மாயமான் செய்த செயல்களைக் கம்பர் அழகாகப் பாடியுள்ளார்.

மிதித்தது மெல்ல மெல்ல வெறித்தது வெருவி மீதில்
குதித்தது செவியை நீட்டிக் குரபத முரத்தைக் கூட்டி
உதித்தெழு மூதை யுள்ள மென்றிவை யுருவச் சொல்லும்
கதிக்கொரு கல்வி வேறே காட்டிய தொத்த தன்றே!

கம்ப. ஆரணிய. 739

மிதித்தது மெல்ல மெல்ல - அந்த மாய மானானது மெல்ல மெல்ல நிலத்திலே அடிவைத்து நடந்தது, வெறித்தது வெருவி - பின்னர் மிரண்டுபோய் ஆவேசம் கொண்டது, - செவியை நீட்டி - காதுகளை மேலே உயர்த்திக்கொண்டு, குரபதம் உரத் தைக் கூட்டி - குளம்புகளை மார்போடு சேர்த்துக்கொண்டு, மீதில் குதித்தது - மேலெழும்பிக் குதித்தது, உதித்து எழும் ஊதை உள்ளம் என்றிவை - வேகமாக எழுந்து வீசுகின்ற ஊதைக்காற்றும், உள்ளமும் என்பன, உருவச் சொல்லும் கதிக்கு - தடையின்றி நேராக விரைந்து செல்லும் வேகத்துக்கு, ஒரு கல்வி வேறே காட்டிய தொத்த தன்றே! - வேறொரு வகை யைக் காட்டிக் கற்பித்ததுபோல அதனுடைய செயல்கள் இருந்தன என்கிறார்.

காற்றினதும் மனத்தினதும் வேகத்தைக் காட்டிலும் அந்த மான் வேகமாக ஓடிற்று என்பது இதனால் சொல்லப்படுகிறது. விரைவான வேகத்துக்குக் காற்றையும் மனத்தையும் எடுத்துக் காட்டாகச் சொல்வதுண்டு. அவற்றின் வேகத்துக்குப் புதிய தொரு வகையைக் கற்பிப்பதாக இந்த மானின் வேகம் இருந் தது என்பது கம்பரின் கருத்து. முதலில் மெல்ல மெல்ல நடந்த மான் பின்னர் காற்று வேகத்திலும், மனத்தின் வேகத்திலும் மிக்கதாக விரைந்து ஓடியது என மானின் செயலில் கம்பர் நுட்பத்தை வைத்திருப்பது சுவையானது. குரபதம் என்னும் விங்குகளின் குளம்புகளைக் குறிக்கும் வடசொல்லைக் கம்பர் எடுத்தாண்டுள்ளார்.

இராமன் அந்த மானைத் தொடர்ந்து செல்கின்றான். அது மலைமீது ஏறிக்குதித்தும், மேகங்களிடையே தாவிப் பாய்ந் தும், தொடுகின்ற அளவில் நெருங்கி வந்தும் பின்னர் தூரத் துக்கு ஓடிச்சென்றும் இராமனுக்குப் போக்குக் காட்டி அவனைத் தூரத்துக்கு இழுத்துச் சென்று கொண்டிருந்தது. அப்போது மானினுடைய உருவத்துக்கும் செயலுக்கும் உள்ள வெவ்வேறு தன்மைகளை எண்ணி, இலக்குமணன் கூறியதுபோல இது மாய மானாகத்தான் இருக்கவேண்டும் என்பதை இராமன் உணரத் தொடங்குகிறான். இராமனது மனப்போக்கை மாரீசன் அறிந்து இனி அவன் தன்னைப் பிடிக்க முயலாது, முடிக்க முயல்வான் என்பதை அறிந்து தப்பி ஓட முயல்கிறான். அக்க ணத்திலே இராமன் தனது வில்லிலிருந்து அம்பைச் செலுத்து கிறான்.



நெட்டிலைச் சரம் வஞ்சனை நெஞ்சுறப்
பட்ட தப்பொழு தேபகு வாயினால்
அட்ட திக்கினு மப்புற மும்புக
விட்ட ழைத்தொரு குன்றென வீழ்ந்தனன்

கம்ப. ஆரணிய. 806

நெட்டிலைச் சரம் - நீண்ட கூரிய இலை வடிவமான அந்த அம்பானது, வஞ்சனை நெஞ்சுறப் பட்டது - வஞ்சனையையுடைய மாரீசனது இதயத்திலே பொருந்தத் தைத்தது, அப்பொழுதே பகு வாயினால் - அப்பொழுதே மாரீசன் தனது பிளவுண்ட வாயினால், அட்ட திக்கினும் அப்புறமும் - எட்டுத் திசைகளிலும், அவற்றிற்கு அப்பாலும், புக விட்டு அழைத்து - தனது ஒலி செல்லும்படி 'ஏ சீதா! ஏ இலக்குமணா!' என உரக்கக் குரலை எழுப்பிக் கூப்பிட்டு அழைத்து, ஒரு குன்றென வீழ்ந்தனன் - ஒரு மலையைப்போலத் தனது இயற்கைப் பேருருவத்துடன் வீழ்ந்தான்.

மனைவியும், தம்பியும், இராமனுக்கு ஏதோ தீங்கு நேர்ந்து விட்டது என்று நினைக்கத் தக்கதாக மாரீசன் தனது குரலை இராமனது குரலைப்போல மாற்றிச் சீதையையும் இலக்குமணனையும் பெயரிட்டு உரத்த குரலில் அழைத்தபடி வீழ்ந்தான். அப்படி அழைத்தால் காவலில் உள்ள சீதையை விட்டு விட்டு இலக்குமணன் அண்ணனைக் காப்பாற்ற வருவான் என்பது இறக்கும் தருவாயில் கூட மாரீசனது தந்திரமாக இருந்தது.

இறந்து விழுந்து கிடந்த உருவத்தைப் பார்த்து மாயமானாக வந்தவன் மாரீசன் என்பதை இராமன் அறிந்து கொண்ட போது, தன் தம்பி இலக்குவனின் மதிநுட்பத்தைப் பெருமையுடன் எண்ணிப் பார்க்கிறான். மேலும்,

உழைத்த வாளி யுரம்புகப் புல்லியோன்
இழைத்த மாயையின் என்குர லாலிசைத்
துழைத்த துண்டது கேட்டயர் வெய்து மான்
மழைக்க ணேழையென் றுள்ளம் வருந்தினான்

கம்ப. ஆரணிய. 809

உழைத்த வாளி உரம் புக - வருத்தும் தன்மையான அம்பு மார்பில் நுழைந்த அளவிலே, புல்லியோன் இழைத்த மாயையின் - அற்பகுணமுடையவனாகிய மாரீசன் உண்டாக்கிய மாயையினால், என் குரலால் இசைத்து உழைத்தது உண்டு - நான் அழைப்பது போன்று என்னுடைய குரலால் கூவி அழைத்தது இருக்கிறதல்லவா? அது கேட்டு அயர்வெய்து மான் மழைக் கண் ஏழையென்று உள்ளம் வருந்தினான் - அதனைக் கேட்டு மழைபோலக் குளிர்ந்த கண்களை உடையவளும், பேதமை உடையவளுமான சீதை வருந்துவாளே என்று இவன் உள்ளம் வருந்துவான்.

மழைக்கண் ஏழை என்பது, மழைபோலக் கண்ணீர் சொரிந்து வருந்துவாள் என்றும் பொருள் கொள்ளலாம். சீதை துன்பப் படுவாள் என்னும் எண்ணம் ஒருபக்கத்திலும், தம்பி இலக்கு மணன் அவளுக்கு ஆறுதல் கூறுவான் என்ற எண்ணம் மறுபக் கத்திலுமாக இருக்கின்ற சிந்தையோடு இராமன் திரும்புகி றான். மாயமான் என்று அறியாமல் சீதை அதனிடத்து ஆசை கொண்டாள் என்பதால் அவளை ஏழை என்றார்.

மாரீசன் இங்கே தனது அம்பினால் மடிவதற்காக வந்த வனில்லை. இவன் வந்ததன் பின்னணியில் ஏதோ ஒரு துன்பம் நிகழ்வதற்கான ஒரு சூழ்ச்சி இருக்கிறது. அத்துன்பம் நிகழ்வ தற்கு முன்பே இங்கிருந்து சீதையும் இலக்குவனும் இருக்கும் இடத்துக்குச் சென்றுவிடுவதே நல்லது என்ற சிந்தையுடன் இராமன் தனது இடத்துக்குத் திரும்புகிறான். இத்துடன் மாரீசன் வதைப்படலம் நிறைவு பெறுகிறது.


(வளரும்...)



shanmugarajah@thaiveedu.com

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் & தாய்வீடு ஆதரவுடன்

மாவிலி மைந்தனின்
மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவும்
அவரது வரிகளில்
இசைப்பேழை வெளியீட்டு விழாவும்



அன்புடையீர்!
இவ்விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்து, எனது படைப்பாக்கப் பணிக்கு ஆதரவு நல்குமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.
அன்புடன்,
மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

03 மே, 2026, ஞாயிற்றுக்கிழமை

பி.ப 1 மணி - மாலை 5 மணி வரை

Scarborough Civic Centre
150 Borough Drive, Scarborough, M1P 4N6

தமிழ்வலை - 127


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

பெயர்:

முகவரி:

தொலைபேசி எண்:

மின்னஞ்சல்வரி:



தமிழ்வலை-127 வினா

இடமிருந்து வலம்

1 தென் கிழக்கு ஆசியாவில் ஓர் ஆறு
3 ஒழுங்கு
5 கண்ணகிக்கு சிலை எழுப்பிய இலங்கை மன்னன்
9 ஒரு புலத்துக்கு நேரில்சென்று ஆராயும் பணி
10 ஆளு
11 தடி
12 உண்ணு
13 உளம்
16 ஆதார நூற்பட்டியல்
17 முனிவர்கள் அணிந்த பட்டை ஆடை


மேலிருந்து கீழ்

1 சந்தேகம்
2 அருட்புலவர்
3 பிரி
4 முடிவுரை
6 விமானம்
7 பேர்போன இரசிய கதாசிரியர்
8 எஞ்சிய உணவு
11 குதிரை போல் கத்து
14 மீட்சி
15 தயிர் கடையும் கருவி

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
thamilvalai@thaiveedu.com
தொலைநகல்: 416 849 0594

Thaiveedu
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

தமிழ்வலை-126-க்கான விடைகள்



தமிழ்வலை-126 பெறுபேறுகள்

முன்னணிப் போட்டியாளர்

சுதர்சன் ஜெயலக்சுமி, மருதனார்மடம்.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
உமா கதிர், ஏஜக்ஸ்.
சுமதி முத்துராஜா, யாழ்ப்பாணம்

பரிசுபெறும் போட்டியாளர்

நாகேந்திரன் சிவானி,
ரொறன்ரோ.

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிவுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.



கடவுள் தெரிந்தெடுத்த அம்மா



வைத்தியசாலையில் அந்த அறை அமைதியாக இருந்தது. வெளிர் நீல நிறச் சுவர். சுவரில் ஒரு மணிக்கூடு, அதில் ஒவ்வொரு செக்கனுக்கும் தலை யாட்டும் ஒரு கோழி. வேறொன்றும் சுவரில் இருக்க வில்லை. அறையின் நடுவில் ஒரு வட்ட மேசை. அதில் நாட்காட்டி ஒன்றும் அழைப்பு மணி ஒன்றும் இருந்தன. மேசையின் ஒரு பக்கத்தில் ஒரு கதிரையும் எதிர்ப் பக்கத்தில் நான்கு கதிரைகளும் இருந்தன.

நாடிக்குக் கை கொடுத்தபடி ஒரு கதிரையில் அபர்ணா, எதிர்க் கதிரையில் உளவளத்துணையாளர் சாரதா. வேறு யாரும் அங்கிருக்கவில்லை.

'சொல்லுங்கோ' என்று பேச்சைத் தொடங்கினார் சாரதா.

'எனக்கு இந்த உலகத்தில வாழப்பிடிக்கேல்ல, ஏன் எனக்கு மட்டும்தான் இப்படி நடக்குது?'

கண்களால் வடிந்த கண்ணீரை சுட்டு விரலால் சுண்டி விட்டபடி கதிரையில் பின்னுக்குத் தள்ளி இருந்தாள் அபர்ணா. சாரதா அமைதியாகவே இருந்தார்.

'கலியாணம் செய்த நாளில இருந்தே பிரச்சனைதான். எல்லாரும் குழந்தை தங்கினால் சந்தோசப்படுறது. ஆனால், என்ர மாமியார் 'பிள்ளை பெற வெளிக்கிட்டிட்டியள் மிச்ச டொனேசன் காசு எப்ப தாறது?' எண்டுதான் கேட்டவ. எப்பவுமே எனக்குக் கவலைதான். தனிமை, பேச்சுத் துணைக்கு ஆரும் இல்லை.

சரி, வயித்தில குழந்தை தங்கிட்டுது, அதோட கதைச்சு ஆறுதல்படுவமெண்டு என்ர துன்பங்களையெல்லாம் என்ர பிள்ளைக்குச் சொல்லி ஒவ்வொரு நாளும் அழுவன்.

பிறக்கேக்க நல்ல அழகாய் பிறந்தாள். ஆனால், வயசுக்கு அவள் கதைக்கேல்ல. midwife டொக்டரிட்டைக் காட்டோணும் எண்டவ. அதுக்கு என்ர மாமியார், 'தாய் ஊமைக் கோட்டான்தானே, அதுதான் பிள்ளையும் கதைக்கேல்ல, அதுக்கேன் டொக்டர்?' என்று சத்தம் போட்டா. அயலட்டைகளும், 'அது முதல் பிள்ளை கொஞ்சம் பிந்தித்தான் கதைக்கும்' எண்டிச்சினம்.

ஆனால், அவள் கதைக்கவில்லை, நான் கூப்பிட்டாலும் திரும்பிப் பார்க்கவில்லை.

tg.theeban@gmail.com

கோயிலில மேளச்சத்தத்துக்குக் காதைப் பொத்திக் கொண்டு குழறினாள். ஒற்றைக் கதவுக்குள்ளால உள்ள போறதெண்டால் அவளுக்குப் பயம். மண்ணில கால் வைக்க மாட்டாள். நீலச் சட்டை மட்டும்தான் போடுவாள். எல்லாச் சாப்பாடும் சாப்பிடமாட்டாள். இடியப்பத்தைக் கண்டால் 'ஓ'வென்று குழறுவாள். ஒருவேளை அதைப் புழு என்று நினைக்கிறாளோ என்னமோ ?

நல்லா கோபப்படுவாள். சிலவேளை பாய்ந்து கடித்தும் விடுவாள்.

தலை இழுக்கிறது பல்லுத் தீட்டிறது எண்டால் பயம். எங்க போனாலும் ஒரே ஓட்டம். நானும் பின்னுக்கு ஓடிக் களைச்சுப் போட்டன்.

எல்லாரும் எங்களைப் புதினம் பார்த்திச்சினம். 'உதென்ன ஏலாத பிள்ளையோ ? வலசு குறைஞ்சதோ ?' என்று என் காதுபடவே கதைச்சினம். உதுகளை வீட்டில விட்டுட்டு வராமல் ஏன் விழாக்களுக்குக் கொண்டு வாறவை ?' என்று சினந்து கொண்டினம். குழந்தை பற்றிய என் கனவுக் கோட்டை சிதைந்து போனது.

வாறவை போறவைக்குக் கதை சொல்லி நான் களைச்சுப் போட்டன். ஊரில எம் கௌரவம் ஒருபடி குறைஞ்சு போச்சு என்று மாமி பேசினா.

ஒவ்வொரு நாளுமே போராட்டம்தான். எனக்கென்றால் நல்ல டொக்டரிட்டைப் பிள்ளையைக் காட்ட விருப்பம். ஆனால், அந்தளவு சுதந்திரம் எனக்கில்லை. பிள்ளைக்கும் நாலு வய சாகீட்டுது. நேசறிக்கும் போகேல்ல.

குழந்தைக்குத் திருநீறு போடுறது, வீட்டில செய்வினை எடுக்கிறது, வீட்டிற்குச் சாந்தி செய்யிறது என்று எத்தனையோ எல்லாம் மாமி செய்து பார்த்தா. ஒரு முன்னேற்றமும் பிள்ளையில இல்லை. காசுதான் எக்கச்சக்கமாக முடிஞ்சுது. என்ர நகையெல்லாம் இப்ப அடைவு கடையிலதான் இருக்குது.

கொஞ்சக்காலம் போக மாமி சொன்னா, 'நான் சாமியிட்டை வாக்குக் கேட்டனான். சாமி சொன்னது, ஏதோ தெய்வக் குறையிருக்கு, கோயிலுக்குக் கொண்டாங்கே, நாக்கில சூடு வைக்க எல்லாம் சரிவரும்' என்று.

ஆனால், எனக்குச் சரியான பயம். இருந்தாலும் மாமி அடம் பிடித்தா. எங்கட பரம்பரைக்கில்லாத வருத்தம், கடவுள் குறையாலதான் வந்திருக்குமென்று மாமி நம்பினா. கோயிலுக்குப் போற ஆயத்தங்கள் நடந்தன. என் எதிர்ப்பை ஆரும் பொருட்படுத்தேல்ல. பிள்ளையைத் துன்பப்படுத்திறதை என்னால தாங்க முடியாது. அதனால்தான் இந்த விபரீதமான முடிவை எடுத்தேன். மூச்சுப் பிடித்துக் கொண்டு எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிட்டுக் கை நகத்தால் மேசையில் கிறுக்கினாள் அபர்ணா.

'சரி அம்மா' என்று மௌனம் கலைத்தார் சாரதா.

'எனக்கு விளங்கியபடி உங்கள் குழந்தை ஓட்டிசம் என்ற நிலையில் இருக்கிறது. ஒரு வைத்தியர்தான் அதை உறுதிப் படுத்த வேண்டும். ஓட்டிசம் ஒரு நோய் இல்லை. நரம்பு சம்பந்தமான ஒரு நிலைமை. பரம்பரையிலும் ஆருக்கும் இருக்கலாம். இதற்கு திரபிகள் (therapy) உண்டு. நாங்கள் குழந்தைக்குரிய திரபிகளுக்கு ஆவன செய்வோம். நீங்கள் அதைச் சரிவரச் செய்தால் குழந்தையில் முன்னேற்றங்களைக் காணலாம். மனதைத் தளரவிடவேண்டாம்.

கடவுள் இந்தக் குழந்தையை உங்களிடம் தந்ததே நீங்கள் அதைச் சரிவர வளர்ப்பீர்கள் என்றுதான். நீங்கள் கடவுளால் தெரிவு செய்யப்பட்ட அம்மா என்று பெருமை கொள்ளுங்கோ.

பிள்ளையின் நிலைமைக்காக நீங்கள் மனம் சோரவேண்டாம். உங்களிற்குச் சகிப்புத் தன்மை, பொறுமை நிறையவே வேண்டும். பிள்ளையின் சிறிய சிறிய முன்னேற்றத்தைக் கண்டு பெருமையும் சந்தோசமும் கொள்ளுங்கோ. திரபிக்குப் போற இடத்தில உங்களை ஒத்த கன பெற்றோரையும் பிள்ளைகளையும் சந்திப்பீங்கள். அப்ப நீங்கள் இன்னும் தெளிவடைவீங்கள்.

சாரதாவின் கதையைக் கேட்ட அபர்ணா நிமிர்ந்து இருந்தாள். ஆனாலும், எதையோ கேட்டுவிட வேண்டுமென்று வாய் துடித்தது.

சாரதா தொடர்ந்தார்.

'உங்கள் வீட்டுக்காரரோடும் நாங்கள் கதைப்போம். விளங்கப் படுத்துவோம். நீங்கள் சொன்னவற்றை அவர்களிற்கு நாங்கள் சொல்லப் போவதில்லை. அதையிட்டு நீங்கள் யோசிக்க வேண்டாம். உங்கள் குழந்தையுடைய முன்னேற்றத்திக்கு நீங்கள் முக்கியமான ஆள். உங்களிற்கு ஏதும் கதைக்க வேண்டும் போல் இருந்தால் எப்பவும் என்னோடு கதைக்கலாம். இங்க வரோணுமென்றில்லை. விரும்பினால் வாங்கோ இல்லாவிடின் ரெலிபோனிலயும் கதைக்கலாம்.

'இப்படி ஓர் இடம், நீங்கள் எல்லாம் இருப்பது எனக்கு முந்தியே தெரிந்திருக்கலாம் 'என்றாள் அபர்ணா.

'இப்பவும் ஒன்றும் கெட்டுப் போகவில்லை' என்றார் சாரதா.

மணிக்கூட்டுக் கோழியும் தலையை ஆட்டியது.



Panchakalyany@thaiveedu.com



முல்லைச் சாரல்

ரஞ்ஜனி சுப்ரமணியம்

கப்பலில் இருந்து இறக்கி, கடலினுள் விடப்பட்ட அந்த ஆழ்கடல் ஆய்வுக்கலம் தன்னுடலின் நாற்பு றமும் இருந்து பிரகாசமான ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சியபடி கடலின் ஆழத்தை நோக்கி வேகமாகப் பய ணிக்கத் தொடங்கியது.

கடலின் பெரும் நீரழுத்தத்தினைத் தாங்கும் திறன் படைத்த அதன் டைட்டானியம் உடல் போலவே மனதாலும் உடலாலும் வலிமை பெற்ற ஆதவனும் அக்கலத்தினுள் அமர்ந்திருந்தான்.

'ஆதவ், நீ போய்வரும்வரை உனக்கான என் பிரார்த்தனை களுடன் காத்திருப்பேன். உனது ஒவ்வொரு பய ணத்தின் போதும் நான் உன்னுடன் மனதால் பயணிக்கிறேன். உன்னுடன் வருவதற்காகவே நான் ஆழ்கடல் கலத்தில் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறேன்'

ஆரணியின் மென்குரல் அவனுள் வியாபித்தது.

கப்பலில் இருந்து பறக்கும் முத்தமளித்து வழியனுப்பிய அவளை மானசீக நேசத்தோடு அணைத்துக் கொண்டான் ஆதவன். அவனது இயல்புகளை முற்றுமுழுதாக அறிந்தவள் என்பதால், அந்த மனஅணைப் பின் வழியாகக் கடத்தும் ஒவ்வொரு சொல்லையும் அவளால் எங்கிருந்தாலும் உணர முடியும் என்பதை அவன் அறிவான்.

துடிப்பும், இளமையின் அழகும், அறிவின் முதிர்ச்சியும் அவர்கள் இருவருக்குமான குணநலன்களாக அமைந்து இருந்ததால் புரிதல் மிகுந்த காதல் இணைகளாக வாழ்வு இனித்தது.

tg.theeban@gmail.com

அவளுடனான நினைவுகள் மனதில் முகிழ்க்க பரவசமான புன்னகை ஒன்று முகத்தில் மலர்ந்தது.

கடலுடன் இணைந்த வாழ்விற்காக இசைவாக்கமடைந்த அவனது உடலினையும் மனதினையும், டைட்டானியத்தின் இயல்புகளோடு அவள் ஒப்பீடு செய்வது வழக்கம். தாங்கும் வலு மட்டுமல்ல, நினைவுகளில் துருவேறாத கூர்மைப் புத்தி யும் எந்த உக்கிர சூழ்நிலையையும் எதிர்கொண்டு தாங்கும் மந்திர சக்தியும் அவனியல்பு என்பதையிட்டு அவளுக்கு மிகுந்த பெருமிதம் உண்டு .

அவளது கணிப்புகள் உண்மையானவை. ஆழ்கடலும் அழகிய கரையும் அவனது உலகு. ரசனை, மயக்கம், எது வேண்டுமா னாலும் வைத்துக் கொள்ளலாம். அங்கு எதிர்கொள்ள நேரும் எத்தகைய இடர்களும் அவனை மென்மேலும் வலிமையாக் குகின்றன என்பதும் உண்மைதான்.

எதனால் இத்தனை மோகம் ?

நீருலகு தனக்குள் புதைத்து வைத்திருக்கும் மர்மங்களி னாலா ? கரையில் ஆர்ப்பரித்து அலைவீசும் வெண்மையும், மத்தியில் அமைதியும், ஆழத்தில் கருமையும் கொண்ட அதி சயத்தாலா ? தன்னுள் அனைத்தையும் உள்வாங்கி விழுங்கி விடும் அகோரப் பசியினாலா ? தனது ஆழத்தின் கீழ் செந் தணல் குழம்புகளை ஒளித்து வைத்திருக்கும் பேரண்ட இரக சியத்தாலா ?

இவை எல்லாவற்றுடனும் கலந்து, காலம் அவனுக்களித்த அனுபவங்களே இந்த மாறாத ஈர்ப்புக்குக் காரணம்.

சின்னஞ்சிறு கழுத்தில் வெள்ளை நிற மணிகொண்ட அவ னது கறுப்புநிற ஆட்டுக்குட்டியை, கைவிடப்பட்ட பக்கத்து வீட்டின் பாழ்கிணறொன்று தனக்குள் இழுத்துக் கொண்ட சோகம் நெஞ்சில் உறைபனியாய் கவிந்த போது, நீரின் பயங் கரத்தை முதன்முதலாக உணர்ந்தான்.

அதே பாழ்கிணறு, யுத்தகாலத்தில் ஷெல்லடிக்குத் தப்பவென திக்குத் தெரியாமல் இருட்டில் பாய்ந்து வந்த தன் ஆருயிர் அப்பம்மாவை விழுங்கிய சோகம், அன்றைய நாளில் நீரின் மேலான கோபவெறியாக மாறி, அவனை அலைக்கழித்த தையும் நினைவின் ஆழத்தில் பதியமிட்டு வளர்த்திருந்தான்.

அதே நீரினைத் தனது பெரும் உடலெனக் கொண்ட கடலி னைக் கிழித்துப் பார்க்கும் வெறி, அந்நாளிலே அவனுள் வளர்ந்ததை யாருக்கும் தெரிவித்ததில்லை.

ஆனால் அனைத்தையும் உள்ளீர்க்கும் அக்கடலில், பெருங் கப்பல்கள் இலகுவாக மிதப்பதை அவதானித்த போது பிர மிப்புத் தோன்றியது.

அதுபோல, வாழ்வினை வடிவமைத்துக் கொள்ளும் விதமே துயரெனும் ஆழ்கடலில் மனித மனம் மூழ்காதிருக்கக் காரண மென அவனுணர்ந்த அருங்கணத்தில், கடல் மீது கொண்ட கோப வெறி மாறி, தீராத பெருங்காதல் மனதில் குடி கொண்டது.

கடலினைக் கிழித்து அதன் ஆழம் வரை பதிக்கும் ஆழ்கடல் நீரோடியாகத் தன்னை தகவமைத்துக் கொண்டவன், மெல்ல மெல்ல அந்த மர்ம அழகில் மயங்கி ஆட்கொள்ளப்பட்டான்.

இன்று, கப்சியூல் என அறியப்படும் ஆழ்கடல் ஆய்வுக்கலம் செல்லும் ஆழத்தினை ஒத்ததாக அவனது நினைவுகளும் அனுபவங்களும் மிகமிக ஆழமானவை.

புலம்பெயர முதல் அவனது இளமைக்கால சோகங்களை மறப்பதற்காக, கடலில் சென்று மீளாதவர்களை சடலமாக வேனும் மீட்க உதவி செய்த அனுபவங்களை மனது அசை போடத் தொடங்கியது.

அந்த உடல்களில் உயிருள்ள போது வாழ்ந்தவர்களில் சிலர், கடல் தொழிலுக்குச் சென்று சுழல்காற்றில் அகப்பட்டு மூழ்கியவர்கள். சிலர் கடல் குளிப்பிற்காகச் சென்று மாண்ட வர்கள். சிலர் மாளாத சோகத்தால் வேண்டுமென்றே தமது இன்னுயிரை நீத்தவர்கள்.

மனதில் எழுதி வைத்த உயிர்ப்பான கதைகளோடு மரித்த, அந்த உடல்களைச் சுமந்து வரும் போது, அக்கதைகள் உள்ளுணர்வின் வழி தன்னுள் கடத்தப்படுவதை அவன் உணர்ந்திருக்கிறான். அந்த நினைவுகளைத் தனதாக உள் ளீர்த்து வருந்தி இருக்கிறான். இவ்வாறு பல கதைகள் அவனுள்ளே.

ஆழ்கடல் நீர்மூழ்கும் சாதனங்கள் அணிந்து நண்பர்கள் சிலரோடு கடலில் பொழுதுபோக்கச் சென்ற ஒரு நாள் நினைவில் எழுந்தது.

அன்று நண்பன் ஒருவன் கடற்படுக்கையில் இருந்து மேல் நோக்கிச் செங்குத்தாக வேகமாக நீர் மிதப்புச் செய்ய, அழுத்த வேறுபாட்டால் குருதியில் நைதரசன் வாயுக்குமிழிகள் உருவாகி உடல் வலுவிழந்து மயக்கமுறும் தறுவாயில், திரு கோணமலை கடற்படைத் தளத்திலுள்ள உயர் அழுத்த ஆக்ஸிஜன் சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்படும் வழியில், பயணச் சிக்கல்களால் அவன் உயிர் பிரிந்தது.

அந்தச் சந்தர்ப்பத்திலேனும் ஆழ்கடல் மேல் ஆதவன் கொண்ட பிரேமை குறையவில்லை. மாறாக வாழ்க்கையின் பேரழுத்தங்களை எதிர்கொண்டு தாங்கும் விருப்பு மேலும் அதிகரித்தது.

அந்த அனுபவங்களோடு புலம்பெயர்ந்தவனுக்கு, கைகொடுத் ததும் அதே கடல்வாழ்வு.

அவனோடு இணைசேர்ந்த ஆரணியும் இதே துறையில் ஈடு பாடு கொண்டவள் என்பதால் மனது உடனடியாகவே ஒட்டிக் கொண்டது. ஆதவன் கடலாடி வரும்வரை அவள் செய்தி களுக்காகக் காத்திருப்பாள்.

ஆழ்கடலில் கனிமங்கள் தேடும் ஆராய்ச்சிப் பணிகள் அவ னது தொழில். சில வேளைகளில் குழுவினருடனும் சிலவேளை களில் தனித்தும் செல்ல நேரும்.

வழமையாக நான்கு மணித்தியாலங்கள் சுவாசிக்கக்கூடிய ஒட்சிசனுடன் உள்ளிறங்கினாலும், பாதுகாப்புக் கருதி இரண்டு மணித்தியாலங்களில் திரும்புவது அவனது வழக்கம்.

‘என்றாவது ஆழ்கடல் ஆய்வுக்கலத்திலிருந்து நான் திரும்பா விட்டால் என்ன செய்வாய் ஆரணி ? மனமுடைந்து போவாயா ?’

இத்தகைய கேள்விகளால் அவள் எந்தப் பதற்றத்திற்கும் உள்ளாக மாட்டாள்.

மென்னகையுடன் ஆணித்தரமாகப் பதிலொன்று சொல்வாள்.

‘நீ எங்கிருக்கிறாயோ அங்கே நானும் இருப்பேன் ஆதவ். எனது அன்பு உனக்குப் பாதுகாப்புக் கவசமாக எங்கும் இருக்கும். டைட்டானியத்தை விடவும் அது உறுதி வாய்ந்தது. நீ என்றும் நலமுடன் வாழ்வாய்’

பெருமிதத்துடன் புன்னகைத்தான்.

‘இந்த நம்பிக்கைதான் எனது வலிமை ஆரணி. ஆத்மார்த்தமாக நான் நேசித்த முதல் பெண் நீ. நான் உன்னுடன் தொடர்பு கொள்ளக்கூடிய சூழ்நிலையில் இருந்தாலும், இல்லாவிட்டாலும், நான் நலமாக இருப்பேன் என்பதை நீ நம்ப வேண்டும்’

•

கப்சியூலில் செல்பவர்கள் அணியும், அழுத்தமும் வெப்பமும் தாங்கும் வகையில் அமைந்திருந்த தனது ஆடைகளை ஒரு விதப் பெருமிதத்துடன் பார்த்துக் கொண்டவன், நிமிர்ந்த போது, சூரிய ஒளி கடல் நீரின் ஊடு படர்ந்து உண்டான ஒளி வீச்சில், மேற்பரப்புக் கடலினை ஒரு கனவு மண்டலமாக உணர்ந்தான்.

ஒளியும் இருளும் மாறிக் கொண்டே இருக்கும் வாழ்க்கைச் சக்கரம் போல அடுத்து வந்த ட்விலைட் மண்டலம் எப்போதும் அவனுக்கு விசித்திரமான உணர்வினைத் தருவது வழக்கம்.

கடல்நீர் படிப்படியாக இருளடைய, பயோலுமினேட் உயிரினங்களின் ஒளியும் பெரிய மீன்களின் நிழல்களுமாக ஓர் அற்புதக் காட்சி முன்னே விரியும். அத்தகைய பரவசத்தை முதன்முதலில் அனுபவித்த நாள் மறக்க முடியாதது.

இந்தச் சூழலில் ஆரணியை மார்போடு அணைத்தபடி மீன்களைப் போல நீந்திக்கொண்டிருந்தால் எப்பேர்ப்பட்ட பேரனுபவமாக இருக்கும் என்ற நினைவு இன்ப மயக்கத்தைத் தந்தது.

பௌர்ணமியன்று கடலானது, சந்திரனை நோக்கி மிக ஈர்ப்புடன் பொங்கும் என அப்பம்மா கூறியிருக்கிறார். தன்னையும் ஆரணியையும் கடலின் ஆழம் பிரிக்கும் சமயங்களில், பூரண நிலவினைப் போன்ற அவள் மீதான ஈர்ப்புத் தனக்கும் மிக அதிகமாவதை எண்ணப் பெருவியப்புத் தோன்றியது.

கனவுலகில் இருந்து மீண்டவனுக்கு அடுத்து வந்த ஆழ்கடல் மண்டலத்தின் ஹைட்ரோ தேமல் வென்ட்ஸ் நீரோட்டங்கள், சிறுவயது மீன்தொட்டி நினைவுகளை உயிர்ப்புடன் கிளறின.

வெந்நீரின் வாயுக்குமிழிகள் ஒரு குடை போல விரிந்த தோற்றமானது ஆழ்கடல் தரை நெருங்குவதை அவனுக்கு அறிவிக்க, சற்றுத் தூரத்தில் குறுக்காகக் கடந்த நீலச்சுறாவினைப் பார்த்து வியந்தபடி, குடைவிரித்து மிதந்து வந்த ஜெலிபிஷ் கூட்டத்தினை ரசித்தபடி, நெய்தலெனும் பேரழகின் ஆழத்தில் மற்றுமோர் அதிசய உலகத்தின் வசப்பட்டான். எத்தனை முறை பார்த்தாலும் சலிக்காத பேரழகு.

நிலத்தினைப் போலவே, கடலின் ஆழத்திலும் முல்லையின் சாரலும் குறிஞ்சியின் அழகும் மருதத்தின் மாண்பும் பரந்திருப்பதை அவன் சிறுவயதிலேயே அறிவான்.

அதில் உயிர்வாழும் அதிசயத் தாவரங்கள், விலங்குகள் பற்றியும் கனிமங்கள், ஆழ்கடல் ஆராய்ச்சிகள் பற்றியும் விஞ்ஞான ஆசிரியையான அப்பம்மா ஆர்வத்துடன் விவரிப்பதை வியப்புடன் கேட்டுக் கொண்டே, வானத்து விண்மீன்களின் கண்சிமிட்டலைப் பார்த்திருப்பான். உருமாறி அசைந்து கொண்டே இருக்கும் மேகக் கூட்டங்களை ரசித்தபடி அப்பம்மாவின் மடியுறங்கிய அழகிய கனாக் காலங்களின் இனிமை மனதினை நிறைத்தது.

விழிப்பும் நித்திரையும் கலந்த அரைமயக்க நிலையில், பச்சை நிறக் கடற்குதிரையில் ஏறி ஆழ்கடல் நிலத்தில் வேகமாகப் பறந்து கொண்டே, தன்னை ஒரு விஞ்ஞானியாகக் கற்பனை செய்து கொள்வதில் அத்தனை மகிழ்ச்சி அவனுக்கு.

‘சிறுவன்’ என்று தன்னை அழைத்துக் கொள்வதில் இன்றும் மகிழ்வு காணும் அவன், தன் மனப் பெட்டகத்தில் இந்நினைவுப் பொக்கிசங்களைப் பத்திரமாகச் சேமித்து வைத்திருந்தான்.

‘கடல் மீனுக்கெல்லாம் சாப்பாடு எப்பிடிக் கிடைக்கும், சாமி குடுப்பாரா அப்பம்மா?’ அறியாத சிறுவயதுக் கேள்வி.

இன்று நனவாகக் காணும் ஹைட்ரோ தேமல் வென்ட்ஸ் நீரோட்டங்கள்தான் கடலுயிர்களின் உணவுக்கான ஆதாரமாகவும் வாழ்விடமாகவும் உள்ளது என்பதை அப்பம்மா அன்று கூறிய போது, ஏதும் விளங்காவிட்டாலும், விளங்கியது போல தலையை அறம்புறமாக ஆட்டுவது அவனது வழமை.

சிறிய மீன்களை விழுங்கிப் பெரிய மீன்கள் உயிர்வாழ்தல் என்பது, வலியோர் வாழ்தலுக்காக மெலியோரை விழுங்குதல் என்ற இயற்கையின் தர்மம் கடலிலும் நடைமுறையில் இருப்பதைக் காலம் அவனுக்கு உணர்த்தியது. அதற்கேற்ப வாழ்வினை எதிர்கொள்ளும் மனோதிடத்தினை அது அவனுள் வளர்த்தது.

அப்பம்மா இன்று இருந்திருந்தால், துணிவு மிகக் கொண்ட ஓர் ஆழ்கடல் ஆராய்ச்சியாளனாகத் தான் வளர்ந்திருப்பதையிட்டு மனம் மகிழ்ந்திருப்பார். இந்த மனத்துணிவும் தொழில் நேர்த்தியும் அவரால் ஊட்டப்பட்டதல்லவா என்ற நினைவு அடிமனதில் எழுந்து ஏக்கம் கொள்ள வைத்தது.

நேற்றைய கனவில் வந்த அப்பம்மா ‘கண்டு கனகாலமாச் சுதடா செல்லம் கெதியில உன்னட்டை நான் எப்பிடியாவது வருவன்’ என்று சொன்னதை மகிழ்வுடன் மனம் கொண்ட போது, எந்த ரூபத்தில் அவர் தன்னிடம் வரக்கூடும் என்பதும் அவனுள்ளத்தில் அழகிய கனவாக மலர்ந்தது.

ஐ மிஸ் யூ சோ மச் அப்பம்மா எனக் கண்கலங்கி வாய்விட்டுக் கூறியவன், அவர் அணியும் நூல் சேலையின் வாசனையை மனதால் நுகர்ந்து கொண்டே நிஜவுலகிற்கு மீண்டான். அப்பம்மாவின் பெயர் போலவே ‘முல்லை’ யின் நறுமணம் இதயத்தில் நிறைந்தது.

•

கனவுகளிலும் கற்பனைகளிலும் வாழ்வதை, வாழ்வின் ஒரு பகுதியாகக் கொண்டவன் அவன். எதையாவது சாதிக்கத் துடிக்கும் அவனது மனதிற்கு இந்த ஆழ்கடல் பயணங்கள் மட்டுமே போதுமானவையாக இருந்ததில்லை. எதைச் சாதிக்கலாம் என்பதும் இன்னமும் தெளிவாகவில்லை.

இன்னும் இரண்டு வாரங்களில் அவர்களுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அதற்கிடையில் ஒரு சாதனை வீர னாக ஆரணியின் கைபற்ற வேண்டும் என்பது அவனது கனவு. நிறைவேறுமா ?

திருமண நினைவுகள் சூழ்கையில், தன்னைக் கடந்து சென்ற கடற்பாம்புகளின் இணைதலைக் கண்டபோது, முதலிரவை கடற்படுக்கையில் கொண்டாடும் விசித்திர சிந்தனைகள் உதிக்க இளவெட்கத்துடன் சிரித்துக் கொண்டான். அதே நேரம் ஆரணியும் அதே நினைவில் சிலிர்த்துக் கொண்டாள்.

திருமணத்திற்கு முன்னதான அவனது கடற்பயணம் இன்று.

முன்பு எப்போதும் வந்திராத சற்றே சிக்கல் நிறைந்த ஒரு கடற்படுக்கைப் பகுதியை இப்போது அண்மித்திருந்தான். கடல் நிலப்பரப்பின் வரைபடங்களை ஏற்கெனவே சோனார், GPS தொழில் நுட்பங்களினூடாகக் கணித்திருந்ததால் ஆராய வேண்டிய பகுதிகளை இலகுவாக இனங்காண முடிந்தது.

கப்சியூல் பாய்ச்சிய ஒளி வெள்ளத்தில் தோய்ந்த, நீரடித் தாவரக் காடுகளினூடு தெரிந்த மங்கிய பசுமை கலந்த நீலம் மனதை மயக்கியது.

பச்சை, செம்மஞ்சள், சிவப்பு, ஊதா, மண்ணிறம் எனப் பல வர்ணக் கலவையில் காட்சி தந்த பவளப் பாறைகளினதும் சிறு மலைகளினதும் வனப்பு அதிஅற்புதமாகக் கண்முன் விரிந்த பொழுதில், வழமைக்கு மாறாகத் தன் வாழ்வில் ஏதோ ஒன்று நடக்கப் போவதை மனது உணர்ந்தது.

அது இன்பமா ? துன்பமா ? என்ற ஆய்வுக்கு நேரமில்லாத கணமொன்றின் மயக்கத்தில், மலைப் பாறைகளின் மேற் பரப்பில் ஏராளமான கறுப்பு, பழுப்பு நிறப் படிவுகள் பார்வை யில் பதிந்தன.

அவை கோபால்ட், மங்கனீஸ் போன்ற பெறுமதியான கனிமங் களைத் தன்னுள் கொண்டிருக்கக் கூடும் எனும் முன்னைய அவதானிப்புகளும், அனுபவ அறிவும் உறுதி செய்ய அவனது முகம் மலர்ந்தது.

கனிமத் தேடலுக்காக கப்சியூலின் முன்புறம் பொருத்தப்பட் டிருந்த 'ரொபோட்டிக் ஆர்ம்' இனை இயக்கி, உணர்திறன் கருவிகளூடாக பரிசீலித்தவனது எண்ணம் மேலும் உறுதிப் பட்டது. தேவையான ஆதாரங்களைப் பதிவு செய்து கொண் டான். பாறையின் சில பகுதிகளை மேலதிக ஆராய்ச்சிக்காக ரோபோட்டிக் நீர்மூழ்கியில் சேமித்துப் பத்திரப்படுத்தினான்.

தனது அனுமானம் சரியாக இருக்குமானால், இதனால் கிடைக்கவிருக்கும் அங்கீகாரம் ஆழ்கடல் வாழ்வில் முக்கிய மானதொரு தருணமாக அமையும் என அவனது மெய்யு ணர்வு கூறியது. ஆரணிக்கு வழங்கக் கூடிய மிகச் சிறந்த திருமணப் பரிசாகவும் தனது கண்டுபிடிப்பின் அங்கீகாரம் இருக்கலாம் என்ற பெருமிதம் மனதினை நிறைத்தது.

மீண்டும் பாறைப் பகுதியை எதேச்சையாக நோக்க, இது வரை கண்டிராத பிரகாசமான ஒரேஞ்ச் வண்ணத்தில் அமைந்த பெட்டியொன்று பாறைகளின் இடுக்கில் உள்ள தாழ்வான பகுதியொன்றில், அரைகுறையாகத் தெரிவதை அவதானித் தான்.

மேற்பரப்பிற்குத் திரும்பும் நேரம் கடந்து விட்டிருந்தாலும் தாளாத ஆர்வம் பற்றி இழுக்க மீண்டும் ரொபோடிக் ஆர்ம் இனை இயக்கி அதனை HD கமராவால் பதிவு செய்து, வீடியோ ட்ரான்ஸ்மிஷன் மூலமாக கப்சியூலில் இருந்து பார் வையிட்டவன், அதன் மேல் தெரிந்த Z... எனத் தொடர்ந்த எழுத்துகளைப் பார்த்து அதிர்ச்சியும் வியப்புமானான்.

அது பிரபலமானவர்கள் சிலருடன் பயணப்பட்டு மர்மமாகக் காணாமல் போய், தசாப்த காலமாகத் தேடப்பட்டு வரும் ஒரு விமானத்தின் கறுப்புப் பெட்டி என்பதை அனுமானிக்க முடிந்தது.

மிகுந்த பிரயத்தனத்துடன் அதைப் பக்குவமாக எடுத்துப் பத்திரப்படுத்தும் முயற்சியிலும் வெற்றி கொண்டவனின் மனது மகிழ்வுடன் பூரித்தது.

ஆனால் மகிழ்ச்சி நீடிக்கவில்லை.

எதிர்பாராத விபரீத கணமொன்றில், பாறைகளின் இடுக் கினில் எங்கோ விடுவிக்க இயலாத நிலையில் ஆழ்கலம் சிக்கிக் கொண்டதனை உணர்ந்தவன் சற்றே உறைநிலை அடைந்தான். சிந்தனையோட்டம் ஸ்தம்பித்தது. இதயம் உட லுக்கு வெளியே அதிர ஆரம்பித்தது.

அடுத்த கணத்திலேயே மனதில் வழமையான உறுதி மீண் டும் துளிர் விட்டது.

'வீழ்ந்தால் என்று நினைத்தால்

வாழ்ந்ததாய் இருக்குமா நினைவுகள் ?'

எங்கோ படித்த கவிவரிகள் நினைவில் எழுந்தன.

தன்னிலைக்கு மீண்டவன் மேற்பரப்புக் கண்காணிப்புக் குழு வுக்கு விரைந்து தகவலை வழங்கிவிட்டு, மீட்புக் குழுவின் வருகைக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கத் தொடங்கினான்.

ஆழ்கலத்தில் ஒட்சிசன் கையிருப்பு இன்னும் அரை மணித்தி யாலத்திற்கே அவனுக்கான சுவாசத்தை வழங்க முடியும் என்பது அக்கணத்தில் உள்ள மனதைப் பதற வைக்கும் நிதர்சனம். எனினும் நிதானத்தை இழக்கவில்லை.

கண்களை மூடித் தன் நினைவுகளை நிலைப்படுத்தினான். ஆரணியின் அன்புசூழை உலகத்தினுள் வசப்படுத்தினான். தனதுயிராக, சுவாசக்காற்றாக ஆரணியை நினைத்த வண் ணம் நெருக்கமாக மனதால் அணைத்துக் கொண்டான்.

'எத்தகைய இடர் வரினும் என் காதல் உனைக் காக்கும் கவ சமாகும். நீ நலமுடன் இருப்பாய் ஆதவ்' எனும் ஆரணியின் நம்பிக்கை மிகுந்த வார்த்தைகள் அவனுள் அசரீரியாய் ஒலிக்கத் தொடங்கின.



ranjani.Subramaniam@thaiveedu.com



tg.theeban@gmail.com

கடமை கண்ணியம் கட்டுப்பாடு

■ உஷாதீபன்

சார்... தபால் திரும்பி வந்திருக்கு... ஒரு வணக்கம் போட்டு சொல்லிக் கொண்டு வந்த போஸ்ட்மேனை நிமிர்ந்து பார்த்தார் கனகமணி. நீட்டிய தாளில் கையொப்பமிட, பியூன் செல்லச்சாமி வந்து சீல் வைத்து திருப்பிக் கொடுத்தார்.

தபாலை நிதானமாக சிசர் வைத்து நுனியில் கட் பண்ணினார். உள்ளே இருந்த தாளை எடுத்தார். ஒரு மெல்லிய பதற்றம் அவரிடம் பரவியிருந்ததை உணர்ந்தார். எழுத்தர் அவிநாசிக்கு அனுப்பிய முக்கியக் கடிதம்தான் திரும்பியிருந்தது.

அனுப்பிச்சதே திரும்பிடுச்சா?

தேர்தல் பணிக்கு அவரை நியமனம் செய்திருந்த ஆணை குறித்து தகவல் தெரிவித்திருந்த கடிதம் அது. உடனடியாக வரச்சொல்லி. அன்று புதன் கிழமை. முதல் வாரம் வெள்ளிக் கிழமை அனுப்பியிருந்த கடிதம். சனிக்கிழமை கொடுத்திருக்கலாம். அல்லது திங்கட்கிழமை டெலிவரி செய்யப்பட்டிருக்கலாம். அப்படி டெலிவரி செய்யும்போது வாங்க மறுத்து திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது. அதானே? வாங்கிப் பார்ப்பதில் என்ன சங்கடம் வந்துவிடப் போகிறது?

ஆள் வரும் முன்னே அனுப்பிய கடிதம் திரும்ப வந்துவிட்டது. தேர்தல் பணி ஏற்றே ஆக வேண்டும், மறுத்தல் கூடாது என்கிற நோக்கில் ஒப்புதல் அட்டையோடு பதிவஞ்சலில் அனுப்பப்பட்ட தபால் திரும்பியிருக்கிறது. வெளியூரில் இருக்கும் ஆள் ஒருவேளை வராமலே போய்விட்டால்? தேர்தல் பணியை மறுக்க முடியாதே...? பணி ஆணை தன்னிடம் இருப்பதை டிராயரைத் திறந்து பார்த்து உறுதி செய்து கொண்டார். சொல்லப்போனால் இம்மாதிரித் தபால்களை நேரடியாக வழங்கி, கையொப்பம் பெற வேண்டும். அதுதான் முறை. நடைமுறையே அதுதான். ஆள் வெளியூரில் இருந்ததால் அவசரம் பார்த்து வந்து சேர வேண்டும் என்று தகவல் தெரிவிக்கப்பட்டது. ஃபோனில் பிடிக்க முடியவில்லையே? அப்படியும் தபால் திரும்பியிருக்கிறது. ஆளில்லையா? வாங்க வில்லையா? வெவ்வேறாக முயற்சித்தும் பலனில்லை.

வந்த தபாலைத் திருப்பித் திருப்பிக் கவனமாய்ப் பார்த்தார் கனகமணி. இவங்களோட பெரிய்ய தொல்லையப்ப! Door locked... என்று மூலையில் கிறுக்கப்பட்டிருந்தது. இன்று புதன் கிழமை. பணிக்குத் திரும்பியிருக்க வேண்டும். நேற்றோடு விடுப்பு முடிந்தது. அவநாசி வரவில்லை. ஒரு வேளை தேர்தல் பணிக்குப் பயந்து கொண்டு விடுப்பை நீட்டிப்பாரோ? சந்தேகம் வந்தது. அப்படி ஆளும் இல்லையே? மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தேர்தல் பணி ஒதுக்கீட்டு ஆணைகளை எடுத்துக் கொண்டு டெலிவரி செய்ய வந்த பணியாளர் இன்று மீண்டும் வரக்கூடும். எல்லாத் தபால்களும் எல்லாருக்கும் டெலிவரி செய்யப்பட்டுவிட்டதா என்பதை உறுதி செய்ய. என்ன பதில் சொல்வது?

தேர்தல் பணியை மறுப்பது கூடாது. மறுக்கும் பணியாளர் மீது நடவடிக்கை உண்டு. யோசித்தவாறே அமர்ந்திருந்தார் கனகமணி. வேறு வேலை ஓடவில்லை. எதிரே இருந்த எழுத்தர்கள், தட்டச்சர்களின் இருக்கைகள் காலியாயிருந்தன. அனைத்துப் பேரும் தேர்தல் பயிற்சி வகுப்பிற்குச் சென்றிருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இடம் போடப்பட்டிருந்தது. டவுனுக்குள்ளேயும், சற்று ஒதுக்குப் புறமாகவும்... வகுப்பு அரை நாளில் முடிந்து விடும்தான். மதியம் ஆபீஸ் வந்து விட வேண்டும். ஆனால், யாரும் வருவதில்லை. வீட்டிற்குப் போய் சாப்பிட்டு வருவதானாலும் இரண்டரை, மூன்றுக்குள் வந்துவிடலாம்தான். போனால் போனதுதான். குறைந்தது நான்கு வகுப்புகளாவது இருக்கும். போகும் இடத்தில் எப்போது வகுப்பு ஆரம்பிக்கும், எப்போது முடியும் என்றும் சொல்ல முடியாது. வகுப்பு எடுப்பவர் கொஞ்சம் முன்னே

பின்னே வந்தால் நேரம் ஆகத்தானே செய்யும்? அதனால், பணியாளர் ஏன் மதியம் ஆபீஸ் வரவில்லை என்று யாரையும் கேட்கவும் முடியாது. கேட்டும் பயனில்லை. கொடுத்த ஆணைப்படி ஒழுங்காகத் தேர்தல் பணியைச் செய்து முடிக் கட்டும் அதுவே போதுமானது என்று தோன்றிவிடும். இல்லை யென்றால் அலுவலருக்குக் கெட்ட பெயர். அவருக்குக் கார ணங்கள் கேட்கப்படும்.

எனவே மதியம் ஆபீஸ் வருவதைப் பற்றி பொதுவாய் யாரும் பொருட்படுத்துவதில்லை. அது அந்தந்த ஆபீஸ் சம்பந்தப் பட்ட, அங்குள்ள அலுவலகம் சம்பந்தப்பட்ட நடைமுறை விஷயங்கள். கனகமணிக்கு மதியம் இரண்டு மணிக்கு மேல் தேர்தல் வகுப்பு. பகல் அரைநாள் ஆபீஸ் போய் இருக்கும் வேலைகளை முடித்து விடுவோம் என்று வந்திருந்தார் அவர். குறிப்பாய் அவர் மனதிலிருந்த விஷயம் இதுதான். அவிநாசி தபால் பெற்றாரா இல்லையா?

சந்தேகப்பட்டதுபோலவே ஆகிப் போனது. எதற்காக தேர்தல் பணியை ஏற்க மறுக்கிறார்கள் அல்லது தயங்குகிறார்கள் அல்லது பயப்படுகிறார்கள்? அங்கென்ன அடிக்கிறார்களா, பிடிக்கிறார்களா? அப்படியென்ன அறிவில் ஏறாத விஷயமா அது? எவ்வளவு எளிமைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்? ஒருவர் பெயர் படிக்க இன்னொருவர் பட்டியலில் அன்னாரின் பெயரும் படமும் இருப்பதை உறுதி செய்து கொண்டு கையொப்பம் பெற, மூன்றாவது நபர் இடது கை ஆள்காட்டி விரலை நீட்டச் சொல்லி நகத்திற்கும் சதைப் பகுதிக்கும் குறுக்கே சமமாய் விழுவது போல் மையைத் தடவி அனுப்ப வேண்டியதுதான். இதில் இந்த மை வைக்கும் வேலைக்குக் கூடப் பயந்தால் எப்படி?

முதல் நாள் மாலையே எங்கு பணி செய்ய ஆணையிடப் பட்டிருக்கிறதோ அந்தப் பள்ளிக்கு அல்லது இடத்திற்குச் சென்று விட வேண்டும். ஒரு இரவு மட்டும் அங்கேயே தங்கி உண்டு உறங்கி எழுந்து மறுநாள் காலை தயாராக வேண் டும். இதற்கென்ன சுணக்கம்? இதிலென்ன பயம்? புது இடத் தில் ஓர் இரவு படுத்திருந்தால் தொலைந்து போவோமா? அப்படியே சரியான தூக்கம் இல்லையென்றாலும்தான் என்ன? நாட்டின் பணிக்காக ஓர் இரவு தூக்கம் முழிக்கக் கூடாதா? குடி முழுகி விடுமா? ஒரு குறிப்பிட்ட சூழலுக்கே உடம்பு பழகிவிட்டதால் புதிதாய் எதைச் சொன்னாலும் ஏற்க மறுக்கும் அல்லது பயப்படும் மனது. அவசியம் சொல்லி மனதை மாற்றியாக வேண்டும். உற்சாகமாகக் காத்திருக்கும் பணியாளர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள்?

வேண்டாம் சார்... ஏதாச்சும் தகராறு... அடிதடி வரும்... எதுக் குப் பிரச்னை? எனக்கு எலெக் ஷன் டியூட்டி வேண்டாம் சார்... - கணக்குப் பிரிவு எழுத்தர் முனியம்மா இப்படிச் சொன் னது நினைவுக்கு வந்தது கனகமணிக்கு.

அப்படியெல்லாம் நினைச்சு பயப்பட வேண்டியதில்ல... எதுவும் நடக்காது. எல்லாம் பக்காவா ஏற்பாடு பண்ணியிருப்பாங்க... பாதுகாப்புக்குப் போலீஸ் காவல் போட்டிருப்பாங்க... தேர் தல் பணியை வேண்டாம்னு சொல்ல முடியாது... செய்தே ஆகணும். அது நம்மளோட கடமை... புரிஞ்சிக்குங்க...

சரி சார்... நீங்க சொல்றீங்களேன்னுதான் சம்மதிக்கிறேன். எங்க வீட்டுக்காரரு வேண்டாம்னு சொல்றாரு... வாங்காதங் கிறாரு... அப்புறம் நான் என்ன சார் பண்றது? நாளைக்கு ஏதாச்சும் பூத்ல கலாட்டா கிலாட்டா அடிதடின்னு நடந்திச் சின்னா... காயம் பட்டுப் போச்சின்னா... யார் சார் பொறுப் பாறது? நீங்களா வருவீங்க...?

இது எனக்காக வர்றதில்லம்மா... நல்லாப் புரிஞ்சிக்குங்க... நான் சொல்றதுனால நீங்க ஏத்துக்க வேண்டாம். சொல்ல வேண்டியது என் கடமை... அதனால சொன்னேன். இது கலெக்டர் ஆர்டர்... இல்லன்னா உங்க பேர்ல ஆக் ஷன் எடுப் பாங்க... பரவால்லியா? மெமோ கொடுப்பாங்க... ஏன் தேர்தல் பணியை ஏத்துக்கலைன்னு காரணம் கேட்பாங்க... அலைய வேண்டியிருக்கும்... அதுக்கு கமுக்கமா ஏத்துக்கிட்டு செய் துட்டு வந்துடறதே பெட்டர். நான் உங்களுக்கு நல்லதத்தான் சொல்லுவேன்... நம்புங்க... நம்மள மாதிரி ஊழியர்களை நம்பித்தாம்மா எலெக்ஷனே நடக்குது... நாம செய்யாம வேறே யாரு செய்வாங்க... மகிழ்ச்சியா ஏத்துக்கிட்டுப் போயிட்டு வருவீங்களா? எதை எதையோ சொல்லிப் புலம்புறீங்களே? செய்த வேலைக்குப் பணமும் கொடுக்கிறாங்கல்ல... இந்தியா முழுக்க இது நடக்குது? உங்கள மாதிரி அங்கங்க இருக் கிறவங்க உனக்கு வேண்டாம்... எனக்கு வேண்டாம்னு சொன்னா அப்புறம் யாரை நம்பிம்மா தேர்தல நடத்தும் அரசாங்கம்...?

கவர்ன்மென்ட் சர்வன்டா இருக்கோம்... தேர்தல் கமிஷன் அர சாங்க மெஷினரிய நம்பித் தேர்தலை நடத்துறாங்க... நம்பள நம்பித்தான் முறையாத் திட்டமிட்டு இந்த வேலைல இறங்கு றாங்க... செய்து கொடுக்க வேண்டியது நம்ப கடமையில் லையா? அத விட வேறே வேலை என்ன நமக்கு? சந்தோ ஷமா ஏத்துக்கிட்டுப் போயிட்டு வர வேண்டாமா? இப்டியா சீக்குப் பிடிச்ச கோழி மாதிரிச் சுணங்குறது? தப்பும்மா... ரொம்பத் தப்பு... முதல்ல கையெழுத்துப் போட்டு எலெக் ஷன் டியூட்டி ஆர்டரைக் கும்பிட்டுக் கைல வாங்குங்க...

கலெக்டர் ஆபீஸிலிருந்து வந்திருந்த அதிகாரி முன்னேயே இப்படி ஒரு நீண்ட லெக்சர் கொடுத்து அவரவர் ஆணை களை வாங்கச் செய்தார் கனகமணி. தன்னால் கூட இப்படி விளக்கிச் சொல்ல முடியாது என்று அகமகிழ்ந்து தேர்தல் பணி ஆணைகளை வழங்கிவிட்டுப் போனார் அந்த அதிகாரி. போகும்போது மட்டும் ஒன்று சொன்னார்...

மலைப் பகுதிக்கெல்லாம் தேர்தல் வேலைக்குப் போறாங் கம்மா... தெரியுமா? கழுதை முதுகுல, குதிரை மேலே... எல்லாச் சாமான்களையும் ஏத்திட்டு, மொத நா ராத்திரியே போய் கெதம் கெதம்னு கிடக்காங்க... அவுங்களும் நம்மள மாதிரி கவர்ன்மென்ட் சர்வன்ட்கள்தான்... மனுசங்கதான்... கொஞ்சம் எல்லாத்தையும் நினைச்சுப்பாருங்க...

முனியம்மா பயந்தது என்னவோ ஓரளவு நியாயம்தான் என்றும் தோன்றியது கனகமணிக்கு. ஏனென்றால் அவருக்கே அப்படி யான ஒரு அனுபவம் உண்டு. மானேஜர் ஆவதற்கு முன் இருபதாண்டு காலம் உதவியாளராகப் பணி புரிந்த காலங் களில் மூன்று நான்கு தேர்தல் பணிகளுக்குச் சென்றுள்ளார் கனகமணி. அப்படிச் சென்ற ஒரு இடத்தில் பெரிய கலாட் டாவே நடந்து போனது என்பதுதான் உண்மை. கும்பலாக வந்து தேர்தல் நடக்கும் பூத்தை நோக்கி கற்களை விட்டெறிந்து, உள்ளே புகுந்து இருந்த ஆட்களையெல்லாம் விரட்டி அடித்து மேஜை நாற்காலிகளை உடைத்து, தேர்தல் ஆவணங்க ளைக் கிழித்துக் காற்றில் பறக்கவிட்டு, பிறகு மிலிட்டரி போலீஸ் வந்து அவர்களை விரட்டி விரட்டிப் பிடித்த கதை யும் காட்சியும் இப்போதும் அவர் மனதில் அழியாது நிலை பெற்ற ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறதுதான்.

எங்கோ என்றோ ஒன்றிரண்டு நடந்துவிட்டது என்பதற்காக தேர்தல் பணிக்கே செல்ல மாட்டேன் என்று சொல்வது என்ன நியாயம்? அப்படி மறுப்பது மனசாட்சிப்படி நியாயமாகுமா? நாமெல்லாம் ஒன்று சேர்ந்துதானே தேர்தலை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்க வேண்டும்? அது நம் அத்யந்தக் கடமை யில்லையா? ஓட்டுப்போடுவது எப்படி மக்களின் ஜனநாயகக் கடமையோ அதுபோல தேர்தல் பணிக்கும் சந்தோஷமாக ஒத்துக் கொண்டு மகிழ்ச்சியாய் உற்சாகமாய் அந்தக் கட மையை நிறைவேற்றுவது இந்த நாட்டின் பிரஜையாகிய நமது கடமையும் ஆகிறதுதானே?

பெரும்பாலும் யாரும் வாங்க மாட்டாங்க சார்... அந்தந்த ஆபீஸ் சூப்பிரன்ட், மானேஜர்னுதான் நாங்க கொடுத்திடு வோம். அவரோட பொறுப்பு அதை அவரவருக்கு விநியோகிப் பதும், ஏற்றுக் கொள்ளச் செய்வதும்... இப்டி ஒவ்வொரு ஆபீசா நாங்களே உட்கார்ந்து கொடுத்துக் கையெழுத்து வாங்கிட்டி ருந்தோம்னா எங்களுக்கு வேலை முடியாது சார்... ஒவ்வொரு ஆபீஸ்லயும் பாதிக்குப் பாதிதான் விரும்பி வாங்குறாங்களே யொழிய எல்லாரும் சந்தோஷமா ஏத்துக்கிறதில்ல... பயப்படு றாங்க... அதான் ஏன்னு தெரில...? அப்படியென்ன கஜகர்ண வித்தையா இந்த வேலை? அதான் நாலஞ்சு வகுப்பு எடுக் கிறாங்களே... அதுலயே எல்லாமும் நல்லாத் தெரிஞ்சி போயிடுமே...? பிறகென்ன சார் தயக்கம்? நம்ம ஊழியர் களை நிறையப் பேர்களை மாத்தவே முடியாது சார்... இப்டி சோம்பின மனநிலைல இருக்கிற பலரை உசுப்பிவிட்டு உசுப்பி விட்டுத்தான் ஆள் சேர்த்து இந்தத் தேர்தலை நடத்தி முடிச்சாக வேண்டியிருக்கு... இதாச்சும் பரவால்ல... தேர்தல் அன்னைக்கு வராம இருந்த ஆட்களும் உண்டு... அது தெரியுமா? ஒருத்தரே ரெண்டு பேர் வேலையைப் பார்க்க வேண்டிய நிலமையும் வந்திருக்கு. அதையும் அவங் களேதான் திறமையாச் செய்றாங்க... பொறுப்பான ஊழியர் கள்தான். ஆனா அங்கங்கே சுணக்கமும் உண்டுதான். எல் லாத்தையும்தான் சார் சமாளிச்சிக்கிட்டிருக்கோம்... - ஆணை களை வழங்க வந்து போன அதிகாரி குறைபட்டுக் கொண்ட ஆதங்கம் இது.

திரும்பி வந்த தபாலையே வைத்த கண் வாங்காமல் பார்த் துக் கொண்டிருந்தார் கனகமணி. என்ன செய்யலாம் என்கிற யோசனை அவர் மனதில் தீவிரமாக ஓடிக் கொண்டிருந்தது.

அவிநாசி வேலைக்கு வரவில்லை. விடுப்பு நீட்டித்து விண் ணப்பமும் வரவில்லை. கதவு பூட்டப்பட்டிருக்கிறது என்று எழுதி தபால் திரும்பி வந்திருக்கிறது. ஆளை எங்கே போய்த் தேடுவது? ஒரு வேளை தபால் இன்று அலுவலகத்திற்குத் திரும்பக் கிடைத்து விடும் என்று தெரிந்து... ஒரு நாள் விட்டுத் தாமதமாக அலுவலகம் செல்வோம் என்றிருப்பாரோ? தேர் தல் பணி என்றால் வந்துவீடும் ஆள்தானே? அதில் கிடைக் கும் சன்மானம் அவருக்கான குடும்பத் தேவையாயிற்றே? வேறென்ன அவசரமோ? நீட்டித்த ஒரு நாளைக்கு ஆபீஸ் போய் விடுப்பு எழுதிக் கொடுத்துக் கொள்வோம் என்று முடிவு செய்து மௌனம் சாதிக்கிறாரோ?

ஏற்கனவே அடிக்கடி பொய்க் காரணங்கள் சொல்லி விடுப்பு எடுக்கும் ஆசாமி. தாத்தா இறந்துட்டார்... பெரியப்பா போயிட் டார்... (எத்தனை முறை இறந்தார்களோ!) என்று. வேறு ஏதே னும் வியாபாரம் செய்கிறாரோ என்றெல்லாம் கூடச் சந்தேகம் வந்தது இவருக்கு. வெளியூர் ஆசாமி. தினமும் வந்து செல் பவர். இதையெல்லாம் போய் உளவறிந்து கொண் டிருக்க முடியுமா? அதுவா வேலை? அவராய்ச் சொன்னால் கேட்டுக் கொள்ளலாம்.

எதற்கு இத்தனை யோசனை? இப்போது இந்த உத்தரவை யாருக்காவது கொடுத்தாக வேண்டும். அதற்கு பெயர் மாற்றி எழுதி வாங்க வேண்டும். அதற்கு ஒரு பணியாளைப் பிடிக்க வேண்டும். யோசித்து யோசித்து மண்டைதான் குழம்பியது கனகமணிக்கு.

திடீரென்று ஏதோ தோன்ற அவநாசிக்கான தேர்தல் பணி ஆணையினைத் திரும்பவும் எடுத்துப் புரட்டினார். அவருக் கும் தான் செல்லும் பள்ளியில்தான் முதல் தேர்தல் வகுப்பு என்பது தெரிந்தது. சரி என்று மனதில் ஒரு முடிவுக்கு வந்தார். மணியைப் பார்த்தார். பன்னிரெண்டு. கொண்டு வந்த டிபனை விலுக் விலுக்கென்று முழுங்கினார். அரை பாட்டில் தண்ணீரை உள்ளே செலுத்தினார். அலுவலரின் அறைக்குள் நுழைந் தார்.

ஆச்சு... நீங்களும் கிளம்பிட்டீங்களா? என்றார் அதிகாரி.

ஆமா சார்... இப்போ போய் பஸ் பிடிச்சாத்தான் டயத்துக்கு எலெக் ஷன் கிளாசுக்குப் போய்ச் சேர முடியும்... அந்தப் பகுதிக்கு அடிக்கடி பஸ் வேறே வராது. மேலூர் போற பஸ்ல த்ரூ டிக்கெட்தான் போடுவான்... இடைல நிக்க மாட்டான்... அந்த ஊர் வண்டி அடிக்கடி வராது. காத்திருந்துதான் ஏறணும்...

சரி... சரி... கிளம்புங்க... கேஷ் செஸ்ட்லாம் பூட்டிட்டீங்கல்ல... ஞாபகமா ஒரு தரம் இழுத்துப் பார்த்துட்டுப் போங்க... அப்போ இன்னைக்கு நாந்தான் இந்த ஆபீசுக்குக் காவல்...அப்படித் தானே...?

பதில் சொல்லாமல் பார்த்துக் கொண்டு நின்றார் கனகமணி.

பியூன் ரெண்டு பேர்ல யாராச்சும் ஒருத்தராவது இருக்காங் களா? என்றார். இல்ல சார்... அவுங்களுக்கும்தான் டியூட்டி...

அவுங்களுக்குமா? என்னாது... மை வைக்கிற வேலயா...?

ஆமா... சார்... பேரு படிச்சிக் கூட கையெழுத்து வாங்கு வாங்க... நம்மள விட நல்லாவே செய்வாங்க... அதெல்லாம் டிரெயினிங் கொடுத்திடுவாங்கல்ல சார்... நாலு வகுப்பு எதுக்கு வைக்கிறாங்க...?

ஓ.கே... வாட்ச்மேன் சரவணனை இங்க வந்து இருக்கச் சொல் லுங்க... பெல் அடிச்சா வர்றதுக்கு ஒரு ஆள் வேணும் எனக்கு... ஒரு டீ சாப்பிடணும்னாக் கூட ஆள் இல்லேன்னா எப்டி?

வாசல்ல பிள்ளையார் கோயில்ல படுத்திருப்பான் சார்... சொல்லிட்டுப் போறேன்...! - சொல்லிக்கொண்டே வெளியேறி னார் கனகமணி.

அரசமரப் பிள்ளையார் கோயில். வெக்கயே தெரியாது. குளு குளுன்னு இருக்கும்... தூங்குறதுக்குக் கேட்கணுமா? ஆளப் பத்தி விடுங்க... என்றார்.

அவிநாசிக்கு ஒதுக்கப்பட்ட தேர்தல் பணித் தபாலிலேயே அவரின் முழுக் கவனமும் குவிந்திருந்தது. எப்படியாவது தேர் தல் வகுப்பின்போது வந்திருக்கும் அதிகாரியிடம் விபரத்தைச் சொல்லி அந்தக் கூட்டத்தில் வேறு யாருக்கேனும் அவர்களது அலுவலகத்தில் விருப்பமுள்ளவர்களுக்கு அந்தப் பணியை

வழங்கச் செய்ய வேண்டும். அங்கேயே அவிநாசியின் பெயரை அடித்துவிட்டு புதிய பணியாளரின் பெயரை எழுதச் செய்து வழங்கியாக வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார். அதுபோல் முன்னம் நடந்தது அவர் மனதில் நிலைத்திருந் தது. அத்தோடு கலெக்டர் அலுவலகம் சென்று அவிநாசியின் பணி வேறொருவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுவிட்டது என் கிற விபரத்தைச் சொல்லி மேற்கொண்டு அவருக்கு ஏதும் நடவடிக்கை வராமல் தடுக்கச் செய்ய வேண்டும். அதுவும் அவர் விருப்பமாய் இருந்தது. நம் பணியாளரை நாம் விட்டுக் கொடுக்க முடியுமா? எல்லாரையும்தான் சேஃப்கார்டு பண் ணனும்...

அதற்கு முதல் வேலையாக அவிநாசியை இன்னும் ஓரிரு நாட்கள் சேர்த்து விடுப்புக் கேட்டு மருத்துவச் சான்றிதழ் வாங்கி வரச் செய்ய வேண்டும்.

வேறென்ன செய்வது? தன் அலுவலகப் பணியாளரைத் தான் தானே காப்பாற்ற வேண்டும்? சமய சந்தர்ப்பங்களில் சேர்த்து அணைத்துத்தானே கொண்டு போயாக வேண்டும்? அலுவல கத் தலைமைக்கு வேலை வாங்குவது மட்டும்தானா வேலை? அவர்களின் நலன்களில் அக்கறை கொள்வதும்தானே?

முடிவு செய்து கொண்டு பஸ்ஸில் ஏறினார் கனகமணி. அவி நாசியின் தேர்தல் பணி ஆணையை இன்னொருவருக்கு எப் படியாவது ஒதுக்கீடு செய்து விட்டால்தான் தனக்கு நிம்மதி என்கிற தீவிர சிந்தனையே அவர் மனதில் ஓடிக் கொண்டிருந் தது.

சார்... வந்திட்டீங்களா...? உங்கள எதிர்பார்த்திட்டுத்தான் காத்துக் கிடக்கேன்... - சொல்லிக் கொண்டே எதிரே திடீ ரென்று தோன்றிய அவிநாசியைக் கண்டதும் பிரமித்துப் போனார் கனகமணி.

என்னங்க இது... திடீர்னு கடவுள் மாதிரித் தோன்றி நிற் கிறீங்க... உடம்பு சௌகரியமாயிடுச்சா...? - என்று தனது சங்கடங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் கேட்டார் கனக மணி.

ஆயிடுச்சு சார்... இன்னைக்கு டேரக்டா நீங்க க்ளாசுக்கு வருவீங்கன்னு செல்லச்சாமிதான் எல்லா விபரமும் சொன் னாரு... அவரும் திருமங்கலம்தான சார்... என் தபால் கொண்டு வந்திருக்கீங்கல்ல சார்...?

பின்னே? உங்களுக்கு தகவல் அனுப்பிச்சதுதான் திரும் பிடுச்சே...? யாருக்காவது சர்வ் பண்ணி ஆகணுமே... அதுக் காகத்தான் எடுத்திட்டு வந்திருக்கேன்... இல்லன்னா எம் பொழப்பு நாறிப் போகுமேங்க... கலெக்டருக்கு யாரு பதில் சொல்றது?... கலெக்டர் நம்ம பாஸைக் கேள்வி கேட்பாங் களே...? அதுக்கு எடம் வைக்கலாமா? நம்ம ஆபீசுக்குத் தானே கெட்ட பேரு...? ஏங்க வர்றேன்... வரல்ல... விடுப்பு நீடிக்கிறேன்... ன்னு ஏதாச்சும் ஒரு தகவலை அனுப்ப மாட் டீங்களா? இப்ப மட்டும் செல்லச்சாமி சொன்னார்ங்கிறீங்க... ? மத்த நேரத்துல ஆள் கண்ணுல படலையாக்கும்?

ஸாரி சார்... மன்னிச்சிடுங்க... உங்க ரிஜிஸ்டர் தபால் வந்தன் னிக்கு மொத நாள் எங்க அப்புத்தா இறந்து போயிடுச்சி... அதுக்கு ஊருக்குப் போயிருந்தோம் எல்லாரும்... அதான் தபால் திரும்பியிருக்கு... எனக்குத் தேர்தல் வேலன்னா பிடிக் குமே சார்... விடுவனா... அதான் நேரா இங்க வந்திட்டேன். ஒரு எலெக்ஷன் ட்யூட்டி கூட மிஸ் பண்ணினதில்ல சார் நான்...! கலெக்டர் ஆபீசுக்கு போய் எனக்குக் கொடுங்கன்னு கேட்டு வாங்கியிருக்கேன்...! என் ராங்குக்கு பிரிசைடிங் ஆபீசர்-1 தரமாட்டாங்க... தந்தாங்கன்னா அதையும் சக்ஸஸ் ஃபுல்லா செய்து முடிச்சிடுவேன். நான் ஆபீஸ் வர... நீங்க இங்க கிளம்பி வந்திருக்க... சந்திக்க முடியாமப் போச் சின்னா... சிக்கலாயிடுமே சார்... அதான் த்ரூ வண்டில அட் வான்சாக் கிளம்பி வந்திட்டன்... எங்கூர்லர்ந்து டேரக்ட் வண்டி மேலூருக்கு இருக்குல்ல சார்... அதப் பிடிச்சேன்...

அப்புத்தா இறந்ததாகச் சொல்கிறார். உண்மையோ பொய்யோ... ஆள் வந்தாச்சு. அந்தவரைக்கும் நிம்மதி.

அது சரிங்க... எதுக்கும் ஒரு ஃபோன் அடிக்க மாட்டீங்களா? இப்டியா கிணத்துல போட்ட கல்லு மாதிரிக் கிடக்கிறது? நாங்க என்னன்னு நினைக்கிறது? இந்தத் தபால வச்சிட்டு அல்லாடிட்டேன் தெரியுமா? எலெக்ஷன் டியூட்டிங்கிறது எவ் வளவு சீரியஸ் தெரியுமா? யாருமே ரிஜெக்ட் பண்ண முடியா தாக்கும். டிஸிப்ளினரி ஆக் ஷன் எடுத்திருவாங்க... அனுப வப்பட்ட ஆள் நீங்களே இப்டி செய்தா என்ன அர்த்தம்?

வெரி வெரி ஸாரி ஸார்... தப்பா நினைக்காதீங்க... அப்புத்தா கடைசிக் காரியத்துக்குப் பணத்துக்கு அலைஞ்சிட்டிருந் தேன்... எங்கப்பாவால எதுவும் ஆகாது... நாந்தான் எல்லாம் பார்த்து செய்யணும்... அதுனால அதெத் தவிர வேறே எந்தச் சிந்தனையும் என் மனசுல இல்ல... மன்னிச்சிடுங்க...! டெத் வந்து முடக்கிடுச்சு... நம்புங்க...!

சரி... விடுங்க... வந்திட்டீங்கல்ல... அது போதும்...! ஒரு வகைக்கு நல்லதாப் போச்சு நீங்க நேரடியா இங்க வந்தது. இன்னைக்கு உங்களுக்கும் தேர்தல் வகுப்பு இங்கதான்... பாருங்க இந்த ஆர்டரை... - என்றவாறே அந்த ஆணையை நீட்டினார் கனகமணி.

ஆவலோடு வாங்கிக் கொண்டார் அவிநாசி.

வாங்க... முதல்ல எலெக்ஷன் ஆபீசரப் பார்ப்போம்... உங்க ஆர்டரும் சர்வுடு... ஆளும் வந்தாச்சுங்கிறதைப் பதிவு பண் ணுவோம்...

சந்தோஷமாக இருவரும் உள்ளே நுழைந்தனர்.

மலை போலே வரும் சோதனை யாவும் பனிபோல் நீங்கி விடும்... - பழைய பாடலின் வரிகள் சட்டென்று கனகமணியின் மனதில் ஒலிக்க, யப்பா... பெரிய இக்கட்டுலர்ந்து தப்பிச் சன்... நரி முகத்துல முழிச்சேன் போல்ருக்கு இன்னைக்கு... சங்கடம் நீங்கிருச்சு... - சிரித்தவாறே அவிநாசியைப் பார்த் துக் கூறிக்கொண்டே உற்சாகமாக நடந்தார் கனகமணி.

அப்டியெல்லாம் உங்கள இக்கட்டுல விட்ருவனா சார்... அதான் கன் மாதிரி டயத்துக்கு வந்திட்டன்ல... என்ற அவி நாசி, மானேஜரின் மீதான மரியாதையில் ஒரு நிமிடம் நின்று அவர் கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார்.



ushadeepan@thaiveedu.com

மா. சித்திவினாயகம்

முலையறுகாதை!

பெண் துயரப் பெருங்கதை - 15

இந்துமாகடல் அலைகளின் ஓயாத பேரோசை தாலாட்ட, கப்பலின் மேல் தளத்தில் கணேசன் தன் மனைவி செண்பகத்தின் மடியில் சாய்ந்திருந்தான். நள்ளிரவுக் கடலின் உப்புக்காற்று அவன் மேனியை வருடியது. செண்பகம் வானத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். கார்மேகக் கூட்டங்களுக்கு இடையே ஏதேனும் ஒரு நட்சத்திரம் மின்னாதா என்ற அவளது ஏக்கம், வானைத் துழாவியது.

கணேசன் மெல்ல அவள் கரங்களைப் பற்றினான். 'உனக்குத் தெரியுமா செண்பகம்? இதே கடல் வழியாகத்தான் உன் பெயர் கொண்ட பாண்டியப் பேரரசி, கொரியா தேசத்திற்குச் சென்று அரசியானாள்...'

செண்பகம் வியப்புடன் குனிந்து அவனைப் பார்த்தாள். 'என் பெயரிலா? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பா? என்ன சொல்கின்றீர்கள் கணேசா?'

செண்பகம், இது வரலாறு. பொ.ஆ.பி. 48-இல் பாண்டிய நாட்டின் முத்துகளின் பிறப்பிடமான கொற்கையிலிருந்து கிளம்பியவள் அவள். அவள் கண்கள் உன்னைப் போலவே கனவுகளைச் சுமந்தவைதான்...' என அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு வியப்பாயிருந்தது.

ஆம் அன்றைய கொற்கையின் அந்தி வானம் ரத்தச் சிவப்பாய் ஜொலித்தது. கடலும் வானும் சங்கமிக்கும் அடிவானத்தில் ஏதோ ஒரு மர்மம் ஒளிந்திருப்பது போல் இளவரசி செண்பகத்திற்குத் தோன்றியது. பாண்டிய மன்னனின் செல்ல மகள் அவள். அவள் கால்களில் அணிந்திருந்த முத்துச் சிலம்புகள் நடக்கும்போது எழுப்பும் ஓசை, கொற்கையின் அலைகளுக்குப் போட்டியாக இசைக்கும்.

அன்று இரவு, செண்பகத்தின் கனவில் ஒரு பேரொளி தோன்றியது. அந்த ஒளியின் நடுவே ஒரு குரல் கணீரென்று ஒலித்தது.



tg.theeban@gmail.com

‘மகளே! உன் தடம் இந்த மணற்பரப்போடு முடிவதல்ல. கிழக்குத் திசையில் உனக்காக ஒரு சிம்மாசனம் காத்திருக்கிறது. அலைகளைக் கடந்து செல்... அங்கே உன் வாழ்வின் புதிய சரித்திரம் எழுதப்படும்!’

திடுக்கிட்டு விழித்த இளவரசிக்கு உடல் சிலிர்த்தது. அது தெய்வ வாக்கா அல்லது காலத்தின் கட்டளையா? விடிந்ததும் தன் தந்தை பாண்டிய மன்னனிடம் ஓடினாள். மகளின் கண்களில் தெரிந்த வைராக்கியத்தைக் கண்ட மன்னன், கனவின் பொருளை உணர்ந்தான்.

மறுநாள் காலை, கொற்கைத் துறைமுகமே திரண்டிருந்தது. பிரம்மாண்டமான பாய்க்கப்பல் ஒன்று கடலில் மிதந்து கொண்டிருந்தது. அதில் விலைமதிப்பற்ற பாண்டிய நாட்டு முத்துகளும், நறுமணப் பொருட்களும் ஏற்றப்பட்டன. அத்தோடு ஒரு சிறிய அழகான புனிதக் கல்லும், தேயிலைச் செடிகளும், உணவுத் தானியங்களும் பல வீரர்களும் துணைக்கு வந்தனர்.

தன் தாய் மண்ணை ஒருமுறை திரும்பிப் பார்த்தாள் செண்பகம். அவளது இதயம் கனத்தது, ஆனால் கண்கள் கிழக்கை நோக்கியே இருந்தன. நங்கூரம் தூக்கப்பட்டது. பாய்மரங்கள் காற்றில் விரிந்தன.

‘பயணம் தொடங்கட்டும்!’ என அவள் ஆணையிட, அந்தப் பெரும் கப்பல் ஆழ்கடலை நோக்கி நகரத் தொடங்கியது. அது வெறும் கடல் பயணம் அல்ல; ஒரு புதிய பேரரசின் உதயம்!

நாட்கள் வாரங்களாயின. வங்கக் கடல் தாண்டி, சயாம் மற்றும் சீனா கடந்து செண்பகத்தின் கப்பல் கொரியாவின் தெற்கு கடற்கரையை அடைந்தது. வழியில் சீறும் அலைகளும், புயல்களும் அவளை அச்சுறுத்தினாலும், தன் கனவில் கண்ட அந்த ஒளியை அவள் நம்பினாள். அவளது கப்பலில் இருந்த அந்த ‘புனிதக் கல்’ அவள் கைவைத்தவுடன் கடலின் சீற்றத்தை அடக்கியதாகக் கருதப்படுகிறது அந்தக் கல் இன்றும் கொரியாவில் உள்ளது.

கதை சொன்ன கணேசனின் கப்பல் மெல்ல, அசைய அசைய, நிலவின் ஒளி கடல் நீரில் சிதறித் தெறித்தது. கணேசன் செண்பகத்தின் கையைப் பற்றித் தன் கதையைத் தொடர்ந்தான்.

கொரியாவின் ‘கயாயா’ நாட்டு மன்னன் கிம் சுரோ, ஒரு தெய்வப் பிறவியாக மக்களால் மதிக்கப்பட்டான். அவனுக்குத் திருமணம் செய்ய அமைச்சர்கள் எத்தனையோ இளவரசிகளைப் பரிந்துரைத்தும், ‘எனக்கானவள் கடல் கடந்து வருவாள்’ என்று காத்திருந்தான்.

செண்பகத்தின் கப்பல் கரையைத் தொட்டபோது, மன்னன் கிம் சுரோ அவளை எதிர்கொண்டு வரவேற்றான். தமிழ் மண்ணின் வாசனையோடும், வீரத்தோடும் வந்த செண்பகத்தைக் கண்டதும், அவளே தான் தேடிய தேவதை என்பதை மன்னன் உணர்ந்தான்.

கொரியாவின் அரசி ‘ஹியோ ஹ்வாங்-ஒக்’ வந்து விட்டாள் என்று கோஷமிட்டபடியே அவளை வரவேற்று செண்பகத்தை கொரியாவின் அரசியாக்கினான்.

அவளது ‘ஹியோ ஹ்வாங்-ஒக்’ என்ற பெயர் இன்றளவும் நின்று நிலைக்கிறது. அவள் அங்குள்ள மக்களுக்குப் புதிய விவசாய முறைகளையும், கலைகளையும் கற்றுக்கொடுத்தாள். தன்னோடு அவள் கொண்டு வந்த அந்தத் தேயிலைச் செடிகளை கொரியாவின் பேக்வோல்சான் மலைப்பகுதியில் நட்டுப் பெருந்தோட்டமாக்கினாள். இதுவே கொரியாவின் தேயிலை கலாசாரத்திற்கு முதல் அடித்தளமாக அமைந்தது. இந்தியாவில் இருந்து அவள் கொண்டு சென்ற இந்தத் தேயிலை, இன்று கொரியாவின் மிக முக்கியமான பாரம்பரிய பானமாக மாறியுள்ளது.

‘செண்பகம், அது வெறும் திருமண உறவு மட்டுமல்ல; அது இரு நாகரிகங்களின் சங்கமம். இன்றும் கொரிய மொழியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் அதே உச்சரிப்போடு ஒலிக்கின்றன. 'அம்மா', 'அப்பா', 'அண்ணி' என்று நாம் அழைப்பதையே அங்கேயும் அவர்கள் உச்சரித்து அழைக்கின்றார்கள். நாம் 'புல்' (Grass) என்று சொல்வதை அவர்களும் அப்படியே சொல்கிறார்கள். நம்மைப் போலவே தரையில் அமர்ந்து உண்பதும், பெரியவர்களுக்குப் பாத நமஸ்காரம் செய்வதும், வாசலில் மருதாணி இடுவதும் என அவர்களின் இரத்தத்தில் தமிழ் மணம் கமழ்கிறது.

செண்பகம் வியப்போடு கேட்டுக்கொண்டிருக்க, அவன் மேலும் உற்சாகமாகச் சொன்னான். நம் பாண்டிய நாட்டின் மீன் சின்னம் இன்று கொரியாவின் பழங்காலக் கோட்டை வாசல்களில் செதுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு அது வெறும் அடையாளம் அல்ல. செல்வம், செழிப்பு மற்றும் தீய சக்திகளிடமிருந்து காக்கும் விழிப்புணர்வின் சின்னம். தமிழகத்தின் ஒரு மூலையில் பிறந்த அந்தச் செண்பகம், இன்று லட்சக்கணக்கான கொரிய 'கிம்' வம்சத்தின் ஆதித் தாயாக மாறி, வரலாற்றில் அழியாத காவியத் தலைவியானாள்.

திடீரென கணேசனின் குரல் தளுதளுத்தது. அவளது கண்களை நேராகப் பார்த்தபடி, ‘கடலோடிப் போன அந்தச் செண்பகம் ஒரு காவியம் என்றால், என்னோடு இப்போது இலங்கை செல்லும் நீயும் ஒரு காவியம் தான்...’ என்று வாஞ்சையோடு அவளை அணைத்தான்...

சொல்லி முடித்த சில நிமிடங்களிலேயே, கணேசனின் கண்கள் செருகின. கடந்த சில நாட்களாக ஓயாது ஒழியாது

அவன் செய்த பயண ஒழுங்குகளின் களைப்பு அவன் முகத்தில் தெரிந்தது. செண்பகத்தின் மடியிலேயே அவன் ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அவன் நெற்றியில் விழுந்த முடிகளை மெல்ல ஒதுக்கி விட்டாள் செண்பகம். அவனை எழுப்ப அவளுக்கு மனம் வரவில்லை. 'அவளுக்கு அவன்... அவனுக்கு அவள்...' - இதுவே அவர்களுக்குப் போதுமான உலகமாக இருந்தது.

தேயிலையை உலகிற்கே அறிமுகப்படுத்திய இந்தியரிடமிருந்து தேயிலையைப் பிடுங்கி, இலங்கை மலையில் அவற்றை வெள்ளையர் இந்தியரையே கூலியாக்கி நடவைக்கிற சூட்சுமத்தை கணேசனும், செண்பகமும் அறியாதவர்களாக அந்தக் கப்பலில் பயணித்துக் கொண்டிருந்தார்கள்.

கப்பல் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தது. இருண்ட கடலுக்கு அப்பால் அவர்களுக்குக் காத்திருக்கும் அந்தப் புது இடம், அவர்களுக்கு ஒரு புது வாழ்வை அளிக்குமா? அல்லது வரலாற்றுப் பெருந்துயரான மற்றொரு பக்கத்தை எழுதப் போகிறதா?

செண்பகம் வானத்தைப் பார்த்தாள். இப்போது மேகங்கள் விலகி ஒரு நட்சத்திரம் பிரகாசமாக மின்னியது. அது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இளவரசி செண்பகத்திற்கு வழிகாட்டிய அதே நம்பிக்கை நட்சத்திரமா? அல்லது வானத்தே சட்டென்று தோன்றி மறையும் எரி நட்சத்திரமா?

கணேசன் உறக்கத்தில் ஆழ்ந்திருக்க, செண்பகம் அந்த கொரிய வரலாற்று நினைவுகளில் தன்னை மறந்திருந்தாள். அந்த எண்ணமே அவளுக்கு இதமாக இருந்தது. ஒருபுறம் புது இடத்தைப் பற்றிய பயம் இருந்தாலும், அவள் சாதாரண பெண் அல்ல. வீரப் பெண் நங்கோலி பிறந்த ஊர்க்காரி, அவளது உறவுக்காரி. அநீதி இழைக்கப்பட்டபோது மதுரையை எரித்த கண்ணகியை வணங்கும் ரோசக்காரி. 'கொரிய நாட்டு அரசியின் வீரப் பெயரைக் கொண்ட எனக்கு எதற்குப் பயம்?' என்று தன் மனதைத் திடப்படுத்திக் கொண்டாள்.

ஆனால், விதி அவளுக்குப் பின்னால் நிழலாக வந்து கொண்டிருப்பதை அவள் கவனிக்கவில்லை.

நட்சத்திர ஒளியிலும் ஒரு கத்தி மின்னியது. கருப்புத் துணியால் முகம் மறைத்த அந்த உருவம், பூனை நடை போட்டுச் சத்தமில்லாமல் செண்பகத்தை நெருங்கியது. கண் இமைக்கும் நேரத்தில், அவளது கழுத்தில் கத்தி அழுத்தப்பட்டது. ஒரு கரடு முரடான கை அவளது வாயைப் பொத்தியது. கணேசனை அழைக்கக்கூட அவளால் முடிய வில்லை. அந்த உருவம் அவளைத் தரதரவென இழுத்துச் சென்றது.

அவள் தன் பலம் கொண்ட மட்டும் திமிறினாள். ஆனால், அந்த உருவத்தின் பிடி இரும்பாக இருந்தது. கப்பல் மாலுமியின் அறைக்கு அருகில் இருந்த ஒரு தனி அறைக்குள் அவளைத் தள்ளித் தாழ்ப்பாள் போட்டான் அவன்.

உள்ளே, புகையிலை வாசனையும், மதுவின் நெடியும் கவிழ்ந்திருந்தது. ஒரு வெள்ளைக்காரத் தொரை, சுங்கான் புகைத்தபடி மதுக்கோப்பையுடன் அமர்ந்திருந்தான். அதிர்ச்சியில் உறைந்த செண்பகம், 'எதற்காக இங்கே இழுத்து வந்தீர்கள்?' என்று கத்தினாள். அச்சத்தில் அவள் நாக்கு உலர்ந்து போனது. தலை சுற்றியது. நெஞ்சுக்குள் யாரோ சம்மட்டியால் அடிப்பதுபோல் இருதயம் பலமாக அடித்தது... செண்பகத்தின் அச்சமும், அவளது இளமையும் அந்த வெள்ளையனை மிருகமாக மாற்றியது. பயந்து பெரு மூச்சோடு கலங்கித் தவித்த அவளது மார்பகம் அந்த வெள்ளையனைக் கவர்ந்தது. விலங்கைப்போல் எழுந்தோடி வந்து அவள் மார்பில் குனிந்து முத்தமிட்டான். அவள் தலையால் அவனை இடித்துத் திமிறினாள். அவன் அவளை வலுக்கட்டாயமாக அடைய முற்பட்டான். அந்தப் போராட்டத்தில், அவளை இழுத்து வந்தவனின் முகமூடி அவிழ்ந்து விழுந்தது.

அவன் முகத்தைக் கண்டதும் செண்பகம் திடுக்கிட்டாள். அவளது ரத்தம் உறைந்தது. அவன் வேறு யாருமல்ல; கைகூப்பிக் கும்பிட்டு, நயவஞ்சகமாகப் பேசி அவர்களைக் கப்பலில் ஏற்றிவிட்ட அதே கங்காணிதான்!

'நீயா...?' என்று அவள் அலறினாள். நம்பிக்கைத் துரோகத்தின் வலி, அவளது பயத்தை மெல்ல மெல்ல ஆத்திரமாக மாற்றத் தொடங்கியது.

கங்காணி இளித்துக் கொண்டே அவளை நெருங்கினான். 'அடியே... வீணாக அடம் பிடிக்காதே! இந்தத் தொரையோடு இணங்கி இரு, உன் துன்பங்கள் அனைத்தும் இத்தோடு தொலையும். உன் புருஷன் கணேசனுக்குத் தேயிலைத் தோட்டத்தில் மேஸ்திரி வேலை கொடுக்கச் சொல்வார் தொரை. உன்னையும் ஒரு ராணியாட்டம் நல்லாவே பார்த்துக்க அவர் ஏற்பாடு செய்வார்,' என்றான் நயவஞ்சகமாக.

அவள் மௌனமாக இருப்பதைப் பார்த்து அவன் மேலும் சர்வ சாதாரணமாகச் சொன்னான், 'இல்லையென்றால், உங்கள் இருவரையும் கொன்று அப்படியே கடலில் போட்டுவிட்டுப் போய்க்கொண்டே இருப்போம். யாரும் கேட்க மாட்டார்கள்.'

அந்த அறையின் மூலையில் பல இளம் பெண்கள் கட்டி வைக்கப்பட்டிருப்பதை செண்பகம் கவனித்தாள். அவர்கள் அனைவரும் வெவ்வேறு கப்பல்களில் ஏற்றப்பட்டு, வெள் ளைக்கார எஜமானர்களுக்கு அடிமைகளாகவும் விருந்தாளி களாகவும் அனுப்பப்பட இருப்பவர்கள். 'அடம் பிடிக்காமலி ருந்தால் இவர்களோடு நீயும் இங்கிலாந்துக்காரி ஆகலாம்'

என்று கங்காணி ஆசை காட்டினான்.

மதுவெறியில் இருந்த வெள்ளையன் செண்பகத்தின் அருகே வந்தான். விலங்கினைப் போன்ற அவன் பார்வை அவளது அழகிய உடலில் நிலைத்தது. அவன் அவளை நெருங்கி மீண்டும் வலுக்கட்டாயமாக முத்தமிட முயன்றபோது, செண்பகத்தின் பயம் தீயாக மாறியது.

வயிற்றுப் பசியைக் காட்டி மானத்தை வாங்கும் இந்த மனிதப் பேய்களிடம் இருந்து தப்ப என்ன செய்யலாம்? அவளது மனதில் பாண்டிய இளவரசியின் வீரமும், கண்ணகியின் சீற்றமும் ஒருசேர எழும்பியது.

கண்மூடி விழிப்பதற்குள், கங்காணியின் கையில் இருந்த கத்தியைப் மின்னல் வேகத்தில் பறித்தாள். அந்தப் பாரிய கத்தியால் தன்னை நெருங்கிய வெள்ளையனை ஓங்கிக் குத்தினாள். அவன் அலறிக்கொண்டு கீழே விழ, சற்றும் தாமதிக்காமல் கங்காணியை பலமாகத் தள்ளிவிட்டாள். போதையில் இருந்த கங்காணி நிலைதடுமாறி சுவரில் மண்டை அடிபடச் சரிந்து வீழ்ந்தான்.

அவள் அங்கிருந்த ஒரு கனமான மரப்பலகையைக் கையிலெடுத்தாள். 'துரோகி!' என்று கத்தியபடி கங்காணியின் மண்டையில் இரண்டு பலமான அடிகளை வைத்தாள். அவன் மயங்கிச் சரிந்தான்.

தாமதிக்க நேரமில்லை என்பதை உணர்ந்த செண்பகம், மூச்சிரைக்கக் கப்பலின் மேல் தளத்திற்கு ஓடி வந்தாள். அங்கே இன்னும் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த கணேசனின் கையை வெடுக்கெனப் பிடித்து இழுத்தாள்.

'கணேசா, எழுந்திரு! குதி ! என்று கத்தியவாறே, அவனைச் சிந்திக்கக்கூட விடாமல், ஆக்ரோஷமாக அலைமோதும் கடலினுள் அவனுடன் பாய்ந்தாள்.

இருண்ட கடல் நீர் அவர்களை விழுங்கியது. மேலே கப்பலில் கூச்சல்கள் கேட்கத் தொடங்கின.

அடிமைத்தனத்தை விட அந்த ஆழ்கடல் அவர்களுக்குச் சிறந்த புகலிடமாகத் தெரிந்தது.

இருண்ட கடல் நீர் அவர்களை ஆக்ரோஷமாக வரவேற்றது. அந்த மரணப் போராட்டத்திலும், செண்பகம் பாய்ந்தபோது அவளோடு கூடவே விழுந்த அந்தப் பாரிய மரப்பலகை அவர்களுக்கு வரப்பிரசாதமானது. அது கடலில் மிதக்க, இருவரும் அதைப் பற்றிக்கொண்டு உயிரைக் கையில் பிடித்துத் தத்தளித்தனர்.

அவர்களைச் சுற்றி ஆயிரக்கணக்கான கூழக்கடாக்கள் கூட்டமாக மிதந்து கொண்டிருந்தன. மனிதர்களின் திடீர் வருகையால் மிரண்ட அந்தப் பறவைகள், விண்ணதிரக் கிறீச்சிட்டு சிறகடித்து எழுந்தன.

கப்பலின் மேல்தளத்தில், காயம் பட்ட வெள்ளையன் ரத்த வெறியுடன் நின்றிருந்தான். கையில் கட்டுத் துப்பாக்கியும், மறு கையில் கிழக்கிந்தியக் கம்பனிக்கு இத்தாலிய மேதை கலிலியோ கலிலி அளித்த தொலைநோக்கியுமாக அவன் கடலைத் துருவினான். ரோச் லைற்றின் தேடல் ஒளி கடல் அலைகளை ஊடுருவியது. ஆனால், எங்கு பார்த்தாலும் வெள்ளைப் பறவைகளின் கூட்டமே நிறைந்திருந்தது. அந்த வெண்ணிறச் சிறகுகளுக்கு இடையே, மிதக்கும் இரு மனிதத் தலைகளை அவனது பூஞ்சைக் கண்களால் கண்டறிய முடியவில்லை.

ஆத்திரத்தில் அவன் தன் துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டான். தோட்டாக்கள் நீரைத் துளைத்தன; அப்பாவிப் பறவைகள் சில ஓலமிட்டு மடிந்து வீழ்ந்தன. 'துரை... பயப்படாதீர்கள்! இனி அவர்கள் தப்ப முடியாது. இந்தப் பெருங்கடல் அவர்களை விழுங்கிச் செரித்துவிடும்!' என்று அடிவாங்கி எழுந்த கங்காணி நயவஞ்சகமாகச் சொன்னான். ராட்சதக் கப்பல் அவர்களைக் கடலில் தவிக்கவிட்டு நகர்ந்து சென்றது.

இந்து மகா சமுத்திரத்தின் எல்லையற்ற பரப்பில், பறவைகள் புடைசூழ கணேசனும் செண்பகமும் தனித்து விடப்பட்டனர். உப்பு நீர் கண்களை எரிக்க, அவர்கள் கண்ணகித் தெய்வத்தை மனம் நொந்து வேண்டினார்கள். 'யாராவது வரமாட்டார்களா? எதாவதொரு கப்பல் நம்மை மீட்காதா?' என்ற அவர்களின் ஏக்கம் அலைகளின் ஓசையில் கரைந்தது.

'கடல் தெய்வம் மணிமேகலை நம்மைக் கைவிடுவாளா? மனிதர்களைக் காக்கும் டால்பின்கள் எங்காவது வருமா?' என ஏங்கி ஏங்கி, அழத் தெம்பற்று அந்தப் பலகையிலேயே இருவரும் மயங்கிச் சரிந்தனர். அவர்கள் உடல் மட்டும் அலைகளின் போக்கில் மிதந்தது; ஆனால் அவர்களின் ஆன்மா இன்னும் அந்தப் பழைய பாண்டிய இளவரசியின் வீரத்தை விடாமல் பற்றிக் கொண்டிருந்தது.

(தொடரும்...)



sithivinayagam@thaiveedu.com

இன்று அமைதியான ஒரு நாளாக இருக்கும்

– அமி ஹெம்பெல் | **தமிழில்: என்.கே. மகாலிங்கம்**




(அமி ஹெம்பெல் டிசம்பர் 14, 1951-இல் சிக்காக்கோவில் பிறந்தார். அவர் ஒரு சிறுகதை ஆசிரியர். ஊடகவியலாளர். ரெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் மிச்சனெர் மையத்தில் படைப்பாக்க எழுத்து கற்பிக்கிறார். அமெரிக்காவின் மிகச் சிறந்த கதைசொல்லிகளில் ஒருத்தி. அவர் குறைவாகச் சொல்லும் - minimalist - பள்ளியைச் சேர்ந்தவர். அவருடைய ஆக்கங்கள் எல்லாமே உதிரியாகவும் நேரடியாகவும் இருக்கும். அவர் வசனங்களை எழுதுகிறார். கதைகளை அல்ல என்று சொல்வார்கள். இவர் கோர்டன் லிஷ் என்ற எழுத்தாளரின் மாணவி. அவரைப் போல குறைத்துச் சொல்லும் எழுத்தில் நம்பிக்கை கொண்டவர். இவரின் Reasons to Live சிறுகதைத் தொகுதியை வெளியிட்டவர் இந்த லிஷ் என்பவரே. இந்தத் தொகுதியில் தான் அல் ஜொல்சன் புதைக்கப்பட்டிருக்கும் இடுகாடு என்ற அவர் எழுதிய முதல் கதையும் உள்ளது. அதை அவர் 1983-இல் எழுதினார். அந்தத் தொகுதியை விட, At the Gates of the Animal Kingdom, Tumble Home, The Dog of the Marriage தொகுதிகளும் வெளிவந்துள்ளன. அவருடைய நீண்ட கதைகளில் கூட, அவருடைய கதை சொல்லும் பாணி, சுருங்கியதாகவும், சிக்கனமானதாகவும் செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டதாகவும், பாத்திரங்கள் புதிரான முரண்பாடான கருத்துகளை ஒருத்தருக்கொருத்தர் சொல்லிக் கொண்டும் இருப்பார்கள். இவரின் கதைகள் அடிக்கடி துக்கம், இழப்பு, உயிர் பிழைத்து வாழ்தல் பற்றியதாகவே இருக்கும். பாத்திரங்கள் மருத்துவ சாலையில் இருப்பதாகவோ பிரச்சினைகளில் இருப்பதாகவே இருக்கும். அவற்றில் கூட நகைச்சுவை இருக்கும். புத்திசாலித்தனமாகவும் கதைப்பார்கள்.)

‘அப்படி அல்ல. அது மறுபக்கமாக இருக்கப் போகிறது.’ என்றான் அந்தச் சிறுவன். ‘நில நடுக்கம் இப்பொழுது தாக்கினால் பாலம் உடைந்து விழும். சாய்தளங்கள் அப்படியே இருக்கும்.’

அவன் தன் சகோதரியைத் திருப்தியுடன் பார்த்தான்.

‘நீ உன் சகோதரியைப் பயமுறுத்தப் பார்க்கிறாய்,’ என்றார் தந்தை. ‘அது உண்மையல்ல என்பது உனக்குத் தெரியும்.’

‘இல்லை. உண்மையில் தெரியாது,’ சிறுவன் வலியுறுத்திச் சொன்னான். ‘நள்ளிரவில் பறவைகள் சத்தமிடுவதைக் கேட்டேன். அது ஒரு எச்சரிக்கை அல்லவா ?’



சிறுமி தன் சகோதரனை நச்சுப் பார்வை பார்த்து விட்டு ஒரு கைநிறைந்த உலர் திராட்சை பழங்களைச் சாப்பிட்டாள். மூவரும் கோல்டின் கேற் பாலத்தில் வாகன நெரிசலில் தரித்து நின்றார்கள்.

அன்று காலை பிள்ளைகளை எழுப்புவதற்கு முன் தந்தை அவர்களுடைய இசை பாட வகுப்புகளை இரத்து செய்து விட்டு அன்றைய தினத்தை பொழுது போக்கும் ஒரு நாளாக மாற்ற நினைத்தார். அவர்கள் அப்பொழுது எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதைப் பார்க்க எண்ணினார். தன் பிள்ளைகள் தன்னிறைவுடன் வாழ்கிறார்கள் என்று நினைத் திருந்தார். எப்படி ஒரு நாய் தன் கழுத்துப்பட்டியைத் தானே வீட்டுக்குக் கொண்டு வருவது போன்ற தன்னிறைவுடன். ஆனால் ஒருவர் சிலவேளை பிழையாகக் கணித்திருக்கவும் கூடும் அல்லவா?

அது வேறு மாதிரியும் நடக்கும் அல்லவா?

அந்தச் சிறுவனுக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் லாங்லி போட்டர் என்ற உளநோய் மருத்துவமனைத் தளத்திலிருந்து கீழே குதித்தான். அந்தச் சிறுவன் அவர்களுடன் இரண்டு கிழமை தங்கி இருந்தான். அப்போது அதிகமாக பிங்பொங் விளையாட்டுத்தான் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் விளையாடிய எல்லா பிங்பொங் ஆட்டத்திலும் அவன் தோற்றுப் போனான். இனிமேல் ஒரு மன நோயாளியுடன் விளையாடுவதில்லை என்று மட்டுந்தான் அவன் சொன்னான். ஏனென்றால் அது மட்டும் தான் நாங்கள் செய்வதாகவும் அது எங்களைக் கொன்று விடும் என்றான். அன்றிரவு அந்த நண்பன் அவன் போட்டிருந்த சிகப்பு நிற இடுப்புப் பட்டியை இரண்டாக வெட்டி ஒரு பகுதியை தான் படுத்திருந்த கட்டிலில் வைத்திருந்தான். அது கடந்த ஆண்டு இதே நேரம். அப்போது அவனுக்கு வயது பன்னிரண்டு.

நீ பாதுகாப்பாய் இருக்கிறதாக நினைக்கிறாய் என்று தந்தை நினைத்துக் கொண்டார். நீ கண்களைக் மூடிக் கொண்டிருப் பதால் உன்னை வேறொருவர் கண்ணுக்குத் தெரியாது என்று நீ நினைக்கிறாய்.

●

அன்று அவர்கள் பெற்றலுமா என்ற இடத்திற்குச் சென்றார்கள். அன்று அவர்களின் பகலுணவு கோழியும், முட்டையும் தான். அவ்விடம் கைப்பிடி மல்யுத்திற்கான தலைநகரம். ஆண்களின் கைப்பிடி மல்யுத்தப் போட்டியின் அரை இறுதிப் போட்டிக்கு அவர்களை அழைத்துச் செல்வதற்குத் தந்தை உடன்பட்டிருந்தார். ஆனால் புதிதாகச் சேர்க்கப்பட்ட தற்காப்பு நடவடிக்கைகளால் கைப்பிடி மல்யுத்தம் அத்தனை சுவாரசியமாக இப்பொழுது இருக்காது என்று சொல்லப்பட்டது. தற்காப்பு நடவடிக்கைகளால் இப்பொழுது அதிகமாக எவரும் கைகளையோ மணிக்கட்டுக்களையோ உடைத்துக் கொள்வதில்லை. அதிகம் போனால் எவரும் எதிர்பார்க்கக் கூடியது எலும்பு இடப்பெயர்வு மட்டுந்தான். அதனால் அவர்கள் பீற் என்ற கடைக்குப் போகலாம் என்று சொன்னார்கள். ஓர் எரிபொருள் நிலையத்தை உணவகமாக மாற்றியுள்ள இடம் தான் பீற். ஹம்பர்கர் உணவுகளுக்கு கார்களின் பெயர்கள் சூட்டுப்பட்டிருந்தன. முன்னே உள்ள எரிபொருள் குழாய்கள் மூலம் இன்னும் எரிபொருள் விநியோகிக்கப்படுகிறது.

'எனக்கொன்று தருவாயா?' என்று சிறுவன் சகோதரியிடம் கேட்டான். அவன் சொன்னது சொக்கலேற்றால் மூடப்பட்ட றெசனெற் என்ற உலர் திராட்சை இனிப்பை.

'முடியாது,' என்றாள் அவள்.

'அப்போ இரண்டு தருவாயா?'

'இரண்டு பேருமே பகலுணவு உண்பதற்கு முன்பு இனிப்புத் தின்ன முடியாது,' என்றார் தந்தை. அதை அவர் ஒரு தந்தைக்கான கண்டிப்புடன் சொன்னார். அப்படி அவர் தந்தை போன்று சொல்வதில் ஒருவித கிளர்ச்சியையும் அடைந்தார்.

நீங்கள் இரவுணவையா சொல்கிறீர்கள்?' என்றாள் சிறுமி. பீற் இடத்திற்குப் போவதற்கு முன் இரவுணவு நேரமாகி விடும்,' என்றாள்.

●

வடக்கே போகும் பாதையில் வாகனங்கள் மட்டுந்தான் நிறுத்தப்பட்டிருந்தன. தெற்கே போகும் வாகனங்கள் சாதாரண வேகத்தில் போய்க் கொண்டிருந்தன.

பின் ஆசனத்திலிருந்த சிறுவன், 'அதைப் பார்த்தீர்களா? அந்த போஷோ காரில் ஒட்டப்பட்டிருக்கும் பம்பர் ஸ்ரிக்கரை - காரின் பின்பக்க கிடைமட்டச் சட்டத்தில் ஒட்டப்பட்ட சிட்டையை - 'நான் ஓட்டும் பாணி உனக்குப் பிடிக்கவில்லை என்றால் நீ நடை பாதையில் பத்திரமாக நில்,' என்று அதில் எழுதப்பட்டிருந்தது.

அவன் நேரடியாக தன் சகோதரிக்குச் சொன்னான். 'நான் வாங்கும் கிறிஸ்மஸ் பொருட்கள் பிரச்சினையைத் தீர்த்து முடித்து விட்டேன்.'

'என் சாரதிக் கல்வி வகுப்பில் நான் தான் அதிக புள்ளிகள் எடுத்தேன்,' என்றாள் அவள்.

'வீட்டுக்குத் திரும்பிப் போகும்போது உன்னுடைய சகோதரியைக் காரை ஓட்ட விடலாம் என்று நினைத்துள்ளேன்,' என்றார் தந்தை.

பின் ஆசனத்திலிருந்து சைரன் ஒலியும் உதவிக்கான அலறல்களும் கேட்டன. அதன் பின் சரமகவியும் கேட்டது.

சிறுமி தன் தந்தையிடம் சிக்கலான குரலில் பேசினாள். 'அவர்கள் உங்களை எல்லாவற்றையும் கைவிட்டு விட்டு சும்மா இருக்கத் தூண்டவில்லையா?'

'உங்கள் இருவருக்கும் பகிடிகள் தெரியாதா? இன்று முழுவதும் நான் சிரிக்கவே இல்லை,' என்றார் தந்தை.

'கிலற்றீன் பகிடியை உங்களுக்குச் சொல்லி இருக்கிறேனா?' என்றாள் சிறுமி.

'அவர் இன்று முழுவதும் சிரிக்கவில்லை. அப்போ நீ தான் என்னவோ சொல்லியிருக்கிறாய்?' என்றான் அவளுடைய சகோதரன்.

சிறுமி அவனை ஒரு கடும் பார்வை பார்த்தாள். அந்தப் பார்வையால் உடுப்புகளைக் கூட இஸ்திரி பண்ணி விடலாம். அதன் பின் அவளுடைய பார்வை கீழே நோக்கியது. 'ஓ, ஓ, ஜோன்னி சிறையிலிருந்து வெளியே வந்து விட்டான்.'

(எஸ்.ஈ. ஹின்ரனின் வெளியாள் என்ற நாவலில் வரும் ஒரு பாத்திரம், ஜோனி.)

அவளுடைய சகோதரன் தன் காற்சட்டை சிப்பை மேலே இழுத்து விட்டு, 'பகிடியைச் சொல்லு,' என்றான்.

•

'இரண்டு பிரெஞ்சுக்காரர்களையும் ஒரு பெல்ஜியனையும் கழுத்து வெட்டக் கொண்டு போக இருந்தார்கள்,' என்று அந்தச் சிறுமி தொடங்கினாள். 'முதல் பிரெஞ்சுக்காரனை அந்தக் கட்டடத்துக்கு கண்ணைக்கட்டி அழைத்துச் சென்றார்கள். தண்டனை நிறைவேற்றுபவன் கிலற்றீன் கத்தி அலகை கழுத்தில் விழ விட்டான். ஆனால் அது பிரெஞ்சுக் காரனின் கழுத்திலிருந்து கால் அங்குல தூரத்தில் விழாமல் அந்தரத்தில் நின்றுவிட்டது. அதனால் அவனைச் சுதந்திரமாகப் போகச் சொல்லி விட்டு விட்டார்கள். அவன், 'இதுவொரு அதிசயம்! இதுவொரு அதிசயம்!' என்று சொல்லிக்கொண்டு ஓடிப் போனான்.

'அதுவொரு அதிசயம்,' என்று தந்தையும் சொன்னார்.

'அதன் பின் இரண்டாது பிரெஞ்சுக்காரனை தண்டனை கொடுக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். திரும்பவும் அதே போல் நடந்தது. அவன் கழுத்தின் மேல் கால் அங்குலம் அளவு தூரத்தில் கிலற்றீன் கத்தி அலகு நின்று விட்டது. அப்படி அவனையும் போக விட்டு விட்டார்கள். அவனும், 'இதுவோரு அதிசயம்! இதுவொரு அதிசயம்!' என்று சொல்லிக் கொண்டு ஓடிப் போனான்.

'கடைசியாக பெல்ஜியனை கழுத்து வெட்டும் இடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அவனுடைய கண்களைக் கட்டுவ தற்கு முன்பு, மேலே கொலைக்கத்தியைக் காட்டி, ஓல மிட்டான், 'அதுதான் பிரச்சினை! அதுதான் பிரச்சினை!' என்றான்.

சிறுமி விழுந்து விழுந்து சிரித்தாள்.

'அதுவென்ன என்று எனக்கு விளங்கினால் நானும் சிரித்து என் காற்சட்டையை நனைத்து விடுவேன்,' என்றான் சிறுவன்.

'அதில்தான் பகிடியின் உச்சமே இருக்கிறது. அதை விளங்கப் படுத்த முடியாது. இருந்தும் அது வேடிக்கையானதுதான்,' என்றாள் சிறுமி.

'அங்கே தான் பிரச்சினை இருக்கிறது,' என்றார் தந்தை.

•

பரிசாரகப் பெண் உணவு நிரலை அவர்களுக்கு அளித்தாள். அவர்கள் மூவரும் மூலை அறையில் இருந்தார்கள். அன்றைய தினத்தின் சிறப்புணவு மொரொக்கன் கோழி என்று சொன்னாள் பரிசாரகப் பெண்.

'அதுதான் எனக்கு வேணும்,' என்றான் சிறுவன். 'மொறொட்டென் கோழி.'

அவனுடைய தந்தையும் சகோதரியும் தங்கள் ஆணையைக் கொடுத்த பின் அவனும் தன் உணவு ஆணையை மாற்றி பேகரும் ஃப்றைசும் வாங்கினான்.

'அப்போ, யார் இசை வகுப்பை தவற விட்டதற்கு வருத்தத்துடன் இருக்கிறார்கள் ? என்று கேட்டார் தந்தை.

'நான் உங்களிடம் கடந்த கிழமை கேட்ட கேள்வி உண்மை யானது. அதாவது நான் புல்லாங்குழல் வாசிப்பதிலிருந்து பியானோ வாசிக்க மாறப் போகிறேன். புல்லாங்குழல் வாசிப்பவள் வயிற்றிலிருந்து தான் மூச்சை எடுத்து விடுவாள் என்று என் ஆசிரியர் சொல்கிறார். அதை என்னால் செய்ய முடியாது,' என்றாள் மகள்.

'அவள் பியானோவுக்கு மாறுவதற்கான உண்மையான காரணம், வயிற்றினால் சுவாசித்தால் அவளுடைய இடுப்பு இரண்டு அங்குலம் பெருத்து விடும் என்பது தான். அதைத்தான் அவளுடைய ஆசிரியர் சொன்னார். வேறென்ன ?' என்றான் சிறுவன்.

அவன் புளித்த மாவினால் செய்த றொட்டியின்மேல் குளிர்ந்த வெண்ணெய்க் கட்டியை தடவி தன் சகோதரியின் கைச்சட்டையில் போட்டான்.

'ஜீஷோ-பீஷோ' (ஆச்சரியம், ஆச்சரியம்) என்று சிறுமி சொன்னாள். 'ஏன் கத்தியையும் முள்ளுக்கரண்டியையும் எறிந்து விட்டு, அதற்குப் பதிலாக கவணை பாவிக்கக் கூடாது.'

'உன்னை யார் தத்தெடுப்பார்கள், நீ உன்னை மாற்றிக் கொள்ளாவிட்டால் ? என்று தந்தை சொன்னார். 'நாங்கள் இன்று சற்று அமைதியாக இருக்கலாமா ?' என்றார் தந்தை.

'நீங்கள் கல்லறையில் எழுதப்பட்ட வாசகங்கள் போல கதைக்கிறீர்கள் ? நீங்கள் சொல்ல வருவதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்,' என்றாள் சிறுமி.

அவளுடைய சகோதரன் வாய்க்குள் அடைசிய உணவுடன் அவர்கள் கதையில் பங்கு கொண்டான். 'இன்றைக்கு அமைதியான நாளாக இருக்கப் போகிறது,' என்றான்.

'ஏனென்றால் நாங்கள் ஒன்றாக இருந்தால் அப்படி அமைதியாக இருப்பதில்லை,' என்று சிறுவன் சொன்னான்.

'இங்கே பாருங்க பிள்ளைகளே!' என்றார் தந்தை.

•

பரிசாரகி கோப்பைகளைக் கொண்டு வந்தார். தந்தை சீனியைச் சிறுவனுக்கும் உப்பை சிறுமிக்கும் தள்ளி விட்டார், அவர்கள் கேட்காமலே. சிறுமி உப்பை தன் முன்னாலிருந்த பிரெஞ்சுப் பொரியலுக்குள் தட்டி விட்டாள்.

'எனக்குத் தொண்டைப் புண் இருந்தால் நான் அவ்வளவு உப்பையும் கொண்டு என்னுடைய வாயைக் கொப்பளித் திருப்பேன்,' என்றார், தந்தை.

'அதைக் கொண்டு வாகனப்பாதையில் போட்டிருக்கும் தாரை உருக்கி விடுவாள் போல் இருக்கிறது,' என்றான் சிறுவன்.

பிள்ளைகள் சாப்பிடுவதைத் தந்தை கவனித்துக் கொண்டி ருந்தார். குழந்தைகள் வேகமாகச் சாப்பிட்டார்கள். அப்படிச் செய்வதை தூசி உறிஞ்சி அல்லது ஹூவறிங் என்று சொல்லு வார்கள். அவர்கள் போத்தில்களில் உள்ள வெற்றுப் பானங் களில் வைத்து உறிஞ்சியைச் சப்பிக் கொண்டிருந்தபோது தந்தை தன் உணவை உண்டு முடித்துவிட்டார்.

‘வேடிக்கை என்னவென்றால் எனக்கு இப்போது பசி போய் விட்டது,’ என்றார் சிந்தித்துக் கொண்டே, தந்தை.

ஒவ்வொரு உணவும் இப்படித்தான் முடிகிறது. அதுதான் அவர் சொல்லும் கடவுளுக்கான நன்றி. அப்பா அப்படிச் சொல்வதைத் தான் அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

‘அது எனக்கு எதை ஞாபகம் ஊட்டுகிறதென்றால்,’ என்று சிறுமி சொன்னாள். ‘நாங்கள் வெளிக்கிட முந்தி, நீ றொக்கிக்கு உணவு கொடுத்தாயா ?’

‘ஊ, ஊ,’ என்றான் அவளுடைய சகோதரன். ‘நான் நேற்று உணவு கொடுத்தேன்.’

‘நானும் நேற்று உணவு கொடுத்தேன்,’ என்றாள் சிறுமி.

‘ஓகே, நாங்கள் இதில் சமரசமாவோம்,’ என்றான் சிறுவன். இன்றைக்கு நாங்கள் பூனைக்கு உணவு கொடுக்க மாட்டோம், சரியா ?’

‘உனக்கு அதில் உரிமையில்லை,’ என்றார் தந்தை.

அவர் எண்ணியது என்னவென்றால் மிருகங்களைப் பொறுத்தவரையில் அவளை அவன் பகிடி பண்ண முடியாது என்பதுதான். ஒருமுறை இரவுணவின்போது அந்தப் பூனை இரவுணவு மேசைக்கு மிக வேகமாக ஓடிச் சென்றது. பின் மேசையைச் சுற்றி ஓடி தரையில் மேசைக்காலுக்குள் விழுந்தது. பக்கமாக விழுந்து சற்றே குறுகிய இருமல் சத்தத்தை எழுப்பியது.

‘அது புத்திசாலி இல்லையா ? அதற்குப் பக்கத்தில் முழங்காலில் இருந்து மெதுவாகப் பாடினாள். ‘ஏனென்றால் தனக்கு காயம் ஏற்பட்டுவிட்டது என்று அதற்குத் தெரியும்,’ என்றாள் சிறுமி.

•

பல ஆண்டுகளாக அவளுடைய தந்தை தெருவோரத்தில் பார்க்கும் மிருகங்களைப் பார்த்து அவை சிறிய தூக்கத்தில் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்.

‘அவன் ஹோமருக்கு உணவு அளித்திருக்க மாட்டான்,’ என்றாள் சிறுமி தன் தந்தையிடம்.

‘ஹோமர் ஒரு நாய். நான் அதற்கு உணவு அளிக்காவிட்டால் அது மலைப்பகுதிக்குப் போய் ஒரு மானைக் கடிக்கும்,’ என்றான் சிறுவன்.

‘அல்லது பெண் சாரணர் வீட்டு வாசலில் சொக்லேட்டுகள் விற்பாள்,’ தந்தை அவர்களுக்கு நினைவூட்டினார்.

‘ஹோமர், மலைப்பகுதிகளிலுள்ள கால்நடைப் பண்ணையில் செம்மறி ஆடுகளைக் கலைப்பதற்கு விருப்பப்படும் என்று நினைக்கிறேன்,’ என்றாள் அந்தச் சிறுமி, பெருமூச்சு விட்டுக் கொண்டே.

சிறுவன் அவளை நம்ப முடியாதவன் போலப் பார்த்தான்.

‘நீ அதை நம்பினாயா ? நீ உண்மையில் அதை நம்பினாயா ?’

அவள் தலைக்குள் சிந்தித்தாள். அவலட்சணமான மந்திரவாதி ஒருத்தன் உணவு மேசை விரிப்பை இழுத்தெறிந்துவிட்டான். அதனால் பீங்கான் பாத்திரங்கள் நிலத்தில் விழுந்து உடைந்து விட்டன. மூச்சை இழுத்து நுரையீரல் நிரம்பும்வரை அவள் இழுத்தாள். அதன் பின் வயிறு நிரம்பும்வரை மூச்சை இழுத்தாள்.

‘அவளுக்குத் தெரியும் என்று நான் நினைத்தேன்,’ என்றான் சிறுவன்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன் அந்த நாய்க்கு அது நடந்தது.

‘சிறுமியின் பெற்றோர் வலியுறுத்தினார்கள்,’ என்றார் தந்தை. ‘அதுதான் கலிஃபோர்ணியாச் சட்டம்.’

‘அப்போது நான் கலிஃபோர்ணியை வெறுத்தேன். அதன் தைரியத்தை வெறுத்தேன்,’ என்றாள் சிறுமி.

தான் காரில் காத்திருப்பதாகச் சொல்லிவிட்டு, சிறுவன் மேசையை விட்டு வெளியேறினான்.

‘எது உதவி செய்யும் ?’ தந்தை கேட்டார்.

‘ஹோமர் உயிருடன் இருப்பதற்கா ?’ என்றாள் சிறுமி.

‘எது உதவும் ?’

‘எதுவும் இல்லை.’

‘உதவி.’

தன் கோப்பைக்குள் சிட்டிகை அளவுள்ள உப்பை எடுத்துப் போட்டாள்.

‘நான் காரை ஓட்டுகிறேன்,’ என்றாள்.

•

ஓட்டுவதற்கு சிறுமி காரை இயக்கி விட்டு ஓலமிட்டாள், ‘நாசமாப் போச்சு,’ என்றாள்.

காரின் இயந்திரம் நிறுத்தப்பட்டது. சிறுவன் ஸ்பானிஷ் நிலையத்திற்கு வானொலியைத் திருப்பினான். அதில் மெக்சிக்கன் மரியாச்சி பாடல் உச்சத்தில் ஒலித்தது.

‘கடவுளே நாசமாகப் போ, அதில் நாசமாகப் போ கடைசிப் பெயர் இல்லை,’ என்றான் சிறுவன். அவன் இன்னொரு காரில் ஒட்டியிருந்த ஒரு வாசகத்தை வாசித்துக் காட்டினான்.

‘அதைக் கைவிடச் சொல்லி அவர்கள் கேட்கவில்லையா ?’ என்றார் தந்தை.

‘பேசாதீர்கள்,’ என்றாள், காரின் பின்னோக்கிப் பார்க்கும் கண்ணாடியில் பார்த்துக் கொண்டும் காரின் கியரை மாற்றிக் கொண்டும்.

அவள் பல மணி நேரம் காரை ஓட்டினாள். தோல் உரிந்து கொண்டிருக்கும் யுக்கலிப்ரஸ் மரத் தோப்புகள் ஊடாகவும், மஞ்சள் நிற பூக்கள் தண்டுகளிலிருந்து வெளிவந்துள்ள அக்காசியா புதர்கள் ஊடாகவும் அவள் காரை ஓட்டிக் கொண்டிருந்தாள். பின்னர் கரையோர பாதைக்கு காரை எடுத்தாள். சாம்பல் பச்சை நிற இன்வேனெஸ் என்ற இடத்தில் கார் போய்க் கொண்டிருந்தது.

‘இந்த இயற்கை அழகை எப்படி அழைப்பார்கள், என்று கேட்டான் சிறுவன்.

மற்றும்படி அவர்கள் அமைதியாக இருந்தார்கள்.

•

வானம் அருகாமையில் வரும்வரை எவரும் வேறு எதுவும் சொல்லவில்லை. திரும்பவும் வீட்டுக்குப் போகவில்லையா என்று சிறுவனே கேட்டான்.

'இல்லை, இல்லை,' என்றார் தந்தை. யன்னலுக்கு வெளியே பார்ப்பது போலப் பார்த்தார். பின் வானத்தையும் தான் கட்டி யிருந்த மணிக்கூட்டையும் பார்த்தார். 'இல்லை, காரை ஓட்டிக் கொண்டே இரு, நாங்கள் நேரத்திற்கே வந்து விட்டோம்,' என்றார் தந்தை.

மேகம் மழையைப் பொழிந்தது. சிறுமி பாலத்தை நோக்கி தெற்கே காரை ஓட்டிக் கொண்டிருந்தாள். காரின் தலை விளக்குகளைப் போட்டபோது காரின் டாஷ்போட் பச்சை நிறத்தில் ஒளிர்ந்தது. வீட்டுக்குப் போகும்வழியில் தொலை அளவுமானியை பார்த்து எவ்வளவு தூரம் வந்து விட்டோம் என்பதை வாசித்தாள். இருபத்தாறாயிரத்து, முந்நூற்றெண் பத்து மூன்றின் பத்தில் எட்டு மைல்' என்றிருந்தது.

'இன்றைக்கா ?' என்று சிறுவன் கேட்டான்.

•

சிறுவன் முதலில் றோக்கியிடம் சென்றான். 'நாங்கள் பூனை விளையாட்டு விளையாடுவோம்,' என்றான். அவன் சியாம் நாட்டுப் பூனையை நிமிர்ந்திருந்த பியானோவின் இடத்திற்குத் தூக்கிக் கொண்டு வந்தான். பின் வாங்கில் பூனையை மடியில் வைத்துக்கொண்டு பூனையின் பாதங்களை திறப்புக்களில் அழுத்தினான். றொக்கி 'சுதந்திரமாகப் பிறந்தோம்,' என்ற பாடலைப் பாடியது. பின் அது முறுக்கிக் கொண்டு அவனிடமிருந்து வெளியேற முயன்றது.

'இங்கே வா, றொக்கி. இன்னும் பத்து நிமிசம் தான். அதன் பிறகு கலைந்து செல்வோம்,' என்றான் சிறுவன்.

'அதை என்னிடம் தா,' என்றாள் சிறுமி.

அவள் இதழ்களைக் குவித்து பூனைக்கு முத்தம் கொடுத்தாள்.

றொக்கியை மேல்தளத்திற்குக் கொண்டு வா. படுக்கப் பாய்களையும் கொண்டு வா,' என்றார் தந்தை.

மிக விரைவில் மூன்று பாய்கள் பிரதான படுக்கை அறையில் முக்கோணமாகப் போடப்பட்டன. தந்தை செம்பக்கம் படுத்தார். சிறுமி தன் கூந்தலை கோதி விடச் சொன்னாள் தந்தையிடம். அவர் அதைச் செய்தார். அப்பொழுது சிறுவன் ஒரு தோடம் பழத்தை முகத்துக்கு அருகில் வைத்து உரித்துச் சாப்பிட்டான். அதிலிருந்து வரும் மென்பனியை உள்ளிழுத்துக் கொண்டான். பின் அதற்குள் இருந்த விதைகளைப் பார்ப்ப தற்காக ஒவ்வொரு கூறையும் வெளிச்சத்தில் வைத்துப் பார்த்தான். அவனுடைய மடியில் பூனையின் பாதங்கள் கனவு காணும் கண்களைப் போல துடித்துக் கொண்டிருந்தன.

'நீ எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாய் ?' என்றார் தந்தை.

'என்னையா கேட்கிறீர்கள் ?' என்றாள் சிறுமி. 'ஐம்பத்தேழாம் ஆண்டு தண்டர்பேட் காரைப்பற்றி நினைத்துக் கொண்டிருக் கிறேன். அதன் உள்புறம் வெண்ணிறத்துடன் சிகப்புச் சேர்ந்தது. அது கூரையை மடித்து உயர்த்தி மூடக் கூடிய கார். அதை நான் ரெக்சாசிற்கு ஓட்டிச் செல்வேன். அலங்கரித்த பாவாடை உடுத்திருப்பேன். என்னுடைய பெயரையும் றூபி என்று மாற்றிக் கொள்வேன். அல்லது, ஈசி என்று மாற்றிக் கொள்வேன்,' என்றாள்.

அவளுடைய கனவு ஏற்ற இறக்கம் கொண்ட எதிர்காலமாக இருக்கப் போகிறது என்று எண்ணினார்.

'பிஞ்சில் பழுத்தால் நேரத்துடனே அது அழுகியும் விடும்,' என்று அவளை எச்சரித்தார், தந்தை.

ஈரக் காற்று வளைந்திருந்த யன்னல் சட்டகத்தில் தடாலென அடித்தது. சிறுவன் பாய்ந்து எழுந்தான்.

'நான் மழையை வெறுக்கிறேன். அதன் தைரியத்தை வெறுக்கிறேன்,' என்றான்.

தந்தை எழுந்து போய் புயலைத் தடுக்க யன்னலை இறுக்கமாகப் பூட்டினார். 'இது உண்மையில் பெரும் மழை தான்,' என்றார்.

நட்சத்திரங்களின் கீழ் இருளில் அமைதியாகப் படுத்து, தீ அணைந்து சாம்பராகி முடியும்வரை இறைவனின் தெய்வீக இருப்பைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தார்கள். (பைரனின் கவிதை வரிகள்.)

அவர்கள் சில நிமிசங்களுக்கு முன்னரே இரவு வணக்கம் சொல்லிவிட்டார்கள். அப்பொழுது அவர்களின் தந்தையின் குரல் இருட்டில் அவர்களுக்குக் கேட்டது.

'குழந்தைகளே, எனக்கு இப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது. உங்களுக்கு நான் நல்ல செய்தி ஒன்றும் கெட்ட செய்தி ஒன்றும் சொல்ல இருக்கிறேன். எதை உங்களுக்கு முதலில் சொல்ல ?'

முதலில் மகள் தான் பேசினாள், 'முதலில் கெட்ட செய்தியைச் சொல்லி முடித்து விடுங்கள்.'

தந்தை சிரித்தார். அவர்கள் பரவாயில்லையே என்று எண்ணினார். என் குழந்தைகள் இந்த மழை போல அனைத் தையும் சரியாகவே செய்கிறார்கள். குழந்தைகள் தலைகளைத் திருப்பி அவரைப் பார்த்தபோது அவரும் அதே நேரத்தில் பார்த்து முன்முறுவல் செய்தார். இப்பொழுது இருப்பதிலும் பார்க்க அவர்கள் மேலும் நேர்மறையாக சிந்திப்பார்களா இல்லையா என்பதைப் பற்றி யோசித்தார். அவர் இப்பொழுது யோசிப்பதிலும் பார்க்க அவர்களைப் பற்றி நல்லதாகவே நினைத்தார்.

'நான் உங்களுக்குப் பொய் சொன்னேன். கெட்ட செய்திகள் ஒன்றும் இல்லை,' என்றார்.



mahalingam.k@thaiveedu.com

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்

VASANTHAM TAMIL WELLNESS CENTRE

PRESENTS

சமூக உளவளம் பேணும் தொடர் - 115

Psychosocial Educational Series-115

VASANTHAM
HEALTH & WELLNESS CENTRE

இளைஞர்களுக்கான தற்போதைய பிரச்சினைகள்
Current Issues for Youths

May 04, 2026 (Monday)

Canada EST: 7:00pm - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 4:30a.m - 6:30am (Wednesday)

Zoom ID: 918 584 6813

No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588



இளைஞர் நலம் பேண.....



Suganthine Sundaralingam

English circle for women program coordinator/
Family Wellbeing Ambassador, ACSA
Social worker diploma
Computer programing engineer, Srilanka

Harishvishnu Shureskumar

Community Worker - TCC, Valluvam,
BA, Criminology
Multidiscipline artist
Facilitator, Vasantham



Vishvakokilan Pakthavansalan

Addiction Worker, SASP Program, Vasantham

ஒவ்வொரு முதலாம் மூன்றாம்
திங்கட்கிழமைகளில்
எங்களுடைய சூம் தொடரில்
இணைந்துகொள்ளுங்கள்

Join us via zoom: CLICK HERE or go to link below in the email



Hosted by
Dr. Parvathy Kanthasamy

CONTACT US: 416-847-4172

VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW

647-374-4685
VASANTHAM.CA

உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...

STANDARD MORTGAGES INC



- Mortgages
- Refinance
- Second Mortgages
- Short Term Secured Loans

SMI

STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial

சுமையான கடன்கனை சுகமான அனுபவமாக்கிட



Raj Subrayam AMP
Director

80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



Lower rates.
Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

Senthooran Punithavel

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

குறைந்த கட்டணங்கள்
பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®

BUYERS

If Yathavann Doesn't Negotiate at Least

$10,000 Off The List Price,

He'll Give You $2000 Cash on Closing.

FREE Home Inspection When You Buy With Us.

Sellers

Your Home SOLD in 60 Days Guaranteed!

OR I'LL SELL IT FOR FREE**

**SOME CONDITIONS MAY APPLY

For More Information On My Exclusive Guaranteed Sales Program

ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA

Free Home Evaluation.
No Cost. No Obligations



RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002

YATHAVANN
SELVARAJAH
Sales Representative

416-992-4474

கடன் தொல்லையா?



பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போன்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவைகள்

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்க்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, வாகனம் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agencyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் வழங்கினோரால் பறிமுதலாகப்போகிறது என்ற கவலையா?

- ✔ சேவைக்கான கட்டணம் (Consultation fee) நாங்கள் அறவிடுவதில்லை.
- ✔ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது.
- ✔ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✔ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடன் அட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

Corporate Bankruptcy	Bankruptcy	Consumer Proposal
$ 5000 to $7000 + HST	$1800 - $3000 + HST	Zero fee

Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

"Empowering Financial Freedom"

309-80 Corporate Drive

Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224**

Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

creditsolutioncentre@gmail.com





"

BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000

BUY OR SELL

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

POWER BROTHERS REAL ESTATE



UTHAYAN BROKER SIVARAJAH — 416.301.5555
RAJ BROKER SIVARAJAH — 416.843.3333
KUMAR SALES REPRESENTATIVE SIVARAJAH — 416.453.7777

@uthayansivarajah @uthayansivarajah

ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED

INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK

MORTGAGE FINANCIAL

Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties

SUBRA
MORTGAGE SOLUTIONS



புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்



Residential Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

Commercial Mortgages

- 1st & 2nd Mortgages
- Refinance, Renewal & Switches
- Equity Line of Credits

NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com

Powered by MORTGAGE ALLIANCE

WE DEAL WITH ALL BANKS Brokerage # 10330

TD Canada Trust | Scotiabank | First National Financial LP | radius financial
RFA | Equitable Bank | Home Trust | RMG mortgages | MCAP

O: 1-844-878-2721 | F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்











HOMELIFE HIGHER STANDARDS HomeLife/Future Realty Inc. Brokerage GRAND MASTER CLUB 2021

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

Homelife/Future Realty Inc. Brokerage
Independently Owned and Opereated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8



STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:

- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2025)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | **INTEGRITY** | **PROFESSIONALISM**

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272





NO MEDICAL
UP TO $500,000
✓ $0 first month's premium
✓ No medical exams
✓ Simple and straightforward
✓ 18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR SUPER VISA
100% REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist
Direct: 416.918.9771
Business: 416.321.2500
MDRT Member of Million Dollar Round Table
Life100 INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
La Capitale iA Financial Group
Are you getting Million Dollar advice

Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
நம்போ தர்மலிங்கம்
KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623
Rambo Tharmalingam
Mortgage Agent Licence # M08006679
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111

Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
For further information contact
Kumar (905) 673-9873
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
Ceylon Shipping Lines Ltd
760 Dr Danister De Silva Mw,
Colombo 9
Tel : 2680301 – 308
KANDY
Ceylon Shipping Lines Ltd
175 Parangantota Road
Mavilmada - Kandy
Tel : 812 234356/57/59
BATTICALOA
Ceylon Shipping Lines Ltd
134 Main Street
Addalachenai - 09
Tel : 067 2277302
OUR AGENTS ACROSS CANADA
Head Office
(905) 673-9873
Toronto/ New Market/Durham region
Sam (647) 986-2393
Brampton/Mississauga/Halton /Peel region
Neel (647) 891-9445
Ottawa
Iggy - 613 799 3519 /613 237 3569
Hamilton/Waterloo /St Catherines
Dharmaweera (519) 760-1280
Montreal
Gana (514) 573-0093
Edmonton/Calgary
Randy (604) 399-8785
Email : randy.kulasekare@kmrgloballogistics.com
Vancouver/British Columbia
Randy (604) 273-4911
KMR Global Logistics Ltd.
135 & 140 - 14480 Knox Way Richmond
British Columbia, V6V 2Z5
Email : admin@kmrgloballogistics.com
United Kingdom :
Atlas Shipping 430 High Rd
Willesden London NW10 2HA
Tel: 02024596633 - Mobile 07949143535
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com

நியூ ரங்கனாஸ் நகைமாடம்
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்
புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
647-702-2159
MARKHAM & STEELES YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6

Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE HIGHER STANDARDS
*Independently owned & operated
HomeLife/Champions Realty Inc, Brokerage*
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE

"Serving With Dignity, Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
220 Commerce Valley Dr W Suite 480,
Thornhill, ON L3T 0A8
LOTUS Funeral and Cremation Centre Inc.
121 City View Dr, Etobicoke,
ON M9W 5A8.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com

Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE MORTGAGE INC. Lic#12623
Kethes Sivasubramaniyam
Licence # M08006105 Mortgage Agent
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5

DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Next to RBC @ Kennedy & Ellesmere
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
எங்களாக Furnace வாங்கும்போது ஒன்ராரியோ அரசு வழங்கும் Rebateஐப் பெற்றுக்கொள்ளலாம்
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Professional Corporation
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
BBA, LLB, LLM
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION «
REAL ESTATE «
FAMILY «
CORPORATE «
EMPLOYMENT «
WILLS & ESTATE «
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan
Thanabalasingham
Sales Representative
RE/MAX ROYAL PROPERTIES
416.617.1767
Office: 905.471.0002
RE/MAX Royal Properties Realty Ltd.,
Brokerage
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE ignite
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE

Mega Financial Group
உங்கள் அனைத்து விதமான
கார்பறுதிக் தேவைகளுக்கும்.
Call Now
Raj Nadarajah
President & C.E.O.
416-666-1120
PH28 - 4168 Finch ave. E. Scarborough, ONM1S 5H6

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

- முடி உதிர்வை தடுப்பதுடன் புதிய முடி வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கிறது.
- தயாளத்தின் பொடுகைப் நீக்குகின்றது.
- Ervamatin முடியை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Amazon
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc. (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
alex-sivasambu@coldwellbanker.ca, www.sivasamburealty.com
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
www.vaheesanrealtor.com.
Email:gvaheesan@hotmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd.,
Brokerage* 31 Progress Ave, Suite 210,Toronto ON, M1P 4S6

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6 WWW.YASMILES.CA

உலகின் முன்னணி காணி,
வீடு விற்பனை நிறுவனமான
RE/MAX முதல் தடவையாக
யாழ் மண்ணில்
RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH
Broker Owner
+94 76 493 3331
+1 416 230 7007
lathan@remaxnorth.lk